# மெஹர் பிரபு

## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**

**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

## (MEHER BABA'S LIFE HISTORY)

## குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு மூன்று

## (VOLUME THREE)

**1927 - 1931**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் அவரே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 6000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளது. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, செப்டம்பர் 2020
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +91 9225631113

REV:03/23.11.2024

# இறை நாடகம்

உண்மைப்பொருளை உணர, உரிய நேரம் வரும் வரை காத்திருக்க வேண்டியது இறை நியதி. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உண்மைப்பொருள், அதன் ஆன்மீக இரகசியங்களை வெளிப்படுத்துவதும் இறை நியதியாகும். அந்தத் தருணத்தில், மனித உணர்வு அதன் அறியாமையிலிருந்து விடுபட்டு சுதந்திரமாகிவிடும். நாம் வாழும் இக்காலகட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய இரகசியங்கள் பல உள்ளன; எடுத்துக்காட்டாக, ‘ஏசு பெருமான் சிலுவையில் அறையப்பட்டாலும், அவர் அதில் உயிர் துறக்கவில்லை’ என்பதாகும். குர் ஆனில் (பாகம் 4:157) நபிகள் நாயகம் இவ்வாறு வெளிப்படுத்தினார்: "அவர்கள் (யூதர்கள்) சிலுவையில் (ஏசுவின்) மரணத்தை ஏற்படுத்தவில்லை; ஆனால், அவர்களுக்கு (ஏசு) அவ்வாறு தோற்றமளித்தார்." பல நூறாண்டுகள் கடந்துவிட்டன; ஏசு பெருமான் சிலுவையில் உயிர் துறந்தார், பின்னர் உயிர்த்தெழுந்தார் என்ற தவறான நம்பிக்கையை மக்கள் வளர்த்துள்ளனர். இதன் விளைவாக, ஏசு பெருமானின் கடினமான வாழ்க்கை மற்றும் பயணங்களைப் பற்றிய அனைத்து இரகசியங்களும் துண்டுதுண்டாகத் தொலைந்துவிட்டன அல்லது புராணக்கதைகளாக மாறிவிட்டன. ஆயினும், ‘**காஷ்மீரில், ஸ்ரீநகருக்கு வெளியே அமைந்த ஹர்வான் கிராமத்தில், மலைப்பகுதிகளுக்கு இடையே, ஒரு குகையில் ஏசு பெருமானின் சமாதி அமைந்துள்ளது**’ என்பது மெஹர் பாபாவால் தெரியப்படுத்தப்பட்டாலும், குகை இருக்கும் இடம் நித்திய காலத்திற்கும் ஓர் இரகசியமாகவே இருக்கும்.

மௌனம், பேசும் செயலுக்கு எதிர் அம்சமாகும். மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாற்றின் மூன்றாம் தொகுப்பைக் குறிக்கும் காலகட்டத்தில், அவர் கல்வியின் அடித்தளத்தை அமைப்பதில் முழு முனைப்புடன் இருந்தார். ஆரம்பத்தில், 1925ஆம் வருடம், அருகாமையில் வாழ்ந்த ஏழை எளிய, கல்வி அறிவற்ற பெற்றோரின் குழந்தைகளுக்கு இலவச கல்வி வழங்கினார். இந்த அடக்கமான கல்வி நிலையத்திற்கு ‘ஹஸ்ரத் பாபாஜான்’ பள்ளிக்கூடம் என்று பெயரிட்டு, சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கான தனி வசதிகள் வழங்கப்பட்டன. பின்னர் 1926ஆம் ஆண்டில், அவரது கவனம், பொருள் சார்ந்த கல்வியிலிருந்து ஆன்மீகக் கல்வியை நோக்கித் திரும்பியது. மேலும் இந்தியாவின் அனைத்து சாதி, சமயங்களைச் சார்ந்த சிறுவர்களுக்கும், பாரசீக மாணவர்களுக்கும் இந்தத் தனித்துவமான வாய்ப்பு வழங்கப்பட்டது. இவ்வாறு, தேர்ந்தெடுக்கப்பட்ட இக்காலத் தலைமுறையின் சிறுவர்கள் அவதார புருஷருடன் நெருங்கிய தொடர்பில் வர வாய்ப்பாக அமைந்தது.

இந்தப் பள்ளிக்கூடத்திற்கு 'மெஹராஷ்ரம்' என்று பெயர்; ஆனால், மெஹர் பாபா **"நான் கற்பிக்க வரவில்லை, மக்களை விழிப்புறச் செய்ய வந்துள்ளேன்"** என்று பறைசாற்றினார். 1927, 1928ஆம் ஆண்டுகளில், மெஹர் பாபாவின் பணியின் முக்கிய கவனம், மனிதனின் மனம் மற்றும் அனைத்து உயிர்களின் பரிணாம வளர்ச்சியின் பின்னணியில், ஆன்மா, இறைநிலையை உணர்ந்து கொள்வதில் இருந்தது. அவருடனான தனிப்பட்ட சகவாசம் மற்றும் வழிகாட்டுதல் மூலமாக, இந்த சிறுவர்களுக்கு, இறைவனை நேருக்கு நேர் காணும், இறை உணர்வை அடையப்பெறும் அரிய வாய்ப்பு வழங்கப்பட்டது. மெஹர் பாபா தனது அன்பின் மதுபானத்தை வழங்குவதன் மூலம், அதன் அடையாளத்தைக் கண்டுகொள்வதற்கான ஆன்மாவின் ஏக்கத்தை நிறைவேற்றுகிறார். குறிப்பாக எடுத்துக் கூறினால், இந்தப் 'பிரேம் ஆஷ்ரம்' சிறுவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி மட்டுமன்றி உண்மையிலேயே மகத்தான இளைஞர்கள்.

இதற்கிடையில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண், பெண் சீடர்கள் (மண்டலி) இந்தக் குழந்தைகளுக்கு சேவை செய்வதன் மூலம் தமது குருநாதருக்கு சேவை புரிகிறார்கள். ஆண், பெண் மண்டலி அனைவருக்கும் உணவு தயார் செய்வதோடு, ஆண்கள் கடுமையாக உழைத்தது மட்டுமின்றி, பள்ளிக்கூடத்தில் பாடமும் கற்றுத்தந்தனர். மெஹராபாத் மற்றும் டோக்காவில் அமைந்த ஆஷ்ரமங்களில் நிகழ்ந்த ஒவ்வொன்றும், மெஹர் பாபாவின் நேரடி மேற்பார்வையின் கீழ் இருந்தது, மேலும் சிறுவர்களுடனான அவரது ஆன்மீகப் பணியின் விளைவுகள் இறை போதையைத் தவிர வேறொன்றுமில்லை.

மனிதனின் மனதை திருப்திபடுத்த, ஒரு விரிவான வரலாறு தேவைப்படுகிறது. இத்தகைய மிகப்பெரிய பணி, மெஹர் பாபா யார் என்பதை விளக்குகிறது - கடவுளின் அவதாரம், கலியுக வரதர். அவரது வருகையின் அர்த்தத்தை வெளிப்படுத்த, சாத்தியமான அனைத்து முயற்சிகளுக்கும் தகுதியானவர் அவர் ஒருவரே. அவர் நம்மிடையே வருவதற்கான முழு அர்த்தத்தையும் வெளிப்படுத்த பல தசாப்தங்கள் ஆகலாம் - இது எழுத்துப்பூர்வமான வார்த்தைகளால் அல்ல, உள்ளார்ந்த உணர்வுபூர்வமாக நிகழும் ஒன்று - ஏனெனில் அவருடைய வெளிப்பாட்டிற்கு 100 முதல் 200 ஆண்டுகள் வரை பிடிக்கும் என்று அவரே அறிவித்துள்ளார்.

மெஹர் பாபாவின் பணி, நோக்கம் குறித்த கேள்விகளுக்கு அவர் அளித்த விளக்கங்கள், ஏதோ ஒரு விதத்தில் ஆன்மீக இரகசியங்கள் மற்றும் முக்கியத்துவங்களை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

**நான் முழு உலகின் வரலாற்றையும் மாற்றுவேன். ஜீஸஸ் ஒரு பொருள் சார்ந்த உலகிற்கு ஆன்மீகத்தை வழங்க வந்ததுபோல், இன்றைய மனிதகுலத்திற்கு ஆன்மீக உந்துதலை அளிக்க நான் வந்துள்ளேன். இத்தகைய தெய்வீகச் செயல்களுக்கு எப்பொழுதும் ஒரு நிலையான**

நேரம் உள்ளது; அதற்கான நேரம் வந்ததும், எனது உண்மைத்தன்மையை முழு உலகிற்கும் வெளிப்படுத்துவேன்.

மகத்தான இறை ஞானிகள், அவதார புருஷர்களாகிய ஸொராஸ்டர், ராம், கிருஷ்ணா, புத்தா, ஜீஸஸ், முஹமது இவர்களின் அடிப்படை கோட்பாடுகளில் எந்த வேறுபாடும் இல்லை. இந்தத் தீர்க்கதரிசிகள் அனைவரும் கடவுளிடமிருந்து வந்தவர்கள்; இறை ஞானிகளின் உதவி தேவைப்படும் இன்றியமையா தருணத்தில், ஆன்மீகம் அதன் அடிமட்டத்து நிலையை அடையும் காலத்தில், உலகப்பொருட்கள் தழைத்தோங்கி உச்சகட்டத்தை எட்டும் அந்த வேளையில், அவதார புருஷர் தோன்றுகிறார். அத்தகைய தருணத்தை மனிதகுலம் வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இன்றைய உலகம் சிற்றின்ப ஆசைகள், இனவெறி, சுயநலம், பண வழிபாடு போன்றவற்றில் மூழ்கியுள்ளது. மக்கள் கடவுளைக் கைவிட்டனர்! உண்மையான மதம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது! மனிதன் வாழ்வைத் தேடுகிறான், ஆனால், பூசாரிகளும், பாதிரிகளும் அவனுக்குக் கல்லையும் மண்ணையும் மட்டுமே அள்ளி வழங்குகின்றனர்! ஆகவே, உண்மையான வழிபாட்டை நிலைநாட்டவும், மக்களை அவர்களின் உலகப்பொருள் சார்ந்த முட்டாள்தனத்திலிருந்து விடுவிக்கவும், கடவுள் மீண்டும் தனது உண்மையான இறை ஞானியை மனிதர்களிடையே அனுப்பியாக வேண்டும். இந்த வரிசையில் முந்தைய தீர்க்கதரிசிகளைப் பின்பற்றி இப்போது நான் வந்துள்ளேன். இது எனது பணி.

மக்கள் நல்வாழ்க்கையை வாழவும், கடவுளை நாடவும் தீர்க்கதரிசிகள் சில விதிகளையும் நடைமுறைகளையும் வகுக்கின்றனர். இந்த விதிகள், பின்னர், ஒழுங்கமைக்கப்பட்ட மதத்தின் கொள்கைகளாக உருவெடுக்கின்றன; ஆனால், அந்த இறை போதகர்களின் வாழ்நாளில் நிலவிய இலட்சியவாத மனப்போக்கு மற்றும் இயக்கு சக்தி, அவரது மரணத்திற்குப் பிறகு படிப்படியாக மறைந்துவிடும். அதனால்தான் மதம் சார்ந்த அமைப்புகள் ஆன்மீக உண்மையை மக்களுக்குக் கொண்டு வர முடியாது. இத்தகைய அமைப்புகள் கடந்த காலத்தை மீண்டும் உயிர்ப்பிக்க முயற்சிக்கும் தொல்பொருள் துறைகளைப் போலச் செயல்படுகின்றன. எனவே, நான் எந்த ஒரு புதிய மதத்தையும், வழிபாட்டு மரபு மற்றும் அமைப்பையும் நிறுவ முயற்சிக்க மாட்டேன். நான் எல்லா மக்களின் மத சிந்தனைகளுக்கும் புத்துயிர் அளித்து, உயிரூட்டம் பெறச் செய்து அவர்களிடையே வாழ்க்கையைப் பற்றிய மேம்பட்ட கருத்தையும், அறிவையும் உருவாக்குவேன்.

உண்மையில் எல்லா மதங்களின் அடிப்படை உண்மையும் ஒன்றே என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஏனெனில் அனைத்தும் ஒரே ஆதிமூலப் பொருளாகிய கடவுளிடமிருந்தே வெளியாகின்றன. ஆனால், அவதார புருஷர் தனது பொது வெளிப்பாட்டிற்கு முன்பு, தக்க நேரம்,

**சூழ்நிலைகள் மற்றும் மக்களிடையே நிலவும் மனநிலையைக் கருத்தில் கொள்கிறார். இவ்வாறு, அவர் கால சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற்போல மிகவும் பொருத்தமான கோட்பாடுகளைப் போதிக்கிறார்.**

**எனது ஆன்மீகப் பிரகடனம் உலகின் ஒவ்வொரு பாகத்தையும், ஒவ்வொரு நகரத்தையும், ஒவ்வொரு கிராமத்தையும் சென்றடையும். உலகளாவிய சகோதரத்துவத்தை அதன் எழுச்சியில் கொண்டுவரும். மனிதர்களிடையே அமைதி நிலவும், ஏழைகள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் மீது இரக்கம் வரும். அனைத்திற்கும் மேலாக அன்பே கடவுள் என்பதை உணர வைப்பேன்.**

நாம், முஹமதிய துறவியான திப்பு பாபாவின், அவதார புருஷரைப் பற்றிய அர்த்தமுள்ள, ஆழமான வார்த்தைகளுடன் நிறைவு செய்வோம்: "உலகம் முழுவதும், மெஹர் பாபாவின் பெயரில் உயிர் வாழ்கிறது!" கடவுளின் அன்பு, அறிவு, சக்தி மற்றும் பேரின்பம் மெஹர் பாபாவில் அடங்கியுள்ளது. அவர் தனது உடைவாளை உருவி, கடவுளின் சத்தியத்தை வெளிப்படுத்தும் நாள் வரும் என்பதை நினைவில் கொள்வோம்; அவர் பாதங்களில் பணிவுடன் வணங்குவோம்.

# நிகழ்வுகளின் காலவரிசை

**1926**
- டிசம்பர் - 'ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடம்' நிறுவப்பட்டது.
- டிசம்பர் 31 - மெஹர் பாபா கையால் எழுதிய கடைசி சொற்பொழிவு.

**1927**
- மே 01 - 'மெஹராஷ்ரம்' நிறுவப்பட்டது.

**1928**
- மார்ச் - 'ஹிஸ் ஹோலினெஸ் மெஹர் பாபா & மெஹராஷ்ரம்' புத்தக வெளியீடு

**1928**
- மார்ச் 25 - 'பிரேமாஷ்ரம்' மேல்மலை சமாதி அருகில் நிறுவப்பட்டது.

**1928**
- ஏப்ரல் 01 - 'ஹஸ்ரத் பாபாஜான்' மெஹராபாத் வருகை.

**1928**
- ஜூன் 03 - 'டோக்கா ஆஷ்ரமம்' இடம்பெயர்ப்பு.

**1928**
- ஜூலை 10 - மௌனம் மூன்றாண்டு நிறைவு.
- மெஹர் பாபா எழுதிய 'புஜாவே நார்' ஆரத்தி பாடல் ஆரம்பம்.

**1928**
- நவம்பர் 26 - மீண்டும் மெஹராபாத் வருகை

**1928**
- டிசம்பர் - 'மெஹர் மெஸேஜ்' இதழ் வெளியீடு.

**1929**
- ஜனவரி - நடைபயணம் - பண்டர்பூர் வழியாக கோலாபூர்.

**1929**
- மே 08-26 - இமயமலை - குவெட்டா பயணம்.

**1929**
- ஜூலை 10 - ஆகஸ்ட் 27 காஷ்மீர் பயணம் (சிறப்பு பேருந்து).

1929 • செப்டம்பர் 03 - மும்பை பயணம்.

1929 • செப்டம்பர் 20 - நவம்பர் 16 - பரபரப்பான பாரசீக பயணம்.

1930 • பிப்ரவரி 23 - மார்ச் 11 - தென் இந்திய பயணம் (பேருந்தில்)

1930 • ஏப்ரல் 09 - மே 26 பஞ்ச்கனி - மஹாபலேஷ்வர் - கோலாபூர்

1930 • ஆகஸ்ட் 17 - அக்டோபர் 05 - கொல்கத்தா - நாக்பூர் - பிஜாபூர்.

1930 • நவம்பர் 27 - டிசம்பர் 23 - டெல்லி

1931 • ஏப்ரல் 22 - லாஹூர் - கராச்சி - குவெட்டா.

1931 • ஜூன் 01 - ஜூலை - மூன்றாவது பெர்ஸியா பயணம் - துஸ்தாப் - மஷாட்.

1931 • ஜூலை 30 - ஸெகன்ட்ராபாத் - குன்னூர் - கராச்சி - மும்பை

1931 • தொடரும்.

# பொருளடக்கம்


கண்ணீர் கதைகள் - மெஹராஷ்ரம் ........................................ 3

பிரேமாஷ்ரம் - இறை அனுபவங்கள் ........................................ 86

டோக்கா ஆஷ்ரமம் ........................................ 107

மீண்டும் மெஹராபாத் ........................................ 146

இமயமலை, குவெட்டா ........................................ 165

காஷ்மீர் பயணம் ........................................ 176

வியப்பூட்டும் மும்பை தொடர்புகள் ........................................ 212

பரபரப்பான பயணங்கள் ........................................ 226

மெஹராபாத், எதிர்கால ஜெரூஸலேம் ........................................ 251



மெஹர் பாபா, 1928



மெஹர் பாபா, 1927



மெஹராஷ்ரம் மாணவர்கள்

# கண்ணீர் கதைகள் - மெஹராஷ்ரம்

(**Phenomenon of Tears - Meher Ashram**)

'ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடம்' கலைக்கப்பட்ட பின்னர், 1926 டிசம்பர் மாதம், சிறுவர்களுக்காக ஒரு புதிய பள்ளிக்கூடம் நிறுவப்பட்டது.

ராமச்சந்திர காளே (காளேமாமா என அன்பாக அழைக்கப்பட்ட இவர்), ஒரு பொறியியல் பட்டதாரி, வயது 50, ஆறு மாதங்களுக்கு முன்பு பாபாவை மெஹராபாத்தில் சந்தித்தபோது (இவர் சாய் பாபா, நாராயண் மஹாராஜ் இவர்களை ஏற்கனவே சந்தித்துள்ளார்) வெகுவாக ஈர்க்கப்பட்டு, தன் இதயத்தைப் பறிகொடுத்தார். அவருடைய மகன்கள் பாபு (15), முரளி (13) இருவரையும் புதிய பள்ளிக்கூடத்தில் சேர்த்து, இறுதியில் அவர்கள் மெஹர் பாபாவின் அரவணைப்பில் வந்தனர்.

1926 டிசம்பர் 31ஆம் நாள் மெஹர் பாபா அவரது கைகளால் எழுதி வழங்கிய கடைசி சொற்பொழிவு:

**பிரபஞ்சத்தில் 'அன்பு' எங்கும் வியாபித்திருக்கும், ஆனால், அது பலதரப்பட்டது. இயற்கையின் படைப்பில் வாயு, கல், உலோகம் போன்ற உயிரற்ற பொருட்களில் இருக்கும் அன்பானது, காந்தத்தின் ஈர்ப்பு சக்தியைப் போன்றது. விலங்குகள், பறவைகள் இவற்றினிடையே உள்ள அன்பு, உணர்ச்சிகள் மற்றும் ஆசைகளால் நிரம்பி, சரீரத்தின் இச்சையான சிற்றின்பத்தைச் சார்ந்திருக்கும். சிற்றின்பம் சரீரத்தின் தேவைகள் - உண்பது, அருந்துவது, இனம் பெருக்குவது, அஞ்சுவது போன்றவற்றைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக ஒரு புலி, மான் மீது பாய்ந்து, அதைக் கொன்று தின்கிறது; இதுவும் ஒருவகை அன்புதான், ஆனால், மிகவும் குறுகிய அளவிலான அன்பு. விலங்குகளின் சாம்ராஜ்யத்தில் இது எவ்வளவு கீழ்த்தரமான பிரியம் என்பதை நினைத்துப் பாருங்கள்; பசியைப் போக்கும் நோக்கத்தில் ஒரு மிருகம் மற்றுமோர் அப்பாவி மிருகத்தைக் கொன்று தின்கிறது. மேலும் எந்த அளவுக்கு அந்தக் காதலன்** (புலி) **தனது பிரியமான காதலியை,** (பலியாகும் மான்) **திருட்டுத்தனமாகத் தொடர்ந்து செல்கிறது என்பதை நினைத்துப் பாருங்கள். மனித இனத்திலும், அன்பானது சில வேளைகளில் உணர்ச்சி வசத்திற்கு உள்ளாகிறது. ஒருவர் பசியாக இருக்கும்போது, முதலில் அவருக்குப் பிடித்தமான உணவை நினைத்துப் பார்க்கையில், அவரது நாவில் நீர் சுரக்க, அதை உண்ண ஏங்குகிறார். இனிப்பான லட்டுகள் இருந்தால் அதை வயிற்றிலிருந்து தொண்டைவரை நிரம்பும் அளவுக்கு உண்ண விரும்புகிறார். இதை 'லட்டு பிரியம்' என்பர். அவர் அதை வயிறு புடைக்க உண்டு, திருப்தி அடைந்ததும் உண்பதை நிறுத்தி விடுகிறார். ஓரிரு ஏப்பம் வந்ததும் அவரது பசி நீங்கி, லட்டு மீதுள்ள பிரியமும் பறந்து விடுகிறது. பெயர், புகழ் அல்லது தேவைக்கு**

**அதிகமாகக் காசு மீது ஆசை கொண்டவர்கள் பசி, தூக்கம் இரண்டையும் மறந்து விடுகிறார்கள்.**

**இப்படி, பேராசை என்பதும் வேறொரு விதமான அன்புதான் - பணத்தின் மீது அன்பு, பெயர் புகழ் மீது அன்பு, 'பிறரைவிட மேம்பட்டவராக இருக்க வேண்டும்' என்ற அன்பு. இது விலங்குகளுக்குப் பொருந்தாது. ஆனால், உண்மையான பக்தன் அமிர்தமாகிய ஆன்மீக அன்புக்காக ஆழ் இதயத்திலிருந்து ஏங்குகிறான். அந்த வீரன் பிறரிடமிருந்து விதிவிலக்கானவன். அத்தகைய தூய்மையான அன்பை, சாதாரண மனித இனத்திடையே காணமுடியாது; அது உடன்பிறவாதது; அதை குருநாதரால் மட்டுமே வழங்க முடியும். இவ்வாறு அன்பு என்பது ஒன்றேயானாலும் அது பலதரப்பட்டது. மிகவும் கீழ் நிலையைச் சார்ந்தது கவர்ச்சி. இது பரிணாம வளர்ச்சியில் படிப்படியாக முன்னேறி உண்மையான அன்பாக உருவெடுக்கும். இது அமைதியான, ஆரவாரமற்ற, சாந்தமான, நித்தியமான, நிறைவான மற்றும் தூய்மையான நீரோடை போன்றது. தெய்வீக அன்பு அனைத்திலும் மேன்மையானது, உன்னதமானது, ஆனால், அமைதியற்றது. அதில் அதீத ஏக்கம் நிலவும். பரிணாம வளர்ச்சி, மறுபிறவி மற்றும் உட்சுழற்சி இவற்றின் விளைவாக வாயு, கல், உலோகம் என்பவற்றை உள்ளடக்கிய உயிரற்ற உலகில் கவர்ச்சி எனும் நீரோடையாக உருவாகி, விலங்குகள் மற்றும் மனித ராஜாங்கத்தில் நதியாகத் தவழ்ந்து, இறுதியில் இறைநிலையை அடையும் தருவாயில் ஆன்மீக அன்பு எனும் கடலில் சங்கமமாகிறது.**

1927, ஜனவரி 1ஆம் நாள் மெஹர் பாபாவிற்கு ஏராளமான புத்தாண்டு வாழ்த்து கடிதங்கள் வந்தன; அந்த வாழ்த்துகளில் ஒன்றை அமெரிக்காவில் வாழ்ந்த 'ஜோசப் நாதன் ஓடன்பர்க்' என்பவர் அனுப்பியிருந்தார். இல்லினாய் (ILLINOIS) மாகாணத்தில் பிறந்த அவர், வயது 54, ஐரிஷ் - ஜெர்மன் வம்சாவளி வந்து, கத்தோலிக்க பாதிரியாகப் பணியாற்றினார். 1928ஆம் ஆண்டிலிருந்து நான்காண்டுகள் பல கடிதங்கள் எழுதியுள்ளார்; ஆனால், பாபாவைப் பற்றித் தெரியவந்த வரலாறு எதுவும் பதிவிடப்படவில்லை. அவர், மெஹர் பாபாவின் தொடர்பில் வந்த முதல் அமெரிக்க அன்பர் என்று கருதப்படுகிறது.

மெஹர் பாபா மௌனம் ஆரம்பித்து ஒன்றரை வருடங்கள் நிறைவடைந்த வேளையில் ஒரு நாள் மண்டலியுடன் நடந்த கூட்டத்தில் பாபா கீழ்வரும் தகவலை வெளிப்படுத்தினார்:

**நாளையிலிருந்து நான் எழுதுவதை நிறுத்தப் போகிறேன். மறுபடியும் என்னுடைய எழுத்தும், பேச்சும் எப்போது தொடங்கும் என்பதை உறுதியாகக் கூறமுடியாது. சில நாட்கள் அல்லது மாதங்களுக்குப் பிறகு தொடங்கலாம்; வருடங்கள்கூட ஆகலாம்; அனைத்தும் பாபாஜானை சார்ந்துள்ளது.**

அவ்வேளையில், முஹமதியர்கள் இந்துக்களை மதமாற்றம் செய்யும் பணியில் தீவிரமாக இருந்ததாக வந்த செய்திகளை, பாபா முன்னிலையில் மண்டலி தெரிவித்தனர். பாபா அதைக்கேட்டு இவ்வாறு விளக்கமளித்தார்:

**இந்திய தேசத்தில், இன்று நிலவும் வகுப்புவாத குழப்பங்கள் அனைத்தும், இக்காலகட்டத்தில் வாழும் சத்குருக்களின் உட்பணியின் விளைவாகும் என்பதை, இவ்வுலக மக்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள். சத்குருக்களின் இந்தப் பணியைக் கண்கூடாகக் காணமுடியாது, ஆனால், எதிர் காலத்தில் இது தேசம் முழுவதிலும் முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்கும். தற்போதைய நிலைமை அமைதியாகத் தோன்றினாலும், திடீரெனக் கட்டுப்படுத்த முடியாத கலவரங்கள் உருவாகும்.**

**மெஹராபாத்தில் அனைத்தும் அமைதியாகத் தென்படுவதால் இங்கு எதுவும் நடக்கவில்லையென எண்ண வேண்டாம். ஆன்மீகப் பணிகளை ஒருபோதும் கற்பனை செய்ய இயலாது எனும்போது, வெளியளவிலான அறிகுறிகளை வைத்து அளவிடுவது அதைவிடக் கடினமான காரியம்; சாதாரண மனிதனால் புரிந்துகொள்வது என்பது இன்னும் முடியாத விஷயம்.**

பாபா இந்த உவமையை எடுத்துக்கூறி விளக்கினார்: **மின்சாரம் தயாரிக்கும் மின் நிலையம் ஒப்பீட்டளவில் ஏறக்குறைய இருள் நிரம்பி, பாழடைந்து, வெறிச்சோடி இருக்கும்; அதே வேளையில் திரை அரங்குகளில் ஒளிர்விடும் மின்விளக்கு அலங்காரங்கள், இரவை பகலாக்கி உற்சாகமான கூட்டங்களை ஈர்க்கும். இதற்காக, மின் நிலையத்தில் இருள் நிரம்பியிருந்தால் மின்சக்தி இல்லையென்று பொருளாகாது. எனவே மின்நிலையத்தைச்** (குருநாதரை) **சார்ந்திருங்கள்.**

ஜனவரி 2ஆம் நாளிலிருந்து, மெஹர் பாபா எழுதுவதை நிறுத்தி, அவரது எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை சைகை அல்லது செய்தி தாள்களில் ஆங்கில எழுத்துக்களைச் சுட்டிக்காட்டி தெரிவித்தார். இந்த நாள் வரை மெஹர் பாபாவின் உற்சாகமும், உயிரூட்டம் தரும் இயல்பும், அவர் மௌனம் கடைப்பிடிப்பதை முற்றிலும் மறக்கச் செய்தது. ஆனால், இப்போது பாபா எழுதுவதையும் நிறுத்தியதால் மண்டலி அனைவரும் பாபாவின் மௌனத்தை நன்கு அறிய, உணர முடிந்தது.

அன்று மாலையில் ருஸ்தம் அவரது புதிய ‘ஹட்ஸன்’ மோட்டார் காரை எடுத்துவந்து, பாபாவை அதில் அழைத்துச் சென்றார். பின்னர் அனைவரும் கிரிக்கெட் விளையாடினர். இரவு ஒன்பது மணிக்கு பாபா எழுதிய குஜராத்தி ஆரத்தியை அனைவரும் பாடினர். அன்றிலிருந்து தினமும் அந்த ஆரத்தியைப் பாடவேண்டும் என்று பாபா கட்டளையிட்டார்.

ஜனவரி 4ஆம் நாள் படைத்தல் (CREATION) குறித்து பாபா கீழ்வரும் கவிதையை எடுத்துரைத்தார்:

**என்னிலிருந்து தொடங்கி வெளிவந்தது, நானே அது!**
**அதிலிருந்து அனைத்தும் - மனிதன், உலகம் என உருவானது!**
**வாழ்வின் ஆதாரம் நானெனில், அது நகர்ந்து, நீந்தியது முதலில்!**
**என்னிலிருந்து வந்த சக்திகள் அவை உயிரோட்டம் தராதா என்ன?**
**ஆண், பெண், பறவைகள், விலங்குகள் அனைத்தும் உருவாயின!**
**இறைவனுக்கு முன் நான் இருந்தேன்!**
**அக்கம், பக்கம், மேல், கீழ் எங்கும் நான் அமைந்தேன்!**
**என்னை நேசிக்கலாம், வெறுக்கலாம்,**
**அறியலாம், அறியாமலும் இருக்கலாம்!**
**என்னை நேசிப்பவனும் நானே, வெறுப்பவனும் நானே!**
**எனக்குத் தீங்கு செய்பவனும் நானே, தீங்கும் நானே!**

மெஹர் பாபா எழுதுவதை நிறுத்திய பின்னர், அவராகவே ஏதாவது விருப்பங்களைத் தெரிவிக்க விரும்பும் வேளையில், செய்தித்தாளில் உரிய வார்த்தைகள் அல்லது எழுத்துக்களைச் சுட்டிக்காட்டினார். ஆனால், இந்த வழிமுறை கடினமாகவும், அதிக நேரம் பிடிப்பதாகவும் இருந்ததால், சாஞ்சி ஆங்கில எழுத்துக்கள் மற்றும் எண்களை ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்தார். இதைத் தொடர்ந்து மரப்பலகையில் எழுதி, ஜனவரி 7ஆம் நாளிலிருந்து பாபா உரையாடலைத் தொடர்ந்தார். இந்த எழுத்துப்பலகையின் வழியாக மெஹர் பாபாவின் மௌனம் மறுபடியும் பேச ஆரம்பித்தது. எழுத்துகளை விரல்கள் தொடும் வேகத்தில் அவரது உரையாடலில் எந்த இடைவெளியும் இருந்ததாகத் தோன்றவில்லை. காலம் இதை இப்படிப் பார்த்தது:

அவரது விரல்கள் ஒரு தெய்வீக இசைக்கு இணங்கி நடனமாடின; மேலும் பொங்கியெழும் வார்த்தைகள் ஒரு தெளிவான நீரோடையாய் தவழ்ந்தன. பாபா ஒருமுறை இவ்வாறு குறிப்பிட்டார்:

**என் விரலசைவின் தாளத்திற்கேற்ப இவ்வுலகம் நடனமாடுகிறது!**

பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த டாக்கே.ஃபால்கர், மெஹராபாத்திற்கு வந்து மண்டலியுடன் தங்கியிருந்தார். இத்தனை காலங்கள் பாபாவின் சகவாசத்தில் இருந்தும், டாக்கே, மெஹர் பாபாவின் தெய்வீகத் தன்மையை முற்றிலும் ஏற்றுக் கொள்ளாமல், சந்தேகங்கள் அவர் மனதில் அலைபாய்ந்தன. ஆனால், ஓரிரு சம்பவங்கள் அவர் இதயத்தில் ஆழமான முத்திரையைப் பதித்தன. ஒருநாள், பாபா குடிநீர் வைத்திருந்த மண்பானை ஒன்று மூடாமல் இருந்ததை கவனித்து, அனைவரையும் அழைத்து வரிசையில் நிறுத்தி வைத்து இவ்வாறு வினவினார்:

**"என்னுடைய கட்டளையை மீறுவதன் காரணம்தான் என்ன? புழுப்பூச்சிகள் குடிநீரில் விழுந்தால் அதற்கு யார் பொறுப்பு? இந்த நீரைக்**

**குடித்து, சிறுவர்களில் எவரேனும் உயிரிழக்க நேர்ந்தால் என்னாவது?"** அதற்குத் தண்டனையாக, பாபா, பிரம்பால் ஒவ்வொருவரின் கையிலும் அறைந்தார். வரிசையில் நின்று கொண்டிருந்த டாக்கே 'உணர்ச்சிவசப்பட்ட இந்த ஈரானிய இயல்புநிலை என்னை அறையமாட்டேன் என்று 1925ஆம் ஆண்டு ஆசிரியராக வந்தபோது, எனக்களித்த வாக்குறுதியை மறந்துவிடுவாரோ' என்று அஞ்சினார். வரிசையில் தொடர்ந்து சென்ற பாபா, டாக்கேயின் அருகில் வந்ததும் அவரைப் பார்த்து புன்முறுவல் செய்து, அரவணைத்தார். அடுத்த கணமே, வந்த அதே வேகத்தில் தொடர்ந்து அனைவரையும் தண்டித்தார். டாக்கே அவருள்ளே நினைத்துக்கொண்டார், 'பாபா எல்லாவற்றிற்கும் மேலாக பாபாவேதான் - குருநாதர். இத்தனை குழப்பத்திற்கு மத்தியிலும், இதுபோன்ற ஆனந்தமான புன்னகையை எவராலும் வெளிப்படுத்த முடியாது.'

டாக்கே எதிர்கொண்ட மற்றுமொரு சம்பவம்:

கேரள நாட்டைச் சேர்ந்த ஓர் இந்து, மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தவர், இவ்வாறு முறையிட்டார்: "நான் பனாரஸிலிருந்து புனித யாத்திரையை முடித்து வந்துள்ளேன், மேலும் துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைகளால் என்னிடமிருந்த பணம் அனைத்தையும் இழந்துவிட்டேன். என்னுடைய மத சம்பிரதாயப்படி, புனித பயணம் முடிந்ததும், பிராமணர்களுக்கு விருந்தளிக்க வேண்டும். நேற்றிரவு, நான் அஹமதுநகர் ரயில் நிலையத்தில் அமர்ந்திருந்த வேளையில், இதைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து, கவலைப்பட்டுக் கண்மூடியபோது, கடவுள் எனது கனவில் தோன்றி, மெஹராபாத்தில் வாழும் மெஹர் பாபாவை சந்தித்தால், அவர் எனக்கு உதவுவார் என்றார். நான் உற்சாகத்தில் எழுந்து, அந்த உதவியை நாடி உங்களிடம் வந்துள்ளேன்."

பாபா உடனே தந்திரமான முறையில் பதிலளித்தார்: "**நீங்கள் கூறுவது சரிதான். இந்து கோட்பாடுகளின்படி, புனித யாத்திரைக்குப் பிறகு, பிராமணர்களுக்கு விருந்து வழங்குவது ஒருவரின் கடமையாகும். ஆனால் நேற்றிரவு, கனவில் நானும் கடவுளைக் கண்டேன். என்னிடம் அவர், முரட்டுப் பொய்யன் ஒருவன் என்னை ஏமாற்றி, பணம் பறிக்க வருவான் என்றும் கூறினார். மேலும் அவர், சல்லிக்காசுகூடத் தரக்கூடாது, வந்தால் அவனை அடித்துத் துரத்திவிடுமாறும் அறிவுறுத்தினார்!**"

இதைக் கேட்டதும், வந்தவர் திகைத்துப்போய், தனது மோசடித்தனத்தில் தானே சிக்கிக் கொண்டதை நன்கு தெரிந்து கொண்டார். மெஹர் பாபா, மௌனம் தொடங்கிய நாளிலிருந்து காசு, பணத்தைத் தொட்டதில்லை என்றாலும், பெஹராம்ஜியை அழைத்து, வந்தவருக்கு ரூபாய் நோட்டுகளை வழங்கினார். பணத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிச் செல்லும் வேளையில் பாபா கண்டிப்புடன் நினைவூட்டினார், "**இதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள், கடவுள் நேர்மை, நாணயத்தை விரும்புகிறவர். கடவுளிடமிருந்து எதையும் மறைக்க முடியாது.**"

அவ்வேளையில், வந்தவர் நேர்மையற்றவர் என அறிந்தும் பாபா ஏன் அவருக்குப் பணம் கொடுத்து உதவினார் என்றெண்ணி டாக்கே ஆச்சரியமடைந்தார். பாபா இவ்வாறு விளக்கமளித்தார்: "**அவரது ஏமாற்றுதலை நான் அறிவேன் என்பது வந்தவருக்குத் தெரியும், மேலும் இங்கு நடந்ததை எப்போதும் அவர் நினைவில் கொள்வார். ஏமாற்றுக்காரராக இருந்தும் மெஹர் பாபா அவருக்குப் பணம் கொடுத்ததை ஒருபோதும் மறக்கமாட்டார். நான் ஏன் இதைச் செய்தேன்? இனிமேல் இப்படி ஒருவரை வஞ்சிக்க முயற்சிக்கும் அந்த நேரத்தில், அவர் என்னை நிச்சயமாக நினைவுகூர்ந்து, அதைத் தவிர்த்து நல்லவராக மாறுவார்.**" மெஹர் பாபாவின் செயல்முறைகளில் அடங்கியிருந்த இறை ஞானம் டாக்கேயின் உள்ளத்தை ஆழமாகத் தொட்டது. பாபா உடனே வருத்தம் கலந்த முறையில் மண்டலிக்கு வெளிப்படுத்தினார்: "**அனைவரும் ஒன்றே; மேலும், இந்த ஒருமைப்பாடு முற்றிலும் பிரிக்க இயலாதது. நீங்கள் என்னை நேசிக்க வேண்டிய முறையில் நேசிப்பீர்களேயானால் அந்த ஒருமைப்பாட்டின் அனுபவத்தை உங்களுக்கு நான் வழங்குவேன்.**"

அதற்குப் பிறகு மண்டலி அனைவரும் கரம் கூப்பி, சிரம் தாழ்த்தி பாபாவின் பாதங்களைத் தொட்டு, தரிசனம் செய்தனர். டாக்கே, ஈரானி குருவின் பாதங்களில் அடிபணிவதில் எந்த பயனும் இருக்க முடியாது என்றெண்ணி தயக்கத்துடன், மறுபடியும் சிந்தித்தார், 'தரிசனம் செய்வதில் என்ன தீங்கு உள்ளது?' இத்தகைய முரண்பாடான எண்ணங்களுடன், மெதுவாக, பாபாவை அணுகினார். பாபா நேரடியாக உற்று நோக்கியதும், டாக்கேயின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. அனைத்து சந்தேகங்களையும் களைந்து பாபாவின் பாதங்களில் வீழ்ந்தார். பாபா, இதர மண்டலியை உடனே அவருக்கு உதவுமாறு சைகையால் தெரிவித்தார். டாக்கேயின் சந்தேக மனம் எப்படி இத்தனை எளிதாக மாறியது, மெஹர் பாபாவின் தெய்வீகத் தன்மையை எப்படி நம்பமுடிந்தது என்று ஆச்சரியப்பட்டார்.

1927, ஜனவரி 25ஆம் நாள் மண்டலியுடன் பள்ளிக்கூட சமாச்சாரங்களைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்த வேளையில், ஆங்கிலேய அரசாங்கம் இந்திய படை வீரர்களை, சீனாவுக்கு அனுப்பும் திட்டத்தைப் பற்றிய பேச்சு எழுந்தது. அதைக்கேட்டு மெஹர் பாபா இவ்வாறு தெரிவித்தார்:

**இந்திய ராணுவத்தை அயல்நாட்டு மண்ணிற்கு அனுப்பி, போரில் ஈடுபடுத்துவது, ஆங்கிலேய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மிகவும் மோசமான கொள்கை. இவ்வாறு, இதைத் தொடர்ந்து செய்தால் உலகம் முழுவதும் அது தனது கௌரவத்தை இழந்துவிடும். இவ்விதமான விரிசல்களும், விரோதங்களும் இங்கே நிறுத்தப்பட்டு, நல்லிணக்கம் ஏற்படாவிட்டால் ஆங்கிலேயர்கள் பெயர், புகழ் மற்றும் உலகிலுள்ள சாம்ராஜ்யங்களை இழந்து, பெரிய அளவில் பாதிக்கப்படுவார்கள். அவர்களின் இரகசிய நடவடிக்கைகளும், ராஜதந்திர கொள்கைகளும்**

**கிட்டத்தட்ட முழு உலகையும் தங்கள் எதிரிகளாக ஆக்கியுள்ளன. மேலும் அவர்கள் கொள்கைகளால், எண்ணற்ற மக்களுக்கும் பல நாடுகளுக்கும் செய்த அநீதிகளுக்காக மிகவும் பாதிக்கப்படுவார்கள்.**

**ரஷ்ய நாட்டு 'போல்ஷிவிக்'கின்** (BOLSHEVIK) **குறும்புத்தனத்தால், சீனர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக உள்ளனர். ரஷ்யா அமைதியாக இருப்பதுபோலப் பாசாங்கு செய்யும் அதே வேளையில் சீனாவைக் கிளறிவிட்டு வேடிக்கை பார்க்கிறது. சில நாட்களுக்குப் பிறகு, பாபா இதையும் குறிப்பிட்டார்: "பிரிட்டன் உடனடியாக அவர்களது கொள்கைகளை சீராய்ந்து பார்க்காவிடில் அவர்களுக்கு அழிவு நிச்சயம்.**

பாபா மேலும் கூறினார், "**சாய்பாபா சத்குருக்களின் ராஜாதிபதியாக இருந்தார், ஆனால், நான் அனைத்து சத்குருக்களுக்கும் குருநாதராக இருக்கிறேன்! சாய்பாபா, ஷிர்டியில் அமர்ந்து குழல் வழியாகப் புகைபிடித்து முதல் உலகப்போரை நடத்தினார். இந்த உண்மை எவருக்கும் தெரியாது. அதுபோல், உங்களோடு உரையாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், முழுப் பிரபஞ்சத்தையும், அதிலடங்கும் அனைத்தையும் இங்கிருந்து நான் கட்டுப்படுத்துகிறேன்.**"

மெஹர் பாபா மண்டலியுடன் உரையாடும் வேளையில் இவ்வாறு அறிவித்தார்:

**"புதிய பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படமாட்டாது. உணவு, உடைகள் மட்டுமே வழங்க வேண்டும்."** உடனே மண்டலி அனைவரும் தகுதிவாய்ந்த, அதே வேளையில் உலகப் பற்றில்லாத ஆசிரியர்களைக் கண்டுகொள்வது மிகவும் கடினம் என எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே முதலில் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கவும், அதைத் தொடர்ந்து தன்னலமற்ற சத்தியத்தின் பாதையைத் தேடும் ஆசிரியர்களை மட்டும் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

ருஸ்தம் அவரது மனதில் தோன்றியதை எடுத்துக் கூறினார்:

"தொண்டு செய்யும் ஆன்மீகப் பள்ளிக்கூடங்கள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெறும், அதனால் பாபாவின் பெயரும், புகழும் எங்கும் பரவும். ஆன்மீகத்தைக் காரணம் காட்டி, சேவை செய்யத் தயாராக இருக்கும் பலரைக் கண்டுகொள்ளலாம். ஆனால், மக்களிடையே 'பாபா, இறை ஞானம் பெற்ற குருநாதர், அவதார புருஷர்' என்ற நம்பிக்கையை எப்படிக் கொண்டு வருவது? இதற்காக, பாபா உள்ளளவில் பணிபுரிய வேண்டும், இல்லையேல் சிறந்த ஆசிரியர்களைக் கண்டுகொள்வது மிகவும் கடினம்."

பாபா, ருஸ்தத்தின் கருத்தை ஏற்றுக்கொள்வது போலத் தலையசைத்து, ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கி நியமிக்கக் கூறினார்.

இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, பாபா மண்டலியை மறுபடியும் அழைத்து, புலனாகாத எதிர்மறையான கருத்துக்களைத் தெரிவித்தார்:

**இதற்கு முன்னதாக நடந்த விவாதங்கள் எனது கண்களைத் திறந்து விட்டன. நீங்கள் என்னிடம் கேட்டீர்கள், இந்த உலகம் என்னை அவதார புருஷர் அல்லது குருநாதர் என்பதை எப்படி அறிந்து கொள்ளும், மேலும், நீங்கள் இந்த உண்மையை எப்படி மக்களிடையே எடுத்துச்சென்று அவர்களை நம்பவைப்பது என்று! இதைக் கேட்டதும், இப்போது எனக்குத் தோன்றுகிறது, இதுவரையிலும் கூறிவந்தது போல, நான் ஒரு தெய்வமும் அல்ல குருநாதரும் அல்ல என்று! மாறாக மக்களை நம்ப வைக்கும் எண்ணத்தில்தான் இதையெல்லாம் செய்தேனோ என்றும் எனக்குத் தோன்றுகிறது. நான் ஒரு சாதாரண மனிதன்! என்னிடமிருந்து ஆன்மீக ஆதாயம் அல்லது ஆசீர்வாதத்தை அடையப் பெறலாம் என்று நம்பிக்கை வைத்தவர்களுக்கு அப்படி அடைவதற்கென எதுவுமில்லை. நானே கடவுள் நிலையை அடையாத போது, பிறரை எப்படி என்னை தரிசனம் செய்யக் கூற முடியும்?**

**எனவே என்னுடனிருக்க விரும்புகிறவர்கள், உங்கள் தனிப்பட்ட விருப்பத்திற்கிணங்க, என்னிடமிருந்து எதையும் அடைய முடியாது என்ற திடமான நம்பிக்கை மற்றும் தெளிவான அறிவுடனும் இருக்க வேண்டும். இதன் மூலமாக, இந்த நிமிடத்திலிருந்து, நான் உங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட அனைத்து எழுத்துப்பூர்வமான ஒப்பந்தங்கள், வாய்மொழி வாக்குறுதிகள், புனித சத்தியங்கள் மற்றும் உங்கள் மீது சுமத்தப்பட்ட அனைத்து கட்டுப்பாடுகளிலிருந்தும் உங்களை நான் விடுவிப்பேன்.**

பாபா இதைக் கூறி முடித்ததும், மண்டலி அனைவரும் மெஹராபாத்தில் அவருடன் தொடர்ந்து இருக்க முழுமனதாக விருப்பத்தைத் தெரிவித்தனர்.

மஹாராஷ்டிரா மாநிலத்தில் மஹாத்மா காந்தி சுற்றுப்பயணம் மேற்கொண்ட வேளையில், அவர் அஹமதுநகருக்கு வருவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. சாஞ்சி, மெஹர் பாபாவிடம் மஹாத்மா காந்தியை மெஹராபாத்திற்கு அழைத்து வரலாம் என்று ஆலோசனை கூறினார். பாபா அலட்சியத்துடன் கற்பலகையில் இவ்வாறு பதிலளித்தார்:

**காந்தியை இங்கு வரவழைப்பதில் குறிப்பாக முயற்சிகள் எடுப்பானேன்? அதற்கு எந்தத் தேவையும் இல்லை. கடவுள் மீதுள்ள நேசத்தால் அவர் தானாக இங்கு வரவேண்டும். ஆன்மீகப் பாதையில் அன்பு ஒன்றுதான் முக்கியம்; அன்பு மட்டுமே அதற்குத் தேவையான ஒரே தகுதி. ஒருவர் சக்கரவர்த்தியாக இருந்தாலும் அன்பில்லாமல் அந்த வழியில் கடந்து செல்ல இயலாது. ஓர் உயர்ந்த செல்வந்தரின் நிலை அல்லது மேன்மைமிக்க சமூக அந்தஸ்து, ஒருவரை ஆன்மீகப் பாதையில் வர வழிவகுக்காது.** இரண்டு நாட்களுக்குப் பிறகு மெஹர் பாபா, காந்தியின் நேர்மையைப் பாராட்டி அவரைப் பற்றி இவ்வாறு வெளிப்படுத்தினார்:

**இன்றைய அரசியல் மற்றும் பொதுஜன சேவகர்களில் காந்தி ஓர் உன்னதமான மனிதர். மிகவும் நேர்மையானவர். அவரது செயல்முறைகளில் ஏமாற்றும் நோக்கமோ, மட்டமான சிந்தனைகளோ கிடையாது. மேன்மையான மனநிலை படைத்தவர்;** (அந்த அளவுக்கு மேன்மையானவர்), **அவருடைய அடுத்த மூன்றாவது பிறவியில், 170 ஆண்டுகளுக்குப் பின்னர், அவர் இறைநிலையை எய்துவார். அவ்வேளையில் இறைநிலையை அடையும் 300 நபர்களில் அவரும் ஒருவராக இருப்பார்.**

பிப்ரவரி 13ஆம் நாள், 'மனம், மனப்படிவங்கள் மற்றும் அவற்றின் செயல்முறை'யைப் பற்றி, பாபா சொற்பொழிவாற்றினார்:

**சாதாரண மானிடரைப் பொறுத்தவரையில் பழைய மனப்படிவங்களைச் செலவு செய்வதும், புதிய மனப்படிவங்களை உருவாக்குவதும் வழமையான செயல்முறையாகும். ஆனால், மண்டலியை எடுத்துக் கொண்டால், குருநாதர், புதிய மனப்படிவங்கள் உருவாகாமல் தடுத்து, பழையவற்றை படிப்படியாக விரயமாக்குகிறார். அனைத்து மனப்பதிவுகளும் அழிந்து இல்லாமலாகும் போது, ஒருவர் இறைநிலையை எய்துகிறார்.**

**ஒரு சத்குருவின் வட்டத்து சீடர்களின் மனங்கள், ஒரே பக்கத்தில் சுழலும் சக்கரம் போல் இயங்கி, மனப்படிவங்களை அழிக்கும்; அதே வேளையில் சாதாரண மானிடரின் மனங்கள், கடிகார முட்கள் போல் இரண்டு திசைகளிலும் சுழலும் தன்மை படைத்தவை. சுருக்கமாகச் சொன்னால் மனப்படிவங்கள் முழுமையாக அழியும் வேளையில் ஒருவர் இறைநிலையை எய்தும் தயார் நிலைக்கு வருகிறார்.**

மெஹர் பாபா உடனே அவரது கருத்தை விளக்கும் விதத்தில் அம்புக்குறிகளுடன் இரண்டு வட்டங்கள் வரைந்து விளக்கினார்:




சாதாரண மனித மனங்கள்  சீடர்களின் மனங்கள்

**இறைநிலையை எய்திய மானிடர்களை பொறுத்தவரையில், பிரபஞ்சத்தில் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு பூமியில் திரும்பி வரும் சத்குருக்கள் மட்டுமே, உலக மனங்களின் செயல்பாடுகளை அறிந்து, உணர்ந்து கொள்கிறர்கள். சாதாரண மனிதர்களை, முகம் பார்க்கும் கண்ணாடியைக் கையில் வைத்திருக்கும் ஒரு குழந்தையோடு ஒப்புமைப் படுத்தலாம். அந்தக் குழந்தை என்ன செய்யும்? அது கண்ணாடியில் தெரியும் அதன் உருவத்தை என்னவென்று அறியாமல், இன்னொருவர் முகம் என்று நினைத்து, தனது கைகளால் அடித்து, உதைக்க முயற்சிக்கும் வேளையில், கண்ணாடி உடைந்தும் போகலாம்.**

**இப்போது வயதாகி, வளர்ந்து, புலன்களின் ஆற்றலைப் பெற்ற ஒருவரை எடுத்துக் கொள்ளுங்கள்; அவர் அந்தக் குழந்தையைப் போல நடந்து கொள்ள மாட்டார்; கண்ணாடியில் தெரிவது அவருடைய உருவம்தான், அது உண்மையானது அல்ல என்பதை அறிவார்.**

**அதுபோலத்தான் சத்குருவாக உலகில் வருபவர் உங்களை குழந்தைகளாக நடத்துகிறார்.**

1927, பிப்ரவரி 18ஆம் நாள், மெஹர் பாபாவின் 33ஆவது பிறந்த நாளன்று ஆஷ்ரமத்தில் அதிகாலையில் மணியோசை எழுப்ப, அனைத்து மண்டலியும் பாபாவின் அருகில் வந்தனர். பாபா அவரது கைகளால் அனைவருக்கும் இனிப்பு ரவையும், இரண்டு க்யூனைன் மாத்திரையும் வழங்கினார். அதற்குப் பிறகு பாபா, பெண் மண்டலி தங்கியிருந்த தபால் நிலைய வளாகத்திற்குச் சென்று, அவர்கள் தற்காலிகமாக உருவாக்கிய ஊஞ்சலில் அமர்ந்தார். ஊஞ்சலை முன்னும் பின்னும் ஆடவைத்து அவர்கள் கிருஷ்ண பகவானின் தாலாட்டுப் பாடல்களைப் பாடினர்.

இவ்வேளையில் மஹாத்மா காந்தி அஹமதுநகரிலிருந்து மெஹராபாத் செல்லும் வழியில் அமைந்த 'மார்வாரி பங்களா'வில் தங்கியிருந்தார்.

மெஹர் பாபா அறையிலிருந்து வெளியே வந்ததும், மண்டலியில் ஒருவர் மஹாத்மா காந்தி மெஹராபாத்தை நோக்கி நடந்து வருவதைப் பார்த்ததாகத் தெரிவித்தார். பாபா உடனே "**அவருடைய நேரம் இன்னும் வரவில்லை. அவர் இங்கு வரமாட்டார். வருவதானால் நான் மறுபடியும் எழுதத் தொடங்கி, பல விஷயங்களை அவருக்கு விளக்குவேன்**" என்று குறிப்பிட்டார். (விஷ்ணு கற்பலகையும், சாக்குக்கட்டியும் தயாராக வைத்திருந்தார், ஒருவேளை எதிர்பாராமல் காந்தி அங்கு வந்தால் பயனாகும் என்ற எண்ணத்தில்!)

காந்தி, அவருடைய ஆதரவாளர்களின் கூட்டத்தில் கலந்து, ராஷ்டிரிய பாடசாலையைத் திறந்து வைக்க, அஹமதுநகர் வந்திருந்தார். அவர் காலை உடற்பயிற்சிக்காக நடந்து செல்லும் வழியில் அவரது காரியதரிசி நஸர்வான், மெஹர் பாபாவைப் பற்றி அவருக்கு எடுத்துக் கூறி, அவர் சத்குரு உபாஸனி

மஹாராஜின் முக்கிய சீடர் என்பதையும் விளக்கினார். மஹாராஜின் பெயரைக் கேட்டதும் காந்தி அதிர்ச்சியடைந்து, பேச்சின் தலைப்பை மாற்றி, மெஹர் பாபாவை சந்திக்கும் விருப்பத்தை வெளிப்படுத்தவில்லை.

அதன் பின்னணியில் ஒரு முக்கிய காரணம் இருந்தது. 1924ஆம் ஆண்டு, பாபா கூறியதற்கிணங்க, ஸொராப்ஜி தேசாய் எழுதிய சத்குரு உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை, ருஸ்தம், மஹாத்மா காந்திக்கு அனுப்பி வைத்தார். அதைப் படித்த காந்தி, ஸாக்கோரிக்குச் சென்று மஹாராஜை சந்தித்தார். ஆனால், அத்தகைய குருநாதர்களின் அணுகுமுறை பெரும்பாலும் மர்மமாகவும், விவரிக்க முடியாததாகவும் இருக்கும். காந்தி சென்ற அவ்வேளையில் மஹாராஜ் பயங்கரமான கோப மனோபாவத்தில், அருகில் சென்ற அனைவரையும் திட்டி, துரத்திக் கொண்டிருந்தார். மஹாராஜின் தீவிரமான மனநிலையை அறியாத காந்தி, அவருடைய உடை, நடை, பாவனை மற்றும் அழையா தன்மையைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

அதற்குப் பிறகு, காந்தியின் காரியதரிசி நஸர்வான் நடந்ததை மெஹர் பாபாவிற்கு எடுத்தரைத்த போது, பாபா மறுபடியும் '**காந்தியின் நேரம் இன்னும் வரவில்லை, எனவே, நஸர்வான், காந்தியை இங்கு அழைத்துவர முடியாததை எண்ணி வருந்த வேண்டிய தேவையில்லை**' என்றார்.

இதற்கிடையில், மெஹர் பாபாவின் பிறந்தநாள் விழாவை சிறப்பிக்கும் விதத்தில், பாபாவிற்குப் புனித நீராட்டு அளிக்கப்பட்டது. பாபா மரப்பலகையில் அமர்ந்திருக்க, ஒவ்வொருவரும் ஒரு சிறிய குவளை வெந்நீரை அவர் மீது ஊற்றி, பாபாவை நீராட்டினர். பாபா ஒளிரும் வெண் அங்கியை அணிந்த வண்ணம் அக்கம் பக்கத்திலிருந்து வந்தவர் அனைவருக்கும் தரிசனமளித்து ஆசீர்வதித்தார். பாபாவிற்கு அணிவித்த பூமாலைகள் அவரைப் பூக்குவியலுக்குள் மூழ்கடித்தது.

அவ்வேளையில் நடந்த ஒரு சம்பவம், அவருடைய அன்பர்களின் கைகளால் பாபா அனுபவிக்கும் வேதனையை வெளிப்படுத்தியது. ஒருவர் அணிவித்த ரோஜா மாலையில் தேனீக்கள் தங்கள் இருப்பிடத்தை அமைத்திருந்தன. சிறிது நேரத்தில் தேனீக்கள் பாபாவைக் கடிக்கத் தொடங்கியதும் அவருடைய முகம் சிவந்து காணப்பட்டது - ஆனால், பாபா புன்முறுவலுடன் தரிசனத்தைத் தொடர்ந்தார். கூட்டத்தில் ஒருவர், "பாபாவை பாருங்கள்; என்ன அற்புதமான தோற்றம்! அவர் முகம் சூரியனைப் போலப் பிரகாசிக்கிறது!" என்றார். மற்றுமொருவர், "பாபாவின் கன்னங்கள் ரோஜாப்பூக்கள் போல் உள்ளன!" என்று குறிப்பிட்டார்.

மண்டலி பூமாலைகளை பாபாவின் கழுத்திலிருந்து எடுத்தபோது தேனீக்கள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

பாபா கவலையுடன் இவ்வாறு தெரிவித்தார்: "**தேனீக்கள் கடித்ததால் எனது முகம் தடித்து சிவந்தது, தெய்வீக ஒளியால் அல்ல! பாருங்கள்,**

**எனக்குப் பிரியமானவர்களின் கைகளால் நான் அனுபவிப்பதை பாருங்கள்! எப்பொழுதும் அவர்கள் எனக்கு மாலை அணிவிக்கிறார்கள், நானும் அவர்களின் சந்தோஷத்திற்காக அவற்றை ஏற்றுக் கொள்கிறேன், இருந்தும் கஷ்டங்களை அனுபவிக்கிறேன். இதுவே எனது தலைவிதி."**

அன்று காலையில், ஆரத்திக்கு முன்னதாக, மெமோ பாபாவைப் பார்த்து இவ்வாறு தெரிவித்தார்:

"மெரோக், உன்னுடைய பிறந்தநாளான இன்று, உன்னை இப்பூமியில் கடவுளாக அனைவரும் வணங்குகின்றனர். நான் உனது தாயானதால், எனக்கும் உரிய மரியாதையை வழங்க வேண்டும்; எனவே இந்த உலகில் எனக்காக எஞ்சியிருக்கும் ஒன்றே ஒன்று - நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும்! நீ திருமணம் செய்து, ஈன்றெடுக்கும் குழந்தைகள் எனது மடியில் தவழ வேண்டும் என்று எவ்வளவு ஆர்வமாக இருக்கிறேன் தெரியுமா?"

பாபா அமைதியாக சிரித்துக்கொண்டே பதிலளித்தார்:

**"மெமோ, நீங்கள் கூறுவது முற்றிலும் சரிதான். நீங்களும், ஜீஸஸின் தாயார் மேரி மற்றும் கிருஷ்ணனின் வளர்ப்புத் தாயார் யஷோதாவை போலத்தான். உங்களுக்கு அதற்குரிய மரியாதையை வழங்குவது மட்டுமின்றி, கடவுளாகிய நான் உங்கள் கருவில் பிறவி எடுத்ததால், ஒரு நாள் உலகம் உங்களையும் வணங்கும்.**

**"உங்களின் புதல்வனாகிய நான், ஒருபோதும் உங்களுக்குக் கீழ்ப்படியாமல் இருக்க மாட்டேன். உங்கள் விருப்பத்தை நிச்சயமாக மதிக்கிறேன். இருந்தாலும், திருமணம் செய்து கொள்ள இரண்டு நபர்கள் தேவை - ஓர் ஆண், ஒரு பெண். நான் என்னதான் செய்ய முடியும்? கடவுள் என்னை அனுபவிக்கச் செய்யும் அந்த உணர்வு நிலையில் என்னைத் தவிர உலகில் வேறு எவருமில்லை! நான் அனைவரிடமும் நிலைகொண்டிருக்கும் அனுபவத்தைப் பெறுகிறேன். கடவுள், நான் மட்டுமே இவ்வுலகில் இருக்கும் உணர்வு நிலையை எனக்கு வழங்கியுள்ளார்; எஞ்சிய அனைத்தும் ஒன்றுமில்லாதது.**

**"ஒருவன் திரைப்படம் பார்க்கச் செல்லும் போது திரையில் அழகான நடிகையைப் பார்க்கிறான்; அந்த நடிகையைத் திருமணம் செய்து கொள்ள முடியுமா? முடியாது, ஏனெனில் அவர் அந்தத் திரையில் ஒரு இருபரிமாண உருவமே! அதுபோல, நான் உங்கள் அனைவரையும் மாயை என்னும் திரையில் காண்கிறேன். நான் எப்படித் திருமணம் செய்து கொள்ள முடியும்?**

மெமோவின் ஆசை உண்மையானது, ஆனால், பாபாவின் பதில் அவரைக் கண்கலங்கச் செய்தது.

முன்பு கூறியது போல, மெஹரா, பெண் மண்டலியிடையே தனித்தன்மை வாய்ந்த, சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தார். மெஹரா தனது இளம் வயதில் கதை புத்தகங்கள் படிப்பதில் மிக்க ஆர்வமாக இருந்தார்;

மெஹராபாத்தில் தங்குவதற்காக வந்தபோது, பல புத்தகங்களையும் எடுத்து வந்திருந்தார். இப்போது படிப்பது மட்டுமன்றி எழுதுவதிலும் தடையிருந்ததால் மெஹரா அனைத்து புத்தகங்களையும் குஷ்ரு குவாட்டர்ஸுக்கு அனுப்பி வைத்தார். மேலும் பாட்டில், டின்களில் இருக்கும் முகப்புச் சீட்டுகளை மெஹரா தவறியாவது வாசிப்பதற்குக் கூட பாபா கண்டிப்பான தடை விதித்ததால், அனைத்தும் வெள்ளை காகிதத்தால் மூடி மறைக்கப்பட்டது.

மேலும், மெஹரா, பாபாவைத் தவிர எந்த ஆண்மகனையும் பார்க்கவோ, பேசவோ, தொடவோ கூடாது எனவும் தடை விதிக்கப்பட்டது; நாளடைவில் பார்ப்பதற்கும், பேசுவதற்கும் அனுமதி இருந்தாலும் ஆண்களைத் தொடக்கூடாது என்ற நிபந்தனையை ஒருபோதும் ரத்து செய்யவில்லை.

பிப்ரவரி 22ஆம் நாள் பாபா, 'பரிணாமம்' (EVOLUTION) மற்றும் 'உட்சுழற்சி'யின் (INVOLUTION) போது குவிக்கப்படும் பழைய மனப்படிவங்களைப் பற்றி மறுபடியும் எடுத்துரைத்தார்:

"**ஒரு சத்குருவின் வட்டத்து சீடர்களுக்கு இறையுணர்வை வழங்க, அவர்களது பழைய மனப்படிவங்களை முற்றிலுமாக அழித்தாக வேண்டும்; அதற்கும் போதிய காலம் தேவைப்படுகிறது**" என்று கூறி உதாரணத்துடன் பாபா விளக்கினார்.

**ஒரு மோட்டார் வாகனத்தில் நீங்கள் இனிமையான மனநிலையில் சவாரி செய்து கொண்டிருக்கும் உங்களுடைய கனவிலிருந்து உங்களை விழிக்கச் செய்ய ஒரு புலி அல்லது சைத்தானின் அச்சம் விளைவிக்கும் தோற்றத்தால் வரும் அதிர்ச்சி தேவைப்படுகிறது. மேலும், உங்களுடைய கனவு கலைந்ததும், மோட்டார் கார் சவாரியும் இல்லை, புலியும் இல்லை என்பதைக் கண்டு கொள்கிறீர்கள். சுருக்கமாகச் சொன்னால் 'புலி' வர வேண்டும், அதன் உள் அர்த்தம் என்னவெனில், மனப்படிவங்களை அழிக்க, அவற்றை எதிர்த்திசையில் கொணர வேண்டும்.**

இன்னுமோர் எடுத்துக்காட்டைக் கூறி பாபா மேலும் விளக்கமளித்தார்:

**வெயிலடிக்கும் வேளையில் உங்கள் தலைக்கு மேல் குடையைப் பிடித்துக் கொண்டு, "சூரியன் எங்கே? அதை எனக்குக் காட்டுங்கள்!" என்று கத்துவது எவ்வளவு அபத்தமானது! நீங்கள் கூக்குரல் விடுக்கும் வேளையிலும் சூரியன் அங்கேயே இருந்து உங்களுக்கும், அனைவருக்கும் ஒளி வழங்கிக் கொண்டுதான் இருக்கிறது. நீங்கள் கையில் பிடித்திருக்கும் குடை, சூரியனைப் பார்க்க முடியாமல் உங்களைத் தடுக்கிறது. அதாவது, உங்களின் மனப்படிவங்களான குடை, உண்மைப்பொருளின் ஒளி எனும் சூரியனைக் காணத் தடையாக உள்ளது.**

அன்று, உரையாடிக் கொண்டிருக்கும் வேளையில் பாபா மண்டலியிடம், "**இந்தியாவில் இருக்கும் சிறைகளில் மிகப்பெரிய சிறை எது**?" என்று கேட்டதற்கு, சிலர் குஜராத்தில் அமைந்த சபர்மதி, அஹமதுநகர் மாவட்டத்திலிருக்கும் விஸாப்பூர் சிறை என்றும், மற்றும் பலர் பூனா ஏர்வாடா

சிறை எனவும் பதிலளித்தனர். பாபா புன்முறுவல் செய்துகொண்டே "**மனித உடல் தான் பூமியில் மிகப்பெரிய சிறை**" என்று குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து, மதத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், "**இந்து, கிறிஸ்தவ மத போதகர்கள், ஒருவருக்கொருவர் எதிரும் புதிருமாகப் பேசுவது பழக்கம்; ஆனால், மதம் என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? மதம் ஒரு கூண்டு; அதைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் அதனுள் அடைக்கப்பட்ட பறவைகள். ஒருவரின் மதத்தை விட்டு இன்னொரு மதத்தை ஏற்றுக்கொள்வது அர்த்தமற்றது. இது ஒரு கூண்டை விட்டு இன்னொரு கூண்டிற்கு தாவுவதுபோல்**" என்று விளக்கமளித்து இவ்வாறு கூறி முடித்தார்.

**நானே கிறிஸ்து, அவதார புருஷன்; நான் இருப்பதால் இவ்வுலகம் இருக்கிறது! என்னைப் பொறுத்தவரையில் நேரம், இடம், காரணம், விளைவு, இருமைத்தன்மை போன்ற எதுவுமில்லை; எங்கும் ஒருமைப்பாடு எனும் ஒற்றுமையான நிலை மட்டுமே நிலவுகிறது.**

மெஹர் பாபா, மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்ட வேளையில், சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி டாக்டர் கனி, பாபாவிடம் அவர் எப்போது மௌனத்தை கைவிடுவார் என வினவினார். பாபா உடனே ஓர் அதிர்ச்சியான பதிலைத் தந்தார், "**இன்னும் ஐந்து நாட்களில் நான் பேசுவேன்!**" மேலும் டாக்டர் கனியிடம் அதைப் பதிவு செய்யவும் கோரினார். ஆனால், ஐந்து நாட்களும் கடந்தன, மௌனமும் தொடர்ந்தது.

ஒருமுறை, பாபாவைக் கட்டாயப்படுத்தும் நோக்கத்தில், டாக்டர் கனி, அப்ஸேரி இருவரும் அவர் குடிலிலிருந்து வெளிவரும் நேரம் பார்த்து, கதவைத் தாழ்ப்பாளிட்டு, பாபா பேசுவதுவரை கதவைத் திறக்கப் போவதில்லை என்று கூறினர். (இதை அவர்கள் விளையாட்டாகத்தான் செய்தனர்; பாபாவின் மீதான அளப்பரிய அன்பினால், மௌனமாக இருந்து இத்தனை சிரமங்களை அனுபவிக்கிறாரே என்ற எண்ணத்தில்) "மௌனத்தைக் கலையுங்கள்; இல்லையேல் உங்களை வெளியில் வர விடமாட்டோம்" என்று அச்சுறுத்தினர்.

பாபா, ஜன்னல் வழியாக அவரது எழுத்துப்பலகையில் இனிமையான வாக்குறுதிகளை அளித்த பின்னரே அவர்கள் கதவைத் திறந்தனர். வெளியே வந்ததும் பாபா அவர்களைக் கண்டித்து, ஒற்றைக் காலில் நீண்ட நேரம் நிற்குமாறு தண்டனையும் வழங்கினார்.

மார்ச் 7ஆம் நாள், சாஞ்சி அவரது உறவினர்களில் பலரை, மெஹராபாத்திற்கு அழைத்து வந்தார். சாஞ்சியின் சகோதரர் 'நவ்ரோஜி தாதாசாஞ்சி', ஒரு கட்டிட ஒப்பந்தக்காரர், பூனாவில் பார்சி சிறுவர்களுக்காக, தங்கும் விடுதி ஒன்றைக் கட்டிக் கொண்டிருந்ததால், குடும்பத்துடன் பூனாவில் தங்கியிருந்தார். நவ்ரோஜியின் குடும்பத்தில் மனைவி பச்சாமாய், மூன்று

மகள்கள், அர்ணவாஸ், நர்கிஸ், ரோடா மேலும் நான்கு மாத ஆண் குழந்தை தெஹம்தன் இருந்தனர்.

அவர்களுடன், மிகுந்த தயக்கத்துடன், பூனாவிலிருந்து அஹமதுநகருக்கு சுற்றுலா செல்வதாக உடன் வந்தவர், நெருங்கிய உறவினர், 'மெஹர்ஜி கர்காரியா'. தாதாசாஞ்சி குடும்பத்தினர் மெஹராபாத் வந்து, மெஹர் பாபாவைப் பார்த்த முதல் பார்வையிலேயே, அவரது பிரகாசமான முகம் மற்றும் ஒளிரும் அம்சங்கள் அனைவரின் உள்ளங்களையும் நெகிழச் செய்தது.

இதுபோன்ற முகம் வேறு எவருக்கும் இல்லை;
இது தெய்வீகத் தன்மைமிக்க, மேலுலகுக்கே உரித்தான ஒன்று!
இதுபோன்ற கண்கள் வேறு எவருக்கும் இல்லை;
சத்தமின்றி ஊடுருவி உள்ளத்தின் ஆழத்தைத் தொடுகிறது இன்று!

தாதாசாஞ்சி குடும்பத்தினர் மும்பையில் வாழ்ந்த பார்சி இனத்தவர்கள் என்றாலும், மதக் கோட்பாடுகளின் பழக்கவழக்கங்களுக்கு மாறாக அனைவரும் மெஹர் பாபாவை தரிசனம் செய்து, பாதங்களைத் தொட்டு வணங்கினர். ஆனால், மெஹர்ஜி கர்காரியா மட்டும் சிறிது தூரத்தில் நின்றபடியே கரம் கூப்பி வணங்கினார்.

அவர்கள் வந்த நேரத்திலிருந்து பாபா, சிறு குழந்தை தெஹம்தனை பார்த்துக் கொண்டிருந்தார்; குழந்தையை அவர் கைகளில் ஏந்தி, நீண்ட நேரமாக முத்தங்கள் கொடுத்தார். அந்த நாளிலிருந்து தாதாசாஞ்சி குடும்பம் மெஹர் பாபாவின் தெய்வீக அன்பின் அடிமையாக இருந்தது.

மார்ச் 11ஆம் நாள், மெஹர் பாபா விரைவில் தொடங்கவிருக்கும் 'மெஹராஷ்ரம்' பள்ளிக்கூடத்தைப் பற்றிய பேச்சு எழுந்தது; மண்டலி அனைவரும் பாபா கூறுவதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தனர்: "**சாதாரண உலகக்கல்வி அல்லது உலக நடைமுறைக்கு ஏற்ற பாசம், பற்று இவைகளில் எந்த முக்கியத்துவமும் இல்லை**" என்று அவர் கூறியதை மீண்டும் தெளிவுபட விளக்கினார்:

"**நான் ஆன்மீகக் கல்வி வழங்க உள்ளேன்; அதற்கு எதையும் கற்றறிய வேண்டிய தேவையில்லை. இந்தப் பள்ளிக்கூடத்தை நான் அதற்குரிய ஊடகமாக மாற்றுவேன்.**"

1927, மார்ச் 21ஆம் நாள், 'ஜாம்ஷெட்-எ-நவ்ரோஸ்', அனுஷ்டிக்கப்பட்டது. மண்டலி மெஹர் பாபாவிற்கு புனித நீராட்டுவிழா நடத்தி, தரிசனம் செய்து, ஆரத்தி பாடினர். பாபாவின் பின்னால் நடந்து சென்ற **ஸொராப்ஜி தேசாய்** பாபாவின் கால்கள் பதிந்த இடத்திலிருந்து தூசுகளை அள்ளி எடுப்பதை ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தார். அவ்வாறு செய்யும் வேளையில், பிறர் மத்தியில் கேலிக்குரியவராகத் தென்படுவாரோ என்ற எண்ணம் அவர் மனதில் எழும்பியதும், பாபா அங்கேயே நின்ற வண்ணம், ஸொராப்ஜியிடம் இவ்வாறு குறிப்பிட்டார்:

**"ஒரு குருநாதரின் காலடியில் இருக்கும் தூசு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை கற்பனை செய்ய முடியாது. காலடியில் மிதிபட்ட போதும், தூசுகள் குறை கூறி முறையிடாமல் அமைதி காப்பது போல், எனது காலடியில் இருக்கும் ஒருவர் சிகரத்தின் உச்சியைச் சென்றடைவார். உங்களின் இறுமாப்பு, அகந்தை, தற்பெருமை அனைத்தும் தூள் தூளாக வேண்டும்; அப்போது தான் தூசின் முழுத் திறமையும் ஒளிர்விடும்."**

பல மாதங்களின் கலந்தாய்வுக்குப் பின்னர், இறுதியாக, சிறுவர்களுக்காக 'மெஹராஷ்ரம்' என்ற பெயரில் விடுதி பள்ளிக்கூடம் ஒன்று நிறுவ திட்டமிடப்பட்டது; மத சார்பற்ற, ஆன்மீகக் கல்வி வழங்குவதே இதன் லட்சியம். சிறுவர்கள், ஆஷ்ரமத்தில் பணி புரிபவர்களைத் தவிர வெளியுலகம் அல்லது மண்டலியுடன் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது. ருஸ்தம் ஈரானி பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். "**அனைத்து வகுப்புகளைச் சார்ந்த, மற்றும் சமய நம்பிக்கை மிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி முறை இந்திய அரசியல் விடுதலைக்குப் படிப்படியாக வழிவகுக்கும்**" என்று மெஹர் பாபா கூறினார். "**இவ்வாறு, ஆன்மீக மேம்பாடு மட்டுமின்றி பொருள்வள முன்னேற்றங்களும் ஏற்படும். இந்தக் கல்வியின் ஒரு முக்கிய நோக்கம், சிறுவர்கள் எந்த ஒரு மதத்திற்கும் பாரபட்சம் காட்டாமல் இருப்பதே! பல கலவரங்களுக்கு முக்கிய காரணமாக இருப்பதும் இதுவே!**" பாபா தொடர்ந்து, "**பல இந்திய தலைவர்கள் தேசியவாதத்தை ஆதரித்து அருமையான சொற்பொழிவுகளை வழங்குகின்றனர், ஆனால், சகிப்புத்தன்மை ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது**" என்று குறிப்பிட்டார்.

மார்ச் 31ஆம் நாள், அஹமதுநகர் ரெயில்வே காலனி, கோரக் தோட்டத்தில் நடந்த பஜனை-கீர்த்தனை நிகழ்ச்சியிலிருந்து திரும்பி வந்த பின்பு, பாபா மண்டலியை துனியருகில் அழைத்து பல விளக்கங்கள் அளித்தார்:

**உலகின் கவலைகள் மற்றும் தொல்லைகள் அனைத்தும் சிந்தனைகளால் ஏற்படுகின்றன. சிந்தனைகள் பலதரப்பட்டவை! சிந்திப்பதை நிறுத்த வேண்டும். வெகு விரைவில், உலகின் சிந்தனைகளை** (கவலைகளை) **நான் என் மீது ஏற்றுக் கொள்ளப் போகிறேன், இது எனது உடல் ஆரோக்கியத்தைக் கடுமையாக பாதிக்கும். எனக்கு நடக்க இருப்பதைக் கண்கூடாக நீங்கள் காண்பீர்கள்; அது உங்களுக்கு மிகுந்த மனக்கஷ்டங்களைத் தரும். அப்போது, உங்களில் பலர் இங்கிருந்து சென்று விடுவார்கள். எனது துயரம் உச்சத்தை எட்டும் தருவாயில், உலகின் ஒரு முக்கியமான விளைவுக்காக எனது உதடுகளிருந்து வரும் சிறப்பு மிக்க அந்த ஒரு வார்த்தை, அனைவரையும் அடிபணிய வைக்கும். என்னுடைய வார்த்தை, புனிதமாக இருந்து பல அதிசயங்களை விளைவிக்கும்.**

ஏப்ரல் 8ஆம் நாள், பாபா, மண்டலியை அழைத்து, சிறுவர்களுக்குத் தனியாக ஆஷ்ரமம் அமைக்கும் சாத்தியத்தைக் குறித்துப் பேசினார். மேலும் தொடர்ந்து, "**நான் உங்கள் முன் வைக்கும் எந்தக் கேள்விகளுக்கும் நீங்கள் வெளிப்படையான கருத்தைத் தெரிவிக்க வேண்டும், இல்லையேல்.....**" என்று தொடர்ந்து, நகைச்சுவையாக "**அடுத்த பிறவியில் தவளைகளாகப் பிறக்கும் உங்களை, ஊறுகாயிட்டு, இதுவரையிலும் இவ்வுலகம் கண்டிராத அளவுக்கு நிகழவிருக்கும் மிகப்பெரிய சீன யுத்தத்தின் வீரர்கள் கடித்து விழுங்குவார்கள்**" என்று கூறி முடித்தார்.

அதேநாள் மதிய வேளையில், மஹாத்மா காந்தி கூறியதாகச் செய்தித்தாளில் வெளிவந்த '**இந்தியாவில் வாழும் இந்து, முஸ்லிம்கள் இவர்களை இணைக்கும் நோக்கத்தில் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளைக் கைவிட போவதாகவும், அதை வேறு ஒரு மாபெரும் சக்தியால் தான் செய்ய முடியும்**' என்ற செய்தியைப் பற்றிய விவாதம் நடைபெற்றது. அதற்கு பாபா இவ்வாறு கருத்துரைத்தார்:

**இவ்வுலகின், குறிப்பாக இந்திய தேசத்தின் அனைத்து இனத்தைச் சார்ந்த மக்களையும் ஒன்றிணைக்க அவதார புருஷரால் மட்டுமே முடியும். ஆனால், அவ்வேளையில் காந்தி உயிருடன் இருக்கமாட்டார். என்னுடைய மௌனத்தை கலைக்கும் முன்னரே காந்தி உயிரைத் துறந்து விடுவார். அதைக் கேட்கும் பாக்கியம் அவருக்கு இல்லை. அதற்கான ஆயத்த நிலையை அவர் இன்னும் அடையவில்லை. அவர் என்னிடம் அல்லது ஏதாவது ஒரு சத்குருவிடம் சரணடைந்திருந்தால் அந்தத் தகுதியைப் பெற்றிருக்கக் கூடும். அவருக்கும் அந்தத் தைரியம் இல்லை, அவருடனிருந்த தோழர்களும் அதைச் செய்ய இடம் கொடுத்திருக்க மாட்டார்கள்.**

மறுபடியும் ஏப்ரல் 11ஆம் நாள், அப்போதைய அரசியல் நிலைமையைக் குறித்த விவாதம் தொடர்ந்தது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**இப்போது மெஹராபாத் ஆஷ்ரமத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி, இந்திய அரசியல் நிலையை முன்னோக்கி எடுத்துச் செல்ல வழிவகுக்கும். இது இந்திய தேசத்தின் ஆன்மீக முன்னேற்றத்தில் மட்டுமின்றி, பொருளாதார வளர்ச்சிக்கும் தூண்டுகோலாக இருக்கும். இந்தக் கல்வி நிறைவடையும் தருவாயில், இன்றைய காலகட்டத்தில் நிகழும் மதக்கலவரங்கள் முற்றிலும் மறைந்து, இந்த சிறுவர்கள் எவ்வித மதவேறுபாடுகள் அல்லது பாரபட்சங்கள் இல்லாமல் இருப்பார்கள். இவர்களின் இதயங்களில் வெறுப்பு மற்றும் வெறித்தனத்தின் விதைகள் அழிக்கப்பட்டு, அனைத்து மதங்கள் மற்றும் நம்பிக்கைகள் மீது ஒரு உண்மையான சகிப்புத் தன்மையை உருவாக்கும். இந்த மாணவர்கள் - இக்காலத்தில் நடப்பது போல, வெறும் பேச்சினால் அல்ல தங்களது**

**செயல்களால் - உலகளாவிய பொது மதத்தை அனைவருக்கும் எடுத்துரைப்பார்கள்.**

மண்டலியில் ஒருவர், பாபா அவருடைய மௌனத்தைத் தொடர்வதன் காரணத்தைக் குறித்த கேள்வி எழுப்பியபோது, பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

**இவ்வளவு காலமாக நான் மௌனத்தைக் கடைப்பிடிக்கிறேன் என்றால், அதற்கு உறுதியான காரணம் அல்லது ஆன்மீக முக்கியத்துவம் இல்லாமல் இல்லை. இறைநிலையை அடையவிருக்கும் எனது வட்டத்து சீடர்களின் சிரமங்களையும், சுமைகளையும் குறைக்காவிடில், அவர்கள் சில உடல் ரீதியான துன்பங்களுக்கு ஆளாக நேரிடும்.**

பாபா, மெஹராஷ்ரம் மற்றும் அது சம்பந்தமான மண்டலியின் பணிகளைக் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். அவருக்கே உகந்த சிறப்பான பாணியில் மண்டலியைக் குறை கூறவும், அதே வேளையில் பாராட்டவும் செய்தார். இங்கு நிறுவப்பட்ட பள்ளிக்கூடம் உலகின் பிற பள்ளிக்கூடங்கள் போலல்ல. கல்விக்கான இத்தகைய உலக நிறுவனங்கள் அரசாங்கம், நகராட்சி அல்லது பொதுநலத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. பாபா இவ்வாறு மண்டலிக்கு எடுத்துரைத்தார்:

**மெஹராஷ்ரம் நிறுவியதன் நோக்கம் முற்றிலும் மாறுபட்டது - இங்கு ஆன்மீகக் கல்வி வழங்கப்படுகிறது. அந்த நோக்கத்திற்காக எவ்வளவு அதிக அளவில் நீங்கள் சிரமப்படுகிறீர்களோ அந்த அளவுக்கு ஆன்மீக பலனையும் அடைவீர்கள்.**

**ஆன்மீகக் கண்ணோட்டத்தில் இத்தகைய துன்பங்களை அனுபவிப்பது ஒருவகையில் தேவையானதும், நல்லதுமாகும். இந்தத் துன்பங்கள் உங்களை உங்கள் கடமைகளிலிருந்து திசை திருப்பக் கூடாது. உங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் இது ஒருபோதும் தடுமாற்றம் அல்லது தொந்தரவாக இருக்க அனுமதிக்கப்படக்கூடாது. மாறாக, இந்த 'மனச்சோர்வும், மனதின் சுதந்திரத்தை இழந்த நிலையும்' உங்கள் கடமைகளை நோக்கி உங்களை மேலும் ஊக்குவிப்பது மட்டுமின்றி உயிர்ப்பிக்கவும் செய்யும். அப்போது நீங்கள் என்னை மகிழ்விப்பீர்கள்.**

**உங்கள் கடமையை உண்மையுடனும், மனசாட்சியுடனும் செய்து எல்லாவற்றிற்கும் மேலாக வைத்துக் கொள்ளுங்கள். புகழ்ச்சி அல்லது இகழ்ச்சி உங்கள் கடமையின் பாதையிலிருந்து உங்களைத் திசை திருப்பக்கூடாது. நீங்கள் கடமையை சரியாகச் செய்துள்ளீர்கள் என்று உங்கள் மனசாட்சி கூறுவதாயின், இதர விஷயங்கள் எதையும் கண்டுகொள்ள வேண்டாம். உங்கள் மனசாட்சியே சிறந்த நீதிபதி. தவறு செய்வது மனித இயல்பு, அதனால் தவறுகள் நிகழலாம், ஆனால், உங்களால் முடிந்ததை சிறப்பாகச் செய்யவேண்டும். நேரத்தோடு செய்யுங்கள், செய்வதை நீங்களாகவே முழு கவனத்துடன் செய்யுங்கள்,**

**பிறரை எதிர்பார்க்காதீர்கள். அதையும் மீறி தவறுகள் நடப்பதாக இருந்தால் அவை மன்னிக்கப்படும். இவ்விதமான தவறுகளுக்கு நான் உங்களைக் கடுமையாகத் தண்டிக்கும் வேளையில், அதை நினைத்து வருத்தப்படாதீர்கள். நீங்கள் செய்தது சரி என்று உங்கள் மனசாட்சி கூறுவதாக இருந்தால் அதுவே போதுமானது.**

ஏப்ரல் 19ஆம் நாள் பள்ளிக்கூட நிர்வாகி ராவ்ஸாஹேப், ராமாஜி காம்ப்ளே எனும் மாணவனின் நடைமுறைகளைப் பற்றி பாபாவிடம் குறை கூறி முறையிட்டார். பாபா அந்த சிறுவனிடம், "**நீ ஒரு நல்ல சிறுவன், ஆனால், உன்னிடம் ஏகப்பட்ட கர்வமுள்ளது. உன்னைப் போன்ற சிறுவர்கள் அனைவரும் பணிவு, மரியாதை, அமைதி ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும்; இவை அனைத்தும் ஒரு படித்த பண்புள்ள மனிதனின் உண்மையான அடையாளங்கள்.**"

தாதாபாய் நவ்ரோஜியை எடுத்துக்காட்டி பாபா இவ்வாறு கூறினார்: "**அவர் எவ்வளவு எளிமையானவர்! மாணவராக இருந்த வேளையில் ஒரு தெருவிளக்கின் கீழ் இரவெல்லாம் அமர்ந்து படித்தார். அவர் ஒரு சிறந்த மற்றும் பிரபலமான மனிதராக ஆனபோதும், வாழ்வில் அதே எளிமையைப் பின்பற்றினார்.**"

மெஹர் பாபாவின் அவையில் முக்கிய சீடராக அங்கம் வகித்த **குஸ்தாஜி** பெரிய வாயாடி, அவர் ஷிர்டி சாய்பாபா, உபாஸனி மஹாராஜ், ஹஸ்ரத் பாபாஜான் இவர்களுடன் நீண்ட காலம் சேவை புரிந்து வந்ததால், பலவிதமான வரலாற்றுப் பொக்கிஷங்களின் ஆதாரமாகத் திகழ்ந்தார்.

குஸ்தாஜியின் நீண்ட நேர வீராவேச பேச்சு, மண்டலியிடையே விவாதம் மற்றும் விசனத்தை ஏற்படுத்தியது. மே 1ஆம் தேதியிலிருந்து பாபா குஸ்தாஜியை மௌனம் கடைப்பிடிக்குமாறு கட்டளையிட்டார்.

சில காலத்திற்குப் பிறகு, பாபா, மெஹராவின் தாயார் தவுலத்மாய் அவர்களையும் மௌனம் அனுஷ்டிக்குமாறு அறிவுறுத்தினார். அவர் இந்தக் கட்டளையைத் தனது இறுதி காலம்வரை தவறாமல் கடைப்பிடித்து வந்தார்.

1927, மே 1ஆம் நாள், 'மெஹராஷ்ரம்', அரன்காவ்மின் வெளிப்புற பகுதியில் தற்காலிகமாகத் திறக்கப்பட்டு, ஒரு மாதத்திற்குப் பிறகு மெஹராபாத் மேல்மலைக்கு மாற்றப்பட்டபோது, ஆரம்பத்தில் பத்து மாணவர்கள் இடம்பெற்றனர்: 4 பிராமண மாணவர்கள், 3 மஹர் (தாழ்த்தப்பட்டவர்கள்) மற்றும் 3 மராட்டா மாணவர்கள். ஒவ்வொருவருக்கும் சாதாரண கருப்பு தொப்பி, காக்கி சட்டை, கால்சட்டை, காலணி, வெள்ளை மேலுறைகள் மற்றும் இரும்பு பெட்டி, துண்டுகள், கைக்குட்டைகள், போர்வை, தலையணைகளும் வழங்கப்பட்டன. பாபா, தினமும் இரண்டு மணி நேரம் பள்ளிக்கூடத்தில் மேற்பார்வை செய்வது வழக்கம்.



மெஹர் பாபா
மதாரியுடன்



பெய்லி, மெஹர் பாபா
**19 செப்டம்பர் 1927**



**அமர்ந்திருப்பவர்**: பெஸு, கரிம், பாபா, மாஸாஜி, ஹோமி பட்டேனா
**நிற்பவர்**: பெண்டு, புவாஸாஹேப், ராவ்ஸாஹேப், மெஹர்வான் ஈரானி, சாஞ்சி, குஸ்தாஜி, பைதூல், சகன், நாதிர்ஷா பரூச்சா, விஷ்ணு

மே 12ஆம் நாள், கெய்மாய் ஜெஸவாலா, சில ஸட்டா குடும்பத்தினருடன் மெஹராபாத் வந்தார். "**நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?**" பாபா வினவினார். கெய்மாய் உடனே, அவர்கள் நாக்பூரிலிருந்து வருவதாகத் தெரிவித்தார். "**நீங்கள் பெரிய பாக்கியம் படைத்தவர்கள், எத்தனைப் பெரிய பாக்கியவான்கள்**!" பாபா அவர்களிடம் கூறினார். "**நான் என்ன சொல்கிறேன்? ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? என்னுடைய ஐந்து குருநாதர்களில் ஒருவர் தாஜூதீன் பாபா, நாக்பூரில் வாழ்ந்தவர். நீங்கள் அவரைப் பார்த்திருக்கிறீர்களா?**" கெய்மாய், இவ்வாறு பதிலளித்தார், அவருடைய தந்தை வழிவந்த சகோதரர் அர்தேஷிர் ஸட்டா, குடும்பத்துடன் நாக்பூர் வந்து தங்கிய வேளையில், தாஜூதீன் பாபா அவர்களின் வீட்டு வராந்தாவில் அமர்ந்திருப்பதை வழக்கமாகக் கொண்டார். மேலும் புகலிடத்தின் அதிகாரியான டாக்டர். பொனஸ்கர் வீட்டிலும் தாஜூதீன் பாபாவை சந்தித்ததாக எடுத்துரைத்தார்.

ஒரு சில தருணங்களில், தாஜூதீன் பாபா, கெய்மாய் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் தனி கவனத்துடன் விசாரித்ததாகவும், குறிப்பாக, அவரது மூத்த புதல்வன் 'எரச் ஜெஸவாலா'வைப் பற்றி விசாரித்ததாகக் கூறினார். "**அப்படியானால் நீங்கள் அதற்கு மேலும் கொடுத்து வைத்தவர்கள்**" என்று பாபா வலியுறுத்தினார்.

கெய்மாய், அக்பர் அச்சகத்தில் நடைபெறவிருக்கும் தனது இரண்டு புதல்விகளின் பூணூல் விழாவுக்காக, மெஹர் பாபாவை அன்புடன் அழைத்தார். பாபா அழைப்பை ஏற்றுக்கொண்டு, "**அந்த விழாவை நானே நடத்தி வைக்கலாமா?**" என்று வினவியதும், கெய்மாய் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். பாபா இவ்வாறு அறிவுறுத்தினார்: "**இரண்டு தனித்தனி பூணூல்களைத் தயார் செய்யுங்கள்; முதலாவதாக குருக்கள் வழியாகச் செய்து முடித்த பின்னர், அடுத்ததாக நான் என்னுடைய முறைப்படி செய்கிறேன்.**" பாபாவின் விருப்பப்படி கெய்மாய் அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்.

அடுத்த நாள், கெய்மாயின் கணவர், 'பப்பா' என்று எல்லோராலும் அழைக்கப்படும் 'பைரம்ஷா தோரப் ஜெஸவாலா' பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தார். துறவிகளைப் பற்றி, மேலும் குறிப்பாக, ஹஸ்ரத் பாபாஜானைக் குறித்து, பாபா அவருக்கு விளக்கியது:

**பாபாஜான், அவரது விரல்களை, புழுக்களுக்கு இரையாக அளித்து, இறுதியில் இரண்டு விரல்களை இழந்தார். அவர், காயங்களிலிருந்து கீழே விழுந்து கொண்டிருக்கும் புழுக்களை, அதனால் விளையும் தாங்கொணா வலியையும் பொருட்படுத்தாமல், மறுபடியும் எடுத்து காயங்கள் மீது வைத்தார். விரல்களுக்கு வேண்டிய சிகிச்சைகளைப் பெறாமல், அந்த விரல்களைப் புழுக்களுக்கு இரையாக்கி, பாபாஜான், கற்பனை செய்ய இயலாத அளவுக்கு, வேண்டுமென்றே துயரங்களை அனுபவித்து இரண்டு விரல்களை இழந்தார்.**

**இந்த நேரத்தில் எனது வாயினுள்ளே ஒரு கொப்புளம் மிகுந்த வலியைத் தருகிறது, ஆனால், நான் அதைக் கண்டுகொள்வதில்லை. துறவிகள் எப்போதும் துயரங்களிலும் மகிழ்ச்சியாக இருப்பவர்கள்.**

அன்று காலை பத்து மணிக்கு, இரண்டு ஆசிரியர்கள் பண்டோபா மற்றும் ராமகிருஷ்ண கிற்றே (GITTE) இவர்களிடையே கல்வியின் முக்கியத்துவம் குறித்து, பலத்த வாக்குவாதம் நிகழ்ந்தது. இன்றைய கல்வி, பாரம்பரிய குடும்ப அமைப்பின் தொழில் சார்ந்த வர்த்தகங்களை அழிக்கிறது (அதாவது தையல்காரர், செருப்பு தைப்பவர் மகன் தந்தையின் தொழிலையே செய்வது) என்று பண்டோபா வாதாடினார், அதேவேளையில், கிற்றே இந்தக் கல்வி முறையை ஆதரித்து, இதனால் நாடு மிகவும் சிறப்படையும் என்று எடுத்துரைத்தார். இவர்களின் வாக்கு வாதங்களை கவனித்த பாபா, இவ்வாறு விளக்கினார்:

**கல்வி எவ்வளவுதான் தவறாக, திறமையற்றதாக இருந்தாலும், அது எப்போதுமே அறியாமையை விட சிறப்பானது. கல்வி, நன்மையே பயக்கும், நல்லதையே செய்யும். கல்வி, எப்போதும் பொருளாதார நன்மையைத் தராவிடினும், நல்ல மனப்பயிற்சிக்கு ஊடகமாக விளங்கும். மனரீதியாக, இது மனித முன்னேற்றம், மேம்பாடு மற்றும் வளர்ச்சியை நோக்கி படிப்படியாக முன்னேறிச் செல்லும். எந்த இடத்திலும் எல்லா சூழ்நிலைகளிலும் கல்வியே சிறந்தது என நான் மீண்டும் மீண்டும் தீர்க்கமாகக் கூறுவேன். கல்விமுறை தவறாகவோ, குறைபாடு மிக்கதாகவோ இருக்கலாம்; அதற்காக, கல்வியைக் குறைகூற முடியாது.**

ஜூன் 3ஆம் நாள் மெஹர் பாபா, மண்டலியின் இருப்பிடத்தில் ஓய்வெடுப்பதற்காக வந்தார், ஆனால், சீரற்ற வானிலை அவர் உடல்நிலையை பாதித்தது. பாபா இதைப்பற்றி விளக்கினார்:

**இயற்கை நிகழ்வுகளின் சாதாரண போக்கில், சத்குருக்கள் சட்டத்தை மீறாமல் எதுவும் செய்ய முடியும். சட்டம் இயற்றுபவர்கள் சட்டத்தை மீறுபவர்களாக இருக்க மாட்டார்கள்!**

**இந்த பூமியில் இறைநிலையை எய்திய 56 ஆத்மாக்களில், 5 சத்குருக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்; மேலும், உயர்ந்தவர்களில் உயர்ந்தவரான ஒருவர், அவதார புருஷர், அது நானே! 700லிருந்து 1400 ஆண்டுகளுக்கு ஒருமுறை, ஆண் மனித ரூபத்தில் (நான்) உலகில் வருகிறேன்; நீங்கள் ஒவ்வொருவரும் என்னைத் தனித்தனியாக நேசிக்கும் வாய்ப்பை அடையப்பெறுவது, சந்தேகத்திற்கு இடமின்றி மிகவும் அரிதான மற்றும் அதிர்ஷ்டமுமான விஷயம், ஏனெனில், சத்குருக்கள் கூட, அவதார புருஷரின் பௌதீக உடலைத் தொடத் துடிக்கிறார்கள்.**

**இந்த உலகம் வேதனை, துன்பம், துயரம், குழப்பம் ஆகியவற்றின் பிடியில் சிக்கித் தவிக்கும்போது நான் தோன்றுகிறேன். அப்போது ஆன்மீகம்**

**அதன் உச்சத்தைத் தொடும், பொருளாதாரம் அடிமட்ட நிலையை அடையும். அதைத் தொடர்ந்து, காலம் கடந்து செல்லச் செல்ல, ஆன்மீகம் அடிமட்ட நிலையை அடைந்து, பொருளாதாரம் உச்சத்தை எட்டும்.**

**காலத்தின் தொடக்கத்திலிருந்தே இந்த விளையாட்டு நடந்து கொண்டிருக்கிறது, அது காலாகாலத்திற்கும் நடந்துகொண்டே இருக்கும்.**

**பிரபஞ்சத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதில் எனக்கென ஒரு தனிச் சட்டம் உள்ளது. ஆனால், நான் பேசும்போது அந்தச் சட்டமானது ஒதுக்கி வைக்கப்படும், ஏனெனில் ஆன்மீகத் தாக்கம் அவ்வேளையில் உலகளாவிய அளவில் இருக்கும். இப்படி, 'ஏறி-இறங்கும்' பலகையைப் போல்** (பாபா அவருடைய எழுத்துப்பலகையை மேலும் கீழும் அசைத்துக் காண்பித்தார்) **ஆன்மீக சக்தி படிப்படியாகக் குறைந்து, பொருளாதார சக்தி அதிகரிக்கும்போது, மறுபடியும் இந்தச் சட்டம் தானாக நிலைநாட்டப்படும். பொருளாதாரம் சீர்குலைந்து, குழப்பநிலை உச்சக்கட்டத்தை எட்டும்போது நான் மறுபடியும் தோன்றுவேன். அவ்வேளையில், ஆன்மீகம் அதன் உச்சக்கட்ட நிலையை அடையும்.**

ராம்ஜூ, பாபாவிடம் எல்லோரா குகைகளைப் பார்வையிடச் செல்லலாம் எனப் பரிந்துரைத்தார். செல்லும் வழியில் 'தவ்லாதாபாத் கோட்டை' அமைந்துள்ளது. பாபா எல்லோராவில் கைலாஷ் கோயில் மற்றும் சில குகைகளைப் பார்வையிட்டார்.

குல்தாபாத்தில் தேநீர் அருந்தும் வேளையில், பாபா, சாய்பாபாவின் குருநாதர் 'ஸர்ஸாரி ஸர் பக்ஷ்' என்பரின் சமாதி குல்தாபாத்தில் அமைந்துள்ளதாகத் தெரிவித்தார். ஷிர்டி சாய்பாபா வாழ்ந்த பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஸர்ஸாரி பக்ஷ் வாழ்ந்தார் எனும்போது இது எப்படி சாத்தியமாகும் என வினவியதும் பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**"ஒரு சத்குருவின் அருள் எவ்வளவு பெரியதும், மேன்மையானதும் என்பது உங்களுக்குத் தெரியாது. ஸர்ஸாரி பக்ஷ் உயிர் வாழ்ந்த காலத்தில், சாய்பாபா அவருடைய மண்டலியில் ஒருவராக இருந்தார். குருநாதரின் கருணையை சாய் அப்போதே அடையப்பெற்றிருந்தாலும்,** 700 **ஆண்டுகளுக்குப் பின்னரே சாய்பாபா பரிபூரண நிலையை அடைந்தார். ஸர்ஸாரி ஸர் பக்ஷ் என்பதன் பொருள் 'செல்வம் மேலான செல்வத்தை அள்ளி வழங்குபவர்' என்பதாகும்; இதை அவர் சாய்பாபாவிற்கு வழங்கினார்."** திரும்பி வரும் வேளையில், பாபா மண்டலியுடன் குஷ்ரு குவாட்டர்ஸில் மாலை உணவை முடித்துவிட்டு, இரவு எட்டுமணியளவில் மெஹராபாத் வந்து சேர்ந்தார்.

மண்டலியில் ஒருவர், பூனாவில் வாழும் பிரபலமான, வசதிமிக்க ஸொராஸ்டிரியர்களில் சிலர் மெஹராபாத் வரவிருக்கும் சாத்தியத்தை

எடுத்துக் கூறியபோது, பாபா அத்தகைய செல்வந்தர்களை எதிர்பார்ப்பதில் எந்த அக்கறையும் காட்டாமல், கண்டுகொள்ளாமல், இவ்வாறு தெரிவித்தார்:

**விளம்பரமும் புகழும் உண்மையில் ஒருவரின் உயர் நிலையை எடைபோடும் அளவுகோல் ஆகாது. பொதுவாக அரசியல் மற்றும் சமூக சேவகர்கள் உலகெங்கிலும் பெரிய மனிதர்களாகவும், புகழ் வாய்ந்தவர்களாகவும் பார்க்கப்படும் அளவுக்கு பிரபலமானவர்கள். ஆனால், வெளி உலகுக்குத் தெரியாமலிருக்கும் ஆயிரக்கணக்கான உண்மையான தொண்டர்கள் மற்றும் அமைதியாக உழைத்துக் கஷ்டப்படுபவர்கள், ஆயிரமாயிரம் (மஹாத்மா) காந்திகளையும், (வல்லபாய்) பட்டேல்களையும் விட உயர்ந்தவர்கள்.**

**காந்தியைப்போல் எந்த ஆரவாரமும் செய்யாமல், மிகுந்த மகிழ்ச்சியுடன், அவரை விட பத்து மடங்கு அளவில் உபவாசமிருக்கும் ஆரவாரமற்ற ஊழியர்கள் உண்மையிலே பொன்மணிகள் ஆவர். இருந்தாலும் இதுதான் உலக வழி - ஒரு காந்தி அல்லது ஒரு பட்டேல் ஐந்தே நாட்கள் உண்ணாவிரதம் இருப்பதானால், நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தி, செய்தித்தாள்களில் விளம்பர தலைப்புகளை வெளியிடுவது வழக்கம் - ஏனெனில் பொதுமக்கள் பார்வையில் அவர்கள் பிரபலமான அரசியல்வாதிகள்.**

அன்று மதிய வேளையில் மண்டலியிடம் பாபா முன்னறிவிப்பாக இதைக் கூறினார்: **அதிவிரைவில் ஓர் உலகப்போர் உருவாகும். அது முந்தைய போரைவிட மிகவும் பயங்கரமாகவும், இரத்தக்களரியில் அழிவை விளைவிப்பதாகவும் இருக்கும். இதில் அமெரிக்கா முக்கிய பங்கு வகிக்கும். லட்சக்கணக்கான மக்கள் உயிரை இழப்பார்கள். இந்த யுத்தம் மிகவும் கொடூரமானதாக இருக்கும், சடலங்களின் குவியல்களை அப்புறப்படுத்த கூட நேரமிராது. அப்போதுதான் நான் அவதார புருஷராக வெளிப்படுவேன்.**

ஜூலை மாதத்தில் கொல்கத்தாவில் நடந்த மதக்கலவரத்தைப் பற்றிய செய்தி பத்திரிகைகளில் வெளியானது; பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**இந்து மற்றும் முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் கலவரத்தில் ஈடுபட்டு, மதத்தின் பெயரில் அதைக் காயப்படுத்தி, அவமதிப்பது வெறும் பைத்தியக்காரத்தனம் மட்டுமின்றி முட்டாள்தனமும் ஆகும்! எந்த ஒரு மதமும் மற்றொரு மதத்தின் கட்டுப்பாடுகளை மீற அனுமதிப்பது, அதன் சொந்த மதத்தையே அவமதித்து, புனிதமான உணர்வை இழக்கச் செய்வது போலாகும்.**

**இந்து முஸ்லிம்கள் இவர்களிடையே மதமாற்றம் செய்து கொள்வது வேடிக்கையான, புத்தியற்ற செயலைக் குறிக்கும். ஒரு குறிப்பிட்ட மதத்தை பின்பற்றுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது அந்த மதத்தின் பெருமை அல்லது மதிப்பை மேம்படுத்துவதாகாது. மத மேலாதிக்கத்திற்கான போராட்டம் சமய பற்றில்லாத நிலையை உருவாக்கும்.**

**மதக்கலவரங்கள் மற்றும் உலகம் முழுவதும் பொதுவாக நிலவும் அமைதியின்மையின் உண்மையான காரணம், நீண்ட இடைவெளியில் உருவெடுக்கும் ஆன்மீகக் கிளர்ச்சியே ஆகும். இது அனைத்தும் ஒற்றுமை மற்றும் அமைதியில் முடிவடையும். வழக்கத்திற்கு மாறாக, திருப்தி தரும் முறையில் குடல் கழிவு வெளியேறும் முன்னால் அடி வயிற்றில் பெரிய அசௌகரியமும், வலியும் இருப்பதுபோல! இதுவும் அப்படித்தான். இவ்வித இடையூறுகள், வரவிருக்கும் அமைதியின் அறிகுறியாகும். இஸ்லாம், இந்து மற்றும் பார்சி மதங்கள் என்னிடம் இணைந்திருப்பது ஒரு தற்செயல் நிகழ்வல்ல; இதற்கு, ஒரு பெரும் முக்கியத்துவம் உண்டு!**

1927, ஜூலை 10ஆம் நாள் மெஹர் பாபா மௌனம் ஆரம்பித்து இரண்டு வருடங்கள் நிறைவடைந்தன.

அன்று குலாப்ஷா ஏதோ ஒரு காரணத்துக்காக, வருத்தத்தில் உணவு உண்ணாமல் இருந்தார். அவரை ஊக்கமூட்டும் விதத்தில், பாபா இவ்வாறு சமாதானப்படுத்தினார்: "**பிறர் கோபப்படும்போது மனதில் எதையும் வைத்துக் கொள்ளக்கூடாது. வழக்கம்போல் ஒழுங்காக உண்டு, அருந்த வேண்டும். இராமகிருஷ்ணா ஒருமுறை அவரை மிதித்த ஒருவரின் கால்களைக் கழுவி சுத்தம் செய்தார்! மனிதனாக இருந்து தற்காலிகமான உணர்ச்சிகளை எதிர்கொள்ள வேண்டும்! ஒரு வலுவான ஆனால், கடந்து செல்லும் புயலுக்கு எதிராக, பலவீனமான மரம்போலக் கீழே விழவேண்டாம்.**"

ஜூலை 12ஆம் நாள், டாக்டர் கனி பள்ளிக்கூட மாணவர்களுக்காக கிரிக்கெட் மட்டை, பந்துகளுடன் மெஹராபாத் வந்தார். பின்னர் அவர் பெர்ஸியன் வகுப்பாசிரியராக நியமிக்கப்பட்டார். மெஹராபாத்தில் நிறுவப்பட்ட பலவிதமான அமைப்புகளைப் பற்றி விவாதிக்கும் வேளையில், மெஹர் பாபா இவ்வாறு வெளிப்படுத்தினார்:

**மெஹராபாத்தில் என்னுடைய பணியானது, பல கால்வாய்களை வெட்டி அவற்றின் கரைகளில் முடிந்த அளவுக்கு மக்களை நிரம்ப வைப்பது; அதனால், கரைபுரண்டோடும் ஆன்மீக வெள்ளப்பெருக்கு அனைவருக்கும் பெரும்பலனை நல்கும்.**

அடுத்த நாள், குடும்ப குவாட்டர்ஸில் வைத்து வட்டத்து உறுப்பினர்களின் தயார் நிலையைப் பற்றித் தெரிவிக்கும்போது பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**என்னுடைய வட்டத்து மண்டலிக்காக நான் செய்யவேண்டிய பணி ஏறக்குறைய நிறைவடைந்துவிட்டது; மிகக் குறைந்த அளவில் மட்டுமே எஞ்சியுள்ளது. அது முடிந்ததும் ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளுக்குப் பயணம் செய்ய உள்ளேன். ஆன்மீக சொற்பொழிவுகளை அவற்றில் நாட்டம் உள்ளவர்களுக்கு மட்டுமே வழங்குவேன்; ஆனால், பெரும் அற்புதங்களை**

**நிகழ்த்தி, ஒளிர்விடும் விளக்கை நோக்கிச் செல்லும் விட்டில் பூச்சிகளைப் போல மக்களை ஈர்ப்பேன்.**

அன்று நடந்த ஆன்மீக உரையாடலின்போது பாபா இதை வெளிப்படுத்தினார்:

**சத்குரு, படைப்பவரின் பணியில் தலையிட முடியும், ஆனால், அதை அபூர்வமாகத்தான் செய்வார். சாதாரணமாக, சத்குரு அவரது சீடர்களுக்காகப் பணிபுரிவதைத் தவிர, படைப்பின் அம்சங்களிலிருந்து விலகியேயிருப்பார்.**

ஜூலை 17ஆம் நாள், பெர்ஸியன் மொழியில் வகுப்பு ஆரம்பித்து அதில் பெர்ஸியாவிலிருந்து வந்த 14 சிறுவர்களுக்கு (2 முஸ்லிம், 12 ஸொராஸ்டிரியர்கள்) பாடம் நடத்தப்பட்டது.

ஜூலை 20ஆம் நாள் பாபாவின் தாயார் ஷிரீன்மாய், மகன்கள் பெஹராம் (19), ஆதி ஜூனியர் (13) மகள் மணி (9) ஆகியோருடன் மெஹராபாத் வந்தார். ஆதி அங்கே தங்கியிருந்து இதர மாணவர்களுடன் கல்வி கற்பது நல்லது என்ற கருத்தை, பாபா தெரிவித்தார். ஆதி, பூனா நண்பர்களைப் பிரியும் அதிர்ச்சியில், மேலும் மெஹராபாத்தில் நிலவும் கடுமையான கட்டுப்பாடுகளை (அதிகாலையில் எழுந்திருப்பது, மிகவும் எளிமையான உணவை உண்பது) நன்கு அறிந்தவர் ஆகையால் விருப்பம் காட்டவில்லை. "என்ன? பூனாவிலுள்ள சிறந்த பள்ளிக்கூடத்தை விட்டு விட்டு, இந்தப் பாழடைந்த இடத்தில் தங்கிப் பயிலவா?" என்று கூறியதும், பாபாவின் சீற்றமிக்க பார்வையைக் கண்டு ஆதி அச்சத்தில் ஓடி மறைந்தார்.

பாபா, ஆதியைப் பின்தொடர்ந்து, பிடித்து, கன்னத்தில் பலமாக அறைந்து விளக்கினார், **"நீ என் உடன் பிறந்தவன்; இந்தப் பள்ளியில் முதன்முதலாக சேர்ந்து, எடுத்துக்காட்டாக இருக்க வேண்டியவன். நீயே இங்கு பயிலாவிடில் உலகம் என்ன சொல்லும்? எந்த வகையான கல்வி இங்கே வழங்கப்படும் என்று உனக்குத் தெரியாது. இத்தகைய கல்வியை, பூமிலுயிள்ள வேறு எந்தப் பள்ளியிலும் வழங்க முடியாது, மேலும் இங்கே பயிலும் மாணவர்கள் அனைவரும் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிகள்."**

நான்கு நாட்களுக்குப் பின்னர், ஆதி பள்ளிக்கூடத்தில் மாணவராகச் சேர்ந்தார். பெஹராமும் மண்டலிக்கு உதவியாக அங்கேயிருந்தார். தங்கை மணி பூனாவில் கல்வியைத் தொடர்ந்தார். மெஹர் பாபாவின் தந்தை ஷெரியார் அவ்வப்போது மெஹராபாத் வந்து சென்றார், எப்போதும் கடவுள் நாமத்தையே உச்சரித்துக் கொண்டு, பாபாவின் புகைப்படத்தை வீட்டில் வைத்து வணங்கி வந்தார்.

மெஹர் பாபாவின் சொற்பொழிவுகளை வெவ்வேறு மாத இதழ்களில் வெளியிடுவது குறித்து பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்:

**எனது தொடர்பில் இல்லாத எழுத்தாளர் அல்லது பத்திரிகை ஆசிரியருக்கு என்னுடைய குறிப்புகள், விரிவுரைகள், மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகளைத் திருத்தம் செய்வதற்காக அனுப்புவது விரும்பத்தக்கதல்ல. பத்திரிகையில் வரும் பதிவுகள் சரியாக அமைவதை உறுதிப்படுத்த, எழுத்தாளர் இங்கே இருக்க வேண்டும். உதாரணமாக என்னுடைய விளக்கங்களை தஸ்தூர் குறிப்பெடுத்து, பின்னர் எழுதும்போது அவருடைய சுய பாணியில் அதை எழுதி குழப்பி விடுகிறார்! என்னுடைய விளக்கங்களை மறுபடியும் எழுதி, ஒழுங்கு படுத்தும் நேரத்தில் கம்பீரமான நாகரீக நடையில் ஒருவர் எழுதலாம், ஆனால், அதன் ஆத்மார்த்தமான அர்த்தம் மாறாமலிருக்க வேண்டும். அப்படி ஓர் எழுத்தாளர் குறிப்பிட்ட நேரத்தில் இங்கு வருவார். தஸ்தூர் அருமையாக எழுதுபவர், ஆனால், அவரின் விட்டுக்கொடுக்காத மனப்பான்மையும், விதிமுறைகளும் சில சமூகத்தாரைப் புண்படுத்துவதாக அமையும்.**

இதுவரையிலும் யார் ஒருவரையும் பார்க்க அனுமதிக்காத இரகசிய புத்தகத்தைக் குறித்து, பாபா கடைசியாக இவ்வாறு தெரிவித்தார்:

**நான் எழுதிய அந்தப் பெரிய புத்தகத்தை உலகளாவிய முறையில் அனைத்து ஜாதி, மதங்களும் ஏற்றுக் கொள்ளும் தருவாயில், இது எதிர்காலத்தில் பைபிள், குரான், அவெஸ்தா, மற்றும் வேத நூலாக அமையும். இந்த மகத்தான புத்தகத்தை எழுதி முடித்த பின்பு, வேறு எதையும் எழுதுவதை நான் நிறுத்தி விட்டதால் அது சக்தி வாய்ந்ததாக உள்ளது.**

மூன்று வாரங்களுக்குப் பிறகு பாபா, தஸ்தூரிடம் கூறியதாவது:

**நான் இந்தப் புத்தகத்தில் எழுதியுள்ள ஆன்மீக ரகசியங்களைப் போல் இதற்கு முன்னர் எவரும் வெளிப்படுத்தியது இல்லை. இந்து மத வேத நூல்கள், நான் குறிப்பிட்டுள்ள ஒரு சில கருத்துக்களை ஆங்காங்கே சுருக்கமாக விளக்கியிருப்பது, வேறு எந்த வேத நூல்களிலும் காண முடியாது. ஆனால், நான் ஆன்மீக ரகசியங்களை நேரடியான மற்றும் தெளிவான சொற்களில் எளிதான முறையில் வெளிப்படுத்தியுள்ளேன். எதிர்காலத்தில் இது வேத சாஸ்திர நூலாக உலகெங்கும் இருக்கும்.**

ஆகஸ்ட் 10ஆம் நாள், மெஹர் பாபா இறைநிலையை குறித்து உவமையுடன் விளக்கினார்: உதாரணமாக,

**பெருங்கடல் = கடவுள், ஆனால், ஆரம்பத்தில் கடலுக்குத் தெரியாது அது எவ்வளவு விசாலமான கடல் என்று! கடல் அதனை யார் என அறிந்து கொள்ளும் அந்த ஆர்வம், புயலாக உருவெடுத்து, முதல் நீர்க்குமிழியை உருவாக்கியது.**

**நீர்க்குமிழி = அணு, குமிழியில் அடங்கிய நீர் = ஆத்மா**

**இந்நிலையில், கடலில் புயல் படிப்படியாக முன்னேறும் தருவாயில், அந்த நீர்க்குமிழி அலையாக மாறும்.**

அலை = மனித உருவம், இப்போது அந்தப் புயல் மனித உருவத்திற்கு (ஆயுள் காலங்கள் எனும்) ஒரு சிறிய படகை வழங்கும், அதாவது

படகு = ஆயுட்காலங்கள் எனும்போது,

கடல் காற்று = மனப்படிவங்கள்.

இந்த உவமைகளைக் கருத்தில் கொள்ளுங்கள். இப்போது, படகிலிருக்கும் மனிதனின் கைகள் கட்டுண்டு இருப்பதால் படகை (வாழ்க்கையை) நடத்திச் செல்ல முடியாத நிலையில் இருக்கிறான். அவன் மூச்சை மட்டும் சுவாசித்து வெளிவிடும் வேளையில், மனப்படிவங்கள் உருவாகி படகை நடத்திச் செல்ல வழிவகுக்கும். நல்ல முறையில் சுவாசித்து நல்ல மனப்படிவங்களை உருவாக்கினால், கடல் காற்று, படகை திசை திருப்பி, படகோட்டியை (சத்குருவை) நோக்கி எடுத்துச்செல்ல உதவும். அந்தப் படகோட்டி, ஆழ் கடலில் மூழ்கிய அவர், இப்போது கடலின் மேல் நிலைக்கு வந்து, அந்தப் படகுகளைத் தன் வசம் ஆக்குகிறார்.

படகோட்டி (சத்குரு) மனிதனின் கட்டுண்ட கைகளை அவிழ்த்து அவனைக் கடலில் மூழ்கடிக்கிறார். மனிதன் கடலில் மூழ்கியதும் அவன் 'நானே கடல்' என்பதை உணர்கிறான். இப்போது, அவன் ஆழ்கடலில் இருக்காமல் மேலே வந்து, படகை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, தான் விரும்பிய திசைகளில் படகை செலுத்த ஆயத்தமாகிறான்.

கடவுளோடு ஒன்றிய இந்த நிலையில், ஆத்மா தனது இலக்கை அடைந்து விட்டதால், படகுக்கு எந்தத் தேவையும் இல்லாமல் ஆகிறது. ஆனால், படகுகளில் இன்னும் மாட்டிக் கொண்டிருக்கும் துரதிர்ஷ்டமான மக்களை சரியான வழியில் எடுத்துச்செல்ல முழுப் பயிற்சி பெற்ற நீச்சல் வீரர்கள் (சத்குருக்கள்) பேருதவியாக இருக்கிறார்கள்.

இப்படி ஒரு சத்குரு அனைவருக்கும் இறைநிலையை அளிக்க முடியும்.

அதைத் தொடர்ந்து, பாபா மண்டலிக்கு, கீழ்க்கண்ட உபதேசத்தை வழங்கினார்:

பரிபூரண நிலையை அடையப்பெற்ற ஆத்மாக்களின் வெளித் தோற்றங்களையும், செயல்பாடுகளையும் வைத்து எதையும் மதிப்பிடாதீர்கள். கிருஷ்ணா, அர்ஜுனனிடம் தனது உறவினர்களோடு போர் புரிய கூறியது மட்டுமின்றி அவர்களைக் கொன்று குவிக்கவும் தூண்டினார். ஒரு வெறி நாயைக் கொல்வது உண்மையான கருணை. பிறரை கடிப்பதால் ஏற்படும் மனப்படிவங்களைத் தவிர்த்து, பரிணாமவளர்ச்சியில் முன்னேறிச் செல்ல இது சாதகமாக அமையும்.

மஹாத்மா காந்தியைப் பற்றிக் கூறுகையில் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**இன்றைய அரசியல் ஈடுபாடு மற்றும் சமூக இயக்கங்களின் செயல்பாடுகளால் காந்தி அவரது அடுத்த பிறவியில் பெருமளவில் துன்பங்களை சந்திப்பார். மதுபான கடைகளில் நடத்தும் மறியல், போராட்டம் போன்ற செயல்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் துன்பத்திற்கு உள்ளாயினர். இப்போது அவரைப் பின்பற்றுபவர்கள் மற்றும் துன்பம் அனுபவிக்கும் மக்களின் மனப்படிவங்கள் எதிர்வரும் பிறவியில் அவருடைய துன்பங்களுக்குத் தூண்டுதலாக அமையும். ஆனால், அவர் இதையெல்லாம் நல்லெண்ணத்துடன் செய்வதால் இதற்கு அடுத்த மூன்றாவது பிறவியில் இறைநிலையை எய்துவார்.**

ஆகஸ்ட் மாதத்தில் பாபா அடிக்கடி சொற்பொழிவுகளை வழங்கினார். அம்மாதம் 30ஆம் நாள் 'இறைநிலையை அடைந்த ஒருவர்' மற்றும் 'யோகி' இவர்களிடையே உள்ள ஆன்மீக சக்திகளின் வித்தியாசத்தைக் குறித்து பாபா விளக்கமளித்தார்:

**சாதாரணமாக அற்புதங்களை நிகழ்த்துவது, அவதார புருஷர், சத்குரு அல்லது இறைநிலையை அடைந்த ஒருவரின் இயல்பு தன்மையாகும், அதே வேளையில், மாயாஜால மந்திர சக்திகள் யோகிகளுக்குச் சொந்தமானது. முதலில் கூறியது மிக உயர்ந்த மற்றும் தன்னலமற்ற நோக்கங்களின் விளைவு, அதுபோல, பின் வருவதன் உள்நோக்கம், மாற்றமுடியாத மிக மோசமான சுயநலமாகும். ஆன்மீகத்தை நோக்கி உலகிற்கு ஒரு பொதுவான உந்துதலை வழங்க விரும்பும் வேளையில், அவதார புருஷர் அல்லது சத்குரு அற்புதங்களை நிகழ்த்துகிறார். ஆனால் யோகி, மாயாஜால சக்திகளை அவருடைய சொந்த விருப்பு வெறுப்புகளை பூர்த்தி செய்வதற்காகவே பயன்படுத்துகிறார்.**

**உதாரணமாக ஒரு குழந்தை, பச்சைக்கிளி ஒன்றின் கழுத்தை தனது கையில் பிடித்துக் கொண்டிருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள், அதுவும் சற்று இறுக்கமாகப் பிடித்தால் கிளி மாண்டு விடும் அபாயம் உள்ளது. அந்தக் கிளியைக் காப்பாற்றும் எண்ணத்தில் குழந்தையின் கையிலிருந்து வலுக்கட்டாயமாக வாங்குவது நல்லதல்ல, ஏனெனில் அந்தக் குழந்தை அப்போது தனது பிடியை இறுக்குவதற்கான வாய்ப்புள்ளது. எனவே குழந்தையிடம் ஒரு நாணயத்தைக் காட்டினால் அது கிளியைத் தனது கையிலிருந்து விட்டுவிடத் தூண்டும். இந்த நிகழ்வில் குழந்தைக்கு நாணயத்தை வழங்குவது அற்புதம் நிகழ்த்துவதைக் குறிக்கும்; மேலும் குழந்தையின் கைப்பிடியிலிருந்து கிளியைக் காப்பாற்றுவது அறியாமை மற்றும் மாயையின் பிடியிலிருந்து மனதைக் காப்பாற்றுவது போலாகும். இதுவே அவதார புருஷர் மற்றும் சத்குருக்களின் வழிமுறை. ஆனால், ஒரு யோகி அழகிய பெண்மணி ஒருவரைப் பார்த்து அடைய விரும்பினால், அவரைக் கவரும் பொருட்டு தனது மாயாஜால வித்தையால் தங்க நகைகளை உருவாக்குவார். நிஜத்தில், அவதார புருஷர் அல்லது சத்குரு**

**மற்றும் யோகி இவர்களின் நோக்கங்களிடையே உள்ள வேறுபாடு கணிக்க முடியாத அளவுக்கு மிகப்பெரிது.**

செப்டம்பர் மாதத்திலிருந்து பாபா பள்ளிக்கூடத்தில் அதிக நேரம் செலவழித்து, ஆன்மீகப் பாடங்களைத் துவக்கினார். மேலும் மாணவர்களுடன் விளையாட்டிலும் பங்கெடுத்து, உணவும் உண்ணத் தொடங்கினார்.

அடுத்த நாள், மெஹராபாத்தில், அவதார புருஷர் அல்லது கிறிஸ்துவின் சீடர்களிடையே, யூதாஸைப் போல் ஒருவர் எப்போதும் இருப்பதைப் பற்றிய காரணத்தை பாபா விளக்கினார். பாபா தனது விரலால் தரையில் ஒரு வட்டம் வரைந்து, விரலை அந்த வெளி வட்டத்தில் வைத்த வண்ணம் இவ்வாறு விளக்கமளித்தார்:

**பகவான் ராமனுக்கு ராவணன் இருந்தது போல, ஜீஸஸூக்கு யூதாஸ் இருந்தார். 12 சீடர்கள் அடங்கிய வட்டத்தில் ஒருவர் எப்போதுமே இப்படி இருப்பதுண்டு. வட்டத்தின் நடுவில் நானும், வெளிவட்டத்தில் சீடர்களும் இருக்க, எனது விரலை வட்டத்தில் சுழலும் கருவியாகக் கருதினால் வட்டத்தின் முடிவில் விரலடியில் இருப்பவரே யூதாஸ்.**

**எனது வட்டத்தில் இருப்பவர்களில், 11 உறுப்பினர்கள் நான் வாழும் காலத்திலும், என்னுடைய இருண்ட பாகமாக இருக்கும் 12ஆவது உறுப்பினர் நான் உடலைத் துறந்த பின்னரும் கடவுள் நிலையை அடைவார்கள்.**

நவம்பர் 2ஆம் நாள், மாணவர்கள், பள்ளியில் பணி புரிபவர்கள், ஆசிரியர்கள், இவர்களைத் தவிர வேறு ஒருவரிடமும் பேசக்கூடாது என பாபா திட்டவட்டமாக அறிவித்து, அன்றிலிருந்து எட்டாவது நாள், பால் அல்லது தேநீர் மட்டுமே அருந்தி ஐந்து மாதங்கள் தொடர்ந்து உபவாசம் மேற்கொண்டார்.

பின்னர் அன்று காலையில் உலகின் சிறந்த இலக்கியங்கள் பற்றிய பேச்சு எழுந்தது; தஸ்தூர், பாபாவிடம் அவருக்குப் பிடித்தமான இலக்கிய மேதாவிகள், குறிப்பாக கவிஞர்கள் யார் யார் என வினவியபோது பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**பெர்ஸியன் மொழியில் ஹாஃபீஸ், மேலும் ஆங்கிலத்தில் வில்லியம் ஷேக்ஸ்பியர், ஜான் மில்டன் மற்றும் ஷெல்லி. ஷேக்ஸ்பியர் இப்போது இந்தியாவில் ஒரு பிராமண குடும்பத்தில் பிறவி எடுத்து, அரசியலில் ஈடுபட்டுள்ளார், ஆனால், நாட்டிற்காக மிகவும் நேர்மையாக, தன்னலமற்ற தொண்டு செய்பவர்களில் ஒருவர். அவருடைய பழைய சிந்தனை சக்திகள் இப்போது செயலாக உருவெடுத்துள்ளன. அவர் ஒரு மகா மேதாவி; 'அவருடைய இலக்கிய படைப்புகளின் அசல் எழுத்தாளர் அவர் தானா?' என்ற சர்ச்சைகள் அனைத்தும் அர்த்தமற்றவை. அனைத்து நாடகங்களையும் எழுதியவர் அவரே, வேறு எவருமில்லை. முற்றிலும் அது அவரது மாபெரும் அறிவின் விளைவாகும். அவருடைய நாடகங்கள்**

மற்றும் கவிதைகளில் ஆன்மீகத்தின் சிறிதளவு வாசனைகூட இல்லாதிருந்தாலும் அவர் ஒரு சிறந்த மேதாவி. எழுத்தாளர் காளிதாஸை இந்தியாவின் ஷேக்ஸ்பியர் என்று அழைக்கலாம்.

மில்டன் ஆன்மீகப் பாதையில் முன்னேறிச் சென்றவர்; ஆனால், சூட்சும (பிராண) உலகில் இரண்டாவது தளத்தைத் தாண்டவில்லை. அவரால் சொர்க்கம், நரகம் இரண்டையும் காண முடிந்தது, அதனால்தான், சொந்த அனுபவத்தின் அடிப்படையில் அவரால் 'பாரடைஸ் லாஸ்ட் & பாரடைஸ் ரீகெய்ன்ட்' (PARADISE LOST AND PARADISE REGAINED) என்ற படைப்பு வெளிவந்தது.

ஷெல்லி ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து முன்னேறாவிடிலும், அவர் பண்புள்ள, முழுநிறை மனிதர், இறைவனையும் இயற்கையையும் பெரிதும் நேசிப்பவர். ஆனால், ஹஃபீஸ், பரிபூரண நிலையை எய்திய சத்குரு, ஆன்மீக இலக்கியங்களில் தலைசிறந்து விளங்கியதோடு, கவிதை நயமிக்க சுவையான பாணியையும் கையாண்டார்; இந்த விஷயத்தில் ஹஃபீஸ், பிர்தாஸி அல்லது ஷேக் ஸாதியை விடவும் சிறந்து விளங்கினார். ஷாம்ஸ்-எ-தப்ரீஸ், ஜலாலுதீன் ரூமி இருவரும் இறைநிலையை அடைந்தவர்கள், அதே வேளையில் உமர் கய்யாம் ஒரு சாதாரண மனிதர்.

மறுநாள் காலையில் பாபாவின் விளக்க உரை மறுபடியும் தொடர்ந்தது. அப்போது பாபா, வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு சிலரைப் பற்றிக் குறிப்பிட்டார்:

சிவாஜி அப்போதைய வீரர்களில் மிகப்பெரிய போர் வீரராகத் திகழ்ந்தார்; சொல்லப்போனால் நெப்போலியனைவிட தலைசிறந்த போர் வீரர். நெப்போலியன், துணிச்சல் மற்றும் புத்திசாலித்தனம் உடையவராக இருந்தாலும், பெருமை, பேராசை மற்றும் தீய குணம் மிக்கவராக விளங்கினார். சிவாஜி தைரியம் மிக்கவர், அதே வேளையில் நெப்போலியனின் அளவுக்குப் புத்தி கூர்மை இல்லாதவர்; மேலும் பெருமையும் பேராசையுமற்றவர்.

அனைத்து செயல்களிலும் சிவாஜியின் குருநாதர் சுவாமி ராம்தாஸ் அவரை வழிநடத்தினார். போரைப் பொறுத்த வரையில் அனைத்தும் நியாயமானதே - சொல்லப்போனால் தந்திரங்கள் கூட; இருப்பினும், அவருடைய சாம்ராஜ்யம் முழுவதையும் அவரது குருநாதருக்கு அர்ப்பணித்தார். அவர் சிறந்த நிர்வாகத்திறன், தூய நோக்கங்கள் மற்றும் நன்னடத்தை உடையவராக இருந்ததால் ஒவ்வொன்றிலும் சிறந்து விளங்கினார் - அசோகரின் காலத்திற்குப் பிறகு வந்த ஒரே இந்து மன்னன் சிவாஜி.

அக்பர் ஒரு வித்தியாசமான மனிதர், நல்ல கொடையாளர். அவருடைய மகத்துவமிக்க உள்ளுணர்வும், உன்னதமான இதயமும்தான் அவரை சிறந்த மனிதனாக்கியது. அனைத்து மக்களின் மத உணர்வுகளுக்கு மிகுந்த மரியாதை அளித்து, தயாள குணம் படைத்தவராகத் திகழ்ந்தார்.

1927, நவம்பர் 19ஆம் நாள், சனிக்கிழமையன்று எலும்பும் தோலுமான தோற்றத்தில் சாது ஒருவர் மெஹராபாத் வந்தார். சமையல் குவாட்டர்ஸை சுற்றி வந்த பின்னர், அவரது தோள் பைகளைக் கீழே வைத்துவிட்டு நடனமாடத் தொடங்கினார்: "இங்கு ஒரே அனலாக இருக்கிறது, அங்கிங்கெனாதபடி எங்கும் நான் அவரைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று பாடினார். இதை பாபாவிற்குத் தெரிவித்ததும், அவர் பைதூலிடம் வந்தவருக்கு உணவளித்து அனுப்புமாறு கூறினார்.

அந்தப் பெரியவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றதும் பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்:

**அவர் உண்மையானவர் - முதன்முதலாக மெஹராபாத் வந்த உயர் நிலையை அடைந்த சாது. அவர் விரும்புவதை அடைவது வரை அமைதியின்றி காணப்படுவார். உடல் மற்றும் உலகைப் பற்றிய எந்த உணர்வும் இல்லாதவர். பரமாத்மா மீதுள்ள அன்பு மற்றும் ஆர்வத்தில் தன்னை முற்றிலும் இழந்தவர். கடவுளை ஒரு சிலரே கண்டு கொள்வர். ஆனால், இவர் இந்தப் பிறவியிலேயே கடவுளைக் கண்டு கொள்வார். ஒரு மாணவன் வகுப்பில் ஆஜராவது போல் இவரும் இங்கு 'ஆஜராக' வந்தார். இங்கிருந்து கேட்காவ்ம் சென்று நாராயண் மஹாராஜை சந்தித்த பிறகு, பாபாஜானை சந்திக்கச் செல்லலாம்; ஒருநாள் அவர்களில் ஒருவர் கருணை மழையைப் பொழிவார். கடவுளை அவர் ஒரு நாள் கண்டுகொள்வார். நாக்பூரில் இருந்த வேளையில் மக்கள் கூட்டம் கூட்டமாக அவருடைய தரிசனத்திற்காக வந்து ஏராளமான உணவை வழங்கினர்; ஆனால், அவருக்கு உணவில் எவ்வித நாட்டமும் இல்லாமல் கடவுளை மட்டுமே காணும் ஏக்கத்தில் இருந்தார்.**

நவம்பர் 21ஆம் நாள், சையத் அலி ஹாஜி முஹமது (பின்னர் '**ஆகா அலி**' என்று அழைக்கப்பட்டார்) என்ற 13 வயது இஸ்லாமிய சிறுவனை, அவனது தந்தை மெஹராபாத்திற்கு அழைத்து வந்தார். ஆனால், பாபா அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொள்ள மறுத்தார். அதற்குப் பிறகு, தந்தையின் வேண்டுகோளுக்கு இணங்கி, பாபா அவனை அங்கிருக்க இணக்கம் தெரிவித்தார். பாபாவின் தயக்கத்திற்கான மறைமுக காரணம் பின்னரே புலப்பட்டது.

அந்த நாள் பி.எஃப்.பரூச்சா, சில மாதங்களுக்கு முன்பு பாபாவை ஒரு '**மேன்மைமிகு குருநாதர்**' எனக் கேள்விப்பட்டு, சந்திக்க வந்தார். உரையாடலின் தொடக்கத்திலேயே பரூச்சாவின் திடீர் மற்றும் நேரடி கேள்விகளுக்கு நிகராக, பாபாவின் பதில்களும் அமைந்தன.

"எதிர்வரும் குறுகிய காலத்தில் மிகப் பெரிய யுத்தம் வரவிருக்கிறதா?"

"**ஆமாம், முந்தைய யுத்தத்தை விட மிகவும் பயங்கரமான, இரத்தக்களரியுடன் கூடிய யுத்தம் வரவிருக்கிறது**" என்று பாபா பதிலளித்தார்.

"நீங்கள் ஏன் இதுபோன்ற ஒரு யுத்தத்தைத் தொடங்கி, நீண்ட காலம் தொடரச் செய்கிறீர்கள்?" பரூச்சா வினவினார்.

**"என்னுடைய சந்தோஷத்திற்காக."**

"மனித இனத்தின் அப்பட்டமான படுகொலையை நீங்கள் ஏன் அனுமதிக்கிறீர்கள்?"

**"அது எனது விருப்பம், எனது ஆசை - சொல்லப்போனால் எனது வெறித்தனம்."**

"நீங்கள் ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? ஏன் பேசக் கூடாது?"

**"அது எனது தீர்வு!"**

பாபாவின் வெடுக்கென்ற பதில் அவரை வருத்தமடையச் செய்தது; திடீரென எழும்பி ஏமாற்றத்தில் திரும்பிச் செல்ல ஆயத்தமானார். பரூச்சாவை சமாதானப்படுத்தி, பாபா விளக்குவதை கவனமாகக் கேட்க அவரிடம் '**பொறுமையும், நேரமும்**' இருக்கின்றனவா என்று பாபா கேட்டார். அதற்கு, பரூச்சா சம்மதம் தெரிவித்து, பயணத்தைத் தள்ளிப் போடுவதாகத் தெரிவித்ததும், பாபா ஏறக்குறைய இரண்டு மணி நேரம் பல விஷயங்களை விளக்கமாக எடுத்துரைத்தார் - ராவ்ஸாஹேப், நஸர்வான் ஸட்டா இருவரும் உடனிருந்தனர் - பாபாவின் விளக்கங்கள் இறுதியில் பரூச்சாவை திருப்தி அடையச் செய்தது.

அடுத்தநாள், நவம்பர் 22ஆம் தேதி மெஹர் பாபாவின் குழந்தை பருவ நண்பன் **பெய்லி** பெட்டி படுக்கைகளுடன் மெஹராபாத் வந்து மண்டலியுடன் வாழத்தொடங்கினார்.

நவம்பர் மாதத்தில் பாபா மாலை வேளையில் இரண்டு மணி நேரம் அவருடைய எழுத்துப்பலகை மூலம் பாடம் கற்பித்தார். இது டிசம்பர் 20ஆம் தேதி வரை தொடர்ந்தது; அதற்குப் பிறகு பாபா பள்ளிக்கூடத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்ட ஒரு சிறிய இரட்டை அடுக்கு குடிலில் தனியாக இருந்தார். இந்தக் குடில் அவருடைய விருப்பத்திற்கிணங்க ஐந்து மாதங்களுக்கு முன்னரே கட்டப்பட்டது. 6 அடி நீளம், 4 அடி அகலம், ஒன்றின் மீது ஒன்றாக ஈரடுக்கில் அமைந்தது.

மெஹர் பாபா, பள்ளிக்கூட சிறுவர்களுக்கு சொற்பொழிவு வழங்கும் வேளையில், அவருடைய கருத்துகளை விளக்க உவமைகள் மற்றும் ஒப்புமைகளை உபயோகித்தார். 1927, டிசம்பர் 18ஆம் நாள், பாபா ஒரு கைப்பொம்மையை எடுத்து வந்து, பரிணாம வளர்ச்சியைப் பற்றி விளக்கமளித்தார். பொம்மையின் தலையைக் கீழ்பக்கமாக வளைத்து, கை, கால், மூட்டுகளை உள்பக்கமாக வைத்து, பாபா கூறினார், "**உலகிலுள்ள கற்கள், பாறைகள், கனிமங்கள் போன்ற உயிரற்ற ஜடப்பொருட்களின் நிலை இப்படித்தான். உயிர் உள்ளது, ஆனால், இந்தப் பொம்மையைப்**

**போலச் சுருண்டு மறைந்துள்ளது; நீங்கள் அதைக் காண முடியாது. அனைத்தும் உள்ளே மறைந்திருக்கும்.**"

பொம்மையின் கை, கால்களை விரித்து அதைத் தலைகீழாகப் பிடித்துக்கொண்டு பாபா விளக்கினார், "**தாவர உருவில் ஆத்மாவின் நிலை இதுதான். அதன் வாய் நிலத்திலும், அதன் கால்கள் அல்லது கிளைகள் வானை நோக்கியும் இருக்கும்.**"

பாபா, பொம்மையின் கால்களைக் கீழே எடுத்துவந்து, அதை நான்கு கால்களில் நிற்க வைத்து, விலங்கு வடிவத்தில் இருப்பதைச் சுட்டிக்காட்டினார். இறுதியாக, பொம்மையை இரண்டு கால்களில் நிற்கச் செய்து இவ்வாறு விளக்கினார், "**ஆத்மா இப்போது மனித உருவத்தை எட்டியுள்ளது. இதுவே இறுதியும், மேன்மையுமான மனித உருவம்.**"

மனப்படிவங்களின் செயல்முறைகளை விளக்குவதற்காக பாபா, அவரது சட்டை பாக்கெட்டில் இருந்த முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றை எடுத்து விளக்கமளித்தார்.

**உதாரணமாக, கண்ணாடி மனதின் படிவங்களைக் குறிக்கும் வேளையில், மனதின் உணர்வு நிலை, 'உணர்வற்ற உணர்வாக' இருக்கும். இப்போது, உணர்வற்ற மனதில் 'உணர்வு' உருவாகும் அந்த கணத்தில், ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் கடவுளைத் தட்டி எழுப்பி, தன்னைத் தானே யார் என்பதை அறிந்து கொள்ளத் தூண்டும். மேலும், அதே கணத்தில் மனப்படிவங்கள் உருவாகத் தொடங்கும். தரையில் கிடைமட்டமாக வைக்கப்பட்ட கண்ணாடி, கண்களை நோக்கி நகரத் தொடங்கும்.**

இந்தக் கருத்தை விளக்குவதற்காக பாபா, கற்பலகையில் முதலில் கண்ணாடியை கிடைமட்டமாகவும், அதைத் தொடர்ந்து, செங்குத்தான நிலையிலும் படம் வரைந்து காட்டினார். பாபா தொடர்ந்து கூறினார்:

**உணர்வின் முதன்முதலான அசைவுகள் கண்ணாடியை ஜடப்பொருளாகிய கல் நிலைக்கு எடுத்துச் செல்லும் வேளையில், கண்ணாடியின் ஒரு முனை அல்லது ஓரம் மட்டுமே ஒருவரின் பார்வையின் எல்லைக்குள் வரும்** (ஏனெனில் கிடைமட்டத்திலிருந்து கண்ணாடி சிறிதளவே உயர்த்தப்பட்டுள்ளது). **அடுத்த அசைவானது அதைத் தாவர நிலைக்கு எடுத்துச் செல்லும்போது, கண்ணாடியின் பெரும்பகுதியும் பார்வைக்குத் தெரியும். அடுத்தடுத்த அசைவுகள் புழு, மீன், பறவை மற்றும் விலங்கினங்களின் நிலைகள் பார்வையின் எல்லைக்குள் படிப்படியாகத் தெளிவுறச் செய்யும். அதைத் தொடர்ந்து, கடைசி அசைவானது, மனித நிலையை நோக்கி எடுத்துச் செல்லும் தருவாயில், மனிதனின் சுய உருவம் செங்குத்தாக இருக்கும் கண்ணாடியில் பிரதிபலிக்கும்; மனிதன் அவ்வாறு பிரதிபலிக்கும் உருவத்தை உண்மை என்று எண்ணுகிறான், ஆனால், அது உண்மையல்ல**!

**எனவே, பரிணாம வளர்ச்சியின்போது சாய்ந்திருந்த கண்ணாடி படிப்படியாக நிமிர்ந்த நிலைக்கு வரும் வேளையில், உணர்வும் பரிபூரணமாகும்.**

**ஆனால், ஆத்மா தனது உடல் வழியாகத் தன்னைத் தானே பார்ப்பதற்கு பதிலாக, கண்ணாடியில் பிரதிபலிக்கும் போலி பிம்பத்தை நிஜமென எண்ணிப் பார்க்கிறது.**

**எனவே, அது தன்னைத் தானே பார்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? கண்ணாடியை அகற்ற வேண்டும்; அகற்றுவது மட்டுமின்றி, அதை இல்லாமலாக்க வேண்டும். அதாவது, பொய்த்தன்மையை உருவாக்கும் மனப்படிவங்களை முற்றிலுமாக அழிக்க வேண்டும். அதை அழிக்காவிடில் திரும்பத் திரும்ப நீங்கள் பிறவி எடுக்கும்போது, அது உங்களுடனே தொடர்ந்து வரும். எனவே மனப்படிவங்களாகிய கண்ணாடியை விலக்கிவிட்டு உங்களின் நிஜத்தன்மையைக் கண்டுகொள்ளுங்கள்.**

இப்படி, பாபா மௌனமாக இருந்த பின்னரும் படைப்பு சம்பந்தப்பட்ட விஷயங்களை சிறுவர்களுக்கு விளக்கிய விதம், அதை முற்றிலுமாக உள்வாங்கி நினைவில் வைத்துக் கொள்ளும்படியாகவும் இருந்தது.

ஒரு தருணத்தில் பாபா சிறுவர்களிடம், "**நீங்கள் இந்த உடல் அல்ல; ஆத்மா**" என்று வலியுறுத்திக் கூறினார்:

"**நீங்கள் உடல், சக்தி, மனம் என்று நினைப்பதைத் தவிர்த்து, 'நான் ஆத்மா' என்று நினைக்க முயற்சி செய்யுங்கள்.**" சிறுவர்கள் அவ்வாறே செய்ய முயற்சித்தனர். ஒரு சிறுவன் அவனது உடல் நிஜமல்ல என உரத்த குரலில் கூறவும் செய்தான்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், பாபா சிறுவர்களிடம், "**மேகங்களைவிட உயர்ந்தது எது?**" என்று கேட்டார். குழப்பமடைந்த சிறுவர்கள் பதில் தெரியாமல் ஒருவரையொருவர் உற்று நோக்கினர். "**ஒரு தாயின் அன்பு மிக உயர்ந்தது - மேலும் என்னுடைய அன்பு எல்லையில்லா அளவுக்கு உயர்ந்தது**" என்று பதிலளித்தார்.

நவம்பர் 23ஆம் நாளிலிருந்து பாபா வழங்கிய சொற்பொழிவுகள் சிறுவர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சிறுவர்கள் பாபாவின்பால் ஈர்க்கப்பட்டு, பாடங்களில் கவனம் செலுத்த முடியாமல் அவதிப்பட்டனர். அவர்கள் தியானத்தில் அல்லது தனிமையிலிருந்து பாபாவை நினைக்க ஆயத்தமாயினர்; பசியின்மையால் உணவில் நாட்டமின்றி காணப்பட்டனர்.

ஒவ்வொரு சொற்பொழிவுக்குப் பின்னரும் பாபா சிறுவர்களிடம், "**என்னை நேசியுங்கள்; நீங்கள் என்னை அடையப்பெறுவீர்கள். உங்களை நான் விவேகானந்தர், ராம் தீர்த், அலி, மற்றும் அர்ஜூனன் போல மாற்றத் தயாராக உள்ளேன். அதற்கு நான் விலையாகக் கேட்பது உங்கள் அன்பு மட்டுமே. ஆன்மீகம் இங்கே கொள்ளை போகிறது. ஆனால், உண்மையான**

**அன்பு ஒன்றுதான் அந்தப் பொக்கிஷத்தைத் திறக்க முடியும். இறைபக்தி என்னால் இங்கு ஏலத்தில் விடப்படுகிறது. நீங்கள் அதன் விலையை நிர்ணயம் செய்து உங்களின் உடைமை ஆக்குங்கள்!**"

பாபாவின் சொற்பொழிவுகள் **ஆகா அலி**யிடம் அபாரமான விளைவை ஏற்படுத்தியது. அவனுடைய நோட்டுப் புத்தகத்தில் '**மெஹர் பாபா என்னுடைய குருநாதர்.... ஆகா அலி, மெஹர் பாபாவின் மைந்தன்..... இந்தப் புத்தகம் மெஹர் பாபாவின் தாழ்மையான அடிமைக்குச் சொந்தமானது**' எனக் குறிப்பிட்டான்.

ஆகா அலி, அவனது இதய தாபங்களைத் தரையிலிருந்த கூழாங்கற்களால் எழுதி வெளிப்படுத்தினான், மேலும் அவன் பாபாவிற்குச் சொந்தமான, அவரால் உபயோகிக்கப்பட்ட பொருட்களைத் தனிப் பிரியத்துடன் சேகரித்தான்.

அவன் பாபாவின் விரல் நகங்கள், தலைமுடி, அவர் காதுகளில் வைக்கும் பஞ்சு மொட்டுக்ளையும் சேமித்து வைத்தான். அவனுடைய ஆத்மா இறையன்புக்காக ஏங்கித் தவித்தது. இதயத்தில் அவை வெடித்து, உதடுகளிலிருந்து பிரியமான குருநாதரின் அளவிலா அன்பைக் குறித்த பாடல்களாக வெளிவந்தன.

1927, நவம்பர் 25ஆம் நாள், பாபா, ஆஷ்ரம சிறுவர்களுக்கு, கடவுளிடம் அன்பு செலுத்துவதைப் பற்றி உரையாற்றினார்:

**கடவுள் உங்களுள் இருக்கிறார், நீங்கள் அவரை உங்களுக்குள்ளேயே தேட வேண்டும். ஆனால், நீங்கள் எப்படி அவரைத் தேடுவீர்கள்? அவருக்காக உங்கள் இதயத்தில் உரிய அன்பை உருவாக்க முயற்சிப்பதன் மூலம். ஒருவரின் பாதங்கள் ஆன்மீகப் பாதையில் உறுதியாக இருக்குமானால், இறுதி இலக்கை நோக்கி அவர் முன்னேறுவது நிச்சயம். ஒருவரின் அன்பை, கீழ்காணும் முறையில் பசியோடு உவமைப் படுத்தலாம்:**

**பசி என்பது அன்பைக் குறிக்கும். உணவு உண்ண வேண்டும் என்ற எண்ணம், கடவுளைத் தொடர்ந்து சிந்தனை செய்வதைக் குறிப்பதாகக் கொள்வோம். உணவை அடைய முயற்சிப்பதை, கடவுளை அடைய வேண்டும் என்ற ஆழ்ந்த ஏக்கம் மற்றும் தவிப்புடன் ஒப்பிடலாம். உணவைத் தயார் செய்வதில் ஒரு தாய் அல்லது சமையல்காரரின் உதவியை ஒரு சத்குருவின் உதவிக்கு சமமாக எடுத்துக் கொள்ளலாம். மேலும், நிஜத்தில் உணவை உண்பது என்பது இறைநிலையை அடைவது போன்றது. ஒருவர் உணவை உண்ணும் முன்பு, பசி எவ்வளவு முக்கியமோ அதுபோல, கடவுளை அடைய, அன்பை உருவாக்குவது அவசியம். பசி வந்துவிட்டால் உணவை உண்ணும் எண்ணம் இடையறாமல் வரும். அதுபோல, கடவுளின்பால் வேண்டிய அன்பு உருவாகும் தருவாயில் அவர் கடவுளைத் தொடர்ந்து நினைக்க ஆரம்பிக்கிறார். இரண்டிலுமே**

முயற்சிதான் ஆரம்பம் - பசியோடு இருப்பவன் உணவைத் தேடுகிறான், இறைவனிடம் அன்பு உள்ளவன் இறைவனைத் தேடுகிறான். இதன் தொடராக எழும் முயற்சிகள், பசியோடு இருப்பவனை அவனது தாயார் அல்லது சமையல்காரரிடமும், கடவுளை அடைய ஏங்குபவனை குருநாதரின் சகவாசத்திலும் கொண்டு வந்து சேர்க்கின்றன. சரியான நேரத்தில் இருவரும் அவரவர் இலக்கை அடைகிறார்கள்.

இது ஒரு பொருத்தமான உதாரணம், ஆனால், ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே. பசி வருவதைப்போல் அன்பை அவ்வளவு எளிதாக உருவாக்க முடியாது. மேலும் ஒரு சமையல்காரரை கண்டுகொள்வது போல் அத்தனை விரைவாக ஒரு குருநாதரைக் கண்டுகொள்ளவும் முடியாது.

அன்பை நீ எப்படி உருவாக்குவாய்? அன்புக்காக அழுவதை விட்டுவிட்டு, ஆண்டவனுக்காக உன் இரத்தத்தை நீ சிந்தியாக வேண்டும். இதுதான் அன்பு - அன்பின் மிக உயர்வான நிலை. உங்களில் எவரேனும் அப்படி இருக்கிறீர்களா? ஒருவரும் இல்லை. ஆனால், கவலைப்படாமல் முயற்சி செய்யுங்கள்.

அன்பு ஒன்றுதான் இறைநிலையை நோக்கிச் செல்லும் படிக்கல். ஒரு முறை உன்னுள் அது உருவாகி விட்டால், நீ வேறு எதையும் நினைக்காமல் இயல்பாகவே இறைவனை நினைக்கத் தொடங்கிவிடுவாய், அது உன்னை, இறைவனைப் பார்க்க வேண்டும், அவரோடு ஐக்கியமாக வேண்டும் என்ற உயரிய மனித முயற்சிக்கு வழிநடத்தும். இல்லையெனில், உன்னுள் உருவான அன்பு உனக்கு அமைதியைத் தராது. அது தொடர்ந்து ஒரு தூண்டுகோலாக இருந்து, உனது இலக்கை அடைய வழிவகுக்கும்!

இவ்வாறு, பல ஏமாற்றங்கள், துன்பங்கள் மற்றும் முயற்சிகளுக்குப் பின்னர், ஒருவர் குருநாதரின் வட்டத்திற்குள் வந்து அவருடைய உதவியுடன் இறுதி இலக்கை அடையலாம்.

எனவே, அன்பு ஒன்றே முதலும், முக்கியமுமான விஷயமாகும்; அது தீவிர ஏக்கம், உற்சாகம் மற்றும் தூண்டுதல்கள் மூலம் விளைகிறது. காலப்போக்கில் தூண்டுதலின் தற்காலிக ஒளிக்கீற்றுகள் மற்றும் உற்சாகங்கள் இரண்டாவது இயல்பாக மாறுகின்றன. அப்போது, தொடர்ச்சியான கடவுளைப் பற்றிய சிந்தனைகள் படிப்படியாக ஓர் ஏக்கத்தை உருவாக்கி, தீவிரமடைந்து இறை அன்பாக மாறுகிறது.

பாபா, அப்போது ஸெயின்ட் ஃபிரான்ஸிஸைப் பற்றிக் கூறினார்:

அஸிஸியின் ஸெயின்ட் ஃபிரான்ஸிஸ், ஓர் உன்னதமான துறவி, அவர் தனது தனித்துவமான முயற்சிகளை, ஒரே கண நேர தூண்டுதலில் தொடங்கினார். ஆனால், அவர் தனது உற்சாகத்தைக் கைவிடாமல், தீவிரமாக இருந்து, நான்கு வருட கால தாங்கொணா துன்பங்களுக்குப் பின்னர், ஓர் ஐரோப்பிய வாலியின் தொடர்பில் வந்ததும், அவருடைய கடைக்கண் இரக்கப் பார்வை வழியாக தெய்வீக அன்பை அடையப் பெற்றார் (இத்தகைய, ஆன்மீக மேல் நிலையை அடைந்த ஞானிகளாகிய

வாலிகள், சில நேரங்களில், அவர்களிடத்தில் வெளிப்படும் உந்துதல்கள் மூலமாக, விரும்பும் அனைவரிடமும் அன்பின் தீப்பொறியை ஆழமாக வேரூன்ற செய்வர்.)

**அவ்வாறு காதல் வயப்பட்ட நிலையில், மூன்று வருடங்கள் கடந்த பின்னர், ஃபிரான்ஸிஸ் இறைவனைத் தேடி இந்தியா வந்து, ஓர் இந்து குருநாதரை சந்தித்து இறைநிலையை எய்தினார். பரிபூரண இறைநிலையின் உச்சக்கட்டத்தை எட்டிய பின்னர் ஃபிரான்ஸிஸ் அவரது தாயகம் திரும்பிச் சென்றார்; அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் அவரைப் பின்பற்றத் தொடங்கினர்.**

**ஹஃபீஸ் இலக்கிய உலகில் மிகச் சிறந்த கவி எனும் புகழ் வாய்ந்தவராயினும், அவர், அக்காலகட்டத்தில் வாழ்ந்த சத்குரு ஆவார். பெர்ஸியா மற்றும் இந்திய தேசங்களில் வாழ்ந்த லட்சக்கணக்கான மக்கள், தெய்வீக வழிகாட்டுதலுக்காக அவருடைய ஆன்மீகக் கவிநயமிக்க புத்தகங்களை நாடினர். 'திவான்-எ-ஹஃபீஸ்' எனும் (கவிதைகளின் தொகுப்பு) புத்தகத்தின் அறிவுரைகளைக் கடைப்பிடித்து, முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்ட ஏராளமான சம்பவங்களை வரலாற்றில் காணலாம். அறிவுரைக்காக அதைக் குறிப்பிடும் நடைமுறை இன்றும் வழக்கத்திலுள்ளது. ஹஃபீஸ் அவரது உடலைத் துறந்த பின்னர், அவரை அடக்கம் செய்யும் முறைக்கும் அவருடைய சொந்த புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கும் வழிமுறைகள் உதவியாக இருந்தன.**

**என்றாலும், அவருடைய புத்தகத்தில் அடங்கியுள்ள ஆன்மீக இரகசியங்களைப் புரிந்து கொள்பவர்கள் வெகு சிலரே. உண்மையில் சத்குரு ஹஃபீஸ் ஆன்மீகத் தளங்களைப் பற்றி ஒன்றன் பின் ஒன்றாக, மிக அழகாக அவருடைய திவானில் வர்ணித்துள்ளார்.**

அடுத்த நாள் மாலை வேளையில், பாபா கீழ்வரும் சொற்பொழிவை மண்டலிக்கு வழங்கினார்:

**வாழ்வில் குழந்தை பருவம்தான் ஆன்மீகத்தில் அக்கறை செலுத்த உகந்த காலம். இளமை பருவத்தில் உருவாகும் மனப்படிவங்கள் மிகவும் ஆழமாக வேரூன்றும். கடவுள் மற்றும் அவருடைய மகத்துவத்தைப் பற்றி வெகுவாகக் கற்பனை செய்யும் அளவுக்குக் குழந்தைகள் மனங்களில் தெய்வீக அழகு, கம்பீரம், பேரின்பம் போன்ற அம்சங்களை ஆழமாகப் பதிய வைக்க வேண்டும்.**

**சிறுவர்களிடையே கடவுளைப் பற்றிய ஆர்வம், எவ்வளவுதான் கட்டுக்கடங்காமல் இருந்தாலும் அதைத் தடை செய்யக்கூடாது. மாறாக, சிறுவர்கள் ஆன்மீக மேம்பாட்டை அடையும் நோக்கத்தில் அவர்களுக்கு எப்போதும் தூண்டுதலாக இருக்க வேண்டும். ஆன்மீக விஷயங்களில் அவர்கள் எவ்வளவுதான் மிகைப்பட்ட உற்சாகம், ஆர்வம் மற்றும் தூண்டுதல்களால் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொண்டாலும் அதை**

நீங்கள் கண்டுகொள்ள வேண்டாம். கல்வி சார்ந்த பட்டங்களைவிட தெய்வீகப் பைத்தியக்காரத்தனத்தை உருவாக்குவதே இந்த அமைப்பின் நோக்கம். நான் அதைத்தான் விரும்புகிறேன்.

நிச்சயமாக, எல்லா சிறுவர்களும் 'துருவா' மற்றும் 'பிரகலாதனை'ப் போலத் துறவியாக முடியாது, ஆனால், சிலர் வாழ்வின் பிந்தைய காலங்களில், கண்டிப்பாக ஆன்மீக வாழ்வைக் கடைப்பிடிப்பார்கள்; மேலும் சிலர் இப்பிறவியில் இல்லாவிடினும், அடுத்த பிறவிகளில் ஆன்மீகத்தைப் பின்பற்றுவார்கள். தற்போதைய பயிற்சிகளின் விளைவுகள் விதையாக வேரூன்றி, இறுதியில் மிக்க பலனைத் தரும். இறைவனை அணுகுவது குறித்த தற்காலிக தூண்டுதல்கள் மற்றும் உற்சாகத்தின் தீப்பொறிகள் கூட, சில விளைவுகளை ஏற்படுத்தும். இது ஒருவரின் வங்கிக் கணக்கில் இருக்கும் பணம் தேவைப்படும் வேளையில் பயன்படுவது போல, தெய்வீகப் பொக்கிஷம் ஒருவரின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும்.

வயதானவர்கள் மிக அரிதாகவே நீடித்த உற்சாகத்தை அல்லது ஏக்கத்தை அடைவார்கள். நான் ஒரு சுவையான சொற்பொழிவை வழங்கும்போது அல்லது தெய்வீக கம்பீரம், ஆன்மீகப் பேரின்பம் பற்றிய தர்க்கரீதியான விளக்கம் அளிக்கும்போது, வயதானவர்கள் கூட, நிச்சயமாக, உண்மையை தேடுவதற்கான, பிரபஞ்சத்தின் ரகசியங்களை அறிவதற்கான ஏக்கத்துடன் காணப்படுவார்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அவர்களின் தீவிரமும் உற்சாகமும் நீண்ட காலம் நீடிப்பதில்லை. உடனடி முடிவுகள் கிடைக்காத பட்சத்தில் அந்நேரத்தில் எழும் வைராக்கிய உணர்வுகள் மேலோங்கி, அதிவிரைவில் மறைந்துவிடும். என்றாலும், ஒருவர் ஆன்மீகப் பாதையில் முன்னேறி அதன் வெவ்வேறு அம்சங்களையும் புதுமைகளையும் அனுபவிக்க விரும்பினால் அவரது உற்சாகம் அதே உயர்மட்ட நிலையில் இருக்க வேண்டியது அவசியம்.

தனிச்சிறப்பான காட்சிகளைப் காண்பது அல்லது அசாதாரண அனுபவங்களை அடையப்பெறுவது, உண்மைப்பொருளை அடைவதற்கான ஏக்கத்தை உருவாக்கும், ஆனால், உண்மையான முன்னேற்றத்திற்கு அவை பெரும் தடைகளாக இருக்கும். ஒரு வலுவான, சூடான தேநீர், சோர்வான நரம்புகளுக்கு ஊக்கமளிக்கும் பானகமாக இருக்கும், ஆனால், உடல் ஆரோக்கியத்திற்கு எவ்வித நன்மையும் அளிக்காது; மாறாக, வலுவான தூண்டு பொருட்கள் சாதாரண ஆரோக்கியத்தைக் கெடுத்துவிடும். எனவே, ஒருவர் ஆன்மீகப் பாதையில் நிரம்பியிருக்கும் ஆடம்பர ஒளிகள் மற்றும் சக்திகளுக்கு அடிமையாகாமல், கடவுளை அடைவதை மட்டுமே எப்பொழுதும் கருத்தாகக் கொள்ள வேண்டும்.

வயதானவர்களிடையே தோன்றும் உற்சாகம், உள் தூண்டுதல்கள் மற்றும் தற்காலிக வேட்கைகள் அனைத்தும் வரவேற்கத்தக்கவை, ஏனெனில் அவை தெய்வீக அன்பின் பாதையில் படிக்கற்களாக அமையும்.

நவம்பர் மாத இறுதியில், மாலை வேளையில் ஒருநாள் பாபா, மண்டலி மற்றும் மாணவர்களுக்கு, சத்குருவின் வட்டத்து சீடர்கள் இறைநிலையை எய்துவது குறித்து உரையாற்றினார்:

**ஒருசத்குருவின் வட்டத்தில் நிலைகொண்டிருக்கும் 12 ஆண்களும் 2 பெண்களும், அவர்களுக்குரிய தேவையான குறைந்தபட்ச ஆன்மீக மனப்படிவங்கள் உடையவர்களாக இருப்பர். மேலும் அவர்களுக்கு அளிக்கப்படும் நிலையும், அதன் பொறுப்பும் அவரவர் ஆன்மீக மனப்படிவங்களைப் பொறுத்தது; அவர்களில் ஒருவர் குருநாதரின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு, குறித்த நேரத்தில் அவரும் குருநாதரின் நிலையை அடைந்துவிடுவார். ஒரு முறை சத்குருவின் வட்டம் உருவானதும், ஒவ்வொரு சீடரின் தனிப்பட்ட முயற்சிக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும். அதற்குப் பிறகு, பொருள் சார்ந்த மனப்படிவங்கள் உருவாகாது.**

**அடுத்த சில நூற்றாண்டுகளில் எடுக்கும் ஒரு சில பிறவிகளில், பொருளுலக மனப்படிவங்கள் முற்றிலும் விரயமாகிவிடும், அதே வேளையில் ஆன்மீக மனப்படிவங்கள் அப்படியே இருக்கும். இதுதான் 'பிராரப்த நிலை' அதாவது 'தெய்வீக விதி' என்றழைக்கப்படுகிறது. இந்த மூன்று அல்லது நான்கு பிறவிகளின்போது, வட்டத்து சீடர்கள் அனைவரின் பிராரப்த மனப்படிவங்கள் ஒரே அளவில், குவியல் குவியலாக விரயமாகும். இது கூட்டு மற்றும் பொதுவான பிணைப்பில் இணைந்திருப்பதால் அவர்களின் அறிவுக்கு எட்டாமல் இருக்கும், ஏனெனில் சத்குருவின் வட்டம் உருவான விதமே அவர்களுக்குத் தெரியாமல் நடந்த ஒன்று. ஆன்மீகப் பாதையில் முன்னேறிச் செல்வது குறித்து இறுதிவரை, அதாவது சத்குருவின் பொறுப்பாளர் இறைநிலையை எய்துவது வரை, அவர்களுக்கு எவ்வித உணர்வும் இராது, இது இரகசியமாக நடைபெறும் ஒன்று.**

**மகத்தான தயார் நிலையில் இருந்த போதிலும், நேபாள் நகரத்தில் இளவரசராக இருந்த 'கௌதம புத்தா' அவருடைய பிராரப்த மனப்படிவங்களை அவ்வேளையில் செலவழித்ததைப் பற்றி எந்த அறிவோ, உணர்வோ இல்லாமல் இருந்தார். ஆனால், தக்க தருணம் வந்ததும், கௌதமா, அவரைச் சுற்றிய அனைத்து கம்பீர ராஜபோகம் மற்றும் உலக ஆடம்பரத்தையும் முற்றிலுமாக நிராகரித்த அந்தத் தருணத்தில் இறைநிலையை எய்தி புத்தர் ஆனார்.**

**இதுமட்டும் உறுதி: ஒரு குருநாதரின் வட்டத்தில் இருக்கும் சீடர்கள், அவர்கள் என்ன செய்தாலும், எவ்வளவுதான் மோசமான பாவத்திற்குரிய செயல்களைப் புரிந்தாலும், புதிய, பொருள் சார்ந்த உலக மனப்படிவங்களை அடையப் பெறமாட்டார்கள்; ஆனால், அதற்காக குருநாதர் அனைத்து துன்பங்களையும் அனுபவிக்கிறார். குருநாதர் மற்றும் சீடர்களிடையே உருவாகும் இணைபிரியா பந்தம், அத்தகைய மனப்படிவங்களைத் தானாகவே குருநாதரிடம் சென்றடையச் செய்யும்; அதன் பொறுப்பை**

முழுமையாக அவரே ஏற்றுக் கொள்கிறார். எனவே, குருநாதரோடு சம்பந்தப்பட்டவர்கள் எவ்வித மோசமான குற்றங்களில் ஈடுபட்டாலும், அவர்களுக்கான குறித்த நேரத்தில் இறைநிலையை அடைவது உறுதி.

ஆனால், உண்மையான அழகும், அற்புதமும் ஒரு சத்குருவுக்குப் பணிந்து, அவரை முற்றிலுமாகப் பின்பற்றுவதில்தான் உள்ளது; அது வட்டத்து சீடர்களுக்காக அவர் புரியும் பணிக்குப் பேருதவியாக இருக்கும்.

குருநாதரின் கட்டளைகளும், அறிவுறுத்தல்களும் அன்றாட வாழ்வின் நிகழ்வுகளில் இறை மொழியாகவும் இன்றியமையா நியதியாகவும் இருக்க வேண்டும் - எடுத்துக்காட்டாக, உண்ணச் சொல்லும்போது விருப்பத்தோடு உண்ணவும் அல்லது கடைசிவரை உண்ணாமல் இருப்பதும். உண்மையில், அவரிடம் சரணடைந்து அவருடைய மேன்மையான விருப்பங்களை ஏற்றுக் கொள்வதே குறிக்கோளாக இருக்க வேண்டும். ஒரு சீடர் குருநாதருக்குச் செய்யும் மிகப்பெரிய சேவை, இறுதியில் சீடருக்காக அவர் செய்யும் பிரமாண்டமான தயவில் முக்கியமற்றதாகி விடும்; மேலும் இது இறை அனுபவத்திற்குப் பிறகு சீடர் அடையும் மனகஷ்டத்தை மிச்சப்படுத்தும்.

1927, டிசம்பர் 2ஆம் நாள் இரவில், 'பிரபஞ்சம்' மற்றும் 'அதில் நிகழும் மஹாபிரளயம்' (பிரபஞ்சத்தின் பேரழிவு) குறித்து விபரமாக எடுத்துரைத்தார்:

பிரபஞ்சம் உருவானது எப்படி? தானாகவே உருவானது. இங்கே எண்ணிலடங்கா பிரபஞ்சங்கள் ஒன்றோடு ஒன்றாக ஊடுருவி இணைந்திருக்கின்றன. ஒரு சத்குருவால் கூட எத்தனை என்று அவற்றைக் கணக்கிட முடியாத அளவுக்கு நிறைந்துள்ளன. நான் ஸாக்கோரியில் மஹாராஜுடன் இருந்தபோது, பிரபஞ்சத்தின் கோள்களைக் கணக்கிட முயற்சித்தேன். அதிர்ச்சியூட்டும் வகையில் சரமாரியாக, சத்குருவிடமிருந்து பிரபஞ்சங்கள் வரிசையாக வந்து மீண்டும் அவருள்ளே சென்று சேர்ந்தன; இருந்தும் அவருடைய சாதாரண கண்களால் அதைக் கணக்கிட முடியவில்லை. ஓரிரவு ஸாக்கோரியில் (1921) மஹாராஜும் நானும் அவருடைய குடிலில் அமர்ந்திருந்த வேளையில், பிரபஞ்சங்களைக் கணக்கிடுவது குறித்துப் பேச்சு எழுந்தது.

முதலில் மஹாராஜ் அவற்றை கணக்கிடத் தொடங்கினார். அதற்காக, அவருடைய மனம் மற்றும் படைப்பின் சக்தியை முழு கவனத்துடன் பிரபஞ்சத்தை நிறுத்துவதில் ஒருமுகப்படுத்த வேண்டியிருந்தது. இது மிகவும் கடினம் மட்டுமல்ல ஆபத்தானதும் கூட. ஒருமையின் உருவான இறைவனிடமிருந்து இருமைத்தன்மை படைத்த இவ்வுலகம் பிறந்தது; அது சில நேரங்களில் அபாயகரமானதாகவும் இருக்கலாம். அவ்வாறு முழு கவனத்துடன் ஒருமுகப்படுத்தும் செயல்முறையால் ஒருவர் உடலை துறக்கவும் செய்யலாம். எனவே மஹாராஜ் என்னை அவ்வாறு செய்யத் தடை செய்தார்.

மஹாராஜ் என்னிடம் கூறினார், "அறிவின் ஓட்டம் நேரடியாக, சத்குருவிடமிருந்தே இருப்பதால், எந்த ஒரு சத்குருவும் பிரபஞ்சத்தைக் கணக்கிடுவதில் இதுவரை வெற்றி கண்டதில்லை. அவ்வாறு அறிவின் ஓட்டத்தைத் தடைசெய்வது, இருமைத்தன்மை மிக்க உலகை பெரிதும் பாதிக்கும். இருமைத்தன்மையின் எதிர்வினை, சத்குருவின் வாழ்க்கையை அபாயத்தில் ஆழ்த்திவிடும்.

உதாரணமாக, ஆழ்ந்த தூக்கத்தில் உடல் மற்றும் உலகைப் பற்றிய எந்த உணர்வும் உங்களுக்கு இல்லை. உங்களைப் பொறுத்தவரையில் இது உங்களுக்கு ஒரு பேரிழப்பு அல்லது பிரளயம் என்று கூறலாம். நீங்கள் விழித்தெழும் வேளையில் உங்களிடத்தில் படைப்பு மறுபடியும் தொடங்குகிறது. நீங்கள் திரும்பி வரும்போது உலகமும் உங்களுடன் திரும்பி வருகிறது. தனிப்பட்ட முறையில் ஒருவருக்கு நிகழும் பிரளயம், பெருமளவில் பிரபஞ்சத்திற்கு மஹாபிரளயமாக நிகழ்கிறது - 'மஹா' என்றால் 'பெரிய' என்று அர்த்தம். சுருக்கமாகக் கூறினால் இது ஒருவர் வாழ்வில், தினமும் ஆழ்ந்து தூங்கும் வேளையில் நிகழும் சம்பவம்; அதுபோல, காலாதி காலத்திற்குப் பிறகு பிரபஞ்சத்தில் மஹா பிரளயம் நிகழும். இதைத்தான் குரானில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: "இறுதி தீர்ப்பு வழங்கும் நாளன்று, அனைவரும் அவரவர் கல்லறையிலிருந்து எழுந்திருப்பார்கள்."

இப்போது ஈஸ்வரனைப் பற்றிக் கூறுகிறேன். ஈஸ்வரன் என்றால் 'படைத்தல், காத்தல், அழித்தல்' இவற்றின் அதிபதி, பொறுப்பாளர் (அதாவது ஒருவராக இருக்கும் பிரம்மா, விஷ்ணு, மஹேஷ்). இந்த ஈஸ்வரன் கடவுளானதால் எல்லையில்லா உணர்வற்ற நிலையில் இருப்பவர்.

இருந்தும், அவருக்கு உலகை எப்படிப் படைப்பது, காப்பது, அழிப்பது என்பது தெரியும். இது எப்படி? ஒரு பலூனை ஊதிப் பெருக்கும்போது, உங்களது விழியின் பார்வை விரிவடைந்து பலூன் மீது இருக்கும், அவ்வேளையில் நீங்கள் பலூனைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், உங்களையல்ல. அதேபோல், ஈஸ்வரனின் கண்கள் நிலையாக உலகப்படைப்பை நோக்கி இருக்கும், அவரை நோக்கி அல்ல.

டிசம்பர் 15ஆம் நாள், ஷஹானே இல்லத்தில் பாபா இருந்தபோது, ருஸ்தம் பத்திரிகையில் வெளிவந்த செய்தி ஒன்றை - அதாவது, ஒரு சிறிய உலோக துண்டிலிருந்து ஒருவர் உயிருள்ள நண்டை உருவாக்கியதாக - வாசித்தார். இது, பாபா தெளிவான ஒரு விளக்கத்தை அளிக்கத் தூண்டுதலாக இருந்தது.

இது மந்திர சக்திகளால் நிகழ்வது, ஆனால், இதற்கு, பேய்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். பேய்கள் மற்றும் மாயா ஜாலம் அல்லது கண்கட்டி வித்தை இவை முற்றிலும் மாறுபட்டவை. பேய்களில் இருப்பதுபோல் ஆவி (மனம் & சக்தி) விளைவுக்கு

மூலகாரணமாக இருக்கும் ஆற்றலாகத் (சக்தி) திகழ்கிறது, ஆனால், மாயாஜால சக்திகள் அனைத்தும் சிறையிலடைக்கப்பட்டு மறைந்திருக்கும்.

ஒரு தந்திர வித்தைக்காரன் மாயாஜால சக்திகளை நாடுகிறான். இத்தகைய சக்திகளை அடைவதன் மூலம் அவன் மிகவும் மோசமான மனப்படிவங்களை (இன்னும் சொல்லப் போனால், மோசமான பாவங்களின் மனப்படிவங்களைவிட மோசமானது) சம்பாதித்து, அதற்கேற்றார்போல் அறுவடை செய்கிறான். எனவே இது போன்ற பைத்தியக்காரத்தனங்களுக்கு இரையாக வேண்டாம் என்று அனைவரையும் நான் அறிவுறுத்துகிறேன். இதற்கு ஆன்மீகப் பாதையுடன் எவ்விதத் தொடர்பும் கிடையாது. மாறாக மாயாஜால சக்திகளின் பாதையில் செல்பவன், மிகவும் மோசமான மனப்படிவங்களைக் கொண்டிருப்பதால், ஆன்மீகப் பாதையிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறான்; மேலும் அவை ஆன்மீகப் பாதையில் முன்னேறிச் செல்ல பெருந்தடையாக இருக்கும்.

மாயாஜால சக்திகளைக் குறித்து எவ்வளவு குறைவாகப் பேசுகிறோமோ அவ்வளவுக்கு நல்லது. இதுபோன்ற தாந்திரீக ஆவி (தற்கொலைகளால் உருவாகும் பேய்களைக் காட்டிலும்) பயங்கரமானது. அது தனது முயற்சிகளிலிருந்து எதையும் அடையவோ அல்லது பயனளிக்கவோ செய்யாது. ஒருவன் பல்வேறு பயிற்சிகள் அல்லது மிகவும் விரும்பத்தகாத நடைமுறைகள் மூலம் மாயாஜால சக்திகளைப் (இரத்தத்தைப் பருகுவது, மலத்தை உண்பது போன்ற அசுத்தமான செயல்களில் ஈடுபடுவதன் வழியாக) பெறுகிறான்.

இத்தகைய தாந்திரீக பயிற்சி முறைகளைக் கற்றுக்கொள்ள நீண்டகாலம் பிடிக்கும், மேலும் இதுபோன்ற பயிற்சிகளில் ஈடுபடுபவன் தன் உடலை பெரியதும், சிறியதுமாக மாற்றும் சக்தியை மட்டுமே அடைகிறான். ஒரு எறும்பை காட்டிலும் சிறிதாகத் தன் உடலை மாற்றி, அதன் பின்பு மனித உருவில் மாறுவான். அவன் இன்னொரு உருவில் மாறுவதன் முக்கிய நோக்கம், பொருள் சம்பந்தப்பட்ட எதையாவது அடையத்தான்.

அவன் தன் உடலை சிறியதாக்கி இன்னொருவர் உடலில் ஊடுருவ முடியும், ஆனால், அவனுடைய பௌதீக மனப்படிவங்கள் அனைத்தும் அப்படியே அந்தக் குறுகிய உருவத்தில் உறைந்திருக்கும்.

பேய் பிசாசுகள், தாந்திரீக ஆவிகள் போலல்ல. (பேய்கள், தற்கொலைகளில் ஈடுபட்டு பௌதீக உடல்களை இழந்த ஆத்மாக்கள்). அவை வேறு ஓர் உடலில் ஊடுருவி, அந்த உடலை தன் இச்சை போல் ஆட்டிப் படைக்கும். மாயாஜால சக்திகள் படைத்தவன் அப்படிச் செய்வதில்லை; ஆனால், அவன் தன் உடலை சிறியதும், பெரியதும் ஆக்குவதோடு மனப்படிவங்களைத் தன்னுள்ளே கொண்டிருப்பான். எனவே இது போன்ற பயனற்ற விளையாட்டை விளையாடுவதில் எந்த நன்மையுமில்லை!

உலகின் இதர பகுதிகளில் வாழும் மேல் நிலையை அடைந்த ஆத்மாக்களைப் பற்றி பாபா, டிசம்பர் 17ஆம் நாள் இவ்வாறு தெரிவித்தார், **"பெர்ஸியாவில் மூன்று சத் புருஷர்களும்** (இறைநிலையை எய்தியவர்கள்), **எகிப்து நாட்டில் ஒருவரும் உள்ளனர். லண்டனில் மிகவும் மேல் நிலையை அடைந்த சத் புருஷர் ஒருவர், நான்கு மற்றும் ஐந்தாவது ஆன்மீகத் தளங்களினிடையே நிலைகொண்டுள்ளார். நான் அவருடைய குருநாதர் என்பதை அறியாதவராய் இருந்தாலும், சொன்னதைத் தவறாமல் செய்பவர். இவரைக் காட்டிலும், அமெரிக்காவில் இருக்கும் உயர் நிலையை அடைந்த ஒருவர் என்னை அறிவார்."**

ஓரிரவு பாபா மண்டலிக்கு மரணம் நிகழும் முறை குறித்து குறிப்புரை வழங்கினார்:

**உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள, நீங்கள் உணவு உண்டு கழிவை வெளியேற்றுகிறீர்கள். வெளியேறும் கழிவுகளுக்காக எப்போதேனும் நீங்கள் கண்ணீர் சிந்துவது உண்டா? அதைப் பற்றி நினைத்து வருந்துவது உண்டா? ஒருபோதும் இல்லை. அப்படியானால், உடல், ஆத்மாவுக்கு உணவாக இருக்கும்போது, பிரியமான ஒருவர் உடலை துறந்தால் அதற்காகக் கண்ணீர் விடுவானேன்?**

**நீங்கள் உணவை உண்டு, உடலை பாதுகாத்து, அதை ஆத்மாவுக்கு ஊட்டுகிறீர்கள். ஆன்மாவின் முன்னேற்றத்திற்கு உடல் ஓர் ஊடகமாக அமைகிறது. நீங்கள் உடலிலுள்ள கழிவுகளை வெளியேற்றி, அதற்குப் பிறகு, புதிய உணவை உண்ணுகிறீர்கள். அதுபோலவே, பழைய உடலைத் துறந்து, புதிய உடலில் மறுபிறவி எடுக்கிறீர்கள். ஆகவே, இயற்கையின் விதியாகிய 'மாற்ற முடியாத ஒன்றைப்பற்றி' ஏன் கவலைப்பட்டு அழுகிறீர்கள்?**

**அவதார புருஷர் மற்றும் சத்குருக்கள் மனித மரணத்தை முற்றிலும் முக்கியமற்றது என்று கருதுகிறார்கள். அவர்கள் யார் ஒருவருடைய மரணத்தையும் கண்டு வருந்தி, உணர்ச்சிவசப்படுவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை, முழுப் பிரபஞ்சமும் மிக மிகச் சிறிய விஷயம் - ஒரு சிறிய புள்ளி, அவ்வளவுதான்.**

**மனித உடலை ஒரு தேங்காயின் வெளியே இருக்கும் நாரோடு ஒப்பிடலாம். நூற்றுக்கணக்கான இழைகள் அதிலிருந்து கீழே விழுந்தாலும், தேங்காய் நீர் அதனுள்ளே பாதுகாப்பாக இருக்கும். அதுபோல், ஆயிரக்கணக்கான மனித உடல்கள், உயிரை இழக்கலாம், ஆனால், ஆத்மா அழியாதது; அது ஒருபோதும் இறக்காது; எப்போதும் வாழக்கூடியது, நித்தியமானது, நிரந்தரமானது.**

கடந்த ஒன்றரை மாதங்களாக, மெஹர் பாபா, அவரது எதிர்கால சமாதியின் கீழ் நிலைக்குக் கிழக்குப் பக்க ஜன்னலருகில் அமைந்த மேடையில்

அமர்ந்திருக்கும் சிறுவர்களுக்கு, ஒவ்வொரு நாளும் சொற்பொழிவுகளை வழங்கி வந்தார். அவரது விளக்கங்கள் - 'படைப்பு', 'வெவ்வேறு உலகங்கள்', 'சூரியன்கள்', 'பிரபஞ்சங்கள்', 'மனப்படிவங்கள்' மற்றும் 'வெவ்வேறு உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி'யைப் பற்றி அமைந்தன.

டிசம்பர் 23ஆம் நாள் பாபா, பைதூலை ஹனுமானோடு ஒப்பிட்டுப் பேசினார். அன்று மாலையில் வழங்கிய சொற்பொழிவில் பாபா, மாஸாஜியை மேற்கோள் காட்டி ஆத்மாவின் பரிணாம வளர்ச்சியை விளக்கினார்:

**ஆத்மா எந்த மாற்றமும் இல்லாமல் எப்போதும் ஒன்றாகவே இருக்கும், ஆனால், அதன் உருவங்களும், அனுபவமும் மாறும் என்பதை நிரூபிக்கும் பொருட்டு இன்னுமோர் உதாரணம் தருகிறேன். மாஸாஜி புதிதாகப் பிறவி எடுத்த அவ்வேளையில் கல்லாக இருந்தார் எனவும், மாஸாஜிக்கு ஏழு வயது நிறைவானதும் உலோகமாக மாறி, அதைத் தொடர்ந்து தாவர வடிவில் உருவெடுத்ததாகவும் வைத்துக் கொள்வோம். உருவம் மாறும் - அனுபவமும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும் - ஆனால், மாஸாஜி அப்படியே இருக்கிறார்.**

**இப்போது அவருக்கு வயது 14, விலங்கு உருவத்தில் மாறும் வேளையில் அவருடைய அனுபவமும், உணர்வு நிலையும் மாறும். 28 வயதாகும் வேளையில் அவர் குரங்காக மாறுகிறார். 56 வயதில் மனித உடலை அடைகிறார். இன்னமும், சத்குருக்கள் மாஸாஜி பிறந்ததாகவே கருதவில்லை என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம்! ஆனால், மாஸாஜியின் பார்வை உள்வாங்கும் அக்கணத்தை, சத்குருக்களின் பார்வையில் அவருடைய உண்மையான பிறந்தநாளாகக் கருதப்படுகிறது. எனவே, இந்த நிமிடத்தில் நீங்கள் அனைவரும் பிணங்களைப் போலத்தான்! உலக விஷயத்தில் நீங்கள் அதிகம் அறிந்திருக்கலாம், ஆனால், எங்களைப் பொறுத்தவரையில் நீங்கள் அனைவரும் உயிரற்றவர்கள். நீங்கள் உண்மையிலே உயிருள்ளவர்களாக இருக்க வேண்டுமெனில் உங்கள் மனக்கண் உள்நோக்கித் திரும்ப வேண்டும். மனதை எப்படித் திருப்புவது? இது சத்குருவின் கைகளில்தான் உள்ளது. அவர் மீது நீங்கள் கொள்ளும் அன்பை விலையாக வைத்து அவரது உதவியை நாட வேண்டும்.**

**எனவே, இந்த எண்ணிக்கையை நினைவில் கொள்ளுங்கள்:**

**1+7+14+28+56=106. மேலும்**

**1+0+6=7 அதாவது 6 ஒருபக்கம் & 1 மறுபக்கம்.**

மறுநாள் தொடர்ந்து பாபா விளக்கமளித்த போது இவ்வாறு வெளிப்படுத்தினார்:

**இதற்கு முன்பு விளக்கியதுபோல், எண்ணிலடங்கா அளவுக்கு உலகங்கள் உள்ளன, அவை அனைத்தும் குளிர்ந்த நிலையில் காணப்படும்; மேலும் ஒவ்வோர் உலகமும் அவ்வாறான குளிர்ந்த நிலையை அடைய சுழற்சியாக பல காலங்கள் பிடிக்கும். எவ்வளவு காலங்கள் எனக் கற்பனை**

**செய்து பாருங்கள்! ஆனால், மனிதன் இறைநிலையை அடைந்து ஏழாவது தளத்தில் ஒரே ஒரு வினாடியில் பிரவேசித்ததாக உணர்கிறான்; அதாவது இத்தனை (84 லட்சம்) பிறவிகள் - வெவ்வேறு உருவில் பிறவிகள் எடுத்து உயிர்களைத் துறந்த பின்னரும், இறுதி நிலையை அடைய ஒரு வினாடி மட்டுமே பிடித்ததாகக் கருதுகிறான்.**

**இப்போது எனக்குத் தெரியும் உங்களைப் பொறுத்தவரையில், கணக்கிட முடியாத அளவுக்கு, கோடான கோடி வருடங்கள் பிடித்திருக்கும் அப்படித்தானே? ஆனால், என்னுடைய அனுபவத்தைப் பொறுத்தவரை எதுவும் நடக்கவில்லை, எந்த நேரமும் செலவிடப்படவில்லை.**

எண் ஏழைக் குறித்து பாபா விரிவாக எடுத்துரைத்தார்:

**பரிணாம வளர்ச்சியில் ஏழு உலகங்களும்** (கோள்கள்), **மற்றும் உள்பரிணாம வளர்ச்சியில் ஏழு வானங்கள், ஏழு சூரிய கிரகங்கள், ஏழு சந்திர கிரகங்கள், ஏழு தளங்கள் மற்றும் ஏழு வானுலகங்கள்** (சொர்க்கம்) **உள்ளன. ஏன் இந்த எண் ஏழு? மேலும் மனப்படிவங்களுக்கும் ஏழு நிறங்கள். ஏனெனில், தொடக்கத்தின் முதலில் சக்தி** (பிராணம்), **வான்பொருள்** (வானம்) **இரண்டும் ஒன்றோடொன்று மோதிய வேளையில் இது ஏழுபிரிவுகளை உருவாக்கியது.**

**ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் தனக்குள்ளேயே ஒரு பிரபஞ்சம் ஆவான். தலையில் ஏழு துவாரங்கள்** (திறப்புகள்): **இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு மூக்கு துவாரங்கள் மற்றும் ஒரு வாய். உடலில் ஏழு உறுப்புகள்: இரண்டு கைகள், இரண்டு கால்கள், முன்னும் பின்னும் இரண்டு திறப்புகள் மற்றும் ஒரு முதுகெலும்பு.**

**ஆனால், படைப்பு மற்றும் பிரபஞ்சத்தைப் பற்றிய அனைத்து விளக்கங்களும் தலையில் வளரும் முடியுடன் தொடர்புள்ளது, தலையோடு எந்த சம்பந்தமும் இல்லை. எனவே முதலில் தலையைப் பற்றிக்கொள்ள முயற்சி செய்யுங்கள், ஏனெனில் தலையிலிருந்து தான் அனைத்தும் வெளி வருகின்றன.**

பாபா உடனே ஒரு தலையையும், அதில் வளரும் முடியையும் சித்திரம் வரைந்து விளக்கினார்:

**முடித்திருத்தம் செய்வது நாவிதரின் வேலை. எனவே இந்த எடுத்துக்காட்டில் 'நாவிதர்' யார்? மஹாபிரளயம்! அது நிகழும்போது கடவுளின் தலையிலுள்ள அனைத்து முடிகளும்** (பிரபஞ்சம்) அகற்றப்படும்.

**பிரபஞ்சங்கள் கடவுளிடமிருந்து வெளியேறுகின்றன என்று கூறப்படுகிறது; அவை கடவுளின் தலைமுடிகள் போன்றவை! தலையை, கடவுளோடு ஒப்பிடும் வேளையில் தலை முடியை, பிரபஞ்சங்கள் என்று கூறலாம்.**







தலை மயிர்கள் = பிரபஞ்சங்கள் தலை = கடவுள்

படைப்பின் தொடக்கத்தில் என்ன நடந்தது என்பதைப் பற்றி பாபா டிசம்பர் 27ஆம் நாள் எடுத்துரைத்தார்:

**சக்தி** (பிராணம்), **வான்பொருள்** (வானம்) **இரண்டும் ஒன்றோடொன்று மோதிய வேளையில் நான்கு பொருட்கள் - நெருப்பு, நீர், காற்று, நிலம் - ஒன்றன்பின் ஒன்றாக அதிவேகத்தில் தோன்றின. கற்கள், உலோகங்கள், மற்றும் தாவரங்கள் இவற்றிற்கு பூமியோடு தொடர்புண்டு. புழு வகைகளுக்கு நீர் மற்றும் நிலத்துடன், மீனினங்களுக்கு நீர், பறவைகளுக்குக் காற்று, விலங்குகளுக்கு நெருப்பு, இறுதியில் மனிதனுக்கு அனைத்து நான்கு மூலப்பொருட்களுடனும் தொடர்பு உண்டு.**

**இங்கு நெருப்பு என்பது மின்னலை குறிக்கும். மின்னல் எங்கும் இருக்கும் ஆனால், அது ஆகாய மண்டலத்தால் மூடி மறைக்கப்பட்டுள்ளது. இதற்கு விலங்குகளோடு நேரடித் தொடர்பு உள்ளதால், விலங்குகளுக்கு ஜீரணசக்தி மிகவும் அதிகம்; எனவே அதிகமான அளவில் உணவு உண்ணும் - அதாவது உண்பதற்காகவே பிறந்தது போலத் தொடர்ந்து உணவை உள்ளே தள்ளிக்கொண்டிருக்கும்.**

**தாவர ராஜ்யத்திற்குப் பிறகு, புழு இனங்களில் முதல் வகை முற்றிலும் பச்சை நிறமாக இருக்கும். கடைசி புழு இனத்தில் வருவது நண்டு. இதை ஈரமான நிலத்தில் காணலாம்; அதாவது தண்ணீரையும் நாடிச் செல்லும். இப்போது அது மீனாக மாறவேண்டும் என்பதால் நீரையும் தேடிச் செல்லும். இதற்கு அடுத்ததாக வருவது தவளை, மீன் இனங்களில் இறுதி உருவம். இது நீரைவிட்டு வெளியேற விரும்புவதால் இதை, திருப்பு முனை வடிவம் எனலாம். தவளைக்குப் பிறகு காட்டுக்கோழி. பறவைகள் சாம்ராஜ்யத்தில் சில இனங்கள் நீருடன் இணக்கமாக இருப்பதைக் காணலாம். இவை மீனுக்கு அடுத்ததான முதல் வடிவங்கள். தொடர்ந்து, மிகவும் முன்னேறிய பறவை இனங்களில் சிலவற்றிற்கு காற்றின் மீது நாட்டமிருக்கும்; மேலும், பறவைகளில் முற்றிலும் இறுதியானதும் நிலத்துடன் தொடர்புள்ளதுமான இனங்கள் வீட்டுச் சேவல்கள் ஆகும். இதற்குப் பிறகு கங்காரு - விலங்குகள் ராஜ்யத்தில் முதல் வடிவம்; மேலும் விலங்குகளில் கடைசி உருவம் குரங்கு அல்லது வாலில்லா மனித குரங்கு என்பதை நீங்கள் அறிவீர்கள்.**

அந்த நாள் மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக வந்த ஒரு பெண்மணி, பாபாவை 'சர்வமும் அறிந்தவர்' என்று குறிப்பிட்டார். அதற்குப் பிறகு பாபா நான்கு விதமான அறிவை பற்றி சொற்பொழிவு வழங்கினார்:

1. **உலக அறிவு**
2. **ஆன்மீகத் தளங்களைப் பற்றிய உள்ளறிவு**
3. **ஏழாவது ஆன்மீகத் தளத்தின் இறையறிவு**
4. **பரிபூரண அறிவு** - **இது மூவுலகங்களிலும் பணிபுரியும் பொருட்டு அவதார புருஷர் மற்றும் சத்குருக்களுக்கே உரித்தானது.**

பாபா, பின்னர் ஏழு தளங்கள் மற்றும் ஏழு வானுலகங்களைப் பற்றி விளக்கமளித்தார்:

**ஏழு ஆன்மீகத் தளங்களுக்கு ஏற்ப மனித உடலில் ஏழு பாகங்கள் உள்ளன.**

**முதல் தளம் - தொப்புள்.**

**இரண்டாம் தளம் - மார்பின் இடது பாகம்.**

**மூன்றாம் தளம் - மார்பின் வலது பாகம்.**

**நான்காம் தளம் - தொண்டையின் கீழ் பாகம்.**

**ஐந்தாம் தளம் - தொண்டையின் மேல் பாகம்.**

**ஆறாம் தளம் - மூன்றாவது கண் (இரண்டு கண்களுக்கும் இடையே)**

**ஏழாம் தளம் - தலையின் மேல்பாகம் அல்லது நடு உச்சி.**

**ஏழு வானுலகங்களோடு தொடர்பான பாகங்கள் முற்றிலும் மாறுபட்டவை; அவை உடலின் பிற்பகுதியில் அமைந்துள்ளன. ஒன்றாவது வானுலகம் - தொப்புளின் பின்பகுதி, இரண்டாவது - இடது மார்பின் பின்பக்கம்; இவ்வாறு ஒவ்வொன்றும் பின்பக்கங்களில் அமைந்துள்ளன; இப்படி ஏழாவது வானுலகம் தலையின் பின்புறம் உள்ளது.**

**வானுலகப் பாதை வழியாகப் பயணிக்கும் யோகிகள், அந்தப் பாதையில் அற்புதமான, சிறப்புமிக்க உருவில் தடைகள் பல இருப்பதால் அவற்றைக் கடந்து செல்வது அசாத்தியம். வானுலக அழகில் மயங்கும் யோகிகள் ஆன்மீகப் பாதையில் முன்னேற முடியாமல் நிலைகுலைந்து போகின்றனர்.**

**ஒவ்வொரு தளமும் ஒரு நகரத்தின் இரயில் நிலையம் போன்றது; அதே வேளையில் ஒவ்வொரு வானுலகமும் மாநகரம் என வைத்துக்கொள்ளலாம். இதன் காரணமாக பயணம் காலதாமதமாவது மட்டுமின்றி நகரத்தின் அழகில் மயங்கும் ஆபத்தும் உள்ளது.**

**உதாரணமாக, கையில் காசு, பணம் எதுவும் இல்லாத ஏழை ஒருவனை எடுத்துக்கொள்ளுங்கள்; இருந்தாலும் அவனுக்கு 45 குழந்தைகள்! குடும்பத்துடன் அலைந்து திரியும் வேளையில், ஒரு வெள்ளி நாணயம் மட்டும் தானமாகக் கிடைத்தால் குழந்தைகளின் ஒருநாள் உணவை சமாளித்துவிடலாம் என்று நினைக்கிறான். அதற்கிடையில், அவன் வழியில் நகைகளின் குவியலை எதிர்கொள்கிறான். இப்போது சொல்லுங்கள் அவன் என்ன செய்வான்? நகைகளைக் கண்ட பூரிப்பில் அங்கேயே நின்றுவிடுவான்! ஆனால், அங்கே ஒரு சத்குரு இருப்பாராயின், அவனுடைய பாதையில் தொடர்ந்து செல்ல உதவுவார் - நகரத்திற்குச் செல்லாமல், இரயில் நிலையத்திற்கு அனுப்பிவைப்பார்.**

**மதுபோதையில் தள்ளாடும் ஒருவனை, அருகிலிருக்கும் சிறிய குட்டையைக் காட்டி, அது குட்டைதான் என்று எடுத்துக் கூறி, நம்பவைக்க முயற்சித்தாலும், அவன் அதை நம்பாமல் கடலாகவே பார்க்கிறான். தள்ளாடி நடக்கும் வேளையில் பறப்பது போன்ற தவறான எண்ணத்தில்**

இருக்கிறான். அனைத்து பொருட்களையும் இரண்டு அல்லது சில சமயங்களில் மூன்று மடங்கு பெரிதாகப் பார்க்கிறான்; உண்மையை எடுத்துக் கூற எவ்வளவுதான் முயற்சித்தாலும் அதை அவன் நம்புவதாக இல்லை. ஆனால், எதுவாயினும், என் மீது நம்பிக்கை வையுங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள், என்னை நேசியுங்கள்.

அதேபோல், உலகம் உண்மையானது என்ற தவறான நம்பிக்கையில் நீங்கள் அனைவரும் இருக்கிறீர்கள். அனைத்தும் பொய் - ஒரு கனவு, மாயை என்று நான் உங்களுக்குக் கூறும்போது இந்த உண்மையை உங்களால் ஜீரணிக்க முடியாது. கடவுள் மட்டுமே உண்மையானவர் என்ற விழிப்புணர்வு ஒருநாள் உங்களுக்கு வரும்; அவர் மட்டுமே மெய்ப்பொருளானவர், பிற அனைத்தும் பொய், போலி, மாயை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

டிசம்பர் 29ஆம் நாள், பாபா தொடர்ந்து அவதார புருஷரைப் பற்றிய சொற்பொழிவை வழங்கினார்:

ஒரு சத்குரு செய்யும் அனைத்தையும் அவதார புருஷர் செய்ய முடியும். சத்குரு ஒரு வட்டத்தை உருவாக்கித் தயார் செய்வதுபோல் அவதார புருஷரும் செய்வதுண்டு; ஆனால், ஒரு சிறப்பான அம்சத்தையும் அவர் செய்கிறார். அவதார புருஷர், அவரது வட்டத்தில் இல்லாத ஒருவரை, அல்லது இறைவனை நோக்கி தனது பார்வையைத் திருப்பாத ஒருவரை (அதாவது ஆன்மீகத் தளங்களை எட்டாத ஒருவரை) இறைநிலையை அடைந்த 'ஸலிக்'காக மாற்றி, சிறப்புக் கடமைகளை வழங்குகிறார்.

எனக்கு மட்டும் அந்த 'சலன சித்தம்' வருமாயின், ஆஷ்ரம சிறுவர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து, இறைநிலையை அளித்து, மறுபடியும் இவ்வுலகில் கொணர்ந்து, நான் விரும்பும் சிறப்புக் கடமைகளில் ஈடுபடச் செய்ய முடியும். அதற்குரிய நேரம் வரவேண்டும், 'காரணம் புரியாத' அந்த விருப்பமும் வரவேண்டும். அவதார புருஷனான கிருஷ்ணா அவரது வட்டத்திற்கு வெளியே இருந்த 17 நபர்களுக்கு இறையுணர்வை அளித்து இப்பூவுலகில் வரச்செய்தார் - இப்படி, 17 இறைநிலையை அடைந்த நபர்கள் 'ஸலிக்'காக இருந்தனர்.

உங்களில் யாருக்கு இந்த ஆப்பிள் கனி கிடைக்கிறது என்று நான் பார்க்கிறேன்! இது அனைத்தும் உங்கள் அன்பைப் பொறுத்தது. எனவே இந்தப் பிரிவை எண்ணி கண்ணீர் சிந்திக் கதறாமல், ஒன்றே ஒன்றை மட்டும் செய்யுங்கள் - என்னை நேசியுங்கள். அப்போது நான் உங்களில் 17 பேருக்கு மட்டுமல்ல, நான் விரும்பும் அத்தனை பேருக்கும் சிறப்பான ஒன்றை செய்ய முடியும். என்னிடம் அவ்வளவு ஆற்றல் உள்ளது. அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஆகையால், அன்பை உருவாக்கி, மேலும் அதைப் பெருகச் செய்யுங்கள். அந்த அன்பின் அர்த்தம் என்ன? ஒன்றே

**ஒன்றுதான் - என்னை மட்டும் நினைவில் கொள்வது, வேறு எதுவும் இல்லை.**

டிசம்பர் 30ஆம் நாள், பாபா மேலும் பல விபரங்களை மண்டலிக்கு வெளிப்படுத்தினார்.

**இவ்வேளையில், சிறுவர்களை முன்னோக்கி எடுத்துச் சென்று, இறைநிலையை அடைந்த ஸலிக்குகளாக மாற்றுவதே எனது விருப்பம். நான் சிறுவர்களிடம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதால், ஆஷ்ரமத்தில் இத்தனை சிக்கல்கள். இவர்களில் எத்தனை பேர் சாதுக்களாக மாறுவார்கள் என்பதை நீங்கள் காண்பீர்கள்! அந்த நேரம் நெருங்கிவிட்டது. இந்த வேலை முடிந்த பிறகு நான் உங்கள் முன் தோற்றமளிப்பேன். ஆனால், அதற்குரிய 'இனம் புரியாத ஆசை' உருவாகவேண்டும்; மேலும் அது தானாகத் தோன்றுவது மிகவும் கடினம்.**

**ஒருமுறை அவ்விதமான ஆசை வந்துவிட்டால் அனைத்தும் தானாகவே நிகழும். நான் சிலருக்குக் கடவுளைக் காட்டுவேன், மேலும் சிலரை கடவுளாக மாற்றுவேன்!**

**இந்த சிறுவர்களின் அதிர்ஷ்டம் மிகவும் சிறப்பாக இருந்ததால் எனது அருகாமையில் வரமுடிந்தது. மிகப்பெரிய யோகிகள் பல ஆண்டுகளாக கடவுளைப் பார்க்கவும், கடவுளோடு ஒன்றிணையவும் கூக்குரல் விடுகிறார்கள். சிலர் பத்து வருடங்களாக விரதம் இருக்கிறார்கள்; சிலர் இருபது வருடங்களாக தலைகீழாகத் தொங்கிக்கொண்டும் நிற்கிறார்கள்; இருந்தும் நான் அவர்களிடம் செல்வதில்லை. நான் உங்களுக்குக் கூறுகிறேன், சிறுவர்களில் சிலர் என்னுடைய உண்மை ரூபத்தைக் காண்பார்கள். எனவே அவர்களை மேலும் மேலும் என்னிடம் அன்பு செலுத்தும்படித் தூண்டி, அதற்குரிய தகுதியுடையவர்களாக மாற்றவேண்டும்.**

பாபா இவ்வாறு கூறி முடித்ததும், பிரேமாஷ்ரம் சிறுவர்கள் இரவு பகல் பாராமல் கண்ணீர் வழிய, அவர்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி, இதய பாரத்தை இலகுவாக்க முயற்சித்தனர். வகுப்பறையிலும், உணவு உண்ணும்போதும், அல்லது விளையாடும் வேளையிலும் காரணம் புரியாமல் திடீரெனக் கண்ணீர்விட்டுக் கதறினார்கள்.

மண்டலி, ஆசிரியர்கள் அனைவரும் சிறுவர்களை ஆறுதல்படுத்த தங்களால் இயன்ற அனைத்தையும் செய்தனர், ஆனால், எதுவும் செய்ய முடியவில்லை; உண்மையில் அவர்கள் செய்ய எதுவுமில்லை. அவர்களின் செவிகளில் விழுந்ததெல்லாம் ஆத்மாக்கள் கடவுளுக்காக எழுப்பிய தாங்கொணா வலியின் கூக்குரல். குருநாதரின் இதயத்திலிருந்து மதுரசம் பெருக்கெடுத்து ஓடியது, அவரின் ஆழமான அன்பு ஒன்றுதான் இன்றியமையாதது என்று ஓயாமல் அழுதது!

அடுத்த அரை மணி நேரம், ஏறக்குறைய மாலை 7.30 மணிவரை சிறுவர்களின் அழுகை ஆரவாரம் தொடர்ந்தது, அதனைத் தடுக்கும் அனைத்து முயற்சியும் தோல்வியை சந்தித்தது. சிறுவர்களின் இதயங்கள் சத்தமாகத் தேம்பித் தேம்பி அழுதன, 'பாபா! பாபா! பாபா!' மேலும் அவர் ஒருவரைத் தவிர அவர்களுக்கு வேறு எதுவுமே தென்படவில்லை. டாக்டர் கனி, ருஸ்தம் ஈரானி இருவரும் நடப்பதைக் கண்டு ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

பாபா உடனே அனைத்து சிறுவர்களையும் சமாதியின் கீழ்நிலைக்கு அழைத்தார்; அவரைக் கண்டதும் சிறுவர்களின் அழுகை அடங்கியது.

காலம் இதை இப்படிப் பார்த்தது: "இறையன்பு ஒன்றே அவர்களின் கண்ணீரில் இசைப்பது போலத் தோன்றியது; பிரியமானவரின் பார்வையில், அதன் ஏக்கம் நிறைவேறியது."

சிறுவர்கள் வெளிப்படுத்திய அன்பைக் குறித்து, பாபா, இவ்வாறு விளக்கினார்:

**உங்களின் இந்த நிலையைக் கண்டு நான் திருப்தியடைகிறேன், இந்த அழுகை, சுதந்திரமாக, மடைதிறந்த வெள்ளம் போலப் பெருக்கெடுக்கும் அன்பைக் காட்டுகிறது. ஆனால், நான் கட்டளையிடும் அந்நேரத்தில் உங்கள் அழுகையை நிறுத்த வேண்டும். உங்கள் அழுகை என்பது அன்பு, ஆனால், நீங்கள் எனது ஆணைகளுக்கு செவிசாய்க்க வேண்டும். உங்களின் அன்பைத் தடுக்காதீர்கள் - மேலும் அதிகப் படுத்துங்கள், அதே வேளையில் எனது கட்டளைகளுக்கு அடிபணியுங்கள்.**

**"எனது அன்பில் நீங்கள் எவ்வளவுதான் நிறைவுற்றவர்களாக இருந்தாலும், எனக்குக் கீழ்ப்படிதலில் உறுதியாக இருங்கள். நாள் முழுக்க நீங்கள் அழுதாலும், அதில் எந்தத் தீங்குமில்லை, ஆனால், எனது கட்டளைகளைப் பின்பற்றுங்கள். நான் அழுகையை நிறுத்தச் சொல்லும்போது, உடனடியாக நிறுத்தவேண்டும். இறுதிவரை என் அன்பில் வாழ்பவர்கள் என் அருளைப் பெறுவார்கள்."**

விவேகானந்தா, ராம்தீர்த் இவர்களின் கதைகளை சிறுவர்களுக்கு எடுத்துரைத்து, குருநாதர்கள் மீதான அவர்களின் பிரியத்தை விளக்கிக் கூறினார்.

வசந்த், பிரேமாஷ்ரம் சிறுவர்களில் ஒருவன், வயது 14, நாள் முழுவதும் அழுது கொண்டிருந்தான். '**அழுகையை நிறுத்த முயற்சித்தால் அவன் பைத்தியமாகி விடுவான்**' என்று பாபா எடுத்துரைத்தார். '**சிறுவர்களில் ஒரு சில மிகவும் நேர்மையான உள்ளங்களை 'உயர் நிலைக்கு எடுத்துச்செல்ல - கடவுளோடு ஒன்றிணையும் அனுபவத்தை வழங்க பணிபுரிவதாக**' பாபா கூறினார். **"ஒரு சத்குருவிடம் எல்லையற்ற சக்தியிருப்பதால், அவரால் ஒரே நொடியில் இறை அனுபவத்தை வழங்கமுடியும்"** என்று கூறி முடித்தார்.

அடுத்த நாள், ஜனவரி 2 அன்று, விளையாட்டு மைதானத்தில், 20 நிமிட இடைவேளை நேரத்தில், சிறுவர்களின் அழுகைக்குரல் மறுபடியும் ஒலித்தது; ஆனால், வகுப்பறை மணி ஒலித்ததும் அனைத்து சிறுவர்களும் அமைதியாக அவரவர் வகுப்பில் அடக்கத்துடன் அமர்ந்தனர். அவர்கள் இதயங்களில் இறையன்பு இன்னமும் இடிபோல முழங்கிக் கொண்டிருந்தது, ஆனால், அவர்களால் தங்கள் உணர்வுகளை எப்படியோ கட்டுப்படுத்த முடிந்தது. இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு, இறையன்பு, அவர்களிடையே இவ்வித அழுகைக்குரலைத் தொடர்ந்தது. சிறுவர்களின் இந்த நிலை சில பெண் மண்டலியை வெகுவாக பாதித்து, கண்கலங்கச் செய்தது.

சில சிறுவர்கள் தனிமையில் அமர்ந்து அமைதியாகக் கண்ணீர் சிந்தினாலும், அழுகைக்குரல் கேட்ட அதே வேகத்தில் நின்றும் விட்டது. சிறுவர்களின் இதயங்களில் காதல் கீதம் அமைதியாக ரீங்காரம் செய்தாலும், அதன் பரவசம் அவர்களின் கண்களில் மௌனமாக வெளிப்பட்டது.

ஜனவரி 4ஆம் நாளிலிருந்து மெஹர் பாபா, சிறுவர்களுக்கு தரிசனமளித்து மண்டலியிடம் இவ்வாறு குறிப்பிட்டார்: "**நான் சில சிறுவர்களை அவர்களது அன்புக்காகவும், சிலரை அவர்களது இதயத்திற்காகவும், மேலும் சிலரை சிறந்த அறிவாற்றலுக்காகவும் தேர்ந்தெடுத்துள்ளேன். அதில் 20 பேர் நேர்மை மற்றும் நம்பிக்கைக்கு உரியவர்களும் ஆவர். என் மீது அவர்களின் பாசம் ஒவ்வொரு நாளும் பெருகிக்கொண்டே இருப்பது எனக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது**."

ஜனவரி 6ஆம் நாள், வெள்ளிக்கிழமை, ஒரு டஜன் ராணுவ வீரர்கள் மெஹராபாத் சாலை வழியாக விஸாப்பூருக்குச் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் பாபாவின் தரிசனத்திற்காக விருப்பம் தெரிவிக்க, பாபா, அவர்களை அன்புடன் அனுமதித்து, மேல்மலைக்கு அழைத்துவரக் கூறி, தரிசனமளித்தார். அவர்கள் புறப்பட்டுச் சென்ற பின்பு, பாபா சிறுவர்களை அழைத்து இவ்வாறு தெரிவித்தார்: "**இது எதிர்காலத்தில் அதிவிரைவில் வரவிருக்கும் ஒரு பெரிய போரின் அறிகுறியாகும்**."

பாபா, அன்று 11 மணிக்குப் பள்ளிக்கூடத்தை மூடும்படிக் கட்டளையிட்டார். அரை மணி நேரத்திற்குப் பின்னர், அவரது வேண்டுகோளுக்கிணங்க, பாபாவிற்கு ஒரு புனித நீராட்டு வழங்கப்பட்டது, முதலில் சிறுவர்களும், அதைத் தொடர்ந்து மண்டலியும் பங்கெடுத்தனர்.

பாபா எடுத்துரைக்க, அவருடைய சகோதரன் பெஹராம் எழுதிக்கொண்ட அறிவிப்பு ஒன்றை வாசிக்குமாறு கூறினார். அதில், அதிகாலை இரண்டு மணிக்கு, ஆன்மீக இறை ஞானிகளுடன், சமாதி கீழ்நிலையில் நடந்த இரகசிய கருத்தரங்கில், '**வெகுவிரைவில் மிகப்பெரிய போரை உருவாக்கும் முடிவு எடுக்கப்பட்டது**' என்று பாபா வெளிப்படுத்தியிருந்தார். அன்று காலையில், எதிர்பாராமல் திடீரென வந்த ராணுவ வீரர்களின் வருகை, இதன் முன்னறிவிப்பாக அமைந்தது.

பாபா தனது அறிவிப்பை மறுபடியும் வலியுறுத்தி, "**ஒரு மிகப்பெரிய போர் விரைவில் தொடங்க உள்ளது, மேலும் அது தீவிரம் அடையும்போது நான் முன்வந்து என்னுடைய அவதார நிலையை வெளிப்படுத்துவேன்**" என்று கூறினார்.

மெஹர் பாபாவின் இந்த அறிவிப்புகள் சிறுவர்கள் முன்னிலையில் - மராட்டி, பெர்ஸியன் மற்றும் குஜராத்தி மொழிகளில் - வாசிக்கப்பட்டது.

பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: "**இன்றைய நாள் மிகவும் சிறப்பான நாள். பிரபஞ்சத்தில், என்னுடைய அவதார காலகட்டத்தின் அடிப்படை பணிகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்ட நாள். எனவே, இன்று பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை அளித்து, புனித நீராட்டு விழாவை நடத்தினேன்.**"

இரகசிய கருத்தரங்கில் நடந்ததைப் பற்றி பாபா, ருஸ்தம் மற்றும் மண்டலிக்கு இவ்வாறு குறிப்பிட்டார்: "**கூட்டத்திற்கு முன்னதாக, அருகாமையில் குஸ்தாஜி அல்லது ராம்ஜூ இருக்கிறார்களா என்பதை ஊர்ஜிதம் செய்து, சமாதியின் கீழ்நிலை அருகில் எவரும் வரக்கூடாது என்பதை எடுத்துக்கூறி, அவர்களை கவனமாக இருக்குமாறு எச்சரித்தேன்.**

"**குருநாதர்கள் அவர்களின் சூட்சும** (பிராண) **உடலில் இருக்கும் வேளையில் எவரேனும் அருகில் வர நேர்ந்தால், அது பெரும் பாதிப்பை விளைவிக்கும். உயர் நிலையை அடைந்த சாதுக்கள், சாதாரணமாக, புலிகளைப் பாதுகாவலுக்காக எல்லையில் நிறுத்தும்போது எவருமே துணிந்து முன்வருவதில்லை.**"

ஜனவரி 8ஆம் நாளிலிருந்து சிறுவர்கள், மறைவான இடத்தில் தனியாக அமர்ந்து அழத்தொடங்கினர். 'வசந்த்' எனும் சிறுவன் பாபாவின் அருகிலமர்ந்து அவரது கால்களைப் பற்றிக்கொண்டு அழுதான். அங்கு வந்த பாபாவின் தாயார் ஷிரீன்மாய், பீலாமாய், பெரிய கோர்ஷெத் மூவரும் சிறுவர்களின் நிலையைக் கண்டு மனம் நெகிழ்ந்து போயினர். இரண்டு நாட்களுக்குப் பிறகு விஷ்ணு மருத்துவ கல்வி பயிலும் 'நீலு' எனும் நண்பருடன் பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தார். அன்று பாபா ஓர் ஈரடிக் கவிதையைத் தொகுத்து வழங்கினார்:

**அன்பிற்காக அழும் ஒருவரின் அழுகை சிறப்புமிக்கது.**
**வேறு எதற்காகவும் அழுவது வெறும் கேலிக்குரியது.**

அதற்குப் பிறகு பாபா, படைப்பின் நோக்கத்தைப் பற்றி மாணவர்களுக்கு விளக்கும்போது, ஓர் அரண்மனையை உதாரணம் காட்டி இவ்வாறு எடுத்துரைத்தார்:

**அரண்மனையில் மன்னர் ஒருவர் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அரண்மனையில் ஒரு கதவு மட்டுமே இருந்தது, ஆனால், அங்கே ஜன்னல்கள் எதுவுமில்லை. அரண்மனையை மூன்று**

**தூண்கள் தாங்கி நின்றன. அதற்கு ஏழு சுவர்கள் - ஒன்று இரும்பிலானது, மற்றொன்று துத்தநாகத்தால் செய்யப்பட்டது, மூன்றாவது வெள்ளி, நான்காவது தங்கம், ஐந்தாவது கல், ஆறாவது மரம் மற்றும் ஏழாவது சுவர் முத்துக்களாலும் செய்யப்பட்டிருந்தன.**

**அரண்மனைக்கு முன்னால் ஒரு மதில், அதனுள்ளே மூன்று குளங்கள் அமைக்கப்பட்டிருந்தன - ஒன்று நீராலும், மற்றொன்று பாலாலும் மூன்றாவது குளம் பன்னீராலும் நிரம்பியிருந்தன. இந்தக் குளங்களின் எதிரிலமைந்த வீதியில் ஏழு புலிகள் பாதுகாவல் புரிந்தன.**

**வீதி முடிவடையும் இடத்தில் நறுமணம்மிக்க பூக்கள் நிரம்பிய பெரிய தோட்டம் ஒன்றிருந்தது. ஒவ்வொரு வகை பூக்களுக்கும் ஒரு கூடாரம் அமைத்து, அதன் மீது ஒரு பாம்பு அமர்ந்திருந்ததாக வைத்துக்கொள்ளுங்கள்.**

**பூந்தோட்டத்தைவிட்டு வெளியே வந்ததும் முதலில் பாலைவனத்தையும், அதன் பின்னர் ஒரு நதியையும் கடந்து செல்லவேண்டும். நதியின் மறுபக்கத்தில் அமைந்த நகரத்தை அடைந்ததும் உனது பயணம் நிறைவுறும்.**

"**இந்த எடுத்துக்காட்டை நீங்கள் புரிந்துகொண்டால், முழு வேதாந்தமும் உங்கள் அறிவுக்குப் புலப்பட்டுவிடும்**" என்று கூறி முடித்தார். எப்படியிருந்தாலும், அன்று காலதாமதமாகி விட்டதால் பாபா விவரித்த காட்சிகளின் அமைப்பைப் பற்றிய முழுமையான விளக்கத்தை அவர் வழங்கவில்லை.

பாபா தொடர்ந்து படைப்பைப் பற்றிய விளக்கங்களை, தினமும் காலை வேளையில் கூறிவந்தார். ஜனவரி 9ஆம் நாள் வழக்கத்திற்கு மாறாக, வகுப்பறையை காலை 7.15 மணிக்குத் தொடங்கி, முதல் 15 நிமிடங்களுக்கு, பொதுவான விஷயங்களைக் கூறிவிட்டு, முந்தைய நாள் விளக்கியதைத் தொடர்ந்தார், ஆனால், சில நிமிடங்களுக்குப் பிறகு, திடீரென நிறுத்திவிட்டு, அதை இப்போது விளக்கும் மனநிலையில் அவரில்லை என்று கூறினார்.

பாபா அப்போது சற்றும் எதிர்பாராமல், மர்மமான முறையில் இவ்வாறு குறிப்பிட்டார்: "**லண்டனில் இருக்கும் ஒருவருடன் சில தொடர்புகள் நடந்து கொண்டிருக்கின்றன - ஆன்மீகப் பாதையில்** (நான்கு மற்றும் ஐந்தாம் தளங்களுக்கு இடையில்) **இருப்பவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டியிருப்பதால், எனது கவனம் தேவைப்படுகிறது**."

அந்த நாள் '**ஸதக் ஆஷ்ரம்**' அறையில் அமர்ந்திருந்த கோபால் சுவாமி, திகைப்பூட்டும் ஒளியைக் கண்டதாகவும், அது அவரது பார்வையைக் கிட்டத்தட்ட குருடாக்கி விட்டதாகவும் கூறினார். பேரானந்த நிலையில் இருந்த அவர் தானாகவே பாபாவின் பெயரையும், புகழையும் பாடிக்கொண்டிருந்தார்.

பழைய மாணவர்களில் ஒருவன் 'அப்துல்லா புக்ரவான்', ஆரம்பத்தில் கல்வி ஒன்றையே நோக்கமாகக் கொண்டு, மெஹர் ஆஷ்ரமத்தில் சேர்ந்த பின்பு, பாபாவின் நெருக்கம் அவனில் ஒரு முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தியது மட்டுமின்றி, அவரது பணி, படிப்படியாக அவனுள் அதீத தாக்கத்தை உருவாக்கியது. அப்துல்லாவின் விதி, இறைவனின் மகிமையைக் காணும் பாக்கியத்தை அளித்தபோது, அன்பெனும் மதுரசம் அவனது இரத்த நாளங்கள் வழியாக விரைந்து செல்லத்தொடங்கியது; அது அவன் முன் நின்ற மாய உலகை மறக்கச் செய்தது. ஜனவரி 7ஆம் நாள், அப்துல்லா இருந்த நிலையில், 'ஸ்ரீபாபா தலையிட்டு, அவரது கைகளால் தேநீர் வழங்கியதால் அவனுடைய நிலை சீரானது' என்று சாஞ்சி தனது ஏட்டில் குறிப்பிட்டிருந்தார்.

ஜனவரி 11ஆம் நாள் மதிய வேளையில், மெஹர் பாபா, சற்று மனச்சோர்வுடன் காணப்பட்டார்; தனது கோபத்தை, புவாஸாஹேப் மீது காட்டினார். ஆனால், பாபாவின் குடிலுக்கு அருகாமையில் அமைந்த மேடையில் அமர்ந்திருந்த சிறுவர்கள் மற்றும் மண்டலிக்கு, சொற்பொழிவு வழங்கிய வேளையில் அவர் இவ்வாறு வெளிப்படுத்தினார்: "**யார் ஒருவரை நான் தகுதி உள்ளவராகப் பார்க்கிறேனோ**, **அவர்களை 'அன்பின் அதிபதி' பக்கம் ஈர்ப்பதோடு வாழ்க்கையின் அமுதத்தை வழங்குவேன்**. **குழந்தைகளே, இறைவன் ஒருவன் மட்டுமே உண்மையானவன் - பிற அனைத்தும் பயனற்றவை. விடாமுயற்சியுடன் இருக்க முயலுங்கள்**. **உங்கள் கலப்பு உலோகக் கலவைகளிலிருந்து நான் தூய தங்கத்தை உருவாக்குவேன்**."

திடீரென அப்துல்லா, பாபாவின் அறை ஜன்னலிலிருந்து வெளிவந்த அசாதாராணமான மின்னொளியைக் கண்டு மயக்கமானான். பாபா உடனே அவனை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல உத்தரவிட்டார்.

சமாதி கீழ் நிலையில் அமர்ந்திருந்த பாபா, வெளியில் குளிராக இருந்தும் தனது மேலாடையைக் கழற்றினார், மார்பெல்லாம் ஒரே வியர்வை. உள்ளளவில் பாபா, அப்துல்லாவின் உணர்வு நிலையைக் குறித்த பணியில் ஈடுபட்ட வேளையில், உடலெல்லாம் வியர்வை வழிந்தது. '**அப்துல்லாவின் ஆன்மீக உணர்வை ஆறாவது தளத்திற்கு எடுத்துச் சென்றதாக**' பாபா தெரிவித்தார்.

மருத்துவமனையில் ஓய்வெடுக்கும் வேளையில் அப்துல்லாவின் கண்கள் திறந்த வண்ணம் வெறுமையாக இருந்தன; அவன், சாதாரண மனித உணர்வை இழந்துவிட்டான். உண்மையில் அவன் கடவுளைக் கண்கூடாகக் கண்ட வண்ணம் இருக்கிறான் - அதே உயர்வான நிலையில் நான்கு நாட்கள் அப்படியே இருந்தான்.

இத்தகைய மாற்றம் தென்பட்ட மூன்றாவது நாள், பெர்ஸிய மாணவர்களில் ஒருவன் 'எஸ்பந்தியார் வெஸாலி', அப்துல்லாவைப் பார்க்கச் சென்றான்.

"அப்துல்லா, என்னைத் தெரியுமா உனக்கு?" வெஸாலி வினவினான்.

முழு நினைவற்ற நிலையில் அப்துல்லா, கண்களைத் திறந்து மெதுவான குரலில் "ஆமாம்" என்று பதிலளித்தான்.

"நான் யார்?" வெஸாலி கேட்டான்.

"நீ பாபா."

அருகாமையிலிருந்த தீப்பெட்டி ஒன்றை வெஸாலி கையிலெடுத்து, அப்துல்லா முன் நீட்டி, "இதை உன்னால் பார்க்கமுடிகிறதா? இது என்ன?" என்று கேட்டதற்கு, "இது பாபா" என அப்துல்லா பதிலளித்தான்.

எதைக் கேட்டாலும் அப்துல்லாவின் பதில் 'பாபா' என்ற ஒரே வார்த்தையாக இருந்தது. பாபாவை அவன் எங்கும், எதிலும் பார்த்துக்கொண்டிருந்தான்.

நான்காவது நாள், கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அப்துல்லா கடுமையாக அழத் தொடங்கினான். அவனது கண்ணீரில் நிரம்பிய வலியை விவரிக்க முடியாது. உலகறிந்த எந்தவொரு துன்பத்துடனும் இதை ஒப்பிட இயலாது. அவன், கடவுளைக் காணும் 'பேரின்பம்' மற்றும் 'பேரொளி'யின் தளத்திலிருந்து கீழே மண்ணுலகுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். ஆறாவது ஆன்மீகத் தளத்தின் உணர்வு நிலையிலிருந்து இறங்கி, அவன் மனம் பௌதீக பொருளுலகில் வந்துகொண்டிருந்தது; மேலும் கீழுலகில் வரும் அந்த '**அனுபவம்**' அவனை சின்னாபின்னமாக்கி, பரிதாபமாக அழ வைத்தது.

ஐந்தாவது நாள், பாபா, அப்துல்லாவின் குடலை சுத்தம் செய்யும் 'எனிமா' மருந்தை வழங்கச் சொன்னார். அதன் பின்னர், அப்துல்லா படிப்படியாக, சுற்றுப்புறத்தை அறியும் உணர்வைத் திரும்பப் பெற்றான். ஓர் இதுபோன்ற அனுபவத்தைக் கொடுத்து மீண்டும் இவ்வுலகில் அவனைக் கொண்டுவருவது பாபாவின் தனிப்பட்ட முடிவு.

1928, ஜனவரி 14 சனிக்கிழமை, மாலை ஆரத்தி வேளையில் 'ராஜாராம்' எனும் சிறுவன் தீவிரமான அன்பில் மூழ்கி, உணர்வை இழந்து மயக்கமானான், ஆனால், சில மணி நேரத்தில் அவன் நினைவு திரும்பியது. அடுத்த நாள் மற்றுமொரு சிறுவன் 'அப்துல் வஹாத்' திடீரென, உரத்த குரலில் அழுது கூச்சலிட்டு உணவு, நீர் எதுவும் உட்கொள்ளாமல் இருந்தான்; பாபா அவருடைய கைகளால் அளித்த உணவையும் மறுத்துவிட்டான்.

மேலும் மூன்று சிறுவர்கள், ராமாஜி, லோபாஜி, ராஜாராம் மூவரும் பாபாவைப் பிரிந்திருக்க முடியாது எனக் கூறி, அவர்களை வகுப்பறைக்கு அனுப்பாமல், அவரருகில் வைத்திருக்குமாறு பாபாவிடம் இறைஞ்சினர். பாபா, அவர்களின் பிரார்த்தனை நிறைந்த வேண்டுகோளுக்கு இணங்கி, ஜனவரி 16ஆம் நாளிலிருந்து அவர் அருகே அமருமாறு கூறினார். அதே நாள், பாபா, மண்டலியில் ஒருவர் 'பைதூல்' என்பவரை பிரேமாஷ்ரம் நிர்வாக பொறுப்பிலிருந்து விடுவித்து, அதன் ஆசிரியராக நியமித்தார். மேல் மலையில்

தங்கியிருந்த பெய்லியை, தினமும் மதியம் ஒரு முறை மட்டும் உண்ணுமாறு அறிவுறுத்தினார்.

அன்று மதியம் இரண்டு மணியளவில், பாபா மண்டலி மற்றும் மாணவர்களோடு உரையாடிக் கொண்டிருந்த வேளையில், பைதூல் ஒரு தட்டில் சாப்பாட்டிற்குத் தயார் செய்த சாதத்தை எடுத்துவந்து, "பாபா, இதைப் பாருங்கள், சாதம் பதமாகவில்லை. சகன் இப்படித்தான் உணவு தயார் செய்கிறான்" என்று தெரிவித்தார்.

பாபா, சகனை அழைத்துக் கேட்டார், **"சாதம் ஏன் சரியாகப் பதமாகவில்லை? என்னுடன் இருக்கும் சிறுவர்களைக் கொல்ல முயற்சிக்கிறாயா? உனக்கு வெட்கமே இல்லையா? உனது கரு மூஞ்சியைப் பார்க்க விரும்பவில்லை. பனை மரம் போல வளர்ந்துள்ளாய், அறிவு மட்டும் அந்த அளவுக்கு வளரவில்லை."**

பாபா, ருஸ்தத்தை அழைத்து பிரம்பால் சகனை நான்கு முறை அறையுமாறு கோரினார். பாபா கூறியபடியே ருஸ்தம் தண்டனையை நிறைவேற்றினார்; மேலும், பாபா, அவனை வெகுவாகக் கண்டித்து, **"இப்போது எனது பார்வையிலிருந்து வெளியேறு! சிலைபோல் இங்கே சுற்றி சுற்றி வரவேண்டாம்!"** சகன் அங்கிருந்து உடனே வெளியேறினான்; அனைவரும் அத்துடன் அனைத்தும் நிறைவடைந்ததாக நினைத்தனர்; ஆனால், நடந்தது வேறு.

சிறிது நேரத்தில், பாபா, சாஞ்சியுடன் இரண்டு மண்டலியை அனுப்பி, சகனை உடனடியாக அழைத்துவர உத்தரவிட்டார். பல இடங்களில் தேடியும் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அருகில் அமர்ந்திருந்த ராவ்ஸாஹேப் மற்றும் மெஹர்ஜியிடம், **"நீங்கள் ஏன் இங்கு இருக்கிறீர்கள், வெளியே சென்று சகனைத் தேடுங்கள்"** என்றதும், இருவரும் அவசரமாக விரைந்து, அனைத்து மூலை முடுக்கெல்லாம் தேடியும் கண்டுகொள்ள முடியாமல், கடைசியில் சரக்கு சேமிப்பறையில் மறைந்திருந்த சகன், கையில் கத்தியுடன் - கழுத்தை வெட்டித் தற்கொலை செய்யும் ஆயத்தத்தில் இருந்தான். மெஹர்ஜி, ராவ்ஸாஹேப் இருவரும் அதிவேகத்தில் அவனை அணுகி சரியான நேரத்தில் காப்பாற்றினர். அவர்கள், சகனை உடனழைத்துக் கொண்டு பாபாவிடம் சென்றனர்.

மெஹர்ஜி சேமிப்பறையில் நடந்த சம்பவத்தை எடுத்துரைத்ததும், பாபா சகனிடம், **"உன்னை நினைத்து நீ வெட்கப்பட வேண்டும். உன்னுடைய வாழ்வை எனக்கு அர்ப்பணித்த பின்னர், அதை முடிக்க உனக்கு என்ன உரிமை உள்ளது? உனது வாழ்க்கை இனி எவ்விதத்திலும் உனக்குச் சொந்தமானது அல்ல, இது எனது சொத்து! எனக்குச் சொந்தமானதை அழிக்க உனக்கு என்ன உரிமை உள்ளது?**

**"உனது நடத்தை வெட்கத்திற்குரியது. இந்த வழியில் உயிரை விடுவதில் என்ன இருக்கிறது? தைரியமற்ற, கோழைத்தனமான மக்கள் மட்டுமே இப்படி இறக்கிறார்கள். நானளிக்கும் தண்டனையை முழுமனதாக**

**ஏற்று, துயரங்களை அனுபவித்து உயிரைத் துறப்பதில்தான் உண்மையான துணிச்சல் உள்ளது**" என்று கூறினார்.

பாபா அப்போது, சகனை மன்னித்து மார்போடு அரவணைத்தார். குருநாதரின் அன்பான அரவணைப்பின் வெதுவெதுப்பில் அவனது துக்கம், விரக்தி அனைத்தும் மறைந்துவிட்டது; மேலும், அவனது வாழ்க்கை இனி உண்மையில் அவனுக்குச் சொந்தமல்ல என்பதை உணர்ந்து பாரமற்ற இதயத்துடன் தனது கடமைகளை மீண்டும் தொடங்கினான். இது அனைத்து மண்டலிக்கும் ஓர் அனுபவபூர்வமான பாடமாக அமைந்தது.

ஜனவரி 24ஆம் நாள் சோட்டா பாபா, ராஜாராம் இருவருக்கும் மலக்குடலை சுத்திகரிக்கும் எனிமாக்களை அளிக்குமாறு பாபா ராவ்ஸாஹேபிற்கு உத்தரவிட்டார். சோட்டா பாபாவிற்கு எனிமா அளிக்கும் வேளையில், அவன் தேம்பித் தேம்பி அழுது கண்ணீர் வடித்து "ஓ, இப்போது இது என்ன? எனக்கு இது வேண்டாம்! இந்த உலகம், மற்றும் அதிலுள்ள எந்தப் பொருளும் எனக்கு வேண்டாம். கடவுளின் நிமித்தம் கூறுகிறேன், நான் எனது பேரின்ப நிலையிலேயே இருக்க விரும்புகிறேன்! இதெல்லாம் எனக்குத் தேவையில்லை. பாபாவிற்கும் எனக்கும் இடையே அவர்கள் ஏன் வருகிறார்கள்? எனது பிரியமான பாபாவின் கண்கூடான காட்சியை ஏன் தவிர்க்க முயற்சிக்கிறீர்கள்? ஓ கடவுளே, இவை அனைத்தையும் எடுத்துவிடுங்கள், எனக்கு அவை எதுவும் தேவையில்லை" எனக் கதறினான்.

இவ்வாறு நடந்து கொண்டிருந்த வேளையில், சோட்டா பாபாவை, சாதாரண உலக உணர்வு நிலைக்குக் கொண்டுவருவதாக பாபா, பாதிரிக்கு விளக்கிக்கொண்டிருந்தார். சாஞ்சி, சோட்டா பாபாவின் அழுகையை இவ்வாறு வர்ணித்தார்: "தனக்குப் பிரியமான பொம்மை ஒன்றை இழந்த குழந்தையைப் போல..... நிஜமான வருத்தம் மற்றும் ஏமாற்றத்துடனும் மனதுக்குப் பிடித்தமான ஒன்றை இழந்தது போலத் தோன்றியது."

ராவ்ஸாஹேப், சோட்டா பாபாவின் கண்ணீரைக் கண்டு ஆச்சரியமடைந்தார், ஆனால், அவர் இந்த நிகழ்வை பாபாவிற்கு எடுத்துரைத்த போது, பாபா, **"அவன் தன் உயிரை இழந்தாலும், இந்த உலகுக்குத் திரும்பி வருவதை விரும்பவில்லை. எதற்கும் அஞ்சவேண்டாம் என்று அவனிடம் விளக்கிக் கூறுங்கள். அனைத்தையும் 'ஸ்ரீ' பார்த்துக்கொள்வார், அனைத்தும் சரியாகிவிடும்"** என்று வலியுறுத்திக் கூறினார். அதற்குப் பிறகு ராவ்ஸாஹேபிடம், சோட்டா பாபா, ராஜாராம் இருவரையும் 15 நிமிட நேரம் நடைபயிற்சிக்காக அழைத்துச் செல்லுமாறு கூறினார்.

மெஹர் பாபா, மண்டலிக்கு இவ்வாறு விளக்கினார்:

**ஆழ்மன உலகிலிருந்து சாதாரண உலக உணர்வுக்குத் திரும்பி வருவது, அப்துல்லாவின் அழுகைக்குக் காரணமாக இருந்தது. பௌதீக உடலைப் பற்றிய எவ்வித உணர்வும் இல்லாத நிலையில், அதை இழக்கும் வாய்ப்பைக் கூட கண்டுகொள்ளாமல், அப்போதைய இறைநிலையைப்**

பரிபூரணமாக அனுபவித்துக் கொண்டிருந்ததால், அந்த நிலையை விட்டு அவன் வெளியே வர விரும்பவில்லை. அவனது உடல், மேலும் மேலும் வலிகளைத் தாங்கமுடியாத அளவுக்கு பலவீனமாக இருந்தது. ஒரு சிறு அதிர்ச்சி கூட அவன் உடலை பாதிக்கும் அபாயமிருந்தது. இவ்வாறு எனிமா கொடுத்து அவனது குடலை சுத்தப்படுத்துவதன் மூலம் அவனை உலக உணர்வு நிலைக்குக் கொண்டுவர நான் முயற்சிக்கிறேன். ஆனால், அவன் பரமானந்த நிலையை இழக்க விரும்பாமல் அழுகிறான்.

அப்துல்லாவின் தற்போதைய நிலை, ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட ஒரு 'பிர்' அல்லது 'வாலி'யின் நிலையை ஒத்தது.

அவன் இப்போது அனைத்திலும் என்னைப் பார்க்கிறான். இது ஒரு சாமான்ய சாதனையல்ல என்றாலும், ஒருவர் அடைய வேண்டிய அனைத்தும் இதுவல்ல. இறுதியும், இன்றியமையாததுமான கடைசி படிக்கட்டு இன்னமும் எஞ்சியுள்ளது. அவன் இறைவனோடு இன்னும் ஒன்றவில்லை - இறைநிலையை எய்தவில்லை. இப்படியான இறைநிலை வட்டத்து சீடர்களுக்கும், ஒரு சில சிறப்பு மிக்க நபர்களுக்கும் மட்டுமே அவதார காலத்தில் வழங்கப்படும்.

இன்னும் இரண்டு அல்லது மூன்று நபர்களை, தயார் நிலைக்குக் கொண்டுவந்து, இறையுணர்வை வழங்கவேண்டும் என்ற எண்ணம் என் மனதிலுள்ளது. மேலும் 20 அல்லது 25 தனிப்பட்ட நபர்களை உயர் நிலை சாதுக்களாக மாற்றி, அவர்களுக்கு ஞானதிருஷ்டியை அளிக்கவும் விரும்புகிறேன், ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு அல்லது மூன்று பேருக்கு மட்டுமே இறை உணர்வை வழங்க உள்ளேன், அப்துல்லாவும் அவர்களில் ஒருவன்!

அப்துல்லா இறைவனைக் கண்கூடாகக் கண்டாலும், ஒரு சில காரணங்களுக்காக, உடனடியாக அவனால் இறைநிலையை அடைய முடியாது. முதலாவதாக, அவனது உடல், கடந்த இரண்டு மாதங்களாக, சோர்வடைந்து, நலிந்து காணப்படுவதால், இறைநிலையை அடைந்த பின்னர் ஏற்படும் உடல் விகாரங்களை அவனால் தாங்க முடியாமல் அபாயகரமான நிலையை சந்திக்க நேரும். அந்நேரத்தில் சிறிய அளவு அதிர்ச்சியைக் கூட தாங்க முடியாமல் உடல் தகர்ந்து போகும். ஆழ்மன உலகிலிருந்து பூமிக்கு அவனைக் கொண்டுவர எவ்வளவு சிரமங்களை சந்தித்தான் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இன்னும் ஒரு முக்கியமான காரணம், அவனை மறுபடியும் முழுமையான உலக உணர்வுக்குக் கொண்டு வருவது, அனைத்திலும் மிகவும் கடினமான காரியம். 'மஜ்ஜூப்களாக' (இறைநிலையை அடைந்த பின்னர் அதிலே மூழ்கியிருப்பவர்) எளிதில் மாற்றிவிடலாம், ஆனால், 'ஸலிக்' மற்றும் 'சத்குருக்களாக' மாற்றுவதுதான் கடினம். இக்காரணத்திற்காக, அப்துல்லாவுக்கு இறைநிலையை வழங்குவதை

நிறுத்தி வைத்து, மேலும் இரண்டு நபர்களுக்கு இறையுணர்வை வழங்கி அதேவேளை அவர்களை எனது வட்டத்து சீடர்களைப் போல் ஆக்குவேன்.

இதற்கிடையில், அப்துல்லாவுக்கு ஞானதிருஷ்டி கிட்டியதால் இப்போது அவன் அமைதியுடன் இருக்கிறான். அப்துல்லா அவனது தற்போதைய நிலையில் பிறர் அவனை வணங்கும் தகுதி படைத்தவனாக இருக்கிறான். அப்துல்லா அவனது அனைத்து மனப்படிவங்களிலிருந்தும் விடுபட்டிருப்பதால், யோகிகள் கூட அவனது கால்களில் விழுந்து வணங்குவது அவர்களுக்கு மிகையான நன்மை பயக்கும், அதே வேளையில் அவனுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது. இப்போது இருக்கும் நிலையில் அவன் உடலை இழந்தால், பிறப்பு இறப்பு எனும் சுழற்சியிலிருந்து விடுபட்டு என்னில் இருப்பான். அவன் உயிர் பிழைத்தால், இறைநிலையை அடைந்து முஹமதிய இனத்தவர்களுக்கு ஒரு பொக்கிஷமாக நிரூபணமாகி, அரேபிய நாட்டுக்கு என்னுடைய தனிப்பட்ட பிரதிநிதியாக விளங்குவான்.

ராஜாராம், நிச்சயமாக அப்துல்லாவைக் காட்டிலும் கீழ் நிலையில் இருக்கிறான். அவனும் அப்துல்லாவைப் போல் அனைத்திலும் என்னைப் பார்த்தாலும், இப்போது இறைநிலையை அடையப் போவதில்லை.

இப்போது நான் உருவாக்க இருக்கும் யோகி மற்றும் சாதுக்களில் இரண்டு அல்லது மூன்று நபர்களுக்கு இறையுணர்வை அளிப்பதோடு, அவர்களையும் வட்டத்து சீடர்களுடன் (இறைநிலையை அடைந்த பின்னர்) இந்த பூவுலகில் கொண்டு வருவேன். அவர்களுக்கு உலகெங்கும் சென்று ஆன்மீக போதனைகளை வழங்கும் சிறப்புப் பணியை வழங்குவேன். அவர்களுக்கு சீடர்கள் கிடையாது, பிறருக்கு சக்தியை அளிக்க முடியாது, மேலும் அடுத்தவர்களுக்கு பாதகம் விளைவிக்க இயலாது. சாமான்ய மக்கள் அவர்களின் போதனைகளைக் கேட்கலாம், தரிசனம் செய்யலாம், அவ்வளவுதான். அவர்கள் உலக உணர்வு நிலையைப் படைத்தவர்களாக இருப்பார்கள்.

மஜ்ஜூப்களை பொறுத்தவரையில், அவர்கள் இறைநிலையை அடைந்திருந்தாலும் உலக உணர்வு இல்லாததால், மானிடர்களுக்கு எதுவும் செய்ய இயலாத நிலை; மக்கள் அவரைத் தொழுது பயனடைய முடியும், அவ்வளவுதான்.

வட்டத்து சீடர்கள் இறைநிலையை அடைந்து, பின்னர் இவ்வுலகில் வந்து சாதாரண உலக உணர்வையும் அடையும் தருவாயில், அவர்களுக்கு சிறப்புக் கடமைகள் - உள் மற்றும் வெளியளவில் - நிர்ணயிக்கப்படுகின்றன. அவர்கள் தனிப்பட்ட நபர்களை, ஆன்மீக மேல் தளங்களை நோக்கி 'திசை திருப்பி' விடமுடியுமே தவிர, இறைநிலையை வழங்க முடியாது. ஆனால், அவர்களின் சகவாசம், சொற்பொழிவு, வாழ்த்துகள் மூலமாக உலக மக்கள் பெரும் பயனை அடையலாம். அவர்கள் சத்குருக்களின் இரகசிய சந்திப்புகளிலும் பங்கெடுக்க முடியும். அவர்களுக்கு வட்ட அமைப்பு

**கிடையாது; அது சத்குருக்கள் மற்றும் அவதார புருஷர்களுக்கு மட்டுமே உரித்தானது.**

**ஆன்மீக மேல் நிலையிருந்து கீழுலகுக்குக் கொண்டு வருவதில் குருநாதர்களின் பணி மிகவும் கடினமாக இருப்பதன் ஒரு காரணம் என்னவெனில், கண்களை உள்நோக்கித் திருப்பும் வேளையில், மனித உடலில் சாதாரணமாக கீழ் நோக்கி நிகழும் இரத்த ஓட்டத்தை மேல் நோக்கித் திருப்புவது அவசியம். கீழ் நோக்கி நிகழும் இந்தப் பயணம்** (சூட்சும தளத்திலிருந்து பௌதீக தளத்திற்கு மேற்கொள்ளும் பயணம்) **இதற்குப் பெருந்தடையாக இருப்பதால் கவனமாக செயல்பட வேண்டியது அவசியம்; இத்தருணத்தில் பௌதீக உடலைத் துறக்கவும் நேரும்.**

சோட்டா பாபா, இரண்டு மணி நேரம் பாபாவின் அருகாமையில் இருந்தான்; அதைத் தொடர்ந்து சாதாரண மனநிலையில் காணப்பட்டான்.

1928, ஜனவரி 25ஆம் நாள், சோட்டா பாபா, ராஜாராம் இருவருக்கும் மெஹர் பாபா வெண்ணிற முழு நீள சட்டையை அணிய கொடுத்து, அவரது சமாதி நிலத்தடியில் அமரவும் இடமளித்தார். பாபா அமர்ந்திருந்த இடம் தனியாகத் திரையால் மறைக்கப்பட்டிருந்தது. சிறப்பு சலுகையாக, சோட்டா பாபாவிற்கு அங்கே தூங்கவும் உரிமை வழங்கப்பட்டது. (பாபாவின் நெருங்கிய மண்டலி குஸ்தாஜிக்கு கூட இதுபோன்ற உரிமை அளிக்கப்படவில்லை, பாபா தூங்கும் அறையின் வெளியேதான் எப்போதும் தூங்குவது வழக்கம்). மேலும், சோட்டா பாபாவிற்கு, பாபா பயன்படுத்திய ஒரு ஜோடி உடையும், ஒரு போர்வையும் வழங்கப்பட்டது. அந்தப் போர்வையை சோட்டா பாபா தலைப்பாகையாகக் கட்டிக் கொண்டான். இரவும் பகலும் அவன் பாபாவின் அருகிலேயே இருந்தான். அதைத் தொடர்ந்து, ராஜாராம், லோபாஜி இருவரும் சமாதியின் கீழறையில் அமர அனுமதிக்கப்பட்டார்கள். ராவ்ஸாஹேபைத் தவிர வேறு எவரும் புதிதாக அமைக்கப்பட்ட அந்த இடத்தில் நுழையக்கூடாது எனக் கண்டிப்பான கட்டளை இடப்பட்டிருந்தது; பெஹராம், புவாஸாஹேப், பெண்டு மூவரும் குறிப்பிட்ட வேலைகளுக்காக அழைத்தால் மட்டுமே உள்ளே சென்றனர்.

அன்று காலை வேளையில், பாபாவின் எழுத்துப்பலகையை வாசிக்க முடிகிறதா என்று கேட்டதற்கு, சோட்டா பாபா "ஆமாம்" என்று பதிலளித்தான்.

பாபா அவனிடம், **"எழுத்துப்பலகையை வாசிக்கும்போது என்னை நீ பார்ப்பதுண்டா?"** என்று கேட்டார்.

"ஆமாம், இந்த சாதாரண கண்களால் இதர பொருட்களையும், ஆனால், அதேசமயம் என்னுடைய அகக்கண்களால் உங்களையும் பார்க்கிறேன். நான் பிறரைப் பார்க்கும்போது அவர்களை அடையாளம் கண்டுகொண்டாலும், அதே கணத்தில் உங்களையும் அவர்களிடத்தில் பார்க்கிறேன். உங்களை நான் இடைவிடாமல் எந்நேரமும், அனைத்திலும், தூங்கும்போதும் கூடப் பார்க்கிறேன். பல நாட்களாக என்னால் தூங்கமுடியவில்லை, ஆனால்,

நேற்றிரவு நான் தூங்கும்போது என் மூடிய கண்களுக்குள்ளும் என்னால் உங்களைப் பார்க்க முடிந்தது."

**"உனக்கு எதாவது ஆசைகளோ அல்லது எண்ணங்களோ உள்ளனவா?"**

"அப்படி எதுவுமே இல்லை; எப்போதும் உங்களையே பார்க்கவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே!" என்று பதிலளித்தான்.

ஆஷ்ரமத்தில் இருந்த பல சிறுவர்களில் ராஜாராமும் இடைவிடாமல், தொடர்ந்து பாபாவைப் பார்க்க முடிந்தது, ஆனால், வேறு எவரையும் அவனால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. பெண்டு அவனிடம், அவன் (ராஜாராம்) யாரென்று அவனுக்குத் தெரிகிறதா என்று கேட்டதற்கு, அவன் "பாபா" என்று பதிலளித்து, பெண்டுவை அரவணைத்தான் ராஜாராம், பாபாவுடன் இருக்கும்போது, அவரது பாதங்களைப் பற்றிக்கொண்டு தொடர்ந்து 15 நிமிடங்கள் அழுதான்.

மெஹராபாத் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்த 'போர்கர்' (BHORKAR) வாரத்தில் ஒருமுறை பாபாவின் தரிசனத்திற்காக வருவது வழக்கம். இம்முறை வந்தவர் இரண்டு சிறுவர்களின் நிலையைக் கண்டு மிகவும் வியப்படைந்தார். புவாஸாஹேப், ராவ்ஸாஹேப் இருவரும் சோட்டா பாபாவை அடிபணிந்து வணங்கினர்; ஆச்சரியம் என்னவெனில், இதைக்கண்டு பாபா அதிருப்தி அடையவில்லை, இருப்பினும் '**அவ்வாறு மீண்டும் செய்யவேண்டாம்**' என்று இருவருக்கும் கூறினார்.

அடுத்த நாள், புவாஸாஹேப், ராவ்ஸாஹேப் இருவரையும் பாபா சந்தித்து, அவரின் மீது உண்மையான அன்பை வெளிப்படுத்தி, நன்னடத்தை மற்றும் ஆன்மீகப் போக்குகளில் சிறந்து விளங்கும் சிறுவர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்து விருப்பம் தெரிவித்தார்.

இருபது சிறுவர்களின் பெயர்கள் காகிதத்தில் குறிக்கப்பட்டன. இவர்கள் 20 பேரும் பாபாவுடன் இருக்க வேண்டும் எனவும், எஞ்சிய அனைத்து மாணவர்களும் வழக்கம்போலத் தவறாமல் பள்ளிக்கூடம் சென்று, அவர்களது நிலையான அட்டவணைப்படி படிப்பு, விளையாட்டு, தியானம் இவற்றில் ஒழுங்காக ஈடுபடவேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. படிப்பு, முன்பு போலவே மிகவும் கண்டிப்புடனும், அதைப் புறக்கணிப்பவர்களுக்குத் தண்டனையும் வழங்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 20 சிறுவர்களுக்கும் நீர்தொட்டியின் கீழமைந்த மூன்றாவது அறையில் தனியாக இடம் ஒதுக்கி, பாபாவின் அருகில் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட வேளையில் இருக்கவும் அனுமதி வழங்கப்பட்டது.

மண்டலியில், குறிப்பாக ராவ்ஸாஹேப் மட்டும் பாபாவின் குடிலில் சிறுவர்களுடன் இருக்க அனுமதிக்கப்பட்டார். ராவ்ஸாஹேபின் சேவையில் மகிழ்ச்சியடைந்த பாபா, அவரிடம் பாபாவின் சமாதியின் உட்பக்கம், பாபா மற்றும் இதர மூன்று சிறுவர்களுடன் அமர அனுமதித்தார். ஒரு தருணத்தில்

ராஜாராம், பாபாவின் பௌதீக வடிவம் அனைத்திலும் தென்படுவதைக் கண்டு மெய்மறந்த ஆனந்த நிலையை அனுபவித்தான். வசந்த் எனும் சிறுவனும் நாளுக்குநாள் மணிக்கணக்காக தொடர்ந்து அழுது கொண்டிருந்ததை, பாபாவால் மட்டுமே ஆறுதல்படுத்த முடிந்தது.

'எஸ்பந்தியார் வெஸலி', மற்றுமொரு பார்சி சிறுவன் இருவரையும் பாபா, ஜனவரி 26ஆம் நாளிலிருந்து பாபாவின் குடிலில், அவரருகில் இருக்க அனுமதித்தார். அவர்களைப் பற்றி பாபா, **"இருவரும் எனக்கு மிகவும் பிரியமானவர்கள். எஸ்பந்தியார் பிரேம் ஆஷ்ரமத்திலிருந்து வெளிவரும் முதல் மாணவனாக இருந்து பிறருக்கு வழிகாட்டுவான்; அந்த கௌரவம் அவனையே சேரும்"** என்று குறிப்பிட்டார்.

1928 ஜனவரி 27ஆம் நாள், 'கெ.ஜெ.பிளீடர்', வயது 28, ஸொராஸ்டிரிய வம்சத்தைச் சார்ந்தவர், முதல்முறையாக பாபாவை சந்திக்க மெஹராபாத் வந்தார். சத்குரு உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாறு பிளீடரை வெகுவாகக் கவர்ந்தது; பின்னர் உபாஸனி மஹாராஜ், நாராயண் மஹாராஜ், பாபாஜான் மூவரையும் சந்தித்தார். 'பிளீடர்' என்று அனைவராலும் அழைக்கப்பட்ட அவர் திருமணமாகாதவர், மும்பையில் ஒரு வங்கியில் பணிபுரிந்து வந்தார்; மெஹராபாத்தில் தங்க விரும்புவதை வெளிப்படையாகத் தெரிவித்தார். பாபா, அதற்கு மறுப்புத் தெரிவித்து திருப்பி அனுப்பி வைத்தார்.

அன்று மதியம் இரண்டு மணிக்கு பெண்டு, பாபாவை நீராட்டினார். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, ருஸ்தம், சாஞ்சி, பாதிரி மூவரையும் பாபா தனது குடிலுக்கு வரக்கூறி, புவாஸாஹேப், ராவ்ஸாஹேப் இருவரையும் குடிலுக்குள் அழைத்துச் சென்று தனியாக உரையாடினார். அவ்வேளையில், சோட்டா பாபா, மெஹர் பாபாவின் அருகில் அமர்ந்திருந்தான்; திடீரென, பாபா சில கேள்விகளை எழுத்துப்பலகை மூலமாகக் கேட்கத் தொடங்கினார்:

**"உனக்கு மனம் என்று ஒன்று உள்ளதா?"** பாபா வினவினார்.

"இல்லை, அது மறைந்துவிட்டது" சோட்டா பாபா பதிலளித்தான்.

**"தற்காலிகமாகவா?"**

"இல்லை, எல்லா காலத்திற்கும்."

**"உனக்கு ஆசைகள் உள்ளனவா?"**

"இல்லை, அப்படி எதுவும் இல்லை."

**"நீ என்னை எங்கும் பார்க்கிறாயா?"**

"எல்லா இடங்களிலும் - மிக மிகச்சிறிய பொருட்களிலும்கூட."

**"உடலில் ஏதேனும் இன்பம் அல்லது வலியை நீ உணர்கிறாயா?"**

"இல்லை, உடலைப் பற்றிய எவ்வித உணர்வும் இல்லை. இருந்தாலும் மறைந்தாலும் எனக்கு அதைப் பற்றி எந்தக் கவலையும் கிடையாது. இதனால் என்னில் வித்தியாசம் எதுவும் இல்லை. நான் தூங்கும்போதும், விழித்திருக்கும்

போதும், எல்லா நிலையிலும் - எப்போதும் என்னால் உங்களைப் பார்க்கமுடிகிறது."

மெஹர் பாபா, தொடர்ந்து சோட்டா பாபாவிடம் கேட்டார்,

**"நீ என்னை எப்போதும் பார்க்கிறாயா?"**

"எப்போதும்! ஒரு நொடி கூட இடைவெளி இல்லாமல்" சோட்டா பாபா கூறினான்.

**"எவ்வளவு காலம் நீ என்னைக் காண்பாய்?"**

"என்றென்றும், எப்போதும்."

**"நீ மகிழ்ச்சியாக இருக்கிறாயா?"**

"ஆமாம், எல்லையில்லா ஆனந்தத்தில் உள்ளேன்."

**"எவ்வளவு காலம் இந்த ஆனந்த நிலையை நீ அனுபவிப்பாய்?"**

"நீங்கள் (பாபா) இருப்பது வரை - எக்காலமும்! நீங்கள் எங்கும், எப்போதும் இருக்கிறீர்களேயானால், நானும் எங்கும், எப்போதும் உங்களுடன் இருக்கிறேன், ஏனெனில் நான் எப்போதும் - 24 மணி நேரமும் உங்களை மட்டுமே பார்க்கிறேன்." சோட்டா பாபா பதிலளித்தான். தொடர்ந்து பாபா,

**"வேறு எதையாவது உன்னால் பார்க்க முடியுமா?"**

"ஸ்ரீயைத் (பாபாவை) தவிர, பார்க்க வேறு என்ன இருக்கிறது? மிகச்சிறிய பொருட்களிலும் பாபாவைத் தவிர வேறு எதுவும் இல்லை."

**"உன்னைத் தனிமையில் விட்டுவிட்டால் நீ எங்குச் செல்வாய்?"**

"நான் எப்போது போகட்டும்? நான் எங்காயினும் போவேன், நான் ஸ்ரீயுடன் எங்கும் இருக்கிறேன்."

**"நீ அங்குமிங்கும் அலையும்போதும், வந்து போகும்போதும், உன் அறையிலிருந்து இங்கு வரும்போதும் என்ன உணர்கிறாய்?"**

"எதுவுமே இல்லை. உணர்வே இல்லாத நிலை - அனைத்தும் தானாகவே நிகழ்கிறது."

மெஹர் பாபா, சோட்டா பாபாவை மெதுவாக வருடிக்கொடுத்து, பக்கத்து அறைக்குள் அழைத்துச் சென்றார். மண்டலியை நோக்கி பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"அவனுக்கு எந்த விதமான உணர்வும் இல்லை, இங்கிருந்து பக்கத்து அறைக்குச் செல்லும் நகர்வுகளைப் பற்றிய உணர்வு கூட அறவே இல்லை.** இதைத்தான் '**ஃபனா**' - அதாவது **'ஆன்மீக நிர்மூலமாக்கல்**' என்று கூறுவது. **சுருக்கமாகச் சொன்னால், அவன் இந்த உடல் அல்ல! மனமும் அல்ல! அவன் ஆத்மாக்களில் பரமாத்மாவை மட்டுமே காண்கிறான்."**

மெஹர் பாபா, இதைக் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்:

**ஃபனாவில் இரண்டு நிலைகள் உள்ளன: ஒன்று உணர்வற்ற மயக்க நிலை - ராஜாராமைப் பொறுத்தவரையில், அவனுக்கு இருப்பது அனைத்தும் தெய்வீகப் பார்வை ஒன்றுதான், வேறு எதுவும் இல்லை. அவன் என்னைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை. அந்தத் தெய்வீகப் பார்வையைத் தவிர அவனுக்கு உடல், உலகம் மற்றும் அதிலுள்ள அனைத்து**

பொருட்களைப் பற்றிய எந்த உணர்வும் கிடையாது. இது, அனைத்திலும் இறைவனைக் காணும் ஒரே காட்சி.

ராஜாராம், அப்துல்லாவை (சோட்டா பாபா) போலல்லாமல் ஒரு வித்தியாசமான நிலையில் இருக்கிறான்: ராஜாராம் ஒன்றைப் பார்க்கும் வேளையில், அவனுக்கு உடல் மற்றும் உலகைப் பற்றிய உணர்வு கிடையாது. அவற்றை ஒரே நேரத்தில் அவனால் பார்க்க இயலாது, ஏனெனில் அவனுள் மனம் இன்னமும் உள்ளது. மனம் அவனைவிட்டு இதுவரை மறையவில்லை. மேலும், அதிகமாக அவன் தெய்வீக ஒளியைக் காண்பதில் மூழ்கியிருந்தாலும், அவனுடன் பேசும் வேளையில் மனம், தெய்வீக ஒளியிலிருந்து தனது கவனத்தைத் திருப்பி, உலகின் பிற பொருட்களில் பார்வையைச் செலுத்தும்போது, தெய்வீக ஒளியை அவனால் காணமுடியாது. ஆனால், அவன் உடனடியாக உலக எண்ணங்களிலிருந்து மனதைத் திருப்பி அந்தத் தெய்வீக ஒளியை அவனுடைய விருப்பத்திற்கிணங்க பார்க்க முடியும்.

ஃபனாவின் இரண்டாவது நிலை அப்துல்லாவின் நிலையைப் போன்றது, அதில் அவனுடைய மனம் முழுமையாக அழிக்கப்பட்டு அனைத்திலும் தெய்வீக ஒளியைக் காண்கிறான், ஆனால், அதிலிருக்கும் ஒரே வேறுபாடு என்னவெனில், தீர்க்கதரிசன பார்வை போன்றவற்றை இது அங்கீகரிக்கிறது.

ஆனால், இதில் மறுபடியும் அவன் என்னையே (பாபா) தெய்வீக ஒளியாகப் பார்க்கிறான். எனவே, அவனுடைய நிலை, இறைநிலையை அடைந்த ஆத்மாவைப் போல் - அதாவது அவன் கடவுளை மட்டுமே பார்க்க முடியும், இறைநிலையை உணர்ந்ததாக ஆகாது. அவன் கடவுளைக் காண்கிறான், அதே வேளையில் இறைநிலையை அடைந்த ஒருவர், அவரையே அனைத்திலும் காண்கிறார்.

அதுபோல, பக்கா (BAQA) நிலை (இறை உணர்வில் நிரந்தரமாக ஆழ்ந்திருப்பது) இரண்டு வகைப்படும் - உணர்வற்ற நிலையும், உணர்வு நிலையும் - உணர்வற்ற நிலையில் இருப்பவர் 'மஜ்ஜூப்' என்றும், உணர்வு நிலையில் இருப்பவர் 'ஸலிக்' என்றும் அழைக்கப்படுகிறார். இந்த நிலை, 'பார்ப்பது' மட்டுமின்றி அனைத்துடனும் 'ஒன்றிய' நிலை.

சோட்டா பாபா மற்றும் ராஜாராம் இருவருக்கும் இடையேயுள்ள வேறுபாடு அவர்களால் உருவாக்கப்பட்டதல்ல; அது பாபா அவராகவே இருவருக்கும் வழங்கிய வேறு வேறு நிலைகள். 'ராஜாராமின் அதீத பக்தியும், தீவிரமான அன்பும் அவனுக்கு இந்த நிலையைப் பரிசாக ஈட்டியது. அவன் இப்போது உலக அக்கறை மற்றும் கவலைகளிலிருந்து விடுபட்டுள்ளான். அவன் தனது உடலைத் துறக்கும்போது, பிறப்பு, இறப்பு எனும் சுழற்சிகளிலிருந்து விடுவிக்கப்பட்டு என்னில் இருப்பான்' என்று பாபா கூறினார்.

அடுத்த இரண்டு மாதங்களில், சோட்டா பாபா, அவனது உடலை இழக்கும் அபாயத்தில் இருந்தான் என்பதை, பாபா மறுபடியும் எடுத்துக்கூறினார். அவனை ஏன் பாபா பாதுகாக்கவில்லை என்று வினவியபோது, "**ஆன்மீக உந்துதலை அவனுக்கு அளித்த பின்பு, சில காரணங்களுக்காக நான் இது விஷயத்தில்** (உள்ளளவில்) **தலையிட முடியாது**" என்று பாபா விளக்கமளித்தார். "**இருப்பினும், அனைத்து வெளியளவிலான நடவடிக்கைகளையும் எடுக்க முடியும் என்பதால் அவனது உடலைப் பாதுகாக்கும் அனைத்து வழிகளும் கையாளப்பட்டுள்ளன**" என்றார்.

"அப்துல்லாவுக்கு மனம் இல்லாத நிலையில் அவனால் எப்படி வாசிக்க, பதிலளிக்க மற்றும் கழிவறைக்குச் செல்லமுடிகிறது?" என்று கூட்டத்தில் ஒருவர் கேட்டதற்கு, பாபா, "**நான் அவனில் இருந்து அனைத்தையும் செய்கிறேன்**" என்று பதிலளித்தார். மேலும் சோட்டா பாபாவைப் பற்றி விளக்கமளித்தார்:

**மனம் முற்றிலும் மறைந்துவிட்டது. அவனுக்கு மனம் இல்லாததால் ஆசைகளும் இல்லை. பௌதீக உடல் இருந்தாலும் அதைப் பற்றிய எந்த உணர்வும் இல்லை. எதையேனும் கேட்கும்போது மட்டும் பேசுகிறான். நாம் எதுவும் கேட்காதபோது அவனாக ஒருபோதும் பேசுவதில்லை. அவனது உடலைப் பொறுத்தவரையில், தூக்கமின்றி 24 மணிநேரம் அமர்ந்தே இருந்தாலும், அதை அவன் கண்டுகொள்வதில்லை. நான் கூட அப்படி இருந்தால் சோர்வடைந்து விடுவேன், ஆனால், அவனுக்கு அது ஒரு பொருட்டல்ல, ஏனெனில் அவனுக்கு உணர்வு என்பதே இல்லை, அதே வேளையில், அதை அடைய விரும்பவும் இல்லை. ஆயிரம் பேர் அவனை தரிசிக்க வந்தாலும் அல்லது தனியாக ஒரு அறையில் அடைத்து வைத்தாலும் அவனுக்கு அதைப் பற்றிய எந்த சிந்தனையும் கிடையாது; அவனில் அது எந்த வேறுபாட்டையும் உண்டுபண்ணாது. அவனுடைய நிலை அத்தகைய சரியான, சிறந்த நிலையாகும். வேறு எந்த சிறுவர்களும் அவனைப் போல் இல்லை. என்னுடைய வட்டத்து சீடர்களின் முன்னேற்றத்திற்காக, அவன் உயிரோடு இருந்தால் எனது பணியில் பெரும் உதவியாக இருப்பான்.**

அடுத்த நாள் மெமோ, ஆதி ஜூனியரின் உடல்நிலை சரியில்லை என அறிந்து மெஹராபாத்திற்கு வந்தார். பாபாவின் சகோதரர்களில் ஒருவரையாவது தன்னுடன் வீட்டிற்கு அனுப்பி வைக்குமாறும், அவர்களில் ஒருவர் திருமணம் செய்துகொண்டு உடனிருந்தால் வயதான காலத்தில் தந்தை ஷெரியாரையும், தன்னையும் கவனிக்க வசதியாக இருக்குமென எடுத்துரைத்து, பாபாவுடன் நீண்டநேரம் விவாதத்தில் ஈடுபட்டார். பாபா எந்த பதிலும் அளிக்காததால் அன்று மாலை மெமோ திரும்பிச் சென்றார்.

அதே நாள், மற்றுமொரு சிறுவன் 'ராமாஜி' அழுதுகொண்டே பாபாவிடம் வந்து, '**சிறிதளவேனும் நான் கண்டுகொண்டிருந்த அந்த தெய்வீக ஒளி இப்போது மறைந்து விட்டது, ஏன் என்னிடமிருந்து அதைப் பறித்துவிட்டீர்கள்?**' என்று வருத்தத்தோடு மன்றாடினான்.

பாபா உடனே ராமாஜியின் தலையை தனது மடியில் சாய்த்து, பின்பு தலையை உயர்த்தி அவரது விரல்களை அவன் நெற்றியில் வைத்து, "**இப்போது நீ அதைப் பார்க்கிறாயா?**" என்று கேட்டார்.

"ஆமாம்..ஆமாம்.." என்று ராமாஜி உணர்ச்சிப் பொங்க பதிலளித்தான். ராமாஜியின் மூன்றாவது கண் சிறிதளவில் திறக்கும் அனுபவத்தை அவன் அடையத் தொடங்கியிருப்பதாக, பாபா விளக்கமளித்தார்.

அதே நாள், சோட்டா பாபாவிடம் அவனது தற்போதைய நிலையைக் குறித்து பாபா வினவினார். அவன் தனது உணர்வை இழக்கும் தருணத்தில் '**நினைவில் இருந்தது என்ன?**' என்று கேட்டதற்கு, சோட்டா பாபா, 'ஸ்ரீ பாபா, எனது உடலில் நுழைவதைப் பார்த்ததாக ஞாபகம்' என்று கூறினான். அவனை, சூட்சும தளத்திலிருந்து சாதாரண மனித உணர்வுக்குக் கொண்டுவந்த வேளையில் (எனிமா கொடுத்து), அவனிடமிருந்து ஸ்ரீபாபா இறையின்பத்தைப் பறித்தது போல் உணர்ந்ததாக எடுத்துரைத்தான்.

பல வருடங்களுக்குப் பிறகு சோட்டா பாபா, அவரை, மெஹர் பாபா ஆறாவது ஆன்மீகத் தளத்திற்கு எடுத்துச் சென்று, அளித்த அனுபவத்தைப் பற்றி முதன் முறையாக எடுத்துரைத்தார்:

ஒரு நாள், ஆன்மீக சொற்பொழிவு நிறைவுற்ற அவ்வேளையில், பாபா, ஒவ்வொரு சிறுவர்களின் முகத்தையும் கூர்மையாக உற்றுநோக்கி, இவ்வாறு குறிப்பிட்டார்: "**உங்களில் தகுதி படைத்தவர்களை நான் அன்பின் அதிபதியின் பக்கம் ஈர்த்து, வாழ்க்கையின் அமுதத்தை அவர்களுக்கு வழங்குவேன். குழந்தைகளே! இறைவன் ஒருவனே, அவனே உண்மையானவன்; இதர அனைத்தும் பயனற்றவை.**" அவருடைய அழகு முகத்தை உற்றுநோக்க சக்தியில்லாமல், நான் எனது கண்களைத் தாழ்த்திய போதும், பாபா, அவருடைய பார்வையை என் மீது பதித்த வண்ணம், இவ்வாறு குறிப்பிட்டார்: "**தொடர்ந்து விடாமுயற்சியுடன் இருங்கள். உங்கள் உலோக கலவையிலிருந்து நான் தூய தங்கத்தை உருவாக்குவேன்.**"

ஸ்ரீபாபாவின் அந்த வார்த்தைகள் என்னில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி, அன்று இரவிலும், அடுத்த நாளும் என்னைப் பெரும் கலக்கத்தில் ஆழ்த்தியது. மைதானத்தில் ஹாக்கி விளையாடும் வேளையில் நான் நிற்கும், ஓடும் விதம் மற்றும் எனது முகத்தின் நிறம் மாறும் தோற்றம், எனது நண்பர்களுக்குப் புரியாத புதிராக இருந்தது.

மதிய உணவின்போது, ஓரிரு வாய் உணவு உண்டதும், என்னுள் ஒரு பெரிய மாற்றம் ஆட்கொண்டதை உணர்ந்தேன். அசாதரணமான வெப்பமும் இருளும் என்னை சூழ்வது போலவும் உணரத் தொடங்கினேன் - அனைத்து

பொருட்களும் உண்மையில் என்னைவிட்டு மறையத் தொடங்கின. திடீரென, சற்றும் எதிர்பாராமல், என் ஆழ்மனதிலிருந்து எழுந்த அழுகையால் நான் கதற ஆரம்பித்தேன். சில நிமிடங்களில், என்னைச் சுற்றியுள்ள அனைவரைப் பற்றிய எல்லா நினைவுகளையும் நான் இழந்து, எதையும் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இருந்தேன். சிறிது நேரத்தில் எனது நினைவை திரும்பப் பெற்று, கதறத் தொடங்கினேன், "நான் வெகுதூரத்தில் இருக்கிறேன். அவர் எங்கே? நான் எங்கே?"

அவ்வேளையில், ஸ்ரீபாபா எனக்கு அளித்த வாக்குறுதியை புவாஸாஹேப் நினைவுபடுத்தினார். ஆனால், தசைகள் நடுங்க, பெருமூச்சு விட்ட வண்ணம் தானாகவே தோன்றிய என் அழுகை, மேலும் மேலும் உரத்த குரலில் வெளிப்பட்டது. சிறிது நேரம் அமைதியாக இருந்து, மறுபடியும் அழ ஆரம்பித்தேன்.

ஏறக்குறைய ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, மறுபடியும் அமைதியானேன். தூக்கத்திற்கும், விழிப்புக்கும் இடையேயுள்ள இனம்புரியாத நிலையை உணர்ந்தேன்; அதேவேளையில் 'பரமானந்த நிலை' என்னை ஆட்கொண்டது. நான் எனது தலையை உயர்த்தியதும், பிரியமான பாபா எனக்கெதிரில் அமர்ந்திருப்பதைக் கண்டேன். அவர் முன்னிலையில், அவருடைய பரிசுத்தமான முகம் என்னை ஆட்டிப்படைத்து மறுபடியும் கண்கலங்கச் செய்ததும், எதையும் நினைத்துப் பார்க்காமல் அவர் பாதங்களில் விழுந்து வணங்கினேன். (இம்முறை என்னுடைய அழுகை ஸ்ரீபாபாவிற்குத் தொந்தரவாக இருப்பதை எண்ணி அழுதேன்). உடனே, கவலை தோய்ந்த முகத்துடன் அவர் என்னைப் பார்த்ததும், மயக்கமானேன் - மறதிக்கடலில் மறைந்து போனேன்.

சுமார் ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர், அரை நினைவில் அன்பிற்குரியவரின் கைகளிலிருந்து, அவர் விருப்பத்திற்கிணங்க ஒரு டம்ளர் பால் வாங்கி அருந்தினேன். நான் ஸ்ரீபாபா முன்பாக சிலை போல் அசையாமல் அமர்ந்து, அவரது நிகரற்ற அழகைக் கண்டு திகைத்துப் போனேன். எனது கண்கள் நீர் ததும்பி ஈரமாக இருந்தன, என் இதயம், தீப்பிழம்புகளில் எரிந்து கொண்டிருக்க இறையன்பைப் பற்றிய இந்த வரிகளைப் பாடிக்கொண்டிருந்தது.

எனதன்பே, என்னை நான் இழந்துவிட்டேன்,
இன்னும் என்னை நான் அதிகமாக இழக்க விரும்புகிறேன்.
"உன் போன்ற இறை போதையை நாடுகிறேன்"
இதை நான் உனது கண்களிடம் கூறுகிறேன்,

எனக்கு மகுடம் வேண்டாம், சிம்மாசனமும் வேண்டாம்;
உனது சேவையில் நான் ஒரு தூசாக மாற மட்டும் வேண்டும்.
எனக்குக் கிட்டிய அழகான இந்தத் தெய்வீக உருவம் வேறு
யாருக்குத்தான் கிட்டியது?
தேனினும் சுவையான இந்த சந்திரன் வேறு

யாருக்குத்தான் எட்டியது?

உனது முகத்தோற்றம் இந்த நிலத்தை அதிரவைக்கும்,
இறுதி தீர்ப்பு நாள் போலவே அதுவும் அறுதியாக நடக்கும்.
என்றாலும் உன் அழகின் சொர்க்கத்தில்
யார்தான் இருப்பர், நரகத்தின் நெருப்பு என்ற பயத்தில்?

என் இதயம் இறைவனான பாபாவைக் கெஞ்சிக் கேட்டது:
என் ஆத்மாவின் உயிரே, நீ இல்லையெனில்
அந்த ஆனந்த நிலை என்னை மகிழ வைக்காது
பரவசம் எனக்கு போதையை அளிக்காது.

நீயே எனது வாழ்க்கை; நீயின்றி
எப்படி வாழ்வேன் எனக்குத் தெரியாது.
நீயே எனது கண்கள்; அவையின்றி எப்படிக் காண்பேன்,
அதுவும் என்னால் முடியாது.

காலப்போக்கில் பல வாரங்கள் கடந்து சென்றன, என் அன்பிற்குரியவர், எனது மேன்மைமிகு குருநாதர் அவர்களின் அன்பு மேலும் வெளிப்பட்டு அனலாக எரிந்தது. அதன் அதீத தாக்கத்தால் சாதாரண செயல்களில் ஈடுபடும் வேளையிலும் - உண்ணும்போதும், நீராடும் போதும் கூட - ஸ்ரீபாபாவைப் பற்றிய சிந்தனைகளில் மூழ்கிவிடுவேன்; அவரை மறந்த கணங்களே இல்லை எனலாம். இவ்வாறு அவரது அன்பின் போதையில் அகப்பட்டு, பல வாரங்கள் கழிந்தன. அதன் பின்னர், 1927 டிசம்பர் மாதத்தில் உணவு உண்ணும் ஆசை, இறுதியில், என்னைவிட்டு விலகியது, என் உடல் மற்றும் உடைகளின் பராமரிப்பை நான் கைவிட்ட நிலையில், சுற்றுப்புற சூழ்நிலைகளையும் முற்றிலும் மறந்துவிட்டேன்; தியானத்தில் ஆழ்ந்து எனது பிரியமான ஸ்ரீபாபாவின் அழகு முகத்தை மட்டும் பார்க்க ஆசைப்பட்டேன். அவருடைய பெயர் ஒன்றுதான் எனது தியானமாகவும், அவரைப் பற்றிய சிந்தனைகள் மட்டுமே இறைவனின் ஞாபகமாகவும் இருந்தன.

வழக்கம் போல் ஒருநாள் இரவு, மண்டலியுடன் சிறுவர்களும் ஸ்ரீபாபாவைச் சுற்றி அமர்ந்து, அவருடைய சொற்பொழிவில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தனர். அவ்வேளையில் என்னில் ஒரு பெரிய மாற்றம் தென்படவே, சூரிய கதிர்களையும் மிஞ்சும் அளவுக்கு, தெய்வீக ஒளிக்கதிர்கள் என்னை சூழ்ந்தன. கூக்குரலிட்டு ஸ்ரீபாபாவை அழைத்ததும் நான் உணர்விழந்து மயக்கமானேன். ஐந்து மணி நேரம் அந்நிலையிலிருந்த பின்னர், எனது மயக்க நிலை திரும்பியதும், என்னை ஸ்ரீபாபாவிடம் அழைத்துச் சென்றனர்; அவர் என்னை ஆறுதல்படுத்தி, தூங்குமாறு கட்டளையிட்டார்.

அந்த அனுபவத்திற்குப் பிறகு, ஸ்ரீபாபாவின் முன்னிலையில், எப்போது இருக்க நேர்ந்தாலும், முதலில் நான் அவரது பாதங்களில் முத்தமிட்டேன்;

எவ்வளவுதான் முத்தங்கள் பதித்து, தலையை வைத்து வணங்கினாலும் அது கொழுந்துவிட்டு எரியும் என் இதயத்திற்கு ஆறுதலாகவோ, அல்லது கொந்தளிக்கும் உள்ளுணர்வுகளுக்கு உதவியாகவோ இருக்காது. ஸ்ரீபாபாவின் ஒரே சிந்தனையில் நான் ஆழ்ந்திருந்தேன்.

தியானம், சிந்தனை எதுவுமில்லாத நேரத்தில், என் ஆத்மா அமைதியையும் ஆனந்தத்தையும் அனுபவித்துக் கொண்டிருந்தது, அதே வேளையில் அவருடைய தூய்மையான, உன்னதமான முகத்தில் எனது பார்வை பதிந்திருந்தது.

இந்த அனுபவத்தைத் தொடர்ந்து சிறிது நேரத்தில், என் நினைவு முழுமையாகத் திரும்பியது. இயற்கையான இந்த தியானத்தில் நான் மூழ்கும் போது, உணவை அல்லது நான் அமர்ந்திருப்பது வெயிலிலா மழையிலா என்பதைப் பற்றியும் கண்டுகொள்வதில்லை. பெரும்பாலும் என்னுடைய நாட்கள் தொடர்ந்து அழுகையிலேயே கழிந்தன.

1928 ஜனவரி மாதத்தில் ஒரு நாள் எனது ஆழ்மன நிலை, தீவிர மாற்றம் கண்டது. ஸ்ரீபாபாவின் அருகில் அமர்ந்து, சூரிய அஸ்தமனத்தில் கவனம் செலுத்தியபோது, நான் திடீரெனக் கதறி அழ ஆரம்பித்தேன்.

என்னுடைய சாதாரண விழிகள் மூடி, எனது மூன்றாவது கண் திறந்தது. பிரகாசமான இறை ஒளியில் நான் என்னுடைய இதயம், மார்பு, கை கால்கள், நரம்புகள், தோல் மற்றும் எலும்புகள் அனைத்தும் உணர்ச்சிபொங்க செயல்படுவதையும், மேலும் என் இதயத்தின் ஒவ்வொரு மூலையையும் அது வெளிச்சமடையச் செய்ததையும் பார்த்தேன். அந்த இறை ஒளியின் பிரமிப்பில் இந்த உலகையும், அதிலுள்ள அனைத்தையும் நான் மறந்தேன்.

வெளியுலகம் மற்றும் என்னைச் சுற்றியுள்ளவர்களைப் பற்றி முற்றிலும் அறியாத நிலையில், தெய்வீக போதையில் ஐந்து நாட்கள் மயக்கமாக இருந்தேன். இவ்வேளையில், நான் இடைவிடாமல் ஸ்ரீபாபாவின் பிரகாசமான ஒளியையும், மகிமைமிக்க பார்வையைத் தவிர, வேறு எதையும் காணவில்லை. இப்பார்வையால் நான் ஆனந்தம் மற்றும் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தேன். இந்த ஐந்து நாட்களும் பிரியமான, மேன்மைமிகு குருநாதர் மெஹர் பாபாவின் தனித்துவமான இந்தப் பார்வையை, எனது ஆழ் இதயத்திலும், ஆத்மாவிலும் அனுபவபூர்வமாக ரசித்தேன். அவரது சிறப்புமிக்க முகத்தை தரிசனம் செய்யும் வேளையில் எனக்குள் ‘நீ புனிதமான இடத்தில் இருக்கிறாய்; உனது காலணிகளை கழற்றிவிடு’ என்ற குரலைக் கேட்டேன்.

இந்த உண்மைப்பொருளின் ஆனந்தமான பார்வையில், உலகின் உடைமைகள் மற்றும் ஆடம்பர பொருட்கள் அனைத்தும் உண்மையில் ஒரு கனவு போன்றது, மாயை என்பதை நான் புரிந்துகொண்டேன். உண்மையான குருநாதர் ஒருவரின் அரவணைப்பில் இருப்பது நித்திய சுதந்திரம் மட்டுமின்றி, பரிபூரண திருப்திக்கும் காரணம் என்பதை நான் உணர்ந்தேன்.

அவ்வேளையில், நான் ஆறாவது ஆன்மீகத் தளத்தை எட்டியுள்ளதாகவும், அப்போதுதான் 'சோட்டா பாபா' என்று பெயரிடப்பட்டதாகவும் பாபா மண்டலிக்கு எடுத்துரைத்தாகக் கேள்விப்பட்டேன்.

'ஆகா அலி' என்றழைக்கப்பட்ட மற்றுமொரு பிரேமாஷ்ரம சிறுவன், பாபாவின் பிரியமான மாணவர்களில் ஒருவன், அவனும் பாபாவின் தெய்வீகத் தன்மையை அனுபவபூர்வமாக உணர்ந்தான். இளம் வயதில் இருக்கும் இவனுக்கு ஆன்மீக இயல்பு, மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்ததோடு, பாபா மீதான அவனது அன்பு பாராட்டத்தக்கதாகவும், உண்மையிலேயே ஊக்கமூட்டுவதாகவும் இருந்தது. ஜனவரி இரண்டாவது வாரம் முதல், பாபா, **அலி**யிடமிருந்து தனியாக விலகியிருந்த வேளையில், அலி அவர் அருகில் இருப்பதையே விரும்பினான் என்பதையும் மண்டலி கவனித்தனர். பாபா அவனை அழைத்தாலும் ஒரே நிமிடத்தில் திருப்பி அனுப்பிவிடுவது வழக்கம். இதனால் அலி அமைதியிழந்து காணப்பட்டான்.

ஜனவரி 17ஆம் நாள் பாபா திரும்பத் திரும்ப, ஏறக்குறைய பத்து முறை, அலியை அழைத்தார், ஆனால், அப்போதும் ஒவ்வொரு முறையும் ஏதாவது காரணத்தைக் காட்டி, உடனடியாக அவனைத் திருப்பி அனுப்பி வந்தார். சற்று நேரத்தில் அலியின் உள்ளளவிலான கொந்தளிப்பைக் கண்டு, பாபா, இவ்வாறு கூறினார்: "**இறை போதையிலும் தலை, குருநாதரின் பாதங்களில் இருக்கவேண்டும்**."

1928 ஜனவரி 29ஆம் நாள், ஞாயிற்றுக்கிழமை, "**அலி, இப்போது நான் அவனைத் தீண்டும் நிலைக்குத் தயாராகிவிட்டான்**" என்று தெரிவித்தார்.

அன்று மாலையில், இதர சிறுவர்களின் முன்னிலையில் பாபா அலியை வேண்டுமென்றே இவ்வாறு விமர்சித்தார்: "**இந்நாட்களில் அலி அவனது படிப்பில் அதிக கவனம் செலுத்துகிறான்; என்னை மறந்து விட்டான். அவனது தந்தையிடம் எப்படி மறுபடியும் சென்று சேர்வது என்பதை மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கிறான்**."

பாபாவின் இந்த வார்த்தைகளைக் கேட்ட அலி, அவன் மீதிருந்த கட்டுப்பாட்டை இழந்தான்; இதயம் சுக்குநூறாக உடைவது போல் உணர்ந்து, கதறி அழத் தொடங்கினான். திக்குத் திசை தெரியாமல் அங்குமிங்கும் ஓடினான். பாபா, ராவ்ஸாஹேபிடம் அவனைப் பிடித்து வருமாறு கூறினார். பாபா அப்போது அவனைக் கைகளால் அரவணைத்து, வருடிக்கொடுத்து, தலையில் முத்தமிட்டு, ஆறுதல் படுத்தினார். அலி, அவனால் எதுவும் செய்யமுடியாமல், பல மணி நேரம் மனமுடைந்து கதறினான்.

இறுதியாக, பாபா, அவனது மார்பை இரண்டு, மூன்று முறை தனது தலையால் தொட்டு அரவணைத்தார். அலி உடனடியாக அமைதியாகி, தணிந்து, தூங்குவது போலத் தோற்றமளித்தான். பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு பாபா, ராவ்ஸாஹேபிடம் அவனை எழுப்ப முயற்சிக்குமாறு கூறினார், ஆனால், அலி அவனது கண்களைத் திறக்கவில்லை. அவனது கண்ணிமைகளைத்

திறந்தபோது கண்மணிகள் உயிரற்று தென்பட்டன. கேள்வி கேட்டபோது பதில் எதுவுமில்லை. பாபாவும் அவனைத் தட்டி எழுப்ப முயன்றபோது அசைவின்றி இருந்தான். அவனது தலையைத் தனது மார்போடு அணைத்து, பாபா, அவனது மூச்சு அலைபாய்வதை கவனித்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபாவின் சைகையை கவனித்த ராவ்ஸாஹேப், அலியிடம் வினவினார், "இப்போது நீ எப்படி உணர்கிறாய்?"

அலி வெகு தொலைவிலிருந்து பேசுவது போல மெதுவான குரலில், "மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்றான்.

ராவ்ஸாஹேப் கேட்டார், "நீ எதைப் பார்க்கிறாய்?"

"பாபா" அலி பதிலளித்தான்.

"எங்கே?" என்றதற்கு, "எங்கும்!" என்றான்.

பாபா அவனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, வேண்டியதை செய்ய ஒருவரை ஏற்பாடு செய்தார். அன்றிரவு பாபா, அவரது அறையின் மேல்நிலையில் அமர்ந்து அலியின் நிலையைப் பற்றி அடிக்கடி விசாரித்துக் கொண்டிருந்தார்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல, பாபா 20 சிறுவர்களைத் தேர்ந்தெடுத்து, நாள் முழுவதும் அவர் அறையில் இருக்கச் செய்தார். இதர மாணவர்களை வழக்கம் போலப் பள்ளிக்கூடம் சென்று காலந்தவறாமல் அட்டவணைப்படி அனைத்தையும் செய்யுமாறு கண்டிப்புடன் கேட்டுக்கொண்டார்.

பாதிரி மருத்துவமனையில் அலிக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து தந்தார். அடுத்த நாள், ஜனவரி 30 அன்று அலி மெதுவாக அசைந்தாலும், சாதாரண நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நிலையில் கண்கள் வெறுமையாக இருந்தன.

சோட்டா பாபா, ராஜாராம் இருவருக்கும் பாபாவின் அருளை வழங்குவதில் வெளிப்படையான பாகுபாட்டைக் காட்டுவதன் காரணத்தை ராவ்ஸாஹேப் வினவிய போது பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**ராஜாராமை பொறுத்தவரை, அவனாகவே முயற்சித்து இறை ஒளியைப் பெற்றுக் கொண்டான். அவன் மிகவும் கடினமாகவும், நேர்மையாகவும் முயற்சித்து அந்த நிலையை அடைந்தான். நானாக எதுவுமே அவனுக்குச் செய்யவில்லை. உண்மையிலே, இது அவன் தலைவிதி, நான் அதில் தலையிட முடியாது. சோட்டா பாபா விஷயத்தில் தனிப்பட்ட முறையில் நானாகவே என்னுடைய உதவியை வழங்கினேன்.**

**நான் ராஜாராமுக்கு நிச்சயமாக உதவ முடியும், ஆன்மீகப் பாதையில் உந்துதலை அளித்து அவனுக்கு நன்மை பயக்கும் வகையில் செய்ய முடியும், ஆனால், அவன் உடல்நிலையை எண்ணி அஞ்சுகிறேன், அதை அவன் எந்நேரமும் இழக்க வாய்ப்புள்ளது, அது விரும்பத்தக்கதல்ல. முடிந்தவரையில் அவன் உணர்வு நிலையில் இருக்க வேண்டும்,**

**அதனால்தான் அவன் விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டியதாகிறது.**

**இதுபோன்ற நிலையில், ஒருவன் அவன் உடலை இழக்கலாம், வெறித்தனத்துடன் இருக்கலாம் அல்லது அவனை மறைத்திருக்கும் திரை விலகலாம். அவனது சொந்த முயற்சியால் அந்தத் திரை விலகவேண்டும், அதில் நான் தலையிடக்கூடாது. இதர சிறுவர்களுக்கு தெய்வீகப் பார்வையை நான் வழங்க முடியும், உதவ முடியும். எதுவாயினும், ராஜாராம் அவனது உடலை இப்போது அல்லது எப்போது இழந்தாலும் அவன் என்னில் இருப்பான்.**

ஜனவரி 30ஆம் நாள் இரவு, அலி, ராஜாராம், சோட்டா பாபா மூவரையும் அவர்களின் ஆன்மீக உச்ச நிலையிலிருந்து கீழே கொண்டுவர, பாபா அனுபவித்த சிரமங்களை எவரும் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. சாஞ்சி அவரது நாட்குறிப்பில் இவ்வாறு பதிவு செய்திருந்தார்:

‘அப்துல்லாவின் உடல் மோசமடைந்து, மிகவும் ஆபத்தான தீங்கு விளைவிக்கும் நிலையில், இதய துடிப்பு அதிவேகத்தில் இருந்தது; இவ்வாறு நீடித்தால் மூச்சு நின்றுவிடும் அபாயம் உள்ளது என்று பலர் கூறினர். இரவும் பகலும் பாபா, சோட்டா பாபாவின் தலையருகிலே அமர்ந்திருந்தார். அவன் உடல் மிகவும் பலவீனமாக இருந்ததால், பாபா அவனுடைய சிரமங்களைத் தன் மீது ஏற்றுக்கொண்டு உடல்நலமற்றவர் போலத் தோற்றமளித்தார்.

அடுத்த நாள், பாபா முற்றிலும் சோர்வடைந்த நிலையில் இருந்ததால், அவரது அறையின் ஜன்னல் பக்கம் கூட வராமல் உள்ளேயே இருந்தார். சோட்டா பாபாவின் உடல்நிலை, இன்னமும் சீராகாத நிலையில், ராவ்ஸாஹேப், பாபாவின் அருகிலே அமர்ந்திருந்தார். பள்ளிக்கூடத்தில் ராவ்ஸாஹேபின் பொறுப்பை ருஸ்தம் ஏற்றுக்கொண்டார்.’

பாபா, ருஸ்தத்தைத் தனியாக அழைத்து அவருடன் உரையாடினார். குல்மாயும் பாபாவின் தரிசனத்திற்காக வந்தவரை, பாபா தனது அறையின் அருகிலமைந்த மேடையில் சிறிது நேரம் அமர அனுமதித்தார்.

அந்த நாள் சோட்டா பாபா, ஓரளவு நல்ல உணர்வு நிலையில் காணப்பட்டான்; பாபாவின் முன்னிலையில் அழுது மன்றாடினான், "தயவு செய்து எனக்கு வேண்டிய நாவின் வலிமையைத் தாருங்கள், அப்போது ‘நான் உங்களை எங்கும், எப்போதும் பார்க்கிறேன்’ என்பதை இந்த முழு உலகுக்கும் பறைசாற்றுவேன். உங்களைப் பார்க்கும் அந்த உண்மை அனுபவத்தின் வேகத்தை அனைவருக்கும் எடுத்துரைப்பேன்!"

எதுவாயினும், பாபா இப்போது அவனை அமைதியாக இருக்க அறிவுறுத்தி, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றார்.

அன்று அந்த இளைஞனுக்கு, கடந்த 20 நாட்களில் முதன்முறையாக பாலும், சாதமும் ஊட்டப்பட்டது.

பாபா, அலியிடம் (பள்ளிக்கூடம் செல்லாமல் இருந்த இன்னும் சில சிறுவர்களுடன்) அவனது படிப்பைத் தொடருமாறு கட்டளையிட்டார். பிப்ரவரி

1ஆம் நாளிலிருந்து அலி பள்ளிக்கூடம் செல்லத் தொடங்கினான். அதே வேளையில் ராஜாராம் மண்டலி குவாட்டர்ஸில் தங்க, பாபா, அனுமதி வழங்கினார்.

மும்பையில் வாழ்ந்து வந்த நாம்தார் தஸ்தூர் மற்றும் பெர்ஸியாவிலிருந்து வந்த ஷெரியார் ஈரானி, இரண்டு ஸொராஸ்டிரிய பாதிரிகள் (குருக்கள்), ஜனவரி 7ஆம் நாள் மெஹர் பாபாவை சந்தித்தனர்; பாபா, ஸொராஸ்டரைப் பற்றி அவர்களுக்கு இவ்வாறு விளக்கினார்:

**அனைத்து மதங்களின் பிரார்த்தனை நூல்கள் - பார்ஸிகளின் ‘அவஸ்தா’, இஸ்லாமியரின் ‘குரான்’, கிறிஸ்தவர்களின் ‘பைபிள்’ போன்றவற்றை எழுதியவர்கள் அந்தந்த மதகுருக்கள்; இவற்றில் உண்மைப்பொருளைப் பற்றிய எதுவுமே இல்லை. ஸொராஸ்டர் அக்னியை (நெருப்பு) குறித்துக் கூறியதெல்லாம், இறையன்பில் ‘இதயம்’ கொழுந்துவிட்டு எரிவதைக் குறிக்கும். இந்தப் பாதிரிகள் அதன் அர்த்தத்தைக் கொலைசெய்து அதை ‘வெளியில் எரியும் புனித நெருப்பு’ என்று மாற்றினர். அதுபோல், இதர மதங்களின் ‘குஸ்தி’** (பூணூல்), **‘பிரார்த்தனை’ போன்ற கொள்கைகள், மற்றும் கோட்பாடுகள் அனைத்தும் சடங்கு, சம்பிரதாயங்கள் ஆகும்.**

**கடவுளின் ஒரு பெயரை மட்டும் தினமும் ஒரு சில நிமிடங்களுக்கு, வேறு சிந்தனைகள் எதுவுமின்றி, மனமார, அன்புடனும், பக்தியுடனும் போற்றுங்கள்; அது உலக விஷயங்களில் மனம் அலைந்து திரியும் வேளையில் இயந்திரத்தனமாகப் பிரார்த்தனையில் ஈடுபடுவதைக் காட்டிலும் மிகப்பெரிய நன்மை பயக்கும்.**

**ஸொராஸ்டர் அவருடைய** 14 **சீடர்களுக்கும் இறையுணர்வை வழங்கினார். அதற்குப் பின்னர் இன்னும் ஒரு சீடரை இறைநிலைக்கு எடுத்துச் சென்றார். அவரிடமிருந்து, இறை ஞானம் மற்றும் அனுபவத்தை, அடுத்த** 700 **வருடங்களுக்காக, தந்தை வழியாகப் புதல்வனுக்கு வழங்கப்பட்டது. ஆனால், ‘சத்குரு தஸ்தூர் அஸார் கைவான்’ அவர்களின் காலத்திற்குப் பிறகு, போலி, வஞ்சகம் படைத்த தஸ்தூர் ஒருவர் சத்குருவின் இடத்தை அபகரித்து, சத்குருவின் பெயரில் பணம் சம்பாதிக்கத் தொடங்கினார். அவரைப் பின்பற்றிய தஸ்தூர்கள் அவர்களின் சுய விருப்பப்படி ஆணைகளை இயற்றினர். அவர்களுக்குப் பின்னர் இதுவரையிலும் ஸொராஸ்டிரிய இனத்தில் ஒரு சத்குரு கூட தோன்றவில்லை.**

**இன்றிருக்கும் ஸொராஸ்டிரிய வேத நூல்கள் (அவஸ்தா) அனைத்தும் இந்த தஸ்தூர்களால் எழுதப்பட்டவை, ஸொராஸ்டர் எழுதியது அல்ல. ஸொராஸ்டர் அவரது போதனைகள் வழியாக மக்களுக்கு வழங்கியவை அனைத்தும் ரத்தின கற்கள் - ஸூஃபியிஸத்தின் ஈடில்லா பொக்கிஷம் - ஆனால், அது அவர்களுக்குத் தெரியாது. அவருடைய**

சிறப்புமிக்க 14 சீடர்களுக்கு அவர் இறை ஞானத்தையும், அனுபவத்தையும் கொடுத்தார். அடுத்தவர்களுக்கு, (அதாவது உலகத்திற்கு) ஸுஃபியிஸத்தின் சட்ட திட்டங்கள் மற்றும் வழிமுறைகளை வழங்கினார். இந்தப் போலி தஸ்தூர்கள், ஸொராஸ்டர் வகுத்த கோட்பாடுகளில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தினர். அதுபோல, கிறிஸ்தவர்களின் ‘பைபிள்’ மற்றும் இஸ்லாமியரின் ‘குரான்’ இவைகளும் பல மாற்றங்களை சந்தித்தன.

எடுத்துக்காட்டாக, சிலருக்கு நான் இறை அனுபவத்தை அளித்த பின்னர், என்னுடைய மண்டலியில் பலர் வெளியுலகம் சென்று மக்கள் முன்னால் விரிவுரைகளை வழங்குவர். மக்கள் இந்த விரிவுரைகளைத் தொகுத்து, பிற்காலத்தில் ‘அவஸ்தா’, ‘பைபிள்’, ‘குரான்’ போன்ற வேத நூல்களாகப் பயன்படுத்துவார்கள். காலப்போக்கில் இதுவும் பல கைகளால் திருத்தங்களை சந்திக்கும்.

எனவே கடவுள் மீது உங்கள் அன்பை உருவாக்குவதே நான் உங்களுக்கு வழங்கும் சிறந்த அறிவுரை ஆகும். நீங்கள் உங்கள் சொந்த முயற்சி மற்றும் எனது சகவாசம் இவற்றால் விளையும் பலனை வென்றடைய வேண்டும். அதை விட்டுவிட்டு, மதக்கோட்பாடுகள் மற்றும் விதிமுறைகளைப் பற்றி விவாதிப்பதில் உங்கள் நேரத்தை வீணடிப்பதானால், அது உங்களை எங்கும் அழைத்துச் செல்லாது.

இவை அனைத்தும் மிகப்பெரிய மனக்குழப்பங்களை உருவாக்கும்; உங்கள் பொன்னான நேரத்தை வீணாக்காமல் கடவுளை நினைந்து, தியானத்தில் ஈடுபட்டு, அன்பை உருவாக்கும் முயற்சிகளில் சிறப்பாகப் பயன்படுத்தலாம். அன்பு என்பது அனைத்து மதங்களின் ஒட்டுமொத்த ஆதாரமும், சாராம்சமும், இன்றியமையாத ஒன்றும் ஆகும். குழப்பம் விளைவிக்கும் அனைத்தையும் விட்டுவிடுங்கள்.

மேலும் ஓர் உதாரணத்தை எடுத்துக் கூறுகிறேன். அகர முதல எழுத்துகளை ஒரு குழந்தைக்கு மொழியின் ஆரம்ப பாடமாகக் கற்றுத் தருகிறோம். ஆனால், அந்த மொழி எழுத்துகளைத் தாண்டி, அவன் மேலும் பாடங்களைக் கற்றுக் கொள்ளாவிடில், அனுபவபூர்வமாக எதையுமே அறியமாட்டான். இந்த உண்மை, மதத்திற்கும் பொருந்தும். சமய கொள்கைகளும் கோட்பாடுகளும் ஆரம்ப காலத்தில் அகரமொழி எழுத்துகளைக் கற்றுக் கொள்வதுபோல், இறுதி இலக்கான இறைநிலையை அடைய அது உதவியாக இருக்கும். அடிப்படை பாடங்களைக் கற்று ஒருவன் முன்னேற வேண்டும்; அதற்கு பதிலாக மதம் மற்றும் அதன் கொள்கைகளும் கோட்பாடுகளும் மட்டும்தான் முக்கியம் என்று ஒருவன் கருதுவதானால், அவன் ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து முன்செல்ல முடியாது. இறைவனாகிய உண்மைப்பொருள் சமய கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்திற்கும் மேலானது.

நாம்தார் தஸ்தூர் பல வருடங்களாகக் கடவுளைத் தேடி அலைந்து, வெவ்வேறு குருக்களின் தொடர்பில் வந்தார். மெஹர் பாபாவை சந்தித்த பின்னர் அவர் சாஞ்சியிடம் இவ்வாறு கூறினார்: "என்னை இங்கு அழைத்து வந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இதர ஆஷ்ரமங்களிலிருந்து நான் மிகவும் மாறுபட்ட சூழ்நிலையை இங்கே பார்க்கிறேன். இங்கே, இறை ஒளியை உள்ளளவில் நான் உணர்கிறேன். ஸ்ரீபாபா, அவரை இவ்வளவு இலகுவாகப் பறைசாற்றுவது போல, நான் சந்தித்த வேறு எவருமே தங்களைக் கடவுள் என்று தைரியமாக அறிவிக்கவில்லை. அவர் கூறுவது உண்மையென நான் இதயபூர்வமாக உணர்ந்து, அறிந்து கொண்டேன்; மேலும் அவர் கடவுள் என்பதன் ஆதாரத்தையும் எனக்குக் கொடுத்தார்." சில வாரங்களுக்குப் பிறகு நாம்தார் மெஹராபாத் வந்து மண்டலியுடன் வாழத்தொடங்கினார்.

பிப்ரவரி 4ஆம் நாள், அலியைப் பற்றி பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: **"எவ்வளவு அதிகமாக அலி தூங்குகிறானோ அவ்வளவுக்கு அதிகமாக நினைவுள்ளவனாக இருப்பான்."** மூன்று நாட்களுக்குப் பிறகு, பாபா மேலும் குறிப்பிட்டார், **"இன்று அலி இருந்த தயார் நிலையில், என்னுடைய ஒரே அரவணைப்பு அவனை அப்படியே மூழ்க வைத்திருக்கும். அதை நான் செய்ய ஆயத்தமானேன், ஆனால், அதைச் செய்யாமல் நானாகவே என்னைத் தடுத்து விட்டேன்."**

பிப்ரவரி 7ஆம் நாள், மெஹர் பாபா, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கமளித்தார்:

**ஒரு குருநாதரின் கட்டளைகளை, சீடர்கள், அவர்களின் மனங்களைப் பயன்படுத்தாமல், அவற்றின் நன்மை தீமைகளைப் பற்றி, சற்றும் சிந்திக்காமல், அப்படியே ஏற்று நடப்பது அனைத்திலும் சிறந்தது. உதாரணமாக சிது மதிய வேளையில் என்னிடம் வந்து மிகவும் தாகத்துடன் இருப்பதாகக் கூறுகிறார். அப்போதுள்ள காலநிலை, நேரம் இவற்றைக் கருத்தில்கொண்டு நான் அவருக்குக் குளிர்பானம் வழங்கலாம்.**

**இப்போது தஸ்தூர் பனி நிறைந்த இரவு வேளையில் வந்து, தாகத்துடன் இருப்பதாகக் கூறுவதானால், சூழ்நிலையை நினைவில் வைத்து, நான் அவருக்குச் சூடான காஃபி அல்லது தேநீர் கொடுக்கலாம். இப்போது சிதுவுக்குக் குளிர்பானமும், தனக்குத் தேநீரும் வழங்கியதாக தஸ்தூர் ஆட்சேபனை தெரிவித்து, வாக்குவாதம் செய்வதில் எந்த பயனுமில்லை; கீழ்ப்படிவது ஒன்றுதான் அவசியம்.**

**இதுபோலத்தான் தீர்க்கதரிசிகள் மற்றும் குருநாதர்கள் வெவ்வேறு வேளைகளில், வேறுபட்ட சூழ்நிலைகளில், இறைநிலையை அடையும் ஒரே குறிக்கோளைக் கருத்தில்கொண்டு, வித்தியாசமான கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை வழங்குகின்றனர். எனவே இந்தக் கோட்பாடுகள்**

**தவறானவை அல்லது ஒன்றைக் காட்டிலும் மற்றொன்று உயர்ந்தது என்று நினைப்பது தவறு. அவை அனைத்தும் ஒரே இலட்சியத்தை அடையும் பாதைகள்; மேலும்** (இறையுணர்வை அடைந்த குருநாதர்கள் இவற்றை வழங்கும்போது) **அவற்றை இயந்திரத்தனமாகப் பின்பற்ற வேண்டும். இதில் எவ்விதமான வாதம், விவாதம், மற்றும் மறுபரிசீலனைகளுக்கு இடமேயில்லை.**

**எனவே, எனதன்பு சிறுவர்களே, நான் சொல்வதை கவனமாகக் கேளுங்கள்: என்னுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுங்கள், இறுதியில் ஒவ்வொருவரும் அவரவர் தகுதிக்குத் தகுந்தாற்போல பலனடைவீர்கள். ஆன்மீக கங்கை இப்போது மெஹராபாத்தில் ஓடுகிறது. நீங்கள் அதைப் பருகும் நிலையில் இல்லாமலிருந்தாலும், உங்கள் முகம், கை கால்களைக் கழுவிக் கொள்ளுங்கள். நேரம் கடந்து கொண்டிருக்கிறது மற்றும் தேவையற்ற விவாதங்கள் உங்கள் நேரத்தை வீணடிக்குமே தவிர உங்களை எங்கும் அழைத்துச் செல்லாது. எனவே விழிப்புடன் இருங்கள்!**

அந்த நாள், அஃப்பாஸ்கான் எனும் சிறுவனை, ஐந்து நிமிட தியானம் செய்யாத காரணத்திற்காக, பாபா கண்டித்தார். ஆனால், அந்த சிறுவன் தியானம் செய்ததாக முறையிட்ட போது, பாபா இவ்வாறு பதிலளித்தார்: **"அப்படியானால் அது என்னை வந்தடையவில்லை. எனவே நீ அதை நான் கூறியபடி நேர்மையுடனும் அன்புடனும் செய்திருக்க மாட்டாய். இது ஒரு ஐந்தே நிமிட வேலை, ஐந்து மணி நேரமோ, மாதமோ அல்லது வருடமோ அல்ல. இது ஓர் எளிதான பணி, ஆனால், அது மிகவும் கண்டிப்பாகவும் உண்மையாகவும் செய்யப்பட வேண்டும்."**

ராமாஜி, ஆகா அலி இருவரும் அவர்கள் கண்ட 'தெய்வீகக் காட்சி' இப்போது மறைந்துவிட்டதாகப் புகார் செய்தனர். பாபா அவர்களின் கண்கள் மற்றும் நெற்றிகளைத் தொட்டு அந்த அற்புத பார்வையை மீட்டுக் கொடுத்ததை இருவரும் உறுதிப்படுத்தினர். போதிய அன்பை உருவாக்குவதில் ஸொராஸ்டிரிய சிறுவர்களிடையே பொதுவான அலட்சியம் மற்றும் புறக்கணிப்பு இருப்பதை பாபா குறிப்பிட்டார்: **"இந்த விஷயத்தில் இந்துக்கள் குறிப்பாக இஸ்லாமியர்கள் மிக உயர்ந்த இடத்தில் உள்ளனர்."**

1928, பிப்ரவரி 14ஆம் நாள் திருமணம் செய்து கொள்வதைப் பற்றிய பேச்சு எழுந்தது:

**நீ திருமணம் செய்து கொண்டால் மேலும் ஏழு பிறவிகள் எடுத்தாக வேண்டும். இந்தக் காரணத்துக்காகத்தான் குருநாதர்கள் தங்கள் சீடர்களைத் திருமணம் செய்துகொள்ள வலியுறுத்துவதில்லை. இந்த ஏழு பிறவிகளும் ஒவ்வொரு வாழ்வுக்குப் பிறகும் பெருகிக்கொண்டே போகும். உதாரணமாக 7x7=49x7=343x7 இப்படியே போய்க்கொண்டிருக்கும். உங்கள் கடந்தகால வாழ்க்கையில் எத்தனை முன்னாள் மனைவிகளை விட்டிருப்பீர்கள்!**

**அதுபோல் எதிர்கால வாழ்வில் எத்தனை மனைவிகளின் தொடர்பில் வருவீர்கள்! கடந்தகால மனைவிகள் எவரும் உங்களுக்கு நினைவில் இல்லை, வரவிருப்பவர்களைப் பற்றியும் உங்களுக்குத் தெரியாது.**

**எனவே, நீங்கள் நிச்சயமாக திருமணம் செய்வதானால் என்னை மணம் செய்துகொள்ளுங்கள்! என்னைத் திருமணம் செய்துகொள்வதால் உங்களின் மரியாதை, பாசம் மற்றும் அன்பு எனக்கு மட்டுமே; அத்தகைய எண்ணமும், சிந்தனையும் மிகப்பெரிய விஷயம் - பழங்கால மஹாயோகிகளின் அன்பைவிட மிக மிக உயர்ந்தது.**

**எனவே, என்னை மணந்துகொள்! என்னை மணம் புரிவது என்பது அன்பு, அமைதி, ஆனந்தம் இவற்றின் இருப்பிடம். சாதாரண திருமணம் என்பது சண்டை, சச்சரவுகள் மேலும் அதிலிருந்து எழும் ஆயிரத்து ஒரு கவலைகள்.**

அதன் பின்னர் அன்று பாபா இவ்வாறு கருத்துரைத்தார்:

**நான் இன்று காலை எனது தாயாரிடம் தினமும் 1,000 முறை என் பெயரை உச்சரிக்குமாறு அறிவுறுத்தினேன். அவர்கள் அதைச் செய்தால் நன்றாக இருக்கும். இல்லையெனில், எனது ஆலோசனையை கவனிக்காததால் மெமோவும் குடும்பத்தினரும் கஷ்டங்களை சந்திக்க நேரிடும். உலகப் பொருட்களையே நினைத்துக் கொண்டிருப்பது அவர்களையும், என்னைச் சார்ந்தவர்களையும் ஒருபோதும் திருப்தியடையச் செய்யாது.**

குருநாதரின் மதுபானம், இறை போதையை விளைவித்தது வழக்கமான பள்ளிக்கூட நடைமுறைகளுக்குத் தடையாக இருந்தது. பிப்ரவரி 2ஆம் நாளிலிருந்து பாபா தேர்ந்தெடுத்த 20 மாணவர்களை, தவறாமல், ஒழுங்காகப் பள்ளிக்கூடம் சென்று பாடங்களில் கவனம் செலுத்துமாறு வலியுறுத்தினார். சில மாணவர்கள் பாபா அருகிலேயே இருப்பதில் பிடிவாதமாக இருந்தாலும், பாபா அவர்களை வகுப்பறைகளுக்கு அனுப்பி வைத்தார். பாபாவின் விருப்பத்திற்கிணங்க ஆகா அலி முதலில் வகுப்பறைக்குச் சென்றதும், பிற மாணவர்களும் அவ்வாறே செய்தனர். படிப்பு இப்போது விறுவிறுப்புடன் மறுபடியும் பரிந்துரைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி நடைபெற்றது.

சிறுவர்கள் தங்கள் இறுதி தேர்வுகளுக்காக அஹமதுநகர் மிஷினரி பள்ளிக்கூடம் சென்றனர். இறுதியில் அனைவரும் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சிபெற்றது ஆச்சரியமாக இருந்தது.

கடந்த இரண்டு மாதங்களாக, சிறுவர்கள் அடைந்த அனுபவங்களின் காரணமாக - இறையன்பால் கட்டுக்கடங்காமல் அழுவது போன்ற நிகழ்வுகளால் - வெளியுலகில் தவறான வதந்திகள் பரவின. சில பெற்றோர்கள் இப்படியும் கூறினர், "மெஹர் பாபா, எங்கள் குழந்தைகளை மதமாற்றம் செய்ய முயற்சிக்கிறார்"; சில இஸ்லாமியர்கள் "நாங்கள் ஏன் எங்கள் குழந்தைகளை

மெஹர் பாபாவின் அருகிலிருக்க அனுமதிக்க வேண்டும்? குழந்தைகளை அவர் பாதங்களில் பணியவைத்து ஸொராஸ்டிரிய மத மாற்றம் செய்கிறார்" என்று கூறினர். பலர் மெஹராபாத்தில் நடப்பதை மிகைப்படுத்திக் கூறி, அதைப் பற்றி அறிய ஆர்வமாக இருந்தனர். "எங்கள் குழந்தைகள் அங்கு நல்லறிவு நிலையை இழக்கிறார்கள்," என்று கோபத்தை வெளிப்படுத்தினர். "சிறுவர்கள் தங்கள் படிப்பை விட்டுவிட்டு தியானம், யோகா இவற்றில் நாட்டம் காட்டுகிறார்கள். அவர்கள் இறுதியில் சன்னியாசியாக மாறி உலகப்பொருட்களில் ஈடுபாட்டைக் கைவிட்டு விடுவார்கள். எனவே அவர்களை ஆஷ்ரமத்திலிருந்து வெளியேற்றுவது நல்லது" எனவும், இன்னும் சிலர், "பெற்றோரிடமிருந்து பணத்தைப் பெறுவதற்காக ஆஷ்ரமத்தில் சிறுவர்களை வலுக்கட்டாயமாக நிறுத்தி வைத்துள்ளார்கள்" என்றும் கூறினர்.

மெஹர் பாபா, மாணவர்களை மறுபடியும் வகுப்பறைகளுக்கு அனுப்பி வைத்தது சில பெற்றோரின் மனங்களிலுள்ள தவறான எண்ணங்களை நீக்குவதற்கான சூழ்ச்சியாக அமைந்தது. அவர்களின் குழந்தைகள் தங்கள் படிப்பில் போதுமான கவனம் செலுத்தவில்லை என்றும் வதந்தி பரவியது. பல தாய் தந்தையர் அங்கு நடப்பதைக் கண்டறிய மெஹராபாத்திற்கு நேரடியாக வந்தனர்.

இப்படி, 1928 ஜனவரி இறுதியில் இத்தகைய வதந்திகள் பரவும் தருணத்தில், பல விசாரணை கடிதங்கள் வந்த வண்ணம் இருந்தன. குழந்தைகளுக்கு மிகச் சிறந்த கல்வியும், கவனமும் அளிக்கப்படுவதாக உறுதியளித்து ஒவ்வொரு கடிதத்திற்கும் பதில் வழங்கப்பட்டது.

சில பெற்றோர்கள் நம்பிக்கையின்றி மெஹராபாத்திற்கு வந்து தங்கள் குழந்தைகளை அழைத்துச் சென்றனர்.

பிப்ரவரி மாதத்தில் ஏழு சிறுவர்கள் ஆஷ்ரமத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும் பல இஸ்லாமிய பெற்றோரும் குழந்தைகளைத் திருப்பி அழைத்துச்செல்ல வந்தனர். மண்டலி மெஹராபாத்தில் நிலவும் உண்மையைப் பலருக்கு எடுத்துச் சொல்லி, நம்பிக்கை அளித்து, சிறுவர்களின் படிப்பை மேலும் தொடரச் செய்தனர்.

அவ்வப்போது, பாபா சில சிறுவர்களை அழைத்து, அவர்கள் பாடங்கள் படிப்பதை கவனிப்பது வழக்கம், ஆனால், ஒருமுறை கூட அவர் 'அலோபா'வை (அலி அக்பர் ஷாப்பூர்ஸமன்) அழைத்தது கிடையாது. ஒருநாள் காலை வேளையில், பாபா திடீரென அலோபாவை அழைத்தார். சமாதியின் கீழ்நிலை வாயிலில் அமர்ந்திருந்த பாபா, அவனுடைய ஆங்கிலம் மற்றும் பெர்ஸியன் புத்தகங்களை எடுத்துவரக் கூறினார். அவ்வேளையில் பாபா, ராவ்ஸாஹேபையும் அங்கு அழைத்தார். பாபா அப்போது அவர் தேர்ந்தெடுத்த வாக்கியங்களை வாசிக்குமாறு அலோபாவிடம் கூறினார். அவன் படித்து முடித்ததும், போதும் என சைகையால் காண்பித்து, அவனைப் போகுமாறு கூறினார். குறிப்பாக, பாபா ஏன் அப்படிச் செய்தார் என்று எவருக்கும் புரியவில்லை, ஆனால், அன்று மாலை அலோபாவின் மாமா, அவனை

அழைத்துச்செல்ல மெஹராபாத் வந்தபோது உண்மை புலப்பட்டது. பத்து மாதங்கள் ஆஷ்ரமத்தில் இருந்துவிட்டு அலோபா மும்பைக்குத் திரும்பிச் சென்றான்.

காலம் இதை வருத்தத்துடன் பார்த்தது: "சிறுவர்கள் அன்பின் உறைவிடத்தைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, ஆனால், அவர்களுடைய அன்பை யாராலும் பறிக்க முடியாமலானது. அவர்களின் விழிப்படைந்த இதயங்கள் சுக்குநூறாக உடைந்து கொண்டிருந்தன, ஆனால், அவர்களின் ஆத்மாக்கள் அன்பிற்குரியவருடன் ஒன்றுபட்டன, அவர் அத்தகைய உண்மையான ஏக்கம் நிறைந்த இதயங்களில் எப்போதும் நிலைத்திருக்கிறார்."

1928, பிப்ரவரி 18ஆம் நாள் மெஹர் பாபாவின் 34ஆவது பிறந்தநாள் எளிமையாகக் கொண்டாடப்பட்டது. முதலில் பாபா, உண்மையில் அனைத்து நிகழ்ச்சிகளையும் ரத்து செய்தார்; ஆனால், வெகுதூரத்திலிருந்து வந்த பக்தர்களை நினைவில் கொண்டு, அவரது உத்தரவை ரத்து செய்து, தரிசனத்திற்கு அனுமதி வழங்கினார்.

வழக்கம்போல காலை 9 மணிக்கு முதலில் ஆஷ்ரம சிறுவர்களும், அதைத் தொடர்ந்து பெண், ஆண் மண்டலியும் பாபாவின் பாதங்களைக் கழுவினர். 11 மணியளவில் மண்டலியில் சிலர் பாபாவை நீராட்டினர்; ஆரத்தியுடன் பாபாவின் தரிசனம் நிறைவுற்றது. விழாவுக்கு வந்தவர்கள் அனைவருக்கும் விருந்து வழங்கப்பட்டது. மாலையில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி பாபாவின் வருத்தமான மனநிலையைத் தணித்ததாகத் தெரியவில்லை.

ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்குப் பிறகு மெஹர் பாபா, பெண் மண்டலி வாழும் விடுதிக்குச் சென்றதும், பெண்கள் அளவிலா மகிழ்ச்சியடைந்தனர். பாபா, ஏகாந்தவாசம் மேற்கொள்ளும்போது தினமும் ஒரு வேளை மட்டும் மெஹரா காஃபி தயார் செய்து, லாஹு எனும் சிறுவன் மூலமாக பாபாவிற்கு அனுப்பி வைத்தார்.

ஆனால், அந்த காஃபி குவளையுடன் லாஹு மேல்மலைக்குச் செல்லும் வழியில் மறைவான இடத்தில் நுழைந்து, பாதியை அருந்தி விட்டு, குவளையை மறுபடியும் மூடி பாபாவிற்கு எடுத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டான். அவ்வேளையில் பாபா, குவளை ஏன் பாதி அளவு மட்டும் நிரம்பியுள்ளது என்று கேட்டதில்லை; ஆனால், ஏகாந்தவாசத்திலிருந்து வெளிவந்த இவ்வேளையில் பாபா, மெஹராவிடம் கேட்டார், "**நான் தினமும் ஒரு வேளை மட்டும் அரைக் குவளை காஃபி அருந்தி உபவாசம் மேற்கொண்டேன் - ஆனால், நான் குவளையை நிரப்பியனுப்ப உங்களிடம் தெளிவாகக் கூறியிருந்தேனே**!"

மெஹரா அதிர்ச்சியடைந்து கூறினார், "ஆனால், பாபா நான்தான்

குவளையைத் தினமும் நிரப்பினேன். எப்போதும் அது நிரம்பியிருக்கும்." நாஜா, கோர்ஷெத் இருவரும் அதை ஊர்ஜிதப்படுத்தினர்.

அதற்குப் பிறகு, பாபா லாஹுவை அழைத்து, அந்தப் புதிரை விளக்குமாறு கூறினார். அந்த சிறுவன் தனது குறும்புத்தனத்தை நேர்மையாக ஒப்புக் கொண்டு, உண்மையைக் கூறியதால் பாபா அவனை மன்னித்தார். பாபா புன்முறுவல் செய்துகொண்டே இவ்வாறு குறிப்பிட்டார்: "**நான் லாஹுவின் பிரசாதத்தை தினமும் அருந்தி வந்தேன்**."

பாபா அப்போது துனியின் அருகாமையில் சென்று 15 நிமிடங்கள் அமைதியாக அமர்ந்திருந்தார். பின்னர் அவர் புலனாகாத முறையில் இவ்வாறு எடுத்துரைத்தார்: **"நாம் அனைவரும் முன்பு போலவே நமது வழக்கமான வேலையைத் தொடர வேண்டும் என்று துனியிலிருந்து எனக்கு அனுமதி வார்த்தைகள் வந்தன."** இது பாபாவின் முந்தைய முடிவான பள்ளிக்கூடங்களை மூடுவது குறித்த கருத்தை ஊர்ஜிதம் செய்வதாக அமைந்தது.

பாபாவை இரு சக்கர வாகனத்தில் அமர்த்தி மேல்மலைக்கு அழைத்துச் சென்றனர், அங்கே அவரது சமாதியின் கீழ்நிலை அறையில் பாபா ஓய்வெடுத்தார். பாபா தினமும் ஒரு குவளை கா:ஃபி அருந்தி ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்தார்.



மெஹர் பாபாவும்
பிரேமாஷ்ரம் சிறுவர்களும்



ஆகா அலி

# பிரேமாஷ்ரம் - இறை அனுபவங்கள்

**(Premashram)**

சில நாட்களுக்கு முன்னர், ஆகா அலியின் தந்தையும் அவனை ஆஷ்ரமத்திலிருந்து திரும்ப அழைத்துச் சென்றார். இது மெஹர் பாபாவை ஆழ்ந்த வருத்தத்தில் ஆழ்த்தியது; சில வேளைகளில் கண்கலங்கவும் வைத்தது.

அவன் பாபாவின் பிரிவைத் தாங்க முடியாமல் உண்ணுவதையும் நிறுத்திவிட்டதாக அலி கடிதம் எழுதியிருந்தான். மற்றுமொரு கடிதத்தில் "நான் விழித்திருக்கும் வேளையில் ஸ்ரீபாபாவை எப்போதும் பார்க்கிறேன்; மேலும் தூங்கும் போதும் பாபாவை ஓர் ஒளி வட்டத்தில் பார்க்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தான். அலி, பாபாவைப் பற்றி எழுதிய ஒரு கவிதை அவனது உண்மை நிலையை வெளிப்படுத்தியது.

மேலுலகின் உச்சமே உங்கள் உறைவிடம்.  
சத்தியத்தின் இல்லமே உங்கள் ஓய்விடம்.  
உங்கள் தெய்வீகச் சுடரால் உலகம் ஒளிர்கின்றது.  
உங்கள் நிமிர்ந்த, அழகான உருவம் சைப்ரஸ் பூங்கா போன்றது.  
இறந்தவரும் உயிரைத் திரும்பப் பெறுவர் உங்கள் கை பட்டாலே!  
உங்கள் அன்பெனும் நெருப்பின் வெப்பத்தில்  
நான் இருக்கிறேன், பானையில்  
கொதிக்கும் நீரைப்போலவே!  
எனது எலும்புகள் அனைத்தும் கரைந்துதான் போனாலும்,  
எனது ஆத்மாவில் நிரம்பிய உங்களன்பு  
அழிந்துபோகாது ஒருபோதும்.

அடுத்த நாள் ராவ்ஸாஹேப், பைதூல் இருவரும் மும்பையிலிருந்து திரும்பி வந்து, ஆகா அலியைத் தங்களோடு அழைத்துவர இயலாததை பாபாவிற்குத் தெரிவித்தார்கள். நம்பிக்கையூட்டும் வகையில் எவ்வளவு பக்குவமாக எடுத்துரைத்தும் அலியின் தந்தை அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், மண்டலிக்கு ஆச்சரியமூட்டும் முறையில் பாபா, பைதூலை மறுபடியும் உடனடியாக மும்பைக்குச் சென்று அலியின் தந்தை ஹாஜி முஹமதை சந்தித்து, இணங்கச் செய்யுமாறு கூறியனுப்பினார்.

அன்றிரவு 9.30 மணியளவில், சமாதியின் கீழ்நிலைக்குச் சென்று ஓய்வெடுப்பதற்கு பதிலாக, பாபா, வெறிச்சோடிய வகுப்பறைக்குள் சென்று, ஆகா அலி அமரும் இடத்திற்குப் பக்கத்தில் அமைதியாக 15 நிமிடங்கள் அமர்ந்திருந்தார். அருகில் நின்றுகொண்டிருந்த ராவ்ஸாஹேப் அவரால் உணர்ச்சியை அடக்க முடியாததை எடுத்துக்கூறி, "பாபாவின் உடல் வேறு எங்கோ இருந்ததுபோலத் தோன்றியது. இந்த சில நிமிடங்களில் அவரது

கண்கள் ஐயத்திற்கு இடமின்றி வெறுமை நிறைந்து காணப்பட்டது. அதன் பின்பு பாபா அவரது ‘எதிர்கால’ சமாதிக்குச் சென்றார்" என்றார்.

இதற்கிடையில், அலி மும்பையில் தனது இல்லத்திலிருந்து புறப்பட்டு, அடுத்தநாள் காலை 7.30 மணிக்கு (1928, மார்ச் 3), பாபா, அலி திரும்பி வருவதற்கு முதலில் விதித்த ஏழு நாட்கள் காலக்கெடுவின் கடைசி நாளன்று மெஹராபாத் வந்து சேர்ந்தான்.

பாபாவின் அறை ஜன்னலருகில் நேரடியாகச் சென்று அலி அங்கே நின்று கொண்டிருந்தான். ஆனால், பாபா வெளியே வரவில்லை. அவன் வந்ததை முதலில் கவனித்த ராவ்ஸாஹேப் அவனை, சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் சென்று சிற்றுண்டி வழங்கினார்.

எட்டு மணியளவில் சமாதி கீழ்நிலையிலிருந்து பாபா வெளியே வந்ததும் அங்கு நடந்த காட்சி இதயத்தை நெகிழ வைப்பதாக அமைந்தது. பாபா, அலியை ஏறக்குறைய அரை மணி நேரம் தனது மார்போடு அரவணைத்து, பின்னர் அழகான போர்வை ஒன்றை அளித்து, அவனுக்கு மலர் மாலை அணிவித்தார். பின்னர், அலியின் துணிச்சலை எண்ணி பெருமிதமடைந்து, ஆஷ்ரமத்தைச் சுற்றி அவனை நடத்திச் சென்றார். இரவு உணவு வேளையில் அருகில் அமர வைத்து, தனது கைகளால் அவனுக்கு உணவு ஊட்டவும் செய்தார் - அவ்வளவு அன்பை வெளிப்படுத்தினார்.

இந்த நிகழ்வைக் கொண்டாடும் வகையில், மாலை வேளையில், பாபா கிருஷ்ண பெருமான் போல் உடை அணிந்து வர, சிறுவர்கள் பாடல்கள் பாடி, கோலாகலமான களிப்புடன் காணப்பட்டனர். பாபா மிகையான மகிழ்ச்சியில் அவரது மயில் கிரீடத்தைக் கழற்றி அலியின் தலையில் வைத்தார். பிரியமான இருவரின் பலநாள் பிரிவைக் கண்டு காலம் ஆனந்தக் கண்ணீர்விட்டது.

மெஹராபாத்தில் நிலவிய மகிழ்ச்சிகரமான சூழ்நிலை அடுத்த நாளும் தொடர்ந்தது, ஆனால், பின்னர் அது பாபாவைத் தாக்கிய கடுமையான உடல் துன்பங்களால் பாதிக்கப்பட்டது. அன்று மதியம் 3.30 மணியளவில் பாபா கடுமையான தசை சுளுக்குடன் - உள் அதிர்ச்சிகளால் பாதிக்கப்படுவது போல் - அவதிப்பட்டார். மேலும் இரவு 9 மணிக்கு, கிட்டத்தட்ட 45 நிமிடங்களுக்கு, மிகக் கடுமையான வலியால் வேதனையடைந்தார். இந்த சிரமமான காலகட்டத்தில், பாபாவை அதிர்ச்சிகள் மிகவும் தீவிரமாகத் தாக்கியதில், அவர் தனது உடலை துறந்துவிடுவாரோ என்ற அச்சம் ஏற்பட்டது. பாபா அனுபவித்த வலியைப் போக்க மண்டலியால் எதுவும் செய்ய முடியவில்லை; ஆனால், ஒரு மணி நேரத்திற்குப் பிறகு வலி தானாகவே தணிந்தது.

அன்றிரவு, ஏறக்குறைய அனைவரும் தூங்கச் சென்ற பின்னர், அலியின் தந்தை அங்குத் தோன்றி அவருடைய மகனை உடனே பார்க்க வேண்டும் எனக் கூறினார். ராவ்ஸாஹேப் இரவில் நீண்ட நேரம் அங்கு நடந்ததை எடுத்துரைத்தும் அலியின் தந்தையார் அதற்கு சற்றும் செவி மடுக்காமல், மகனைத் திருப்பி அழைத்துச் செல்வதில் பிடிவாதமாக இருந்தார். முற்றிலுமாக அமைதியை இழந்த ராவ்ஸாஹேப் திடீரெனக்

கொதித்தெழுந்தார், "சரி, கடவுளின் பொருட்டு உங்கள் மகனை அழைத்துச் செல்லுங்கள்! உங்கள் மகன் அலியால் ஸ்ரீபாபா மற்றும் இங்கிருக்கும் அனைவரும் எவ்வளவு வேதனையில் உள்ளார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. அலியை இங்கு வைத்திருப்பதில் எங்களுக்கு எவ்வித பயனுமில்லை; மாறாக, அவனுடைய சொந்த நலனுக்காகவே உங்களை சமாதானப்படுத்த முயற்சிக்கிறோம்" என்று கூறி அங்கிருந்து எழும்பி புறப்பட இருந்த அவரை, அலியின் தந்தை அழைத்து, இன்னும் ஒரு வருடம் அலியை ஆஷ்ரமத்தில் விட்டுச்செல்ல ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதாக இணக்கம் தெரிவித்தார்.

அன்று இரவெல்லாம் பாபா சமாதி அறையருகில் தூங்காமல் விழித்திருந்தார். அலியின் தந்தையுடன் நடந்ததை ராவ்ஸாஹேப் எடுத்துரைத்தப் பின்னரே, பாபா ஓய்வெடுக்க உள்ளே சென்றார், அப்போது நேரம் காலை மணி ஐந்து.

அன்று காலையில் அலி தூங்கி எழுந்ததும், மலையின் கீழிருந்த அவனுடைய தந்தையிடம் அழைத்துச் சென்றனர்; அதன் பின்னர் அலியின் தந்தையார் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார். இந்த மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பத்தைக் கொண்டாடும் பொருட்டு, பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை அறிவித்து, சிறுவர்கள், ஆசிரியர்கள், மண்டலி அனைவரும் பாபாவுடன் சுற்றுலா பயணமாக, சற்று தொலைவிலிருந்த 'ஹேப்பி வேலி' என்ற இடத்திற்குச் சென்றனர். அன்றைய தினத்தை 'ஆகா அலி தினம்' என்று பாபா பிரகடனம் செய்து, சிறுவர்கள் அவர்கள் விருப்பப்படி ஆடி, பாடி, விளையாட முழு சுதந்திரம் அளித்ததோடு, அனைவருக்கும் சுவையான உணவும் பரிமாறப்பட்டது. அதற்குப் பிறகு, பாபா பல மாதங்கள் எதுவும் உண்ணாமல் உபவாசம் இருந்தும், சிறுவர்களுடன் இரண்டு முறை மலை உச்சத்தில் ஏறினார். ஆஷ்ரமத்தில் பள்ளிக்கூட வாழ்க்கை மீண்டும் ஒரு சாதாரண நிலைக்குத் திரும்பியது. 1928, மார்ச் 5ஆம் நாள் பாபாவின் விளக்கங்களின் நடுவே ஜீஸஸ் கூறியதைக் குறிப்பிட்டு விளக்கமளித்தார்:

**ஏழை கடவுள் ஒரு திருடனைப் போல, சொர்க்கத்தில் இருப்பதாகக் கருதுவதானால் அது பரிதாபத்திற்குரியது. கடவுள் சொர்க்கத்தில் இருக்கிறார் என்று ஜீஸஸ் கூறியிருந்தால் அவரைக் கிறிஸ்துவாகக் கருதமுடியாது. ஆனால், எனக்குத் தெரியும், அவர் பரிபூரணமான கடவுள், கடவுளின் அவதாரம், அவர் கூறியதன் அர்த்தமும் வேறு என்று!**

**ஜீஸஸ் உண்மையில் என்ன கூறினார்? பெரும்பாலான மக்களுக்கு அவர், "கடவுள் சொர்க்கத்தில் இருக்கிறார், அங்குச் செல்ல முயலுங்கள்" - அதாவது சில சோதனைகளையும் துன்பங்களையும் கடந்து செல்லும் நோக்கத்தில் அவர் அதைக் கூறினார்.**

**அவரைப் பின்பற்றுபவர்களுக்கு, "கடவுள் எங்கும் இருக்கிறார், அவரைக் கண்டுகொள்ள முயலுங்கள்" என்று கூறி அதற்கான விளக்கங்களை அளித்தார்.**

**அவருடைய வட்டத்து சீடர்களுக்கு, "கடவுள் என்னிலும், உங்களிலும் இருக்கிறார்" என்று கூறி அவர்களுக்கு அதை உண்மையில் வெளிப்படுத்தினார்.**

**ஜீஸஸ் வெவ்வேறு விதத்தில் கூறியதன் காரணம் என்ன?**

**அப்போதைய மக்கள் மற்றும் கால சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு, சொல்வதைப் புரிந்துகொள்ளும் தயார் நிலையில் அவர்கள் இருப்பதைப் பொறுத்து, ஜீஸஸ் வெவ்வேறான விஷயங்களை எடுத்துரைத்தார். அவர் சொன்னது என்னவென்றால், அனைத்தையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்ற வேண்டும்; அதாவது, அவரை அறிந்து, பார்த்து, அனுபவபூர்வமாக உணரவேண்டும் என்பதாகும்.**

**கிறிஸ்தவர்கள் நிஜத்தில் பின்பற்றுவது ஜீஸஸின் உண்மையான போதனைகளை அல்ல. மத குருக்கள் அவருடைய வார்த்தைகளின் உருவை மாற்றி, போதனைகளில் இணைத்து அவற்றைக் கெடுத்துவிட்டார்கள்.**

மெஹர் பாபா, ருஸ்தத்தைத் தேர்ந்தெடுத்து, இங்கிலாந்துக்குச் சென்று, சில சிறுவர்களை இந்தியாவுக்கு அழைத்து வருமாறு கூறினார். மார்ச் 7ஆம் நாள் பாபா, அந்தப் பயணத்தைக் குறித்து விரிவாக எடுத்துரைத்தார், **"நீங்கள் விரும்பியபடி கிரிக்கெட், கால்பந்து விளையாட்டுகளுக்கு எத்தனை முறை வேண்டுமானாலும் செல்லலாம்; திரைப்படங்கள் பார்க்கவும் செல்லலாம். உங்களுக்கு வரும் அனைத்து அழைப்புகளையும் ஏற்றுக்கொண்டு, யாரை நீங்கள் சந்தித்தாலும் அவர்களிடம் என்னைப்பற்றிக் கூறவேண்டும். அப்போது எனது பணி நிறைவடையும்."** அன்று மாலையே ருஸ்தம் மெஹராபாத்திலிருந்து புறப்பட்டு மூன்று நாட்களுக்குப் பிறகு மும்பையிலிருந்து கப்பல் வழியாக லண்டன் கிளம்பிச் சென்றார். அவர்தான் மேற்கத்திய நாட்டிற்குப் பயணம் செய்த முதல் மண்டலி ஆவார்.

மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு குறித்த முதல் புத்தக வெளியீடு (ஆங்கில மொழியில்) 1928 மார்ச் மாதத்தில் நடைபெற்றது; ருஸ்தம் இங்கிலாந்து சென்றபோது அவற்றில் சில பிரதிகளைத் தன்னுடன் எடுத்துச் சென்றார். கெ.ஜெ.தஸ்தூர் (ராம்ஜூவுடன் இணைந்து) எழுதிய அந்தப் புத்தகத்திற்கு "ஹிஸ் ஹோலினெஸ் மெஹர்பாபா & மெஹராஷ்ரம்" என்ற 'தலைப்பு' வழங்கப்பட்டது. முதலில் அச்சடித்த 1000 பிரதிகளும் வேகமாக விற்பனையாயிற்று; மேலும் உடனே 4000 பிரதிகள் தயாராயின.

இதற்கிடையில் ஆஷ்ரம சூழ்நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. கண்ணீரால் ஈரமான மெஹராபாத் மண், இப்போது நிலைமாறி தோற்றமளித்தது. மார்ச் 19ஆம் நாள், திங்கள்கிழமை, பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

ஒருமுறை கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிய அன்பின் தீப்பொறிகளை ஒருபோதும் அணைக்க முடியாது. ஆனால், அதைக் கிளறிவிட்டு எரியவைக்க ஒரு சில தனிப்பட்ட முயற்சிகள் தேவை. தூண்டிவிட்ட நெருப்பு பிரகாசமாக எரிந்து, உச்சக்கட்டத்தை எட்டும்போது அதனால் பாதிக்கப்பட்டவர்கள் வெப்பத்தைத் தாங்க முடியாமல் சற்று குளிருக்காக ஏங்குவார்கள்.

இந்நிலையில் அலி அக்பர் எனும் மற்றொரு சிறுவன் எப்படி மாறினான் என்பதைப் பாருங்கள். அவன் அடிக்கடி, 'எனக்குக் கடவுள் வேண்டாம்! வேறு எதுவும் வேண்டாம்! என் இதயத்தில் அனல்போல் எரியும் நெருப்பைத் தணித்து, குளிரச் செய்யுங்கள்!' என்று குரல் கொடுத்தான். ஆனால், அந்த நெருப்பை அணைப்பது என்பது அவனை உணர்வற்றவன் ஆக்குவது; இதுதான் நெருப்புக்கும், வெளிச்சத்திற்கும் இடைப்பட்ட நிலை. ஆனால், நான் அதை இந்நிலையில் அணைக்கப் போவதில்லை.

வெளிச்சத்தைக் காண்பதற்கு நெருப்பின் தாக்கத்தைத் தாங்கிக் கொள்ளவேண்டியது அவசியம்; ஒருமுறை அந்த வெளிச்சத்தைப் பார்த்துவிட்டால் நெருப்பால் ஏற்பட்ட வலி மறைந்துவிடும். அதன் பின்னர் எவ்விதமான துன்பங்களும் வேதனைகளும் இருக்காது.

இப்போது, மேற்கத்திய நாட்டுக்குச் சென்றிருக்கும் ருஸ்தத்தின் பயணம், என்ன விளைவை ஏற்படுத்துகிறது என்று பார்ப்போம். ஜனவரி மாதத்தில் வெளிப்பட்ட அன்பின் தீவிரம் இப்போதில்லை; அதன் தீப்பொறி தூறல்களும் இப்போதில்லை. அது வேறொரு வழியில் செயல்படுத்தப்படும். புதிதாக வருபவர்களின் பார்வையை உள்வாங்குவதன் மூலம், அன்பெனும் நெருப்பு வழியாக எடுத்துச் செல்லாமல், அவர்களுக்கு இறையொளியைக் காண்பிக்க முடியும்.

அலியை ஓர் ஊடகமாகப் பயன்படுத்துவதன் மூலம், அனைத்து சிறுவர்களுக்கும் அன்பின் ஒளியை வழங்கும் இறுதிகட்டப் பணியை அவன் செய்து முடிப்பான்.

சில நாட்களுக்குப் பிறகு, பாபா சிறுவர்களிடம், **"எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு, நீங்கள் ஆஷ்ரமத்தில் வந்தபோது படிப்பிலும், விளையாட்டிலும் எவ்வாறு ஈடுபட்டீர்களோ அவ்வாறே இருங்கள். இவ்வேளையில் அழுது ஆரவாரம் செய்யும் அன்பின் வெளிப்பாட்டை நான் அனுமதிக்க மாட்டேன். இனிமேல் எவ்விதமான ஆன்மீக ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வெளிப்பாடுகளுக்கு இடமில்லை"** என்று கூறினார்.

1928 மார்ச் 25ஆம் நாள், மெஹராபாத் மேல்மலையில், 'பிரேமாஷ்ரம்', முறைப்படி பாபாவின் சமாதி அறையின் அருகில் ஒரு தற்காலிக கட்டமைப்பில் நிறுவப்பட்டது. பிரேமாஷ்ரமத்திற்குப் புதிய விதிமுறைகள் வகுக்கப்பட்டன. சிறுவர்கள் தனியாக இருக்கும்போது, அவர்கள் விரும்பிய வேளையில் தியானம் செய்ய அனுமதித்து, மாலையில் விளையாட்டிலும்,

இதர பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளிலும் பங்கெடுக்க அனுமதிக்கப்பட்டது. மாலை நடைப்பயிற்சி வேளைகளில் பாபா சிறுவர்களை வழிநடத்தி, அவரது நெருங்கிய தோழமைக்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்கினார்.

மார்ச் மாத இறுதியில் பிரேமாஷ்ரம் சிறுவர்கள் கட்டுக்கடங்காதவர்களாக மாறியது மட்டுமின்றி, அவர்களில் சிலர் விசித்திரமாக நடந்துகொள்ளத் தொடங்கினர். சில சமயங்களில், சிறுவர்கள் தங்களைக் கடித்து, துணிகளைக் கிழித்து, கூக்குரலிட்டு அழுது, பாபா அழைத்தாலும் அருகில் வர மறுத்து ஓடிவிடுவது உண்டு. ஆகா அலியும் இதற்கு விதிவிலக்கல்ல; அவனும் இத்தகைய அவமரியாதைக்குரிய நடத்தையை பாபாவின் முன்னிலையில் வெளிப்படுத்தி, பலமுறை மிகவும் முரட்டுத்தனமாக நடந்து கொண்டாலும், பின்னர் அவன் தனது தவறை எண்ணி வருத்தப்பட்டான்.

இந்த சிறுவர்களின் தவறான நடத்தையால் பாபா பெரிதும் அவதிப்பட்டார். அவர்களிடையே அமைதியை நிலவச் செய்து சமாதானப்படுத்த, மணிக்கணக்காக, பல விளக்கங்களை அளித்து முயற்சி செய்தது மட்டுமல்லாமல், அவர்களுடைய முரட்டுத்தனமான செயல்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஒருமுறை அவர்கள் வெளிப்படுத்திய உற்சாகத்தில், பாபாவின் முழு நீள கம்பளி சட்டையை ஆங்காங்கே கிழித்தார்கள். கடந்த ஆறுவருடங்களாக பாபா அணிந்து வந்த, அவருக்கு மிகவும் பிரியமான அந்தச் சட்டையைத் தூக்கி எறியாமல், கிழிந்த இடத்தைத் தைத்து மறுபடியும் உபயோகப்படுத்தினார். ஒருமுறை, சிறுவர்கள் தங்கள் உற்சாகத்தில் மிகவும் தீவிரமடைந்து, பாபாவைக் கை வண்டியில் இழுத்துச் செல்லும் வேளையில், வேகமாகச் சென்றதால் கரடுமுரடான பாதையில் வண்டி சரிந்தது; இதனால் பாபாவின் கைகால்களில் பல காயங்கள் ஏற்பட்டன.

1928, ஏப்ரல் 1ஆம் நாள், மெஹராபாத்தில் நடந்த நிகழ்ச்சி அதன் சரித்திரத்தில் பொன்மொழிகளால் பொறிக்கப்படும். இதுவொரு தனித்துவமான நிகழ்வு, இதன் உண்மையான அர்த்தத்தை இறையுணர்வை அடைந்தவர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

அன்று காலை எட்டு மணியிலிருந்து பாபா, மெஹராபாத் மலையைச் சுற்றி வெறுங்காலில் நடக்கத் தொடங்கினார்.

பாபா, இவ்வாறு நடந்து சென்றதை அனைவரும் வியப்புடன் பார்த்தனர்; ஏதோ வழக்கத்திற்கு மாறான ஒன்று நிகழப்போவதன் முன்னறிவிப்பாகக் கருதினர். 'பாபாவின் இந்தச் செயற்பாட்டின் காரணம், திடீரென 'ஹஸ்ரத் பாபாஜான்' காரில் மெஹராபாத்திற்கு வந்ததே' எனப் புரிந்தது. அவருடைய கார், ரயில் தண்டவாளத்தின் மறுபுறம், பாபாஜான் அவர்களின் பெயர் பலகையைத் தாங்கிய சிறுமிகள் பள்ளிக்கூடத்தின் முன்னே நின்றது.



MEHERBABA.

# AN UNIQUE INSTITUTION.

There is much talk about Brotherhood, but not many attempts to make it practical have hitherto been made. An unique effort in this direction is now being made in India by Meherbaba, an Indian teacher, whose reputation for wisdom and sanctity is well known throughout India. He has founded an institution, known as Meherashram, in Ahmednagar, not far from Poona. Admission to this institution is free to boys, aged 10-16. Board, education, medical attention, and travelling expenses are all provided entirely free of charge for a period of 2 years. Boys of all races and creeds are welcome. There are already 80 boys at Meherashram.

Yet Meherashram should not be considered as a charitable boarding school. It is open to rich and poor alike. Religious scruples are strictly respected. No attempt at conversion is made, but the universal truths underlying all religions are taught, together with full secondary education. A staff of competent teachers is retained.

Parents who are interested should communicate with me immediately as a party of boys conducted by a Public School man will leave very shortly. A few selected boys will be taken.

R. K. SAROSH IRANI,
38, Ashchurch Park Villas, W. 12.

பிரிட்டன் பத்திரிகைகளில் விளம்பரம்



ருஸ்தம் இங்கிலாந்து வருகை 1928

ஹஸ்ரத் பாபாஜான், பல வருடங்களுக்கு முன்பு, பூனா வந்த நாளிலிருந்து, எக்காரணத்தை ஒட்டியும் அவர் நகருக்கு வெளியே சென்றதில்லை. எனவே, பாபாஜானை மெஹராபாத்தில் பார்த்ததும் அனைவரும் மிகுந்த ஆச்சரியமடைந்தனர். ஒரு வாரத்திற்கு முன்பு, பாபாஜான், பூனா நகருக்கு வெளியே உள்ள 'அவர்களின் குழந்தையின் இடத்திற்கு' செல்லவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரியப்படுத்தினார். அவர்கள் மெஹர் பாபாவைப் பற்றி எப்பொழுதும் பேசிக்கொண்டும், அன்புடன் நினைத்துக்கொண்டும் மேலும் அஹமதுநகர் செல்லவேண்டும் எனவும் கூறிக்கொண்டே இருந்தார்.

ருஸ்தம் இங்கிலாந்து சென்ற பிறகு, பாதிரி, மெஹராபாத்தில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவ்வேளையில், இப்படி ஒரு விதிமுறை வழக்கத்திலிருந்தது - அதாவது, பார்வையாளர்கள் பாபாவை சந்திக்க வரும் வேளையில், வருபவரின் பெயர், முகவரியைக் காகிதத்தில் எழுதி, பாபாவிற்கு அனுப்பிவைத்து, அவர் விருப்பத்தை அறிந்த பின்னரே பார்வையாளர்கள் பாபா இருக்கும் இடத்திற்கு அனுமதிக்கப்பட்டார்கள். எனவே, அந்த வழக்கப்படி பாதிரி கீழ்வரும் குறிப்பை பாபாவிற்கு அனுப்பி வைத்தார்:

தேதி: ஏப்ரல் 1, 1928.

பெயர்: ஹஸ்ரத் பாபாஜான்.

முகவரி: பூனா.

ஹஸ்ரத் பாபாஜான் மீதுள்ள மரியாதையின் நிமித்தம், பாபா, உடனடியாக, வெறுங்கால்களோடு (பாதை கடினமான, கூர்மையான கற்களால் நிரம்பியிருந்தும், வழக்கமான கை வண்டியில் வராமல்) தரையில் நடந்துவந்தார். ரயில் தண்டவாளத்தின் மறுபக்கம், பாபாஜான் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து ஏறக்குறைய 100 அடி தூரத்தில் பாபா நின்றார். பாபா, தனதருகில் மண்டலியில் ஒருவரை மட்டும் நிற்கக் கூறி, இதர அனைவரையும் பாபாஜான் அருகில் சென்று தரிசனம் செய்யுமாறு சைகையால் தெரிவித்து, தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். பாபாஜான் காரில் அமர்ந்திருந்தார். மண்டலி ஆதிகால பெண்மணியின் பாதங்களைத் தொட்டு வணங்கியபோது, அவர் மெஹர் பாபாவை புகழ்ந்து, 'என் அருமை மகன்' என்று தானாகவே பேசிக்கொண்டார். பாபாஜான் அதிகார தோரணையில் அசாதாரண இனிமையுடன் பேசினார், மேலும் மர்மமான முறையில், மண்டலி புரிந்துகொள்ள முடியாத விதத்தில் பல ஆன்மீக ரகசியங்களைக் குறிப்பிட்டார். மண்டலி, பாபாஜானுக்கு அருந்துவதற்காக நீர் வழங்கினர், சிறிது நேரத்தில் பாபாஜான் புறப்பட்டுச் சென்றுவிட்டார். இரண்டு குருநாதர்களும் எதுவும் பேசவோ அல்லது வெளியளவில் எந்தத் தொடர்பும் கொள்ளவோ இல்லை. அவர்களின் கண்கள் மட்டும் சந்தித்தன, ஆனால், யாருக்குத் தெரியும் என்ன இரகசிய செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர் என்று! பாபாஜான் புறப்பட்டுச் சென்ற பின்பு, மெஹர் பாபா நீண்ட நேரமாக விளக்கமளித்து, இறுதியில் ஓர்

அசாதாரண கருத்துடன் முடித்தார்: "**இன்றைய நாள் எனது வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் மிகப்பல உள்ளடங்கிய நாளாகும்!**"

அடுத்த நாள் பாபா, பதிலுக்கு விஜயம் செய்யும் பொருட்டு மண்டலியுடன் காரில் பூனா சென்றபோது, பாபாஜான் அவருடைய இருப்பிடத்தில் பக்தர்களோடு அமர்ந்திருந்தார்.

பாபா, இப்போதும் சற்று தொலைவில் நின்றுகொண்டிருந்தார், ஆனால், இம்முறை இருவரும் நதிக்கு இரு கரைகளிலும் இருந்தனர். மண்டலி நதியின் பாலம் வழியாகச் சென்று பாபாஜானை தரிசனம் செய்து வந்ததும், பாபா மெஹராபாத்திற்குத் திரும்பிவிட்டார். மீண்டும் இரண்டு குருநாதர்களின் கண்கள் மௌனமாக சந்தித்து இரகசியங்களைப் பரிமாறிக்கொண்டன.

ஹஸ்ரத் பாபாஜானை சந்தித்த இரண்டு வாரங்களுக்குப் பின்னர், 1928, ஏப்ரல் 15ஆம் நாள் பாபா, கடுமையான உபவாசம் மேற்கொண்டார் - இவ்வேளையில், வழக்கமாக அருந்தும் இரண்டு நேர தேநீர் கூட அருந்தவில்லை. தண்ணீரும் 24 மணி நேரத்தில் ஒருமுறை மட்டுமே அருந்தினார். சில நாட்களுக்குப் பிறகு, பாபா இவ்வாறு தெரிவித்தார், "**ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள், ஒரு வரையறுக்கப்பட்ட காலத்திற்கு உபவாசம் மேற்கொள்ளத் தயாராக இருந்தால், என்னுடைய உபவாசத்தை நிறுத்துவது பற்றி தீர்மானிப்பேன்.**" உடனே கெ.ஜெ.தஸ்தூர் இது விஷயத்தில் பாபாவின் நிபந்தனைகளைத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டார். அதற்கு பாபா, "**200 பேர் 24 மணி நேரம் உபவாசம் இருப்பதானால் நான் உணவு உண்பேன்**" என்று பதிலளித்தார்.

அதற்கிணங்க, ஏப்ரல் 24ஆம் நாள், காலை வேளையிலிருந்து மெஹராபாத்தில் வாழும் 200 பேர் 24 மணி நேரம், ஒரு வேளை மட்டும் நீரும், பாலில்லா தேநீரும் அருந்தி உபவாசமிருந்தனர். உபவாசம் நிறைவடைந்த மறுநாள் பாபாவும் பிறருடன் தேநீர் அருந்தி உபவாசத்தை நிறைவு செய்தார். பாபா அனைவருக்கும் அவரது கைகளால் உணவு வழங்கி, காலை 9 மணியளவில் - ஏறக்குறைய 6 மாதங்களுக்குப் பிறகு - சிறிதளவு சாதமும், காய்கறியும் உண்டார்.

ஏப்ரல் மாதத் தொடக்கத்தில், சிறுவர்கள் சரிவர நடந்து கொள்ளாவிடில் அவர்களை, பிரேமாஷ்ரமத்திலிருந்து மெஹராஷ்ரமத்திற்கு மாற்றி, பிரேமாஷ்ரமத்தை மூடிவிடுவதாக பாபா எச்சரித்தார். அவர்கள் நடத்தையில் மாற்றம் தென்படாத நிலையில், பாபா, மறுபடியும் கடுமையாக எச்சரித்த போது, சிறுவர்கள் கதறி அழத்தொடங்கினர். இறுதியில் கீழ்ப்படியாத சிறுவர்களை பாபா மன்னித்து, இப்படி நடந்து கொள்ளக்கூடாது எனக் கூறி அனுப்பினார்.

இதற்கிடையில், இங்கிலாந்து சென்ற ருஸ்தம், ஒரு சில சிறுவர்களை மெஹராஷ்ரமத்திற்கு அழைத்துவர மேற்கொண்ட முயற்சி தோல்வியை சந்தித்தது. மூன்று வாரங்கள் அங்குத் தங்கியிருந்த வேளையில் நடந்த

நிகழ்வுகளின் விபரங்கள் தெரியாதபோதும், இது பற்றி உள்ளூர் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்து, சில சிறுவர்களை தங்கும் விடுதியில் (38, ஆஷ்சர்ச் பார்க் வில்லாஸ்) ருஸ்தம் சந்தித்துப் பேசினார்; சிறுவர்களைத் தேடிக் கண்டுகொள்ள ஒரு முகவரையும் நியமித்திருந்தார். சிறுவர்கள் 10 வயதிலிருந்து 16 வயதுக்குட்பட்டு, எம்மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், குறைந்தது இரண்டு வருடங்கள் மெஹராபாத்தில் தங்கவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. அனைத்து செலவுகளையும் - இந்தியாவுக்கு வந்து செல்ல கட்டணம், உடை, உணவு, புத்தகங்கள், தங்கும் விடுதி அனைத்தும் இலவசமாக - மெஹராபாத் நிறுவனம் ஏற்றுக்கொண்டது.

இங்கிலாந்திலிருந்து ருஸ்தம் அமெரிக்கா பயணம் செய்ய ஆயத்தமான போது, பாபா அவருக்கு இவ்வாறு தொலைதந்தி அனுப்பி வைத்தார்: "**கவலைப்பட வேண்டாம். சிறுவர்களை அழைத்து வரவும் வேண்டாம். திரும்பி மட்டும் வருவீர்களாக.**" தொலைத்தந்தி ருஸ்தத்தை வந்தடைந்த அவ்வேளையில், மூன்று ஆங்கிலேய பெற்றோர்கள் அவரை சந்தித்து, அவர்களின் குழந்தைகளை இந்தியாவுக்கு அனுப்ப விருப்பம் தெரிவித்தனர். ஆனால், பாபாவின் இப்போதைய கட்டளைப்படி, ருஸ்தம் சிறுவர்களைத் தன்னுடன் அழைத்துச் செல்ல முடியாத நிலை. முகவரியை அவர்களிடம் கொடுத்துவிட்டு விரைவில் தொடர்பு கொள்வதாக ருஸ்தம் கூறிச் சென்றார்.

'மெரடித் ஸ்டார்' என்றழைக்கப்பட்ட ஆங்கிலேயர், ருஸ்தத்தை ஒரு நாள், தேநீருக்காக அவரது இல்லத்திற்கு அழைத்தார். 'ஆன்மீகம்', 'கிழக்கத்திய தியானம்', 'இறை வழிபாடு' இவற்றில் அக்கறை கொண்ட அவர், ருஸ்தத்தின் தொடர்பைப் பெரிதும் விரும்பினார். ஆங்கிலேய சிறுவர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் அவருக்கு உதவியாக இருந்தார். பாபா கூறி அனுப்பியதற்கு இணங்க, ருஸ்தம் பாபாவைப் பற்றி அவருக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். மெஹர் பாபாவைப் பற்றி, ருஸ்தம் கூறியதைக் கேட்ட மெரடித், ஏதோ ஈர்ப்பு சக்தியை உணர்ந்து, மிகுந்த ஆர்வத்துடன் காணப்பட்டார்; மேலும் இந்தியாவுக்குப் பயணம் செய்வதற்கான தனது விருப்பத்தையும் வெளிப்படுத்தினார். அதைத் தொடர்ந்து, மெரடித் பலரை சந்தித்து, ருஸ்தம் அறிமுகப்படுத்திய இந்திய குருநாதர் மெஹர் பாபாவைப் பற்றிக் கூறினார். மெரடித் சந்தித்த பலரில் ஆன்மீகக் கவிஞர் 'ஜாண் கால்ட்வெல்-ஜான்ஸ்டன்' (வயது 47) என்பவரும் ஒருவர். ருஸ்தம், இங்கிலாந்தை விட்டு புறப்படுவதற்கு முன்பு, ஜான்ஸ்டனுடன், எதிர்பாராமல் ஆச்சரியமளிக்கும் விதத்தில் ஒரு சந்திப்பு நிகழ்ந்தது; அதைப் பற்றி பாபா பின்பு கூறுகையில் '**அவர் மேல் நிலையை அடைந்த சாது**' என்பதைத் தெரிவித்தார். ஒரு நாள் ருஸ்தத்தை அங்கு வருமாறு அழைத்து, 'பாட்ஸ்மவுத்'லிருந்து (PORTSMOUTH) ஒரு முன்னேற்பாட்டு கடிதம் வந்திருந்தது. ஆனால், அப்படி ஒரு சந்திப்பிற்காக ருஸ்தம் வேண்டியதுமில்லை. வியப்படைந்த ருஸ்தம், அன்று மாலை

பாட்ஸ்மவுத் சென்று ஜான்ஸ்டன் மற்றும் அவரது மனைவியை சந்தித்தார். அடுத்து நடந்ததை ருஸ்தம் இவ்வாறு குறிப்பிட்டார்:

வழக்கமான ஆரம்ப பேச்சு பரிமாறல்களைத் தொடர்ந்து, அவர் அறையின் விளக்கு வெளிச்சத்தை வெகுவாகக் குறைத்து, யாருடனோ கம்பியில்லா கருவி மூலம் (அப்படி எவ்வித கருவியும் இல்லாத போதும்) பேசுவது போலத் தோற்றமளித்தார். ஜான்ஸ்டன், தனது மெல்லிய, பிறரைக் கவரும் தொனியில், ஏற்கனவே மதிமயங்கிய என்னிடம் இவ்வாறு எடுத்துரைத்து மெய்சிலிர்க்க வைத்தார்: "நான் அந்தக் குருநாதரைப் பார்க்கிறேன். மிகவும் அன்பானவர். இந்தியாவில் இப்போது இரவு இரண்டு மணி. (இங்கே அவர், மெஹராஷ்ரமத்தில் பாபா அமர்ந்திருப்பதை அப்படியே, தெள்ளத் தெளிவாக விவரித்தார்.) கிழக்கத்திய தேசத்தில் வாழும் இதர குருநாதர்களை (பாபாவின் ஐந்து சத்குருக்கள்) இவ்வேளையில் தொடர்பு கொண்டு, தொந்தரவு செய்ய நான் விரும்பவில்லை.

"நான் அந்த குருநாதரிடம், இங்கிருந்து ஆங்கிலேய சிறுவர்களை இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல அனுமதிக்க மாட்டேன் என்று இப்போது கூறினேன். ஆனால், அவர் உலகத்தில் அதைத் தடுக்க எந்த ஒரு சக்தியுமில்லை; நான் அந்த சிறுவர்கள் இப்போது இந்தியா வருவதில் அவ்வளவு ஆர்வமாக இல்லை என்று பதிலளித்தார். அவர் இப்போது கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கிடையே ஆன்மீக இணைப்பு கம்பிகளை நிறுவுவதில் அக்கறையாக இருக்கிறார். இதுவரையிலும் மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய நாடுகளை, அந்தந்த நாட்டு குருநாதர்கள் கண்காணித்து வந்தனர்; அவர் இப்போது அந்த இரண்டு பாகங்களையும் ஒன்றாக இணைக்கப் போகிறார். நீங்கள் உங்களுக்குத் தெரியாமலே ஒரு வகையான கம்பியில்லா (ரேடியோ) இணைப்பை உங்களுடன் சுமந்து செல்கிறீர்கள், அது, நீங்கள் சந்திக்கும் அனைவரையும் பாதிக்கிறது."

மெஹர் பாபாவிற்குப் பரிசாக ஜான்ஸ்டன், அவர் எழுதி, கையெழுத்திட்ட 'தி புக் ஆப் தி பிலவட்' (THE BOOK OF THE BELOVED) எனும் புத்தகத்தில் கீழ்வரும் வார்த்தைகளைப் பொறித்து வழங்கினார்:

எவ்வளவு தூரத்திற்கு உங்களைவிட்டு நான் செல்கிறேனோ,
அவ்வளவு நெருக்கத்தில் நான் உங்களுடன் இருக்கிறேன்!
எந்த அளவுக்கு உங்களை நான் மறக்கிறேனோ,
அந்த அளவுக்கு உங்களை நான் நினைக்கிறேன்!
என்னதான் அந்த இரவு குயில் பாடினாலும்,
அது பொன்னான உலகின் ரோஜா மலரை போலத்தான்!
எதைத்தான் அவன் குரல் கொடுத்துப் பாடினாலும்,
அதை அவன் உனக்காகத்தான் பாடுகிறான்!

இந்தக் 'கம்பியில்லா இணைப்பின்' வழியாக வெகுவாக பாதிக்கப்பட்ட ஆங்கிலேய நபர் யாரெனில், அவர் நிச்சயமாக மெரடித் ஸ்டார் ஒருவரே! கெ.ஜெ. தஸ்தூர் குறிப்பிட்டதுபோல மெரடித் ஸ்டார் பாபாவின் எதிர்கால

பணிகளில் பங்கெடுக்கும் வகையில் குறிப்பிடத்தக்கவராக இருந்தார். ஜான்ஸ்டன் கூறியதற்கிணங்க, ருஸ்தத்தை அவருக்குத் தெரியாமலேயே, மேற்கத்திய நாட்டை ஆன்மீக ரீதியாக இணைத்து, முக்கியமான தொடர்பை உருவாக்கும் ஒரு கருவியாக பாபா அனுப்பி வைத்தார் என்றே தோன்றுகிறது.

ஏப்ரல் மாத கடைசியில் ருஸ்தம் திரும்பி வந்ததும், ஆங்கிலேய சிறுவர்களை மெரடித் ஸ்டார் கண்காணிப்பில் இங்கிலாந்திலிருந்து அழைத்து வர பாபா அனுமதியளித்தார். அதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுமாறு பாபா கூறினார்.

1928 ஏப்ரல் மாதம், மெஹர் பாபா மறுபடியும் ஏகாந்தவாசத்தைத் தொடங்கினார். பாபா, சமாதியின் கீழ்நிலையில் இருந்தார்; எவரையும் மேல்மலைக்கு அனுப்ப வேண்டாம் என்று உத்தரவிட்டார்.

ஒரு நாள், எதிர்பாராமல் தனித்தனியாக மூன்று குழுக்கள் பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தன.

முதலாவதாக, மும்பையிலிருந்து அஹமதுநகருக்கு வந்த பார்சி மக்களின் குழு; மெஹர் பாபா, இறை ஞானி என்பதைக் கேள்விப்பட்டு, தரிசனத்திற்காக அன்று காலை 10 மணியளவில் மெஹராபாத் வந்தனர். அவர்களில் ஒரு சிலரே ஆர்வத்துடன் பாபாவின் தரிசனத்தை வேண்ட, பிறர் சுற்றுப்புற இடங்களைப் பார்ப்பதில் ஆர்வமாக இருந்தனர்.

அந்தக் குழு வருவதற்கு சற்று முன்பாக, ஓர் இந்து தம்பதியர் பாபாவை தரிசனம் செய்யும் ஒரே நோக்கத்தில் வந்திருந்தனர். பாபா, ஏகாந்தவாசத்தில் இருப்பதையும், இவ்வேளையில் தரிசனம் அனுமதிக்கப்படவில்லை என்பதையும் வந்தவர்களிடம் எடுத்துக் கூறியதும், ஊர் சுற்றும் எண்ணத்தில் வந்தவர்கள் கிண்டலாகப் பேசிவிட்டுக் கிளம்பிவிட்டனர். உண்மையான பக்தியோடு வந்த பார்சிகள் பாபா, கீழ் மெஹராபாத்திற்கு வருவார் என்ற நம்பிக்கையில் காத்திருந்தனர். அங்கிருந்த வேளையில் சாஞ்சி, பாபாவைப் பற்றிய பல விஷயங்களை விளக்கினார்; அதன் பின்னர் அனைவரும் திரும்பிச் சென்றனர்.

அதே நாள் மாலை வேளையில் ஏழை பரதேசி ஒருவர், பாபாவின் தரிசனத்தை நாடி மெஹராபாத்திற்கு வந்தார். பாபாவின் அறிவுறுத்தல்களை எடுத்துரைத்ததும், பாபாவின் தரிசனம் அவருக்கு நிச்சயம் வேண்டும், இல்லையேல் அங்கிருந்து போகப் போவதில்லை என்று உறுதியாகக் கூறிவிட்டார். கிணற்றருகே சென்று கைகால்களை சுத்தம் செய்து, அவருடைய குருநாதரை சந்திக்க ஆயத்தமானார். அருகிலிருந்த வேப்பமரத்தடியில் அமர்ந்து இறை நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தார்.

பாபாவின் விருப்பத்திற்கிணங்க, வெகு தூரத்திலிருந்து வரும் வழிப்போக்கர்களுக்கு உணவளிக்க வேண்டியது அவசியம்; எனவே, அந்த ஏழை பரதேசியையும் மண்டலி இரவு உணவுக்காக அழைத்தனர். வந்தவர் பதிலாக, "குருநாதரின் தரிசனத்திற்கு முன்பு நான் உணவு, தண்ணீர் எதையும்

தொடமாட்டேன்" என்று கூறினார். அவ்வளவு பிடிவாதமாகச் செயல்பட வேண்டாம், குருநாதரின் கட்டளைகளை மீறக்கூடாது என்றும் மண்டலி அவரை எவ்வளவோ வற்புறுத்தியும் அந்தப் பரதேசி கேட்டபாடில்லை. அன்றிரவு அறைக்குள்ளே வந்து தூங்குமாறு அழைத்த பின்னரும் அவர் அதையும் ஏற்றுக்கொள்ளாமல் வெளியே சாலையருகே ஓய்வெடுத்தார்.

அடுத்த நாள் காலையில் மண்டலி, அந்தப் பெரியவர் குவாட்டர்ஸ் வராந்தாவில் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, அவர் தனது முட்டாள்தனமான நடத்தையைக் கைவிட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். ஆனால், வந்தவர் தூக்கத்திலிருந்து விழித்தபோது அவரது முகம் பளீரென ஒளிர்ந்தது; அப்போது அவர் இவ்வாறு பிரகடனம் செய்தார்: "குருநாதர் எனது குரலுக்கு செவிசாய்த்து விட்டார்! என் ஆசையை நிறைவேற்றி, நேற்றிரவு குருநாதர் எனக்கு தரிசனம் வழங்கிவிட்டார்!" மண்டலி, பாபாவை அவர் கனவில் கண்டிருக்க வேண்டும் என்று எடுத்துரைத்து, பாபா அவருடைய பக்தர்களின் கனவில் அவ்வப்போது காட்சி தருவது வழக்கம், அத்தகைய அனுபவத்தை பாபா அவருக்கும் வழங்குமளவுக்கு அதிர்ஷ்டசாலி என்றும் கூறினர். இதைக்கேட்ட அந்தப் பரதேசி, துள்ளிக்குதித்து மண்டலியைக் கண்டித்தார்: "நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? நான் கண்டது கனவல்ல! மெஹர் பாபா என்னிடம் அவராகவே வந்து தரிசனமளித்தார்; பின்னர் அவர் மேல் மலைக்குத் திரும்பிச் சென்றார்." அவர் கூறியதை மண்டலியால் நம்ப முடியவில்லை, ஏனெனில் பாபா ஏகாந்தவாசத்தில் இருந்த அவ்வேளையில், ஓய்வெடுக்கச் சென்ற பின்னர், அவர் மலையின் கீழ்ப்பகுதிக்கு ஒரு முறை கூட வந்ததேயில்லை. ஆனால், அன்று பாபாவின் இரவு பாதுகாவலனாக இருந்தவர், பாபா இரவில் விளக்க முடியாத சில காரணங்களுக்காக, மலையின் கீழ்ப்பகுதிக்கு வந்து திரும்பிச் சென்றதாகத் தெரிவித்தார். அந்தப் பரதேசி கூறியது உண்மையென அப்போதுதான் புலப்பட்டது. மண்டலி அவரை அழைத்துச் சென்று சிற்றுண்டி வழங்கி அனுப்பி வைத்தனர்.

மெஹர் பாபா, முந்தைய நாளில் நடந்த சம்பவத்தைக் குறித்து மண்டலிக்கு இவ்வாறு எடுத்துரைத்தார்:

**நேற்று வந்த மூன்று குழுக்களும் அவரவர் தகுதிக்குத் தகுந்தாற்போல, பலனைப் பெற்றுச் சென்றனர். சுற்றுலா பயணமாக வந்தவர்கள், அவர்களுக்குத் தெரியாமலேயே, இந்தப் புனிதமான சூழ்நிலையின் நன்மைகளை அடையப் பெற்றனர். பக்திபூர்வமாக வந்த இந்து தம்பதிகள், இங்கே அமர்ந்து என்னுடைய கதைகளைக் கேட்டு, அறிந்து, அடைந்த நன்மைகள் இன்னும் பெரிது. எதுவும் தெரியாமலிருந்தும் அவர்கள் நம்பிக்கை மற்றும் பக்தியின் பலனை அறுவடைச் செய்தார்கள்.**

**ஆனால், அனைவரிலும் மிகவும் அதிர்ஷ்டசாலி அந்தப் பரதேசி மட்டுமே. அவரது உறுதி மற்றும் தீவிர பக்தியின் காரணமாக, நான் எனது ஏகாந்தவாசத்தை நிறுத்தி, மலையிலிருந்து இறங்கிவர வேண்டியதாயிற்று. கடவுளின் தரிசனத்தைப் பெற இதுபோன்ற உண்மையான நம்பிக்கையும்,**

**ஏக்கமும் இருக்க வேண்டியது அவசியம் - அதாவது 'கடவுளை நகரச் செய்து, அவரை மலையடிவாரத்திற்கு ஈர்த்து வருவது'**!

1928, மே 1ஆம் நாள், பாபா இறைவனோடு ஐக்கியமாகும் நிலையைப் பற்றி, சிறுவர்களுக்கு ஒரு சொற்பொழிவு வழங்கினார்:

"**இறுதியில், அன்பன், அன்பிற்குரியவன், அன்பு இவை அனைத்துமே ஒன்றாகிவிடும்.**" பாபா, உடனே ஒரு பெர்ஸியன் ஈரடி கவிதையை மேற்கோள் காட்டினார்:

**என் இதயத்தின் உள்ளார்ந்த பாகம் அன்பிற்குரியவரின்**
**எண்ணங்களால் நிரம்பியுள்ளன.**
**அதில் எனது பெயரும், வாழ்வும் அவர் நினைவில்**
**எப்போதோ தொலைந்துவிட்டன!**

பாபா, சிறுவர்களுக்கு இவ்வாறு வலியுறுத்திக் கூறினார்: "**எனவே தேவையான அன்பை உருவாக்குங்கள்; அப்போது நீங்கள் குருநாதரைக் காண்பீர்கள். அன்பிற்குரியவரை, தூரத்திலிருந்தாலும் நேசிக்க முடியும். அங்கே, அருகாமை, அதிக தூரம் என்ற கேள்விக்கு இடமில்லை. அன்பு அவசியம், அதை அன்பிற்குரியவரை இடைவிடாமல் நினைப்பதன் மூலம் அடைய முடியும்.**"

சில மாதங்களுக்கு முன்பு, மெஹர் பாபா, ஒரு மாற்றம் ஏற்படப் போவதாகக் குறிப்பிட்டிருந்தார், ஆனால், அவ்வேளையில் அவர் எதைக் கருத்தில் கொண்டு கூறினார் என்பது எவருக்கும் புரியவில்லை. ஆகா அலியை அவன் தந்தையார் திருப்பி அழைத்துச் சென்றபோது, பாபா, மெஹராபாத் ஆஷ்ரமம் பற்றி இவ்வாறு எடுத்துரைத்தார்: "**இவை அனைத்தும் ஆரம்பத்திலிருந்து மறுபடியும் செய்யப்பட வேண்டும்.**" ஆனால், ஒட்டுமொத்தமாக மெஹராபாத் சமூகம் வேறு ஓர் இடத்திற்கு மாற்றப்படும் என்பதை எவராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

மே 8ஆம் நாள் அதிகாலை 4.30 மணிக்கு, பாபா, சில மண்டலி மற்றும் சோட்டா பாபாவுடன் பூனா புறப்பட்டார். சோட்டா பாபாவை பிற சிறுவர்களிடமிருந்து தனியாக, பாபா அவரது சமாதியில் இரவும் பகலும் அவருடன் தங்க வைத்தார். பாபா, பல மாதங்களாக மெஹராபாத்தை விட்டு வெளியே அடியெடுத்து வைக்கவில்லை.

மெஹர் பாபா புறப்பட்டுச் சென்ற பின்பு, மெஹராபாத்திலிருந்த பிற மண்டலி அனைவரும், மீண்டும் ஓர் அரிய, குறிப்பிடத்தக்க நிகழ்வை காண முடிந்தது. பாபா, பூனா சென்ற அதே நாள், ஹஸ்ரத் பாபாஜான், எதிர்பாராமல் இரண்டாவது முறையாக மெஹராபாத்திற்கு வருகை தந்தார். அந்த ஆதிகால பெண்மணி அனைவரையும் சந்தித்து, சிறுவர்களுக்கு முத்தமளித்து, மண்டலியை அன்புடன் அரவணைத்தார். சிறிது நேரம் இருந்துவிட்டு திரும்பிச் சென்றார்.

பூனா செல்லும் வழியில், பாபா பயணம் செய்த கார் பாபாஜான் பயணம் செய்த காரைக் கடந்து சென்றது; பாபா, திரும்பி வரும் வேளையிலும் ஒன்றை ஒன்று கடந்து சென்றன. குருநாதர்கள் பயணம் செய்த இரண்டு வாகனங்களும் எதிர் எதிராக இரண்டு முறை சந்தித்த பின்னரும், ஒருவரும் காரை நிறுத்தவில்லை. அதைத் தொடர்ந்து, பாபாஜானைக் குறித்து, பாபா புலனாகாத முறையில் இவ்வாறு கூறினார்: "**பழங்கால மூதாட்டியின் இரண்டாவது வருகைக்குப் பின்னர், அது இப்போது கட்டாயமாகிவிட்டது.**"

மண்டலியுடன் நடந்த உரையாடலை நிறைவு செய்து, மறுபடியும் பாபா, மண்டலியிடம் அவர்கள் உடனிருக்க விரும்புகிறார்களா இல்லையா என்ற கேள்வியை எழுப்பினார். மே 9ஆம் நாள் கீழ்காணும் அறிவிப்பை பாபா வெளியிட்டார்:

**ஒரு சில காரணங்களை கருத்தில்கொண்டு, இங்கு நிறுவிய ஸ்தாபனங்களை,** (இன்னமும் முடிவு செய்யாத) **புதியதோர் இடத்திற்கு மாற்றும் நோக்கத்தில், பாபாவின் அறிவிப்பை கவனமாகப் படித்து, அவரவர்க்கு உகந்த முடிவெடுத்து, அதை அவருக்குத் தெரிவிக்கும்படி உத்தரவிட்டார்.**

<u>**உடனிருக்க விரும்புவோர்க்கு**</u>:

**அவர்கள் உடன் தங்குவது முற்றிலும் நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும், அதாவது, நேரம், இடம் அல்லது விளைவு குறித்து எவ்வித நிபந்தனையும், வாக்குறுதியும் இல்லாமல் இருக்க வேண்டும். இந்த விஷயங்கள் சம்பந்தமாக எந்தக் கேள்வியும் எழுப்பக்கூடாது. ஸ்ரீயின் விருப்பத்திற்கிணங்க, ஆன்மீகம் அல்லது பொருள் சார்ந்த எவ்வித வாக்குறுதியும் அளிக்காமல், அவர் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம், அங்கே எவ்வளவு காலமும் தங்கி இருக்கலாம் அல்லது அனைத்தையும் உடன் எடுத்துக்கொண்டு வேறு எங்காவது கூடச் செல்லலாம். மேலும், உடன் இருப்பவர்கள் ஸ்ரீயின் கட்டளைகளைக் கண்டிப்பாக முயற்சித்து, காரணம், வாதம் அல்லது விவாதம் போன்ற எந்தக் கேள்வியும் இல்லாமல் பின்பற்ற வேண்டியது அவசியம்.**

<u>**விலகிச் செல்ல விரும்புவோர்க்கு:**</u>

**இந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதவர்கள் அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக விட்டுச் செல்ல விரும்பும் அனைவருக்கும் அவ்வாறு செய்வதற்கு முழு சுதந்திரம் வழங்கப்படுகிறது; மேலும் இது குறித்து ஸ்ரீக்குத் தெரிவித்த பின்னர், எங்கு வேண்டுமானாலும் சென்று அவர்கள் விரும்பும் எதையும் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.**

பின்னர், ஆஷ்ரமத்திற்குப் பொருத்தமான இடம் பற்றி ஒரு விவாதம் நடைபெற்றது. குஜராத் நகரிலுள்ள நவ்ஸாரி, டாமன் மற்றும் பூனா அருகிலுள்ள சின்ஹாகாட்-மேற்கு (SINHAGAD-WEST) போன்ற சாத்தியமான

இடங்கள் பரிந்துரைக்கப்பட்டன. 1928, மே 15ஆம் நாள் பாபா, ருஸ்தத்துடன் இந்த இடங்களைப் பார்வையிட காரில் புறப்பட்டுச் சென்றார்.

ருஸ்தத்தின் காரில் மொத்தம் பத்து பேர் மற்றும் ஏகப்பட்ட சுமை, அளவுக்கு மீறிய எடையுடன் பயணம் தொடங்கியது. திரும்பி வரும் வழியில் கண்டாலா அருகில் மலையேறும் வேளையில், கார் திடீரென நின்று பின்நோக்கி நகர்ந்தது; மலையின் கீழ்பக்கத்தில் மிகவும் ஆழமான பள்ளத்தாக்கு இருந்தது.

கார் கட்டுப்பாட்டை மீறிவிட்டது என்ற அச்சத்தில் மண்டலி உறைந்து போயினர். ருஸ்தம் காரை நிறுத்த முயற்சித்தும் முடியவில்லை. கார் அதிவேகத்தில் பள்ளத்தாக்கில் சென்று விழும் அபாயம்! காரிலிருந்து இருவர் வெளியே குதித்து, பள்ளத்தாக்கு அருகில் இருப்பதைக் கண்டு, உரத்த குரலில் கத்தினர். ருஸ்தம், சத்தமாக பாபாவின் பெயரைக் கூப்பிட்டார். முன்னால் அமர்ந்திருந்த பாபா, ஓட்டுனர் பக்கம் சாய்ந்து, ஸ்டீயரிங் வீலைப் பற்றிக்கொண்டதும் கார் உடனடியாக நின்றது.

மண்டலி அனைவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். கார் எப்படி நிறுத்தப்பட்டது என்பது இன்று வரை புரியாத புதிராகவே உள்ளது. ருஸ்தம், பாபாவைப் பற்றியணைத்து நன்றியுடன், தேம்பி தேம்பி கண்ணீர்விட்டு அழுதார்.

மரணம் நிச்சயமென்ற நிலையிருந்து காப்பாற்றப்பட்ட அனைவரும் பாபாவிற்கு நன்றி தெரிவித்தனர். மண்டலி அனைவரும் சேர்ந்து வண்டியைத் தள்ளி, மலையைக் கடந்து சென்றனர். அதற்குப் பிறகு, தானாகவே கார் ஓட ஆரம்பித்ததும் அங்கிருந்து புறப்பட்டனர்.

மாலையில், அவர்கள் சிறிது தூரம் சென்ற பின்பு, தலைகாவ்ம் மற்றும் ஷெல்லார்வாடிக்கு இடையே மற்றொரு விபத்து நிகழ்ந்தது. சாலையின் குறுக்காக விழுந்திருந்த மரமொன்றை, மங்கலான விளக்கொளியில் ருஸ்தம் கவனிக்காமல் முழு வேகத்தில் காரை மரத்தின் மீது ஓட்டினார். காரின் முன் கண்ணாடி சுக்குநூறாக உடைந்ததைத் தவிர வேறு பெரிய அளவில் சேதங்கள் எதுவும் இல்லை. பாபா, மெஹராபாத்திற்குத் திரும்பி வந்து சேர்வதில் அவசரமாக இருந்ததால், வண்டியை ருஸ்தம் அப்படியே ஓட்டிச் சென்றார்.

மெஹராபாத் வந்து சேர்ந்ததும் பாபா, ஆஷ்ரமத்தை மாற்றுவதற்குப் பொருத்தமான இடத்தைக் கண்டுபிடிப்பது பற்றிய பிரச்சினையை மீண்டும் எழுப்பினார். மண்டலியில் ஒருவர் ‘டோக்கா’ (TOKA) எனும் இடத்தைப் பரிந்துரைக்க, பாபாவும் அவருடைய விருப்பத்தை உடனே தெரிவித்து, அன்றே அங்குச் சென்று பார்வையிட்ட பின்னர், இரவில் மெஹராபாத் திரும்பி வந்தனர்.

பாபா, டோக்கா கிராமத்தை மிகவும் விரும்பினார்; அடுத்த நாள், மே 18, அவர் அங்கு ஒரு நிலத்தை வாங்க ஏற்பாடுகள் செய்து, அதில் தற்காலிக கட்டமைப்புகளை அமைக்க உத்தரவிட்டார்.

மெஹராபாத்தில் தற்காலிகமாகக் கட்டியிருந்த மூங்கில் குடில்களைப் பிரித்து அவற்றை டோக்காவுக்கு எடுத்துச் சென்றனர். அவர்களது குடியிருப்பு முழுவதும் பிரிக்கப்பட்டதால், மெஹராபாத்தில் தங்கியிருந்த ஆண் மண்டலி, சில நாட்கள் திறந்த வெளியில் தூங்க வேண்டியதாயிற்று!

அதைத் தொடர்ந்து, டோக்காவில், இரவும் பகலும் பணிபுரிந்து, இரண்டே வாரங்களில் தற்காலிக கட்டமைப்புகள் நிறுவப்பட்டன. மே 30ஆம் நாள், பாபா தங்குவதற்கென, துனியருகே அமைந்த மேசை அறையை அப்படியே எடுத்து, மாட்டு வண்டியில் வைத்து (நான்கு எருதுகளைக் கட்டி) எடுத்துச் சென்றனர்; மேலும் அனைவரும் தங்குவதற்கான அனைத்தும் தயார் நிலையில் இருந்தன.

டோக்கா, அஹமதுநகரிலிருந்து 45 மைல் தொலைவில், ஔரங்காபாத் செல்லும் வழியில், கோதாவரி மற்றும் பிரவரா நதிகளின் சங்கமத்தில் அமைந்துள்ளது; இங்கே சிவாஜி மஹாராஜின் குருநாதர் சுவாமி ராம்தாஸ், ஷிர்டி சாய்பாபா இருவரும் நீண்ட காலம் தங்கியிருந்ததாக வரலாறு கூறுகிறது. டோக்கா வறண்ட நிலப்பரப்பாகத் தென்பட்டாலும், இனிமையான சுற்றுப்புற இயற்கைக் காட்சி, மலைகள், ஆறுகள் அனைத்தும் பாபாவின் மனதைக் கவர்ந்தன. அமைதியின் சூழ்நிலை இப்பகுதியில் முற்றிலும் பிரவேசித்தது.

1928, மே 27ஆம் நாள் பாபா, டோக்கா கிராமத்திற்குப் புறப்பட ஆயத்தமாகும் வேளையில் காய்குஷ்ரு பிளீடர், ஸவக் கொத்வால் இருவரும் பாபாவுடன் ஆஷ்ரமத்தில் இணையும் ஆர்வத்துடன் வந்தனர். பாபா, அவர்களை ஒரு சில நாட்களுக்கு மண்டலியுடன் தங்கியிருந்து, தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதோடு, பல்வேறு பணிகளையும் அறிந்திருக்க வாய்ப்பாக இருக்கும் என்ற எண்ணத்தில் அனுமதித்தார்.

அடுத்த நாள் பிளீடரை மேல்மலைக்கு அழைத்து, பாபா, அவருக்கு என்ன வேண்டும் என வினவினார். "நான் கடவுளைக் காணவேண்டும்" என்று பிளீடர் பதிலளித்தார்.

"**இது உலகில், அனைத்திலும் மிகக் கடினமான விஷயம். அதற்காக, ஒருவர் கற்பனைக்கும் எட்டாத தைரியத்தைக் கொண்டிருக்க வேண்டும், சொல்லொணா கஷ்டங்களுக்கு ஆளாக வேண்டும்**" என்று பாபா எச்சரித்தார்.

எதுவாயினும், பிளீடர் அனைத்து அசௌகரியங்கள் மற்றும் சிரமங்களையும் தாங்கிக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும், குடும்பப் பொறுப்புகள் எதுவுமில்லாமல் உலக பிணைப்புகளிலிருந்து முற்றிலும் விடுபட்டு விட்டதாகவும் தெரிவித்தார். "**உங்கள் இல்லத்திற்குத் திரும்பிச் சென்று எல்லாவற்றையும் திருப்திகரமாக ஏற்பாடு செய்யுங்கள், மேலும் எல்லா பொறுப்புகளிலிருந்தும் நீங்கள் முற்றிலும் விடுபடும்போது, திரும்பி**

**வாருங்கள்**" என்று பாபா அவருக்கு அறிவுறுத்தினார். பாபா கூறியபடி பிளீடர் மும்பைக்குத் திரும்பிச் சென்றார். அவரது முடிவை உறவினர்களுக்குத் தெரிவித்து, ஓரிரு இறுதிக்கட்டப் பணிகளையும் முடித்துவிட்டு, ஒரே வாரத்தில், பாபா, டோக்கா புறப்படும் முன்பு, நிரந்தரமாக தங்கும் நோக்கத்தில் மெஹராபாத் வந்தடைத்தார்.

1928, ஜூன் 1ஆம் நாள், ஸவக் கொத்வால் என்பவரும் பாபாவைத் தனியாக சந்தித்தார். 24 வயதிலும், உண்மையாக இறைவனைத் தேடும் நோக்கத்தில் முதலில் சத்குரு உபாஸனி மஹாராஜை (ஸாக்கோரியின் சத்குரு என்ற அவரது வாழ்க்கை வரலாற்றைப் படித்த பின்பு) சந்தித்தார். தொடர்ந்து நாராயண் மஹாராஜ், ஹஸ்ரத் பாபாஜான் இருவரையும் சந்தித்தார். பூனாவில் ஒருவர், அரன்காவ்மில் வாழும் மெஹர் பாபா, ஹஸ்ரத் பாபாஜானின் முக்கிய சீடர் என்று கூறியதைக் கேள்விப்பட்டு, ஸவக் கொத்வால், பாபாவைப் பார்க்க வந்தார். அவரது இதயத்தின் ஏக்கத்தை பாபாவிடம் எடுத்துரைத்தார்: "இந்தப் பிறவியில் நான் இறைநிலையை அடைய விரும்புகிறேன்."

"**கடவுளைத் தேடு அல்லது உலகை நாடு - இரண்டையும் நீங்கள் அடைய முடியாது! இப்படி எப்போதும் நடந்ததுமில்லை, நடக்கப் போவதுமில்லை**" என்று பாபா பதிலளித்தார்.

கொத்வாலுக்குக் கடவுள் வேண்டும், அதேவேளை திருமணமாகி ஒரு குழந்தையுடன் வாழும் அவர் குடும்பத்திற்கு உத்தரவாதத்தையும் நாடினார். இருந்தும், பாபா அவரை ஊக்குவித்தார், "**ஆன்மீகப் பாதையில் பயணிக்க நீங்கள் ஏங்குவதை நானறிவேன்; மேலும் என்னுடைய கண்காணிப்பில், நீங்கள் அடியெடுத்து வைப்பீர்கள். நீங்கள் அந்த இலக்கை அடைய விரைவில் முன்னேறி, இறுதியில் அதை நோக்கி முற்றிலும் திசை திருப்பப் படுவீர்கள்.**" ஒவ்வொரு வாரக் கடைசியிலும் பாபா அவரை சந்திக்கக் கூறினார். திருப்தியடைந்த கொத்வாலின் இதயத்தில் அந்நாளிலிருந்து பாபாவின் மண்டலியில் ஒருவராக இருக்கும் ஆர்வம் எழுந்தது. அவருடைய இளம் மகள் நாஜூவின் உடல் நிலை மிகவும் மோசமாக இருப்பதாக மனைவி நர்கிஸிடமிருந்து வந்த செய்தியறிந்து, கொத்வால் உடனே மும்பைக்குத் திரும்பிச் சென்றார்.

மெஹர் பாபாவை சந்தித்த பின்னரும் ஸவக் கொத்வால் பிற குருநாதர்கள், சாது, சன்னியாசிகளை அணுகுவதை வழக்கமாகக் கொண்டார் - குறிப்பாக 'தியாகி பாபா' என்பவரை சந்தித்தார். அடுத்த முறை மெஹர் பாபாவை சந்தித்த வேளையில் அவர், "**தியாகியிடம் ஆன்மீகத்தின் ஓர் அம்சம்கூட இல்லை. அவரை விட்டுவிடுங்கள், அரசனை அறிந்தவர்கள் அரண்மனை வாயிலில் நுழைய, காவலர்கள் முன் தலைவணங்கத் தேவையில்லை**" என்று குறிப்பிட்டார்.

இருந்தும், பாபா, கொத்வாலை மும்பையில் வாழும் ‘திப்பு பாபா’ என்பவரை சந்தித்து ‘**பேரரசர் என்னை உங்களிடம் அனுப்பி வைத்தார்**’ என்ற வெளியளவில் எளிமையாகத் தோன்றும் இந்தச் செய்தியை அவரிடம் எடுத்துரைக்குமாறு கூறி அனுப்பினார்.

கொத்வால் அப்படி எடுத்துரைத்ததும், அபூர்வமாக யாரிடமாவது ஓரிரு வார்த்தைகள் மட்டுமே பேசும் திப்பு பாபா, உடனடியாக இவ்வாறு பதிலளித்தார்: "அல்லா ஹூ அக்பர்! அல்லா ஹூ அக்பர்! (கடவுள் மிகப் பெரியவர்). இந்த ஆசீர்வாதங்களை நான் உனக்கு வழங்குகிறேன். பணி வெற்றிகரமாக முடிந்தது. இப்போது செல்லலாம்."

அதற்குப் பிறகு பாபா, கொத்வாலிடம் திப்பு பாபாவை அடிக்கடி சந்திக்குமாறும், அதேவேளை வேறு எவரிடமும் செல்லக்கூடாது எனவும் கட்டளையிட்டார். ஒரு முறை மெஹர் பாபாவின் புகைப்படம் ஒன்றை எடுத்துவந்து, திப்பு பாபாவின் அறையில் வைப்பதற்காக அவரிடம் அனுமதி பெற்று, அதை, அறை சுவரில் தொங்கவிட்டார். மெஹர் பாபாவின் புகைப்படத்தைப் பார்த்து திப்பு பாபா, "இந்த முழு உலகமும் உய்ப்பது மெஹர் பாபாவின் பெயரில்தான்!" என்று பறைசாற்றினார்.



மெஹர் பாபா, டோக்கா - **1928**



மேற்கத்திய உடை, கிருஷ்ணராக, செப்டம்பர் **1928**



டோக்கா ஆஷ்ரமம்



மெஹர் பாபாவும்
பிரேமாஷ்ரம் சிறுவர்களும்

# டோக்கா ஆஷ்ரமம்

(**Toka Ashram**)

1928 ஜூன் 3ஆம் நாள், மண்டலி மற்றும் சிறுவர்களை அதிகாலை வேளையில், டோக்கா அழைத்துச் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அன்று காலை மூன்று மணிக்கு, பாபா கீழ் மலைக்கு வந்து, முதலில் பெண் மண்டலியுடன் சிறுவர்களை அனுப்பி வைத்தார்.

டோக்காவில் பெண் மண்டலி, குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் குடும்ப நபர்களுடன் ஏறக்குறைய 500 பேர் புதிய கட்டிடத்தில் இருப்பிடம் அமைத்துக் கொண்டனர்.

ஸ்ரீபாபா டோக்கா ஆஷ்ரமத்தை நோக்கிப் புறப்பட்டதும், காலம், மெஹராபாத் பூர்வீகம் கண்ணீர் சிந்துவதைத் திரும்பிப் பார்த்தது; வெறிச்சோடிய வயலிலும் மலையிலும் மந்தமான உணர்வலைகள் ஒரு மூடுபனிபோலத் திரைபோட்டு மறைத்தன; துனியின் நெருப்பால் உருவான சாம்பல், பிரிவைத் தாங்கமுடியாமல் புலம்பியது; குடிலின் சுவர்கள் மௌனத்தின் இடரால் வரும் வலியை அனுபவித்தது; பூக்களின் புன்முறுவல் நின்றதோடு பறவைகள் பறப்பதும், தென்றலின் உற்சாகமும் மறைந்தன.

இயற்கை மற்றும் மனிதனின் ஒவ்வோர் அம்சமும், இறை போதையில் மெஹராபாத்திலிருந்த ஒவ்வோர் அணுவும் ஒன்றை மட்டும் அறியத் தவித்தன: "பிரியமான ஸ்ரீபாபா தனது தலைமையகத்தை மாற்றுவதன் காரணம்தான் என்ன? அவர் எங்குச் சென்றார்? அவரின்றி இங்கு அனைத்தும் வெறிச்சோடி, உற்சாகமற்று உள்ளது. இவ்வுலகிற்கு உருகொடுக்கும் இறைவனே, எங்கள் மீது கோபமா இல்லை வருத்தமா? எங்களை ஏன் தனியாகத் தவிக்கவிட்டு, கவலையில் கண்கலங்கச் செய்தீர்கள்?

ஆனால், பிரியமான ஸ்ரீபாபா மெஹராபாத்தை மறக்கவில்லை. அதன் பணிவான பக்தியை தன்னுடன் எடுத்துச் சென்று, டோக்காவின் அமைப்புக்கு மெஹராபாத் என்று பெயர் சூட்டினார். தெற்கு நோக்கி விரைந்து சென்ற தென்றல் காற்று, இந்தச் செய்தியை எடுத்துச் சென்று, மெஹராபாத்தை முகம் மலரச் செய்தது; அளவிறுதியற்ற இறைவனின் இதயத்தில் மெஹராபாத் பத்திரமாக இருப்பதை உணர்ந்து பூரிப்படைந்தது.

டோக்காவில் தங்கியிருந்த முதல் நாள் இரவில், அந்தக் குழப்பமான சூழலில், ராம்ஜூவின் மனைவி கத்திஜா உடல்நலமின்றி மிகவும் மோசமான நிலையில், மிகக்குறைவான இதயத் துடிப்புடன், உடல் குளிர்ந்து காணப்பட்டார். மெஹர் பாபாவை அழைத்ததும் அவர் வந்து சற்று நேரம் அங்கே அமர்ந்திருந்தார். கத்திஜாவின் உடல்நிலை படிப்படியாகச் சீரானது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, பெய்லி, பாபாவின் தந்தை ஷெரியார், தங்கை மணிஜாவுடன் பாபாவை சந்திக்க வந்தார். திரும்பிச் செல்லும் வேளையில் சிறுமி மணிஜா கண்களில் நீர்வழிய புறப்பட்டுச் சென்றார்.

மெஹர் பாபாவின் மண்டலி, டோக்கா ஆஷ்ரமத்தில் அனுபவித்த கஷ்டங்களை, சாஞ்சியின் குறிப்புப் புத்தகத்தைப் புரட்டினால் ஓரளவு புலப்படும்.

பலத்த மழையால் அனைத்து பணிகளும் நிறுத்தப்பட்டன - மேலும் கால சூழ்நிலையில் கடுமையான மாற்றம் ஏற்பட்டாலும், குறிப்பாக, இரவில் நூற்றுக்கணக்கான புழு பூச்சிகள், தேள், பாம்பு போன்றவற்றின் தொல்லைகள் மண்டலியைப் பாடாய்ப் படுத்தின. மண்டலி தங்கியிருந்த அறையில் கட்டுக்கடங்காத நெரிசல் ஏனெனில் மழையால் வெளியே தூங்க முடியாத நிலை.

1928, ஜூன் 12ஆம் நாள், இங்கிலாந்தில் ருஸ்தம் தொடர்புகொண்ட 'மெரடித் ஸ்டார்' என்பவரிடமிருந்து வந்த தொலைத்தந்தியில், அவர் இந்தியாவை நோக்கிக் கப்பலில் பயணம் செய்வதாகவும், அவருடன் அவரது மனைவியும், மனைவியின் தங்கையும் வருவதாகவும், சிறுவர்கள் எவரும் உடன் வரவில்லையெனவும் குறிப்பிட்டிருந்தார். இந்தச் செய்தியைக் கேட்டு, பாபா சீற்றத்துடன் காணப்பட்டார். மண்டலியால் அதன் காரணத்தை யூகிக்கவோ அல்லது அவரது வெளிப்படையான கவலை மற்றும் துயரத்தைத் தணிக்கவோ முடியவில்லை.

திடீரென பாபா, மிகவும் அமைதியற்றவராகத் தோற்றமளித்தார், அடுத்த நாள், ஆகா அலியை உடனே திருப்பி அழைத்துச் செல்ல அவனது தந்தையார் ஆஷ்ரமம் வந்ததும், அந்த மர்மம் அனைவருக்கும் புலப்பட்டது. அலியின் தந்தை, தவறான வதந்திகளைக் கேள்விப்பட்டு, வருத்தத்தில் இருந்தார். ராவ்ஸாஹேப், வந்தவரை சமாதானப் படுத்தி, உண்மையை எடுத்துக் கூறினார்.

1928, ஜூன் 14ஆம் நாள் பாபா, பிரேமாஷ்ரம் மாணவர்களுக்கு ஓர் அட்டவணையை தயார் செய்து, மண்டலியின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் குறித்த வழக்கமான விதிகளை வகுத்தார். ஆஷ்ரமத்தின் மேலாளராக புவாஸாஹேப் நியமிக்கப்பட்டார்; அவரைப் பற்றி பாபா இவ்வாறு தெரிவித்தார்: "**அவர் நியாயமானவராக இருந்தாலும், மக்களுடன் பேசும் தொனியும் விதமும் விரும்பத்தக்கதல்ல. எடுத்துக்காட்டாக, 'என்னுடைய தாயார்' என்று கூறுவதற்கு பதிலாக 'எனது தந்தையின் மனைவி!' என்று கூறுவது. அவர் எனக்கு உண்மையுடனும் முழுமனதுடனும் சேவை செய்கிறார், ஆனால், அவர் பேசும் முறை, மக்களை சற்று விலகி நிற்கச் செய்கிறது.**"

1928ஆம் ஆண்டு மெஹர் பாபாவின் பெயர் மற்றும் போதனைகள் ஐரோப்பாவின் சில பகுதிகளில் பரவத்தொடங்கியது. ஜூன் 16ஆம் நாள், 'போலந்து', 'வார்ஸா' போன்ற நகரங்களில், ஒரு சில ரசிகர் குழுக்களிடையே நடைபெற்ற கருத்துரையாடலில், மெஹர் பாபாவின் ஆன்மீகக் கொள்கைகளைப் பற்றி, தஸ்தூர், சமீபத்தில் வெளியிட்ட புத்தகத்தில் குறிப்பிடப்பட்டு இருப்பதற்கு இணங்க, ஆன்மீகப் போக்கை ஊக்குவிக்கும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டன. பாபா இதைக்கேட்டு '**ஒரு நல்ல அறிகுறி**' என்று குறிப்பிட்டார்.

ஜூன் 18ஆம் நாள், பாபா, அவருடைய இருப்பிடத்திற்கு அருகில் சோட்டா பாபா, குஸ்தாஜி, குல்மாய் மூவருக்கும் தனித்தனி அறைகளை ஒதுக்கி, பிரேமாஷ்ரம் சிறுவர்களுக்கு, புதிய கால அட்டவணையை வரையறுத்தார். அன்று மதியம், பாபா இரண்டு மண்டலியுடன் இணைந்து கனமான உருளையை இழுத்து, மண்டலிக்குத் தேவையான 'புதிய மக்கான்' (உறைவிடம்) கட்டுவதற்கான நிலத்தை சமப்படுத்தினார்.

இக்காலகட்டத்தில், மண்டலி உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் மிகவும் நட்பாக இருப்பதை பாபா ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கிடையேயான நட்பின் உண்மையான பிணைப்பை அவர் விரும்பினார்.

இதன் அர்த்தம் என்னவெனில், அவர்கள், வெளியளவில் உண்மையாக ஒருவருக்கொருவர் அலட்சியமாக நடந்து கொள்ளும் அதே நேரத்தில், உள்ளளவில் நண்பர்களாக இருக்கவேண்டும். அவர்கள் மிகவும் நெருக்கமாக இருப்பதை பாபா விரும்பாததன் காரணம், அது, பாரபட்சத்திற்கு வழிவகுக்கும். இத்தகைய பாகுபாடு காரணமாக, மண்டலியில் எவரேனும் செய்த தவறை, அவருடன் நெருக்கமான ஒருவர் மூடி மறைத்திருந்தால், அது, பாபாவைப் பெரிதும் வருந்த வைக்கும்.

உதாரணமாக, அன்று விஷ்ணுவை, ருஸ்தத்துடன் தொடர்புபடுத்தி, பாபா கடுமையாகக் கண்டித்தார், "**இப்போது நீயும் ருஸ்தம் பக்கம் சாய்ந்துவிட்டாய். பாதிரி, பெண்டு இருவரும் அவரின் பழைய நண்பர்கள், ஏனெனில், நீண்ட காலமாக, முந்தைய பிறவிகளிலிருந்து அவரின் தொடர்பில் இருப்பவர்கள். ஆனால், நீயும் ஏன் அந்தப் படுகுழிக்குள் விழ விரும்புகிறாய்?**"

மெஹர் பாபா இறுதியாக இவ்வாறு எடுத்துரைத்தார்: "**ஒருவர் நண்பர்களின் தவறுகளை மூடி மறைக்காமல் இருப்பதே உண்மையான நட்பு, அதனால் அவர்கள் குறைபாடுகளிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். பாரபட்சம் இங்கே எந்த விதத்திலும் உதவியாக இருக்காது**!"

அதைத் தொடர்ந்து, பாபா, டோக்கா கிராமத்தைப் பற்றி மண்டலிக்குக் குறிப்பிட்டார்: "**டோக்கா ஓர் அருமையான இடம், ஆனால், என்னிதயத்தில்**

**அமைதியில்லை. தாஜ்மஹல் ஹோட்டலில் வேண்டிய வசதிகளும், சிறப்பான உணவு வகைகளும் உள்ளன. ஆனால், உனது அடிவயிறு வலிக்க ஆரம்பித்தால் நீ அதை அனுபவிக்க முடியாது. அதேபோல், இங்கே எல்லாம் சிறப்பானதாக இருந்தாலும், என் இதயம் மகிழ்ச்சியாக இல்லை. ஒருவரின் ஆரோக்கியத்திற்காக இடமாற்றத்தை மருத்துவர் பரிந்துரைப்பது போல், என் இதயம் மகிழ்ச்சியற்றதாக இருப்பதால், இந்த சூழலையும் மாற்றுமாறு எனது மருத்துவர் கூறுகிறார்."**

ஜூன் 19ஆம் நாள், பள்ளிக்கூட மாணவர்களில் அலி அக்பர், ராமாஜி இருவரும் ஏற்கனவே வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளில் ஒன்றை மீறியதைத் தொடர்ந்து, பாபா வருத்தத்துடன், "**மண்டலியும் மாணவர்களும் என்னுடைய விருப்பங்களை அலட்சியம் செய்வதானால், இங்கே இருப்பதில் என்ன பலனிருக்கிறது? அவர்களுக்கு அளவுக்கு அதிகமாகச் செல்லம் கொடுத்து, அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றி, அனைவரையும் அவரவர் கடமையைச் செய்ய வைத்து, தோள்களைத் தட்டிக் கொடுப்பது எனது தலையாய கடனாக இருக்குமாயின், நான் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்?**”

டோக்கா சென்ற நாளிலிருந்து அலி அக்பர், ராமாஜி இருவரும் ஆஷ்ரமத்தில் எழும் சிக்கல், சிரமங்களுக்குக் காரணமாக இருக்கிறார்கள். பாபா இரண்டு சிறுவர்களையும் மிகவும் விரும்பினார், ஆனால், அவர்களின் கீழ்ப்படியாமை மற்றும் அலட்சிய மனப்பான்மை காரணமாக, ஆஷ்ரமத்தை இங்கிருந்து மாற்றுவதற்கான செலவுகளின் மதிப்பீட்டைத் தயாரிக்குமாறு மண்டலியிடம் கூறினார். இங்கு வந்து இரண்டு வாரங்கள் கூட நிறைவுறாத இக்கட்டத்தில், பாபா, இங்கிருந்து வெளியேறுவதைப் பற்றித் திட்டமிடுவதை எண்ணி மண்டலி இயல்பாகவே அதிர்ச்சியடைந்தனர்.

அலி அக்பர், ராமாஜி இருவரின் நடத்தை விரும்பத்தகாததாக இருந்தாலும், மெஹர் பாபா அவர்களிடம் சிறப்பு கவனம் செலுத்தி, இதை நினைவில் கொள்ளுமாறு வலியுறுத்திக் கூறினார்: "**இறை போதையில் மிக உயர்ந்த நிலையில் இருந்தாலும், உங்கள் தலையானது எப்போதும் குருநாதரின் பாதங்களில் இருக்கட்டும்! இதைப் பின்பற்றினால், நீங்கள் இரத்தினக் கற்களாக மாறுவீர்கள்.**"

ஜனவரி மாதத்தில், பிரேமாஷ்ரம் சிறுவர்கள் இறையுணர்வின் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் தருவாயில், பாபா பல்வேறு ஆன்மீக சொற்பொழிவுகளை வழங்கி, அவர்களின் மிகச்சிறிய குறைபாடுகளைக் கூட எடுத்துக்காட்டி, நடத்தை மற்றும் செயல்முறைகளை மேம்படுத்த முயற்சி செய்தார். கண்டிப்புடன் இருந்து, அவருடைய கட்டளைகளுக்கு முழுமையான கீழ்ப்படிதலை வலியுறுத்துவதன் மூலம், பாபா, அவர்களின் அன்பெனும் மலருக்கு மணம் சேர்த்துக் கொண்டிருந்தார்.

மெஹர் பாபா பெண் மண்டலியை சந்திக்கச் செல்லும்போதெல்லாம் பிரேமாஷ்ரம் சிறுவர்கள் பாபாவைப் பின்தொடர்ந்து, அவரைத் தங்கள் பக்கம் இழுத்துவர முயற்சித்தனர். பெண் மண்டலியைத் தனியாக சந்தித்துப் பேச, பாபா, ஒரு சில வாய்ப்புகளே அளித்தாலும், சிறுவர்கள் பாபாவைத் தனியாக விடுவதில்லை. ஒருநாள் பாபா பெண் மண்டலியுடன் அமர்ந்திருந்த வேளையில், ஆஷ்ரம சிறுவர்கள் திடீரென அவர் முன் வந்து நின்றனர்.

மெஹர் பாபா, பெண் மண்டலிக்கு அதிக நேரம் அவருடைய சகவாசத்தை வழங்குவதில்லை என அவர்கள் குறையாக எடுத்துக் கூறிய வேளையில், பாபா, இவ்வாறு பதிலளித்தார்: "**நான் என்னதான் செய்யட்டும்? எங்கே இருக்கட்டும்? - இங்கேயா இல்லை அங்கேயா? நான் இங்கே இருந்தால் சிறுவர்கள் ஏமாற்றமடைகிறார்கள், நான் அவர்களோடு அங்கே இருந்தால் நீங்கள் அதிருப்தியடைகிறீர்கள். எனவே இந்தப் பிரச்சினைக்கு நீங்களே ஓர் 'இழுபறி போர்' மூலமாக முடிவு செய்யுங்கள். என்னை நீங்கள் எங்கு இழுக்கிறீர்களோ அங்கே நான் செல்கிறேன்!**"

பாபா நடுவில் நிற்க பெண் மண்டலி ஒரு கையையும், சிறுவர்கள் மறு கையையும் பிடித்து இழுத்தனர். "**உங்கள் முழு வலிமையையும் சேர்த்து இழுங்கள்**" பாபா, சைகையால் காண்பித்தார். "**யாருக்கு பலம் அதிகம் - மேலும் யாருக்கு என் மீது அன்பு அதிகம் என்று பார்ப்போம்**" என்றார் பாபா. போட்டி ஆரம்பித்தது, பாபா, இருபக்கமும் அங்குமிங்கும் இழுக்கப்பட்டார், இந்த இழுபறி பல நிமிடங்களுக்கு நடந்தது, இறுதியில் வெற்றி பெண் மண்டலிக்கே! அந்த நாளிலிருந்து சிறப்பு சலுகையாக, பாபா சற்று அதிக நேரம் பெண்மண்டலியுடன் அமர்ந்திருந்தார்.

மெஹரா மீதான அவரது அன்பு தனித்துவமானது, கிருஷ்ணா, ராதா மீது வைத்திருந்த அன்புக்கு இணையானது. ஒரு முறை பாபா, மெஹராவிடம் "**உனக்கான எனது அன்பு, வேறு எவர் மீதும் காட்டும் அன்பை விட மிகையானது**" என்று கூறினார்.

1928, ஜூன் 22ஆம் நாள் பாபா ஏகாந்தவாசத்தில் நுழைந்து, அந்த சிறு அறையில் அமர்ந்து, தினமும் ஒருவேளை மட்டும் உணவு உண்டு வந்தார்.

மெஹர் பாபா மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், (இங்கிலாந்திலிருந்து இந்தியா வரும்) ஆங்கிலேயர்கள் மெரடித் ஸ்டார் மற்றும் அவரது மனைவியைப் பற்றிய பேச்சு எழுந்தது. பாபா இவ்வாறு தெரிவித்தார்: "**சிறுவர்களுக்கு பதிலாக, பெரியவர்கள் இங்கிலாந்திலிருந்து வருகிறார்கள் என்பது பரிதாபத்திற்குரியது. ஆன்மீகப் பாதையில் 'ஸ்டார்' சிறிதளவே முன்னேறியுள்ளார். ஆனால், அவருடைய குரு 'ஜான்ஸ்டன்' ஆன்மீகத் தளங்களில் மேல்நிலையில் இருப்பவர். ஐரோப்பாவில் இவரைப்போல வேறு எவருமில்லை. சிறப்பான புத்தகங்களை எழுதியுள்ளார்.**"

மெரடித் ஸ்டார் (38), அவரது மனைவி ‘மார்கரெட்’ மற்றும் மனைவின் தங்கை ‘எஸ்தர்’ மூவரும் ஜூன் 30ஆம் நாள் டோக்கா ஆஷ்ரமம் வந்து சேர்ந்தனர். ருஸ்தம் அவர்களை பிரவரா, கோதாவரி நதிகள் சங்கமிக்கும் இடத்தில் சந்தித்து, அங்கிருந்து அவருடைய காரில் அழைத்து வந்தார். அவர்கள் அந்த இடத்தின் அழகிய சூழ்நிலைகளைக் கண்டு ஆச்சரியமடைந்து அதைப் பெரிதும் விரும்பினர். வந்தவர்கள் பாபாவிற்கு பூவும், பழமும் அளித்து வணங்கினர். ருஸ்தம் ஆஷ்ரமத்தைச் சுற்றிக் காண்பித்தார். அவர்கள் தங்குவதற்கென சிறப்பு அறைகள் கட்டப்பட்டிருந்தன.

மெரடித் ஸ்டார், சிறுவயதிலிருந்தே கிழக்கத்திய தத்துவம் மற்றும் ஆன்மீகத்தில் மிகுந்த அக்கறையுள்ளவர். உபநிஷதங்களைப் படித்தபோது, காலங்காலமாக அந்த சிந்தனைகளில் வாழ்ந்ததுபோல் ஓர் உணர்வு அவருக்கு! இங்கிலாந்தில் ‘அலிஸ்டர் க்ரோலி’, ‘ருடோல்ப் ஸ்டீனர்’ எனும் மேதாவிகளுடன் பல காலங்கள் இருந்தார். தியானம், தனிமை வாசம் இவற்றில் பங்கெடுத்து, சிறிதளவு ஆன்மீக நுண்ணறிவைப் பெற்றார். கடந்த ஏப்ரல் மாதம் ருஸ்தத்தை லண்டனில் சந்தித்தபோது, மெரடித் ஸ்டார், இக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு குருநாதரின் வழிகாட்டுதலுக்காக அவர் செய்த பிரார்த்தனைகளுக்கு இறுதியாக பதிலளிக்கப்பட்டது என்று கூறினார். கணவன், மனைவி இருவரும் அவர்களின் உடைமைகளை முழுவதுமாக விற்றுவிட்டு, மெஹர் பாபாவுடன் நிரந்தரமாக வாழும் நோக்கத்தில் இந்தியா வந்தனர்.

ஒரு நாள் இரவு தியானத்தைப் பற்றி மெஹர் பாபா அவருக்கு விளக்கிய வேளையில், "**தியானம், மனதை ஒருநிலைப் படுத்தல் இரண்டும், ஒரு பல்லி அனைத்தையும் மறந்து, ஒருமுகப்பட்ட கவனத்துடன் இரையைப் பிடிக்க இருப்பது போல், இயற்கையாக இருக்க வேண்டும். அதன் முழு கவனமும் ஒருநிலைப்பட்டதாக இரையைத் தேடி அதன் மீது பாய்ந்து பற்றிக் கொள்ள ஆயத்தமாக இருப்பது போல் இருக்க வேண்டும்**" என்று குறிப்பிட்டார்.

1928, ஜூலை 4ஆம் நாள் பாபா, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, மௌனம் அனுஷ்டிக்குமாறு, கீழ்வருவதையும் எடுத்துக்கூறி, மெரடித் ஸ்டாருக்குக் கட்டளையிட்டார்: "**உலகம் முழுவதிலும் எனது வெளிப்பாட்டின் நேரம், மிக அருகாமையில் உள்ளது. எனது உலகளாவிய அந்த நாடகத்தில் நீங்கள் ஒரு முக்கிய பாத்திரமாக இருப்பீர்கள்.**"

ஆஷ்ரமத்தில் இருந்த வேளையில், மார்கரெட், எஸ்தர் இருவருக்கும் தினமும் மூன்று மணி நேரம் துணி தைக்கவும், அதைத் தொடர்ந்து தியானம் செய்யுமாறும் பாபா கூறியிருந்தார். அவ்வப்போது அவர்களை அழைத்து, தனது பக்கத்தில் அமருமாறு கூறினார். பாபா, எஸ்தரிடம், "**நான் சொல்வதை நீங்கள் அப்படியே செய்தால், உங்களை நான் மற்றுமொரு சகோதரி நிவேதித்தாவாக மாற்றுவேன்**" என்று கூறினார்.

மார்கரெட், இதற்கு முன்னதாக, கீழ்காணும் சில அறிக்கை குறிப்புகளை மண்டலிக்கு எழுதியிருந்தார்:

திரு. ஸ்டார் தியானத்தில் இருக்கும்போது, தொந்தரவு செய்வதை அவர் விரும்புவதில்லை; அதற்கு அடையாளமாக ஒரு ஆரஞ்சு நிற நாடா, இடைச் சுவரில் தொங்கவிடப்பட்டிருக்கும். எவரேனும் பாபாவிடமிருந்து செய்தி அல்லது குறிப்பைக் கொண்டுவரும் வேளையில், அந்த நாடாவைப் பார்க்க நேர்ந்தால், அந்தக் குறிப்பை, தயவு செய்து, எங்களிடம் கொடுத்துவிட வேண்டும்; நாங்கள் அங்கு இல்லையென்றால் அதை மேசை மீது வைத்துவிட்டு பாபாவிற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

பாபா அனுப்பிய செய்தி முக்கியமானதாக இருந்து, திரு. ஸ்டாரை அவரது தியானத்திலிருந்து எழுப்ப, பாபா விரும்பினால் அவ்வாறு செய்யலாம். அது பரவாயில்லை. பாபா, ஸ்டாரின் அறையில் எப்போது வேண்டுமானாலும் செல்லலாம்.

இந்நிலையில், ஜூலை 5ஆம் நாள் மெரடித் ஸ்டார் ஒரு அறிவிப்பைக் கதவில் தொங்கவிட்டிருந்தார்: "நான் தியானத்தில் இருக்கிறேன், என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்." அதைத் தொடர்ந்து பாபா, ஸ்டாரின் அறைக்குச் சென்று கதவைத் தட்டினார். ஸ்டார் கதவைத் திறக்காதபோது, மார்கரெட் கதவிலிருந்த அறிவிப்பை பாபாவிற்குச் சுட்டிக்காட்டினார். பாபா புன்முறுவல் செய்துகொண்டே எதுவும் கூறாமல் அங்கிருந்து சென்றுவிட்டார். மெஹர் பாபா, மெரடித் ஸ்டாரை மௌனமாகத்தான் இருக்கச் சொன்னார், தியானத்தில் அல்ல! தியானத்தின் முக்கிய நோக்கமே குருநாதரை இலக்காகக் கொண்டு தியானம் செய்வது! குருநாதரே வாசல்வரை வந்தும், அவர் தியானத்தில் மூழ்கியிருப்பதையும், அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது என்பதையும் என்னென்பது? பாபா என்ன செய்திருக்க முடியும்? பாபா, மெரடித் ஸ்டாரின் இதயத்தை விழிப்படையச் செய்ய விரும்பினார்; ஆனால், அவர் பாபாவை மனக்கண்களால் பார்க்க முயற்சிக்கிறார்!

பிரேமாஷ்ரம சிறுவர்கள் ஆன்மீகத்தில் மிக்க நாட்டம் உள்ளவர்களாகவும், அடிக்கடி அளவுக்கு அதிகமாக உணர்ச்சிவசப்பட்டும், அதீத உற்சாகத்துடனும் காணப்பட்டனர். சிறுவர்களோடு பாபாவின் ஆன்மீகப் பணியைப் பொறுத்தவரையில், அடுத்த நாள், பாபா அவர்களுக்கு உபதேசம் வழங்கினார்: **"அவசரப்படாதீர்கள். உங்களுக்கு நான் என்ன தர விரும்புகிறேனோ அதற்காக உங்களைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறேன். அதை நான் உங்களுக்கு இப்போதே வழங்குவதானால், உங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது பிரம்மாதமான உணவாக இருப்பதால் ஜீரணிப்பது மிகவும் கடினம். எனவே, இந்த மகத்தான விருந்திற்காகப் பொறுமையுடன் காத்திருங்கள்."**

'அர்தேஷிர் பாரியா', வயது 37, பாபாவை சந்திக்க வந்தவர் அங்கே பாபாவுடன் இருக்க விரும்பினார். ஒரு சில காரணங்களுக்காக, பாபா அவரைப் பின்னர் அழைப்பதாகக் கூறி அனுப்பி வைத்தார். அர்தேஷிர், 'காக்கா பாரியா' என்றழைக்கப்பட்டு, நாளடைவில் மெஹர் பாபாவின் மிக நெருக்கமான மண்டலியில் ஒருவராகத் திகழ்ந்தார்; ஆனால், அதற்கு முன்னர், இரண்டு வருடங்கள் அவரடைந்த துன்பங்கள் ஏராளம். காக்கா பாரியா 1891, பிப்ரவரி 23ஆம் நாள் நவ்ஸாரியில் பிறந்தார். அவர் பொறியியல் வல்லுநர், படிப்பை முடித்து ஏழு வருடங்கள் கிரீவ்ஸ் காட்டன் நிறுவனத்தில் பணிபுரிந்து, அதன் பின்பு டாடா ஸ்டீல், தொடர்ந்து ஈராக்கில் மோட்டார் கார் வல்லுனராக இருந்து, இறுதியில் மும்பை வந்து, பல மோட்டார் வாகனங்களின் சொந்தக்காரராக இருந்தார். 1928ஆம் ஆண்டு மெஹர் பாபாவை சந்தித்து அவருடன் இணையும் பாக்கியத்தையும் அடையப் பெற்றார்.

மெஹர் பாபா உபவாசம் மேற்கொண்ட வேளையிலும், அவர் தனது கைகளால் மண்டலி மற்றும் சிறுவர்களுக்கு உணவு பரிமாறுவதைப் பழக்கமாகக் கொண்டார்; மேலும், உணவு வீணாகுவதில் மிகவும் கவனமாக இருந்தார். 1928, ஜூன் 9ஆம் நாள் மண்டலியில் சிலர் உணவில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்தனர். அதைக்கண்டு பாபா வெளிப்படையான அதிருப்தியுடன் கேட்டார், **"ஏன் அந்த உணவைத் தள்ளி வைத்தீர்கள்?"** அதற்கு மண்டலி அவர்களால் உண்ண முடிவதற்கும் அதிகமாக பாபா வழங்கினார் என்று கூறினர். **"நான் விரும்பிய அளவுக்குப் பரிமாறுவேன்; ஆனால், நீங்கள் அதை ஒருபோதும் வீணாக்கக்கூடாது. உங்கள் வயிறு வெடித்தால் கூட அதை உண்டிருக்க வேண்டும். உணவை வீணாக்கக்கூடாது என்ற என்னுடைய நிலையான கட்டளையை நீங்கள் அறிவீர்கள். அந்தக் கட்டளையை ஏன் மீறினீர்கள்? நீங்கள் உண்ண முடிவதைவிட அதிகமாகத் தர, ஏன் நான் ஒன்றும் அறியாதவனா? இத்தனை ஆண்டுகளில் நீங்கள் இதைக் கூடவா புரிந்து கொள்ளவில்லை? இந்த ஆன்மீகப் பாதை, நாளெல்லாம் லட்டுக்களை விழுங்குவதைப் போல் அவ்வளவு சுலபமான பாதை அல்ல! இந்த உணவின் மூலம் நான் உங்களுக்கு என்ன வழங்குகிறேன் என்பதைப் பற்றி நீங்கள் எதுவும் அறியமாட்டீர்கள்."**

மெஹர் பாபாவின் மண்டலியுடன் இணைந்தவர்களில் பிளீடர் புதிதாக வந்தவர், எந்த வழியிலாவது பாபாவிற்கு சேவை செய்யும் ஆர்வத்தைத் தெரிவித்தார். ஆஷ்ரமத்தில் துப்புரவு செய்பவர் எவருமில்லாததால், பெரும் பிரச்சினையாக இருந்தது. தானியங்கும் கழிவறைகள் அல்லது கழிவறைத் தொட்டி வசதிகள் இல்லாததால், தகர பெட்டிகளைப் பயன்படுத்தி, அடிக்கடி காலி செய்து, சுத்தம் செய்ய வேண்டியதாயிற்று. பெண்களின் கழிவறைகளை சுத்தம் செய்வது மாஸாஜியின் பொறுப்பு. சிறுவர்கள் மற்றும் ஆண்கள் பகுதியை பல ஆண் மண்டலி செய்து வந்தனர்.

ஒரு நாள் பாபா, பிளீடரிடம், "**நீங்கள் துப்புரவாளராகப் பணிபுரிய வேண்டும் அல்லது ஏழு மாதங்கள் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் மேற்கொள்ள வேண்டும்**" என்று குறிப்பிட்டார். பிளீடர் (வசதியான குடும்பத்திலிருந்து வந்தவர்) உபவாசம் இருப்பதாக விருப்பம் தெரிவித்தார், ஆனால், மாறாக, துப்புரவு தொழிலைச் செய்ய பாபா அறிவுறுத்தினார்: "**குருநாதர்களாகிய நாங்களும் கழிவறைகளை** (உள்ளளவில் மனப்படிவங்களை) **சுத்தம் செய்யும் பணியைத்தான் செய்கிறோம், ஆனால், அதை நாங்கள் உள்ளளவில் செய்கிறோம். நீங்கள் வெளியிலுள்ள கழிவறைகளை சுத்தம் செய்யுங்கள், நான் உங்களுள் இருக்கும் அசுத்தத்தைப் பார்த்துக் கொள்கிறேன். வேறு எதைப் பற்றியும் சிந்திக்காமல் இந்தக் கடமையை மட்டும் செய்யுங்கள்.**" பிளீடர் தயங்கினார், ஆனால், பாபா உறுதியளித்தார், "**இந்த எண்ணம் உங்களைத் தொந்தரவு செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள். சிறிது காலத்திற்குப் பிறகு மற்றொரு கடமையை உங்களுக்கு வழங்குவேன்.**"

1928, ஜூலை 10ஆம் நாள், மெஹர் பாபாவின் மூன்று வருட மௌனம் நிறைவுறும் தினத்தை ஒட்டி, மதியம் இரண்டு மணிக்கு, சிறுவர்களும் மண்டலியும் பாபாவிற்கு, புனித நீராட்டு விழா நடத்தினர். அந்த நாளிலிருந்து, பாபா எழுதிய 'புஜாவே நார்' எனும் ஆரத்தியை (குஜராத்தி மொழியில் அமைந்தது) அனைவரும் பாடத் தொடங்கினர். பாபா, பிரசாதமாக இனிப்பும், தேநீரும் வழங்கினார்.

பாபா, ஏகாந்தவாசத்தில் இருந்தாலும், தினமும் ஆஷ்ரமத்திற்கு வந்து பார்வையிட்ட பின்பு, நதிக்கரையில் நடக்கச் செல்வது, நிலா வெளிச்சத்தில் அவ்வப்போது மண்டலி மற்றும் சிறுவர்களுடன் துடுப்பு படகில் பயணம் செய்வது, பெரும்பாலும் சிறுவர்களுடனே இருப்பதையும் வழக்கமாகக் கொண்டார்.

ஆன்மீக விஷயங்களைப் பற்றி விளக்கமளிக்காத வேளையில், பாபா, கிரிக்கெட், கோகோ மற்றும் சிறுவர்களுடன் பிங்பாங் விளையாடுவது வழக்கம். கிரிக்கெட்டில் ஒரு அணிக்கு பாபாவும், மறு அணிக்கு ருஸ்தமும் தலைவர்களாக இருந்து தினமும் ஒரு விளையாட்டு விளையாடினர்.

ஜூலை 23ஆம் நாள் பாபா, மெரடித் ஸ்டாரை அழைத்து அவருடைய எதிர்கால பணியைப் பற்றி விவாதித்தார். இருவருக்குமிடையே நடந்த உரையாடலுக்கு நடுவே, பாபா, "**நான் மேற்கத்திய நாடுகளில் உங்கள் வழியாகச் செயல்பட உள்ளேன். நீங்கள் எனக்கு நேரடியாகப் பணிபுரிவீர்கள். இந்தப்** (ஆன்மீக) **பணிக்கு நீங்கள் மிகவும் பொருத்தமானவர், எனவே நான் உங்களை என் வசம் கொண்டு வந்தேன். இந்த வாழ்க்கையில் நான் உங்களைப் பரிபூரணமாக்குவேன்**" என்று

கூறினார். தன்னை முக்கியமான ஒருவர் என்று நினைத்து, பாபா கூறியதைக் கேட்டு மெரடித் ஸ்டார் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

டோக்கா கிராமத்தில் காலநிலை ஈரத்தன்மையுடன், மந்தமாக இருந்ததால், சில மண்டலியும், ஐந்து சிறுவர்களும் பனி ஜூரத்தால் அவதிப்பட்டனர். ஊரெங்கும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டதால், ஆஷ்ரம டாக்டர் மூன்று நாட்களாக வரமுடியாத நிலையில், பாபா, அவராகவே அனைவருக்கும் சிகிச்சையளித்தார்; நோயுற்றவர்களின் உடல் வெப்பநிலை மற்றும் இதயத்துடிப்பை உணர்ந்து, மருந்து மாத்திரைகளைப் பரிந்துரைத்தார். அவர்கள் பயன்படுத்திய தட்டு, டம்ளர்களை தொற்றுநோய் தாக்காமலிருக்க பாபாவே சுத்தம் செய்தார்.

மண்டலியில் ஒருவர் 'ஒருவேளை இந்த இடம் சுகாதாரத்திற்கு உகந்ததல்ல' என்று குறிப்பிட்டதும், பாபா இவ்வாறு பதிலளித்தார்: "**அதையெல்லாம் தாக்குப்பிடிக்கும் சக்தி நம்மிடம் உள்ளது. எதற்கும் பார்க்கலாம்.**" மேலும் அதிசயமாக, அனைத்து நோயாளிகளும் இரண்டே நாட்களுக்குள் குணமடைந்தனர்.

அடுத்த நாள் மாலை வேளையில், மண்டலியில் ஒருவர், இந்தக் குக்கிராமத்தில் அயல்நாட்டு பக்தர்கள் வந்து தங்கியிருப்பதை எடுத்துக்கூறி மிக்க பெருமிதமடைந்தார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த பாபா, மெரடித் ஸ்டார் தங்கியிருந்த குடிலைக் காட்டி, "**எதிர்காலத்தில் இன்னும் பலர் இங்கு வருவார்கள், அந்தப் பக்கம் முழுவதிலும் ஐரோப்பியர்களின் இருப்பிடமாக அமையும்**" என்று கூறினார்.

ஆகஸ்ட் 3ஆம் நாள், பாபா, காலை எட்டு மணியளவில் அனைத்து சிறுவர்களையும் அழைத்து, அவர்களில் ஒவ்வொருவருக்கும் புதிய மேலாடை, புத்தகங்கள், பென்சில்கள், அவருடைய புகைப்படங்கள் மற்றும் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்களைப் பரிசாக வழங்கினார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, மிகவும் வித்தியாசமான நிகழ்வு ஒன்று நடந்தது. அனைத்து சிறுவர்களும் பாபாவைச் சுற்றி அவரது வாகனத்தில் அமர்ந்திருந்தபோது, அவர் ஒவ்வொரு சிறுவனையும் 'ஒரு சிறப்புப் பிரசாதத்திற்காக' அழைத்தார். அது என்ன 'சிறப்புப் பிரசாதம்'? பாபாவிடமிருந்து அனைத்து சிறுவர்களின் காலுறையில் ஓர் உதை! முதல் முறையாக உடலளவில் பாபாவிடமிருந்து அனைத்து பிரேம், மெஹராஷ்ரம் சிறுவர்களுக்கும் ஒரு தண்டனை! அதன் பின்னர் இசைத்தட்டுகளை இயக்கிப் பாடவைத்து அனைவருக்கும் இனிப்பும் வழங்கப்பட்டது.

பாபாவின் சிறப்புப் பிரசாதத்திற்கு அர்த்தம் இல்லாமலில்லை, ஏனெனில் ஒரு சில நாட்களில் சிறுவர்களின் நடத்தையிலும், அணுகுமுறையிலும் ஒரு தீவிரமான மாற்றம் தென்பட்டது. சிறுவர்கள் அடிக்கடி யார் ஒருவருடைய தூண்டுதலும் இல்லாமல் தியானத்தில்

அமர்ந்தனர் - காலம், நேரம் பாராமல் இரவு ஒரு மணியளவில் கூட அவர்களாகவே தியானத்தில் ஈடுபட்டனர். இரண்டு மூன்று நாட்களுக்குள் அரை டஜன் மாணவர்களுக்கும் மேலாக பிரேமாஷ்ரம் பள்ளிக்கூடத்திற்கு மாறும் தகுதியைப் பெற்றனர். அதில் அற்புதம் என்னவென்றால், ஆன்மீக ரீதியில் ஈர்க்கப்பட்ட இந்த சிறுவர்களில் சிலர், மிகுந்த தொல்லை தருபவர்களாக இருந்தனர். இந்த மாணவர்களை மேற்பார்வை செய்த சில மண்டலி, பாபாவின் சிறப்புப் பிரசாதத்தின் எதிர்பாராத விளைவுகளைக் கண்டு வியப்படைந்தனர்.

1928, ஆகஸ்ட் 11ஆம் நாள் அஹமதுநகர் மாவட்ட ஆட்சியாளர், குறிப்பாக அங்கு வந்துள்ள மூன்று ஐரோப்பியர்களை சந்திப்பதற்காக, ஆஷ்ரமத்திற்கு விஜயம் செய்தார்; ஐரோப்பியர்கள் ஆஷ்ரமத்தில் வந்திணைவதை எண்ணி ஆட்சியாளர் பெருமிதமடைந்தார்.

இவ்வேளையில், மெஹர் பாபா, மறுபடியும் ஆன்மீக சொற்பொழிவுகளை வழங்கினார். ‘வாழ்க்கையின் நிலையற்ற தன்மை’யைப் பற்றி விளக்கியபோது, பாபா இவ்வாறு கூறினார்:

**பாவம், புண்ணியம், நல்லது, தீயது, சொர்க்கம், நரகம் இவை அனைத்தும் மாயையின் பொய்த்தோற்றம், நிலையற்றவை ஆகையால் பிணைப்புகளை உருவாக்கும். இத்தகைய உண்மைகளை வெளியுலகுக்கு எடுத்துரைக்க முடியாது, ஏனெனில் பெரும்பாலான மக்கள் அவற்றை ஜீரணித்து, புரிந்து கொள்ளும் ஆயத்த நிலையில் இல்லை. இந்த உண்மைகளை வெளிப்படுத்தும் தருவாயில், அவற்றின் ஞானவொளியைப் பெறுவதற்கு பதிலாக, மக்கள் தங்கள் அறியாமையின் இருளில் அதிகமாகத் தடுமாறுகிறார்கள். இதுபோன்ற உண்மைகள், சரியாக விளக்கப்படாவிட்டால், நல்ல உணர்வை உருவாக்குவதற்கு பதிலாக, நான் உங்களுக்குச் சொல்லும் விஷயங்களைப் பற்றி வெளி உலகம் மிகவும் மாறுபட்ட, மோசமான எண்ணத்தைக் கொண்டிருக்கும்.**

அன்றிரவு மெஹர் பாபா ஆரத்திக்குப் பின்னர், அற்புதமான மனநிலையில் இருந்தார். 8.30 மணிக்கு பாபா மண்டலிக்கு இவ்வாறு வெளிப்படுத்தினார்: **ஆப்பிரிக்காவில் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிலிருந்த ஒரு பீர் அவரது உடலை துறந்த அக்கணத்தில், பாபா, ஓர் அதிர்ச்சியை உணர்ந்தார்.** மேலும், **பாக்தாத் நகரில், ஐந்து மற்றும் ஆறாம் தளங்களுக்கிடையில் நிலைகொண்ட, ஆன்மீக மேல்நிலையை அடைந்த ஒருவர், அவரை மெஹர் பாபாவின் சீடர் என அறிந்து கொண்டதாக, பாபா தெரிவித்தார்.** அதுபோல், **எகிப்து நாட்டில் ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட ஒரு யோகி, மிகவும் சக்தி வாய்ந்தவராகவும் ஆனால், சாதாரண மக்களுக்கு அது தெரியாத முறையிலும் இருப்பதாகத் தெரிவித்தார்.**

மெரடித் ஸ்டார் தனியாக அவரது அறையில் இரவும் பகலும் தியானத்தில் மூழ்கியிருந்தார். பாபா வெளியளவில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, மெரடித் ஸ்டாரை மிகுந்த பணிவுடன் இருக்கக்கூறி, மண்டலியின் பக்கம் திரும்பி, "**கடவுளுடன் ஐக்கியமாவது அல்லது கடவுள் நிலையை அடைவது பற்றி சிந்திக்காதீர்கள்; கடவுளை எப்படி நேசிப்பது என்பதை மட்டும் கருத்தில் கொள்ளுங்கள். என்னையே தியானித்து என்னை நேசியுங்கள். இதர அனைத்து எண்ணங்களையும் பின் தள்ளிவிடுங்கள். பாரசீக மொழியில் ஒரு பழமொழி உண்டு: 'ஜாம்ஷெட், கய்குஷ்ரு போன்ற ஆயிரமாயிரம் மன்னர்களும், மாமன்னர்களும் ஒரு சத்குருவின் முன்னே அடிமைகள் போன்றவர்கள்**!'" என்று எடுத்துரைத்தார்.

பாபா பின்னர், ஆகா அலியின் விதியைப் பற்றிக் கருத்துத் தெரிவித்தார்:

**இங்கிருந்து நான்கு சிறுவர்கள் சென்று விட்டனர், அவர்களில் அலி மிகச் சிறந்தவன்; அலி அளவிலா துயரங்களை சந்திப்பான்; அது அவனை என் அருகாமையில் கொண்டுவரும். எனக்காகத் துயரங்களை அனுபவிப்பது நல்லது; ஆனால், அவனது தந்தையார் அவனை என்னுடனிருக்க அனுமதித்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.**

**அலி அவனது பெற்றோருடன் மகிழ்ச்சியாக இருக்க முடிந்தால் நல்லது. அவன் பைத்தியம்போல் ஆகிவிட்டால் தந்தையார் அவனைத் திரும்ப என்னிடம் அழைத்து வருவார்; உயிரைத் துறந்தால் முக்தியடைந்து என்னில் இருப்பான். எதுவாயினும் அவனுள் கொழுந்துவிட்டெரியும் அன்பை எவராலும் பறிக்கமுடியாது.**

இனம்புரியாத காரணங்களுக்காக இம்முறை ஆகா அலியை அவன் தந்தையார் அழைத்துச் சென்றதில், மெஹர் பாபா, அலட்சியமாக இருந்தார்; அவனைத் திருப்பி அழைத்து வர எவரையும் அனுப்பி வைக்கவில்லை. அதற்கு பதிலாக பாபா, கடந்த ஓரிரு வாரங்களில், அவரை நோக்கி வெகுவாக ஈர்க்கப்பட்ட இதர சிறுவர்களின் ஆன்மீக முன்னேற்றத்தில் கவனம் செலுத்தினார். ஆகஸ்ட் 22ஆம் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கு, பள்ளிக்கூட பாடத்திட்டத்தைத் தளர்த்தி, அனைத்து சிறுவர்களையும், அவர்கள் விரும்பிய வண்ணம், எப்போது வேண்டுமானாலும் பாபாவிடம் வரலாம் என்று மண்டலிக்கு உத்தரவு பிறப்பித்தார். இக்காலகட்டத்தில், பாபா எங்குச் சென்றாலும் சிறுவர்கள் அவருடன் சென்று, அவரைச் சுற்றி அமர்ந்திருப்பதை வழக்கமாகக் கொண்டனர். பல சிறுவர்கள் நள்ளிரவில் தூக்கத்திலிருந்து விழித்து தியானத்தில் அமர்ந்திருந்தனர். அதே வேளையில் பள்ளி நேரங்களில் வழக்கம் போல படிப்பு, உணவு, விளையாட்டு போன்றவற்றில் ஈடுபட்டாலும், களைப்படையாமல் சுறுசுறுப்பாக இருந்தனர். சிறுவர்களின் உற்சாகத்தில் பாபா மகிழ்ச்சியடைந்து, இது நல்ல அறிகுறி என்று சுட்டிக்காட்டினார்.

பிரேமாஷ்ரமத்தில் பெரியதொரு மாற்றம் தென்பட்டது; இறை போதையின் விளையாட்டு மறுபடியும் தொடங்கியது.

மெஹர் பாபா, குறிப்பாக 'பீவா' எனும் மாணவனிடம் அவரது தனி கவனத்தைச் செலுத்தினார்; அடிக்கடி அவனை அழைத்து தனதருகில் அமரவைத்து, தோள்களைத் தட்டிக் கொடுத்து, முத்தங்கள் அளித்தார். ஒரு நாள் மதியம், அனைத்து மாணவர்களையும் அழைத்து, நள்ளிரவிலும், அதிகாலையிலும் தியானம் செய்யக் கடினமாக உள்ளதா என்று கேட்டார். பல மாணவர்கள் அப்படி எதுவும் இல்லை என்று பதிலளிக்க, பீவா மட்டும் தேம்பி தேம்பி அழுது பதில் கூறாமலிருந்தான். பாபா ஏனென்று வினவியபோது, பீவா தயக்கத்துடன், "நான் தியானத்தில் அமர்ந்திருக்கும் போது உங்கள் உருவத்தைப் பார்ப்பதில்லை. பல்வேறு எண்ணங்கள் என் மனதில் அலைமோதுகின்றன" என்று பதிலளித்தான்.

பாபா மனதைப் பற்றி விளக்கமளித்து அவனை ஆறுதல் படுத்தினார்.

**மனம் ஒரு பயங்கரமான சாபம். அதன் வேலையே நினைப்பது, நினைத்துக் கொண்டே இருப்பது - ஒரு நபரை அல்லது ஒரு பொருளைப் பற்றி எப்போது நினைக்கக் கூடாது என்று நாம் எண்ணுகிறோமோ அப்போதுதான் அதிகமாக நினைக்கத் தூண்டும். உதாரணமாக, கடவுளை நினைத்து, தியானத்தில் ஆழ்ந்திருக்கும் போதுதான் ஆயிரமாயிரம் விதமான எண்ணங்கள் உருவெடுத்து, சாதாரண நேரங்களில் அவைத் தோன்றாமல் இருந்தாலும், அலைபோல மனதைத் துன்புறுத்துவது நிச்சயம். மனதில் எண்ணங்கள் தொடர்ந்து இத்தகைய தாக்குதல்களை உருவாக்கும், ஏனெனில் அதன் வேலையே நினைப்பது, நினைப்பது, நினைப்பதன்றி வேறொன்றுமில்லை.**

**உண்மையான சிந்தனையாளர் மற்றும் தியானம் செய்பவர் யாரெனில், இதுபோன்ற எண்ணங்களில் கவனம் செலுத்தாமல், மிகையான தாக்குதல்களுக்கு மத்தியில், அவரது வழிபாட்டின் உருவத்தை மட்டுமே ஒருமுகப்படுத்துபவர் ஆவார்.**

**ஒரு பக்தனுக்கு வேறு எண்ணங்கள் வருவது பாவமோ, பிழையோ, தவறானதோ அல்ல! பயங்கரமான மனம் இருப்பதுவரை இதுபோன்றஎண்ணங்கள் நிச்சயமாக வரத்தான் செய்யும். பக்தன் தன்னால் இயன்றவரை இவற்றை விரட்டக் கடுமையாக முயற்சித்து, கடவுளை நினைவுகூர வேண்டும். எந்நிலையிலும் அவன் தியானத்தைக் கைவிடக்கூடாது அல்லது இந்தத் தாக்குதல்களால் கலக்கம் மற்றும் ஏமாற்றத்தை உணரக்கூடாது.**

**விதவிதமான எண்ணங்களின் தொல்லைகளால் தியானத்தில் ஆழ்ந்திருக்க முடியாதபோது, உன்னால் அன்பை வெளிப்படுத்த முடியவில்லை என்பதை எண்ணி வருந்தவோ அல்லது கண்கலங்கவோ வேண்டாம். நள்ளிரவில் உனது இனிமையான ஆழ்ந்த தூக்கத்திலிருந்து தியானம் செய்யவேண்டும் என்ற சிந்தனையில் நீ எழும்பவில்லையா?**

அதுவும், தானாகவே யாருடைய தூண்டுதலும் இல்லாமல்! அதுவே பாதி வேலையை நிறைவு செய்ததாகப் பொருள்படும். பிறர் அனைவரும் ஆழ்ந்து தூங்கும் வேளையில் இரவெல்லாம் நீ விழித்திருந்து தியானத்தில் இருக்கவில்லையா? இது முக்கால் பங்கு வேலையை முடித்ததாக அர்த்தம்! இப்போது, எஞ்சியிருப்பது கால் பாகம் மட்டுமே; அதுவும் ஒரே ஒரு பொருளை நினைவில் கொள்வது! அதைச் செய்ய முயற்சிக்க வேண்டும். வெற்றியடைந்தால் நல்லது, இல்லையேல் கவலை வேண்டாம். உனது கண்கள் முன்னால் உருவத்தைப் பார்க்க முடியாதது உன்னுடைய தவறல்ல. எனவே விடாமுயற்சியுடன் இருங்கள். சோர்வடைந்து முயற்சியைக் கைவிட வேண்டாம். சித்தார் இசைக்கருவி மெட்டமைப்பது கடினம் என்பதால், அதைத் தூக்கி எறிய முயற்சிக்காதே! கருவியைச் செயல்படுத்தும் உறுதியான நோக்கத்துடன், ஒவ்வோர் இழையையும் தொடர்ந்து சரி செய்யவும், இசைக்கவும் முயற்சிக்க வேண்டும். அதுபோல, வெளியுலக எண்ணங்களின் செவிகளைப் பற்றிப்பிடித்து, அந்த எண்ணங்களை வெளியே துரத்தி விடுங்கள்.

உதாரணமாக, எண்ணிலடங்கா கொசுக்கள் உங்களைச் சுற்றித் திரிந்து, அவற்றில் சில, இரவில் தூங்கும்போது கடிப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அப்போது, இந்த எரிச்சலிலிருந்து விடுபட நீங்கள் என்ன செய்வீர்கள்? அங்கே அப்படியே அமர்ந்து அழுவீர்களா? இல்லை! உடனடியாக ஒரு கொசுவலையை எடுத்து வருவீர்கள். இறுதியில் விரும்பிய விளைவை ஏற்படுத்தும் நோக்கத்தில் சரியான பரிகாரத்தைக் கண்டு கொள்வீர்கள். கொசுக்கள் கும்பல் கும்பலாக வந்தாலும், அதைத் தொந்தரவாகக் கருதமாட்டீர்கள், ஏனெனில் நீங்கள் வலைக்குள் அடைபட்டிருக்கிறீர்கள்; ஓரிரு கொசுக்கள் தவறி உள்ளே வந்திருந்தாலும் கூட கண்டுகொள்ள மாட்டீர்கள். அதுபோல், இந்த எண்ணங்களையும் கையாளுங்கள். அவை, கொசுக்களைப் போலவே வந்து உங்களைத் தொந்தரவு செய்வது உறுதி, ஆனால், உங்களின் மனக்கண்களின் முன்னே, எனது இறை உருவத்தைக் கொண்டு வருவதன் மூலம், என்னைப் பற்றிய எண்ணங்களின் மனத்திரையை உருவாக்கி, பிற எண்ணங்களை உள்ளே வராமல் தடுக்கமுடியும்.

என்னுடைய உருவத்தை மனக்கண்கள் முன்னால் எப்படிக் கொண்டு வருவது? எனது பல்வேறு விதமான உடல் செயல்பாடுகளில் என்னைப் பற்றி சிந்தியுங்கள் - இங்கும் அங்கும் போவது, சொற்பொழிவு வழங்குவது, தரிசனமளிப்பது, சிறுவர்களை அணைத்து முத்தம் தருவது, விளையாட்டுகளில் பங்கெடுப்பது, சிறுவர்களோடு வேடிக்கையாகப் பேசுவது, என்னுடைய இருக்கையில் அமர்ந்திருப்பது, இசைத்தட்டுகளைக் கேட்பது இப்படிப் பல. இத்தகைய செயல்களின் காட்சிகள் உங்கள் கண்கள் முன் தோன்றும். இவ்வாறு தோன்றும் வேளையில் அவற்றைத் தவற விடாமல் கெட்டியாக இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும். இப்படி, எனது

பல்வேறு செயல்பாடுகளின் உருவங்களை, தியானத்தின் ஒரு நிலையில் கொண்டுவரும் வேளையில், நீங்கள் பல மணி நேரம் தியானத்தில் அமரமுடியும்.

நான் விளக்கியவற்றை நினைவில் கொள்ளுங்கள், என்னை அழைத்து உங்கள் மனத்திரையில் வைத்துக் கொள்ளுங்கள். அதன் பின்னர் என் உடல் அசைவுகள், சைகைகள், முகபாவனைகள், செயல்கள் இவைகளில் உங்களுக்கு எது நினைவில் வருகிறதோ, அதை தியானம் செய்யுங்கள். இதற்கிடையில் எண்ணங்கள் குறுக்கிட்டால் குறுக்கிடட்டும், அவற்றைக் கண்டுகொள்ளாமல் இருங்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சில சிறுவர்கள் மற்றும் மண்டலிக்கு, தியானம் செய்வது எப்படி என்பதைக் கற்றுத் தருவேன். இதை அனைவரிடமிருந்தும் தனியாக விலகியிருந்து செய்ய வேண்டும். தியானம் ஒரு தொந்தரவாகவோ அல்லது சலிப்பாகவோ இருக்கக்கூடாது; தொடர்ந்து மன நிறைவைத் தருவதாக இருக்கவேண்டும்.

பாபா, அவருடைய செயல்முறையால் மூன்று விதத்தில், அமர்ந்து செய்யும் தியான முறைகளைக் கற்றுத் தந்து இவ்வாறு குறிப்பிட்டார்:

"நான் ஜீஸஸாக இருந்தபோது இம்மூன்று தியான முறைகளை ஒரு திருடனுக்குக் கற்றுத் தந்தேன்."

தொடர்ந்து மெஹர் பாபா, தியானத்திற்காக அதிகாலையில் 4 மணியிலிருந்து 6 மணிவரை விழித்திருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, கீழ்வரும் முதுமொழியை எடுத்துரைத்தார்:

இரவின் முதல் பாகத்தில், பெரும்பாலான மக்கள் விழித்திருக்கிறார்கள்.

இரவின் இரண்டாம் பாகத்தின்போது, நள்ளிரவுக்கு முன், வேடிக்கை காரர்களும், சாப்பாட்டு ராமன்களும் விழித்திருக்கிறார்கள்.

இரவின் மூன்றாம் பாகத்தில், நள்ளிரவுக்குப் பிறகு, திருடர்கள் விழித்திருக்கிறார்கள்.

இரவின் நான்காம் பாகம், அதாவது விடியற்காலைக்கு முன்னரே, யோகிகள் விழித்திருக்கிறார்கள்.

சிறுவர்களில் ஒருவன் ஒரு யோகி தியானம் செய்யும் முறையைப் பற்றிக் கேட்டபோது, பாபா இவ்வாறு பதிலளித்தார்:

கடவுளை அல்லது குருநாதரை நினைத்துச் செய்யும் நேர்மையான தியானத்திற்கும், யோகியின் தியானத்திற்குமிடையே ஒரு பெரிய வேறுபாடு உள்ளது. ஒரு யோகியின் தியானம் சமாதியில் முடிவுறும், அதே வேளையில் கடவுள் மீதுள்ள அன்பால் ஈடுபடும் தியானம் கடவுளோடு ஒன்றவைக்கும்.

1928, செப்டம்பர் 1ஆம் நாள் காலை 8 மணிக்கு, பிரேமாஷ்ரம் அமைந்த புதிய குவாட்டர்ஸில் ஒரு கூட்டம் நடைபெற்றது. மெஹர் பாபா 'நான்கு வகை சமாதி நிலை'யைப் பற்றி விளக்கி எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார்:

**இறைநிலையை அடைவது குறித்து அனுபவமிக்க மஹாத்மாக்கள் கூறியதாவது: "ஒரு சத்குருவிடம் செல்லுங்கள்; அவருக்கு சேவை செய்யுங்கள்; அவரை நேசியுங்கள்; அவருடைய பாதுகாப்பில் இருங்கள்." சுவாமி விவேகானந்தர் அவரது புத்தகம், 'எனது குருநாதர்' - இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கை வரலாற்றில் அவருடைய கருத்துக்களை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். கடவுளை ஒரு மனிதனாக வழிபடவேண்டும், அதாவது கடவுள் மனித உருவில் வருவது. மேலும், கடவுள் அவதார புருஷராக வரும் வேளையில் வாழும் மனித வம்சம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இந்த அவதார புருஷர்கள் பூமியில் வாழும் கடவுள்கள். இவர்கள் முந்தைய காலத்தில் அவதார புருஷராக உருவெடுத்து வணங்கப்பட்ட கடவுள்கள்.**

**விசித்திரமான கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளில் எந்தத் தேவையும், பலனும் இல்லை. நாம், மனிதராக உருவெடுக்கும் கடவுள்கள் மீது திடமான பற்றும், நம்பிக்கையும் வைக்கவேண்டும். நாம் அவர்களை மனமார நினைக்கும்போது, அவர்கள் நமது ஆத்மாவில் நுழைந்து நம்மையும் அவர்களைப் போல மாற்றுவார்கள்.**

"**இப்போது நீங்கள் எப்படி உணர்ந்தாலும், எந்த மனநிலையில் இருந்தாலும் - என்னை உண்மையாக நேசியுங்கள். என்னை நேசித்ததற்காக, எனக்கு சேவை செய்ததற்காக மேலும் என்னிடம் சரணடைந்ததற்காக யாரும் வருந்தமாட்டீர்கள்**" என்று பாபா கூறிமுடித்தார்.

அன்று மதியம் இரண்டு மணிக்கு அனைவரும் கிரிக்கெட் விளையாடினர். மாலையில் நகைச்சுவையான கூற்று மற்றும் உரைகளின் நிகழ்ச்சி 'வெட்டிப்பேச்சு வளாகத்தில்' நடைபெற்றது. மாலை வேளையில் தேநீர் அருந்துவதற்காக அமரும் உணவறைக்கு பாபா, இப்படிப் பெயரிட்டார். அன்றிரவு பல நகைச்சுவையான பாடல்கள், சுவாரஸ்யமான பேச்சுக்கள் மற்றும் ஒரு நிமிட நாடகங்கள் நடைபெற்றன. ராம்ஜூ நான்கு விதமான மொழிகளில் வேடிக்கையான கவிதைகள் எழுதி, அவரது கவிநயத்திற்குத் தகுந்தாற்போலத் தொப்பிகளை மாற்றி அனைவரையும் மகிழ வைத்தார். இன்னும் பலர் சின்ன சின்னக் கேலிக்கூத்துகளைச் செய்தனர்.

செப்டம்பர் 3ஆம் நாள் பிரபலமான கவிஞர்களைப் பற்றிய பேச்சு எழுந்தது. பாபா, இவ்வாறு குறிப்பிட்டார்:

**பெர்ஸியன் கவிஞர்கள் மிகச் சிறந்தவர்கள்; அவர்களைத் தொடர்ந்து உருது மற்றும் மராட்டி கவிஞர்கள். ஆங்கிலத்தில் வேர்ட்ஸ்ஒர்த், ஷெல்லி - அதே போன்ற ஆற்றல் மிக்கவர்கள். ஹஃபீஸின்**

**கவிதைகள் மிகவும் எழுச்சியூட்டுவது மட்டுமின்றி, ஆன்மீக ரகசியங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருக்கும். ரூமி, ஷாம்ஸ் இவர்களின் கவிநயங்கள் தத்துவ வடிவில் அழகும் உண்மையும் நிறைந்தவையாக இருக்கும்.**

**நமது காக் ஸாஹேப் 'அனுபவம்' அடையும் தருவாயில், உத்வேகம் மிக்கவராகத் திகழ்ந்து, எதிர்காலத்தில் அற்புதமான கவிதைகளுக்கு உருவும், உயிரும் கொடுப்பார்.**

இக்காலகட்டத்தில், மெஹர் பாபா பல நாட்களாகத் தொடர்ந்த சகவாசத்தில் சிறுவர்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர். ஆண் மண்டலியால் நினைத்துக் கூட பார்க்க முடியாத அளவுக்கு, பல சுதந்திரங்கள் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டன. வெவ்வேறு தருணங்களில் சிறுவர்கள் பாபாவை வித்தியாசமான உடைகளை - ஓர் அரசனைப் போல, ஸ்ரீ ராம், கிருஷ்ணாவைப்போல் - அணிய வைத்து புகைப்படங்களும் எடுத்தனர். ஒருமுறை பாபா விரைவில் அவர் ஐரோப்பா, அமெரிக்க நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ள இருப்பதைத் தெரிவித்ததும், அவருக்கு மேற்கத்திய உடைகளையும் அணியவைத்து அழகு பார்த்தனர்.

செப்டம்பர் 4ஆம் நாள், மெஹர் பாபா, அவரை ஒரு கிராமத்தாரைப் போல் உடையணிவிக்க அனுமதித்தார். சிறுவர்கள் பாபாவை நீளமான வெள்ளை நிற வேட்டி, பட்டு சட்டையும், ரோஜா நிற தலைப்பாகையும் அணிய வைத்தனர். பாபாவை இருச்சக்கர வண்டியில் அமரச் செய்து, நதிக்கரையில் சிறுவர்களும், மண்டலியும் இழுத்துச் சென்றனர்.

அதன் பின்னர் அனைவரும் படகில் பயணம் செய்ய, ராவ்ஸாஹேப் பல புகைப்படங்களை எடுத்தார். பாபா உலக மக்கள் அனைவரையும் தன்னுடன் படகில் பயணம் செய்ய அழைப்பதுபோலத் தோற்றமளித்தார். காலம் ஒவ்வொருவரையும் இவ்வாறு வலியுறுத்தி அழைத்தது: "வாழ்க்கைப் படகில் நதியை ஒரு கரையிலிருந்து கடந்து, நித்தியமான மறுகரையை அடைய அவருடன் பயணம் செய்யுங்கள்! படகோட்டியின் அழைப்பை ஏற்று அவருடன் பயணம் செய்ய யாருக்கு தைரியமுள்ளது? தனது மனதைக் கடந்து செல்லும் இதயம் யாருக்குத்தான் உள்ளது?"

நதியில் படகை ஓட்டி, பாபாவும் சிறுவர்களும் ஆனந்தமாக நேரத்தைக் கழித்தனர். அதைத் தொடர்ந்து பாபா, இரு சக்கர வண்டியில் அமர்ந்து சவாரி செய்தார். ஓரிடத்தில் வண்டி நின்றதும், திடீரென பாபாவின் மனநிலை தீவிரமானதைப் போலத் தோற்றமளிக்க, அவர் 'கருணை', 'இரக்கம்' இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை எடுத்துக் கூறினார்:

**கருணை என்பது ஒன்று, இரக்கம் மற்றொன்று. நான் சாதாரண உலக அர்த்தத்தில் கருணை காட்டுவதில்லை, ஆனால், என்னிடம் இரக்கம் உள்ளது. உதாரணமாக, ஒருவன் கடுங்குளிரில் நடுங்கி, உறைந்துபோய் சாகும் நிலையில் இருப்பதைக்கண்ட இரண்டு நபர்களில் ஒருவர் 'பாவம்'**

**என்று பரிதாபத்தை வெளிப்படுத்தி கடந்து செல்கிறார்; மற்றொருவர் பரிதாபப்படாமல் அந்த மனிதனுக்குத் தேவையானது போர்வை என்பதை உணர்கிறார்; தான் அணிந்திருந்த சட்டையைக் கழற்றி, குளிரில் நடுங்கும் அவருக்கு அணியக் கொடுத்து, அவர் குளிரைத் தாங்கிக்கொள்கிறார். இதைத்தான் இரக்க குணம் என்பது.**

டோக்கா ஆஷ்ரமத்தில் எழுபதுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் வாழ்ந்து வந்தனர். மெஹர் பாபாவின் அரவணைப்பில் அனைவரும் பித்து பிடித்தவர் போல மயங்கிய நிலையில், தெய்வீக அம்சங்களை அனுபவித்தனர். பாபாவின் தனிப்பட்ட தோழமை ஒன்று மட்டுமே அவர்களை அவ்வளவு திருப்தியடைய செய்யவில்லை. அவர்கள் பாபா பயன்படுத்தும் பொருட்களை அடைவதிலும் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். அவருடைய கைக்குட்டைகள், போர்வைகள், பாத அணிகள், புகையிலை, வெற்றிலை காம்புகள் - அவர் பயன்படுத்தி, பரிமாறிய எதுவாக இருந்தாலும் சரி. செப்டம்பர் 4ஆம் நாள், நள்ளிரவில் 11 மணியளவில் சில சிறுவர்கள் பாபாவின் அறைக்குச் சென்று அவரை வெளியே அழைத்தனர். இப்படி, சிறுவர்கள் பாபாவை அவரது அறையில் ஓய்வெடுக்க மற்றும் ஆன்மீகப் பணியில் ஈடுபட அனுமதிக்காமல் தொந்தரவு செய்வதை மண்டலி விரும்பவில்லை. ஆனால், பாபா அதைப் பொருட்படுத்தாமல் வெளியே வந்து சிறிது நேரம் அவர்களுடன் அமர்ந்திருந்தார். எதுவாயினும் இரவு இரண்டு மணி வரை எவரும் அவரை அழைக்கக்கூடாது எனக் கட்டளையிட்டார். அதன் பின்னர் அனைத்தும் சரியாகிவிட்டது.

அடுத்த நாள், முந்தைய இரவைப் பற்றி, சாஞ்சி அவரது குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருந்ததைப் பார்க்கலாம்:

"சிறுவர்கள் அனைவரும் ஸ்ரீக்குப் பின்னால் பைத்தியம்போல் ஓடினார்கள். இந்நாட்களில் மிகவும் வினோதமான விளையாட்டு நடந்து கொண்டிருந்தது; ஸ்ரீயின் வருகை மற்றும் சிறுவர்களோடு அவருக்கான நெருக்கம் இவற்றைப் பொறுத்தவரை, அனைத்து சட்டதிட்டங்களும் ஒருபுறம் ஒதுக்கி வைக்கப்பட்டன."

1928, செப்டம்பர் 8ஆம் நாள் கிருஷ்ண பெருமானின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. காலை எட்டு மணிக்கு மண்டலி குவாட்டர்ஸிலிருந்து ஆரம்பித்த ஊர்வலம் மெஹராஷ்ரம் வழியாக நதிக்கரையோரம் வரைச் சென்றது.

பெண் மண்டலி நுட்ப வேலைப்பாடுகள் நிறைந்த ஆடைகளை பாபாவிற்கு அணிவித்து, கிருஷ்ண பெருமானைப் போலத் தோற்றமளிக்கச் செய்தனர். பாபாவை அவருடைய வாகனத்தில் அமரவைத்து, அதை நான்கு மண்டலி ஊர்வலமாக, மிக உற்சாகத்துடன் எடுத்துச் சென்றனர். இறுதியில் மெஹராஷ்ரமம் வந்து சேர்ந்தனர்.

பாபாவின் தந்தை ஷெரியார், பாதிரியுடன் டோக்கா ஆஷ்ரமம் வந்து அன்றிரவு தங்கிவிட்டு மறுநாள் புறப்பட்டுச் சென்றார்.

செப்டம்பர் 17ஆம் நாள், பிரேமாஷ்ரமத்தில், 'உத்வேகத்தை தூண்டும்' எழுத்தாளர் 'ஜேம்ஸ் அலன்' என்பவர் வெளியிட்ட 'அஷாய்' (நேர்மை) பத்திரிகை இதழிலிருந்து சில பகுதிகள் வாசிக்கப்பட்டன. அன்றிரவு, ஜார்ஜ் மன்னருக்கு வழங்கப்பட்ட சர்ச்சைக்குரிய அதிகாரங்களைப் பற்றி ராம்ஜூ, தஸ்தூர் இருவருக்குமிடையே ஒரு பரபரப்பான விவாதம் நடைபெற்றது. இதைக் கேட்டுக்கொண்டிருந்த பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: "**ஜார்ஜ் மன்னர் விவேகமிக்கவர், வேல்ஸ் இளவரசர் எட்வர்டும் ஒரு சிறந்த மனிதர். அனைத்து மன்னர்களிலும் சிறந்தவர் ஆஃப்கானிஸ்தான் மன்னர் அமனுல்லா ஷா, உன்னதமானவர், நல்ல உள்ளம் கொண்டவர், புத்திசாலி. இன்றைய உலகில் ஆன்மீக சிந்தனையுள்ள ஒரே மன்னர் நேப்பாள மன்னர் (திரிபுவன் வீர் விக்ரம் ஷா) ஆவார்.**"

செப்டம்பர் 16ஆம் நாள் காலையில், டோக்கா கிராமத்தின் தலைவர் மெஹர் பாபாவை அணுகி மழை வேண்டி பிரார்த்தனை செய்தார். "எங்கள் கிராமத்து மக்கள் அனைவரும் அவரவர் குலவழி வந்த அனைத்து தேவ தேவதைகளையும் வேண்டி, இயன்றவரை மழைக்காகப் பிரார்த்தனை செய்த பின்னரும் மழை வந்தபாடில்லை" என்று எடுத்துரைத்தார். பாபா, அவரை ஆறுதல்படுத்தி கவலைப்பட வேண்டாம், விரைவில் மழை வரும் என உறுதியளித்தார். அவருடைய வார்த்தைகள் மெய்யாகி, கிராமத்துத் தலைவர் திரும்பிச் சென்றதும், கனமான மழை பொழியத் தொடங்கியது.

நான்கு நாட்கள் இடைவிடாமல் பெய்த பெரு மழையால் ஆறு, ஊரெங்கும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆஷ்ரமம், பெண்கள் தங்கிய இடமெல்லாம் தண்ணீர் நிரம்பி வழிந்தது. பெண் மண்டலியை அங்கிருந்து வெளியேற்றுவதில் பாபாவும் உதவினார். குவாட்டர்ஸ் வாசலில் நின்று கொண்டு, நிலத்திலிருந்து மண்ணெடுத்து அணைகட்டி தண்ணீரைத் திருப்பிவிட்டார்.

நான்கு நாட்களுக்குப் பிறகு, கிராமத்தார் மறுபடியும் வந்து பாபாவை, இம்முறை கடுமையாகப் பெய்யும் மழையை நிறுத்துமாறு வேண்டினர். கிராமத்து மக்கள், ஆற்று நீர் பெருக்கெடுத்து கிராமம் முழுவதும் தண்ணீரில் மூழ்கும் அபாயத்தால் அஞ்சினர். அப்படி எதுவும் நடக்காது என பாபா ஆறுதல் கூறினார். வெள்ளப்பெருக்கு இப்போது கவலைக்கிடமாக இருந்தது, டோக்கா கிராமம் மட்டுமல்ல, அஹமதுநகர் மாவட்டம் முழுவதும் தண்ணீரால் நிரம்பியது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பெய்த மழையில் வீடுகள் இடிந்து விழுந்து, பலர் உயிரிழந்தனர். சாலைகள் மூடப்பட்டு, போக்குவரத்து நிறுத்தப்பட்டது. பிரவரா நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து, கிராமத்தைப் பாதிக்கும் நிலையில் இருந்தது.

செப்டம்பர் 20ஆம் நாள் நள்ளிரவில் பாபா, வாமன் ஸப்னிஸ், பிளீடர் இருவரையும் மழையை நிறுத்தவேண்டி பிரார்த்தனை செய்யுமாறு கூறினார். இரவு இரண்டு மணிக்கு பாபா சில மண்டலியுடன் பிரவரா நதிக்கரைக்குச் சென்று, நதியில் அவரது கால்களை நீரில் மூழ்கச் செய்தார். அப்போது மழை படிப்படியாகக் குறைந்து நீர் வடியத் தொடங்கியது. இவ்வாறு, டோக்கா கிராமம் பாதுகாக்கப்பட்டு மக்கள் பெரும் நிம்மதியடைந்தனர்.

டோக்கா ஆஷ்ரமத்தில், மூங்கிலால் கட்டப்பட்டிருந்த தற்காலிகமான கட்டமைப்புகளுக்கு பதிலாக, செங்கல்லால் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன; ஏழு சதுர அடி அளவில் பாபாவுக்காக 'மெஹர் மன்ஸில்' எழுப்பப்பட்டது; மேலும் 7x4 அடி அளவில், மாணவர்களுக்காக மெஹர் மன்ஸிலைச் சுற்றி, 32 அறைகளும் கட்டப்பட்டன.

1928, செப்டம்பர் 21ஆம் நாள் பஜனைகள் பாடி, இனிப்புகள் வழங்கி, 'மெஹர் மன்ஸில்' அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. பாபாவிற்கு மலர் மாலைகள் அணிவித்து, புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. விழாவின் இறுதியில் பலர் சொற்பொழிவாற்றினர்.

32 பிரேமாஷ்ரம் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பாபா தனித்தனி இருப்பிடம் வழங்கி, இவ்வாறு குறிப்பிட்டார்: "**இணைப்புகளை உருவாக்குவதே எனது திட்டம்**."

பாபா கூறியதன் அர்த்தம் அவருடைய உலகளாவிய பணி சம்பந்தப்பட்டதாக இருக்கக்கூடும்; அதற்காக இந்த மாணவர்கள் மூலம் தொடர்புகளை உருவாக்குவதாக இருக்கலாம். ஆனால், விளக்கம் எதுவும் அளிக்கவில்லை.

பெரும்பாலும், 'சோட்டா பாபா', ஸ்ரீபாபா அருகில் தனியாக அமர்ந்திருந்தான்; அவ்வப்போது இதர மாணவர்களுடன் கலந்திருந்தான். மெஹர் மன்ஸிலுக்குச் சென்ற அந்த நாள், சோட்டா பாபா, சில இளம் சிறுவர்களுக்கு ஆலோசனை வழங்கினான்: "ஸ்ரீ மெஹர் பாபாவிற்கு செவிசாய்த்து 100 சதவீதம் கீழ்ப்படிவதன் மூலம், உண்மையிலேயே அவர் யார் என்பதை அறியமுடியும்."

இவ்வேளையில், ஒருமுறை சாஞ்சி நதியில் நீராடச் சென்றார். நீச்சல் தெரியாத அவர், கரையில் கற்படிகளில் நின்று நீராடினார். எதிர்பாராமல் திடீரென வந்த வெள்ளப்பெருக்கில் சாஞ்சி நதியில் இழுத்துச் செல்லப்பட்டார். சாஞ்சி, உடனே பாபாவைக் கூக்குரலிட்டு அழைத்ததும், இருகரங்கள் அவர் முன் தோன்றி, சாஞ்சியை பாதுகாப்பாகக் கரையில் சேர்த்தன. அவை பாபாவின் கைகளென சாஞ்சி கண்டுகொண்டதும் மயக்கமாகி கீழே விழுந்தார். நினைவு வந்ததும், பாபாவிடம் சென்று, இரண்டாவது முறையாக, பாபா அவருடைய உயிரைக் காப்பாற்றினார் எனத் தெரிவித்ததும், ஒன்றும்

அறியாதவர் போல, பாபா, என்னவாயிற்று என்று கேட்டார். சாஞ்சி நடந்த அனைத்தையும் எடுத்துரைத்தார்.

செப்டம்பர் 25ஆம் நாள், மெஹர் பாபாவின் பதினாறாவது நாள் உபவாசத்தன்று, மண்டலியுடன் மாலையில் கிரிக்கெட் விளையாடும் வேளையில், பாபா கிரிக்கெட் பந்தை, அது சாஞ்சியின் முறையாக இருந்தபோதும், பெண்டுவிடம் கொடுத்தார். பின்னர், அதை சாஞ்சியிடம் கொடுத்தார். இப்படி, பந்தெறியும் வரிசை முறையை மாற்றினார். ஓர் அணியிலிருந்து காக் ஸாஹேபை, பாபா, எதிர் அணிக்கு மாற்றி, இறுதியில் அவரது அணியில் சேர்த்துக் கொண்டார். விளையாட்டு நிறைவடைந்ததும் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**எனது செயல்களின் பின்னணியில் இருக்கும் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாது.**" மெஹர் பாபாவின் ஒவ்வொரு வார்த்தையும், நகர்வும் அவர் பிரபஞ்சத்தில் நிகழ்த்தும் பணியின் பிரதிபலிப்பாகும். கிரிக்கெட் விளையாடும்போது இடைவிடாமல் தொடர்ந்து மேற்கொண்ட மாற்றங்களால், பாபா, என்ன முக்கியமான பணியைச் செய்து முடித்தார் என்பது அவருக்கு மட்டுமே தெரியும்.

மன்ஸில்-எ-மீமில் இருந்த வேளையில், ராம்ஜூ அன்றாடம் எழுதி வந்த டயரியைப் போல, மறுபடியும் ஆஷ்ரம சிறுவர்களைச் சுற்றி நிகழும் வியக்கத்தக்க சம்பவங்களை அவர் எழுத விரும்பினார். ராம்ஜூவின் மனதில் தோன்றிய எண்ணங்களை அறிந்த பாபா, ராவ்ஸாஹேபிடம் '**ஆகா அலியின் சாகசங்கள் நிறைந்த சம்பவங்களைக் குறிப்பேட்டில் எழுதுமாறு**' ராம்ஜூவிடம் கூறச் சொன்னார். அதன் பின்னர், இதுவும் சாஞ்சியின் குறிப்புகளும் இணைந்து 'அழுகையும், துடிப்பும்' (SOBS AND THROBS) என்ற புத்தகமாக உருவெடுத்தது.

காலம் இதை இப்படிப் பார்த்தது:

"விளக்கு எரியும் இடத்தில் விட்டில் பூச்சிகள் இருக்கும். இரண்டிற்குமிடையே நடக்கும் சாகச விளையாட்டுகளின் அனுபவங்களை, விட்டில் பூச்சியாக மாறினாலொழிய புரிந்துகொள்ள முடியாது. இந்த விளக்கிலிருந்து விட்டில் பூச்சிகளை விலக்கி வைக்க, ஒவ்வொரு நரம்பும் துடிதுடித்து சிரமப்பட்டது! இதயத்தில் ஒளிரும் விளக்கைக் காணாமல், அவை, தங்கள் உயிரை எப்படிக் காப்பாற்றமுடியும்?"

அன்றையதினம், பிரேமாஷ்ரம் சிறுவர்களுக்கு, கீழ்வரும் சட்டதிட்டங்கள் அமல்படுத்தப்பட்டது:

1. **சிறுவர்கள் ஒருவரை ஒருவர் தொடக்கூடாது.**
2. **பாபாவின் முன்னிலையில் ஒருவர் இன்னொருவருடன் பேசக்கூடாது.**
3. **அறைகளுக்கிடையே வைக்கப்பட்டுள்ள மூங்கில் பாய்களில் உற்றுப் பார்ப்பதற்கெனத் துளைகள் இடக்கூடாது.**

4. **இன்னொருவர் அறையில் நுழையக்கூடாது.**
5. **இன்னொருவர் பொருட்களை உபயோகிக்கக்கூடாது.**
6. **நீர் அருந்த அவரவர் டம்ளரை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.**
7. **அனுமதியின்றி ஆஷ்ரம வளாகத்திற்கு வெளியே செல்லக்கூடாது.**
8. **ஆஷ்ரம அறை மற்றும் வராந்தாவில் நடக்கக்கூடாது.**
9. **அடுத்த அறிவிப்பு வரும்வரை, ஏதாவது புத்தகங்களை வாசிக்கவோ அல்லது படிக்கவோ கூடாது.**
10. **அனுமதியில்லாமல் எவரும் எதுவும் எழுதக் கூடாது.**
11. **குளியலறைகளில் சிறுநீர் கழிக்கக்கூடாது.**
12. **மூங்கில்பாய் தடுப்புச் சுவர்களில் சாயக்கூடாது.**
13. **அனுமதியின்றி, வழக்கமான வேலையைத் தவிர வேறு எதையும் செய்யக்கூடாது. காரணமின்றி ஆஷ்ரமத்தில் எதையும் தொடக்கூடாது.**
14. **சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அனைவரும் கீழ்ப்படிய வேண்டும், குறிப்பாக ஆகா பைதூல்.**
15. **ஏதேனும் தேவைப்பட்டால் அதிகாரியை அணுகவும்; அதிகாரி இல்லாத பட்சத்தில் துணை அதிகாரியிடம் கூறவும்.**
16. **தரையில் அமரும் வேளையில், கோணிப்பைகளைப் பயன்படுத்த மறக்கக்கூடாது.**
17. **அவரவர் அறையை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்; அறைகளில் துப்பவோ அல்லது மூக்கு சுத்தம் செய்யவோ கூடாது.**

மதிய உணவுக்காக பாபா அக்பர் அச்சகம் வரும் வழியில், ஓரிரு நிமிடங்களில், எதிர் திசையிலிருந்து ஒரு மோட்டார் கார் வந்து, இரண்டும் சந்தித்த இடத்தில் மிகவும் மெதுவாகச் சென்று மறைந்தது. மண்டலிக்கு ஆச்சரியமளிக்கும் விதத்தில் அந்தக் காரில் ஹஸ்ரத் பாபாஜான் பயணம் செய்து கொண்டிருந்தார்.

இது இரண்டு குருநாதர்களுக்கும் இடையே தற்செயலாக நடந்த சந்திப்பல்ல. அக்டோபர் 5ஆம் நாள் பாபா அஹமதுநகருக்குத் திரும்பி வரும் வேளையில் மறுபடியும் அக்பர் அச்சகத்தில் இறங்கினார். பாபாவுக்காகத் தனியாக அமைக்கப்பட்ட அறையில் ஓய்வெடுக்கச் சென்றவர், ஓரிரு நிமிடங்களில் வெளியே வந்து, வாசலருகில் சாலையை நோக்கி நாற்காலியில் அமர்ந்திருந்தார். பாபா தனது சிறப்புப் பணிக்காகத் தனிமையில் அமர்ந்திருந்ததாக எண்ணி, மண்டலியும், பக்தர்களும் சிறிது தூரத்தில் அமைதியாக நின்றனர். மறுபடியும் அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில், ஹஸ்ரத் பாபாஜான் அமர்ந்திருந்த மோட்டார் கார், வாசலில் பாபாவின் இருக்கைக்கு நேராக வந்து நின்றது. பாபாவின் முகம் பிரகாசமான மகிழ்ச்சியுடன் தென்பட்டது. இருவரும் பார்வைகளால் பேசிக்கொண்டது, எவரும் புரிந்துகொள்ள முடியாத ‘செய்தியை’ அவர்களிடையே பரிமாற்றம்

செய்ததைக் குறிக்கிறது. ஒரு சில நிமிடங்களில் பாபாஜான் வந்த கார் விரைந்து திரும்பிச் சென்றது.

இது பாபாஜான், மெஹர் பாபா இருவருக்குமிடையே நடந்த இரண்டாவது சந்திப்பு. இந்த சந்திப்பின் முக்கியத்துவம் என்ன என்று மண்டலி வினவியபோது, பாபா, புதிராக பதிலளித்தார்: "**பாபாஜான் இன்று என்னை இரண்டாவது முறையாக சந்தித்துள்ளார். இதன் அர்த்தம் என்னவென்றால் இப்போது நான் சுதந்திரமாக இருக்கிறேன்.**"

மெஹர் பாபா, ஆஷ்ரமங்களின் பொறுப்பை, ருஸ்தத்திடம் ஒப்படைத்துவிட்டு, பிரேமாஷ்ரம் சிறுவர்களோடு மும்முரமாக இருந்தார். சிறுவர்கள், தினமும் ஒரு முறை உணவு உண்டு, இரவில் மூன்று மணி நேரம் மட்டுமே தூங்கினர்; இருப்பினும், அவர்கள் குறிப்பிடத்தக்க ஆரோக்கியத்துடனும், ஆற்றல் மிக்கவர்களாகவும் இருந்தனர். தினமும் பாபா சிறுவர்களுக்கு - 'இறைவன்', 'இறையன்பு', 'ஆன்மீகப் பாதை', 'குருநாதருக்குக் கீழ்ப்படிதல்', இன்னும் பல தலைப்புகளில் - சொற்பொழிவாற்றினார். ஆஷ்ரம சூழ்நிலைகள் மெஹர் பாபாவின் அனுக்கிரகத்தால் நிரம்பி வழிந்தது, மேலும் அன்பின் மதுபானம் சிறுவர்களின் மகிழ்ச்சியில் புன்முறுவல் செய்தது.

அவதார புருஷரின் முன்னிலையில், உலகம், அதனுள் அடக்க முடியாத ஓர் ஆனந்தத்தை, இந்த சிறுவர்களின் இதயங்கள் உணர்ந்தன.

பாபா இல்லாத நேரத்தில், பல சிறுவர்கள், மிகவும் குறும்புத்தனம் மிக்கவர்களாக இருந்தபோதிலும், பாபா அவர்களைக் கண்டிக்கவில்லை. அக்டோபர் 7ஆம் நாள் மாலையில், பாபா அனைத்து சிறுவர்களையும் நதிக்கரைக்கு அழைத்துச் சென்றார். நதி, ஒரு மைலுக்கும் அதிக தூரத்தில் இருந்தது; மேலும், கரடுமுரடான நடைபாதையில் ஆங்காங்கே முட்களும் இருந்ததால், சில சிறுவர்களின் கால்களில் நுழைந்த முட்களை அகற்ற வேண்டியதாயிற்று. நதிக்கரையைச் சென்றடைந்ததும் சிறுவர்கள் அனைவரும் பாபாவைச் சுற்றி அமர்ந்திருந்தனர். அப்போது பாபா அவர்களுக்கு இவ்வாறு எடுத்துரைத்தார்:

**நதிக்கரையை வந்தடைவதற்கு முன், நாம் எத்தனை சிரமங்களை சந்தித்தோம் பாருங்கள்! நாம் இங்கு வருவதாக முடிவு செய்தோம், வந்துவிட்டோம். நாம் ஆஷ்ரமத்தில் இருந்திருந்தால் நதியின் அருமை - அதன் சக்திவாய்ந்த நீரோட்டம், பரந்த நீர் நீட்சி அனைத்தும் - புலப்பட்டிருக்காது. நீங்கள் இங்கே நீரை அருந்தி, பிறரிடம் நீங்கள் இதை அருந்தினீர்கள் என்று கூறி, அவர்களையும் அருந்த அழைப்பீர்கள். ஆன்மீக உட்பாதையும் இப்படித்தான்.**

**ஒருவர் மிகுந்த துன்பங்களுக்கு ஆளாகி, எரிச்சலடைந்து சோர்வடைகிறார். ஆனால், 'நீங்கள் பொறுமை காத்து, வந்த பாதையில் பின்வாங்காமல், எப்பொழுதும் முன்னோக்கிச் செல்லுங்கள்' என நான்**

**உங்களுக்குச் சொல்கிறேன். இதுவோ வெறும் நதிதான், ஆனால், நான் ஒரு சமுத்திரம். இதை நினைவில் கொள்ளுங்கள்.**

அதைத் தொடர்ந்து, சிறுவர்களுக்கு சாக்லெட் மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

இந்தக் காலகட்டத்தில், மண்டலி, மாலை வேளைகளில் மட்டுமே பாபாவுடன் இருக்க வாய்ப்புக் கிடைத்தது; பகல் நேரங்களில் பாபா எவரையும் அனுமதிக்கவில்லை.

ஆஷ்ரம சிறுவர்களைக் குறித்து, அக்டோபர் 8ஆம் நாள் மெஹர் பாபா மண்டலிக்கு இவ்வாறு விளக்கினார்:

**எனக்கு இந்தக் குழந்தைகளைப் பற்றி ஆயிரத்தோர் எண்ணங்கள் உள்ளன. இந்நேரத்தில், அவர்கள் என்னுடன் ஒன்றோடு ஒன்றாக இருக்கிறார்கள், எனவே நான் அவர்களின் உடல்நிலையை கவனிக்க வேண்டியது அவசியம். இரவெல்லாம் விழித்திருந்து, என்னையே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், ஆனால், இம்முறை நான் அவர்களுக்கு, ஓர் உந்துதலை அளிப்பேன். இதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. அவர்களின் பெற்றோரின் குறுக்கீடு ஒன்றுக்குத்தான் நான் அஞ்சுகிறேன். பெற்றோர்கள் தடையாக இருந்தால் சிறுவர்கள் அங்குமிங்கும் இல்லாமல் தவிப்பார்கள். இந்த ஆன்மீகப் பாதை சிரிப்புக்குரிய விஷயமுமல்ல; கேலித்தனமுமல்ல. சில சிறுவர்கள் உண்மையிலே உன்னதமானவர்கள்; ஆனால், ஒரேயடியாக அவர்களுக்கு உந்துதலை அளிப்பது என்பது முடியாத காரியம்; எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் இன்னமும் குழந்தைகளே!**

1928ஆம் ஆண்டு கர்னல் ஈரானி, மெஹர் பாபாவைக் குறித்து, செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்திய அவதூறான கதைகள், ஈரானிய, பார்சி மக்களிடையே மேலும் வெறுப்பைத் தூண்டியது. கர்னல் தவறான பிரச்சாரத்தில் முழுமையாக ஈடுபட்டு, ஆட்சேபனைக்குரிய கடிதங்களை மெஹர் பாபா மற்றும் மண்டலிக்கு அனுப்பத் தொடங்கினார்.

கர்னல் ஈரானியின் இவ்விதமான நடவடிக்கைகளைப் பற்றி, பாபா அக்டோபர் 9ஆம் நாள் இவ்வாறு குறிப்பிட்டார்: "**இதில் எந்த விதமான மெய்ப்பொருளும் இல்லை; எதுவுமே இல்லை. இது எனக்கு உண்மையான பாதிப்பு எதையும் ஏற்படுத்தாது. கிறிஸ்துவுக்குத் தலை மீது கூரை ஏதும் இல்லாததால் அவர் எப்பொழுதும் அங்குமிங்கும் அலைந்து திரிந்து கொண்டிருந்தார். எனக்கு அந்தக் கஷ்டங்கள் ஏதுமில்லை, இருந்தும் நான் அவரை அழைக்க விரும்புகிறேன். அவர் எனக்கு எதிராகப் பேசட்டும், எழுதட்டும். இது நல்ல பலனை விளைவிக்கும்.**"

இப்படி உண்மையில், கர்னல் ஈரானி, மெஹர் பாபா மற்றும் அவரது பணிக்கான சக்திவாய்ந்த ஊடகமாக அமைந்தார், ஏனெனில் கர்னலின் இழிவுபடுத்தும் மனப்பான்மையின் காரணமாக, மெஹர் பாபாவின் பெயர் விரைவாக பிரபலமடைந்தது. மெஹர் பாபா மண்டலியை அவரோடு ஒன்று

சேர்க்கும் வேளையில், வெவ்வேறு ஸொராஸ்டிரிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், ஏறக்குறைய வெறி பிடித்தவர்கள் போல, பாபாவை எதிர்த்தனர். ஆனால், படிப்படியாக, அவர்களின் விரோத மனப்போக்குக் குறைந்து, அவருக்கு மிகவும் எதிராக இருந்தவர்களில் சிலர், இறுதியில் அவரது காலடியில் தலை வணங்கினர்.

உண்மையாகச் சொல்லப்போனால், மெஹர் பாபா, உள்ளளவில், கர்னல் ஈரானிக்கு வேண்டிய உதவியை அளித்து, அதிக அளவில் எதிர்ப்பை உருவாக்கி, அவரது ஆன்மீக உட்பணிக்குத் தூண்டுதலாக, சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தினார். ஒருமுறை பாபா இவ்வாறு எச்சரித்தார்: "**பார்ஸி மற்றும் ஈரானிய இனத்தவர் என் இறப்புக்குக் காரணமாக இருப்பார்கள்.**" இது அவர்களின் தாக்குதல்களுக்கு பாபா உடல்ரீதியாக பலியாவார் என்று அர்த்தமாகாது; மாறாக, பாபாவை எதிர்ப்பதற்குக் காரணமாக அமையும் என்பதைக் குறித்தது. மேலும், பாபாவை ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள், இறுதியில் அவரது காலடிகளில் வந்து சேர்ந்தனர். அவர்களை பாபாவின் அருகாமையில் கொண்டுவர, அவர்களின் எதிர்ப்பின் மூலம் உள்ளளவில் மிகவும் கடினமாகவும், விரைவாகவும் உழைக்க வேண்டியிருந்தது; இதைத்தான் பாபா அவருடைய இறப்பு என்று குறிப்பிட்டது. ஆனால், இவை அனைத்தும் பாபாவின் விருப்பப்படி நடந்தது - அதாவது, அவரது எதிர்ப்பாளர்களை உற்சாகப்படுத்தவும், அவர்களின் எதிர்ப்பைத் தீவிரப்படுத்தவும் செய்தது! இது பாபாவின் ஆன்மீகத் திருவிளையாடல், மேலும் அவரை எதிர்த்தவர்கள் மூலம், அவர் செய்த உள்ளளவிலான பணியைப் புரிந்துகொள்ள முடியாது. இதில் குறிப்பிடத்தக்கது என்னவெனில், பாபாவின் 'இறப்புக்குக் காரணமாக இருப்பவர்கள்' என்று சொல்லப்பட்டவர்களே அவரின் அரவணைப்பில் வந்து, இறுதியில் பாபா உண்மையிலே யார் என்பதை உணர்ந்து, அறிந்து கொண்டார்கள்.

அக்டோபர் 9ஆம் நாள் இரவு ஆரத்தி, உணவுக்குப் பிறகு, பாபா பிரேமாஷ்ரம் சிறுவர்களை மன்ஸிலில் அழைத்தார். ருஸ்தம் பூனாவிலிருந்து வாங்கி வந்த புதிய இசைத்தட்டுகளை இசைத்து மகிழ்ந்தனர், குறிப்பாக இஸ்லாமிய ஆன்மீகவாதிகளின் கவிநயங்களை இசைக்க, பாபா ஆங்காங்கே அதை விளக்கவும் செய்தார்.

பாபா சிறுவர்களை அவரது பாதங்களைத் தொட்டு வணங்கவும் அனுமதித்தார், பின்னர் ஒவ்வொருவரும் பாபாவின் அருகாமையில் அமர்ந்தனர். ஒரு சிறுவன், வசந்த், பாபாவை உற்று நோக்கிய வண்ணம் இருந்தான்; மற்றுமொருவன், தத்து, பாபாவின் முழங்கால்களில் தலையை வைத்து அமர்ந்திருந்தான்.

அடுத்த நாள், பாபா பிரேமாஷ்ரம் சிறுவர்களிடம் இவ்வாறு வலியுறுத்திக் கூறினார்: "**நீங்கள் என்னை நேசித்தால் நான் உங்களை**

**ஜீவன்முக்தாக்களாக** (ஆன்மீகக் கடமைகள் இல்லாமல், இறையுணர்வு மட்டும் அளிப்பது) **மாற்றுவேன்**."

1928 அக்டோபர் 10ஆம் நாள் உபவாசம் ஆரம்பித்து 31ஆவது நாள், பாபா, மெஹர் மன்ஸிலில் மேசையறையில் அமர்ந்து விஷ்ணுவிடம் இவ்வாறு தெரிவித்தார்: **"நாளையிலிருந்து நான் இந்த இடத்தைவிட்டு வெளியே செல்லமாட்டேன்."** அடுத்த 12 நாட்களுக்கு பாபா மன்ஸிலைவிட்டு வெளிவராமல், குறிப்பாக, பிரேமாஷ்ரம் சிறுவர்களுடன் இருந்து பணிபுரிந்தார். அவர் உபவாசம் கடைப்பிடித்து, உணவு உண்ணாமல் இருந்தாலும், குழந்தைகளுக்குத் தனது கைகளால் உணவு பரிமாறினார். அவருடைய முழு கவனமும் பிரேமாஷ்ரம் சிறுவர்களிடமே இருந்தது. மண்டலியில் எவரேனும் ஆஷ்ரமத்து விஷயங்களை அவரிடம் எடுத்துச் செல்லும் வேளையில், பாபா தனது எரிச்சலை வெளிப்படுத்தி, திடீரெனக் குறுக்கிட்டு, **"நீங்கள் விரும்பியபடி செய்யுங்கள்!"** என்று கூறினார். குருநாதர் தனது அன்பின் பெருங்கடலில் சிறுவர்களை மூழ்கடிக்க விரும்பி, தெய்வீக மதுபான சத்திரத்தைத் திறந்து வைத்தார்.

இவ்வேளையில் பாபா மிகவும் மும்முரமாக இருந்ததால், இரவில் ஓய்வெடுப்பதே அரிது.

மெஹர் பாபாவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, சிறுவர்கள் சரியான முறையில் அமர்ந்து, தியானம் செய்கிறார்களா என்பதை அவர் கண்காணித்து வந்தார். பாபா அவர்களின் தவறுகளை சரி செய்து வழிநடத்தினார்; நாள் முழுவதும் அவர்களுடன் இருந்து, அவர்களின் பொழுதுபோக்குக் காலங்களையும், படிப்பு நேரங்களையும் பகிர்ந்து கொண்டார். மதியவேளையில் ஓய்வெடுக்கும்போது சிறுவர்களோடு இசைத்தட்டில் பாட்டு கேட்பதும், சிறுவர்கள் மராட்டி, உருது மொழிகளில் பாடுவதையும் அனைவரும் கேட்டு மகிழ்ந்தனர். இரவு எட்டு மணிக்குப் பின்னர், அரை மணி நேரத்திற்கு மட்டும் மண்டலி மற்றும் மெஹராஷ்ரம் சிறுவர்கள், பாபா அருகிலமர்ந்து, அவருடைய சகவாசத்தைப்பெற அனுமதிக்கப்பட்டனர்.

இந்த மாலை நேர சந்திப்பின்போது, மெஹர் பாபா பல்வேறு விஷயங்களைப் பற்றி சொற்பொழிவாற்றினார். அக்டோபர் 11ஆம் நாள் அவர் பிரேமாஷ்ரம் சிறுவர்களுக்கு 'அன்பின் வழி'யை வலியுறுத்தினார்:

**அன்பு, சத்குருக்கள் வழங்கும் தெய்வீகப் பரிசு. முழு உலகமும் விரும்பினால் கூட, ஒருபோதும் அத்தகைய பரிசை வழங்கமுடியாது. ஒரு முறை வழங்கப்பட்டதும், அனைத்து மனித குலமும் ஒன்று சேர்ந்து எவ்வளவுதான் முயற்சித்தாலும் அதைப் பறிக்க முடியாது. அன்பு ஒரு தெய்வீகப் பரிசு.**

**எப்படி நேசிப்பது என்பதை ஒரு முறை தெரிந்து கொண்டால், பின்னர் ஒரு சிரமமும் இராது. நீங்கள், உங்களை, உங்களுக்கு ஏற்றவாறு மாற்றிக் கொண்டதும், கஷ்டங்கள் அனைத்தும் மறைந்துவிடும். தற்சமயம்**

**அலி அக்பர், ராமாஜி, இதர சிறுவர்கள் மனக்கலக்கத்தில் சிரமமடைகிறார்கள். அவர்களிடம் அன்பிருந்தும் வழி தெரியாமல் தவிக்கிறார்கள். நான் இப்போது உங்களுக்கு அந்த வழியைக் காட்டுகிறேன், ஏனெனில், நீங்கள் அறியாமலேயே, உங்கள் அன்பின் போதையில் என்னுடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கத் தவறுகிறீர்கள். ஆனால், அந்த வழியை உங்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு இதுவே தக்க தருணம். அந்த வழியைக் காண்பித்த பின்பு நீங்கள் சிரமப்படமாட்டீர்கள்.**

**அஞ்சாதீர்கள், நான் உங்களுடன் இருக்கிறேன். நிஜமாகவே உங்கள் அதிர்ஷ்டம் மிகப்பெரிது. சத்குருக்கள் பிறவி எடுப்பது உங்களைப்போன்ற மக்களுக்காகவே! இதுவரை ஒருபோதும் அந்த வழியை எடுத்துக் கூறாததால், நான் அதை உங்களுக்குக் காண்பிக்கிறேன். நான் உங்களுக்கு அனைத்தையும் வழங்குவேன், ஆனால், முதலில் நீங்கள் அனைத்தையும் கைவிட்டு, என்னிடம் உங்களை முழுமையாக அர்ப்பணம் செய்யுங்கள்.**

**வெளியளவில் இந்த ஆஷ்ரமத்தை மேற்பார்வை செய்யும் பொறுப்பை நான் ருஸ்தத்திற்கு கொடுத்து விட்டேன்; அதுபோல், உள்ளளவில் மேற்பார்வை செய்யும் பொறுப்பையும் வழங்க முடியும். அடுத்த ஆறு மாதங்களில், ஒன்றில், உங்களை நான் விரும்பியதைப் போல 'மாற்றுவேன்', அல்லது அனைத்தையும் மூடிவிடுவேன். ஒரு பிரச்சினையும் எழாமல் இருந்தால், நான் உங்களை அவ்வாறே 'செய்வேன்'. ஒருபுறம் சிரமங்களைத் தள்ளிவைக்க, என்னிடம் திட்டம் தயாராக உள்ளது; ஒன்றே ஒன்று என்னவென்றால் என்னுடைய சட்டதிட்டங்களுக்குள் ருஸ்தம் இந்த ஆஷ்ரமத்தைப் பொறுப்பேற்று நடத்தவேண்டும்.**

**நான் இப்போது என்ன செய்வேன் என்பதைப் பற்றிய எண்ணம் உங்களுக்கு சிறிதளவும் கிடையாது. எனவே எனது விருப்பத்திற்கிணங்க அனைத்தையும் தொடர்ந்து செய்யுங்கள்; கவலைப்பட வேண்டாம்.**

மெஹர் பாபாவின் விளக்கத்தின் தலைப்பு, அப்போது வெவ்வேறு உணவு வகைகளைப் பற்றியதாக அமைந்தது. பாபா பின்வரும் கருத்துகளைத் தெரிவித்தார்:

**இரத்தத்தை அதிகரிப்பதற்கும், சுத்திகரிப்பதற்கும் மூன்று வகையான பொருட்கள் உள்ளன: மாதுளம் பழம், திராட்சைப்பழம் மற்றும் தக்காளிப்பழம்; ஆனால், திராட்சையில் அமிலத் தன்மை எனும் குறைபாடு ஒன்றுண்டு. இடுப்பு வலியால் அவதிப்படும் ஒருவருக்கு வெண்டைக்காய் நல்லது. உருளைக்கிழங்கு சக்தியைத் தரும் ஆனால், வயிற்றுக் கோளாறை விளைவிக்கும். பயிறு வகைகள் மிகவும் சிறந்தது. பீன்ஸ், பரங்கிக்காய், முட்டைகோஸ் மற்றும் காலி:ஃபிளவர் ஆகியவை ஊட்டமளிக்காது, ஆனால், சுவையாக இருக்கும். கத்திரிக்காய் மிகவும் மோசமானது. கத்தரிக்காய் சாப்பிடுவது தற்கொலை செய்து கொள்வதற்கு சமம், ஏனெனில் இது இரத்தத்தைச் சிதறடித்து, நீராக வெளிவரச் செய்யும். முள்ளங்கி வாயுவை**

உருவாக்கும், ஆனால், குடலுக்கு நல்லது. தக்காளி இரத்தத்திற்கு மிகச் சிறந்தது. வெந்தயக்கீரை, வெந்தயம் இரண்டுமே மிகவும் நல்லது.

ருஸ்தம் நகைச்சுவையாக இடையே குறுக்கிட்டு, "வினைப்பதிவங்கள் இல்லாததால் கோழிக்கறி நல்லது" என்று கூறினார்.

"நாம் மனப்படிவங்களைப் பற்றி பேசவில்லை, பொருட்களின் தரத்தைப் பற்றித்தான் பேசுகிறோம்" என்று பதிலளித்து பாபா தொடர்ந்தார். "அதை அடுத்த உன்னதமான உணவு காய்கறிகள்தான்."

அசைவ உணவில், மீன், மூளைக்கு மிகச் சிறந்தது ஏனெனில் அதில் பாஸ்பரஸ் (எரியம்) அடங்கியுள்ளது. கோழிமுட்டை நல்லது ஆனால், ஜீரணமாகக் கடினமானது. அனைத்து உணவு வகையிலும் பால் உன்னதமான ஒன்று, காரணம், அதை அடைய எந்த உயிரையும் கொல்ல வேண்டியதில்லை, ஏனெனில் அதில் வாழ்வு அவ்வளவு வளர்ச்சியடையவில்லை. அசைவ உணவில் மிக மோசமான வினைப்பதிவுகள் அடங்கியுள்ளன. மாமிசம் சாப்பிடுவதால், ஒருவர் ஒரே நேரத்தில் விலங்குகளின் வினைப்பதிவங்களைத் தொடர்பு கொள்கிறார், இது கோபம், காமம் இரண்டையும் தூண்டும்.

மனப்படிவங்களைக் கொடுப்பதும் எடுப்பதும் மனதின் அணுகுமுறையைப் பொறுத்தது, அதாவது, நீங்கள் நல்ல நோக்கத்துடன் ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்வதானால், நல்ல மனப்படிவங்களை அடைவீர்கள்; தீய நோக்கமானால் தீய மனப்படிவங்கள் வந்துசேரும். நீங்கள் வேட்டையாடச் செல்லும்போது, ஒரு மிருகத்தை விளையாட்டு மற்றும் மனமகிழ்ச்சிக்காகக் கொல்வதானால், அதன் தீய மனப்படிவங்களை அடைவீர்கள். அதேவேளை, எடுத்துக்காட்டாக, நீங்கள் காடு வழியாகச் செல்லும்போது ஒரு கொடூர விலங்கு உங்களைத் தாக்குகிறது; தற்காப்புக்காக நீங்கள் அதைக் கொன்று வீழ்த்துகிறீர்கள்; இதனால் நீங்கள் எந்த மனப்படிவங்களையும் அடையமாட்டீர்கள்.

அதனால்தான், நீங்கள், மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் கொசுக்கள், சிறு புழுப்பூச்சிகள், தேள் போன்றவற்றை அழிப்பதால் மனப்படிவங்களை சேகரிக்க மாட்டீர்கள். உங்களைக் கடிக்க வரும் ஒரு நாகப்பாம்பை நீங்கள் கொல்லலாம்; ஆனால், காட்டு வெளியில் நடந்து செல்லும் வேளையில் நாகப்பாம்பைக் காண நேர்ந்தால் அதைக் கொல்லக்கூடாது.

சில பிரேமாஷ்ரம் சிறுவர்களை, அதிகாலை தியானத்தில் அமரும்படி, மெஹர் பாபா கூறியதைப் பற்றி அவர் அளித்த விளக்கம்:

தியானம் செய்ய மிகச்சிறப்பான நேரம் அதிகாலை மூன்று மணிக்கும் ஐந்துக்கும் இடைப்பட்ட நேரம். ஏன்? (இது ஓர் இரகசியம்.) சூரியன், பிரபஞ்சம் இவற்றினிடையே தொடர்புள்ளது, மேலும், தியானம் செய்வதற்கு, ஒருவர் சூரிய (சூட்சும, பிராண) தளங்களைக் கடந்து

**செல்லவேண்டும். சத்குருக்கள் அவர்களை வழிபடுவோர்க்கு, ஓர் உந்துதலை அளிப்பதற்காக அதிகாலை மணி மூன்றுக்கும் ஐந்துக்கும் இடையே, இந்தத் தளங்களும், பிரபஞ்சமும் சந்திக்கும் மையங்களில் நிலைகொண்டிருப்பர். எந்த சத்குருவும் ஒருபோதும் இதைத் தெளிவாக விளக்கியதில்லை.**

ஒருநாள் முன்னதாக, பாபா ஒரு மரத்தின் கீழ், குறிப்பிட்ட ஓரிடத்தைக் காட்டி அதில் 'துனி' தயார் செய்யுமாறு கூறினார். அக்டோபர் 11ஆம் நாள் பாபா மண்டலியுடன் அதைப் பார்வையிடச் சென்றார். அதற்குப் பிறகு, சிறுவர்களை துனியருகில் அழைத்து, அவரைச்சுற்றி அமரச் செய்து தனது உரையைத் தொடர்ந்தார்.

**நான் கூறுவதை கவனமாகக் கேளுங்கள். உங்களுக்காகத்தான் நான் ஏகாந்தவாசத்தில், உள்ளே அமர்ந்து பணிபுரிகிறேன். ஆகையால், நான் பணிபுரியும் வேளையில், எனக்கு எந்த விதமான தொந்தரவும் இருக்கக்கூடாது. எனக்குத் தொந்தரவாக இருந்தால் நீங்கள் முன்னேறிச் செல்ல முடியாது; இல்லையேல் உங்களை ஆன்மீகப் பாதையில் வேகமாக வழிநடத்திச் செல்வேன்.**

**இந்நாட்களில் உங்களின் கல்வியும், பள்ளிப்படிப்பும் நிறுத்தப்பட்டுள்ளன. இது எனக்குப் பிரச்சினையாக உள்ளது, ஏனெனில் என்னைப் பற்றிய அவதூறான செய்திகள் பத்திரிகைளிலும், பிற இடங்களிலும் பரவியுள்ளன. உங்கள் தந்தையர்களில் ஒருவர் இங்கு வந்து, பள்ளிக்கூட கல்வி, நிறுத்தப்பட்டுள்ளதைக் கண்டுகொண்டால், தவறாகப் புரிந்து, உங்களைத் திருப்பி அழைத்துச் செல்ல நேரும். இந்த கிராமத்துத் தலைவரும் வெளியே நிலவும் கொந்தளிப்பின் காரணமாக நம் மீது ஒரு கண்வைத்து, கவனமாக இருக்கிறார். மேலும், போலீஸ் அதிகாரிகள் இங்கு வருவதானால், நீங்கள் பள்ளிக்கூட பாடம் கற்றுக்கொள்ளாததைக் கண்டுகொள்வார்கள். எனவே, மன்ஸிலருகில் ஒரு பந்தலை எழுப்பியுள்ளோம்; அங்கே இரண்டு மணியிலிருந்து ஐந்து மணிவரை உங்களுக்கு ஆங்கிலம் கற்றுத்தரப்படும்.**

**கல்வியியல் சம்பந்தமான பாடத்திட்டங்களை நான் விரும்புவதில்லை. இருந்தாலும் நீங்கள் ஆங்கிலம் கற்றுக்கொள்வது ராம்தீர்த், ஷாம்ஸ், ஹஃபீஸ், விவேகானந்தா போன்றவர்கள் எழுதிய புத்தகங்களைப் படிக்க உதவியாக இருக்கும். உண்மையாகச் சொல்லப்போனால், பள்ளிக்கூட கல்வியியல் முறைக்கும், ஆன்மீகப் பாதைக்கும் சிறிதளவும் தொடர்பு கிடையாது. நான் என்ன செய்கிறேன், செய்யப்போகிறேன் என்று உங்களில் எவருக்கும் எதுவும் தெரியாது.**

**நீங்கள் இதைப் பற்றி எதுவும் சிந்திக்க வேண்டாம். தொடர்ந்து என்னையே நினைவில்கொண்டு, நேற்று நான் விளக்கிய முறைப்படி நீங்கள் அனைத்தையும் செய்யுங்கள். இதர அனைத்தையும் நான்**

**கவனித்துக் கொள்வேன். இன்று நான் உங்கள் அனைவரையும் பிரிந்து ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போகிறேன். எதற்காக? எல்லாம் உங்களுக்காகவே!**

மெஹர் பாபா தொடர்ந்து சிறுவர்களுக்குக் கூறினார்:

**என்னைத் தவிர வேறு எதையும் நீங்கள் நினைக்கவேண்டிய தேவையில்லை. நான் சொல்வதையே செய்யுங்கள். நான் உங்களை நிச்சயமாக ஆன்மீகப் பாதையில் வழிநடத்திச் செல்வேன். உங்களில் சிலரை, தியானத்திற்காக இரவில் எழுப்புவேன். மிகவும் குளிராக இருக்கும், ஆனால், பொருட்படுத்தாதீர்கள். நான் சொல்வதற்கு நீங்கள் செவி சாய்க்காவிட்டால், அனுகூலமற்ற நிலையை சந்திக்கவேண்டியது வரும்.**

**இப்போதைக்கு 'அன்பை' ஒருபுறம் தள்ளி வையுங்கள்; அதிகப்படியான நன்மையை நீங்கள் அடைவதை நான் பார்த்துக்கொள்வேன்.**

**ஆனால், அந்த 'அன்பை' இப்போது வழங்கினால், நீங்கள் நீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட மீன்களை போலத் தத்தளிப்பீர்கள், உங்களின் 'தாகம்' தணிய நெடுநேரமாகும். உங்களை நான் தொந்தரவு செய்ய விரும்பவில்லை மேலும், 'தாகம்' என்பது விவரிக்கமுடியாத, பயங்கரமான துன்ப நிலையாகும். உங்களுக்கு இதைப் பற்றிய சிறிதளவு கருத்தும் கிடையாது. சுவாமி இராமகிருஷ்ணாவின் தீவிரமான 'தாகம்' அவரை, பல நாட்கள் ஆற்று நீரில் அமர வைத்தது! சைத்தன்ய சுவாமியின் கட்டுக்கடங்காத தாகத்தால் அவருடைய மயிரிழையிலிருந்து இரத்தம் வெளிவந்தது! ஆனால், உங்களுக்கு அதுபோன்ற தொந்தரவு எதுவும் இருக்காது; அது எனது பொறுப்பு!**

அக்டோபர் 12ஆம் நாள், சோட்டா பாபாவுக்காக மூங்கில் பாயிலான ஓர் அறை, பாபாவின் மேசையறையின் கீழாக அமைக்கப்பட்டது. அடுத்த நாள், ஆன்மீகத்தில் நாட்டமுள்ள ஐரோப்பியர் ஒருவர் அங்கு வரவிருப்பதாகவும், அவர் சோட்டா பாபாவுடன் அவனது மூங்கிலறையில் தங்குவார் என்றும் குறிப்பிட்டார்.

1928, அக்டோபர் 13ஆம் நாள் மெஹர் பாபாவின் 34ஆவது நாள் உபவாசமும், நான்காவது நாள் ஏகாந்தவாசமும் நிறைவுறும் நாளன்று, அனைவரும் காலை ஐந்து மணிக்கு மன்ஸிலின் அருகில் ஒன்றுதிரண்டு, பாபாவின் வருகையை எதிர்நோக்கி, 'துனி' ஏற்றுவதற்காகக் காத்திருந்தனர். அனைவருக்கும் தேநீரும், இனிப்பும் வழங்கப்பட்டது. பாபா, சிறுவர்களை, குளிர்காய துனியருகில் அமரும்படிக் கூறியிருந்தார். மேலும் தினமும் குறிப்பிட்ட நேரங்களில் ஒருவர் துனி நெருப்பைத் தயார் செய்யவும், இன்னொருவர் அதை ஏற்றவும், மேலும் ஒருவர் துனியை அணைக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது.

அன்று மதியவேளையில், ஆதி சீனியர், நஸர்வான் இருவரும் நரைமுடியுடன் இருந்த ரஷ்ய நாட்டைச் சேர்ந்த ‘சாது கிறிஸ்டியன் லீக்’, என்பவருடன் ஆஷ்ரமத்திற்கு வந்தனர். பாபாவால் ஒருநாள் முன்பு குறிப்பிடப்பட்ட ஐரோப்பியர் இவர்தான். நீண்ட காலமாக, குருநாதரைத் தேடி அலைந்த லீக், டோக்கா ஆஷ்ரமத்தின் இணக்கமான, மேம்பட்ட சுற்றுப்புற சூழ்நிலையைக் கண்டு, மிக்க மகிழ்ச்சியடைந்தார். விஷ்ணு அவரை சோட்டா பாபா இருந்த மூங்கில் குடிலில் தங்க வைத்தார். இங்கே ஏதோ இருக்கிறது, நான் அதை உணரமுடிகிறது. ராமகிருஷ்ணா போன்ற மறைந்துபோன குருநாதர் மீது இருந்த 20 வருட ஏக்கத்திற்கும், வழிபாட்டிற்கும் பின்னர், இன்று நான் இறுதியாக உயிர்வாழும் ஒரு குருநாதரை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன்!

டோக்கா வந்தபோது லீக்கின் வயது 58. 1879ஆம் ஆண்டு ரஷ்யா, எஸ்டோனியா மாகாணத்தில் பிறந்த அவர், குழந்தைப் பருவத்திலிருந்தே தியான உணர்வுடன் கூடிய, அறிவார்ந்த, இயற்கை குணத்தோடு, மேற்கு மற்றும் கிழக்கத்திய தத்துவங்களில் ஆர்வமிக்கவராகவும் இருந்தார்.

ஓர் இளைஞனாக, மாஸ்கோவில் வணிக நிறுவனம் ஒன்றில் மேலாளராக உயர்ந்த பதவியில் பணிபுரிந்தார்; ஆனால், 1902ஆம் ஆண்டு பதவியை விட்டுவிட்டு ஆன்மீக ஞானத்தைத் தேடி, இங்கிலாந்து மற்றும் ஃபிரான்ஸ் தேசங்களுக்குச் சென்றார். அடுத்தடுத்த ஆண்டுகளில், அவர் பிரிட்டிஷ் குடிமகனாக மாறி, கடற்படை அதிகாரியாகப் பணியாற்றினார். அவ்வேளையில்தான் இங்கிலாந்தில் லீக், மெரடித் ஸ்டாரை சந்தித்து இருவரும் அவர்களின் இதயங்களுக்கு நெருக்கமான ஆன்மீகத் தத்துவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

சத்குரு ராமகிருஷ்ணா மற்றும் அவருடைய முதன்மையான சீடர் விவேகானந்தா இருவரைப் பற்றியும் படித்தறிந்த பின்பு, சாது கிறிஸ்டியன் லீக், 1910ஆம் ஆண்டு இந்தியதேசம் வந்து ராமகிருஷ்ண மடங்களில் தங்கியிருந்தார்.

அவ்வேளையில் அவர் ஒருமுறை இமயமலைக்குப் பயணம் செய்து, அங்கிருந்த சூழ்நிலை, ஆன்மீக ரீதியில் வறட்சியாக இருந்ததைக் கண்டார். எதுவாயினும் சில வருடங்களில், அவர் இக்காலத்தில் உயிர்வாழும் ஒரு குருநாதரைக் கண்டுபிடித்து, அவருடைய வழித்துணையை நாட விரும்பினார்; அவருக்கு ஏற்கனவே அறிமுகமான மெரடித் ஸ்டார், அண்மையில் இந்தியா வந்து, ஒரு குருநாதரிடம் சரணடைந்ததைக் கேள்விப்பட்டார். மெரடித் ஸ்டாருக்குக் கடிதம் எழுதியபோது, அவர் மெஹர் பாபாவுடன் டோக்கா ஆஷ்ரமத்தில் இருக்கும் விபரங்களைத் தெரியப்படுத்தினார்.

சாது கிறிஸ்டின் லீக், டோக்கா வந்து சேர்ந்த மறுநாள் பாபா அவரை அழைத்துவரக் கூறினார். லீக், மெஹர் பாபாவை அடிபணிந்து, தரிசனம் செய்யும் வேளையில், பாபா அவரது தலையை லீக்கின் பின்புறம் ஓய்வெடுப்பது போல வைத்து சாய்ந்தார்; எனினும் அவ்வேளையில் பாபா அவரைத் தழுவாமல் அன்றிரவு அன்புடன் அரவணைத்தார். பாபா, அவரைத்

தனிப்பட்ட முறையில் அழைத்துச் சென்று, ஆஷ்ரமத்தைச் சுற்றி சிறுவர்கள் தியானத்தில் அமர்ந்திருப்பதையும் காண்பித்தார்.

மறுநாள் காலையில் கிறிஸ்டின் லீக்கை மௌனம் அனுஷ்டிக்குமாறு கட்டளையிட்டு, பாபா இவ்வாறு அறிவுறுத்தினார்: **"முற்றிலும் அமைதியான இதயத்துடன் இங்கே இருங்கள். நாளையிலிருந்து மௌனம் கடைப்பிடியுங்கள். கவலை வேண்டாம். எது தேவைப்பட்டாலும் விஷ்ணுவை அணுகலாம். உங்களைத் தொந்தரவு செய்த விஷயங்களை நினைத்து மனதை அலையவிடவேண்டாம். பொறுமையாக இருங்கள். ஆன்மீகப் பாதையில் உங்களை உறுதியாக இருக்கச் செய்வேன். நான் உங்களை நினைத்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன், ஏனெனில் பல இன்னல்கள் இருந்தபோதிலும், நீங்கள் பல்லாண்டுகளாக ஆன்மீகப் பாதையிலிருந்து உங்களை நழுவவிடாமல் பாதுகாத்துக் கொண்டீர்கள்."**

லீக் உடனே, "பொறுமையைப் பொறுத்தவரை, என்னிடம் அது போதுமானதாக உள்ளது. சரியான நேரத்தில், சரியான பொருளை என்னுடைய தகுதிக்குத் தகுந்தாற்போல நான் பெற்றுக்கொள்வேன்" என்று பதிலளித்தார்.

பாபா, அப்போது அறிவுறுத்தினார்: **"நான் அழைப்பதுவரை என்னிடம் வரவேண்டாம். அடுத்த சில தினங்களுக்கு நான் அழைக்காவிட்டாலும், வரவேண்டாம், வருந்தவும் வேண்டாம். நான் உங்களுடன் இருக்கிறேன்; உள்ளளவில் பேசுவேன்."**

"அதை நான் அறிவேன். குருநாதர்கள் அப்படித்தான் பேசுவார்கள்" என்றார் லீக்.

லீக் ஒரு பண்பும், பணிவுமுள்ள மனிதர், இது மண்டலியைப் பெரிதும் கவர்ந்தது. (அவரது உடைகளை அவரே துவைத்து வந்தார் - இது இந்தியாவில் வாழும் ஐரோப்பியருக்கு அசாதாரணமானது.) பாபாவும் அவர் ஓர் உண்மையான பக்தர் என்பதைக் குறிப்பிட்டு மகிழ்ச்சியடைந்தார்.

அக்டோபர் 16ஆம் நாள், பாபா சிறுவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், ஆன்மீக உள்பயணம் பற்றி மேலும் விளக்கினார்:

**'ஆன்மீகப் பாதை' வெளியுலக மக்களுக்கு மிகவும் கடினமானது. ஆனால், நான் உங்கள் மூலமாகப் பணிபுரிவதால் உங்களுக்கு அது சுலபம். உதாரணமாக, இந்த சாலை வழியாக நீங்கள் மன்ஸில் செல்லவேண்டும்; பாதையோ மேடு பள்ளத்துடன், கரடு முரடாக, சில இடங்களில் குறுகியும் உள்ளது. உங்கள் கண்கள் கட்டப்பட்டிருந்தால், நீங்கள் பாதையில் எப்படி அடியெடுத்து வைக்கமுடியும்? நான் எல்லாவற்றையும் பார்க்க முடிவதால் உங்கள் கையைப் பற்றிக்கொண்டு, அடுத்த அடி எங்கே வைக்கவேண்டும் என்று கூறமுடியும். எனது கண்கள் திறந்தே உள்ளன. இருந்தும், நீங்கள் எனது கைகளைப் பற்றிக் கொள்ளாவிடில் நான் எப்படி உங்களை வழிநடத்த முடியும்? எனது கைகளைப் பற்றிக் கொள்வது என்பது நான் சொல்வதைச் செய்வது. எனவே, என்னையே எப்போதும் நினையுங்கள்,**

**நான் சொல்வதைக் கேளுங்கள் என்று தினமும் நான் உங்களுக்குக் கூறுகிறேன். பின்னர் எவ்விதமான, சொல்லமுடியாத பலன்களை நீங்கள் அடைகிறீர்கள் என்று பாருங்கள்!**

1928 அக்டோபர் 23, தஸரா தினத்தன்று பாபா அவருடைய 12 நாள் ஏகாந்தவாசம் மற்றும் 43 நாள் உபவாசத்தையும் முடித்துவிட்டு வெளியே வந்தார்; சிறுநீரில் இரத்தம் கலந்து, உடல்நிலை மோசமாக இருந்தது. ராம்ஜூ தனது கவலையை வெளிப்படுத்தியபோது, பாபா இவ்வாறு விளக்கினார்: "**நான் உணவு உண்ணாமல் உபவாசம் கடைப்பிடிக்கும் போது, உலகில் உள்ள அனைத்து மக்களும் அதைக் கடைப்பிடிப்பதாக அர்த்தம்; ஏனெனில், அனைத்திலும் இருப்பவன் நானே.**"

அன்று, பாபா பிரேமாஷ்ரமத்திலிருந்து 15 சிறுவர்களை மெஹராஷ்ரமத்திற்குத் திரும்ப அனுப்பி வைத்தார்; இப்போது பிரேமாஷ்ரமத்தில் 18 சிறுவர்கள் மட்டுமே இருந்தனர்.

அடுத்த நாள், அக்டோபர் 24, சில பிரேமாஷ்ரம் சிறுவர்களை, பாபா ஹேப்பி வேலிக்கு அழைத்துச் சென்றார்; அங்கு, பாபா சில நாட்கள் அவர்களுடன் இருக்க விரும்பினார். இரவு உணவுக்குப் பிறகு, பாபா அனைவரையும் ஒன்றாகத் திரட்டி இவ்வாறு விளக்கினார்:

**நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் தவறிழைக்க நேர்ந்தால், அதை நான் ஒரு முறையல்ல, ஆயிரமாயிரம் முறைகள் மன்னிப்பேன், ஆனால், நான் சொல்வதைச் செய்ய முழு முயற்சி எடுக்க வேண்டும். எனக்குக் கீழ்ப்படிந்தால் உங்கள் முன்னேற்றத்தைப் பார்த்துக் கொள்வது முற்றிலும் எனது பொறுப்பு.**

**ஒருபோதும் எனக்கு அஞ்சவேண்டாம். உதாரணமாக, ஒரு குழந்தை விளையாடும்போது, கல் ஒன்றைத் தனது வாயிலிடுவதைத் தாயார் பார்த்து, என்ன செய்வார் என்று நினைக்கிறீர்கள்? அவர் இயன்றவரை அந்தக் கல்லை வெளியிலெடுக்க முயற்சி செய்வார், தேவைப்பட்டால் அடிக்கவும் தயங்கமாட்டார். அதுபோல, நான் இந்த பிரபஞ்சத்தின் தாயுமானவர், குறிப்பாக உங்கள் அனைவருக்கும் என்றார். எனவே அஞ்சுவதற்கு ஏதேனும் காரணமுள்ளதா? ஒருபோதும் அஞ்சாதீர்கள். நான், உங்களை இனிமேல், பிற சிறுவர்களை அனுப்பியது போல மெஹராஷ்ரமத்திற்கு அனுப்ப மாட்டேன். உங்களை, அந்தப் 'பாதை' வழியாக எடுத்துச் செல்வதே என் விருப்பம்.**

பாபா சிறுவர்களுக்குச் சாக்லேட் வழங்கி, ஹேப்பி வேலியில் தியானத்திலிருக்க வேண்டாம் என்று அறிவித்தார்.

அடுத்த மூன்று நாட்கள் இனிமையாகக் கழிந்தன. சிறுவர்களோடு மலையில் நடக்கச் சென்றார்; இசைத்தட்டுகளை இசைத்து, பாடல்களின் அர்த்தத்தை விளக்கினார்; அவ்வப்போது அவர்களுடன் விளையாடவும்

செய்தார். ஐந்து நாட்கள் இருந்துவிட்டு அக்டோபர் 28ஆம் நாள் டோக்கா ஆஷ்ரமத்திற்குத் திரும்பி வந்தனர்.

அடுத்த நாள் சிறுவர்களை அழைத்து, 'தியானத்திலிருக்கும் வேளையில் சோம்பேறித்தனமாக இருந்து தூங்கி விழக்கூடாது' என்று நினைவுபடுத்தி மேலும் கூறினார், **"சோட்டா பாபா** (அப்துல்லா) **ஓர் உள்ளதிர்ச்சியைப் பெற்றுள்ளான், அவனுடைய இதயம் துடிதுடிக்கிறது; ஆனால், அவனுக்கு எதுவும் ஆகாமல் நான் பார்த்துக் கொள்வேன். ஒரு சில தெய்வீக அனுபவங்களை அவன் அடையப் பெற்றிருந்தாலும், உங்களுக்கு அதுபோன்ற எதையும் கடந்துசெல்ல வேண்டி இராது.**

**"நான் உங்களைப் பரிபூரணமாக்குவேன்"** என்று கூறி குளிரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு மருந்து கொடுத்து அனைவரையும் பிரவரா, கோதாவரி நதிகள் சங்கமமாகும் இடத்திற்கு, நிலா வெளிச்சத்தில் நடத்திச் சென்றார்.

1928 நவம்பர் 1ஆம் நாள், நெவாஸா கிராமத்தில் வாழ்ந்த, டாக்கேயின் நண்பர் டி.எல்.கர்வாரே (GARWARE) என்பவர் அவரது வீட்டு கிரகப்பிரவேச நிகழ்ச்சிக்காக பாபாவை அழைத்திருந்தார். பக்தர் ஒருவரின் திறந்த சரக்கு வண்டியில் மண்டலி மற்றும் சிறுவர்களோடு பாபா புறப்பட்டுச் சென்றார்; சுவாரஸ்யமான பொழுதுபோக்குடன் பஜனை நிகழ்ச்சியை மிகவும் ரசித்துப் பாராட்டினார்.

டோக்கா திரும்பி வரும் நேரத்தில், பாபா பயணம் செய்த கார் நதியின் நடுவில் நின்றுவிட்டது. டாக்கே அவரது தோள்கள் மீது பாபாவை சுமந்து நதிக்கரைக்கு எடுத்துச்செல்ல முன்வந்தார். **"நீங்கள் என்னைக் கீழே விழ விடமாட்டேன் என வாக்குறுதியளித்தால் நான் தயாராக இருக்கிறேன்"** என்று சிரித்துக்கொண்டே பாபா பதிலளித்தார்.

"ஒருபோதுமில்லை. நான் தடுமாறலாம், ஆனால், உங்களைக் கீழே விழ விடமாட்டேன்" என்று உறுதியளித்தார்.

அனைவரும் சிரிக்க, பாபா, **"நீங்கள் என்ன மந்திரவாதியா? நீங்கள் விழும்போது நான் எப்படி விழாமலிருக்க முடியும்?"** என்று கேட்டார்.

"நீங்கள் எப்படி விழமுடியும் பாபா? வீழ்ந்தவர்களை எழவைக்கும் நீங்கள் விழமாட்டீர்கள்!" என்று வேடிக்கையாக பதிலளித்தார்.

பாபா அப்போது டாக்கேயின் தோள்களில் அமர்ந்து நதியைக் கடந்தார். மறுகரையைச் சென்றடைந்ததும், **"நீங்கள் இன்று நதியைக் கடக்க எனக்கு உதவினீர்கள். உங்கள் முயற்சி எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஒருநாள் 'நித்திய வாழ்வு' எனும் நதியைக் கடக்க நான் உதவுவேன்."**

ருஸ்தம் ஒரு திறமையான மேலாளர் என்பதால், மெஹர் பாபா, ஆஷ்ரமத்தின் முழுப் பொறுப்பையும் அவரிடம் விட்டுவிட்டார். அனைத்திலும் அவரது சொந்த முடிவை எடுக்க வேண்டியிருந்தது; எந்தவொரு

சந்தர்ப்பத்திலும் பாபாவிடம் ஆலோசனையைக் கேட்க முடியாத நிலை. நவம்பர் 5ஆம் நாள் ருஸ்தத்தின் பொறுப்பை பாபா மீண்டும் உறுதிப்படுத்தினார், **"இனிமேல் அனைத்தும் உங்கள் விருப்பம். நீங்கள் எனக்கு சேவை செய்யலாம் அல்லது என்னையே எண்ணி தியானத்தில் ஈடுபடலாம்."** ருஸ்தம், சேவை செய்வதையே விரும்புவதாக பதிலளித்தார்.

அதைத் தொடர்ந்து, பாபா மண்டலி மற்றும் சிறுவர்களுக்கு தியானத்தைப் பற்றி விளக்கினார்:

**அனைத்தையும் மறந்துவிடும் அளவுக்கு என்னை நினைத்து தியானம் செய்யுங்கள்; என்னுடன் ஒன்றாகி விடுங்கள். பிளீடர், உபவாசமிருந்து தியானத்தில் ஈடுபட்டாலும் இதுவரையிலும் அவர் என்னுடன் ஒன்றவில்லை. உங்கள் சுவாசத்தை உள்ளிழுத்து வெளிவிடுவது முற்றிலும் தானாக நிகழ்வதுபோல - கடிகாரத்தில் டிக், டிக், டிக் எனத் தொடர்ந்து வரும் ஒலிபோல - தன்னிச்சையாக தியானம் செய்யுங்கள். உட்கார்ந்திருக்கும்போது, உணவு உண்ணும்போது, நீர் அருந்தும்போது, படிக்கும்போது - அதாவது ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் இடையே - இயற்கையாகவே என்னை தியானம் செய்யுங்கள். என்னுடைய கருணையின் உதவியுடன் தியானம் செய்வது, ஆன்மீகப் பாதையை நோக்கியும், குருநாதரின் நேரடி உதவியோடு தியானம் செய்வது, ஒருவரை சமாதி நிலைக்கும் எடுத்துச் செல்லும். ஆனால், கடவுளின் கருணையின்றி, அத்தகைய தியானம் அசாத்தியமாகும்.**

1928 நவம்பர் ஆரம்பத்தில், பாபா மறுபடியும் டோக்கா காலநிலையைப் பற்றிப் பேசத் தொடங்கினார். குளிர்காலம் விரைவில் வரும், மண்டலி மற்றும் சிறுவர்களின் உடல்நிலையை பாதிக்கும், எனவே நாம் இங்கிருந்து மெஹராபாத் திரும்பிச் செல்வது நல்லது என்பதை பாபா குறிப்பிட்டார்.

பாபா, அப்போது அனைத்து சிறுவர்களையும் அழைத்து, அவர்களை ஒரு மாதம், மெஹராபாத்தில் ஏற்பாடுகள் செய்வதுவரை, அவரவர் இல்லங்களுக்குச் செல்லுமாறு அறிவித்தார். அன்று மாலையில் அஹமதுநகர், மும்பை, கராச்சி, பூனா போன்ற நகரங்களில் வாழும் 25 மாணவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதுபோன்ற திடீர் மாற்றங்களின் அடிப்படை மர்மம், நவம்பர் 19ஆம் நாள் ஆகா அலியின் தந்தையார், மூன்றாவது முறையாக அவனை அழைத்துச்செல்ல வந்தபோது புலப்பட்டது. இம்முறை ஒரு மோசமான குண்டனையும்கூட அழைத்து வந்திருந்தார். அடுத்த நாள் அலி அங்கிருந்து புறப்பட்டுவிட்டான். இக்காரணத்திற்காகத்தான், பாபா கடந்த சில மாதங்களாக, இரவும் பகலும் சிறுவர்களோடு அயராது உழைத்து, திட்டமிட்டபடி அவரது பணியை செய்து முடித்தார்.

மெஹராஷ்ரம், முதலில் 10 இந்து குழந்தைகளுடன் ஆரம்பித்தது, படிப்படியாக இந்த நாள்வரை 102 மாணவர்கள் (49 இந்துக்கள், 32

ஸொராஸ்டிரியர்கள், 20 முஸ்லிம்கள் மற்றும் ஒரு கிறிஸ்தவ மாணவன்) வந்து சேர்ந்தனர். இவர்களுடன் மேலும் ஆஷ்ரமத்தில் நூற்றுக்கும் அதிகமாக நபர்கள் - ஆண்கள், பெண்கள், குடும்பங்கள் - வாழ்ந்து வந்தனர்.

இதற்கிடையில் மெஹர் பாபாவின் பொன்மொழிகள் மற்றும் போதனைகளை மக்களுக்கு எடுத்துக் கூறும் நோக்கத்தில், பாபாவின் விருப்பப்படி, ‘மெஹர் மெஸேஜ்’ எனும் மாத இதழ் முதலில் ஆங்கிலத்திலும் பின்னர் உருது, மராட்டி, குஜராத்தி மற்றும் பெர்ஸியன் மொழிகளிலும் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக ராம்ஜூ, ஆஷ்ரம மாணவர்களை நேரடியாக சந்தித்து, அவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்து, அனைத்தையும் அவரது ‘ஸாப்ஸ் & த்ராப்ஸ்’ (SOBS AND TRROBS) என்ற புத்தகத்திற்காகக் குறிப்பெடுத்தார். கையெழுத்துப் பிரதியை அச்சடிக்கும் பணியை, ஆஷ்ரமத்திலிருந்து ஆகா அலி புறப்பட்டுச் சென்ற அந்த நாளில் ராம்ஜூ தொடங்கினார்.

ஆஷ்ரமத்தில் குளிர் அதிகமாக இருந்ததால் பிரேமாஷ்ரம் சிறுவர்கள் இருமலால் அவதியுற்றனர். பாபா, பைதூலிடம் மருந்தகத்திலிருந்து இருமல் மருந்துகளை எடுத்து வருமாறு கூறினார். தவறுதலாக, இருமல் மருந்துகளோடு ஓர் அயோடின் பாட்டிலும் (பார்வைக்கு ஒன்று போல் இருந்ததால்) கலந்துவிட்டது. அனைத்து பாட்டில்களும் பாபாவிடம் கொடுக்கப்பட்டன. மருந்தை சிறுவர்களுக்குத் தருவதற்கு பதிலாக, பாபா அவர் கையில் இருந்த பாட்டில்களில் ஒன்றை சிறிது நேரம் சுழற்றினார். அதைத் திறந்து, மணத்தை நுகர்ந்து, பின்னர் அது அயோடின் என்று கூறி பைதூலிடம் கொடுத்தார். பாபா வருத்தத்தோடு, **"இதை சிறுவர்களுக்குக் கொடுத்திருந்தால் அவர்கள் உயிரை இழக்க நேர்ந்திருக்கும்"** என்றார். பைதூல் அவரது தவறை உணர்ந்து பணிவுடன் மன்னிப்புக் கோரினார். பாபாவும் அவரை மன்னித்து அனுப்பினார்.

மண்டலியில் பாதிரி, மெஹர்ஜி இருவரும் கடும் குளிரால் பாதிக்கப்பட்டனர். நவம்பர் 25ஆம் நாள், மெஹர்ஜியின் உடல்நிலை மோசமாகி, உண்ணுவதை நிறுத்திவிட்டார். அவர் காபூலி மாதுளை அல்லது ஆரஞ்சு பழரசத்திற்காக, ரகசியமாக ஏங்கினார்; ஆனால், அதை எவருக்கும் சொல்லவில்லை. அன்று பாபா ஒரு பழக் கூடையுடன் - அதில் காபூலி மாதுளையும் இருந்தது - மெஹர்ஜியிடம் வந்தது அவருக்கு மகிழ்ச்சிகரமான ஆச்சரியத்தை அளித்தது.

இக்காலகட்டத்தில் மெஹர் பாபாவின் பல பக்தர்கள், தனித்துவமிக்க மெஹராஷ்ரம் நிறுவனத்தைப் பற்றிப் பிறருக்கு எடுத்துக்கூற, பலர் தங்கள் குழந்தைகளை ஆஷ்ரமத்தில் சேர்ப்பதற்காக முன்வந்தனர். ஆனால்,

அதேவேளையில், பாபா ஆஷ்ரமத்தைக் கலைத்து நிறுத்தப் போவதாக அறிவித்தார். இது முற்றிலும் முரண்பாடாகத் தோன்றினாலும், பாபாவிற்கு மட்டுமே அவரது உண்மையான பணி என்னவென்பது தெரியும்; மேலும் அனைத்தும், உள்ளளவில், அவரது தெய்வீகத் திட்டத்தின்படி முறையாகத் தொடர்கிறது என்பதுதான் உண்மை.

பாபா, 1928 நவம்பர் 26ஆம் நாள் குஸ்தாஜி, சோட்டா பாபா இருவருடன் ருஸ்தத்தின் காரில் புறப்பட்டுச் சென்றார். சிறுவர்கள் மற்றும் அனைவரும், அனைத்து பொருட்களுடன் பின்னர் அக்பர் அச்சகம் சென்று அங்கே தங்கினர்.

நஸர்வான், அடுத்த நாள் அதிகாலையில் எழுந்து காலை உணவுக்காக, சப்பாத்தி தயார் செய்வதில் கைகொடுத்து உதவினார். பாபாவும் அப்போது சமையலறையில் வந்து, அவருடைய உதவிக்கரத்தை நீட்டினார். நஸர்வான் பாபாவைத் தடுத்து, பணிவுடன் வேண்டாம் என முறையிட்டார்; ஆனால், பாபா இவ்வாறு விளக்கமளித்தார்: **"நான் இந்தப் பணியைச் செய்யக் கடமைப்பட்டுள்ளேன். இரவும் பகலும் நான் இதைச் செய்யவேண்டும். நான் செய்யாவிடில் உலகம் முழுவதும் பசி, பட்டினியால் வாடும்! நான் என் உள்ளிலிருந்து அனைவருக்கும் உணவு ஊட்டுகிறேன்; ஆனால், வெளியளவில் ஒவ்வொருவருக்கும் உணவளிக்கவே நான் இப்பூவுலகில் வந்துள்ளேன்."**

நவம்பர் 29ஆம் நாள் பாபா டோக்கா ஆஷ்ரமத்திற்கு, ஆதியுடன் திரும்பி வந்தார். சிறிது நேரம் இருந்துவிட்டு மதியம் இரண்டு மணியளவில் பெண் மண்டலியுடன் பாபா மெஹராபாத் திரும்பிச் சென்றார். பெண் மண்டலி தபால் நிலைய கட்டிடத்திலும், பாபா மேல்மலையிலும் தங்கினர். சிறுவர்கள் ஆண் மண்டலியுடன் அன்று மாலையில் மெஹராபாத் வந்து சேர்ந்தனர்.



எஸ்தர் ரோஸ், மெரடித் ஸ்டார், மார்கரெட் ரோஸ்

ஜால்பாய் & மெரடித் ஸ்டார்,
டோக்கா 1928





மெஹர் மன்ஸில், டோக்கா



மெஹர் பாபா, மும்பை,
1929

# மீண்டும் மெஹராபாத்

(**Meherabad Again**)

டோக்கா கிராமம் வெறிச்சோடி இருந்தது, ஆனால், காலம் இதை இவ்வாறு பிரதிபலித்துக் காட்டியது:

"மதுரசத்தின் தெய்வீக விளையாட்டு, விளையாடப்பட்ட எந்த ஓர் இடமும், முன்பிருந்தது போல் ஒருபோதும் இருக்காது. இறை போதையை அருளும் இறைவனும், அவருடைய மதுரச கடலும் என்றும், எப்போதும் அங்கே இருக்கும். தாகத்தால் தவிப்பவர்கள் அதை, காலமெல்லாம் அங்குச் சென்று தணித்துக் கொள்ளமுடியும். அந்த மதுரசத்தை முழுமையாக அருந்துபவர்கள், புனித நதிகளின் சங்கமத்தைச் சென்றடைந்து, அளவிறுதியற்ற வாழ்க்கை வாழ்வார்கள்."

டோக்கா ஆஷ்ரமத்திலிருந்து சென்ற பின்பு, மெரடித் ஸ்டார், மார்கரெட், எஸ்தர் ரோஸ் மூவரும் அக்பர் அச்சகத்தில் தங்கியிருந்தனர்; அவ்வப்போது மெஹராபாத் வந்து சென்றனர். சாது கிறிஸ்டின் லீக்கை, இந்தியாவில் பல இடங்களிலும் புனித பயணம் செய்து வருமாறு, பாபா அனுப்பி வைத்தார்; பின்னர் அவர் மெஹராபாத் வந்தடைந்தார்.

பாபா, வழக்கம்போல் ஒவ்வொரு மண்டலியின் கடமைகளைக் குறிப்பிட்டுக் காட்டினார். பெரும்பாலும் அவருடைய நேரத்தை சிறுவர்களோடு கழித்தார். நள்ளிரவு இரண்டு மணிக்கு எழுந்து, சிறுவர்களின் தியான முறைகளைக் கண்காணித்து வந்தார். பாபா, காலை ஐந்து மணிக்கு அவராகவே தேநீர் தயார் செய்து, சப்பாத்தியுடன் சிறுவர்களுக்கு வழங்கினார்.

1928 டிசம்பர் 8ஆம் நாள் பாபா இதர பணிகளை மேற்பார்வைச் செய்யும் வேளையில், அவர் 'தெய்வீக போதை' மற்றும் 'குருநாதருக்குக் கீழ்ப்படிதல்' குறித்து விளக்கமளித்தார். வெவ்வேறு விதமான இரண்டு நிலைகளைப் பற்றி ஒப்புமையோடு விளக்கினார்:

**வைரம் அல்லது முத்து, உண்மையில் விலை உயர்ந்ததும், மதிப்புமிக்கதும் ஆகும்; ஆனால், பாலைவனத்தில் ஒருவர் தாகமாகவோ அல்லது பசியாகவோ இருக்கும்போது, அவற்றிற்கு எந்த மதிப்புமில்லை; அவ்வேளையில் ஒரு துண்டு ரொட்டி அல்லது ஒரு பானைத் தண்ணீர் உலகின் அனைத்து ஆபரணங்களை விடவும் மதிப்புமிக்கதாக இருக்கும். அதுபோல், இறை போதையில் இருப்பது மிக்க நன்று; இது உலக விவகாரங்கள், உறவுகள் மற்றும் உண்பது, உறங்குவது, அருந்துவது ஆகியவற்றில் அலட்சியமாகவும், கவனக்குறைவாகவும் இருக்க வைக்கும். இது நிச்சயமாக அன்பிற்குரியவரிடம் ஒருவர் வைக்கும் அன்பின் விளைவாகும்.**

**ஆனால், இந்த இறை போதை எவ்வளவுதான் விலைமதிப்பற்றதாக அல்லது விரும்பத்தக்கதாக இருந்தாலும், ஒரு குருநாதரின் உத்தரவுக்கு முன்னால் எந்த மதிப்புமில்லை. அனைத்தும் அவரது கட்டளைகளுக்குப் பிறகுதான். அவரது கட்டளைகள் எப்போதுமே மிக உயர்ந்த மற்றும் உன்னதமான சோதனைகளாக இருக்கும். இறை போதையின் காரணமாக உத்தரவுகளை மீறுவது என்பது எவ்வகையிலும் உகந்ததல்ல.**

**ஏற்கெனவே நான் கூறியதுபோல், உயர்வான இறை போதையிலும், ஒருவரின் தலையானது குருநாதரின் பாதங்களில் இருக்க வேண்டும். இதுவே பெர்ஸியன் ஈரடிக்கவிதையின் பொருளாகும்:**

**அன்பிற்குரியவரின் இருக்கையைக்கூட**
**ஒருவர் முத்தமிட வேண்டும்;**
**பின்னர் அவரின் பிரிவை நினைத்து அழுது புலம்புங்கள்.**
**அதற்குப் பிறகு கேளுங்கள், "ஓ இறை அரசரே, எங்களது**
**கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து ஏதேனும் செய்யுங்கள்."**

**இது எதைக் குறிக்குமென்றால், உன் இதயம், ஆத்மா இரண்டையும் இறைவனடியில் முதலில் அர்ப்பணம் செய்ய வேண்டும்; அதன் பின், பிரிவை நினைத்து அழுது, புலம்பி, கண்ணீர் வடிக்கலாம் - அதற்கு முன் அல்ல! அர்ப்பணம் என்பது, மனதை இழந்து குருநாதரின் வார்த்தைகள் மற்றும் வழிகாட்டுதலை, வேறு எவ்வித சிந்தனையுமின்றி செவ்வனே கடைப்பிடிப்பது. சரணடையாமல் கூக்குரலிட்டு அழுது புலம்புவதில் எந்த பயனுமில்லை.**

மெஹர் பாபாவின் இந்த வார்த்தைகளெல்லாம் ராஜாராம் எனும் சிறுவனுக்காகக் கூறியதுபோலத் தோன்றியது. அவன் இறை போதையின் தாக்கத்தில், பாபாவின் கண்டிப்பான இரண்டு முறை உணவு உண்ணும் கட்டளையை, அவ்வப்போது அலட்சியம் செய்துவந்தான். பாபா, ராஜாராமுக்கு விளக்கினார், "உன்னிடம் அன்பு இருக்கலாம், ஆனால், முழுமையாகக் கீழ்ப்படியாத வரையில், அதனால் எந்த பயனுமில்லை. அன்பு தேவை ஆனால், கீழ்ப்படிதல் அதைவிடத் தேவை. நான் சொல்வதன் அர்த்தம் என்னவெனில் முதலில் கீழ்ப்படிதல், பின்னர் அன்பாயிருத்தல்!"

பாபாவின் விளக்கவுரையின் தலைப்பு, அப்போது 'தூக்கமும் அதன் விளைவுகளையும்' குறித்து அமைந்தது.

**தூக்கம் அதாவது ஆழ்ந்த தூக்கம் நல்லது, ஆனால், அது அளவோடு இருக்க வேண்டும். நல்ல உடல் ஆரோக்கியத்திற்கு நான்கு முதல் ஐந்து மணிநேர தூக்கம் போதுமானது; ஆனால், அது கனவுகளால் தடையின்றி இருக்க வேண்டும்.**

**ஆழ்ந்த தூக்கத்திற்கான சிறந்த வழி, உங்களை இரவில் எழுந்திருக்கப் பழக்கப்படுத்திக் கொள்வதே ஆகும்; நீங்கள் தூக்கத்திலிருந்து ஒரு முறை விழித்தெழுந்த பின்பு, மறுபடியும்**

தூங்காமலிருப்பது அவசியம். உதாரணமாக, நீங்கள் 8 மணிக்கு தூங்கச் சென்று ஏதோ காரணத்தால் நள்ளிரவு ஒரு மணிக்கு - இயற்கையின் அழைப்பை ஏற்று அல்லது திடீரென விழிக்கிறீர்கள்; விழித்து, முழுவுணர்வை அடைந்த பின்பு, மறுபடியும் தூங்கச் செல்லாதீர்கள், விழித்தே இருங்கள். நீங்கள் காலை 4 மணியிலிருந்து 6 மணிவரை, (மிகவும் சிறப்பான நேரம்) தியானத்தில் ஈடுபடுங்கள் அல்லது படிக்க, நடக்கச் செல்லுங்கள் - நீங்கள் இரவு 8 மணிக்கு தூங்கி, மூன்று மணி நேரம் கழித்து 11 மணிக்கு விழித்தால் கூட மறுபடியும் தூங்காதீர்கள்.

ஒரு முறை தூக்கத்திலிருந்து விழித்து, முழு உணர்வை அடைந்த பின்பு மறுபடியும் தூங்கச் செல்வது, உடலுக்குப் பாதகத்தை விளைவிக்கும். ஒரு முறை விழித்து மறுபடியும் தூங்குவதற்கிடையே குறைந்தது மூன்று மணி நேரமாவது இடைவெளி தேவை. முதல் முறை விழித்து மறுபடியும் தூங்காமலிருப்பது மிகச் சிறந்த பழக்கம்; உடல் ஆரோக்கியத்திற்கும் இது நல்லது. ஆரம்பத்தில் சிறிது தொந்தரவு போலத் தோன்றினாலும், இரவின் முதல் விழிப்புக்குப் பிறகு, தூங்காமலிருக்க பழகிக் கொண்டால், கனவுகளால் எவ்வித சலனமும் இல்லாத அமைதியான ஆழ்ந்த தூக்கத்தைப் பெறமுடியும்; இது நல்ல ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் மிகவும் அவசியமான மற்றும் விலைமதிப்பற்ற காரணியாக அமையும்.

எனவே அனைவரும் முயற்சி செய்யுங்கள்; இது ஆழ்ந்த தூக்கத்திற்கும் நல்ல உடல்நலத்திற்கும் உதவியாக இருக்கும்.

ஒருமுறை இதை நீங்கள் பழக்கப்படுத்திக் கொண்டீர்களானால், தியானம் செய்யும்போதும் தூக்கம் வராது. எடுத்துக்காட்டாக, பிரேமாஷ்ரம் சிறுவர்கள் கடந்த ஒரு மாதமாக, தினமும் அதிகாலை ஒரு மணிக்கு எழுந்து அற்புதமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளார்கள். ஆரம்பத்தில், தியான வேளையில் தூக்கத்தால் இடையூறுகளை சந்தித்திருந்தாலும், ஏறக்குறைய அனைவரும் இப்போது பழகி விட்டார்கள். ஒரே ஒரு சிறுவன் மட்டும் தியானத்தில் கவனம் செலுத்த முடியாமல் பாதியில் நிறுத்திவிட்டான்.

இக்காலகட்டத்தில், அக்பர் அச்சகத்தில் வாழ்ந்த ஹோமி மாமா ஸட்டா அவர்களின் மனைவி பில்லா, கடுமையான ஜுரத்தால் கவலைக்கிடமான நிலையில் இருந்தார். அவருக்கு சிகிக்சையளித்த பிரபலமான மருத்துவர்கள், பில்லாவின் இறுதி காலம் நெருங்கிவிட்டதை எடுத்துக்கூறி கைவிட்டுவிட்டார்கள். ஹோமி மாமா இந்தச் செய்தியை மெஹர் பாபாவிற்குத் தெரிவித்ததும், பாபா ஆறுதல் கூறி சமாதானப்படுத்தினார், **"பில்லா உயிரிழந்தாலும், அவர் என்னை ஆழமாக நேசிப்பதால், என்னிடமே வருவார். ஆகையால் அனைத்தையும் என்னிடம் விட்டுவிடுங்கள்; இயன்றவரை, சிறந்த சிகிச்சையை வழங்குங்கள், தைரியமாக இருங்கள்."**

ஹோமி மாமா அங்கிருந்து புறப்பட்டுச் சென்றதும், பாபா கடுங்குளிரால் பாதிக்கப்பட்டார். பல போர்வைகளால் போர்த்திய பின்னரும் நடுக்கம் நின்றபாடில்லை. சிறிது நேரத்தில் பாபாவின் உடல் சப்பாத்திக் கல்போலக் கொதித்தது; அமைதியின்றி மிகவும் சிரமப்பட்டார். இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, பில்லாவின் காய்ச்சல் அதிசயமாக மறைந்து, அவருடைய ஜுரம், முற்றிலுமாகக் குறைந்து, நலமாக இருப்பதாக ஹோமி மாமாவிடமிருந்து தகவல் வந்தது. பில்லாவுக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள், தலை கால் புரியாமல் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். இந்தச் செய்தி பாபாவை வந்தடைந்ததும் அவருடைய ஜுரமும் படிப்படியாக இறங்கி, சாதாரணமாகத் தோற்றமளித்தார். இது இப்படி நடந்த பல சம்பவங்களில் ஒன்றாகும் - அவர் தன்னை நேசிப்பவர்களின் துன்பத்தை உள்ளளவில் எடுத்துக்கொள்வது மட்டுமல்லாமல், வெளியளவிலும் தன் மீது ஏற்றுக்கொண்டார்.

'மெஹர் மெஸேஜ்' முதல் இதழின் வெளியீடு (ஆங்கிலத்தில்) தயாரான நிலையில், கெ.ஜெ.தஸ்தூர் பாபாவிற்கு இந்தத் தகவலைத் தெரிவித்தார். டிசம்பர் 11ஆம் நாள் பாபா, தஸ்தூரை அழைத்து, பத்திரிகை வெளியிடுவதைப் பற்றி, பல விஷயங்களை எடுத்துரைத்தார்:

**"இந்த வெளியீடு ஆன்மீக விஷயங்களுக்காக மட்டுமே கையாளப்பட்டால், எனது பார்வையுடன் ஆசீர்வாதமும் எப்போதும் அதில் இருக்கும். சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளை இதில் வெளியிடாமல், முற்றிலும் ஆன்மீகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை மட்டுமே இந்தப் பத்திரிகையில் வெளியிட வேண்டும்"** என்று பாபா, தஸ்தூரை எச்சரித்தார்.

அடுத்த நாள், பாபா சிறுவர்களின் கழிவறைகளை, ஜால்பாயின் உதவியோடு சுத்தம் செய்யத் தொடங்கினார். இவ்விதமான குற்றேவல் பணியைச் செய்வது பற்றி பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

**சத்குருக்கள் மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள், இருந்தும் குற்றேவல்** (கழிவறைகளை சுத்தம் செய்வது) **பணிகள் மூலமாக பாவிகளின் தீய மனப்படிவங்களை ஒழித்துக் கட்டுகிறார்கள். இதற்காக நான் கழிவறைகளை சுத்தம் செய்வது போன்ற வெளியளவிலான பணிகளைச் செய்ய வேண்டியதாகிறது. இந்த வேலை எனக்கு எவ்வளவு இனிமையாகவும் அற்புதமாகவும் இருப்பதை நீங்கள் ஒருபோதும் அறியமாட்டீர்கள்! எனது பணியின் வழிகளையும் முறைகளையும் நீங்கள் எப்போதாவது புரிந்து கொள்ள முடியுமா?**

1928 டிசம்பர் 20ஆம் நாள் பாபா சிறுவர்களுக்கு வலியுறுத்திக் கூறினார், "**அனைத்தும் கடவுளிடமே உள்ளது, ஆனால், கடவுளை அறிந்து, உணர சத்குருவின் தலையீடு தேவை.**" இதை பாபா ஒரு கதை மூலமாக விளக்கினார்:

ஒருமுறை பெண் புலி, காட்டில் குட்டியொன்றை ஈன்றெடுத்ததும் உயிரிழந்தது. புலிக்குட்டி உணவும் தண்ணீரும் இல்லாமல் பசியாக பல நாட்கள் இருந்தது.

ஆடு மேய்ப்பவன் ஒருவன் அதைக் கண்டு இரக்கப்பட்டு, புலிக்குட்டியைத் தனது ஆட்டுமந்தையோடு சேர்த்து வளர்த்தான். புலிக்குட்டி, தன்னையும் ஆடு என்றெண்ணி, கூட்டத்தோடு வளர்ந்தது. அதற்கு, தான் ஒரு புலி என்பது தெரியாது.

ஒருநாள் ஒரு பெரிய புலி இந்தக் புலிக்குட்டி ஆட்டு மந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்து ஆச்சரியமடைந்தது. உடனே, அருகில் சென்று, ‘அது ஒரு புலி, ஆடு அல்ல’ என்று எடுத்துக்கூறி, புரியவைக்க தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தது.

ஆனால், புலிக்குட்டி அதை நம்ப மறுத்தது. உடனே பெரிய புலி அதை அழைத்துச் சென்று, கிணற்று நீரில் அதன் பிரதிபிம்பத்தை உற்றுப்பார்க்க வைத்ததும், புலிக்குட்டி அதைக் கண்டு ஆச்சரியமடைந்து, கடைசியில் அதனுடைய உண்மையான அடையாளத்தைக் கண்டுகொண்டது. அது, தான் ஓர் ஆட்டுக்குட்டி என்ற எண்ணத்தை மறந்து, எஞ்சிய நாட்களை புலிகள் மத்தியில் கழித்தது.

இக்கதையில் ஆடுகள் உண்மையறியாத மக்களைக் குறிக்கும். ஆட்டுமந்தை பொதுமக்களைப் போல. புலிக்குட்டி ஒன்றுமறியாத ஒரு மனிதன்; பெரிய புலி ஒரு சத்குரு; கிணற்று நீர் ஆன்மீகப் பாதையை அடையாளப்படுத்தும்; இறுதியில், பிரதிபலிப்பை அங்கீகரிப்பது இறைநிலையை அடைவதற்கு சமம்.

புலிக்குட்டி நிஜத்தில் ஒரு புலி என்றாலும், அறியாமையால், அது தன்னை ஆடு என்று நினைத்துக் கொண்டது. பெரிய புலி கிணற்று நீரில் புலிக்குட்டியின் பிரதிபலிப்பைக் காட்டாத வரையில், அது தன்னை ஆடு என்ற தவறான கருத்தையே கொண்டிருந்திருக்கும். அதேபோல, மனிதன் அளவிறுதியற்ற கடவுள் என்றாலும், தனது உண்மை நிலையை அறியாத வரையில், அவனை மனிதன் என்றே நினைத்து, பிறப்பு, இறப்பு எனும் காலச்சக்கரத்தில் சுழன்று கொண்டிருக்கிறான். சத்குரு அவனுடைய உண்மை உருவத்தைக் காண்பிக்கும் வரை மனிதன் அறியாமையில் புரண்டு கொண்டிருக்கிறான்.

1925, டிசம்பர் 25ஆம் நாள் கிறிஸ்துமஸ் தினத்தன்று பள்ளிக்கூட மாணவர்களுக்கு விடுமுறையளிக்கப்பட்டது. மெரடித் ஸ்டார், அன்று மதியம் பாபாவை சந்திக்க வந்திருந்தார். பாபாவின் விருப்பத்திற்கிணங்கி மதச்சடங்குகள் எதுவும் கடைப்பிடிக்கவில்லை. **"நான்கு பக்கங்களிலும், உலகின் ஒவ்வொரு மூலையிலும், மதக்கட்டளைகளும் சடங்கு சம்பிரதாயங்களும் நிலவுகின்றன. இங்கு நாமும் அதே பழைய, போலி கெடுபிடிகளைக் கடைப்பிடிப்பதானால், நமக்கும் உலகிற்கும் இடையே**

**என்ன வித்தியாசம் இருக்கிறது? இங்கே, எனக்குக் கீழ்ப்படிவது மட்டுமே நீங்கள் செய்யக்கூடிய மிகச் சிறந்த மதச்சடங்காகும்; அவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் மதச்சடங்குகள் மற்றும் பழக்கவழக்கங்களின் கட்டுப்பாடுகளிலிருந்து உங்களை விடுவிக்கமுடியும்."**

இவ்வேளையில், இன்னுமொரு பிரேமாஷ்ரம் சிறுவன் அஹமது முஹமது, திடீரென பாபா முன்னிலையில் வந்து, ரோஜா மாலையை அணிவித்து, பெருமையுடன் நின்று கொண்டிருந்தான். இந்த சிறுவன் மும்பையிலிருந்து 175 மைல்கள் நடந்து, உண்ண உணவில்லாமல், பல கஷ்டங்களை எதிர்கொண்டு மெஹராபாத்திற்குத் திரும்பி வந்தான்.

விட்டில்பூச்சிகள் அவ்வளவு தீவிரமாக விளக்கின் ஒளியை நோக்கி ஈர்க்கப்பட்டன! என்ன வியப்பான சம்பவம்! ஒளியின் அருகே நடனமாடும் சிறுவர்களின் கடுமையான முயற்சிகள், குழந்தையின் விளையாட்டுத்தனம் போலத் தோற்றமளித்தாலும், மிக உயர்ந்த மலை சிகரங்களை அடைய வழிவகுக்கின்றன. விட்டில்பூச்சிகளின் பசியை விளக்கொளி மட்டுமே தணிக்க முடியும். ஒளியின் பலிபீடத்தில் சாம்பலாக மாறும்போதுதான் அவை நிம்மதியாக இருக்கும்; அவற்றின் இந்த மாற்றம்தான் மாயாவை வென்றதன் அடையாளம். விளக்கொளியும் விட்டில்பூச்சிகளும் சங்கமமாகும் காட்சியை மெஹராபாத்தில் காணமுடிந்தது! மேலும், இறையன்பின் மதுபானம் அவர்களின் இதயங்களில் மறுபடியும் நிரம்பி வழிந்தது! இறுதியில் விட்டில்பூச்சிகள் மறைந்த பின்னரும், உயிரோடு இருப்பதற்கான பாடம் கற்றுத்தரப்பட்டது! இறையன்பின் தாக்கத்தை, குருநாதரின் விருப்பத்திற்கிணங்க அனைவரும் உணரமுடிந்தது!

1925, டிசம்பர் 30ஆம் நாள், பிரபஞ்சத்தைப் பற்றி விளக்கமளிக்கும் வேளையில், மெஹர் பாபா இவ்வாறு வெளிப்படுத்தினார்:

**பிரபஞ்ச சுழற்சியின் வேகம் மிகவும் பிரமாண்டமானதாக இருப்பதால், அது தன்னியக்கத்தில் சுழல்கிறதா என்று கூற இயலாது. உலகில் எத்தனை மனிதர்கள், உயிரினங்கள் மற்றும் உயிரற்ற பொருட்கள் இருப்பதைப் பாருங்கள்! ஒவ்வொரு நபருக்கும், பொருளுக்கும் ஒரு துடிப்பு இருக்கிறது; ஒவ்வொருவருக்கும் எண்ணங்கள், சிந்தனைகள் உள்ளன - ஒவ்வொரு நிமிடத்திலும் நூற்றுக்கணக்கான எண்ணங்கள்.**

**மனித குலம் மற்றும் பிற அனைத்து உயிரினங்களின் மொத்த நிறையின் எண்ணங்களையும் ஒன்று சேர்த்தால், அவற்றை எவரும் அளவிடவோ சிந்திக்கவோ முடியாது. இத்தகைய மிகப்பெரிய வேகத்திற்கு, கணக்கிடக்கூடிய வேக அளவு இல்லை. அது சுழலாமல் நின்று கொண்டிருப்பது போலத் தோற்றமளிக்கிறது. முழுப் பிரபஞ்சத்தின் துடிப்பும் அளவற்றது. ஆனால், இந்தத் துடிப்பை நான் அளவிட்டு, பார்த்து, உணரமுடியும். அது என்னவாக இருக்கவேண்டும் என்பதை நினைத்துப்**

**பாருங்கள்! எனக்குத் தெரியும் அமெரிக்க நாட்டு ஜனாதிபதி என்ன நினைக்கிறார், அல்லது நாளை என்ன நினைப்பார் என்று! அதுபோல் இங்கிலாந்து பிரதமரைப் பற்றியும் தெரியும். அவர்களின் எண்ணங்களை அறிய எனக்கு ஒரு கணநேரம் கூட பிடிக்காது.**

**"இது எப்படி சாத்தியம்?" என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். இது சாத்தியம் ஏனெனில், இவை அனைத்தும் எனக்கு மிகவும் நெருக்கத்தில் உள்ளன. எடுத்துக்காட்டாக நான் வசந்தின் கை, கன்னம் அல்லது வயிற்றைக் கிள்ளும்போது அவன் அதை உணர்வானா? உணர்வான், ஏனெனில் இவை அனைத்தும் அவனுடைய உடல் உறுப்புகள். ஒரே நேரத்தில் அவனது பல உறுப்புகளை நான் கிள்ளுவதாக இருந்தால், அவன் அனைத்து கிள்ளுகளையும் உணர்வான். அதேபோல, பிரபஞ்சம் என்னில் 'சிக்கியுள்ளது'; இது என் வாழ்வின் ஒரு பகுதியாகும். பிரபஞ்சத்திலுள்ள அனைவரின் மற்றும் அனைத்தின் எண்ணங்களையும் நான் அறிந்து புரிந்து கொள்வேன். எப்படி? பிரபஞ்சத்தை என் மார்போடு இறுகக் கட்டியணைத்துள்ளதால், படைப்பின் ஒவ்வொரு இதயத்துடிப்பையும் நான் உணர்கிறேன்.**

அக்பர் அச்சகத்தில் தங்கியிருந்த வேளையில், மெரடித் ஸ்டார் அவரது உண்மையான குணத்தைக் காட்டத் தொடங்கினார்.

மெரடித் ஸ்டாரின் சிந்தனையற்ற வழிமுறை மற்றும் அளவுக்கு அதிகமாக ஆசைப்படும் மனப்போக்கும் நஸர்வானை எரிச்சலடையச் செய்தது.

பாபா மூவரையும் திருப்பி இங்கிலாந்துக்கு அனுப்பி வைப்பதைப் பற்றி ருஸ்தம், நஸர்வான் மற்றும் ஆதியிடம் கலந்து பேசினார். மெரடித் மூலமாக பாபா செய்துவந்த பணி இன்னும் சற்று எஞ்சியிருந்ததால் பாபா தயக்கம் காட்டினார். அதற்கு பதிலாக, பாபா இந்தத் தந்திரத்தைக் கையாண்டார். டிசம்பர் 10ஆம் நாள் பாபா கீழ்வரும் குறிப்பை அவருக்கு அனுப்பி வைத்தார்.

**மெரடித்,**

**கடந்த சில நாட்களாக, நான் மிக முக்கியமான ஆன்மீக உட்பணிகளைச் செய்து வருகிறேன். இப்போது நீங்கள் உடனடியாக இங்கிலாந்து செல்ல வேண்டியது இன்றியமையாததாகி விட்டது. நீங்கள் இந்தியாவில் இன்னும் இருப்பதானால் உங்கள் உயிரைத் துறக்க வேண்டியது வரும்! இந்த இரண்டு பெண்மணிகளும் பாதுகாக்கப் படுவார்கள்; ஆனால், நீங்கள் மேல்நிலையை அடைந்த ஆத்மா ஆதலால் வேறு வழியில்லை. இந்த நேரத்தில் நான் தலையிடுவது விரும்பத்தகாதது.**

**எனவே நீங்கள் இங்கிலாந்துக்குத் திரும்பிச் செல்வது நல்லது. மேலும், இங்கிலாந்தில் நீங்கள் இருப்பது மிகவும் விரும்பத்தக்கது; இந்த நேரத்தில் அவசியமும் கூட, ஏனெனில் அங்கே எனக்காக நீங்கள் செய்யவேண்டிய பணி இன்னும் எஞ்சியுள்ளது. நீங்கள் ஏழைகளின் நண்பன் மட்டுமின்றி, அவர்களுக்கு எப்போதும் உதவியாக இருப்பதால், மும்பைக்குச்**

**செல்லும்போது மிகக் குறைந்த வகுப்பு ரயில் கட்டணத்தில் பயணம் செய்யுங்கள். மேலும் இங்கிலாந்து செல்வதுவரை மௌனம் கடைப்பிடியுங்கள்.**

பாபாவின் தந்திரம் வேலை செய்தது. ஆறுமாதங்கள் பாபாவுடன் இருந்துவிட்டு டிசம்பர் 29ஆம் நாள், மூவரும் மெஹராபாத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

1929 ஜனவரி 1ஆம் நாள் ஆஷ்ரமத்தின் பொருளாதார நிலைமைகளைப் பற்றிய பேச்சு எழுந்தது. புவாஸாஹேப் புகார் செய்வது போல முறையிட்டார், "இந்நாட்களில் மண்டலியில் ஏராளம் நபர்கள் இருக்கின்றனர்; அதேவேளையில் அவர்களின் வேலைகளும் குறைந்துகொண்டே வருகின்றன; அனைவரும் வேலை எதுவும் செய்யாமல் சாப்பிடுகிறார்கள். எனவே, செலவுகளைக் குறைக்க எண்ணிக்கையைக் குறைப்பது நல்லது."

**"கவலை வேண்டாம். எல்லாம் சரியாகிவிடும். கடந்த வருடம் பிரேமாஷ்ரம் சிறுவர்கள் கண்ணீர் சிந்தினர்; இவ்வருடம் இது நமது முறை"** என்று பாபா பதிலளித்தார்.

பாபா, பள்ளிக்கூடங்களை விரைவில் மூடப்போவதாக ஒரு சில அறிகுறிகள் அவரது வார்த்தைகளில் அவ்வப்போது தென்பட்டன. அடுத்த நாள் ஒன்பது மாணவர்களை அவரவர் இல்லத்திற்கு அனுப்பி வைத்தார். மேலும் பாபா சில தேர்ந்தெடுக்கப்பட்ட மண்டலி மற்றும் சிறுவர்களுடன் நடைபயணம் செல்லவிருப்பதாக அறிவித்தார். டோக்கா ஆஷ்ரமத்தை மூடிய போது, ருஸ்தம் அவரது குடும்பத்துடன் நாசிக் சென்று குடியேறினார். அங்கே தனித்தனி வீடுகளில் பாபா மற்றும் பெண் மண்டலி தங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அன்றிரவு பாபா மண்டலியுடன் இருந்த வேளையில் இவ்வாறு குறிப்பிட்டார்: **"உலக எழுச்சிக்கான நேரம் நெருங்கிவிட்டது. நான் மனித குலத்துடன் பேசுவேன்; எனது குரலை அனைத்து உலகமும் கேட்கவும், உணரவும் செய்வேன்."**

அவ்வேளையில், 'மெஹர் மெஸேஜ்' பத்திரிகையின் குரலோசை சற்று கடுமையாக இருப்பதாக பாபா கருத்து தெரிவித்தார். பத்திரிகையில் வரும் செய்திகள் அனைத்திற்கும் கெ.ஜெ. தஸ்தூர் மட்டுமே பொறுப்பு; தேவைப்பட்டால் பாபா எழுதிய கட்டுரைகளை மட்டும் பதிவு செய்யலாம் என்ற கருத்தையும் தெரிவித்தார். தஸ்தூர் இதைக்கேட்டுப் பொறுமையிழந்த வேளையில், அவருடைய தவறுகளை பாபா தெளிவுபட எடுத்துரைத்து நிலைமையை விளக்கினார்.

அன்று நள்ளிரவில், சற்று காலதாமதமாக, பாபா எதிர்கால திட்டங்களைப் பற்றி விவாதிக்கும் போது, இவ்வாறு விளக்கினார்:

**நான் கிறிஸ்துவை விட அதிகமாகக் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது எனக்குத் தெரியும்; இருந்தும் கூறுகிறேன் நான் கடவுள் என்று! கற்றறிந்தவர்களின் மனோபாவத்தைப் பாருங்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள்? 'கடவுள் மனிதனாக இருக்க முடியுமா? இதெல்லாம் வெற்றுப்பேச்சு, போலித்தனம்' என்று! ஆனால், நான் தொடர்ந்து கூறுவேன், 'நான் எதுவாக இருந்தாலும், நான், நான் தான்' என்று!**

ஜனவரி 7ஆம் நாள் நடந்த ஒரு விவாதத்தின் போது, மெஹர் பாபா இவ்வாறு தெரிவித்தார்:

**"நீங்கள் தேடும் கடவுள் வானத்தில் இல்லை. அவர் இங்கே இருக்கிறார் - இந்தத் தளத்திலே இருக்கிறார்! நானே அவர்."**

**நான் உன்னில் இருக்கிறேன், எனவே உன்னுள்ளே அவரைத் தேடு. நான் கோயில், மசூதி, சர்ச் இவைகளில் இல்லை. நீங்கள் வாதாடலாம் 'இது சாத்தியமற்றது - முற்றிலும் சாத்தியமற்றது என்று!' சரி, அப்படியானால் சொல்லுங்கள் உங்கள் கண்கள் உங்களைப் பார்க்கின்றனவா? அவை உலகைப் பார்க்கின்றன; ஆனால், உங்களைப் பார்க்கவில்லை. அதற்கு நீங்கள் ஒரு கண்ணாடியைப் பயன்படுத்த வேண்டும். இதேபோல், அன்பின் கண்ணாடி வழியாக, உங்களை நீங்களே பார்க்க வேண்டும். அந்தக் கண்ணாடியை வைத்திருப்பவர் சத்குரு மட்டுமே, வேறு எவரிடமும் இல்லை. அன்பின் கண்ணாடி அவரிடம் மட்டுமே உள்ளது.**

பல நாட்களாக பெண்டு இருமலால் அவதிப்பட்டார்; ஜனவரி 7ஆம் நாள், டாக்டர் ஸாட்டே வேண்டிய மருந்தை பரிந்துரைத்தார். மருத்துவ உதவியாளராக இருந்த பாபாவின் சகோதரர் பெஹ்ராம், மருந்தை தயார் செய்யும் வேளையில் தவறுதலாக, ஹைட்ரோகுளோரின் அமிலத்தைக் கலந்து விட்டார். பெண்டு அந்த மருந்தை அருந்தியதும் அவரது தொண்டை, தீ போலப் பற்றியெரிந்தது; நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. பாபா, ஆதியிடம் உடனே பூனாவிலுள்ள ஸஸூன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லக் கூறினார். மருத்துவர்கள் உடனடியாக அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என வலியுறுத்தினர்.

இதை, பாபாவிற்குத் தெரியப்படுத்தியதும், ஆத்திரமடைந்து, அருகிலிருந்த பொருட்களை அங்குமிங்கும் வீசத்தொடங்கினார். அவரது பயங்கரமான மனநிலை அரை மணி நேரம் நீடித்து, அதற்குப் பிறகு பாபா மீண்டும் அமைதியானார். அடுத்த நாள் ஜனவரி 8, பெண்டுவின் அறுவை சிகிச்சை தவிர்க்கப்பட்டது என்று தொலைத்தந்தி வந்தது. தொண்டையில் சிறியதொரு வலியும், எரிச்சலும் தவிர கவலைப்படும் அளவுக்கு எதுவுமில்லை எனத் தெரியவந்தது. பெஹ்ராம் அவரது தவறை வெளிப்படுத்தவில்லை, ஆனால், பாபா பின்னர் அதைப் பற்றித் தெரிந்துகொண்டார்.

பெண்டு குணமடைந்து ஒரு வாரத்தில் மெஹராபாத் திரும்பி வந்தார்.

மெஹர் பாபா ஏற்கனவே கூறியதற்கிணங்க, நடைபயணத்திற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. ஜனவரி 12ஆம் நாள், ஒரு சில சிறுவர்களைத் தவிர, பிற அனைவருக்கும் அவரவர் இல்லத்திற்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது; அதன்படி அனைத்து பெற்றோர்களுக்கும் தகவல் தரப்பட்டது.

முதன் முதலாக ஆகா அலியின் தந்தையார் வந்து அவனை அழைத்துச் சென்றதும், பாபா, **"ஆகா அலி செல்வதானால், அனைவரும் செல்கிறார்கள்"** என்று குறிப்பிட்டார்.

ஆகா அலி அங்கிருந்து சென்றது ஆஷ்ரமங்கள் மூடப்படுவதன் அறிகுறி என்று அர்த்தம்.

பாபா, பண்டர்பூர் வழியாகக் கோலாப்பூருக்கு நடைபயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டார். அஹமதுநகரிலிருந்து புறப்பட்டு 1929, ஜனவரி 17ஆம் நாள் டோண்ட் புறநகர் பகுதி வந்து, எட்டு மைல் தொலைவிலுள்ள 'பட்டஸ்' கிராமம் வழியாக கோலாப்பூர் செல்வதற்கு பதிலாக, ஸத்தாரா அருகிலமைந்த கராட் எனும் புனிதஸ்தலத்தை நோக்கி நடந்தனர்.

மறுநாள் அதிகாலையில் ஜனவரி 19ஆம் நாள் 12 மைல் நடந்து 'ராவல்காவ்ம்' வந்து சேர்ந்தனர். பாபாவின் காலில் சுளுக்குப் பிடித்து வலியெடுத்ததால், அங்கிருந்த அரசாங்க பங்களாவில் ஓய்வெடுத்தனர்.

அதற்குப் பிறகு, பாபா இரவு நேரத்தில் நடைபயணத்தைத் தொடர முடிவு செய்தார். ஜனவரி 20ஆம் நாள் 20 மைல் நடந்து 'திக்ஸல்' கிராமத்தை வந்தடைந்தனர். உடன் சென்ற ஜால்பாய், பாபா, மண்டலியுடன் இரவெல்லாம் பயணம் செய்ததால், இந்தக் குழுவிற்கு 'வௌவால் கூட்டம்' என்று பெயர் வைத்தார்.

பாபாவின் கால்வலி குறையாததால், நடைபயணத்தை ரத்து செய்து, ஜனவரி 27ஆம் நாள் பாபா, மண்டலியுடன் மெஹராபாத் வந்து சேர்ந்தார்.

அன்று மாலையில், மாஸாஜி, பெண் மண்டலி அனைவரையும் நாசிக்கிலிருந்து பாபாவை சந்திக்க மெஹராபாத் அழைத்து வந்தார். பாபா அமைதியான மனநிலையில் காணப்பட்டார், மெஹராபாத்தில் ஆஷ்ரம சிறுவர்கள் மற்றும் பல மண்டலி இல்லாததால் வெறிச்சோடி அமைதியாக இருந்தது.

1929 ஜனவரி 28ஆம் நாள், ஹஸ்ரத் பாபாஜானின் பிறந்தநாளன்று, அரன்காவ்ம் கிராமத்து மக்களின் பஜனை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளுடன் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1929 பிப்ரவரி 15ஆம் நாள் பாபா மண்டலியுடன் வேறு வேறு விஷயங்களைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்த வேளையில் கூட்டத்தில் ஒருவர், "பாபா, நீங்கள் அதிசயங்களும், அற்புதங்களும் புரிவதாக இருந்தால், ஆயிரக்கணக்கான மக்கள் உங்கள் காலடியில் வருவார்கள்" என்று கூறினார்.

அப்போது ருஸ்தம் அவரது ஆர்வத்தையும் அடக்க முடியாமல், "பாபா, ஒரே இரவில், நீங்கள் இங்கே நம்ப முடியாத, மிகப்பெரிய, பிரமிக்கத்தக்க கோபுரம் ஒன்றை எழுப்பவேண்டும். அப்படியானால் லட்சக்கணக்கான மக்கள் இங்கே வந்து, உங்களை சத்குருவாக ஏற்றுக் கொள்வார்கள். உங்கள் சக்திகளை நீங்கள் நிரூபிக்காமல் மக்கள் உங்களை எப்படி நம்புவார்கள்?" என்று கேட்டார்.

பாபா கீழ் வரும் பதிலை எடுத்துரைத்தார்:

**எந்தவொரு சத்குரு அல்லது அவதார புருஷர் அத்தகைய சாதனையைச் செய்ததாக நீங்கள் எப்போதாவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அத்தகைய அதிசயத்தின் விளைவு பயங்கரமாக இருக்கும்.**

**லட்சக்கணக்கான மக்கள் என்னை அணுகி, ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஒருவகையில் நீங்கள் சொல்வது சரிதான்; இங்கு, என்னை வணங்குவதற்காக வருபவர்களின் எண்ணிக்கையில், எந்தக் கட்டுப்பாடும் இருக்காது! ஆனால், அதிகப்படியான மக்கள், அனைத்து உலக ஆசைகளை நிறைவேற்றும் எண்ணத்தில் இங்கு வருவார்கள். பணப்பிரியர்கள், 'நீங்கள் இவ்வளவு பெரிய கோபுரத்தை ஒரே இரவில் எழுப்பியுள்ளீர்கள், உங்கள் சக்திகளைப் பயன்படுத்தி, எங்களுக்கு ஒரு சில ஆயிரம் ரூபாய்களை ஏன் கொடுக்கக் கூடாது?' என்று கேட்பார்கள். சிலர் அவர்களின் துயரங்களைப் போக்கும் நம்பிக்கையில் வருவார்கள். மேலும் சிலர் அவர்களின் உலக சிக்கல்களிலிருந்து விடுபடும் ஆசையில் இருப்பார்கள்.**

**உண்மையில் பற்றில்லாத வாழ்க்கையை வாழ விரும்புவோர்கூட, என்னை அணுகும் தருவாயில், 'அவர்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய துறவறம் மற்றும் தவமிருத்தல் இரண்டையும் தவிர்க்கலாம்' என நான் அவர்களிடம் கூறும் அளவுக்கு நிலைமை மாறி, அதிசயங்கள் புரிந்து அவர்களுக்கு இறைநிலையை அளிக்கக் கோருவார்கள்! அவர்கள் எனக்காகவோ அல்லது என்னை நேசிப்பதாலோ என்னிடம் வரமாட்டார்கள்; அற்புதங்கள் மீது அவர்களுக்கு இருக்கும் பேராவலால் மட்டுமே என்னிடம் வருவார்கள்; அதன் விளைவாக, இறுதியில் எதையும் அடையப்பெற மாட்டார்கள்.**

**இந்த உலகம் அனைத்தும் ஒரு மாயை; மேலும் அற்புதம் என்பது அந்த மாயைக்குள் மறைந்திருக்கும் மற்றுமொரு மாயை.**

உடனே மண்டலியில் இன்னுமொருவர் அப்படியானால், பாபா, அந்த மாயையை முற்றிலுமாக ஏன் அழிக்கக்கூடாது என்று வினவினார். பாபா இந்த விளக்கத்தை அளித்தார்:

**இப்போது ஒளி வழங்கும் சூரியன், பலகோடி வருடங்களுக்குப் பிறகு வெடித்து சிதைந்துவிடும், ஆனால், அதன் இடத்தை இன்னுமொரு சூரியன் எடுத்துக் கொள்ளும். குளிர்ந்து கொண்டிருக்கும் பூமி மேலும்**

**குளிர்ந்து சந்திரனாக மாறும். ஆனால், தற்போதைய பூமியைப் போலவே மற்றொரு கிரகமும் அதன் இடத்தைப் பிடிக்கும்.**

**முற்காலத்தில் எது இருந்ததோ அது பிற்காலத்தில் வரும். பரிணாம வளர்ச்சி மற்றும் உட்பரிமாண சுழற்சியின் செயல் முறைகள் நிலையாக எப்போதும் நடந்து கொண்டிருக்கும். அறியாமையும் படைப்பும் கைகோர்த்துச் செல்லும்.**

அடுத்த நாள், பாபாவின் பெற்றோர் ஷெரியார், ஷிரீன்மாய் இருவரும் பிறந்தநாள் விழாவில் பங்கெடுக்க வந்தனர். பாபா ஏறக்குறைய ஒரு மணி நேரம் தாய் தந்தையருடன் குடும்ப விஷயங்களைப் பற்றிப் பேசினார். இதர மண்டலியும் பாபாவின் பிறந்தநாள் விழாவிற்காக மெஹராபாத்திற்கு வந்தனர். 1929 பிப்ரவரி 17ஆம் நாள் மெஹர் பாபாவின் 34ஆவது பிறந்தநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அதன் பின்னர் அன்றிரவு, மெஹர் பாபா மண்டலிக்குத் தெரிவித்தார், **"பிப்ரவரி 21ஆம் தேதியிலிருந்து தரிசனம் முற்றிலுமாக நிறுத்தப்படும் - நிறுத்தப்படும் என்றால் நிறுத்தப்படும்! ஆனால், இந்தத் தடை, வெளியிலிருந்து வருபவர்களுக்கு - முன்பின் தெரியாதவர்களுக்கு மட்டும்!"**

பிப்ரவரி 24ஆம் நாள் பாபா உணவறையில் இருந்த வேளையில், சாது கிறிஸ்டின் லீக்கைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்: **"அவர் எனது வட்ட அமைப்பில் அங்கம் வகிப்பவர்; அவரைப் பற்றி நான் அடிக்கடி கூறுவதுண்டு. அவர் ஓர் உண்மையான மனிதர். மெரடித் ஸடார், சாது லீக் இருவருக்குமிடையில் உலகளவு வேறுபாடுள்ளது. அவர்கள் இரு துருவங்கள். எதுவாயினும் ஸ்டார், சாது லீக்கை என்னிடம் கொண்டுவர ஒரு கருவியாக இருந்தார்."** பாபா இவ்வாறு கூறி முடித்தார்: **"உண்மையானது வரும்; போலியானது போகும்!"**

1929, மார்ச் 2ஆம் நாள் மாலையில் நஸர்வான், கெ.ஜெ. தஸ்தூர், விஷ்ணு மூவருடனும் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், தற்போதைய இந்திய அரசியல் நிலைமையைப் பற்றி மெஹர் பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**ஆங்கிலேயர்கள் இந்தியாவின் மிகப்பெரிய பயனாளிகளாகத் திகழ்கிறார்கள் - அவர்கள் அதன் அனைத்து மாசுகளையும்** (தீய மனப்படிவங்கள்) **துடைத்துத் தூய்மைப் படுத்துகிறார்கள்! இருந்தும், இந்தியர்கள் இதை சரியாகப் புரிந்து கொள்ளாமல் அவர்களை சபித்து சாபமிடுகிறார்கள்.**

**இந்தியா பொருள் ரீதியாக பயனடைவதானால், ஆன்மீக ரீதியில் பின்னுக்குத் தள்ளப்படும். அது இங்கிலாந்தைவிட மோசமான நிலையில் இருக்கும். விளைவு பெரும்பாலும் தலைகீழாக அமையும்.**

இவ்வேளையில் பிரேமாஷ்ரம் பள்ளிக்கூடம் மறுபடியும் திறக்கப்பட்டது, ஆனால், அடுத்த இரண்டு மாதங்களில் பாபா அனைத்து மெஹராபாத் நடவடிக்கைகளையும் நிறுத்தி விடுவார் போலத் தோன்றியது. பள்ளிக்கூடம் மற்றும் சிறுவர்களுடனான அவரது பணி முடிவடையும் நிலையில் இருப்பதால், அவர் இனி அங்கேயே இருக்க விரும்பவில்லை என்பதும் தெளிவாகத் தெரிந்தது.

1929 மார்ச், ஏப்ரல் மாதங்களில் பல மண்டலி வேறு வேறு இடங்களுக்கு, பாபா குறிப்பிட்ட பல்வேறு வேலைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

மெஹர் பாபாவின் சமாதி அறையைக் கற்களால் மறுபடியும் சீரமைத்து, மார்ச் 6ஆம் நாள் திறந்து வைத்து, அருகிலமைந்த மேடையில் அனைவருக்கும் தேநீரும், இனிப்பும் வழங்கப்பட்டது.

அன்றிரவு, இறப்பிற்குப் பின்னர் ஓர் ஆத்மாவின் நிலையைப் பற்றி விளக்கமளிக்கும் வேளையில் மெஹர் பாபா இதை வெளிப்படுத்தினார்:

**ஒரு நபர் இறந்து விட்டார், அவருடைய அதிக எண்ணிக்கையிலான நல்ல மனப்படிவங்கள், அவரை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கின்றன என்று வைத்துக் கொள்வோம். அங்கே, பௌதீக உடல் இல்லாத பட்சத்தில் அவரது கடந்தகால வாழ்க்கையின் நல்ல மனப்படிவங்களின் விளைவுகளை அனுபவிப்பதாகவும் வைத்துக்கொள்ளுங்கள். அதேபோல், அவருடைய அதிக எண்ணிக்கையிலான தீய மனப்படிவங்கள் அவரை நரகத்திற்கு அழைத்துச் சென்று, அதற்குரிய அனுபவங்களை அடையச் செய்யும்.**

**இவ்விரண்டு சூழ்நிலைகளிலும் நல்ல அல்லது தீய மனப்படிவங்களின் மொத்த எண்ணிக்கையும் முறையே, சொர்க்கம் அல்லது நரகத்தில் அழிக்கப்படுகிறது; என்றாலும், இந்த மனப்படிவங்களின் மங்கலான கறை மனதில் இன்னும் நிலைத்திருக்கும்.**

**ஒரு தட்டிலிருக்கும் உணவு உங்கள் மடியில் கவிழ்ந்து, உங்கள் உடைகள் கறையாகிவிடும் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் உடனடியாக உடையில் கொட்டிய உணவை அகற்றுவீர்கள் அல்லது தூக்கி எறிவீர்கள்; ஆனால், கறைகள் அப்படியே இருக்கும். இந்தக் கறைகள் எஞ்சியிருக்கும் மனப்படிவங்கள் போலாகும்.**

1929, மே மாதத்தில் மெஹர் பாபா, சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டிய திட்டங்களை வகுத்திருந்தார். அவர் மெஹராபாத்தை விட்டு வெளியிலிருக்கும் நேரத்தை ஈடுசெய்வது போல, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில், கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் பிரேமாஷ்ரம் சிறுவர்களுடன் அதிக நேரத்தைச் செலவழித்து, அவ்வேளையில் சொற்பொழிவுகளை

வழங்கியது மட்டுமின்றி, அவரது தனிப்பட்ட சகவாசத்தின் அளவிலா நன்மைகளை அவர்களுக்கு வழங்கினார்.

1929, மார்ச் 18ஆம் நாள், ராஜாராம் எனும் சிறுவன் தெய்வீக மதுபானத்தை அதிக அளவில் அருந்தி, ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் சுற்றுப்புற சூழ்நிலைகளைப் பற்றிய உணர்வின்றி, இறை போதையில் இருந்தான். அந்நிலையிலிருந்து வெளி வந்ததும், கண்களில் வெறுமையான தோற்றத்துடன், எதுவும் உண்ணவோ, எவரிடமும் பேசவோ மறுத்து விட்டான். மூன்று நாட்கள் நீடித்த இந்நிலையில், அவனது உடலைப் பற்றிய நினைவு அறவே இல்லாமலிருந்தான்.

மார்ச் 26ஆம் நாள் கெ.ஜெ. தஸ்தூர் பாபாவிடம், 'இப்போது ராஜாராம் இருக்கும் நிலை சோட்டா பாபாவைப் போல், ஆன்மீக ரீதியில் மேன்மையான நிலையா?' என்று வினவினார். பாபா பதிலாக இவ்வாறு வெளிப்படுத்தினார்: **"இல்லை, இல்லை! அவன் அப்துல்லாவின் ஆறாவது ஆன்மீகத் தள நிலையை அடைய இன்னும் வெகுதூரம் செல்லவேண்டும். ராஜாராம் இறை இன்பத்தின் ஒரு சிறிய அம்சத்தை மட்டுமே, கடந்த மூன்று நாட்களாக அனுபவித்து வருகிறான். இப்போது அவன் முழு உலகையும் ஒரு கானல் நீராகக் காண்கிறான்."**

தஸ்தூர் தொடர்ந்து பாபாவிடம், 'ராஜாராம் அளவற்ற இறை இன்பத்தை நிரந்தரமாக அனுபவிப்பானா?' என்று கேட்டதற்கு, பாபா இவ்வாறு பதிலளித்தார்: **"அனுபவிக்கலாம், அனுபவிக்காமலும் இருக்கலாம். ஆனால், இந்த முழு உலகமும் ஒரு கானல் நீர் என்ற கருத்துணர்வு அவனது மனதில் தொடர்ந்து நிலைத்திருக்கும். இறை இன்பத்தை அவன் இழந்தால் கூட, அது ஒரு பெரிய பொருட்டல்ல. இது ஓர் உயர்ந்த வகையான ஆனந்தத்திற்கு வழிவகுக்கும். அவனது ஆன்மீக முன்னேற்றம் இப்போது அதிவேகத்தில் இருக்கும்."**

மார்ச் 28ஆம் நாள், மண்டலியில் ஒருவர் பாபாவிடம் உலகப் பொருட்கள் பற்றிய கேள்வி எழுப்பினார், "நீங்கள் உலகில் கடவுளைத் தவிர வேறொன்றுமில்லை என்கிறீர்கள், ஆனால், பலவகையான உலகப் பொருட்கள் இருப்பதை நீங்கள் மறுக்க முடியாது!"

**"நான் மறுக்கிறேன். ஆமாம், உலகப் பொருட்கள் இருப்பதை நான் மறுக்கிறேன். கடவுளைத் தவிர வேறு எதுவுமே இல்லை"** என்று பதிலளித்தார் பாபா.

"ஆனால், பாபா, உலகப் பொருட்கள் ஒன்றுமே இல்லை என்பதை நீங்கள் நிரூபிக்க முடியாது. நான், எனது மற்றும் உங்களது பௌதீக உடல்களை என் இரு கண்களால் பார்க்கிறேன். உலகப் பொருட்கள் எதுவும் இல்லை என்று நான் நம்புவேன் என நீங்கள் எப்படி எதிர்பார்க்கலாம்?" மண்டலி தொடர்ந்து வினவினார்.

பாபா அப்போது விளக்கமளித்தார்:

**உங்களுடைய மனதிற்கு உலகப் பொருட்கள் உள்ளன, ஆனால், அது உங்கள் மனம் செயல்பாட்டில் இருப்பதுவரை மட்டுமே. நீங்கள் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும்போது, உங்களைப் பொறுத்தவரையில் உலகப் பொருட்கள் இருப்பதில்லை. அப்படியானால் உலகப் பொருட்கள் உண்மையானவை என்று நீங்கள் எப்படிக் கூறமுடியும்? இது உங்கள் மனதின் செயல்பாடுகளை முற்றிலும் சார்ந்துள்ளது என்பதற்கான காரணத்தைக் குறிக்கிறது. இது ஒரு மாயத்தோற்றம் - உங்கள் மனதின் செயல்பாடே தவிர வேறொன்றுமில்லை.**

**கும்மிருட்டாக இருக்கும்போது நீங்கள் எங்கேயேனும் நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்; அப்போது திடீரென ஏதோ ஒரு பொருளைப் பார்க்க நேர்ந்து, திடுக்கிட்டுப் பின்வாங்கி, அது ஒரு மனித உருவம், ஒரு திருடன் என்று முடிவுக்கு வருகிறீர்கள்!**

**உடனே, நீங்கள் இப்படி, பயந்து நடுங்கும் நேரத்தில், அதிர்ஷ்டவசமாக மற்றொரு மனிதர் உங்களை நோக்கி வருவதைக் கண்டு, இருவரும் சேர்ந்து அந்தத் திருடனைப் பிடிக்க முடிவு செய்கிறீர்கள்.**

**எச்சரிக்கையோடு நீங்கள் அந்தப் பொருளை அணுகி தாக்கும்போது அது ஒரு மனிதனல்ல, கற்பாறை என்று நீங்கள் கண்டு கொள்கிறீர்கள். அது ஒரு வெறும் பாறாங்கல்தான். ஆனால், அதைப் பாறாங்கல் என்று கண்டு கொள்வதுவரை உங்கள் மனதுக்கு அது ஒரு திருடன்.**

மண்டலியில் ஒருவர் அருகிலிருந்த மர நாற்காலி ஒன்றைச் சுட்டிக்காட்டி, அது ஒரு பொருள் இல்லையா என்று கேட்டார். **"உங்களுக்கு அது ஒரு பொருளாகத் தோன்றும்; ஆனால், எனக்கு அது ஓர் ஆத்மா. நீங்கள் பொருள் என்று கூறுவது ஒன்றுமில்லை"** என பாபா பதிலளித்தார்.

**உங்களுக்கு உங்கள் முன்னால் இருக்கும் அனைத்தும் பொருட்களே! ஆனால், எனக்கு இது ஒன்றுமில்லை. ஆழ்ந்த தூக்கத்தில் எந்தப் பொருளுமே உங்களுக்கு ஒன்றுமில்லாதது போல, நான் விழித்திருக்கும் நிலையில் எனக்கும் எதுவுமே இல்லாத தன்மைதான். ஆழ்ந்த தூக்கத்தில் நீங்கள் உணர்வின்றி அனுபவிப்பதுபோல், இறைநிலையை அடைந்தவர்கள் அவர்களின் விழிப்பு நிலையில் அனுபவிக்கிறார்கள். எங்களது விழிப்பு நிலை உண்மையானது, உங்கள் நிலை பொய்யானது! நீங்கள் இறைநிலையை அடையும் வேளையில், நீங்களாகவே இதைக் கண்கூடாகக் காண்பீர்கள். உலகப் பொருட்கள் இருப்பதாகத் தோன்றுவதே மனம் இருப்பதால்தான். மனம் மறைந்து போகும் போது, பொருட்களும் மறைந்துவிடும்.**

மார்ச் 30ஆம் நாள் மாலையில், பாபா, பெண் மண்டலியை சந்திக்க நாசிக் சென்று, அன்றிரவு இரண்டு மணிக்குத் திரும்பி வந்தார்.

மெஹர் பாபாவின் அறிவுறுத்தல்கள்படி சாது கிறிஸ்டின் லீக், ஏப்ரல் 1ஆம் நாளிலிருந்து இந்தியாவின் சில பகுதிகளில் பயணம் செய்து, அவர் சந்திக்கும் நபர்களிடம் மெஹர் பாபாவைப் பற்றி எடுத்துரைத்தார் (இதை பாபா, ருஸ்தத்தை இங்கிலாந்துக்கு அனுப்பி மேற்கொண்ட பணியுடன் ஒப்பிடலாம்).

சாது கிறிஸ்டின் லீக் அவரது பயணத்தின் முதல் கட்டமாக, சென்னையில் நடந்ததைக் கடிதம் மூலம் கெ.ஜெ. தஸ்தூருக்குத் தெரிவித்தார்:

நான், ஸ்ரீ பாபாவுக்காகச் செய்ய முடிகிற ஒரே சேவை, இல்லங்களுக்கு விஜயம் செய்து, என்னை அறிமுகப்படுத்தி, பேச்சு கொடுப்பது! எனக்குள் எழும் ஓர் உணர்வு என்னவென்றால், இந்தியாவில் சில இடங்களுக்கு என்னை அனுப்பி, அங்குள்ள சில பகுதிகளில் ஆன்மீக அல்லது அவருடைய உள்தொடர்பை - ருஸ்தம் இங்கிலாந்தில், மேற்கத்திய நாடுகளோடு தொடர்பை உருவாக்கச் செய்ததுபோல் - ஏற்படுத்த பாபா விரும்புகிறார். அவர் என்னுடன் இருக்கிறார், நான் கவலைப்படக் கூடாது என்று பாபா என்னிடம் கூறியதால், அவருடைய கண்காணிப்பில் நான் இருக்கிறேன் என்பதற்கான ஆதாரங்களைப் படிப்படியாக நான் பெற்று வருகிறேன், இது எனது நம்பிக்கையை மேலும் வலுவாக வளரச் செய்கிறது. அவருடைய உள்பணியின் மூலமாக, அவர் விரும்பும் மக்களோடு என்னை இணைத்து, அவர்களுக்குரிய ஆசிகள் மற்றும் உதவிகளை, என் மூலம் பாபா வழங்குகிறார் என்பதை என்னால் காண முடிகிறது.

சென்னைக்கு அடுத்ததாக லீக் பெங்களூர், மைசூர் மற்றும் இதர இடங்களுக்கும் சென்று, சில நேரங்களில் ஒவ்வொரு இடத்திலும் இரண்டு வாரங்கள் தங்கியிருந்தார். அவர் இந்தப் பயணத்தை ஆறு மாதங்களுக்குத் தொடர்ந்தார்.

மெஹர் பாபா அவருடைய பயணத்தைத் திட்டமிடும் அதே வேளையில், பிரேமாஷ்ரம் சிறுவர்களை என்ன செய்வது என்ற கேள்வி எழும்பியது. பொறியியல் நுணுக்கங்களைக் கற்றுத்தரலாம் என்ற திட்டத்தை முன்வைத்து, அச்சடிக்கும் தொழிலைச் செய்ய முடிவெடுக்கப்பட்டது. விஷ்ணு, ஜால்பாய் இருவரையும் ஒரு மாத பயிற்சிக்காக அஹமதுநகர் மோகன் பிரஸ் நிறுவனத்திற்கு பாபா அனுப்பி வைத்தார். மேலும், பயின்றதை பாபா முன்னிலையில் சிறுவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. எதிர்காலத்தில் ஒரு அச்சகத்தை நிறுவவும் பாபா திட்டமிட்டார்.

மே 2ஆம் நாள் பிரேமாஷ்ரம், அரன்காவ்மில் அமைந்த குடும்ப குவாட்டர்ஸுக்கு மாற்றப்பட்டது. பாபா சிறுவர்களுக்கு இவ்வாறு எடுத்துக் கூறினார். **"இங்கேயிருந்து வழக்கம்போல் உங்கள் படிப்பில் கவனம் செலுத்துங்கள். நான் சில நாட்களில் திரும்பி வருவேன். வழக்கமான நடவடிக்கைகளில் எந்த இடையூறுமில்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்."**

பாபா கூறியதற்கிணங்க, விஷ்ணு அஹமதுநகரிலிருந்து எடுத்துவந்த இயந்திர பொருட்களைப் பயன்படுத்தி, அச்சடிக்கும் முறையை சிறுவர்களுக்குக் கற்றுத்தந்தார்.

மே 4ஆம் நாள் பாபா, பேச்சினிடையே இவ்வாறு எடுத்துரைத்தார்: **"புவாஸாஹேப் அவரது முந்தைய வாழ்க்கையில் ஒரு சீன பேரரசராகவும், ஜால்பாய் அவருடைய அமைச்சராகவும் இருந்தனர். இருவரும் அபின் எனும் போதைப் பொருளுக்கு அடிமையாக இருந்ததால், அதன் விளைவு அவர்களிடத்தில் இன்னும் உள்ளது."**

**இறை போதையைப் புரிந்து கொள்வது என்பது சாத்தியமல்ல, ஏனெனில் இது அறிவுக்கு அப்பாற்பட்ட சூழல்களுக்கு வழிவகுக்கிறது. மனதின் பார்வையில், அனைத்திலும் நல்லது, தீயது இரண்டும் உள்ளன, ஆனால், ஆன்மீகக் கண்ணோட்டத்தில் இவ்விரண்டும் மாயையின் இருளில் மட்டும்தான் இடம் பெறுகின்றன. இந்த இரண்டு வரம்புகளையும் தாண்டினால் மட்டுமே, ஒருவர் திகைப்பூட்டும் இறை ஒளியைப் அடையப்பெற முடியும்.**

**நல்ல மனப்படிவங்களை அழிக்க தீய மனப்படிவங்கள் கண்டிப்பாகத் தேவை. இப்படியான வேளையில் ஏதேனும் ஆட்சேபனைக்குரிய செயலில் ஈடுபடுவதானால் (ஆகா அலி விஷயத்தில் நடந்ததுபோல்) அதை உலக பார்வையில் தீயச்செயலாகப் பார்க்கப்படும். அதுபோல, தீய மனப்படிவங்களை அழிக்க நல்ல மனப்படிவங்கள் நிச்சயமாகத் தேவைப்படுகின்றன.**

**இதுபோன்ற விஷயங்களை சிந்தித்துப் பார்ப்பது கூட பயனற்றது, ஏனெனில் ஒருவரின் சொந்த மனப்படிவங்களைப் பற்றி அவருக்கு எதுவும் தெரியாது; அப்படியெனும்போது ஒரு சத்குருவிடம் சரணடைவது ஒன்றுதான் சிறந்த வழி. இக்காரணத்திற்காகத்தான் அன்பிற்குரியவருக்கும், அவர் மீது அன்பு செலுத்துபவருக்கும் இடையிலான உறவைப் புரிந்துகொள்ள முடியாது; ஏனெனில், மனித அறிவுக்கு சில விஷயங்கள் சாதகமானவை, சில மாறானவை; உண்மையில் ஆன்மீகத் துறையில் 'நல்லது' அல்லது 'தீயது' என்று எதுவுமில்லை.**

காலம் உலகத்திற்கு இவ்வாறு நினைவூட்டுகிறது:

**பிரேமாஷ்ரம் சிறுவர்களுடன் பாபா மேற்கொண்ட பணியின் விளைவுகளை ஒருவர் மதிப்பிட முடியாது, ஏனெனில் இதன் விளைவு இந்தப் பிறவியில் அல்லது அடுத்த பிறவியில் தோன்றாது, பல பிறவிகளுக்குப் பிறகுதான் தோன்றும். ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம்: ஒரு முறை கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிய இறை அன்பின் நெருப்பு, ஒருபோதும் அணைக்கப்படுவதில்லை!**

**காற்று அதன் வெப்பத்தைத் தணிக்கலாம், ஆனால், ஒரு நாள் பொங்கியெழும் நெருப்பின் காற்று, அதை மூழ்கடிக்கும்! அன்பிற்குரியவரின்**

**அரவணைப்பில் இருக்கும் இறை போதைமிக்க ஆத்மாக்கள், மாயை எனும் புயலை அமைதிப் படுத்தும் - இதற்காகத்தான் அன்பிற்குரியவர் அந்த சிறுவர்களை ஆயத்தப் படுத்துகிறார்.**

பெர்ஸிய சிறுவன் அலி அக்பரைப் பற்றி ராம்ஜூ அப்துல்லா அளித்த விளக்கம் கீழே வருமாறு:

அலி அக்பரின், குருநாதர் மீதான, அன்பின் தாக்கம் தனிச்சிறப்பு மிக்கது. அவனது சுறுசுறுப்பான அன்பின் தீவிர நிலையை எவராலும் அடைய முடியாது, அது எப்போதும் அவனில் அமைதியற்ற பரபரப்பை ஏற்படுத்துகிறது. அவன் ஒரே இடத்தில் நீண்ட நேரம் அல்லது அமைதியாக அமர்ந்திருப்பது மிக அரிது.

அலி அக்பர் ஆரம்பத்தில் மெஹ்ராஷ்ரம் வந்த போது, அவன் இறையன்பு, ஆன்மீகம் சம்பந்தப்பட்ட விவாதங்களில் மிகவும் அக்கறையற்றவனாக இருந்தான்.

அவன் தெய்வீகம் மற்றும் தெய்வீக அனுபவங்கள் பற்றிய விஷயங்களில் வெளிப்படையான வெறுப்பைக் காண்பித்தது மட்டுமல்லாமல், இதுபோன்ற அனைத்து விஷயங்களையும் தவிர்த்து, தியானம் செய்வதிலிருந்து முடிந்தவரை ஒதுங்கி இருந்தான். ஆனால், அனைத்திலும் முன்னணியில் இருந்த ஆகா அலி அங்கிருந்து சென்றதும், அலி அக்பர் திடீரென, பாபாவின் கருணை நிறைந்த பார்வைக்குள்ளானான். நீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட மீனைப்போல், உண்மையிலே தரையில் உருண்டு புரண்டு, ஒரு விட்டில்பூச்சி விளக்கை நாடிச் செல்வது போல, பாபா அவனை அள்ளி அணைப்பது வரை சீற்றத்துடன் காணப்பட்டான்.




**இமயமலை, குவெட்டா பயணம்**

நாசிக் (NASIK), மன்மாட் (MANMAD), டெல்லி (DELHI), ஹரிதுவார் (HARDWAR), ரிஷிகேஷ் (RISHIKESH), லாஹூர் (LAHORE), ஸக்கர் (SUKKUR), குவெட்டா (QUETTA), மும்பை (MUMBAI), மன்மாட், மெஹராபாத் (MEHERABAD), அஹமதுநகர் (AHMEDNAGAR), நாசிக்

# இமயமலை, குவெட்டா

(**Himalayas, Quetta**)

1929 மே 8ஆம் நாள், பாபா அனைத்து இந்து சிறுவர்களையும் (பெரும்பாலும் தீண்டத்தகாதவர்கள்) அழைத்து, அவரது பயணத்தைப் பற்றித் தெரியப்படுத்தினார்: **"நான் திரும்பி வருவது வரை நீங்கள் உங்கள் இல்லங்களில் இருந்து கொள்ளுங்கள். அஹமதுநகர் அல்லது வேறு எங்கும் செல்ல வேண்டாம். ஏதேனும் வேலைகளைத் தேடிக்கொண்டால் நல்லது, இல்லையேல் பஜனைகள் பாடி உங்கள் பொழுதைக் கழிக்கலாம். நான் திரும்பி வந்து உங்களை அழைக்கும் வேளையில், தவறாமல் அனைவரும் என்னிடம் வரவேண்டும். ஓரிரு மாதங்களில் நான் திரும்பி வந்து விடுவேன். நான் சொல்வதை அப்படியே செய்யுங்கள், நீங்கள் நல்ல பலனை அடைவீர்கள். நான் எது செய்ய வேண்டுமோ அதைச் செய்வேன். நான் உங்களுக்கு உகந்த வேலைகளுக்கு - வண்டி ஓட்டுநர், இயந்திர வல்லுநர், அச்சடிப்பாளர் - ஏற்பாடு செய்வேன்; அதுவரை நான் சொல்வதைச் செய்யுங்கள்."**

மெஹர் பாபா அன்று மதிய வேளையில் ஆறு மண்டலியுடன் காரில் புறப்பட்டு அக்பர் அச்சகம் சென்றார்.

அன்றைய தினம் அக்பர் அச்சகத்தில் நடந்த விவாதத்தில், மெஹர் பாபா 'ரிஷிகேஷ்' பயணம் செய்யப் போவதாகத் தெரிவித்தார். மே 9ஆம் நாள் நாசிக் சென்று பெண் மண்டலியை சந்தித்து விடைபெற்று, இமயமலை பயணத்தைத் தொடங்கினார்.

கண்ட்வா கிராமம் அருகில் நடந்த ரயில் விபத்தில் யாரோ ஒருவர் படுகாயமடைந்தார். அவரைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம். அதற்கிடையில் பாபா சகனை அனுப்பி சிறிது சாதமும், பருப்பும் வாங்கிவரக் கூறினார். 'யாரோ வழிப்போக்கன் ஒருவன் ரயிலில் படுகாயமடைந்து உயிருக்குப் போராடுகிறான் - அனைவரும் அவனுக்கு உதவ முன் வருகிறார்கள் - இருந்தும் இங்கே தேவனுக்கு ஒரே பசி, சாப்பிட ஏதாவது வேண்டுமாம்! பாபா எப்படி இவ்வளவு இரக்கமற்றவராக இருக்கமுடியும்? இது போன்ற நேரத்தில் யார் ஒருவரால் சாப்பிட முடியும்?' என்று மனதில் நினைத்துக்கொண்டே கூட்டத்தில் நுழைந்து சென்றார். சகன் உணவை வாங்கிவர காலதாமதமானதால், பாபா பொறுமையிழந்து குஸ்தாஜியைப் பார்த்துவர அனுப்பி வைத்தார்; சகன் திரும்பி வந்தபோது பாபா சீற்றத்துடன் காணப்பட்டார்.

பாபா அந்த உணவை உண்பதைப் பார்த்து, சகனின் மனதில் மறுபடியும் எண்ணங்கள் அலைமோதின: 'வெளியே ஒரு மனிதன் இறந்து கொண்டிருக்கிறான், இங்கே தேவன் அமைதியாக தனது மதிய உணவை

அனுபவித்து வருகிறார். பாபா எப்படி இவ்வளவு உணர்வற்றவராக இருக்க முடியும்?

பாபா சைகையால் சகனிடம், **"என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?"** என்று வினவினார்.

சகன் ஒன்றுமில்லை என்று பதிலளித்தார். பாபா தனது தோள்களைக் குலுக்கிய வண்ணம், எழுத்துப்பலகை மூலம் கூறினார், **"நீ அந்தக் காயமுற்றவனைப் பற்றி நினைக்கிறாய், என்னைப் பற்றி எந்த நினைப்பும் இல்லை. அவனை நினைப்பதன் மூலம் நீ அவனுக்கு எப்படி உதவ முடியும்? உன்னுடைய அனுதாபம் வெறுமையானது; இதில் எந்த பயனுமில்லை.**

**"நான் உணவு உண்பதை மட்டுமே நீ பார்க்கிறாய், ஆனால், அவனுக்காக நான் உண்மையில் என்ன செய்கிறேன் என்று உனக்கென்ன தெரியும்? அனைத்தும் எனது கைகளில் இருப்பதை நீ நம்புவதானால், எனது விருப்பமின்றி ஓர் இலை கூட அசையாது என்பதை நீ அறிவாயானால், அவனுக்கு என்ன நடந்ததோ - மேலும் என்ன நடக்குமோ, அவையனைத்தும் என் ஆணைப்படியே நடக்கும் என்பதை நீ ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? எனது விருப்பத்திற்குக் கீழ்ப்படிவது மட்டுமே உனது கடமை. உனது விருப்பத்திற்கு நீ ஏன் இடம் தரவேண்டும்?**

**"நான் இந்த உணவை உண்ணுகிறேன், ஆனால், அது அந்த மனிதனின் வயிற்றைச் சென்றடைகிறது! நீ அதைக் காண முடியாது. அனைவருக்கும் உபகாரம் செய்பவன் நான் என்பதை நினைவில்கொள். உனது அனுதாபத்தால் ஒரு சிறிய காரியத்தைக் கூட செய்ய முடியாது! என்னுடைய விருப்பத்தை நிறைவேற்ற நீ உன் ஆசைகளைத் துறக்கவேண்டும். அப்போதுதான் நீ எனக்கு சேவை செய்ய தகுதி உடையவனாக இருப்பாய்!"**

மெஹர் பாபா, அப்போது சகனை அனுப்பி, காயம் பட்டவரின் கதி என்னாயிற்று எனப் பார்த்துவரக் கூறினார். சகன் அங்கு நடந்ததைப் பார்த்து வாயடைத்துப் போனான். அந்த மனிதர் அவரது உணர்வைத் திரும்பப் பெற்றது மட்டுமின்றி, தேநீர் அருந்திக்கொண்டு மகிழ்ச்சியாக இருந்தார்! அவசரமாக அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல இருந்தனர்; அதேவேளை அங்கிருந்த மருத்துவர் பெரிய அளவில் காயம் எதுவுமில்லை என்று குறிப்பிட்டார். சகன் அவனுடைய தவறான எண்ணத்திற்காக வருந்தினான்.

உண்மை என்னவெனில், பாபா அப்போது நிஜத்தில் பசியாக இல்லை, ஆனால், காயப்பட்ட அந்த மனிதருக்கு உயிரூட்டமளிக்க அவ்வாறு உள்ளளவில் செயல் புரிந்தார். இதன் மூலம், பாபா அவ்வப்போது செயல்படும் விதத்தைப் பற்றி, சகனுக்கு ஒரு பாடம் புகட்ட விரும்பினார்.

மெஹர் பாபா, அவரது சீடர்களுக்கு ஒன்றைப் புரியவைக்க எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் - தனது சொந்த சௌகரியங்களைத் தியாகம் செய்து, அவர்களுக்காக எத்தனை மணி நேரத்தையும் செலவு செய்யத் தயாராக இருந்தார்.

மே 11ஆம் நாள் டெல்லி சென்று அன்றிரவு ஓய்வெடுத்தனர். மறுநாள் காலை 7 மணிக்கு பெஷவார் எக்ஸ்பிரஸில் ஹரித்வார் மலைகளை நோக்கிப் பயணம் தொடர்ந்தது. அடுத்த நாள் பாபா, கங்கை நதிக்கரைக்கு நடந்து சென்று, ஓரிடத்தில் தனியாக, அமைதியாக சிறிது நேரம் அமர்ந்திருந்தார்.

அப்போது மண்டலிக்கு ஆச்சரியமூட்டும் விதத்தில் பாபா ஹரித்வாரில், அவரது பணி முடிந்துவிட்டதாக அறிவித்து, உடனே வெளியேற விரும்பினார்.

"இந்த நதிக்கரையில் இவ்வளவு குறுகிய நேரம், அமைதியாக அமர்ந்து மெஹர் பாபா என்னதான் செய்திருப்பார்?" என்று காலம் குழப்பத்தில் மட்டுமின்றி ஆச்சரியத்தில் ஆழ்ந்தது. அளவிறுதியற்ற உணர்வு நிலையை அடைந்த ஒருவரால்தான், இதன் ஆழத்தைக் கண்டறிய முடியும், ஏனெனில், அவதார புருஷரின் ஒவ்வொரு செயலும் அவருடைய எல்லையில்லா நிழலாகிய படைப்பில் ஒவ்வொருவரையும், ஒவ்வொன்றையும் சென்று தொடுகின்றது. ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு உயிரும் எப்போதும் அவர் பார்வையின் எல்லைக்குள் இருக்கும்.

மெஹர் பாபா ஹரித்வாரிலிருந்து புறப்பட்டு, அதே நாள் ரிஷிகேஷைச் சென்றடைந்தார். கூட்டம் கூட்டமாக வந்த சில சாதுக்களைக் குறிப்பிட்டு பாபா இவ்வாறு கூறினார்: **"அவர்களைப் பாருங்கள். நீண்ட முடியுடன், உடலெல்லாம் திருநீறு பூசிக் கொண்டு, காவி நிற உடையணிந்து, ஆன்மீக சொற்பொழிவுகளை வழங்குகிறார்கள். இது வெளியளவில் தோன்றும் காட்சி; ஆனால், உள்ளளவில் அவர்கள் மாயையில் மூழ்கியுள்ளார்கள்.**

**"அவர்கள் கபட வேடதாரிகள்; ஒருவர் மாயையிலிருந்து விலகியிருப்பதாக நடிப்பது மஹா பாவம். சாதுக்கள் என்று அழைக்கப்படும் இவர்கள் ஆசைகள் நிறைந்தவர்கள்; அவர்களின் சிந்தனைகள் அனைத்தும் நல்ல உடையணிந்து, உணவு உண்டுகளிப்பதில் இருக்கும். வெளித்தோற்றத்தில் சாதுக்கள் போல வேஷம், உள்ளளவில் நேர்மாறாக இருப்பார்கள்.**

**"அனைத்து ஆசைகளையும் துறந்த ஒருவரே உண்மையான சாது"** என்று கூறி முடித்தார் பாபா.

அடுத்ததாக, மெஹர் பாபா ரயிலில் ரிஷிகேஷிலிருந்து குவெட்டாவுக்குப் பயணத்தைத் தொடர்ந்தார். பாபா திடீரென உடல் நலம் குன்றியவர் போல், அமைதியின்றி காணப்பட்டார். இந்தியாவில் மே மாதம் மிக உஷ்ணமான காலம். ரயிலில் மூச்சுவிட முடியாத அளவுக்கு நெரிசல். இரவு 12 மணிக்கு 'ரோஹ்ரி' ரயில் நிலையத்தில் இறங்கி அங்கிருந்த தர்மசாலைக்குச் சென்றனர். பாபா ஓய்வெடுக்க முடியாமல் வயிற்றுக் கோளாறால் அவதிப்பட்டார்.

சற்று ஓய்வுக்குப் பிறகு, குவெட்டா பயணத்தைத் தொடர்ந்தனர். ரயிலிலிருந்த கூட்டத்தில் மண்டலியில் ஒருவர் பெசு பொறுமையிழந்து

இன்னுமொரு சக பயணியுடன் கோபப்பட்டு, கடுமையான விவாதத்தில் ஈடுபட்டார். பாபா உடனே தலையிட்டு பெசுவை அமைதிப் படுத்தி கண்டித்தார்: **"பிறரை வெல்வதற்கு பதிலாக, நம்மை நாமே வெல்ல முயற்சிக்க வேண்டும். பிறரின் கோபத்தைத் தாக்குவதைவிட நமது கோபத்தில் கவனம் செலுத்துவது மிகவும் விரும்பத்தக்கது. நமது கோபத்தைக் கட்டுப்படுத்துவது உண்மையான துணிச்சலாகும், அதே வேளையில், அதன் போக்கிலே விட்டுவிடுவது சுத்த பலவீனமாகும். வியர்த்து வடியும் ரோஹ்ரியின் உஷ்ணத்தைப் போல் இருக்காதே, குவெட்டாவின் குளிர்ந்த தட்பவெப்பமாக இருக்க வேண்டும்"** என்று கூறி முடித்தார்.

குவெட்டா ரயில்நிலையத்தில் பெண்டு, ரூஸி ஈரானி இருவரும் பாபாவை அன்புடன் வரவேற்றனர். ரூஸியின் தோட்டத்தில் மலரும் இரண்டு சிறுமிகளை - கோஹெர், கேட்டி - பார்ப்பதற்காகவே பாபா அங்கு வந்தார். **"உங்களைப் பார்க்க எவ்வளவு தூரத்திலிருந்து நான் வந்துள்ளேன் என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்!"** என்று பாபா கூறினார்.

ஐந்து வருடங்களுக்கு முன்பு, பாபாவின் மண்டலியில் ஒருவர் நெர்வஸ், பாபா, குவெட்டா நகரைவிட்டுச் சென்ற பின்பு காலமானார். ஆனால், பாபா புறப்படுவதற்கு முன்னரே, பார்சி கல்லறைக்குச் சென்று, நெர்வஸை அடக்கம் செய்யும் இடத்தைக் குறித்துச் சென்றார்.

இம்முறை பாபா குவெட்டா வந்ததும், நெர்வஸின் சமாதியில் மலர்கள் தூவி, சிறிது நேரம் தியானத்தில் அமர்ந்திருந்தார். அதற்குப் பிறகு, முழுக் கல்லறையையும் ஒரு கண்ணோட்டமிட்டு இவ்வாறு குறிப்பிட்டார்: **"இங்கு அடக்கம் செய்யப்பட்டவர்கள் அதிர்ஷ்டசாலிகள். நெர்வஸின் காரணமாக, அவர்கள் இன்று என்னைப் பார்க்கும் வாய்ப்பை அடையப் பெறுகிறார்கள்."**

பாபா மண்டலியுடன் குவெட்டாவில் தங்குவற்கு வசதியான வீடு அமையாததால், ரூஸியிடம் இவ்வாறு குறிப்பிட்டார்: **"எனக்குத் தங்குவதற்கு இங்கு ஓரிடம் இல்லாதபோது, நீங்கள் இங்கிருப்பதில் என்ன பலன்? உங்கள் குடும்பத்துடன் குவெட்டாவைவிட்டு நிரந்தரமாகச் செல்வதுதான் நல்லது!"** பாபா சாதாரணமாகக் கூறியதிலும் ஓர் உள்ளர்த்தம் இல்லாமலில்லை. துரதிர்ஷ்டவசமாக, பாபா கூறியதன் முக்கியத்துவத்தை, சில வருடங்களுக்குப் பின்னரே ரூஸி புரிந்துகொண்டார்.

1929 மே 23ஆம் நாள், பாபா மண்டலியுடன் ரயிலில் குவெட்டாவிலிருந்து புறப்பட்டு, 26ஆம் நாள் மும்பை வந்தடைந்தார். மும்பையில் ஓரிரு நாட்கள் நவ்ரோஜி தாதாசாஞ்சியின் இல்லத்தில் தங்கியிருந்து, பக்தர்களுக்கு தரிசனம் வழங்கிய பின்னர், அனைவரும் மெஹராபாத்திற்கு வந்தனர். இம்முறை பாபா ஏறக்குறைய 3700 மைல்கள் பயணம் செய்து, குவெட்டா வந்த நாளிலிருந்து உபவாசமும் மேற்கொண்டார்.

ஜூன் 1ஆம் நாள் பாபா சிறிதளவு சாதமும் பருப்பும் உண்டு, உபவாசத்தை நிறைவு செய்தார்.

மெஹராபாத் வந்ததும், பாபா அனைவரையும் விசாரித்தப் பிறகு, விஷ்ணுவை அழைத்து வருமாறு கூறியதும், அவர் காலணிகள் அணியாமல் வேகமாக ஓடிவந்தார். பேச்சுக்கிடையே பாபா விஷ்ணுவிடம், ராவ்ஸாஹேபை அழைத்துவரக் கூறியதும், விஷ்ணு மறுபடியும் அதே வேகத்தில் ஓட ஆயத்தமானார். பாபா விஷ்ணுவிடம், "**வெறுங்காலில் நடக்க வேண்டாம்; எனது காலணிகளை அணிந்துகொள்**" என்றதும், விஷ்ணு, பாபாவின் காலணிகளை எடுத்து, தலையில் தொட்டு, வணங்கி கீழே வைத்து, "பாபா, உங்கள் புனிதமான பாத அணிகளை நான் ஒருபோதும் எனது கால்களில் அணியமாட்டேன்" என்றார்.

அதற்குப் பிறகு, பாபா அங்கிருந்த பிற அனைவரிடமும் இவ்வாறு கடுமையாகக் குறிப்பிட்டார்: "**விஷ்ணு எவ்வளவு துரதிர்ஷ்டவசமானவன் என்பதைப் பாருங்கள்! நான் அவனிடம் எனது பாத அணிகளை அணியுமாறு கூறியபோது, அவன் அவற்றைத் தனது நெற்றியால் தொட்டு வணங்கிவிட்டு, திருப்பி வைத்துவிட்டான். இத்தகைய வழிபாடும், பயபக்தியும் எனக்கு வேதனை அளிக்கிறது. எனக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது, ஒருபோதும் என்னை வணங்குவது ஆகாது; மாறாக அது என்னைத் தண்டிப்பது போலாகும். இதில் சோகமான விஷயம் என்னவென்றால், அவன் என்னைப் பணிவுடன் வணங்குவதாக நினைக்கிறான்.**

**"என்னுடைய வார்த்தைகளுக்கு செவி மடுக்காமல், ஒருவரின் சுய உணர்வுகளை மதித்து வழிபடுவது, மொத்தத்தில் கீழ்ப்படியாமைக்கு சமமாகும். விஷ்ணு என்னை வணங்கவில்லை. அவன் தனது சுய உணர்ச்சிகளை மதித்து வணங்குகிறான், அவனைப் பொறுத்தவரை, அவை எனது கட்டளைகளைக் காட்டிலும் உயர்ந்தவை. இத்தகைய செயல்கள் என்னை மிகுந்த வேதனைக்கு உள்ளாக்குகின்றன."**

அமைதி குலைந்த நிலையில் இருந்த விஷ்ணு, "உங்கள் பாத அணிகளை நாங்கள் புனிதமாகக் கருதவேண்டாமா?" என்று கேட்டார்.

"**என்னுடைய ஒவ்வொரு பொருளும் புனிதமானது. ஒருவர் அவற்றை வழிபடும் உணர்வை கொண்டிருப்பது நல்லது. ஆனால், அவை என்னைவிட எவ்வகையிலும் முக்கியமல்ல. எனது வார்த்தை மட்டுமே அனைத்திலும் மேலானது! அதற்காகத்தான் எனது பொருட்களை வணங்குவதைவிட, எனது வார்த்தையை வணங்குங்கள். என்னுடைய வார்த்தைகளை ஏற்று அதன்படிச் செயல்படும்போது, உங்கள் சுய உணர்வுகளின் வெளிப்பாட்டுக்கு இடந்தராதீர்கள்**" என்று மெஹர் பாபா பதிலளித்தார்.

இதற்கிடையில் திடீரென, பாபாவின் மனநிலை மாறியதும் அங்கிருந்தவர்களிடம் பாபா இவ்வாறு வினவினார், **"நீங்கள் எப்போதாவது எனது வயிற்றிலிருந்து வெளியாகும் கழிவுகளை ஆராய்ந்திருக்கிறீர்களா?"**

சிலர் "ஆமாம்" என்று கூற மற்றும் சிலர் "இல்லை" என்று பதிலளித்தனர். ஆனால், எவருமே பாபாவைத் திருப்திபடுத்தும் விதத்தில் பதிலளிக்கவில்லை.

ஆகையால் பாபாவே அதைப் பற்றி விளக்கமளித்தார்: **"என்னுடைய கழிவில் என்ன அடங்கியுள்ளது என்பதைப் பற்றி உங்களுக்கு எந்த அறிவும் கிடையாது. படைப்பின் ஆரம்பத்தில் என்னுடைய கழிவிலிருந்து அனைத்து சூரிய, சந்திரன்கள், நட்சத்திரங்கள், உலகங்கள் வெளிவந்தன. அவை அனைத்தும் என்னுடைய கழிவுகள்! ஆனால், கற்பனை செய்து பாருங்கள்! இந்த அசுத்தமான கழிவுகளே இத்தனை அழகாக இருக்கும்போது, என்னுடைய உண்மையின் சிறப்பை என்னென்பீர்கள்! அதன் ஒரு சிறிய அம்சத்தை நீங்கள் பார்க்க நேர்ந்தால் கூட, உங்கள் நினைவை இழந்துவிடுவீர்கள்."**

இக்காலகட்டத்தில், விஷ்ணுவின் நண்பன் 'நீலு' (நீல்காந்த் கோட்ஸே - GODSE) மும்பையில் மருத்துவ படிப்பு முடிக்கும் நிலையில் இருந்தவர், விடுமுறை நாட்களில் மெஹராபாத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டார். ஒருமுறை பாபா, மண்டலியிடம் இவ்வாறு குறிப்பிட்டார்: **"என் உடல்நிலையை உங்களால் சரியாக கவனிக்க முடியவில்லை. இங்கே நான் ஒரு பெரிய மருத்துவமனையை நிறுவ விரும்புகிறேன், அதற்காக எனக்கு ஒரு மருத்துவர் தேவைப்படுகிறார். அந்த மருத்துவர் என்னை கவனிப்பதோடு, பிற அனைவரையும் பார்த்துக் கொள்வார்."**

அங்கு நின்ற மண்டலியைச் சுட்டிக்காட்டி பாபா, நீலுவிடம், **"இவர்களெல்லாம் உதவாக்கரைகள்! அவர்களுக்கு உடல்நலம் சரில்லாத போது மருந்துகளை நான் பரிந்துரைக்க வேண்டும். நான் மருத்துவர்களுக்கெல்லாம் மருத்துவர் என்பது உண்மையானாலும், மேலும் அனைத்து நோய்களுக்கும் என்னிடம் மருந்து இருந்தாலும், அது முற்றிலும் வித்தியாசமான மருந்து. என்னுடைய நோயாளிகளுக்கு நிவாரணமளிக்க, எனக்கு ஒரு மருத்துவர் தேவை"** என்று கூறினார்.

மருத்துவ கல்லூரியில் பயின்று வரும் நீலுவுக்கு, மெஹராபாத்தில் தங்கும் ஆர்வம் எழும்பியது, ஆனால், பாபா இவ்வாறு உபதேசம் வழங்கினார்:

**"உன்னுடைய படிப்பில் கவனம் செலுத்து; இங்கு வருவதைப் பற்றிய எந்த எண்ணமும் இப்போது வேண்டாம். விஷ்ணு, உனக்குக் கடிதங்கள் எழுதி உன்னை இங்கு வரச்சொல்லி, தொந்தரவு செய்வான்; ஆனால், அதைக் கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும்."**

பாபாவின் வெளிப்படையான விருப்பமின்மை நீலுவின் ஏக்கத்தை மேலும் பலப்படுத்தியது; இருப்பினும், நீலு, பிரியமானவரின் பூந்தோட்டத்தில்

நிரந்தரமாக வாழ இன்னும் ஆறு வருடங்கள் பொறுமையோடு காத்திருக்க வேண்டியதாயிற்று!

இவ்வேளையில் பிரேமாஷ்ரமத்தில், இறுதியாக நான்கு சிறுவர்கள் மட்டுமே இருந்தனர். ஆகா அலி, அலி அக்பர், ராஜாராம் மூவரும் பாபாவின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக மண்டலியுடன் பேசத்தொடங்கினர்; மேலும் அவர்களின் நடைமுறைகளில் பல மாற்றங்கள் தென்பட்டன.

நாசிக்கில் வாழ்ந்து வந்த பெண் மண்டலி, பாபாவின் நீண்டகால பிரிவைத் தாங்க முடியாமல் தவித்தனர். குவெட்டாவிலிருந்து திரும்பி வந்த பிறகு, பாபா பிரேமாஷ்ரமத்தில் இருந்த நான்கு சிறுவர்களுடன் தனது பணியைத் தொடர்ந்தார். மெஹராபாத்தில் வேண்டிய அனைத்தையும் முடித்த பின்பு பாபா, 1929, ஜூன் 9ஆம் நாள் நாசிக் சென்றார். பாபாவை வரவேற்று மெஹரா, நாஜா, கோர்ஷெத் மூவரும் அவர்கள் கைகளால் செய்த மாலையை அணிவித்து, பாபாவுடன் மகிழ்ச்சியாக இருந்தனர். அவர்களின் ஈடிணையற்ற, பரிசுத்தமான அன்பு மற்றும் கடவுளுக்கே உரித்தான வழிபாட்டு சிந்தனைகளை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

நாசிக் நகரில் பாபா, 'பாண்டு லேனா' குகைகளைப் பார்வையிட்டார்; அதன் அழகை ரசித்து, தியானத்திற்கு உகந்த இடம் என்று குறிப்பிட்டார். அடுத்த நாள் இரண்டு கோயில்களுக்கு விஜயம் செய்தார் - ஒன்று ஜெயின் கோவில், மற்றொன்று செங்குத்தான மலையில் அமைந்த ராமர் கோவில். புராண வரலாறுபடி, ராமர் அவருடைய காலத்தில் அங்கு தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

அன்று மாலையில் ருஸ்தம், கங்காபூர் நீர்வீழ்ச்சியைப் பார்வையிட பாபாவை அழைத்துச் சென்றார். ருஸ்தம், பாபாவிடம், "ஒரு திரைப்படம் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் நீண்ட நாட்களாக உள்ளது. நான் ஏற்கனவே திரைப்பட தயாரிப்பாளர் தாதாஸாஹேப் பால்கே (PHALKE) அவர்களை சந்தித்துப் பேசினேன்; அவரும் அதற்கு வேண்டிய முதலீட்டை செய்வதற்குத் தயாராக உள்ளார். உங்கள் ஆன்மீகக் கருத்துக்களை உலகெங்கும் பரப்ப, திரைப்படம் ஓர் ஊடகமாக அமையும் என்று கருதுகிறேன்" என எடுத்துரைத்தார். பாபா இந்த யோசனையை பெரிதும் ஆமோதித்து, அதைத் தொடருமாறு கூறினார்.

மெஹர் பாபா, பெண் மண்டலியோடு வாழ்ந்து வந்த வாலு பவார் வீட்டிற்கு விஜயம் செய்த வேளையில், ஆசைகளைப் பற்றி சொற்பொழிவாற்றினார்:

**ஆசைகள் இரு வழிகளிலும் - நிறைவேறினாலும், நிறைவேறாமல் போனாலும் - தீங்கு விளைவிக்கும்!**

**உதாரணமாக, ஒருவர் பாலியலில் ஆர்வமுள்ளவராக இருக்கிறார். தீவிரமான ஏக்கத்தில் எதிர் பாலினத்தைச் சார்ந்த ஒருவரோடு**

**தொடர்புகொண்டு அவரது விருப்பத்தை நிறைவேற்றுகிறார். அதற்கு அப்புறம் என்னவாகும்? அந்தச் செயலுக்குப் பின்னர், அவர் மனம் தளர்ந்து விடுகிறார். ஏன்? ஏன் இந்த நிலை, ஆசைதான் நிறைவேறிவிட்டதே? இது என்ன விசித்திரமாக இல்லையா? ஆனால், அதில் விசித்திரம் எதுவும் இல்லை. அவருடைய ஏக்கத்தின் வெளிப்பாட்டின் விளைவாக, அது ஏமாற்றத்தையும் வெறுப்பையும் தருகிறது.**

**ஓர் ஆசை நிறைவேறியதும் மற்றொன்று அதுபோல நிறைவுகாணும் நோக்கத்தில் தயாராக இருக்கும்; அதுவும் நிறைவேறிய பின்பு, மேலும் ஓர் ஆசை; இப்படி ஆசைகளுக்கு அளவேயில்லை. ஒருவர் ஆசைகளின் பிடியிலிருந்து தப்பிப்பது அவ்வளவு எளிதல்ல. சத்குருக்களால் மட்டும்தான் - அவருடைய சீடர்கள், பக்தர்கள் மற்றும் அவர்களின் ஆசிகளை அடையும் பாக்கியம் பெற்றவர்கள் - அனைவரின் ஆசைகளையும் அழிக்க முடியும்.**

1929, ஜூன் 13ஆம் நாள், குல்மாய், ஆதி சீனியருடன் வந்தபோது, பாபா முதன்முறையாக பிரேமாஷ்ரம் சிறுவர்கள் பெயரில் ஒரு பொறுப்புரிமை அமைப்பு (TRUST) உருவாக்குவதைப் பற்றி குறிப்பிட்டார். கான் ஸாஹேப் பெயரிலிருக்கும் மெஹராபாத் மேல்மலையை, சிறுவர்கள் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யவேண்டுமென பாபா முன்மொழிந்தார். முதலில் கான் ஸாஹேப் அதை மறுத்தாலும், பின்னர் அதற்கு இணக்கம் தெரிவித்து, பாபாவிற்கு அதை அன்பளிப்பாக உரிமைமாற்றம் செய்ய ஏழு வருடங்களாயிற்று.

மெஹர் பாபா, இவ்வேளையில், தினமும் சாஞ்சி, ராவ்ஸாஹேப் மற்றும் சிலருடன் சதுரங்கம் விளையாடுவதை வழக்கமாகக் கொண்டார். ஜூன் 16ஆம் நாள், பாபா சதுரங்கம் விளையாடிக் கொண்டிருக்கும் வேளையில் 'ரூமி', 'ஷாம்ஸ்' இருவரும் சதுரங்கம் விளையாடுவதில் மிக்க ஆர்வமுள்ளவர்கள் என்றும், அவ்வாறு விளையாடும் வேளையில், அவர்களின் ஆன்மீகப் பணிகளைச் செய்து வந்தனர் என்பதையும் தெரிவித்தார். பின்னர் ஒரு நாள் பாபா, சாஞ்சியுடன் இரண்டு அல்லது மூன்று ஆட்டங்கள் ஆடினார்; ஆனால், அவருடைய முழு கவனமும் விளையாட்டில் இல்லாமல், அலட்சியமாக விளையாடினார். அதற்குப் பிறகு, பாபா இவ்வாறு விளக்கினார்: "**கடந்த சில நாட்களாக சாஞ்சியுடன் நான் சதுரங்கம் விளையாடும் வேளையில் பல இடங்களுக்குச் சென்று எனது பணியைச் செய்துவந்தேன்.**"

அன்று, மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், காமத்தை வெல்வது பற்றி மெஹர் பாபா உருவக கதையாக எடுத்துரைத்தார்:

**ஒரு காலத்தில் சக்தி, காமம் இரண்டிற்குமிடையே மோதல் ஏற்பட்டது; சக்தி தோற்கடிக்கப்பட்டதும், மனம், ஆவேசத்தில் வட்டத்திற்குள் நுழைந்தது. அப்போது மனம் மற்றும் காமத்திற்கிடையே மோதல்**

**பயங்கரமாக உருவெடுத்தது. மனதைத் தோற்கடிப்பது அவ்வளவு சுலபமல்ல; ஆனால், இறுதியில் காமம்தான் வென்றது.**

**அப்போது ஆத்மா, இறுதிவரை மோதும் நோக்கத்தில் காமத்துடன் சவால்விட்டது. அந்தப் போட்டியின் விளைவாக, காமம் முற்றிலுமாக தோற்கடிக்கப்பட்டு, மறுபடியும் ஆத்மாவுக்கு சவால்விடும் எண்ணத்தில் ஒருபோதும் எழுந்ததில்லை.**

ஜூன் 22ஆம் நாள், பாபா இவ்வாறு கருத்து தெரிவித்தார்: "**தெய்வீக அன்பு முற்றிலும் விசித்திரமானது! அடி, உதைகள் கொடுப்பதுண்டு, அதேவேளையில் பாசத்தையும் பொழிவதுண்டு. ஆன்மீகப் பாதைக்கான வழி முற்றிலும் வேறுபட்டது. சுடரொளி அங்கே மிகச்சிறந்து விளங்கும், ஆனால், நெருப்பு, கொழுந்துவிட்டு எரியும். குருநாதரின் அலட்சியம் பேரழிவை ஏற்படுத்தும், ஆனால், அவருடைய** (சொல், செயலில் வெளிப்படும்) **தாக்குதல்கள் ஒரு காந்தம் போலச் செயல்படும்.**"

மெஹர் பாபா, கடந்த ஒரு சில வாரங்களாக, சிறுவர்களைப் பார்க்கவோ அவர்களை அழைக்கவோ இல்லை. இது அவர்களுக்கு எப்போதுமில்லாத அதீத வேதனையை ஏற்படுத்தியது. ஜூன் 17ஆம் நாள், அவ்வாறு செய்வது மெஹர் பாபாவின் கடுமையான உத்தரவுகளுக்கு எதிரானதாக இருந்தாலும், அலி அக்பர் சமாதி அறையின் அருகில் சென்று அமைதியாக அழுது கொண்டிருந்தான். பாபா வெளியே வந்து அவனை அணைத்து, முத்தம் கொடுத்தார். அலி அக்பர், பாபாவின் அருகிலிருக்க அனுமதி கோரினான். அதற்குப் பிறகு, பத்து நாட்களுக்கு, தினமும் இரண்டு மணி நேரம் அருகில் அமர பாபா அனுமதித்தார் - ஆனால், ஒரே ஒரு நிபந்தனை - அலி அதை ஒரு ரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்பதே.

ஜூன் 21ஆம் நாளிலிருந்து, பாபா காலையில் மூன்று மணி நேரம் சிறுவர்களுக்குப் பாடம் சொல்லித்தரத் தொடங்கினார். அவரது தனிப்பட்ட கவனம், சிறுவர்களின் மனநிலையைச் சீர்படுத்தியது. ஓரிரு சிறுவர்களின் உதவியுடன் பாபா அவர்களின் உணவையும் சமைக்கத் தொடங்கினார்.

அதைத் தொடர்ந்து பாபா, அரன்காவ்ம் கிராமத்தில் சிறுவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதைப் பற்றி எடுத்துரைத்தார்: "**அவர்களுக்கு அச்சகத்தில் பணிபுரியும் முறையை அல்லது கார் ஓட்டக் கற்றுத்தர வேண்டும். ஆனால், நாளை பெரியவர்களாகும் இன்றைய இளைஞர்களுக்கு ஒழுக்க நெறிகள் கற்பிக்கப்படுவதையும், கடமை உணர்வு முழுமையாகத் தூண்டப்படுவதையும் நான் காண வேண்டும். நல்லொழுக்கங்கள் இல்லாமல், அவர்களுக்கு எதைத்தான் கற்பித்தாலும் - அவர்கள் எவ்வளவுதான் புத்திசாலிகளாக இருந்தாலும், முதல் இடத்தில் தேர்ச்சிப் பெற்றாலும் - எந்த மதிப்பும் இராது.**"

பழைய இளைஞர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, "**அவர்கள் பிரம்மச்சாரிகளாக இருந்து திருமணம் செய்து கொள்ளாவிட்டால், அது மிகச் சிறந்ததாக இருக்கும். அவர்கள் இந்த ஆன்மீகப் பாதையின் வருங்கால ஊழியர்கள். தத்து, வஸந்த் போன்ற சிறுவர்களைத் திருமணம் செய்ய கட்டாயப்படுத்தினால் அனைத்தும் சர்வநாசம்!**" என்றார் பாபா.

1929, ஜூன் 25ஆம் நாள், டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகையில் வெளியான தலையங்கத்தைப் பற்றிப் பேச்சு எழும்பியது. 'வேல்ஸ்' நாட்டின் 'திருமணமாகாத இளவரசர்' எட்வர்டு, எட்டாவது அரசராகப் பதவி ஏற்றார். இதற்கு முன்பு பாபா, அந்த இளவரசர் நல்ல இதயம் படைத்தவர் என்று குறிப்பிட்டார் (அவர் தனது முந்தைய பிறவியில் ஓர் இந்தியராக இருந்தார் என்பதையும் பாபா வெளிப்படுத்தினார்). அன்றைய தினம், பாபா அவரைப் பற்றி மேலும் சில பாராட்டுக்களைத் தெரிவித்தார்: "**அவர், அவருடைய பதவி மற்றும் சூழ்நிலைகளுக்கேற்ப ஒரு நல்ல பண்புள்ள மனிதர். அவருக்கு என்னுடன் கடந்தகால தொடர்பு உள்ளது, அவர் என்னிடம் வருவார்.**" அதைக்கேட்டு மண்டலி 'அது எப்போது நடக்கும்?' என்று அமைதியாக யோசிக்க மட்டுமே முடிந்தது.

பாபா தொடர்ந்து, " **சிவாஜி, நெப்போலியன் போன்ற வீரர்களை நான் விரும்புகிறேன்; அவர்கள் ஒருபோதும் கோழைகளாக இருந்ததில்லை. நெப்போலியன் கடைசிவரை தைரியமாக இருந்தார். அலெக்ஸாண்டர், அக்பர் இரண்டு மன்னர்களும் துணிச்சலும் தைரியமும் படைத்தவர்கள்; ஆனால், சிவாஜியைப்போல் அவ்வளவு தைரியசாலி அல்ல. போர்க்களத்தில் நிலைமை நம்பிக்கையற்றதாக இருந்தபோதும், இந்தத் தலைவர்கள் தைரியமிழந்து ஓடி மறையவில்லை. அது மிகவும் நல்லது. அதைத்தான் துணிச்சல் என்பது. ஒருவர் கடைசிவரை போராடவேண்டும்; 'செய்யவேண்டும் அல்லது செத்து மடியவேண்டும்'**" என்று கூறினார்.



சகன் விஷ்ணு



டாக்டர் நீலு



மஸ்த் மஸ்தானுடன் மெஹர் பாபா, ஜூன் **1929**




**காஷ்மீர் பயணம்**

மெஹராபாத் (MEHERABAD), நாசிக் (NASIK), துலியா (DHULIA), இந்தூர் (INDORE), போபால் (BOPAL), குவாலியர் (GWALIOR), டெல்லி (DELHI), லுதியானா (LUDHIANA), லாஹூர் (LAHORE), ராவல்பிண்டி (RAWALPINDI), ஸ்ரீநகர் - SRINAGAR (டால் லேக் - DAL LAKE, ஹர்வன் - HARVAN, ஷாலிமார் - SHALIMAR, நிஷாத் - NISHAT), இஸ்லாமாபாத் (ISLAMABAD), உதம்பூர் (UDAMPUR), ஜம்மு (JAMMU), வஸிராபாத் (WAZIRABAD), லாஹூர், லுதியானா, டெல்லி, ஆக்ரா (AGRA), குவாலியர், போபால், இந்தூர், துலியா, நாசிக், ராஹூரி, மெஹராபாத்.

# காஷ்மீர் பயணம்

**(Kashmir Trip)**

1929, ஜூலை 1ஆம் நாளிலிருந்து பாபா, அவரது எதிர்கால திட்டங்களில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கினார். ஆஷ்ரமங்களை மூடிவிட்டு, காஷ்மீர் செல்ல இருப்பதாகத் தெரிவித்தார். ஜூலை 9ஆம் நாளிலிருந்து சிறுவர்களின் ஆஷ்ரமம் தற்காலிகமாக மூடப்பட்டது.

ஜூலை முதல் வாரத்தில், எதிர்வரும் பயணத்தின் விபரங்களைத் தீர்வு செய்தார். இம்முறை பாபா பேருந்தில் பயணிக்க விரும்பி, பயணத்திற்காக ஒரு சிறப்பு பேருந்து தயார் செய்யுமாறு பாதிரிக்கு உத்தரவிட்டார். ஒரு டன் எடையுள்ள 'ஷெவர்லெட்' சேஸிஸ் மற்றும் இதர ஏற்பாடுகளைச் செய்ய ஜூலை 2ஆம் நாள் பாதிரி, சாஞ்சியுடன் மும்பைக்குச் சென்றார்.

மெஹர் பாபா, அவருடன் காஷ்மீர் பயணம் செய்பவர்களின் பெயர்களைத் தீர்மானித்து, அவரவர் கடமைகளையும் தெளிவுபட எடுத்துரைத்தார். அலி அக்பர், ஆகா அலி இருவரும் பாபாவின் இருக்கைக்குப்பின் அமர்வதோடு, ராவ்ஸாஹேபிடம் மட்டுமே பேசவேண்டும். மண்டலியும், சிறுவர்களும் ஒருவரையொருவர் பார்க்கவோ, அல்லது அவர்களிடையே பேசவோ கூடாது என பாபா கட்டளையிட்டார். பாதிரி வண்டி ஓட்டுநர்; புவாஸாஹேப் பயணத்திற்குத் தேவையான பொருட்களின் மேலாளர்; ராம்ஜூ பயண கண்காணிப்பாளர்; மேலும் விஷ்ணு, பாதிரிக்கு உதவியாளராகவும், சாஞ்சி கடிதப் போக்குவரத்துகளையும் கையாளவேண்டும்; சமையல் பொறுப்பு சகனுக்கு வழங்கப்பட்டது; ஆகா அலி, அலி அக்பர் இருவரும் ராவ்ஸாஹேபின் கண்காணிப்பில் இருந்தனர். குஸ்தாஜி, சோட்டா பாபா இருவரும் பாதிரிக்கு அருகில் முன் இருக்கையில் அமரவேண்டும். ஒவ்வொருவரும் அவரவர் படுக்கை சுமைகளோடு நான்கு ஜோடி உடைகளும் உடன் எடுத்துக் கொள்ளவேண்டும். ஜூலை 9ஆம் நாள் புறப்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்தன.

மெஹராபாத்திலிருந்து ஜூலை 10ஆம் நாள், காலை நான்கு மணிக்கு பாபா மண்டலியுடன் காரில் புறப்பட்டார். மெஹர் பாபா மௌனம் ஆரம்பித்து இன்றோடு நான்கு ஆண்டுகள் நிறைவடைகின்றன, ஆனால், பாபா அதை சாதாரணமாக எடுத்துக்கொண்டார். அக்பர் அச்சகத்தில் சிறிது நேரம் இருந்துவிட்டு நாசிக் நகரை 10 மணியளவில் சென்றடைந்தனர். பாபா, பெண் மண்டலியை சந்தித்த பின்னர், அவர்களுடன் பாண்டு லேனா குகைகளுக்குச் சென்றார். திரும்பி வந்ததும் காஷ்மீர் பயணத்தைப் பற்றி பாபா பெண் மண்டலிக்குத் தெரியப்படுத்தினார்.

பாபாவும் மண்டலியும் அன்றிரவு **துலியா** புறப்பட்டுச் சென்றனர். துலியாவில் காளேமாமா நகராட்சி பொறியியலாளராக ஒரு முக்கியமான

பதவியை வகித்தார். அவர் பாபாவை வரவேற்க, வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்திருந்தார். பாபா வந்து சேர்ந்ததும் அனைவரும் 'சத்குரு மெஹர் பாபாவிற்கு ஜே' என்று குரலெழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். பாபாவிற்கு ஏராளமான மலர் மாலைகள் அணிவித்து, மகிழ்ச்சியோடு காளேமாமா, பாபாவை அவர் இல்லத்திற்கு வரவேற்றார்.

மெஹர் பாபா இக்காலத்தின் அவதார புருஷர் என்பதை மறைமுகமாகத் தெரிவித்திருந்தாலும், பலர் அவரை இன்னும் ஒரு சத்குருவாகவே பார்த்தார்கள். பாபா அவருடைய உண்மை நிலையைப் பற்றி நேரடியாகக் குறிப்பிடாமல் அல்லது பொது அறிவிப்பு மூலம் பிரகடனம் செய்யாததால், மக்கள் அவரை சத்குரு மெஹர் பாபா அல்லது ஸ்ரீ மெஹர் பாபா என்றே அழைத்து வந்தனர்.

துலியாவில் பாபாவை சந்திக்க வந்த அனைவருக்கும் தரிசனம் மட்டுமின்றி, அருகிலிருந்த சில இல்லங்களுக்கு விஜயம் செய்து, அருமையான ஆன்மீக சொற்பொழிவுகளையும் வழங்கினார். முதலாவதாக, பேரின்பத்தைப் பற்றி விளக்கமளித்தார்:

**உண்மையாகச் சொல்வதானால், முழுப் பிரபஞ்சத்திலும், அனைத்து இடங்களிலும் பேரின்பம் மட்டுமே உள்ளது. எங்கும் ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தம்! ஆனால், அறியாத, ஏழை மனிதகுலம் அதை அனுபவிக்க முடியாது, ஏனெனில், மனிதனுக்கு அதை எப்படி அனுபவிப்பது என்று தெரியாது. பிரபஞ்சம் முழுவதும் அளவிறுதியில்லா ஆனந்தத்தால் நிரம்பி வழிகிறது, ஆனால், மானிடன் அதை முற்றிலும் புறக்கணித்து, செல்வம், செல்வாக்கு, உடைமைகள், பெயர், புகழ் எனும் நிலையற்ற இன்பத்தின் பின்னால் ஓடி அலைகிறான். இவை அனைத்தும் மாயை, போலியானது, பொய்யின் மொத்த உருவமாகத் திகழ்வது! இது உண்மையின் அறியாமையினால் நிகழ்வது! பொய்யான ஒன்றைத் தவிர்ப்பதன் மூலம், ஒருவர் உண்மையான மகிழ்ச்சியைப் பெற முயற்சிக்க வேண்டும்.**

**ஆனந்தத்தின் மொத்த உருவம் நானே! நீங்கள் பார்க்கும் இந்த ஐந்து-அடி ஆறு-அங்குல உடல் வடிவம் உண்மையானது அல்ல! எனது உண்மை ரூபத்தை நீங்கள் பார்ப்பதானால், நீங்கள் நீங்களாக இருக்க மாட்டீர்கள். வரையறுக்கப்பட்ட மனித மனதிற்கு எல்லையில்லா அறிவு, சக்தி, ஆனந்தம் இவற்றைப் பற்றிய ஒரு குறுகிய அளவிலான கருத்து கூட கிடையாது. இந்த நிலை மனதின் எல்லைக்கு அப்பாற்பட்டது. இதைத்தான் நிர்விகல்ப நிலை (நான் கடவுள்) என்பது. இதுதான் பரமாத்மா அல்லது இறைவனின் எல்லையில்லா ஆனந்த நிலை!**

**ஒவ்வொருவரும் இந்த இறைநிலையை அடைய விதிக்கப்பட்டவர்கள், எனவே அந்த இறுதி நிலையை நோக்கி முயற்சிப்பது, ஒவ்வொருவரின் கடமையாகும். சிலர் இறைநிலையை இன்று அடையலாம்; இன்றில்லாவிடில் நாளை. சிலர் பல வருடங்களுக்குப்**

**பின்னர்; இன்னும் சிலர் பல பிறவிகளுக்குப் பின்னர். எந்நேரத்திலாவது இந்த மேன்மையான இறைநிலையை ஒருவர் அடைவது உறுதி.**

பேரின்பத்தைப் பற்றிய சொற்பொழிவைத் தொடர்ந்து, சமூக சேவையில் ஈடுபடுவதைப் பற்றி ஒரு விவாதம் நடைபெற்றது. அப்போது மெஹர் பாபா கீழ்வரும் கருத்துகளைத் தெரிவித்தார்:

**தேசம் மற்றும் அதில் வாழும் மக்களின் சேவைகளில் நீங்கள் ஈடுபட்டிருப்பது ஒரு வகையில் நல்லது. ஆனால், கர்மயோகா வழியாக முழு ஆனந்தத்தையும் அடைய, உறுதியான வழிமுறை ஒன்றே ஒன்று உள்ளது. அது, சேவை செய்யும் வேளையில் 'நான் சேவை செய்கிறேன்.. நான் இந்த வேலையைச் செய்கிறேன்..' என்ற எண்ணமோ, உணர்வோ சிறிதளவும் இருக்கக்கூடாது. உண்மையான சேவைக்கு, சுயநலமின்மை இன்றியமையாதது; அதில் சிறிதளவுகூட "நான்.." "நானே.." "நான் இதைச் செய்கிறேன்" என்ற எண்ணத்திற்கு இடமே இருக்கக் கூடாது. ஏனெனில், இத்தகைய சுயநலம் சார்ந்த சிந்தனைகள் கர்வத்தை உருவாக்கும்; இது மிகவும் அடர்த்தியான மற்றும் ஆழமான மனப்படிவங்களுக்கு வழிவகுக்கும், மேலும் இவற்றை அழிப்பது என்பது அனைத்திலும் கடினமான காரியம்.**

**உலகம் முழுவதும் மக்கள் ஏதாவது ஒரு சேவையில் ஈடுபடுகிறார்கள். சிலர் அவர்களுடைய சமுதாயம் அல்லது பிறந்த தேசத்திற்கு சேவை புரிகிறார்கள். ஆனால், அவர்களின் சேவையில் அகங்கார சுயமரியாதை மற்றும் சுயநலத்தின் அளவு மிகுதியானதாக இருக்கும். சிலர் செய்தித்தாள்களில் அவர்களின் பெயர் வரவேண்டும், சிலர் அவர்களை பலரும் உயர்ந்தவர்களாகப் பார்க்கவேண்டும், சிலர் முக்கியத்துவம் அடைந்து மக்களின் கைதட்டல்களை பெறவேண்டும், இன்னும் சிலர் பிறரின் பார்வையில் நல்லவராகவும், ஒழுக்கமிக்கவராகவும் தோன்ற வேண்டும் என்ற எண்ணத்தில் சேவைகளில் ஈடுபடுவார்கள். இப்படி ஒவ்வொருவரும் சுயநல லட்சியம் அல்லது பெருமையின் வெளிப்புற நோக்கத்துடன் செயல்படுவதை, சேவை என்று ஒருபோதும் கூறமுடியாது. அப்படிப்பட்ட சேவை அனைத்தும் பயனற்றது, மதிப்பற்றது, முற்றிலும் அர்த்தமற்றது.**

**உண்மையான கர்மயோகிகளாக இருங்கள்! சேவை செய்யுங்கள், ஆனால், முற்றிலும் தன்னலமற்ற சேவையாக இருக்கட்டும்; "நான்.." "என்..." என்பதைக் கையளவு நீளத்தில் வைத்துக்கொள்ளுங்கள்; கடவுளின் பெயரில் சேவை செய்யுங்கள்.**

ஒரு பக்தர் பாபாவிடம், 'பக்தி யோகா'வைப் பற்றி விளக்கும்படி வேண்டினார். பாபாவின் விளக்கம் பின்வருமாறு:

**ஆன்மீகப் பாதையில் சுலபமாக முன்னேறி, இறுதியில் நித்திய ஆனந்தத்தை அடைய வழிவகுப்பது பக்தி யோகா. இது கர்ம யோகாவுடன் ஒப்பிடும் வேளையில் மிகவும் எளிதான வழி; ஆனால், அதற்கு நிலையான உறுதிப்பாடு தேவை. கடவுளை அடையும் ஒரே உறுதியான தீர்மானம் இருக்க வேண்டும், மேலும் அந்த நிலையான உறுதியுடன் காட்டப்படும் பக்தி பலனளிக்கும். சுயநல நோக்கத்துடன் கூக்குரலிடுவதன் மூலம் பக்தியைப் பெறமுடியாது: "கடவுளே, எனக்கு மனைவியைக் கொடு, மகனைக் கொடு, செல்வத்தைக் கொடு, அனைத்து கௌரவங்களும் என்னை வந்து சேரவிடு!" இத்தகைய 'பக்தி' சுவையற்று வெறுமையாக இருக்கும்.**

**பக்தி, கடவுளைக் காணும், கடவுளோடு ஒன்றிணையும் ஏக்கத்தில் செலுத்தப்பட வேண்டும்; பக்தி இவ்வாறு ஒரு நிலைபடுத்தப்பட்ட பக்தனின் மனதோடு ஒன்றிவிடும் வேளையில், சுற்றுப்புற சூழ்நிலைகள், சொந்தபந்தங்கள் மற்றும் உலகத்தைப் பற்றிய எந்த சிந்தனையும் இல்லாமலாகிவிடும்.**

**பக்தி என்பது நாளெல்லாம் புனித நூல்களை வாசிப்பது அல்லது இறை நாமத்தை மணிக்கணக்கில் உச்சரிப்பதும் அல்ல. இதை பக்தி என்று கூறமுடியாது; இது ஏமாற்றமளிக்கும் ஒரு நிகழ்ச்சி. இதயம் கடவுளோடு ஒன்றிவிட வேண்டும். இப்படி ஐந்து நிமிடங்கள் வேறு சிந்தனைகள் எதுவுமில்லாமல் கடவுளோடு ஒன்றினால் கூட போதும், அதுவே உண்மையான பக்தியாக அமையும். இத்தகைய நேர்மையான பக்தி, கடவுளை நேசிக்கும் தாகத்தை உருவாக்கி, அவனைச் சென்றடைய வழிவகுக்கும். நீங்கள் எவ்வளவு ஆழமாக கவனம் செலுத்துகிறீர்களோ, அவ்வளவு தீவிரமாக உங்கள் பக்தியும், விரைவான பலனும் இருக்கும்.**

**ஒரு பக்தனைப் பொறுத்தவரையில் தனிமையும், பாகுபாடும், குறிப்பாக, பக்தி யோகாவுக்கு முக்கியம்; நாளடைவில் அது தானாகவே வந்துசேரும். மனமானது பக்தியில் அதிகமாக ஆழ்ந்திருக்கும்போது, உலகம் மற்றும் அதன் விவகாரங்களிலிருந்து அதிக அளவில் விலகியிருக்கும். கர்ம யோகாவில், இதற்கு மாறாக, மனம் உலக தொடர்பில் இருக்கும்.**

மெஹர் பாபாவிடம் அங்கு வந்தவர்களில் ஒருவர், "தியானம் செய்யும் வேளையில் எந்தக் கடவுளின் பெயரை நினைவில் கொள்ள வேண்டும்? சிலர் ராம் என்கிறார்கள், சிலர் கிருஷ்ணா என்றும் இன்னும் சிலர் கடவுளின் பெயராகிய 'பரமாத்மா' அல்லது 'ஈஷ்வர்' எனும் பெயரை உச்சரிக்கவும் பரிந்துரைக்கின்றனர். எது அனைத்திலும் சிறந்தது?" என்று கேட்டதற்கு, பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

**ஏதேனும் ஒரு பெயரை மனதில் கொள்ளுங்கள் - ராம், கிருஷ்ணா, ஜீஸஸ், முஹமது, புத்தா அல்லது கடவுள். ஆனால், கடவுள் பெயரை எப்படி நினைவில் கொள்ளப் போகிறீர்கள் என்பதுதான் முக்கியம். ராம், கிருஷ்ணா**

**அல்லது வேறு ஏதேனும் தீர்க்கதரிசியின் பெயரை நினைப்பதானால் அவருடைய உருவத்தை மனக்கண்களின் முன்னால் கொண்டு வர முடியும் - ஆனால், கடவுள் எனும்போது என்ன செய்வீர்கள்? கடவுளின் பெயரை மட்டும் நினைப்பதில் அர்த்தமில்லை. கடவுளை மனக்கண்கள் முன்னால் நிறுத்தி, ஒருநிலைப்பட்ட பக்தியுடன் செய்யவேண்டும். ஏதேனும் அவதார புருஷன் அல்லது சத்குருவின் உருவமைப்பு உங்கள் மனத்திரையில் இருக்க வேண்டியது அவசியம்.**

**அலைந்து திரியும் மனதுடன், 'ராம், ராம், ராம்' என்று கிளிப்பிள்ளை போல, பன்னிரெண்டு வருடங்கள் தொடர்ந்து உச்சரிப்பதில் எந்த பலனுமில்லை. உங்கள் குருநாதரின் சித்திரத்தைக் கண்கள்முன் வைத்துக் கொள்ளுங்கள், அதுவே சிறந்தது.**

ஒரு பக்தன் பாபாவிடம், "மனதை ஒருநிலைப்படுத்த நான் மிகவும் சிரமப்படுகிறேன். என்னை ஆசீர்வதித்து உதவுங்கள்!" என்று வேண்டினான்.

"**அதை நான் பார்த்துக் கொள்கிறேன்**" பாபா உறுதியளித்தார். **"தியானத்தில் அமரும்போது என்னை நினைவில் கொள்ளுங்கள். என் உருவத்தை உங்கள் கண்களின் முன்னால் வைத்துக்கொள்ளுங்கள். இதை மட்டும் நீங்கள் செய்வதானால், எஞ்சியதை நான் பார்த்துக்கொள்வேன்"** என்றும் கூறினார்.

பல சமய நூல்களைக் கற்றுத் தேர்ந்த ஒருவர், ஆன்மீகத்தில் மிக்க ஆர்வமுள்ளவர், மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக துலியா வந்திருந்தார். புத்தகங்களைப் படிப்பதில் அவருக்கு அவ்வளவு திருப்தியில்லை; அவர் உலகைத் துறக்க விரும்பினார்; ஆனால், காம உணர்வுகள் அவரைச் சித்திரவதை செய்ததை எடுத்துக்கூறி, பாபாவின் ஆசிகளை வேண்டினார். பாபா அதற்கு இவ்வாறு விளக்கமளித்தார்:

**துறவறம் என்பது ஆன்மீகப் பாதையின் படிக்கல். துறவு பிறப்பெடுக்கும் தருவாயில், யாத்திரிகர் ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைக்கிறார். அத்தகைய துறவு மிகவும் கடினமானது; அவ்வளவு எளிதல்ல. காரணம், அனைத்து இடையூறுகளின் வேராகத் திகழும் மனம், அதிவேகத்தில் செயல்படுவது நிறுத்தப்பட வேண்டும்.**

**மனம் அழிவை சந்திக்கும்போது மட்டும்தான், உலகப்பொருட்களின் மீதுள்ள பற்றுதல் அகலும். ஆனால், மனதை நிறுத்துவது அல்லது அழிப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. இது இமயமலையைத் தலையில் தாங்கிச் செல்வதைவிடக் கடினமானது!**

**மனதின் துன்பங்கள் அகல வேண்டும்; அப்போதுதான் முழுமையான துறவு உருவாகும். இந்த மனதின் சாபத்திலிருந்து விடுபட, உங்களை மறந்துவிடும் அளவுக்கு, தெய்வீகத்திற்கான ஏக்கத்தை நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.**

**துறவறம் மேற்கொள்வது என்பது தன்னைத் தானே இழப்பது. உங்களின் சிந்தனை, சொல், செயல் ஒவ்வொன்றிலும் அன்பிற்குரியவரை அரவணைத்து, தாழ்வு மனப்பான்மையை விட்டொழிந்தால் மட்டுமே, நீங்கள் உங்களை இழக்க முடியும்.**

மெஹர் பாபாவின் மண்டலி தங்கியிருந்த இடத்தையொட்டி, ஒரு பிராமண பூசாரி வாழ்ந்து வந்தார். தினமும் அதிகாலையில் எழுந்து, இந்து சாஸ்திர ஸ்லோகங்களை உரத்த குரலில் எடுத்துரைப்பதை வழக்கமாகக் கொண்டார். ஜூலை 14ஆம் நாள், பாபா முன்னிலையில் மண்டலி இதை ஒரு பிரச்சினையாக முன்வைத்தபோது, அவர் இவ்வாறு விளக்கமளித்தார்:

**உலகில் எல்லா இடங்களிலும், பிரார்த்தனை மற்றும் வழிபாட்டின் பெயரில், இந்த வகையான பயனற்ற புலம்பல் நடந்து கொண்டிருக்கிறது. இதன் மூலம் எவரும் எதுவும் அடையப் போவதில்லை; ஆகமொத்தத்தில் இதில் எந்த அர்த்தமும் இல்லை. இதுபோன்ற உரத்த குரல்கள் எவ்விதமான முடிவுகளைத் தரும் என்று அவர்கள் ஒரு நிமிடமாவது நினைத்துப் பார்க்கிறார்களா? பல்லாண்டு காலமாக இது நடந்து கொண்டிருக்கிறது; இன்னும் பல்லாண்டுகள் இப்படி நடந்து கொண்டுதான் இருக்கும். காலங்காலமாக, இந்த பிராமணர்கள், மோல்விக்கள், தஸ்தூர்கள் மற்றும் பாதிரிகள் இவ்வாறு உளறிக் கொண்டிருக்கிறார்கள்; அதற்காக உண்மையில் அவர்கள் ஊதியமும் பெறுகிறார்கள்! ஆனால், இதனால் ஒரு சிறிய அளவு நன்மையைக்கூட எவரும் அடைவதில்லை.**

**இதன் காரணம் என்னவென்றால், அவர்களில் எவரும் அதை நேர்மையாக அல்லது முழுமனதுடன் செய்வதில்லை. அவர்களின் பிரார்த்தனைகள் குரல்வளைகளின் பயனற்ற உளறல்களே தவிர வேறொன்றுமில்லை, அதில் சிறிதளவுகூட இதய உணர்வுகளின் அம்சம் இருக்காது. அவர்களின் அறிவு, கவனம், சிந்தனைகள் அனைத்தும் அங்குமிங்கும் அலைந்து திரியும்; மேலும் இந்த உயிரற்ற 'மம்போ ஜம்போ' தொடர்கிறது. இது தெளிவான மனதுடனும், முழு நேர்மையுடனும் செய்யப்பட்டால், ஒருவரின் பிரார்த்தனைகள் நேரடியாக இறைவனை சென்றடையும். கடவுள் நேர்மையையும் வெளிப்படையான இதயத்தையும் மட்டுமே விரும்புகிறார் - அர்த்தமற்ற உரையாடலின் வெளிப்புற நிகழ்ச்சியை அல்ல!**

**உலகின் எந்த மூலை முடுக்குகளிலிருந்தும், ஒருவர் கடவுளை ஆழ் இதயத்திலிருந்து நினைப்பதானால் - அவர் மிகமோசமான பாவியாக, எதற்குமே ஆகாதவராக மற்றும் தாழ்த்தப்பட்டவர் ஆனாலும் கூட - அது உடனடியாக, கடவுளின் காதுகளை வந்தடையும். அந்த பிராமண பூசாரி, இவ்வளவு அருகில் இருந்தும், அவருடைய கோஷத்தைப் பொறுத்தவரையில் நான் செவிடனாகவே இருக்கிறேன், நான் அதைக் கேட்கமுடியாது ஏனெனில் அது என்னைத் தொடுவதில்லை. அது எனக்கு**

எந்த விளைவையும் ஏற்படுத்தாது. மாறாக, எவரேனும் என்னை மட்டும் நேர்மையுடன் பிரார்த்தனை செய்தால் - அவர் எவ்வளவு தூரத்திலிருந்தாலும், மேலும் அவர் குரல் மெதுவாகவோ அல்லது மென்மையாகவோ இருந்தாலும் - நான் உடனடியாக அதைக் கேட்பது மட்டுமின்றி, என்னுடன் ஒரு தொடர்பும் உருவாக்கப்படுகிறது.

உதாரணமாக, நீண்டதூர தொலைபேசி நிலையத்தை எடுத்துக்கொள்வோம். அனைத்து தொலைபேசிகளும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன, மேலும் வேண்டிய தொலைபேசித் தொடர்பை இதன் மூலம் எண்முகப்படுத்திப் பெறமுடியும். அதுபோல, சத்குரு மனித குலத்தின் பிரதான மையமாகத் திகழ்கிறார்; மேலும் ஒருவர் அவரை நேர்மையாகவும், முழுமனதுடனும் நினைக்கும் வேளையில் - எவ்வளவுதான் தூரத்திலிருந்தாலும் - அவரது குரல், சத்குருவின் காதுகளை எட்டி உடனடியாகத் தொடர்பை ஏற்படுத்தும். இங்கு, தூரத்தைப் பற்றிய கேள்விக்கு இடமேயில்லை. சத்குரு அனைத்திற்கும் நடுவே, படைப்பில், அனைவரிடமிருந்தும் சமதூரத்தில் இருக்கிறார். இவ்வாறு சத்குரு மையப்புள்ளியாக இருந்து இவ்வுலகம் மற்றும் பிரபஞ்சத்திற்கு மட்டுமின்றி மூவுலகங்களையும் - மேலுலகம், பூமி, கீழுலகம் - ஆட்சி புரிகிறார்.

ஆனால், எல்லா பிரார்த்தனைகளையும் ஒரே நேரத்தில் கேட்பது எப்படி சாத்தியமாகும்? கோடானகோடி மக்களின் பிரார்த்தனைகள் மற்றும் அழைப்புகள் சத்குருவுடன் உடனடி தொடர்பை எப்படிக் கொண்டுவரும்? இதன் விடை மிகவும் எளிதானது. சத்குரு என்றால் யார்? வரம்பற்ற சக்திகளின் ஆட்சியாளர்! அவருக்கு ஒன்று அல்லது இருபத்தொன்று, ஓராயிரம் அல்லது ஒரு லட்சம் மேலும் பத்து லட்சம் அல்லது பல்லாயிரம் லட்சம் என்ற கேள்விக்கு இடமேயில்லை. அவர் கண்களில் அனைவரும் சமம். ஆனால், உங்களின் அழைப்பு உங்கள் ஆழ் இதயத்திலிருந்து வரவேண்டும். அப்போது அது அவருடைய செவிகளை, 'தூரம்' அல்லது 'வழியில் போக்குவரத்து நெரிசல்' எதையும் பொருட்படுத்தாமல் சென்றடையும்.

பிரார்த்தனைகள் மற்றும் நாவின் அரவங்கள் அனைத்தும் இதயத்திலிருந்து தோன்றாவிட்டால் அவை வெறும் வெளித்தோற்றமே! இல்லையேல், அத்தகைய பிரார்த்தனைகள், எவ்வளவுதான் முழக்கமாக, நீளமாக இருந்தாலும், அனைத்தும் முற்றிலும் அர்த்தமற்றதாகிவிடும். இதோடு ஒப்பிடுகையில், பிராமணர்கள், தஸ்தூர்கள், பாதிரிகள் மூலமாகக் கூலிகொடுத்து வழங்கப்படும் பிரார்த்தனைகள் படுமோசமானவை.

கூட்டத்தில் ஒருவர் பாபாவிடம் இவ்வாறு வினவினார்: "ஒருவருக்கு, பிரார்த்தனை செய்ய நேரமில்லாதபோது, இத்தகைய நடுத்தரக்காரர்கள் மூலம் பக்தி உணர்வோடு செய்வதானால் அது நல்லது இல்லையா?"

பதிலாக பாபா இவ்வாறு விளக்கினார்: **இது மொத்த முட்டாள்தனம் மற்றும் முற்றிலும் அபத்தமானது. இது ஒன்றைத் தவிர்க்கும் நோக்கத்தில்**

**அளிக்கப்படும் பயனற்ற சாக்குப்போக்காகும். இவ்வாறு பரிந்துரைப்பது வலுவான அல்லது தர்க்கரீதியான கருத்தாகாது. இது ஒருவரின் பொது அறிவை அவமதிப்பதாகும். பிரார்த்தனை, வழிபாடு அல்லது வேண்டுதல்கள் இவை அனைத்தும் கூலிக்காரர்களால் செய்யமுடியுமா? இது ஒருவனின் கற்பனைக்கும் அப்பாற்பட்டது. மாய வலையில் சிக்கிக் கொண்டிருக்கும் வேளையில், ஒருவரின் செயல்களின் சுமையை பிறரின் தோள்களில் வைத்து, கடவுளிடம் எடுத்துச் செல்ல அவர்களுக்குக் கூலி கொடுப்பது போலாகும். மாய இன்பங்களில் மூழ்கியிருக்கும் போது, ஒருவரைக் காட்டிக்கொள்ளாமல் இருக்கச் செய்யும் பாசாங்குத்தனம் ஆகும்.**

**ஒருவர் சொல்கிறார், "எனக்குப் பிரார்த்தனை செய்ய நேரமில்லை." என்று! ஏன் இல்லை? ஏனெனில், அதற்காக நேரத்தைச் செலவிட அவர் விரும்பவில்லை. மாயையில் மேலும் மேலும் ஈடுபடும் நாட்டங்களால், உலகத்துடனான அவர்களின் ஆர்வத்தையும், நேரமின்மையையும் மூடிமறைக்க இது ஒரு அர்த்தமற்ற சாக்குப்போக்காகும்.**

**மாயையில் சிக்கியுள்ள மனம், அதை விடுவிக்க விரும்பவில்லை; எனவே யோக்கியனாக தோன்றும் எண்ணத்தில் கூலிகொடுத்துப் பிரார்த்தனை செய்கிறான். இது எப்போதாவது எந்தவொரு சிறப்பான செயலுக்கும், நல்லொழுக்கத்திற்கும் காரணமாக இருக்க முடியுமா?**

**நீங்கள் கடவுளை நினைத்து வழிபட விரும்பினால், இதயபூர்வமான உணர்வுகளுடன் நேர்மையாகவும், விசுவாசமாகவும் செய்யுங்கள். ஒவ்வொரு நாளும் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே கடவுளை நினைத்துப் பிரார்த்தனை செய்ய முடியுமானாலும், நேர்மையுடன் செய்யுங்கள். பல மணி நேரம் அர்த்தமில்லாமல் தொணதொணப்பதைவிட, இரண்டு மூன்று நிமிட நேர நேர்மையான பிரார்த்தனை நற்பயனை விளைவிக்கும். இது உடனடியாகக் கடவுளின் செவிகளைச் சென்றடையும். காரணம், கடவுள் எப்போதும் இதயத்தின் குரலைக் கேட்கிறார்.**

துலியாவில் வாழும் காளேமாமா குடும்பத்தினர், மெஹர் பாபா மற்றும் மண்டலியை மிகுந்த அக்கறையுடன் கவனித்துக் கொண்டனர். முழு குடும்பமும் பாபாவின் அன்பில் உள்வாங்கப்பட்டு, அனைவரும் தங்கள் வாழ்க்கையை அவருக்காக அர்ப்பணித்தனர். காளேமாமாவின் புதல்வர்கள் பாபு, முரளி இருவரும் பாபாவுடன் மெஹராபாத்தில் வாழ்ந்து வந்தனர். பாபு மண்டலியில் ஒருவராக அங்கே வாழும் ஆர்வத்தில் இருந்தார்.

ஜூலை 15ஆம் நாள் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்தில் அனைவரும் இந்தூர் நகரை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தனர். துலியாவில் பலர் கண்களில் நீர் ததும்ப பாபாவிற்கு விடையளித்தனர்.

உடன் சென்ற 12 நபர்களுக்கும் பாபாவின் அறிவுறுத்தல்கள்படி, இருக்கைகளில் குறிப்பிட்ட இடம் ஒதுக்கப்பட்டது; பாபா இவ்விஷயத்தில் மிகவும் கண்டிப்பாக இருந்தார். மேலும் பாபா, மண்டலியை 24 மணிநேரம் லங்கோட்டி மட்டுமே அணிய கட்டளையிட்டார். ஜூலை 16ஆம் நாள் இந்தூர் வந்தடைந்து அரசாங்க பங்களாவில் ஓய்வெடுத்து, மறுநாள் போபால் வந்து சேர்ந்தனர்.

பாபா, புவாஸாஹேபிடம், **"காஷ்மீரி மொழியை விரைவில் கற்றுக்கொள்ளுங்கள், நான் அங்கே சில நாட்கள் ஏகாந்தவாசம் மேற்கொள்ள வேண்டும்"** என்று குறிப்பிட்டார்.

ஜூலை 18ஆம் நாள் 'குணா' வந்து சேர்ந்ததும், சகன் தேநீர் மற்றும் இரவு உணவைத் தயார் செய்தார்.

இதற்கிடையில் பாபா, ஆகா அலி, அலி அக்பர் மற்றும் ராவ்ஸாஹேபுடன் நடக்கச் சென்றார். வழியில், முற்றிலும் வித்தியாசமான தோற்றத்தில் ஒருவர், அரை நிர்வாணமாக, வெறும் லங்கோட்டி அணிந்துகொண்டு, நேரடியாக மெஹர் பாபாவை அணுகி, அமைதியாக அடிபணிந்து வணங்கி, பூ ஒன்றை பாபாவிற்கு அளித்தார். அவர் ஏதோ "என் உயர் அதிகாரியை சந்திக்க வந்துள்ளேன்" என்று தெளிவில்லாமல் முணுமுணுத்ததை, சாஞ்சி அவரது புத்தகத்தில் குறித்துக் கொண்டார். அதற்குப் பிறகு, மர்மமான முறையில், அவர் அங்கிருந்து விலகிச் சென்றார்.

அன்று மாலை 7.30 மணிக்கு பாபா, மண்டலியை சமையலறையில் அழைத்து, அங்கு வந்தவர், அந்த இடத்தின் ஆன்மீகப் பொறுப்பாளர் என்பதை விளக்கினார்.

**இந்தப் பயணத்தில் என்னுடைய உண்மையான பணி இன்று ஆரம்பமாகிறது. என்னுடைய அனைத்து நடவடிக்கைகளும், இத்தகைய பயணங்களும், குறிப்பாக, சில முக்கியத்துவங்களால் நிறைந்தவை என்பதை நீங்கள் அறிவீர்கள். இதை, ஒரு மாமன்னன் அவரது மாகாணங்களில், வெவ்வேறு இடங்களில் அவர் திட்டப்படி அனைத்தும் நடக்கின்றனவா என்று ஆய்வு சுற்றுப்பயணம் செய்வதோடு ஒப்பிடலாம்.**

**இன்று மாலை நான் நடந்து செல்லும் வேளையில், இவ்விடத்தின் பொறுப்பாளராக இருக்கும் ஒருவர் வந்து, அவருடைய பொறுப்பை என்னிடம் ஒரு விசித்திரமான முறையில் ஒப்படைத்தார். சாதுவைப் போன்ற தோற்றத்தில், லங்கோட்டி மட்டும் அணிந்துகொண்டு, எதிர் திசையிலிருந்து நேரடியாக என்னை நோக்கி வந்தார். என்னைக் கடந்து செல்லும் வேளையில், ஒரு மலரை என்னிடம் கொடுத்து, கரங்களைக் கூப்பி வணங்கி, எங்கிருந்து வந்தாரோ அங்கே திரும்பிச் சென்றார். என்னிடம் வரும்போதும், அல்லது திரும்பிச் செல்லும்போதும், முன், பின், அக்கம் பக்கம் எங்கும் பாராமல், கண்களை நேராக வைத்துக்கொண்டு, எதையும் பொருட்படுத்தாமல் நடந்து சென்றார். அவருடைய கண்கள் ராமகிருஷ்ண பரமஹம்சரின் கண்களைப் போலப் பிரகாசமாக இருந்தன.**

இவரைப் போன்ற மனிதர்கள் என்னைப் பற்றிய உண்மையை அறிவார்கள். மேலும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை அன்பாகவும் மகிழ்ச்சியாகவும் செய்கிறார்கள். இத்தகைய வாழ்க்கை வாழ்வது உன்னதமானது. மாறாக, நூற்றுக்கணக்கில் மக்கள் அவர்களின் நூற்றுக்கும் மேலான உலகப் பிரச்சினைகளுடன் என்னிடம் வருகிறார்கள். அவர்கள் என்னிடம் வருவதில்லை; அவர்களின் ஆயிரக்கணக்கான ஆசைகளுக்கு அடைக்கலம் கொடுத்து, என்னிடமிருந்து 'விலகி' இருக்கிறார்கள்.

இது பார்க்க மிகவும் விசித்திரமாக அமைந்த ஒரு நிகழ்ச்சி, என்னுடன் இருந்தவர்கள் இதை உங்களுக்குக் கூறுவார்கள். இது ஓர் அதிசய காட்சி; அதைவிட ஆச்சரியம் என்னவென்றால், அந்த சாது, அவ்விடத்திலிருந்து மறைந்து சென்ற பின்னர், எங்களைப் பார்த்த இந்து, முஸ்லிம் ஒவ்வொருவரும் கரங்களைக் கூப்பி வணங்கிச் சென்றனர்.

எனவே, எனது பணி இப்போது ஆரம்பமாகிறது; மறுபடியும் நான் உங்களை எச்சரிக்கிறேன், உங்கள் லங்கோட்டிகளை நழுவ விடாமல், அடுத்த 24 மணி நேரத்திற்குக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளுங்கள் - அதாவது, எனது அனைத்து உத்தரவுகளையும் முழுமையாக நிறைவேற்றத் தயாராக இருங்கள். இந்தப் பயணத்தின் இறுதிவரை என்னோடு ஒன்றியிருங்கள், ஏனெனில் என்ன நடக்குமென்று எவருக்கும் தெரியாது! நான் எனது சலன சித்தத்தின்படி பணிபுரிவதை நீங்கள் அறிவீர்கள். நான் கண்டிப்பாகவும் அதேவேளை மென்மையுடனும் இருப்பேன்; யாருக்குத் தெரியும் எனது விருப்பம் என்ன செய்யும் என்று!

இப்போது இந்தப் பயணத்தில், நான் தொடர்ந்து சென்று கொண்டிருப்பேன், எவரேனும் ஏதேனும் காரணத்திற்காக என்னுடன் தொடர்ந்து வரமுடியாத நிலையில் இருந்தால் கூட, எனது பயணம் தொடரும்.

நான் ஏகாந்தவாசத்தில் இருக்க எனக்கு ஒரு மலை அவசியம். அத்தகைய மலையை நாம் காஷ்மீரில் கண்டு கொள்ளமுடியும்; நான் அங்கே, உங்களில் ஓரிருவருடன், புவாஸாஹேப் அல்லது சாஞ்சியுடன் பத்து அல்லது பன்னிரெண்டு நாட்கள் இருப்பேன்.

அப்போது சாஞ்சி, **"ஜீஸஸின் கல்லறையை எங்களுக்குக் காண்பிப்பீர்களா?"** என்று கேட்டார்.

பாபா, 'ஆம்' என்று பதிலளித்து, தொடர்ந்தார்: **ஆமாம், நீங்கள் ஆச்சரியப்படும் அளவுக்கு, காஷ்மீரின் அற்புதமான காட்சிகளைக் காணப் போகிறீர்கள்! முதலில் நாம் அங்குச் செல்வோம். ஏகாந்தவாசத்திலிருந்து வெளியே வந்ததும் நான் உங்களைச் சுடப்போகிறேன்** (பாபா துப்பாக்கியால் சுடுவதுபோல சைகையால் காண்பித்தார். அதன் மூலம் அவர் என்ன வெளிப்படுத்த விரும்பினார் என்பதை மண்டலியால் புரிந்துகொள்ள முடியவில்லை.) **உங்கள் விருப்பத்திற்கும், ஆசைக்கும் எதிராக இருந்தாலுங்**

**கூட, நான் சொல்வதைச் செய்யுங்கள். உணர்ச்சிவசப்படவோ கோபப்படவோ செய்யாதீர்கள். இந்தப் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆகையால், இறுதிவரை என்னுடனிருந்து, எனது கட்டளைப்படித் தவறாமல் செய்து வாருங்கள்.**

ஜூலை 19ஆம் நாள் காலையில், அந்தக் கிராமத்தில் வாழ்ந்த ஒருவர், அதற்கு முந்தைய நாள் பாபா வெளியே நடந்து சென்றதைப் பார்த்தவர், பாபாவின் தரிசனத்திற்காக வந்தார். அவர் அப்பகுதியில் மிகக்குறைவான அளவில் பொழிந்த மழையைப் பற்றி புகார் கூறி, விவசாயிகளின் மோசமான நிலை, கடுமையான நிதி இழப்புகள் மற்றும் பசி, பஞ்சம் குறித்து எடுத்துரைத்தார். அவர் தனது வேண்டுகோளைக் கூறிக்கொண்டிருந்த அவ்வேளையில், கன மழை பெய்யத் தொடங்கியது. மெஹர் பாபா நகைச்சுவையாக, கலை நயத்துடன் கவிதை ஒன்றை பாடினார்:

**உனக்குக் கிடைத்தது நீர்! எனக்குக் கிடைத்ததோ தீர்!**

(தீர் என்றால் அம்பு)

கடுமையான மழை காரணமாக, திட்டமிட்டபடி, குணாவிலிருந்து, நேரத்தில் புறப்பட முடியாமல், காலதாமதமாகச் சென்று, இரண்டு மணி நேரத்தில் ‘ஷிவ்பூரி’யை சென்றடைந்தனர். ஷிவ்பூரியில் ‘ஸாக்கியா ஸாகர் ஏரி’யைப் பார்க்கச் சென்றபோது, ராவ்ஸாஹேப் அவரது பைனாக்குலரை வெளியே எடுத்து, இயற்கைக் காட்சிகளைப் பார்வையிடத் தொடங்கினார். பாபா பைனாக்குலரைப் பறித்து, பாதிரியிடம் கொடுத்து ஏரியில் எறியும்படி கட்டளையிட்டார்.

சீற்றமடைந்த பாபா, ராவ்ஸாஹேபின் கன்னத்தில் பளார் என அறைந்ததில், அவர் முகம் சிவந்துபோய் தடுமாறினார். பயணத்தைக் கைவிட்டு உடனே வெளியேறுமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார். ராவ்ஸாஹேப் நிலைமையை சமாளிக்க முடியாமல், தனது மன அமைதியை இழந்தார். பாபா அப்போது அவரைக் கண்டித்தார்: "**நான் எவ்வளவோ எச்சரித்தும், நீங்கள், உங்கள் லங்கோட்டியை நழுவ விட்டீர்கள்! அப்போது கண்களைச் சிமிட்டிக்கொண்டு பாபா நகைச்சுவையாக, ‘லங்கோட்டியைத் தூக்கிக்கட்டினால் உங்களுக்கு நல்லது; மேலும் நழுவ விடுவதானால் மக்கள் எள்ளி நகையாடுவர்**’" என்று கூறியதும், ராவ்ஸாஹேப் தனது வேதனையை மறந்து மனம்விட்டுச் சிரித்தார்.

திரும்பி வந்ததும், குவாலியர் நகரை நோக்கி பயணத்தைத் தொடர்ந்து, இரவில் பார்க் ஹோட்டலில் வந்து தங்கினர். ஜூலை 20ஆம் நாள் காலையில், பாபா மண்டலியுடன் அவ்விடத்தைத் சுற்றி வந்து, விரைவாக, குவாலியர் கோட்டை மற்றும் தொல்லியல் அருங்காட்சியத்தையும் பார்வையிட்டார்.

மிருகக்காட்சி சாலையில் வங்காள புலிகள் மற்றும் சிங்கங்களை சுதந்திரமாக அலையவிட்டு, சுற்றி கம்பி வேலிகளால் தடுப்புச் சுவர் போடப்பட்டிருந்தது. "**புலிகள் மனித பிறவி எடுக்க பல லட்சம் ஆண்டுகள்**

ஆகும்; கரடிகள் விலங்குகளிடையே மிகவும் காமவெறி கொண்டவை" என்று பாபா குறிப்பிட்டார்.

குரங்குகளும், கொரில்லாக்களும் விலங்குகளில் மிகவும் மேம்பட்ட பிறவிகள். அவை, முதல் மனிதனாக பிறவியெடுக்கும் வேளையில், காட்டுமிராண்டிகளாக இருக்கும்.

மதிய உணவுக்குப் பின்னர் ஆக்ரா நகரை வந்தடைந்தனர்.

பயணத்தின் இந்தக் கட்டத்தில், கடந்த காலத்தில் நடந்தது போல, சகன் எவருடனும் பேசாமல் மோசமான மனநிலையில் காணப்பட்டார். ஆக்ரா கண்டோன்மென்ட் பகுதியில் அமைந்த 'எம்பிரஸ்' ஹோட்டலில் பாபா குறிப்பிட்டதற்கு இணங்க அவர்கள் ஒரு நாள் மட்டுமே தங்கியிருந்தனர்.

மறுநாள் காலை, எட்டு மணியளவில் பாபா மண்டலியை அழைத்து, முந்தைய நாளிலிருந்து இருள் நிறைந்த முகத்துடன், வெடுவெடுப்பான மனநிலையில் இருந்ததைக் குறித்து அவர் சகனிடம் கேள்வி எழுப்பி கூறினார்:

இப்படி அடிக்கடி நிதானத்தை இழந்து, மனநிலை சரியில்லாமல் இருப்பதால் எந்த பயனும் இல்லை, குறிப்பாக உங்கள் குருநாதரின் சகவாசத்தில், அங்கு, அவருடைய விருப்பம், ஆர்வம் மற்றும் வார்த்தை உங்கள் விதிமுறையாக இருக்க வேண்டும். ஹ.:பீஸ் கூறுகிறார்:

"நான் என் எதிரிகளை அன்புடனும் பரிவுடனும்
பேணி பாதுகாக்கிறேன்,
அதே வேளையில் எனது நண்பர்கள் அழிவை
சந்திக்க அனுமதிக்கிறேன்.
ஆனால் எனது விருப்பத்தின் பின்னால் ஒளிந்திருக்கும்
விவேகத்தை யார் ஒருவரும் கேள்வி கேட்கும்
அளவுக்குத் துணிச்சல் இல்லை."

எனவே நான் ஒன்றைச் செய்யச் சொன்னால், ஏன் என்று கேட்காதீர்கள். 'ஆம், ஐயா' என்று மட்டும் வெளியளவில் அல்லாமல், உள்மனதிலிருந்து உங்கள் ஆழ் இதயத்திலிருந்து வருவதற்கிணங்க செயல்படுங்கள். அதுவே, உங்கள் குருநாதருக்கு நீங்கள் செய்யும் உண்மையான சேவையாகும்; தியானம், ஆன்மீகப் பாதை மற்றும் பிற விஷயங்கள் எதுவாயினும், உங்களுக்குத் தெரிந்திருந்தாலும் அல்லது நீங்கள் அதை பின்பற்றாவிட்டாலும் அது ஒரு பொருட்டல்ல. உங்கள் குருநாதருக்கு செய்யும் இந்த சேவை ஒன்றுதான், நீங்கள் ஆன்மீகப் பாதையில் நுழைய உதவியாக இருப்பது; மேலும் இது இதர அனைத்து பக்தி மற்றும் யோகப் பயிற்சிகளையும் விட மேலானது.

சத்குரு ராம்தாஸின் சீடராக இருந்த கல்யாணுக்கு தனது குருநாதரின் ஒவ்வொரு வார்த்தைக்கும் உடனுக்குடன் நேரடியாகக்

கீழ்ப்படிவதைத் தவிர வேறு எதுவும் தெரியாது. கல்யாண் தனது வெகுமதியை உரிய நேரத்தில் அடையப் பெற்றார், நீங்களும் அதைப் பெறுவீர்கள். மாறாக நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து என்னை எப்பொழுதும் மகிழ்ச்சியாக வைத்திருக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அது உங்கள் கடமை. ஆனால் அதற்கு மாறாக இங்கே, என்னையே நான் சிரமத்திற்கு உள்ளாக்கும் விதத்தில், 'உங்களில் ஒருவர் நன்றாக இருக்கிறாரா இல்லையா' என்று ஒவ்வொரு முறையும் உங்களிடம் வந்து கேட்கவும், நான் அவரை சிரிக்க வைத்து, சமாதானப்படுத்தி, பாராட்டி, தோள்களைத் தட்டி, செல்லம் கொடுக்கவும் நான் என்னை கட்டாயப்படுத்த வேண்டியதாகிறது. அது உங்களுக்கு நல்லதும், பொருத்தமானதும் அல்ல.

உங்களால் எனக்கு இதைக்கூடவா செய்ய முடியாது? எனது வார்த்தைகளுக்கு செவிமடுத்து, கீழ்ப்படிந்தால் மட்டும் போதுமானது. மீசை வைத்துக்கொண்டால், ஆண்மகனாக நடந்துகொள்ள வேண்டும்! இல்லையேல், அதை அகற்றிவிட்டு, ஒரு பெண்ணைப் போல (பலவீனமான) செயல்படுங்கள்.

மேலும் சகனை நோக்கி பாபா இவ்வாறு கூறினார்:

திருநங்கையைப் போல் இருக்கும் நீங்கள் ஒரு மத்தளத்தை எடுத்துக்கொண்டு வீதியெல்லாம் சென்று பறைசாற்றுங்கள்!

அற்ப விஷயங்களுக்காக அழுது அடம்பிடிக்கும் குழந்தையாக இருக்காதீர்கள். நீங்கள் ஆறடி உயர குழந்தையா அல்லது முழு வளர்ச்சியடைந்த ஆண்மகனா? ஆண்மகனாக இருங்கள்! அற்ப விஷயங்களோடு ஒட்டிக்கொள்ளாதீர்கள். அற்ப விஷயங்களை எண்ணி வருந்தாதீர்கள்.

உங்களிடம் ஒரு சாக்குப்போக்கு அல்லது உங்களை எரிச்சலூட்டும் அளவுக்கு ஒரு காரணம் இருப்பதாக வைத்துக் கொண்டாலும், உற்சாகமான இந்தத் தருணத்தில் உங்கள் மனம் வருத்தமடைந்தாலும், அந்த அற்ப விஷயத்தோடு ஒட்டிக்கொண்டு, வீங்கிய கன்னங்களுடன், முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு, மேகமூட்டமான வெளிப்பாட்டுடன் அதைப் பற்றி யோசித்துக்கொண்டே இருக்காதீர்கள். உற்சாகம் தணிந்த அடுத்த கணமே, நடந்ததை மறந்து, மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யுங்கள். எரிச்சலுக்கான காரணத்தை மனதிலிருந்து முற்றிலுமாக அகற்றிவிடுங்கள். அதை மீண்டும் மீண்டும் நினைவில் கொண்டுவர முயற்சிக்காதீர்கள், ஒரு பெண் அல்லது குழந்தையைப் போல அதையே நினைத்து அழுதுகொண்டே இருக்க வேண்டாம். கோபத்தைத் தணித்து அனைத்தையும் மறந்துவிடுங்கள்.

இன்னும், நீங்கள் அதைச் செய்யவில்லை என்றால், நான் கண்டுகொள்வானேன்? கவலைப்படுவானேன்? ஆஷ்ரம சிறுவர்கள் மீது எனக்குள்ள அன்பும், கடந்த இரண்டு வருடங்களாக உங்கள்

அனைவரையும், வெளியுலகையும் தவிர்த்து, அவர்களுடன் நான் வைத்திருக்கும் நெருங்கிய தொடர்பையும் நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். ஆனால் தக்க நேரம் வந்தபோது, நான் அவற்றை கைவிட்டேன் - எனது மிகவும் அன்பான குழந்தைகளையும் சேர்த்து! என் மீது பக்தி கொண்டவர்களிடமிருந்தும் நான் விலகி இருக்கிறேன். சுருக்கமாக, நான் மிகவும் நேசிப்பவர்களிடமிருந்தும் எனது தொடர்பை துண்டித்தேன்.

எனவே, எந்த நேரத்திலும், இப்போது என்னுடன் இருக்கும் உங்களிடமிருந்தும் எனது தொடர்பைத் துண்டிக்க முடியும். இப்போதும் கூட, இரவும் பகலும் இரண்டு சிறுவர்களோடு விளையாடி, கேலி கிண்டல் செய்து பொழுதைக் கழிப்பதால் எனக்கும் உங்களுடனான தொடர்பு மிகக் குறைவு. நான் இங்கு (மண்டலியின் அறைகளுக்கு) எப்போதாவது, பகலில் ஓரிரு முறை மட்டுமே வருகிறேன். அதற்கான நேரம் வரும்போது - இந்த இரண்டு சிறுவர்களுடனான எனது தொடர்பைத் துண்டித்து, தனியாக இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். படிப்படியாக, நான் எல்லா உறவுகளையும் தொடர்புகளையும் துண்டித்து வருகிறேன்.

அதேபோல, நான் உடை அணியும் விதம், விருப்பம் அனைத்தையும் குறித்துக் கொள்ளுங்கள். நான் பல ஆண்டுகளாக நூறு இடங்களில் கிழிந்து தையலிடப்பட்ட அந்தக் கருப்பு (கம்லி) கோட்டை அணிந்துவந்தேன். நான் (கன்னோபா ராவ் காடேக்கர் தயார் செய்த) பாத அணியை கடைசி கணம் வரை, அவற்றின் அசல் பாகங்கள் தேய்ந்து முழுவதுமாக மாற்றியமைக்கப்படும் வரை அணிந்தேன். இப்போது, நான் ஒரு புதிய கோட் தைத்து புதிய காலணிகள் மற்றும் காலுறைகளுடன் இருப்பதை, அதாவது நான் முன்பு செய்து கொண்டிருந்ததற்கு நேர்மாறாக நேர்த்தியாக உடையணிந்திருப்பதை நீங்கள் காண்கிறீர்கள். யாருக்குத் தெரியும், ஒருவேளை நான் ஒரு நாள் இந்த ஆடைகளையெல்லாம் விட்டுவிட்டு ஒரு லங்கோட்டியில் மட்டுமே இருக்கலாம் அல்லது நிர்வாணமாக இருக்கலாம்!

எவராலும் எதுவும் சொல்ல முடியாது.

சத்குருக்கள் இறைநிலையை அடைந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கென தனித்துவமான வாழ்க்கை மற்றும் பணி புரியும் முறைகள் உள்ளன. பாபாஜான் தன்னைச் சுற்றி நீளமான அங்கியும், விரல்களில் மோதிரங்களும் அணிவதுண்டு; நாராயண் மஹாராஜ் ஒரு ராஜாவுக்கு நிகரான அரச பாணியில் வாழ்கிறார்; உபாஸனி மஹாராஜ் ஒரு கோணிப்பையை இடையிலணிந்து, அரை நிர்வாணமாக இருக்கிறார். எனவே ஒவ்வொருவரும் அவரவருக்குரிய சில திட்டவட்டமான நடைமுறையை நீண்டகாலமாகக் கடைப்பிடிக்கிறார்கள்.

எனது நடை, உடை, பாவனை முற்றிலும் மாறானது. நான் எனது உணவு மற்றும் உடைகளை அடிக்கடி மாற்றிக்கொள்வதற்கு உரிய காரணங்கள் உண்டு. இந்த வெளியளவிலான வாழ்க்கை முறைகளுக்கு, எனது உலகளாவிய உட்பணிகளுடன் தொடர்பு உண்டு.

இதை, பாபா மேலும் விளக்கமாக எடுத்துரைத்தார்:

**ஒரு சத்குரு தூங்குகிறார் எனும்போது, அவர் அந்த வார்த்தையின் சாதாரண அர்த்தத்தில் தூங்குவது ஆகாது; அவர் ஆறு மற்றும் ஏழாவது ஆன்மீகத் தளங்களினிடையே 'ஓய்வெடுக்கிறார்' என்று அர்த்தம். மக்கள் அவருடைய குறட்டை சத்தத்தைக் கேட்டாலும் கூட, அவர் தூங்குகிறார் என்று அர்த்தமல்ல. அந்த நிலையிலிருந்து இறங்கி வருவது என்பது, அவ்வளவு சுலபமானதும் அல்ல. ஒரு சத்குருவால் மட்டுமே அதைக் கையாள முடியும்; வேறு எவராலும் முடியாது. அனைத்து குருநாதர்களும், அவர்கள் ஓய்வெடுக்க அமைதியான, தனிமையான இடத்தைத் தேர்ந்தெடுப்பதன் காரணம் இதுதான் - இதை நீங்கள் தூக்கம் என்பீர்கள் - அங்கே அவர்களுக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது. யாருக்குத் தெரியும், அவ்வேளையில் அவ்வாறு தொந்தரவு செய்யும் யாருக்காவது, குருநாதர் ஒரு சிறிய அறை கொடுத்தால் கூட, அது அபத்தமாக - அந்த நபருக்கு அழிவைத் தருவதாக அமையலாம்.**

**ஆனால், குருநாதர்கள் ஓய்வெடுக்கும் வெவ்வேறு இடங்களைத் தவிர, அதன் முறைகளும் வேறுபடுகின்றன. அனைத்து சத்குருக்களும் ஒன்றுபோல செயல்படுவதில்லை. சாய்பாபா எவருக்கும் தொந்தரவு தராமலிருக்கும் நோக்கத்தில், ஒரு தொங்கு மேடையில் ஓய்வெடுத்தார். பாபாஜான், மஹாராஜ் இருவரும், எவரேனும் அவர்களை விரலால் மென்மையாகத் தொட்டால் கூட, திடீரென எழுந்து விடுவர். எனவே, அவர்கள் அனைவரும், வேறுவேறு வழிகளில் தங்கள் விருப்பப்படி வெவ்வேறு தனி இடங்களில் ஓய்வெடுக்கிறார்கள். நானும் அப்படித்தான், தொந்தரவுக்கான சிறியதொரு காரணத்தையும் தவிர்த்து ஓய்வெடுக்கிறேன்.**

1929 ஜூலை 22ஆம் நாள் பாபா, மண்டலியுடன் ஆக்ராவிலிருந்து புறப்பட்டு அலிகார் வழியாக, டெல்லி வந்தார். வழியில் ஹத்ரஸ் கிராமம் வந்ததும், பாபா தனியாக அமர்ந்து, அவரது மதிய உணவை உண்டார். அலிகாரை நெருங்கியபோது, பாபா ஆழ்ந்த சிந்தனையில் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தார்; அனைவரிடமும் அவர்கள் உணவை உண்ணுமாறு கூறினார். உண்ணும் வேளையில் விஷ்ணு அவரது சட்டையைக் கழற்றி கையில் வைத்துக்கொண்டு உணவை உண்டார். பாபா, விஷ்ணுவிடம், "**குளிர்ந்த காற்று வீசும் இவ்வேளையில் நீ ஏன் உனது சட்டையைக் கழற்றிவிட்டு சாப்பிடுகிறாய்?**" என்று கேட்டார்.

"இது பிராமணர்களிடையே பாரம்பரியமாக உணவு உண்ணும்போது கடைப்பிடிக்கும் பழக்கம்" என்றார் விஷ்ணு.

இந்த பதிலைக் கேட்ட பாபா எரிச்சலில், "**உனக்கு சளி அல்லது இருமல் பிடித்தால், உனது பழக்கத்தை உடனே மறந்துவிடுவாய், அப்படித்தானே? ஆனால், உனது பாரம்பரிய பழக்கவழக்கங்களை**

**என்னுடைய விருப்பங்களுக்கும் மேலாக நினைப்பதானால், நீ என்னுடன் இருப்பதில் எந்த பயனுமில்லை.**" என்றார்.

"பாரம்பரிய பழக்கவழக்கத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால், இப்படி நான் பழகிவிட்டேன் அவ்வளவுதான். இதை நீங்கள் விரும்பாவிடில், எனது நன்மைக்காக நான் அதை, இப்போதே நிறுத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்" என்று உணவைக் கையில் வைத்துக்கொண்டு கூறியபோது உணவு கையிலிருந்து நழுவி சட்டையில் விழுந்தது. அனைவரும் வாய்விட்டுச் சிரிக்க பாபா நடந்ததை நினைத்து மகிழ்ச்சியடைந்தார்.

"எனது பிறப்பிலிருந்து வந்த பழங்கால பாரம்பரிய பழக்கவழக்கத்திற்கு இன்றிலிருந்து பிரியாவிடை" என்று கூறி விஷ்ணுவும் கூட்டத்தோடு சேர்ந்து சிரித்து மகிழ்ந்தார்.

அலிகர் வந்ததும் பாபா இனிப்புகள் வழங்கினார். பயணத்தின் நடுவில் பாபா அங்கே 'வயதான ஒருவரை' சந்தித்ததாகத் தெரிவித்தார். பாபா ஆக்ராவிலிருந்து மதுரா வழியாக வராமல், வேறு வழியில் வந்ததன் காரணம், மண்டலிக்கு அப்போதுதான் புரிந்தது. அன்றிரவு டெல்லி வந்து சேர்ந்து, 'ராஜ் மஹால்' ஹோட்டலில் தங்கினர்.

ஜூலை 23ஆம் நாள் பாபா மண்டலி மற்றும் சிறுவர்களுடன் பழைய, புதிய டெல்லி, குதுப் மினார், சிவப்புக்கோட்டை போன்ற இடங்களுக்குச் சென்றார். அங்கே பாபா, 'ஹஃபீஸ்ஜி நஃபீனா' என்றழைக்கப்பட்ட ஒரு மஸ்தை அடையாளம் காட்டி, அவர் டெல்லியின் ஆன்மீகப் பொறுப்பாளர் என்று தெரிவித்தார். அதற்குப் பிறகு பாபா, சகனை, பந்தர்பூர் எனும் இடத்திற்கு அனுப்பி அங்கே ஏழு நாட்கள் உபவாசம் இருக்குமாறு கூறினார்.

ஜூலை 24ஆம் நாள் 191 மைல் பயணம் செய்து லுதியானா வந்து சேர்ந்தனர். இங்கு, கண்பார்வையற்ற சித்தர் ஒருவர் பொறுப்பாளராக இருப்பதை பாபா, மண்டலிக்குத் தெரிவித்தார்.

தொடர்ந்து லாஹூர் செல்லும் வழியில், அம்ரித்ஸர் நகரில் ஸீக்கியர்களின் புனிதஸ்தலமான, பிரம்மாண்டமான, தங்க கோயிலை பாபா வெளியிலிருந்து பார்த்தார். அங்கிருந்து அன்று மதியம் லாஹூர் வந்து 'எம்பரஸ்' ஹோட்டலில் தங்கினர்.

ஜூலை 26ஆம் நாள், பாபா பெரும்பாலும் ஹோட்டலிலே தங்கி, இசைத்தட்டை இயக்கி பாடல்களைக் கேட்டும், மண்டலியுடன் சீட்டு விளையாடியும் பொழுதைக் கழித்தார். மாலையில் மண்டலி மற்றும் சிறுவர்களுடன் சிறிது தூரம் நடக்கச் சென்றார். ஒரு வசதியான ஹோட்டலில் பாபா மண்டலியுடன் தங்குவது, இதுவே முதல் முறை. அப்போது பாபா குறிப்பிட்டார், "**இன்று செல்வந்தனின் வாழ்க்கை; நாளை துறவிகளின் வாழ்க்கை!**"

அதற்குப் பிறகு பாபா, மண்டலிக்கு இவ்வாறு தெரிவித்தார்: "**எல்லாவிதமான வாழ்வையும் ஏற்று, வாழக் கற்றுக்கொள்ள வேண்டும், மேலும், எல்லா நிலைமைகளிலும், சூழ்நிலைகளிலும், சமநிலையைக்**

**கடைப்பிடிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒவ்வொரு சூழ்நிலையும் ஒரு தற்காலிக அமைப்புதான், மாறும் தன்மையுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.”**

**எனவே விலகியிருங்கள்; மாற்றத்தால் பாதிக்கப்படாமல் இருங்கள்; மாறாத தன்மையில் உறுதியுடன் இருங்கள்**.

ஜூலை 27ஆம் நாள் மாலையில் லாஹூரிலிருந்து ராவல்பிண்டி வந்து இரவைக் கழிப்பதற்கான இடத்தைத் தேடி வசதியாக எதுவும் அமையாததால், ஒரு பெரிய மரத்தின் கீழ் ஓய்வெடுக்க வேண்டியதாயிற்று (கடந்த இரண்டு நாட்கள் தங்கிய வசதியான ஹோட்டலுக்கு நேர்மாறான சூழ்நிலை.) மண்டலி மரத்தின் கீழ் தூங்க, பாபா பேருந்தின் உள்ளே ஓய்வெடுத்தார்.

அடுத்த நாள் காலையில் ஜெலம் நதிக்கரை வழியாகப் பயணம் செய்தபோது, வழியில், அற்புதமான தோற்றத்தில் அதி பிரகாசமான முகத்துடன் ஆனால், பிச்சைக்காரர் போல் ஒருவர் எதிரில் தோன்றி, இருகரம் கூப்பி வணங்கி நின்றார்.

பேருந்தில், பாபாவின் இருப்பிடத்திற்கும், ஓட்டுநருக்கும் இடையே, பாபா, பாதிரியுடன் தொடர்பு கொள்ள ஒரு ஜன்னல் இருந்தது. சிறிது தூரம் சென்ற பின்பு, பாபா பேருந்தை நிறுத்துமாறு சைகையால் தெரிவித்தார். வண்டியிலிருந்து இறங்கி, பாபா இயற்கை காட்சிகளைப் பார்த்து ரசித்தார், "**இந்த இடம் மிகவும் அற்புதமானது; இங்கே ஆன்மீகப் பாதையின் ஆனந்தமான தென்றல் வீசுகிறது**." பாபா அருகிலிருந்த நீரோடைக்குச் சென்று, கைகளைக் குவளைப் போலாக்கி, இரண்டு மூன்று வாய் நீர் அருந்தினார்., "**காஷ்மீரில் ஏகாந்தவாசத்திற்கு உகந்த இடம் கிடைக்காவிடில், நான் இங்கிருக்கும் மலையில் வந்து கூடாரம் அமைத்து இருப்பேன். மண்டலி, பள்ளத்தாக்கில் குடில்கள் அமைத்துத் தங்க முடியும்**" என்று தெரிவித்தார்.

அன்று மாலை ஆறு மணிக்கு ‘ஊரி’ வந்து சேர்ந்தனர்; குளிர் மிகவும் அதிகமாக இருந்தும், பாபா மேல்சட்டையை முழு தினமும் அணியவில்லை. பாபா, அதற்குப் பிறகு, பருப்பு தயார் செய்து, அவரது கைகளால் அனைவருக்கும் வழங்கினார். பயண வேளையில் பாபா வழக்கமாக, தன்னை யார் என்று அடையாளம் தெரியாத வண்ணம் நடந்து கொண்டார். ஆனால், டோமல் நகரில் சுங்க அதிகாரியாகப் பணிபுரிந்த பஞ்சாபி ஒருவர், பாபாவை அடையாளம் கண்டுகொண்டு அவரின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டார். மெஹர் மெஸேஜ் புத்தகத்தின் ஒரு பிரதி அவருக்கு அளிக்கப்பட்டது.

ஊரியிலிருந்து காலையில் புறப்பட்டு, சிறிது தூரம் சென்றதும் பாபா, பாதிரியைத் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.

மறுபடியும் ஊரி வந்ததும், பாபா, பாதிரியிடம் பேருந்தை, கண்பார்வையற்ற ஒரு சிறுவனின் அருகில் நிறுத்துமாறு கூறினார். அந்த சிறுவனை அவ்வூர் மக்கள் மேல்நிலையை அடைந்த யோகி என்று நம்பி

வழிபட்டு வந்தனர். பாபா ஒரு பருத்தி சால்வையை அந்த சிறுவனின் தலையில் போர்த்தினார்.

ஊரி கிராமத்திலிருந்து புறப்பட்டு, அன்று மதியம் காஷ்மீர், ஸ்ரீநகர் வந்து, டால் ஏரியில் ஒரு படகு வீட்டில் தங்கினர். தங்கும் இடத்தின் பின்னணி சம்பவம் மிகவும் சுவாரஸ்யமானது:

மெஹர் பாபா, ஸ்ரீநகர் வருவதற்கு முந்தைய இரவில், அந்தப் படகு வீட்டின் சொந்தக்காரர் சுல்தானா என்பவரின் நான்கு வயது சிறுவன், அவனுடைய கனவில் மெஹர் பாபாவைக் கண்டான். பாபா அவனிடம், **"நான் கடவுள், நாளை நான் உங்கள் ஊரில் தங்க வருகிறேன்"** என்று கூறினார். மறுநாள் காலையில் அந்த சிறுவன், தான் கண்ட கனவை தனது தாயாரிடம் உற்சாகமாக விவரித்த வேளையில், தாயார் அதைப் பொருட்படுத்தாமல் வேடிக்கையாக நினைத்து சிரித்தார்.

பாபா, 'டால்' ஏரியை (DAL LAKE) அணுகியபோது, அந்த சிறுவன் தூரத்திலிருந்து பாபாவை அடையாளம் கண்டுகொண்டு, அவரைப் பார்த்துக் கத்தினான், "நேற்றிரவு நான் கனவில் கண்ட அதே கடவுள்!" மெஹர் பாபா, சுல்தானாவின் படகருகில் சென்றதும் சிறுவனின் தாயார் தனது மகன் கண்ட கனவைப் பற்றி அவருக்கு எடுத்துரைத்தார். பாபா உடனே அந்தப் படகிலும், மண்டலி அருகிலிருந்த மற்றொரு படகிலும் தங்கினர்.

இந்தச் செய்தி ஊரெல்லாம் பரவியதும், அங்கிருந்த அனைத்து படகோட்டிகளும் பாபாவை சந்திக்க வந்தனர். அவர்கள் தங்கள் படகு வீடுகளுக்கு வந்து, அவருடைய புனித பாதங்களைப் பதிக்குமாறு பிரார்த்தனை செய்தனர். எனவே, அன்று பாபா பல படகுகளுக்கு விஜயம் செய்து, அவர்களின் தலைவர் கரீம் என்பவருடன் அமர்ந்திருந்த வேளையில், அவர் பாபாவின் புகைப்படத்தை, ஒரு வருடத்திற்கு முன்பு தஸ்தூர் எழுதிய "ஹிஸ் ஹோலினெஸ் மெஹர் பாபா & மெஹராஷ்ரம்" (HIS HOLINESS MEHER BABA & MEHERASHRAM) என்ற புத்தகத்தில் பார்த்ததாகக் கூறினார். அன்றிரவு அனைத்து படகோட்டிகளும், மறுபடியும் வந்து, பாபாவின் அருகில் அமர்ந்திருந்தனர். இசைத்தட்டுகள் ஒலிக்க அந்த நான்கு வயது சிறுவன் நடனமாடினான். அனைத்து காஷ்மீரிகளும் குருநாதரின் சகவாசத்தில் பங்கெடுத்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர்.

ஜூலை 31ஆம் நாள் காலையில், மெஹர் பாபா, மண்டலி தங்கியிருந்த படகு வீட்டிற்கு வந்தபோது, காலை சிற்றுண்டி தயாராகாததால் வருத்தத்தில், **"எல்லா விதமான சிரமங்களையும் சமாளிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்; மேலும் நான் எப்பொழுதும் உங்களைக் கன்னத்தில் தட்டிக்கொடுத்து மகிழ வைப்பேன் என்று எதிர்பார்க்க வேண்டாம். நீங்கள் இப்படி நடந்துகொண்டால், என்னுடன் இருப்பது பயனற்றதாகிவிடும். நான் ஏகாந்தவாசத்தில் நுழையும்வரை சிரமங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள்; அதற்குப் பிறகு நீங்கள் விரும்பியபடி செய்யலாம்"** என்றார்.

திடீரெனப் பேச்சைத் திசை திருப்பி, பாபா காஷ்மீரைப் பற்றி விளக்கமளித்தார்:

**காஷ்மீரில், கடவுள், மாயை இவற்றின் சக்திகளுக்கு இடையே ஒரு சமநிலை உள்ளது; அப்படித்தான் இருக்கவும் வேண்டும். எங்கு உண்மையான 'நான்' (கடவுள்) இருக்கிறேனோ, அங்கே செயல்களின் விளைவுகள் உங்களைக் காயப்படுத்த முடியாது. ஆனால், மாயையில், செயல்களின் விளைவுகள் பிணைப்புகள் ஆகிவிடுகின்றன. உதாரணமாக, இரண்டு நதிகள் சங்கமம் ஆவதை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு நதி தனியாகப் பாயும்போது, அது தன்னிறைவுடன் சுதந்திரமாக இருக்கும். ஆனால், இரண்டு நதிகள் சங்கமிக்கும் வேளையில் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகிறது.**

**காஷ்மீருக்கு ஒரு மஹாராஜா இருக்கிறார். அவர் காஷ்மீருக்காக அமைத்த அனைத்து சட்டதிட்டங்களுக்கும் காஷ்மீரி மக்கள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். இந்தச் சட்டங்கள் சாமானிய மக்களின் நலனுக்காக நடைமுறைப் படுத்தப்பட்டவை. ஆனால், அவரோடு நெருங்கிய மக்களுக்கு, இந்தச் சட்டங்களிலிருந்து விலக்களிக்கப் பட்டிருக்கும்; அவர்கள் வாழ்க்கையை எளிதாக எடுத்துக் கொள்வார்கள். இதேபோல, பல விஷயங்களில் நீங்களும் என்னுடன் இருப்பதன் மூலம் சுதந்திரமாக இருக்கிறீர்கள்.**

பாபா மண்டலியுடன், புவாஸாஹேப் ஏற்கனவே தேர்ந்தெடுத்த இடத்தைப் பார்வையிட 'ஆனந்த்நாக்' (இஸ்லாமாபாத்) மற்றும் 'அச்சிபல்' என்ற பள்ளத்தாக்கை நோக்கிச் சென்றார். பாபா விரும்பிய இடத்திற்கு அனுமதி கிட்டாததால், உடனே 'பகடி மர்தண்ட்' என்ற மலையில் பாபா ஒரு குகையைத் தேர்ந்தெடுத்தார். அனைவரும் அந்தப் பள்ளத்தாக்கில் இறங்கி நீரோடை அருகில் அமர்ந்திருந்தனர். பாபா அவரது கைகளைக் குவளையாக்கி, அதில் நீர் ஏந்தி சிறுவர்களுக்கு அருந்தக் கொடுத்தார்.

தொடர்ந்து பாபா, டால் ஏரியைச் சுற்றியுள்ள இயற்கை காட்சிகள் நிரம்பிய 'மனஸ்பல்' ஏரி (MANASBAL LAKE), 'நிஷத்' மற்றும் 'ஷாலிமார்' பகுதிகளில் அமைந்த குகைகளைப் பார்வையிட்டு, அவ்வளவு விருப்பமில்லாமல் அருகிலிருந்த 'ஹர்வான்' ஏரியையும் (HARWAN LAKE) பார்வையிட்ட பின்பு ஸ்ரீநகருக்குத் திரும்பி வந்தார்.

ஹர்வான் நிலச் சொந்தக்காரர் உடனே மெஹர் பாபாவை அணுகி, அந்த இடத்தை, பாபாவின் தேவைக்குப் பயன்படுத்துமாறு அவரது விருப்பத்தைத் தெரிவித்தார். பாபா அதை ஏற்றுக்கொண்டு, மலையில் ஒரு சிறிய குடிலை அமைக்க உத்தரவிட்டார். மண்டலிக்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டார்: **"இந்த இடம் மிகவும் அருமையானது, ஆனால், இங்கு வாழும் மக்கள் நான் இருப்பதை அறிந்துகொண்டால், காலை முதல் மாலை வரை**

**என்னைத் தொந்தரவு செய்வார்கள்; அவர்களின் புனித பயணத்தைத் தொடங்கி விடுவார்கள்."**

பாபா, மண்டலி மற்றும் சிறுவர்களுடன் அடுத்த நாள் காலையில் ஹர்வான் வந்து, ஏகாந்தவாசத்திற்கான அனைத்தையும் முடிவு செய்தார். ஏகாந்தவாசத்தின்போது மண்டலியின் உணவு மற்றும் தங்கும் இடத்தைப் பற்றிப் பேசி முடிவெடுத்தனர். பேச்சினிடையில் பாபா, திடீரெனப் புலனாகாத முறையில் இவ்வாறு குறிப்பிட்டார், "**நாளை வெனிஸிலிருந்து புறப்பட்டு பாலஸ்தீன் செல்லவேண்டும்.**"

அதைத் தொடர்ந்து பாபா, சாஞ்சியிடம் திடீரெனச் சீற்றமடைந்து அவரைத் தாக்கவும் செய்தார். மேலும் "**உனது கல்லறை காஷ்மீரில்தான்**" என்றார். பாபா தெரிவித்த கருத்தின் முக்கியத்துவம் மண்டலிக்கு பல ஆண்டுகளுக்குப் பின்னரே புரிந்தது.

காஷ்மீரில், படகோட்டியின் மனைவி பாபாவின் தரிசனத்திற்கு வந்து, கண்களில் நீர் ததும்ப அழுதார். பாபா அந்தப் பெண்மணியை ஆசீர்வதித்து **"உங்களின் அதிர்ஷ்டம் மாறிவிட்டது"** என்று கூறி, அவரின் கணவர் சுல்தானுக்கு பாபாவின் கறுப்பு கோட்டை அன்பளிப்பாகத் தந்தார். பாபாவின் கால்களைப் பற்றிக்கொண்டு அந்தப் படகோட்டி, ஒரு சிறு குழந்தையைப்போல் அழுதார். அன்றிரவு படகோட்டியின் மனைவி சித்தார் வாசித்து பாபாவை மகிழ்வித்தார்.

1929, ஆகஸ்ட் 3ஆம் நாள் பாபா, மண்டலியுடன் ஹர்வான் சென்றார். பல படகோட்டிகள் பாபாவின் தரிசனத்திற்காகக் கூடிய வேளையில் பாபா அவர்களை ஆசீர்வதித்து, "**கடவுளை நம்புங்கள். அனைவரிடத்திலும் அவர் பார்வை இருக்கும். அவர் எவரையும் மறப்பதில்லை. நீங்களும் அவரை மறந்துவிடக்கூடாது**" என்று ஆறுதல் கூறினார். பாபா, கரீமுக்கு ஒரு போர்வையும், கம்பளி சட்டையும் வழங்கியபோது அவர் உணர்ச்சிகளால் ஆட்கொள்ளப்பட்டு, கண்ணீர்விட்டு அழுதார். ஒவ்வொருவருக்கும் பாபாவின் புகைப்படங்களும், சித்திர பேழைகளும் அன்புப் பரிசாக வழங்கப்பட்டது. அவருடைய அன்பும், இரக்கமும் ஒவ்வொரு இதயத்தையும் நெகிழச் செய்தது; ஒவ்வொருவரும் ஏதோ நெருங்கிய உறவினர் நெடுநாட்களுக்குப் பிரிந்து வெகுதூரம் செல்வதுபோலக் கண்கலங்கி அழுதனர்.

ஹர்வான் மலையடிவாரத்தில் இரண்டு குடில்களை வாடகைக்கு எடுத்து, மண்டலியும் சிறுவர்களும் அங்கே தனித்தனியாக தங்கியிருந்தனர். 500 அடி மலை உயரத்தில் பாபாவுக்காக ஒரு குடில் எழுப்பப்பட்டது. பாபா அந்தக் குடிலில் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் வேளையில், இரண்டு மண்டலி அதை ஒட்டி அமர்ந்து காவல் காக்க வேண்டும்.

அடுத்த நாள் மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது, பாபா ராம்ஜூவிடம், அவர் ஒரு மனிதனா அல்லது மிருகமா எனக் கேட்டார்.

அதிர்ச்சியடைந்த ராம்ஜூ "ஒரு மனிதன்!" என்று பதிலளித்தார். பாபா அப்போது 'மனித உருவம்' மற்றும் அதன் பண்புகளைப் பற்றி சொற்பொழிவு வழங்கினார்:

**பரிணாம வளர்ச்சியில் மனித உருவம் அனைத்திலும் கடைசியானதும், மேன்மையானதும் ஆகும். இப்படி இருந்தும், அது இன்னும் மிருக ஆசைகள் மற்றும் உண்பது, அருந்துவது, பொறாமை, வெறுப்பு, கோபம், காமம் போன்ற கீழ்நிலை குணங்களால் நிறைந்திருக்கும். இவ்வித குறைபாடுகள் மனிதனில் இருப்பதன் காரணம், அவன் படைப்பின் பரிணாம வளர்ச்சியிலிருந்து அதன் மூலமாகவே வெளிப்படுகிறான்; மேலும் இத்தகைய வளர்ச்சியில் விலங்குகளிலுள்ள அனைத்து குறைகளும், குறைபாடுகளும் மனித இனத்திலும் இருக்கும்.**

**எதுவாயினும் முழுக் கதையும் இது அல்ல! இந்தக் குறைபாடுள்ள குணங்களுடன், கூடவே, மனிதன், தனக்குள்ளேயே, அடிப்படை ஆசைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது, மேலும் கருணை, இரக்க குண பண்புகளை வளர்த்துக் கொள்வது போன்ற தேவதையின் சில உயர்ந்த தனித்திறன்களையும் உருவாக்குகிறான். ஒரு சாதாரண மனிதனில், கிட்டத்தட்ட பாதி, தரக்குறைவான மிருக குணங்களும், மறுபாதி, தரமான தேவதையின் தனித்திறன்களும் சேர்ந்த கலவையாக இருக்கும். இறைநிலையை அடைவதற்கு முன்னர் இரண்டும் அழிக்கப்பட வேண்டும் என்றாலும், குறைபாடுள்ள மிருக குணங்கள் முதலில் அழிய வேண்டும். இந்த மிருக குணங்கள் அழிந்துபோகும் தருவாயில், ஒரு மனிதன் தேவதையின் தனிச்சிறப்புமிக்க பண்புகளைப் பெறும் வாய்ப்பைப் பெறுகிறான். இறுதியில், தேவதையின் தனித்திறன்களும் மறைந்து மனிதன் இறைநிலையை எய்துகிறான்.**

**எனவே மனிதனாக இருக்க வேண்டுமெனில், அவன் மிகக்குறைந்த அளவிலான மிருக தன்மையுடன் இருந்தாக வேண்டும் என்றில்லை. ஒரு மனிதன் மிருக குணங்களையெல்லாம் அழித்து, தேவதையின் தனித்திறன்களை முழுமையாக வளரச் செய்யும் போதுதான் உண்மையான மனிதனாகிறான்! ஆனால், அதையும் பரிபூரண நிலை என்று சொல்ல முடியாது. தேவதூதர்களின் நற்குணங்களை மிக உயர்ந்த அளவில் உருவாக்கினாலும், பரிபூரண மனித நிலையை அடைந்ததாகக் கூற முடியாது. தரமற்ற மிருக குணங்கள் தேவதூதர்களிடம் இருக்காது; அவர்கள் தெய்வத்தின் உயர்தரமான குணங்களைக் கொண்டுள்ளனர்; ஆனால், இறைநிலையை அடைய வழிவகுக்கும் ஏக்கத்திற்கு இணையான அன்பு அவர்களிடம் இல்லை. தேவதூதர்களிடம் நிச்சயமாக அன்பு உள்ளது, ஆனால், அது அவர்களின் இயற்கைத் தன்மையை ஒன்றியது. அதை "இயற்கை அன்பு" என்றழைக்கலாம், இதனால் தேவதூதர்கள் மனிதர்களைவிட மேன்மையானவர்கள். ஆனால், இறைநிலையை அடைய தேவதூதர்கள், தனித்திறன் படைத்த குணங்களோடு மனித பிறவி எடுத்தாக வேண்டும். மனித ரூபத்தில் மட்டுமே, இறைவனுக்கான அன்பை உருவாக்கி,**

**இறைநிலையை அடையும் தகுதியைப் பெறமுடியும். மனித ரூபம் இல்லாமல் ஒருபோதும் இறைநிலையை எய்த முடியாது.**

பாபா அப்போது மறுபடியும் ராம்ஜூவிடம், "**இப்போது சொல்லுங்கள், நீங்கள் ஒரு மனிதனா அல்லது மிருகமா?**" என்று சைகையால் கேட்டார்.

"எனக்கு இவ்வாறு தோன்றுகிறது, ஒரு புறம் நான் மனிதன், மறுபுறம் மிருகம் என்று! ஆனால், ஒன்று மட்டும் முழுமையாகப் புரியவில்லை, தேவதைகளின் இயற்கையான அன்பு என்னவென்று! அதன் அர்த்தம் என்ன?" என்று ராம்ஜூ பதிலளித்து வினவினார்.

பாபா, கற்பலகையில் இவ்வாறு விளக்கமளித்தார்: "**இது இப்படி: ஒரு தாய் தனது குழந்தையை நேசிக்கிறாள்; அதற்காக, அவள் அன்பை வளர்க்க வேண்டியதில்லை. அவளுடைய இந்த உணர்வு தானாகவே நிகழ்வது; இயற்கையானது; ஆனால், இந்த அன்பு கடவுளுக்குரியது அல்ல. அதுபோல தேவதைகளின் அன்பு கூட, பல நல்லொழுக்கங்களை உள்ளடக்கியதாக இருந்தாலும், அவை கடவுளுக்கு உரித்தானதல்ல. அது தன்னுள்ளே தோன்றுவது - இயல்பானது - அதனால்தான் 'இயற்கையான அன்பு' என்று அழைக்கப்படுகிறது.**"

மெஹர் பாபா அப்போது ஆசைகளிலிருந்து விடுபடுவது பற்றி விளக்கமளித்தார்:

**ஒரு நபர் ஆசைகளிலிருந்து விடுபடாதவரை, அவர் இறைநிலையை அடையத் தயாராகவில்லை என்று அர்த்தம். ஆசைகள் - நல்லது, தீயது இரண்டும் - கட்டுண்டவை. நல்ல ஆசைகள் தங்க சங்கிலியாலும், தீயவை இரும்பு சங்கிலியாலும் கட்டப்பட்டிருக்கும். நீங்கள் ஏன் அமைதியற்றவராக உணர்கிறீர்கள்? ஏனெனில், உங்களிடம் மனைவி, மக்கள், உலகைப் பற்றிய ஆயிரமாயிரம் எண்ணங்கள் உள்ளன. ஒருவர் விருப்பங்கள் மற்றும் ஆசைகளிலிருந்து விடுபட்டிருக்கவேண்டும்; ஆனால், அவை இருக்கத்தான் செய்யும். அவற்றை உருவாக்குவது எது? இந்த ஆசைகளை விரும்புவது எது? இந்த எண்ணங்களை நினைப்பது எது? அதுவே மனம்!**

**ஆசைகள் இருப்பதுவரை விடுதலை என்பது கிடையாது. ஆசையே இல்லாதவன் அரசர்களுக்கெல்லாம் அரசர் ஆகிறான்! ஆனால், ஆசையற்றவராக மாறுவது எப்படி என்று எவருக்கும் தெரியாது. ஆசைகள் இல்லாத வாழ்வே உண்மையான வாழ்வு! சுதந்திரத்தை அனுபவிக்க ஆசைகளுக்கு அப்பால் செல்லவேண்டும். ஆசைகளை உருவாக்குவது மனம்; மனம் இருப்பதுவரை, மனம் இறக்காத வரை, ஒரு நபர் தன்னை விடுவித்து, சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது.**

**ஆத்மா ஒரு பறவை போன்றது! அனைத்து ஆசைகளும் அழியும்போது அதன் கண்கள் திறக்கின்றன. அப்போது அது கடவுளைப் பார்த்து கடவுளோடு ஒன்றாகிவிடுகிறது. பறவையின் கண்கள் திறக்கும் வேளையில், அது காணும் கடவுள் நானே! ஆனால், ஆசைகள் பறவையின்**

**கண்களை மறைத்து, நான் அதன் எதிரில் நின்றால்கூட, என்னைப் பார்க்கவிடாமல் தடுத்துவிடுகின்றன.**

தொடர்ந்து பாபா இவ்வாறு கூறினார்:

**பேரின்பம் என்பது மகிழ்ச்சி மற்றும் துயரத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்று. மனதின்** (அனுபவங்களின்) **மூலம் அடைவது மகிழ்ச்சியும் துயரமும். பேரின்பம் என்பது வேறு; மனம் மறைந்த பின்னர் ஆத்மா தானாக அடைவதுதான் பேரின்பம்; பேரானந்தம். மகிழ்ச்சியும் துயரமும் மனதினால் ஏற்படுகின்றன, அதேவேளை ஆத்மாவின் காரணமாகப் பேரின்பம் நிலைபெற்றிருக்கிறது. பேரின்பத்தை விவரிக்க முடியாது. அதைப் புரிந்து கொள்ள முடியாது. அனுபவிக்க மட்டும்தான் முடியும்.**

மெஹர் பாபாவின் மண்டலியில் ஒருவர் "ஆனால், பாபா, ஏன் எப்போதும் துன்பம் மட்டுமே நிறைந்திருக்கிறது, மகிழ்ச்சியே இல்லை?" என்று வினவினார்.

**அட மூடனே! துன்பம் அல்லது அது போன்று எதுவுமேயில்லை என்று நான் உங்களுக்குச் சொல்ல முயற்சிக்கிறேன்! மனம் ஒன்றுதான் வலியையும் துயரத்தையும் உருவாக்குவது! உண்மையாகக் கூறப்போனால், மகிழ்ச்சி, துயரம் இரண்டுமே இல்லை. பேரின்பம் ஒன்றுதான் உண்மையானது; இதை, இறைநிலையை அடைந்த பின்னரே ஆன்மா அனுபவிக்கிறது. எனவே, இறைநிலையை அடைய மனம் அழிக்கப்பட வேண்டும். முதலில் அந்தப் பரிபூரணநிலை, அதைத் தொடர்ந்து பேரின்ப அனுபவம்!**

**இறைநிலையை அடைவது என்றால் என்ன? இதன் அர்த்தம் இறைவனோடு ஒன்றிணைவது. சிந்தித்து, கற்பனை செய்வதன் மூலம் ஒருவர் ஒருபோதும் கடவுளோடு ஐக்கியமாக முடியாது. சிந்தனையும், கற்பனையும் மறைந்த பின்னர்தான் - அதாவது மனம் இறந்த பின்னர்தான் - இறைவனோடு ஐக்கியமாக முடியும்.**

"ஆனால், ஒருவர் கடவுள் நிலையை அடைந்ததாக அவருக்கு எப்படித் தெரியும்?" என்று ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**இது தானாகவே நிகழ்வது. நீங்கள் ஒரு மனிதன். நீங்கள் எப்போதாவது "நான் ஒரு மனிதனா?" என்று நினைப்பதுண்டா? நீங்களாக இதைக் கேட்கமாட்டீர்கள் ஏனெனில் நீங்கள் ஒரு மனிதன். அதுபோல், ஒருவர் கடவுள் நிலையை அடைந்ததும், அவர் கடவுள் என்பதைத் தானாகவே அறிந்து கொள்வார். அவர் தனிப்பட்ட முறையில் அந்த முழு அனுபவத்தையும் அடைவார்.**

மெஹர் பாபா அப்போதிருந்த மனநிலையில் தொடர்ந்து விளக்கமளித்தார்:

**கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள வேறுபாடு, சொர்க்கம், பூமி இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விடப் பெரிது! மனிதன், ஏக்கம் மற்றும் ஆசைகளால் பிணைக்கப்படுகிறான். நீங்கள், உண்பது,**

**அருந்துவது போன்ற எதைச் செய்தாலும் அது உங்களைப் பிணைக்கும். நானும் உண்பதும், அருந்துவதும் உண்டு, ஆனால், நான் மிகவும் சுதந்திரமாக இருக்கிறேன். விலங்குகளும் மனிதனைப் போலவே உணவு உண்டு, அருந்துகின்றன; இரண்டிலும் வேறுபாடு இல்லையா? பெரிய அளவில் வேறுபாடு உள்ளது. அதுபோலவே உங்களுக்கும் எனக்கும் இடையே உள்ள வேறுபாடு - நீங்கள் மானிடர்கள், நான் கடவுள்.**

**இன்று ஒருவர் என் மீது முழு நம்பிக்கை வைத்து என்னுடனே இருக்கிறார். ஆனால், நாளை அவருடைய எண்ணங்களை மாற்றி, என்னுடைய விருப்பம் மற்றும் கட்டளைகளுக்கு எதிராகச் சென்று, சந்தர்ப்பவாதியாக மாறி, அவதூறாகப் பேசி, என்னை விட்டுச் சென்றாலும், நான் நானாகவே இருப்பேன். மாற்றம் ஏற்படுவது அவனில், என்னில் அல்ல! நான் எப்போதும் மாறாதவன்; நான் எப்போதும் நிலையானவன், சமமானவன்.**

**எடுத்துக்காட்டாக, ஒரு கண்ணாடியில் உங்களைப் பாருங்கள்; அது அப்படியே உங்களைப் பிரதிபலிக்கும். நீங்கள் தீவிரமான தோற்றத்தில் இருந்தால், கண்ணாடியிலும் அதே தீவிரத்தில் இருப்பீர்கள்; நீங்கள் புன்முறுவல் செய்தால் கண்ணாடியில் நீங்கள் உங்களை அப்படியே பார்க்க முடியும். உங்கள் முகத்தின் அம்சங்களை உருமாற்றிப் பார்ப்பதானால், கண்ணாடியிலும் அதே கோணலான முகம்தான் தெரியும். வித்தியாசங்கள் அனைத்தும் உங்களில்தான் உள்ளன; கண்ணாடியில் அல்ல! கண்ணாடியில் எந்த மாற்றமும் இல்லை; உங்கள் முகபாவனைகளில்தான் மாற்றம். கண்ணாடி மாறாதது, அசையாதது மேலும் எப்போதும் நிலையானது. நானும் கண்ணாடியைப் போலத்தான். மாற்றத்தை நீங்கள் காண்பது உங்களிடத்தில் - என்னிடத்தில் அல்ல. நான் எப்போதுமே மிகவும் நிலையானவனாக இருக்கிறேன், அதைக் கற்பனை செய்து பார்க்க முடியாது.**

அதன் பின்னர், அன்று பாபா இவ்வாறு வெளிப்படுத்தினார்: **"நான் 40 நாட்கள் ஹர்வான் மலையில் ஏகாந்தவாசம் இருக்க முடிவு செய்துள்ளேன். நீங்கள் அத்தனை நாட்களுக்கும் போதுமான பொருட்களை வைத்துக் கொள்ளுங்கள்."**

ஆகஸ்ட் 6ஆம் நாள் பாபா குடிலைப் பார்வையிடச் சென்றார். மிகச்சிறிய குடில்; பாபா தனியாகக் கால்நீட்டிப் படுப்பதற்கு மட்டுமே போதுமான குறுகிய இடம்; குடிலின் கூரை இரண்டு பக்கமும் சிறிது வெளியே தள்ளி நின்றது, இரண்டு பாதுகாவலர்களுக்கும் அமர வசதியாக அமைந்தது. பாபா உள்ளே அமர்ந்துகொண்டு, குடிலைப் பூட்டிவிடுவதாகக் கூறினார்.

ஹர்வான் மலையில் அமைந்த குடிலைச் சுற்றியுள்ளப் பகுதியில், புலி வேட்டையாடப் படுவதாகத் தெரியவந்தது; சாஞ்சி, பாபாவிடம், அவர்கள் புலிகளால் தாக்கப்படும் அபாயம் இருப்பதாக, கிராமத்தில் கேள்விப்பட்டதை எடுத்துக் கூறினார்.

**"பயப்படாதீர்கள். நான் இங்கு இருக்கிறேன். அதிகபட்சம் புலி என்ன செய்யும்? அது உங்களை சாப்பிடும். ஆனால், எனக்கு சேவை செய்யும்போது நீங்கள் உயிர்த்தியாகம் செய்தால், உங்கள் வாழ்க்கை, பயனுள்ளதாக மாறிவிடும்"** என்று பாபா பதிலளித்தார்.

உள்ளூர் காஷ்மீர் மக்கள் மிகவும் நேர்மையானவர்கள்; மேலும் பாபா அங்கிருந்த வேளையில் அவருடைய சகவாசத்தை அம்மக்களுக்கு அளித்தார். அவர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம்கள். மாலை நேரங்களில், பாபா பொதுவான பேச்சுக்களையும் விளக்கங்களையும் அளித்தார். சாதுக்கள் மற்றும் பரிபூரண நிலையை அடைந்தவர்களைப் பற்றி கூறுகையில் பாபா, **"இறைநிலையை அடைந்த பின்பு, பூமிக்குத் திரும்பி வரும் சத்குருக்கள் அனைத்திலும் மேன்மையானவர்கள்"** என்று தெரிவித்தார்.

ஹர்வான் மலையில், ஆகஸ்ட் 7ஆம் நாள், பாபா அவரது ஏகாந்தவாசத்தைத் தொடங்குவதற்கு முன்னால், கீழ்வரும் கட்டளைகளை அனைவருக்கும் தெரிவித்தார்:

- **இன்றிலிருந்து எவரும் பாபாவை தரிசனம் செய்யவோ அல்லது அவரைத் தொடவோ கூடாது.**
- **குடிலின் அருகில் பாதுகாவலர்களாக இருக்கும் குஸ்தாஜி மற்றும் புவாஸாஹேபை தவிர வேறு எவரும் பாபாவின் குடிலருகில் வரக்கூடாது.**
- **ராம்ஜூ கடிதம் மற்றும் தொலைத்தந்திகளைக் கொடுத்துவிட்டு உடனே திரும்பிச் செல்ல வேண்டும்.**
- **பாபா அழைக்கும் வேளையில் குஸ்தாஜி, புவாஸாஹேப் இருவர் மட்டுமே பதில் தரவேண்டும்.**
- **சோட்டா பாபாவை எவரும் தொடக்கூடாது. அவன் பாபாவுடன் குடிலினுள்ளே இருப்பான், உணவு மற்றும் தேநீருக்காகக் கீழே வருவான்.**
- **எவரும் சிறுவர்களுடன்** (ஆகா அலி, அலி அக்பர்) **பேசவோ, எந்தத் தொடர்பும் கொள்ளவோ அல்லது அவர்களைத் தொடவோ கூடாது.**
- **எவரும் சிறுவர்களின் குடிலுக்கு அல்லது சிறுவர்கள் மண்டலியின் குடிலுக்குப் போகக்கூடாது.**
- **சாஞ்சி மட்டுமே பாபாவுக்கான செய்திகளை எடுத்துச் செல்லலாம். மேலும் அவர் பாபாவிற்கு வேண்டிய உணவை எடுத்து வரவும், உண்ட பிறகு தட்டுகளைத் திருப்பி எடுத்துச்செல்லவும் அனுமதிக்கப்பட்டார்.**

மெஹர் பாபா ஏகாந்தவாசம் இருந்த ஹர்வான் மலையின் சுற்றுப்புற இயற்கைக்காட்சிகளை உற்றுநோக்கிய வண்ணம் இதை வெளிப்படுத்தினார்:

**"ஏகாந்தவாசத்திற்காக நான் தேர்ந்தெடுத்த இந்த இடம் கிறிஸ்துவோடு தொடர்புடையது. அவருடைய உடல் இங்கே புதைக்கப்பட்டது."**

அன்று மதிய வேளையில் பாபா, மண்டலிக்கு ஒரு சில அறிவுறுத்தல்களை எடுத்துக்கூறி, பின்னர் அவரை உடலளவில் தொடுவதனால் ஒருவர் அடையும் நன்மையைப் பற்றி விவரித்தார்:

**முதலில் நான் பேசுவதை நிறுத்தினேன்; அடுத்ததாக எழுதுவதை நிறுத்தினேன்; மேலும் இப்போது நான் பணத்தைத் தொடுவதில்லை. இருந்தும் நான் எண்ணிலடங்கா மக்களுக்கு தரிசனம் அளித்து, எனது பாதங்களைத் தொடவும் அனுமதித்தேன். என்னுடைய விருப்பத்தோடும், அன்புடனும் நான் அவர்களை அரவணைக்கவும் செய்தேன். இவ்வாறு என்னை உடலளவில் தொடுவதை அனுமதிக்கும் வேளையில், இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று நான் மீண்டும் மீண்டும் உங்கள் அனைவருக்கும் சொல்லிக் கொண்டிருந்தேன்.**

**நான், எனது பாதங்களை அழுத்திவிட, என்னை தரிசனம் செய்ய மற்றும் என் அரவணைப்பைப் பெற உங்களை அனுமதித்தேன். இப்படி ஏதாவது ஒரு முறையில் என்னைத் தொடும் வாய்ப்பை அடையப்பெற்றீர்கள். இத்தகைய உடலளவிலான தொடர்பு விலைமதிப்பற்றது; இதுபோன்ற வாய்ப்பை, பின்னர் அடைய முடியாது என்றும் நான் பலமுறை உங்களை எச்சரித்தேன். இதற்கு நீங்கள் அழுது மன்றாட வேண்டும்; அப்போதுதான் இந்தத்** (உடலளவு) **தொடர்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதன் மதிப்பைப் பாராட்டுவீர்கள். எனவே வாய்ப்பு கிடைக்கும்போது அதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் இல்லையேல், பின்னால் அதற்காக அழுது, புலம்பி, வருந்தவேண்டிய காலம் வரும்.**

**பகல் வேளையில் இந்தக் குடிலில் ஓய்வெடுத்து, இரவில் எனது பணியில் மும்முரமாக இருப்பேன். என்னுடைய தரிசனத்திற்காக எவரும் வரக்கூடாது - தூரத்திலிருந்து கூட அனுமதி இல்லை. நான் யாரையாவது அழைத்தாலும் என் உடலைத் தொடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.**

மெஹர் பாபா மேலும் விரிவாகக் கூறினார்:

**அன்பிற்குரியவரின் பாசமும் நேசமும், பொதுவானதும் சாதாரணமானதும் அல்ல! அவரது பாவனை அல்லது விருப்பம், அவரது மனநிலை மற்றும் செயல்கள், அவரது அன்பர்களின் மனதில் ஏதேனும் சந்தேகத்தை உருவாக்கலாம். எங்கு சந்தேகம் உள்ளதோ அங்கு அன்பு இராது, ஏனெனில் சந்தேகமும் அன்பும் இணைந்திருக்க இயலாதவை. குருநாதரை சந்தேகப்படுபவன் அவரிடம் அன்பு செலுத்தமுடியாது.**

**கல்யாண், அர்ஜுன் இருவரும், முறையே, அவர்களின் குருநாதர்களான சுவாமி ராம்தாஸ் மற்றும் கிருஷ்ணாவின் சீடர்கள்,**

**குருட்டுத்தனமான அன்பு படைத்தவர்கள். ஆனால், ஜீஸஸுக்கு அப்படி எவரும் கிடையாது. அவதார புருஷர் அவரை நேசிப்பவர்களுக்காக இவ்வுலகில் வந்து அவர்களுக்குச் செய்ய வேண்டியதை, உலகளாவிய பணியைத் தொடரும் வேளையில், கூடவே அதையும் செய்கிறார். அனைத்து அவதார புருஷர்களுக்கும் அவ்வாறு பிரியமானவர்கள் இருப்பார்கள் என்று கூறமுடியாது.**

**ஸொராஸ்டர்** 6000 **வருடங்களுக்கு முன்பு வாழ்ந்து வந்தார். அவருடைய குருநாதர் ஸெமைட், யூதர் இனத்தைச் சார்ந்தவர். உலகம் அறிந்த மதம் அவர் பெயரில் வெளிவந்தாலும் மதத்தின் பெயரில் அனைத்து சடங்கு சம்பிரதாயங்களும் வெளிவரக் காரணமாக இருந்தவர்கள் தஸ்தூர்கள்; ஸொராஸ்டரைப் பின்பற்றுபவர்கள் இந்தச் சடங்கு முறைகளை, பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு கடைப்பிடிக்கத் தொடங்கினர். உதாரணமாக அவர்கள் அணியும் 'குஸ்தி'** (பூணூல்). **இதற்கும் அவருடைய போதனைகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. நான் உங்களுக்குச் சொல்வது முற்றிலும் உண்மை**!

**ஸொராஸ்டர் ஒரு மிகப்பெரிய ஸூஃபி ஞானி. ஸூஃபி இயக்கத்தின் தந்தை; அதன் அடித்தளம், அதன் படைப்பு அவருக்குப் பெருமளவில் கடமைப்பட்டிருக்கிறது. ஸூஃபி இயக்கம் ஸொராஸ்டரிடம் உருவாகி முஹமதின் காலத்தில் முடிவுற்றது.**

ஆகஸ்ட் 7ஆம் நாள் முதல், பாபா, குடிலில் அமைக்கப்பட்ட ஒரு சிறிய ஜன்னல் துவாரம் வழியாக வழங்கப்படும் தண்ணீரை மட்டுமே அருந்தி, ஏகாந்தவாசம் இருந்ததோடு உபவாசமும் மேற்கொண்டார். ஒரு குறிப்பிட்ட நேரத்தில், பாபா உள்ளேயிருந்து கைகளைத் தட்டும்போது, அவரை ஒருவரும் நேரடியாகப் பார்க்காத வண்ணம் தண்ணீர் தரப்பட்டது.

ராம்ஜூ, சாஞ்சி இருவரும் தினமும் இருமுறை பாபாவிற்குத் தண்ணீரும், குஸ்தாஜி, புவாஸாஹேப் இருவருக்கும் பாலும் கொண்டுவந்தனர். குடிலின் அருகிலிருக்கும்போது, தேவைப்பட்டால், கை சைகைகளால் மட்டும் தொடர்புகொண்டு, முற்றிலும் நிசப்தமான சூழ்நிலையைக் காக்கவேண்டியது அவசியம்.

அடுத்த நாள், ஆகஸ்டு 8ஆம் தேதி, மெஹர் பாபாவின் உத்தரவின்படி **ஹர்வான்** கிராமத்து மக்கள் அனைவருக்கும் தாராளமான விருந்தளிக்கப்பட்டது; அனைவரும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

அவ்வேளையில், ஹர்வான் மலை, பலரும் விரும்பத்தக்க வேட்டை மைதானமாகத் திகழ்ந்தது; புலி, கரடி, ஓநாய் போன்ற காட்டு விலங்குகள் ஏராளம் இருந்தன; இரவெல்லாம் இந்தக் கொடுமையான விலங்குகளின் கர்ஜனைகள், ஆரவாரங்களை இரவு பாதுகாவலர்கள் கேட்பதுண்டு. அவர்கள் எக்காரணத்தைக் கொண்டும், இருந்த இடத்திலிருந்து அசையக்கூடாது என்பது பாபாவின் கட்டளை. துப்பாக்கி இல்லாமல் மலையில் பிரவேசிப்பது முட்டாள்தனம் என கிராமத்தார் எச்சரித்தனர்.

அவர்களிடமிருந்த ஒரே ஆயுதம் தேள், பாம்பு மற்றும் சிறு சிறு பிராணிகளைத் துரத்தத் தேவையான ஒரு கோல் மட்டுமே! இரவில் விறகுகளால் நெருப்பை மூட்டி குளிர் காய்வதோடு, விலங்குகளையும் கண்காணித்தனர்.

ஆகஸ்ட் 9ஆம் நாள் சாஞ்சி தனியாக, இரவு பாதுகாவலனாகப் பணிபுரிந்தார். அன்று ராம்ஜூ விறகு எடுத்துவர மறந்து விட்டதால், நெருப்பு ஏற்ற முடியாமல் சாஞ்சி தனியாக இருந்தபோது, அனைத்து பக்கங்களிலிருந்தும் வந்த அலறல் மற்றும் அழுகைக்குரலைக் கேட்டுக்கொண்டிருந்த அவர், இரவின் கும்மிருட்டில் பயந்து போனார். மேலும் சாஞ்சி தனது அருகில் சில பிராணிகளின் காலடி ஓசையைக் கேட்க முடிந்தது. அவர் பாபாவை அழைத்து, "பாபா, நான் பயத்தில் நடுங்கிக் கொண்டு இருக்கிறேன்; இரவு முழுவதும் இங்கே அமர முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை" எனக் கூறினார்.

பாபா, சோட்டா பாபா வழியாக பதிலளித்தார்: **"கடவுளின் நிமித்தம், நான் உங்களிடமிருந்து ஓரடி தூரத்தில் கூட இல்லை; நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? புலி வந்தால், நான் உங்களை அதன் முதுகில் சவாரி செய்ய வைப்பேன்."**

"இல்லை, பாபா, என்னால் புலியின் முதுகில் அமரமுடியாது."

**"சரி, அப்படியானால், நான் புலியை உங்கள் முதுகில் அமர வைப்பேன்."**

சாஞ்சி மன்றாடினார், "பாபா, தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள். நான் இந்தக் கும்மிருட்டில் பயத்தில் உயிரை விட்டுவிடுவேன்."

**"அது சரி; எப்படியும், நீங்கள் இங்கே காஷ்மீரில்தான் இறக்கப்போகிறீர்கள். ஆகையால் இறப்பை எண்ணி பயப்படுவானேன்? பயப்படாதீர்கள். இன்று புலியின் அப்பன் கூட உங்களைக் கொல்ல முடியாது. நான் இங்கு இருக்கிறேன். புலி வந்தால் எனது விரலசைவில் அது பயந்து நடுங்கிச் சென்றுவிடும்"** என்றார் பாபா.

சாஞ்சி இன்னமும் இரவு பாதுகாவலர் பணியைத் தொடர்வதில் தயக்கம் காண்பித்தார், ஆனால், பாபாவின் துடுக்குத்தனமிக்க நகைச்சுவை பேச்சின் மூலம், இரவு ஒரு மணியிலிருந்து காலை ஆறு மணிவரை அந்தப் பணியைச் செய்யவைத்தார். இரவு ஒரு மணிவரை புவாஸாஹேப், சற்றும் பயமின்றி இரவு பாதுகாவலனாகப் பணிபுரிந்தார்.

மறுநாள் காலையில், பாபா குடிலிலிருந்து வெளியே வந்து மண்டலியின் இருப்பிடத்திற்குச் சென்றார். எதிர்பாராதவிதமாக நாற்பது நாட்களுக்கு எனத் திட்டமிட்ட ஏகாந்தவாசம் இரண்டரை நாட்களில் நிறைவடைந்து விட்டதாக பாபா அறிவித்தார். மண்டலியில் சாஞ்சி முதன்முதலில் அந்த முடிவை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்.

மெஹர் பாபா பாதிரியின் சேவையைப் பாராட்டி, மகிழ்ச்சியில் கலைமான் கொம்புகளைப் பரிசாக வழங்கினார். மண்டலி அவர்களின் நான்கு

நாள் உபவாசத்தை நிறைவு செய்தனர். அன்று பாபா, ராவ்ஸாஹேபுடன் ஹர்வான் மலையேறி இரண்டு சிறுவர்களுடன் குடிலில் அமர்ந்திருந்தார்.

மாலையில் மண்டலி அனைவரும் கடைசி முறையாக ஹர்வான் மலைக்குச் சென்று புகைப்படங்கள் எடுத்தனர். மெஹர் பாபாவின் புகைப்படம் ஒன்றில் விபரங்களைக் குறித்து, குடிலினுள்ளே வைத்தனர். இரவில் பாபா அனைவருடனும் திரும்பி வந்தார்.

பாபா, அடுத்த நாள் காஷ்மீரிலிருந்து புறப்பட முடிவு செய்தார். இதைக் கேள்விப்பட்ட ஹர்வான் கிராம மக்கள் பாபாவின் தரிசனத்திற்காக ஊர்வலமாக வந்தனர். கிராம தலைவர், "ஹர்வான் கிராமம் முழுவதும் ஸ்ரீ மெஹர் பாபாவின் வருகையால் புனிதமாக்கப்பட்டுள்ளது" என நன்றியுடன் பறைசாற்றினார்.

ஆகஸ்ட் 11ஆம் நாள் அதிகாலையில், பாபா மண்டலியுடன் புறப்பட்டார். பயணத்தின்போது பாபா திடீரென, பருப்பு தயார் செய்யக் கூறினார்; ஓடும் பேருந்தில் உணவு தயார் செய்வது என்பது சிரமமாக இருந்தாலும் ராம்ஜூ, விஷ்ணு இருவரும் மண்ணெண்ணெய் அடுப்பை எரியவிட்டு, சமையல் செய்தனர். கைகளில் சிறிய சிறிய காயங்கள் பட்டாலும், **"எனக்காக நீங்கள் பருப்பைத் தயார் செய்து, இன்று உங்கள் விரல்களைக் காயப்படுத்தியதன் மூலம், ஒரு நாள் உங்களை ஏதோ ஒன்றாக மாற்ற நீங்கள் என்னைக் கட்டாயப்படுத்தி உள்ளீர்கள்"** என்ற பாபாவின் பாராட்டு அவர்களை மகிழ்ச்சியடையச் செய்தது.

வழியில் ஒரு நீரோடையில் அமர்ந்து பாபா பருப்பும், ரொட்டியும் உண்டார். சிறிது உஷ்ணமாக இருந்ததால் பாபா அவருடைய கம்லி கோட்டைக் கழற்றினார். இந்தக் கம்லி கோட்டிற்கும் பாபா காஷ்மீரில் செய்த ஆன்மீக உள்பணிக்கும் பெரிய அளவில் சம்பந்தம் உண்டு - ஆனால், பாபா அதை விளக்கவில்லை.

நான்கு நாட்கள் பயணம் செய்து ஆகஸ்ட் 15ஆம் நாள் பானிபட் நகரை வந்து சேர்ந்தனர். பாபா, ஆகா அலியின் உதவியோடு தேநீர் தயார் செய்து அனைவருக்கும் வழங்கினார். அதற்குப் பிறகு பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"இன்றிலிருந்து வழியில் ஏதேனும் நகரம் அல்லது கிராமம் எங்குமே நிற்காமல் நேரடியாகச் செல்லப்போகிறோம்."**

மெஹர் பாபா மண்டலியுடன் பானிபட்டிலிருந்து புறப்பட்டு, தொடர்ந்து, வழியில் திறந்த வெளியில், மரத்தின்கீழ் மற்றும் பேருந்தில் தூங்கி ஓய்வெடுத்தனர். காஷ்மீருக்குச் செல்லும்போது ஹோட்டல்கள், தர்மசாலைகள் அல்லது அரசு விடுதிகளில் தங்கினர். ஆனால், ஆகஸ்ட் 15ஆம் நாளிலிருந்து நட்சத்திரங்களுக்குக் கீழே, திறந்த வெளியில், காடுகள், நதிக்கரை ஓரங்களில் அடைக்கலமாயினர். சில நேரங்களில் பருவ மழையிலும் நனைய வேண்டியதாயிற்று.

டோல்பூர் மற்றும் குவாலியருக்கு இடையேயான பயணத்தின் போது, பாதிரியை ராணுவ அதிகாரி என்று நினைத்து, சில படைவீரர்கள்

மரியாதையின் நிமித்தம் வணக்கம் தெரிவித்தனர். அதே நிகழ்ச்சி குணா வந்தபோதும் நடந்ததைக் கண்டு பாதிரி வாய்விட்டு சிரித்தார் - பாதிரியின் உண்மை நிலை அவர்களுக்குத் தெரியாது; இரவு பகலெல்லாம் தனியாகப் பேருந்தை ஓட்டி, எல்லாவற்றிற்கும் மேலாக பாபாவின் கேலி, கிண்டல் மற்றும் அவதூறுகளை அமைதியாகத் தாங்கிக் கொள்வது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

1929 ஆகஸ்ட் 18ஆம் நாள் பேருந்தின் மேல் வைத்திருந்த படுக்கைகள் மழையில் நனைந்ததால், தரையில் படுக்கைகள் இல்லாமல் தூங்க வேண்டியதாயிற்று!

அந்த நாட்களில் மோட்டார் வாகனங்கள் ஒரு அரிய காட்சியாக இருந்ததால், வழிப்போக்கர்கள், தனியாக வடிவமைக்கப்பட்ட பேருந்து மற்றும் அதன் பயணிகளை முறைத்துப் பார்த்தது இயல்பாக இருந்தது.

கால்கட் வழியாக நிம்ராணி கிராமத்தை வந்தடைந்ததும் பாபா பேருந்தை நிறுத்தி, தேநீர் தயார் செய்து அனைவருக்கும் வழங்கினார்.

நர்மதா நதியின் ஒரு கிளை அவ்வழியே ஓடியது. பாபா அனைத்து மண்டலியையும் அழைத்து, அவரை நீராடவைக்கும் ஒரு வாய்ப்பை வழங்கினார். அதற்குப் பிறகு பாபா, குஸ்தாஜியை நீராட்டினார்; அவர் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பதை பாபா குறிப்பிட்டார்.

பயணத்தின்போது விஷ்ணு பாத்திரங்களை சுத்தம் செய்யும் வேளையில், பாபா அதில் நீரை ஊற்றி உதவினார். வெளியளவில் இது மிகச்சிறிய நிகழ்வாகத் தோன்றினாலும், குருநாதரின் உட்பணியின் முக்கியத்துவத்தை எவராலும் ஆழங்காண முடியாது. பாபா இரவும் பகலும் வெளியளவில் சுறுசுறுப்பாக இருந்தபோதிலும், உள்ளளவில் அவருடைய பணியின் மகத்துவத்தை எவரும் உணர்ந்ததில்லை.

மெஹர் பாபா மண்டலியுடன் மறுபடியும் ஆகஸ்ட் 20ஆம் நாள் துலியா வந்து சேர்ந்து, காளேமாமா இல்லத்தில் தங்கியிருந்தார். பலர் பாபாவின் தரிசனத்திற்காக அங்கு வந்தனர். துலியாவில் நீதிபதியாகப் பணிபுரிந்த ஸாவந்த் என்பவர் வாழ்க்கையின் அதிருப்தியைக் குறித்து முறையிட்டார். பல விஷயங்களை எடுத்துரைத்து பாபா, பேரானந்தத்தைப் பற்றி மறுபடியும் விளக்கமளித்தார்; இது இதர தலைப்புகளுக்கும் வழிவகுத்தது.

**முழுப் பிரபஞ்சத்திலும் பேரின்பம் நிறைந்துள்ளது. உண்மையில் பேரின்பத்தைத் தவிர வேறொன்றுமில்லை. ஆனால், சாமான்ய மனிதன் இதை அடைய முடியாது என்பதால், உலகப்பொருட்களுக்குப் பின்னால் அலைந்து, உடைமைகளை அடைவதன் மூலம், உலகிலிருந்து இன்பத்தைப் பெற முயற்சிக்கிறான். ஒன்றன்பின் ஒன்றாக இன்பத்தை அடைய முயலும் வேளையில், அது நிலைக்காமல் மறைந்து போவதால் அதிருப்தியடைகிறான். ஒன்றில் வெறுப்படையும்போது, அவன் மற்றொன்றை அடைய முயற்சிக்கிறான். அதுவும் சுவையற்றது என்று**

நிருபணமாகும் தருவாயில், வேறு ஏதாவது ஒன்று முயற்சிக்கப்படுகிறது; இப்படி, பல ஏமாற்றங்கள். காலங்காலமாக, மனிதர்கள் வீணாக, பிறவிக்குப் பின் பிறவி எடுத்து உலக இன்பத்தைப்பெற முயற்சிக்கிறார்கள்.

ஆனால், இந்தப் பேரின்பத்தை எங்குதான் கண்டுகொள்வது? இதற்காக மனிதன் மேற்கொள்ளும் முயற்சி, பல்லாண்டுகளாக ஒரு பலனையும் அளிக்கவில்லை என்றால் அவன் என்னதான் செய்யவேண்டும்? உண்மையான இன்பத்தை அவன் எப்படிக் காண்பான்? சத்குருக்கள் மற்றும் அவதார புருஷர்கள் மட்டுமே தெய்வீக ஆனந்தத்தை அனுபவிக்கிறார்கள். உங்களுக்கு ஏதாவது தேவையானால், அது யாரிடம் இருக்கிறதோ அவரை நாடுவதுதானே முறையாகும்! அதுபோல் இந்தப் பேரின்பத்தை அடைய, அதைத் தொடர்ந்து நடைமுறையில் அனுபவிக்கும் ஒருவரிடம்தானே (இறைநிலையை அடைந்த ஒருவரிடம்) செல்லவேண்டும்! அவர்கள்தான் அதை வழங்க முடியும், அதற்காக நீங்கள் அவருடைய சகவாசத்தில் இருக்கவேண்டியது அவசியம்.

இவ்வாறு, இறைநிலையை அடைந்தவர்களின் சகவாசத்தில் இருப்பதே ஆனந்தத்தை அடைய மிகச் சிறந்த வழியாகும். ஒரு சத்குருவின் கருணையால் ஒருவர் கணப்பொழுதில் அதை அடைய முடியும். எனவே, குருநாதரின் கருணை இன்றியமையாதது; ஆனால், அதை அவருடன் இருந்து, இதயபூர்வமாக சேவை செய்வதன் மூலம் அடைய முடியும்.

இதைத் தெளிவு படுத்தும் வகையில் மெஹர் பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

இறைநிலையை அடைந்தவர்களில் இரண்டு வகை: ஒன்று ஸலிக் அல்லது சத்குரு, மற்றொன்று மஜ்ஜூப். இவர்கள், பரிபூரண பேரானந்தத்தை அனுபவிப்பவர்கள்; ஆனால், வெளியளவில் இவ்விரண்டு வகையிலும் மிகுந்த வேறுபாடு உண்டு. மஜ்ஜூப்கள், கிழிந்த, கந்தை துணிகளை அணிந்து அல்லது பெரும்பாலும் நிர்வாணமாகத் திரிவார்கள். அவர்கள் அசுத்தமான சூழலில் வாழ்ந்து, உலகத்தையும், அதில் வாழும் மக்களையும் மறந்து பித்து பிடித்தவர் அல்லது பிச்சைக்காரர்களைப் போலத் தோற்றமளிக்கிறார்கள். மாறாக ஸலிக் அல்லது சத்குருக்கள், இறைநிலையை அடைந்திருந்தாலும் சாதாரண மனிதனைப் போலவே - உண்டு, உறங்கி, அருந்தி, பேசி, கஷ்டங்களை அனுபவிப்பது போலத் தோன்றுகிறார்கள்.

அப்படியானால் அவர்களை எப்படி அடையாளம் கண்டுகொள்வீர்கள்? சாதுக்கள் என்றழைக்கப்படும் லட்சக்கணக்கான நபர்களில், ஒரே ஒருவர் மட்டும் உண்மையானவராக இருக்கலாம். அதை எப்படி சோதிப்பது? சிறந்த சோதனை என்பது அவருடைய சகவாசத்தில் இருப்பது; அவருடன் தொடர்பு வைத்து, அவருடனே வாழ்வது! அப்போது அவரை அறிந்து கொள்ளமுடியும்; மேலும் உங்களால் இயன்றவரையில்,

**உங்கள் தராதரங்களின்படி, எடைபோடும் வேளையில் அவரை ஓரளவிற்குப் புரிந்து கொள்ளமுடியும்.**

**உதாரணமாக, இரண்டு டம்ளர்களில் நீர் நிரம்பியுள்ளது. ஒரு டம்ளரில் சிறிதளவு உப்பு கலந்துள்ளது. ஆனால், உங்களுக்கு எப்படித் தெரியும் எது எதுவென்று? அதற்காக நீங்கள் நீரை சுவைத்துப் பார்க்க வேண்டியது அவசியம்; அப்போதுதான் வித்தியாசத்தைக் கண்டுகொள்ள முடியும். அதுபோல், ஒரு குருநாதரின் நெருங்கிய சகவாசத்தில் இருக்கும்போது யார் உண்மை, யார் போலி என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.**

"குருநாதரின் சகவாசத்தில் இருக்கும் ஆர்வத்தை நாம் எவ்வாறு அடையப்பெற முடியும்?" என்று கூட்டத்தில் ஒருவர் பாபாவிடம் வினவினார்.

**"உண்மையான பேரின்பத்தை அடையும் ஏக்கத்தைத் தவிர, அனைத்து ஆசைகளையும் அழிப்பதன் மூலம். இது முதலில் அவருடைய சகவாசத்தில் வரும் வாய்ப்பை வழங்கும்; மேலும், அவருடன் உங்களுக்கான தொடர்பும், அவருக்கு நீங்கள் செய்யும் சேவையும், எஞ்சிய அனைத்தையும் நல்கும். நீங்கள் உண்மையான பேரின்பத்தை அடையப் பெறுவீர்கள்!"** என்று பாபா பதிலளித்தார்.

மீண்டும் ஒருவர் இவ்வாறு முறையிட்டார்: "ஆனால், பாபா, அந்த வாய்ப்பை நாங்கள் எப்படிப் பெறமுடியும்? எல்லோரும் கடவுளை நினைத்து, பேரின்பத்திற்கான ஏக்கத்தை எப்படி உருவாக்குவது?"

மெஹர் பாபா விளக்கமாக பதிலளித்தார்:

**இயற்கையாகவே இது ஒருவரின் மனப்படிவங்களைப் பொறுத்தது. கடவுள் நிலையை அடைய, ஒவ்வொரு மானிடனும், கடந்து செல்ல வேண்டிய அனுபவத்தின் மார்க்கம் என்று ஒன்று உள்ளது.**

**உதாரணமாக, கடவுளைப் பற்றிய எந்த சிந்தனையும் இல்லாமல் அல்லது பேரின்பத்தை அடையும் எவ்வித ஆர்வமும் இல்லாமலிருக்கும் ஒரு சாதாரண மனிதன், அவரது பரோபகார இயல்பு மற்றும் ஏழைகளுக்கான உண்மையான உணர்வின் அடிப்படையில், தொண்டு செய்யும் நோக்கத்தில், ஏதாவது உதவி செய்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். இது ஒரு நல்ல செயலாகும், அதனால்தான் அவதிப்படுபவர்களுக்கு அவர் காட்டிய கருணை மற்றும் அவர் செய்த உதவியின் காரணமாக, உள்ளளவில் அவருக்குத் தெரியாமலே முன்னேறுகிறார்.**

**அவரது கனிவான மற்றும் தாராள மனப்பான்மை, அவர் மேலும் மேலும் முன்னேற உதவும் தருணத்தில், உண்மையான பேரின்பத்திற்கான ஆசையும் தானே உருவாகும் காலம் வரும். இந்த ஆசை அவரை அனைத்திற்கும் அதிபதியாகத் திகழும் ஒரு சத்குருவிடம் அழைத்து வருவதோடு, இறுதியில் அவர் பேரின்பத்தையும் அடைகிறார். ஆனால், உண்மையான பேரின்பத்திற்கான ஆர்வத்தை உருவாக்கும் இந்நிலையை**

**அடைவதற்கு முன்னர், அவர் நல்ல மற்றும் தீய மனப்படிவங்களின் தொடர்ச்சியான அனுபவங்களைக் கடந்து செல்ல வேண்டும்.**

**உண்மையில், இன்பம்-துன்பம், ஒழுக்கம்-களங்கம், நல்லது-தீயது என்று எதுவும் இல்லை. பேரின்பம் மட்டுமே நிரம்பி வழிகிறது! இன்பம், துன்பம், ஒழுக்கம், களங்கம், நல்லது, தீயது போன்ற இவற்றின் அனுபவங்களில் ஒன்றுமே இல்லை. ஆனால், அவை மேன்மையான விஷயங்களுக்குத் தேவையான படிக்கற்களாக அமையும்போது, அவை மாயையைச் சார்ந்தவை என்றாலும், அதை அனைவரும் கடந்து செல்ல வேண்டியது அவசியம்.**

**ஒரு சத்குரு மட்டுமே ஒருவரின் 'நிகழ்வுகளின் போக்கை' மாற்றி, திசை திருப்ப அல்லது அழிக்க முடியும். அதாவது, அவர் ஒரு நபரின் விதியின் போக்கை மாற்ற முடியும். ஒருவர் அவருடைய குருநாதரின் தொடர்பில் வரும் தருணத்தில் இது தானாகவே நிகழ்கிறது.**

**இவ்வாறு, ஒருவரின் மார்க்கத்தின் அனைத்து அனுபவங்கள் மற்றும் மனப்படிவங்கள் முற்றிலும் அழிந்தாலொழிய, அவர் இறைநிலையை அடைய வாய்ப்பே இல்லை. சத்குரு மட்டுமே இதைச் செய்ய முடியும்.**

மெஹர் பாபா மண்டலியுடன் துலியாவிலிருந்து ஆகஸ்ட் 24ஆம் நாள் ஔரங்காபாத் புறப்பட்டுச் சென்றார்.

மதியம் மூன்று மணியளவில் எல்லோரா குகைகளைச் சென்றடைந்ததும், பாபா ஒரு குகையில் 15 நிமிடங்கள் தனியாக அமர்ந்திருந்தார். அடுத்த நாள், நாசிக் செல்ல முடிவு செய்து, இரவில் அங்கு வந்து சேர்ந்தனர்.

உடன்சென்ற சிறுவர்கள் ஆகா அலி, அலி அக்பர், சோட்டா பாபா மூவரையும் ராவ்ஸாஹேபின் கண்காணிப்பில், குவெட்டாவிலுள்ள அவரவர் இல்லங்களுக்கு அனுப்பிவைக்க பாபா முடிவு செய்தார். பாபாவும் மண்டலியும் மறுநாள் ரயில் நிலையம் சென்று மூவருக்கும் விடையளித்தனர். பாபா மூன்று சிறுவர்களையும் அன்போடு அள்ளி அரவணைத்தது, மனதைக் கவரும் காட்சியாக அமைந்தது.

பாபா, பின்னர், இவ்வாறு குறிப்பிட்டார்: **"நான் அலியைப் பிரிந்த அந்த வலியை உணர்கிறேன். நீண்ட நாட்களாக இரவும் பகலும் அவனை என்னருகில் வைத்திருந்தேன்; இப்போது அவனை ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் அனுப்பிவிட்டேன்.**

**"எனது 'திடீர் விருப்பம்' உண்மையிலேயே அற்புதமானது. இப்போது அவர்களை எண்ணி என் இதயம் வலிக்கிறது. ஏனெனில் இந்தப் பிரிவு அவர்களைப் பெரிதும் வருந்த வைக்கும். அவர்களது வலியின் அம்புகள் ஏற்கனவே என் இதயத்தைத் துளைக்கின்றன!"**

அதற்குப் பிறகு, பாபா மண்டலியுடன் பெண் மண்டலி மெஹரா, தவ்லத்மாய் மற்றும் பலர் வாழும் குவாட்டர்ஸுக்கு வந்தார். மெஹர் பாபா பயணம் செய்யும்போதெல்லாம் பெண் மண்டலி, நகைச்சுவை நாடகங்களைத் தயார் செய்து, பாபா திரும்பி வந்ததும், நாடகத்தை அரங்கேற்றுவது பழக்கம். பாபாவிற்குப் பிரியமான தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து, அதை சிறப்பாக ஒத்திகை பார்த்து, பாபாவை, எப்பொழுதும் மகிழ்விக்கும் எண்ணத்தில் தயார் செய்தனர்.

1929, ஆகஸ்ட் 27ஆம் நாள் மெஹர் பாபா, மெஹராபாத் புறப்பட்டுச் சென்றார்; 77 மைல் தூரம் சென்றதும், ராஹுரி அருகில் பேருந்தை நிறுத்தி, பாபா ஒரு மரத்தின்கீழ் மண்டலியுடன் அமர்ந்து, எதிர்வரும் பெர்ஸியா பயணத் திட்டங்களைப் பற்றி விவாதித்தார். மாலையில் சூரியன் மறையும் வேளையில், பாபா மண்டலியிடம் திடீரென அவரது ஆரத்தியை நிகழ்த்தக் கூறினார். மண்டலி உடனே ஆரத்தி பாடி, பாபாவின் பாதங்களில் பணிந்து தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். அதன் பின்பு விவாதம் மேலும் ஐந்து நிமிடங்கள் தொடர்ந்தது; பாபா, அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில், மீண்டும் ஆரத்தியை நிகழ்த்தக் கோரினார். இப்படி, பல மாதங்களுக்குப் பிறகு, பாபாவின் 'திடீர் ஆவலை' நிறைவு செய்ய, இரண்டு முறை ஆரத்தியை நிகழ்த்தி, மண்டலி பாபாவின் பாதங்களில் தலை வணங்கினர்.

அன்று மாலை அஹமதுநகர் வந்து, அக்பர் அச்சகத்தில் தங்கி மறு நாள் காலையில் மெஹராபாத் வந்தடைந்தனர்.

இவ்வேளையில் அக்பர் அச்சகத்தில் வாழ்ந்த ஐந்து பிரேமாஷ்ரம் சிறுவர்களுடன் பாபா நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். வஸந்த் எனும் சிறுவன் பாபாவின் விருப்பத்திற்கு மாறாக, அவனது பெற்றோருடன் வாழ்ந்து வந்த வேளையில், யாருடனும் அதிகம் பேசாமல் 'ஒரு வார்த்தை பதிலை' மட்டும் அளித்து வந்தான். பாபா அவனைக் குறித்து ஒரு முறை, "**அவன் ஏற்கனவே ஏறக்குறைய துறவியாகிவிட்டான்**" என்று தெரிவித்தார்.

செப்டம்பர் 1ஆம் நாள் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**பிரேமாஷ்ரம் சிறுவர்களில் வஸந்த் முதன்மையானவன். குறைந்தது அரை மணி நேர சகவாசத்தின் பயனையாவது அவனுக்கு அளிக்காமல் நான் மெஹராபாத்தை விட்டு அடுத்த பயணத்தில் அடியெடுத்து வைக்கக்கூடாது. நான் இங்கிருப்பதை அவன் கேள்விப்பட்டு, அவனைப் பார்க்காமல் சென்றுவிட்டேன் என்பதை அவன் அறிந்தால், வருத்தத்தில் உயிரையும் துறக்க நேரிடும்.**"

அடுத்தநாள் மெஹர் பாபா, 60 மைல் தூரம் பயணம் மேற்கொண்டு, இந்த அதிர்ஷ்டசாலி சிறுவனை சந்திக்கச் சென்றார். பாபாவின் தரிசனம் கிடைத்த அதிர்ஷ்டத்தில் வசந்த் பெரு மகிழ்ச்சியடைந்தான்; மேலும் பாபா, குறிப்பாக அவனைப் பார்க்க இவ்வளவு தூரம் வந்ததை அறிந்து, அவனது மிகையான பணிவை வெளிப்படுத்தினான்.



மும்பை, 5 செப்டம்பர் 1929

**அமர்ந்திருப்போர்:** காக்கா பாரியா, மெஹர் பாபா, குஸ்தாஜி

**நிற்போர்:** பி.டி. புதும்ஜி, ராம்ஜு, சாஞ்சி, நவல் தலாட்டி

# வியப்பூட்டும் மும்பை தொடர்புகள்

**(Mumbai contacts)**

1929, செப்டம்பர் 3ஆம் நாள், மெஹர் பாபா, பெர்ஸியா பயணம் மேற்கொள்ளத் தேவையான பாஸ்போர்ட், விஸா போன்ற ஆவணங்களை ஏற்பாடு செய்ய, மண்டலியுடன் மும்பைக்குச் சென்றார்; அனைவரும் பைக்கலாவில் அமைந்த நவல் - தீனா தலாட்டி அவர்களின் 'ஷிவ்லால் மோதிலால்' கட்டிடத்தில் தங்கி இருந்தனர்.

முதலில், பாபா, தரிசனத்திற்காக அங்கு எவரையும் அனுமதிக்கக்கூடாது என்று தீனாவிடம் கூறினார். எனவே மக்கள் உள்ளே வருவதைத் தடுக்க, தீனா தனது வீட்டு வாசலில் நின்று காவல் புரிந்தார். ஆனால், வீட்டிற்கு இரண்டு நுழைவாயில்கள் இருந்தன. அதற்குப் பிறகு நடந்ததை தீனா இவ்வாறு எடுத்துரைத்தார், "முன் வாசலில் நின்றுகொண்டு பாபாவின் கட்டளைகளை நான் ஒருவரிடம் விளக்கும் வேளையில், பாபா மண்டலியில் ஒருவரை அடுத்த வாசலுக்கு அனுப்பி பக்தர்களை உள்ளே அழைத்து, அவர்களுக்கு தரிசனம் வழங்கி, அவர்களுடன் பேசுவது மட்டுமின்றி, மதிய உணவுக்காக அவர்களை பொறுமையுடன் காத்திருக்கவும் கேட்டுக்கொண்டார்." அவர்கள் திரும்பிச் செல்லும் வேளையில் தீனாவைக் குறைகூறி, விமர்சித்துச் சென்றனர், "இது உனது வீடு என்று நினைக்காதே. கடவுள் எங்கு இருக்கிறாரோ அது அனைவருக்கும் சொந்தம்."

தீனா வேறு வழியில்லாமல் பதிலளித்தார், "இது எனது விருப்பம் அல்ல; இது பாபாவின் கட்டளை! நான் என்ன செய்ய முடியும்?" இந்த சம்பவத்தை பாபாவிடம் எடுத்துக் கூறியபோது, பாபா வாய்விட்டுச் சிரித்தார்.

இரவு உணவுக்குப் பின்னர், ஒவ்வொரு நாளும் பாபா சிறிது தூரம் நடக்கச் செல்வது அல்லது காரில் சுற்றி வருவது பழக்கம். பாபா, எந்த நேரத்திலும் உணவு தேவைப்படுவதாகக் கூறுவது வழக்கம் ஆகையால், தீனா எப்போதும் உணவைத் தயாராக வைத்திருக்க வேண்டியதாயிற்று. பாபா அவருடைய உணவை உண்ட பின்னர், ஒரு சிறிய அளவை தீனா எப்போதும் தனியாக வைத்து வந்தார். இதனால் தீனா கர்வத்துடன் தன்னுள் நினைத்துக் கொண்டார், "நான் பாபாவிற்கு எவ்வளவு சேவை செய்கிறேன். நான் செய்வதுபோல வேறு எவரும் செய்வதில்லை. பாபாவின் கட்டளைப்படி, எந்த நேரத்தில் அவருக்கு எது தேவைப்பட்டாலும் - இரவு பகல் பாராமல் - நான் அவருக்கு அளித்து வருகிறேன். வேறு எவரேனும் இதைச் செய்ய முடியுமா?"

ஆனால், தீனா உடனடியாக ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. ஒரு நாள் மாலை வேளையில், இரவு உணவுக்குப் பிறகு, பாபா, தீனாவுடன் காரில் வெளியே சென்றார். அவசரத்தில் தீனா, பாபாவுக்கான உணவைத் தனியாக எடுத்துவைக்க மறந்துவிட்டார். இருவரும் வெளியே

சென்றதும் மண்டலி, தீனா, பாபாவுக்காக உணவு தனியாக வைக்கவில்லை என்பது தெரியாமல் அனைத்தையும் உண்டனர்.

திரும்பி வரும் வழியில் பாபா, தீனாவிடம், "**இன்று என்னால் சரியாக உணவு உண்ண முடியவில்லை. இப்போது எனக்குப் பசியாக உள்ளது. உண்மையில், நான் அகோர பசியில் இருக்கிறேன்!**" என்றார்.

தீனா உடனே "பாபா, உங்களுக்காக உணவு வைத்துள்ளேன். தினமும் இதை நான் செய்வதுண்டு. வீடு சென்றதும் நான் உங்களுக்குப் பரிமாறுவேன்" என்று பதிலளித்தார். எதுவாயினும் அவர்கள் திரும்பி வந்தபோது, உணவு எதுவும் மிஞ்சாததைக் கண்டு தீனா திகைத்துப்போய், அழத்தொடங்கினார். இதற்கிடையில் பாபா, விஷ்ணுவை, ஏன் இன்னும் உணவு பரிமாறவில்லை என்று கேட்டுவர அனுப்பி வைத்தார்.

விஷ்ணு, சமையலறையில் தீனா அழுதுகொண்டிருப்பதை பாபாவிற்குத் தெரிவித்ததும், பாபா வந்து தீனாவிடம் என்னவாயிற்று என்று கேட்டார். தீனா, நடந்ததை பாபாவிடம் கூறியதும், பாபா, உரத்த குரலில் கூறுவதுபோல, கற்பலகையில், "**உனக்கு என்னிடம் இந்த அளவுக்குக்கூட மரியாதை இல்லையா? இவ்வளவு கவனக்குறைவாக இருந்து, எனக்கு வேண்டியதை எடுத்துவைக்க மறந்துவிட்டாயா? அப்படியானால் நீ என்னிடம் பொய் சொன்னாய். நீ உன்னைப் பற்றி மட்டுமே நினைக்கிறாய்**" என்று கடுமையாகத் திட்டினார்.

பாபா அவரது வயிற்றைக் காட்டி திரும்பத் திரும்ப பசியாக இருப்பதாகத் தெரிவித்தார். தீனா அவர் செய்த தவறை நினைத்து கண்கலங்கி, ஐந்தே நிமிடத்தில் ஏதேனும் செய்து தருவதாக மன்றாடினார். பாபா, "**நான் இப்போது எனது பசியை இழந்துவிட்டேன். எனக்குப் பசி இல்லை**" என்று பதிலளித்தார்.

இருந்தும் தீனா ஏதாவது சாப்பிட வற்புறுத்தினார். பாபா தயக்கத்துடன் சம்மதித்து, சிறிதளவு ரொட்டியும் வெண்ணெயும் உண்டார். பாபா வெளித்தோற்றத்தில் முற்றிலும் அமைதியாகி, "**கவலைப்படாதே, நான் உன்னை மன்னிக்கிறேன். என்னுடைய சில முக்கியமான உள்பணிக்காக நான் உன்னை பயன்படுத்தினேன். எனது பணி முடிந்தது; இனி அனைத்தையும் மறந்துவிடு**" என்று தீனாவை ஆறுதல் படுத்தினார்.

இந்த சம்பவம் தீனாவுக்கு மிகப்பெரிய பாடமாக அமைந்தது: குருநாதருக்கு சேவை செய்வதில் ஒருபோதும் பெருமைப்பட வேண்டாம். பிரபஞ்சத்திற்கே சேவை செய்யும் ஒருவருக்கு நீ என்ன சேவை செய்திட முடியும்?

உணவு சம்பந்தப்பட்ட மற்றுமொரு சம்பவம் தீனாவின் மனதிலிருந்த தவறான எண்ணங்களை முற்றிலும் அகற்றியது. ஒரு நாள் பாபா, தீனாவிடம் அவருக்கும் மண்டலிக்கும் உணவு தயார் செய்யக் கூறினார்; அதே வேளை மண்டலியும் உதவுவதாக இருந்தது. உணவு தயாரானதை தீனா, பாபாவிற்குத்

தெரிவித்ததும், பாபா தரிசனத்திற்காக வந்தவர்களையும் அழைத்து வந்தார். ஏராளமான விருந்தினர்களைப் பார்த்து, தீனா அதிர்ச்சியடைந்தார். பாபாவை தனியாக அழைத்துச் சென்று காதில் முணுமுணுத்தார், "அனைவருக்கும் உணவளிக்க போதுமான உணவு இல்லை. இத்தனை பேருக்கு உணவு தயார் செய்ய வேண்டும் என நான் எதிர்பார்க்கவில்லை."

பாபா அதற்கு, **"ஏன்? குறைவாக உணவு தயார் செய்தாயா?"** என்று கேட்டார்.

"வழக்கம் போல் உங்களுக்கும், மண்டலிக்கும் போதுமான உணவை மட்டும் தயார் செய்தேன். உங்களுடன் இன்னும் 50 பேர் வருவார்கள் என்று எனக்குத் தெரியாது."

பாபா எதுவும் கூறாமல் அவரது கைகளால் பரிமாறத் தொடங்கினார். பாபா ஒவ்வொருவருக்கும் வழங்கும் அளவைப் பார்த்து, தீனா பதற்றத்துடன் பார்த்துக்கொண்டு நின்றார். அனைவருக்கும் பரிமாறி முடித்த பின்னரும் ஏராளமான உணவு மீதமிருந்தது. பாபா, தீனாவை அழைத்து, சைகையால் **"நீ இதை சாப்பிடு"** என்று குறிப்பிட்டார். எஞ்சியுள்ள உணவைப் பார்த்து தீனா அதிர்ச்சியில் ஆழ்ந்தார். ஜீஸஸ், மீன் மற்றும் ரொட்டிகளுடன் இது போன்ற அதிசயத்தை நிகழ்த்தினார் என்பதை தீனா அப்போது நினைவுகூர்ந்தார்.

ஒரு நாள், காக்கா பாரியா, அவரது சகோதரி பானுபாய், அவர் கணவர் மானேக்ஜி மூவரும் பாபாவின் அருகில் தீனா தலாட்டியின் வீட்டில் அமர்ந்திருந்தனர். பாபாவின் தரிசனத்திற்காக வந்த ஒருவர் கூடை நிறைய அத்திப்பழங்களைக் கொண்டு வந்தார். பாபா, மானேக்ஜியிடம் அந்தப் பழங்களைக் கழுவி சுத்தம்செய்து எடுத்து வருமாறு கூறினார். மானேக்ஜி திரும்பி வந்ததும், பாபா சைகையால் அனைவருக்கும் தெரிவித்தார், **"நான் இந்த அத்திப்பழங்களை உங்களை நோக்கி வீசுவேன், அதை கவனமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்."** பாபா ஒருவரை பார்த்துக்கொண்டு இன்னொருவர் பக்கம் பழத்தை வீசினார். பானுபாய், பாபாவிடம், "பாபா, ஒன்றை மானேக்ஜியின் பக்கம் வீசுங்கள் அவரும் உங்கள் பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ளட்டும்" என்றார்.

பாபா ஏராளமான பழங்களை அள்ளி வீசியும், ஒன்றுகூட மானேக்ஜிக்குக் கிட்டவில்லை. கடைசியாக ஒரே ஒரு பழம் மீதமிருந்தது. பாபா அந்தப் பழத்துடன் கையை உயர்த்தி, உற்றுப்பார்த்து, அவரே உண்டார். பானுபாய் ஏமாற்றத்தில், கணவருக்குக் கிடைக்காத வருத்தத்தில் பாபாவை முறைத்துப் பார்த்தார்; ஆனால், மானேக்ஜி அங்கு நடந்த மர்மத்திற்கு அவரே விடையளித்தார்.

மானேக்ஜி, பழங்களை சுத்தம் செய்யும் வேளையில், ஒன்றை அவர் பாபாவின் அனுமதி இல்லாமல் உண்டதாக, பின்பு மனைவியிடம் ஒப்புக்கொண்டார்; அவ்வேளையில் பாபா முன்னறையில் அமர்ந்திருந்தார்.

அவர் மனைவியிடம், "ஆனால், பாபாவின் கண்கள் அனைத்தையும் கவனிப்பதை இப்போது நான் முழுமையாக நம்புகிறேன்" என்று கூறினார்.

சாஞ்சியின் சகோதரர் நவ்ரோஜி தாதாசாஞ்சி, அவருடைய மனைவி பச்சாமாய், மூன்று மகள்கள் அர்னவாஸ், ரோடா, நர்கிஸ் மற்றும் ஒரு சிறுவன் தெஹம்தன் அனைவரும் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். பாபா, அர்னவாஸின் பள்ளிக்கூட விபரங்களைக் கேட்டு, '**அவ்வளவு கடினமாக, சிரமப்பட்டுப் படிக்கவேண்டாம்**' என்று அறிவுறுத்தினார். பள்ளிக்கூட படிப்பைப் பெரிதும் விரும்பும் அர்னவாஸ், பாபாவின் ஆலோசனையைக் கேட்டு ஆச்சரியமடைந்தார்; இது நவ்ரோஜியையும் அதிர்ச்சியடையச் செய்தது, "பாபா, அர்னவாஸ் நல்ல புத்திசாலி பெண், மேலும் எனது முதல் மகள்; அவள் படிப்பை விட்டுவிட்டால், அது பிற குழந்தைகளையும் பாதிக்கும்; அவர்கள் படிப்பில் நாட்டமில்லாமல் ஆர்வத்தை இழந்து விடுவார்கள்" என்று முறையிட்டார்.

"**உங்களுக்கு என் மீது நம்பிக்கை இல்லையா?**" பாபா வினவினார். "**படிப்பை ஒரு வருடம் நிறுத்திவிட்டு அடுத்த வருடம் தொடருங்கள்.**" இந்த எளிய கட்டளைக்குக் கீழ்ப்படிவதன் மூலம், பாபா, அர்னவாஸை அவருக்கு சேவை செய்ய ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார்.

இவ்வேளையில் தாதாசாஞ்சியின் உறவுக்கார சிறுவன், வயது 16, பெயர் நரிமன் மேர்வான் தாதாசாஞ்சி, பாபாவின் தரிசனத்திற்காக வந்தவன், அமைதியாக பாபாவின் முன்னால் ஒரு பூமாலையும், பூச்செண்டும் கையிலேந்திக்கொண்டு நின்றான். பாபா எதுவும் கூறாமல் அன்புடன் அவனை அரவணைத்தார். ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை. வழக்கமான அறிமுகங்கள் மற்றும் நகைச்சுவை பேச்சு எதுவும் இல்லை. ஆனால், இந்த அமைதியான அரவணைப்பின் விளைவாக, நரிமன் குருநாதரிடம் முழு நம்பிக்கையுடன் தன்னை அர்ப்பணித்து, ஒரு முக்கியமான மற்றும் உறுதியான பக்தராக மாறினார்.

தீனா தலாட்டியின் இல்லத்தில் மெஹர் பாபாவை சந்திக்க வந்த ஓர் இளம் பெண், வயது 20, பெயர் நர்கிஸ் கொத்வால், மனதில் அலைமோதும் அனைத்தையும் பாபாவிடம் கொட்டிவிடும் நோக்கத்தில் வந்தார். நர்கிஸின் கணவர் ஸவக் கொத்வால், முதன்முதலாக ஒரு வருடத்திற்கு முன்பு, மெஹராபாத்தில், பாபாவின் தரிசனத்தைப் பெற்ற அந்நாளிலிருந்து, அவர் ஒரு சில சாதுக்களை சந்தித்து வந்தார். நர்கிஸ் இயல்பாகவே, தனது கணவரால் புறக்கணிக்கப்பட்டதை உணர்ந்து, அதற்கு மெஹர் பாபாவைக் குற்றம் சாட்டினார். ஸவக் கொத்வால், குடும்ப வாழ்க்கையைக் கைவிட மெஹர் பாபாதான் காரணம் என்று நர்கிஸ் தவறாக நினைத்திருந்தார் - மேலும் தனது கணவரிடம் எதுவும் தெரிவிக்காமல் நர்கிஸ், தலாட்டி இல்லத்திற்கு வந்து,

'இந்த பாபாவிற்கு' தனது கருத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் எண்ணத்தில் இருந்தார்.

நர்கிஸ் கடும் சினத்துடன் பாபாவை அணுகி, "நீங்கள்தானே அந்த மெஹர் பாபா!" என்று கேலியும் கிண்டலும் கலந்த தொனியில் கேட்டார். புன்முறுவல் செய்துகொண்டே, பாபா தலையசைத்து 'ஆமாம்' என்றார். ஸவக்கின் அலட்சியத்தைப் பற்றிய சோகக்கதையை மழைபோலப் பொழிந்து, நர்கிஸ் மன்றாடினார், "எந்த விதமான பக்தர் அவர்? இப்படித்தான் உங்களைப் பின்பற்றுபவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?"

பாபா அவரது கற்பலகையில் இவ்வாறு பதிலளித்தார்: **"நான் இணைக்க வந்துள்ளேன், பிரிக்க அல்ல, கவலைப்படாதீர்கள். எல்லாம் சரியாகிவிடும். நீங்கள் ஸவக்கை விட்டுச் சென்றாலும், ஸவக் உங்களை விட்டுச் செல்ல மாட்டார்."** இந்த எளிமையான வார்த்தைகள் அந்த இளம் பெண்மணியின் இதயத்தைத் துளைத்தன. அவர் கோபத்தை வெளிப்படுத்தியதற்காக மிகவும் வருந்தினார்.

நர்கிஸ், குடல் காசநோயால் அவதிப்பட்டு வந்தார். பாபா ஒரு ரோஜா இதழைக் கொடுத்து சாப்பிடச்சொல்லி, பாபாவின் சித்திரம் பதித்த பேழை ஒன்றை, ஒரு டம்ளர் நீரில் மூழ்கவைத்து, பின்னர் அந்த நீரை தொடர்ந்து, பாபாவின் பெயரை உச்சரித்துக்கொண்டே, தினமும் அருந்தும்படி அறிவுறுத்தினார். பாபா கூறியதைக் கடைப்பிடித்து வந்தபோது அவரது நோயும் மறைந்தது.

அடுத்த நாள், மண்டலியில் ஒருவர் இறைநிலையைப் பற்றி கேள்வி எழுப்பிய வேளையில், மெஹர் பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

**இறைநிலையை அடைவதற்கு முன்பு, மூடி மறைக்கப்பட்ட மனத்திரைக் கிழிக்கப்பட்டு, மனம் சாக வேண்டும். இந்தத் திரைதான், தனிப்பட்ட ஒருவரின் ஆழ்மன, சூட்சும** (பிராண) **மற்றும் பௌதீக உடல்கள் செயல்படுவதன் காரணமாக இருப்பது. அத்திரையை விலக்குவதன் மூலம் பௌதீக உடலை, சூட்சும உடலிலிருந்து தனிப்படுத்த முடியும்; அவ்வாறு நிகழும்போது, சூட்சும நிலையில், பௌதீக உலகின் பொருட்களைப் பார்க்கும் அளவுக்கு, உள்ளார்ந்த சூட்சும பொருட்களையும் ஒருவர் தெளிவுடன் பார்க்க முடியும். உண்பது, அருந்துவது, நிற்பது, அமருவது போன்ற உடல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும்போது - அதாவது பௌதீக உடல் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அதே வேளையில் - சூட்சும உலகிலும் முன்னேற்றம் ஏற்படும்; இது ஒரே கல்லில் இரண்டு பறவைகளைக் கொன்றது போல!**

**ஆனால், திரை அகற்றப்பட வேண்டும். இந்தத் திரை மெல்லியதாக இருந்தாலும், அதேவேளை, மிகவும் சக்திவாய்ந்தது. அதைப் பிளவுபடுத்தி விலக்க முடியாது; ஆனால், ஒரு சத்குரு அதை ஒரே நொடியில் முற்றிலுமாக விலக்கிவிட முடியும். திரை கிழிக்கப்பட்டால், உடனடியாக,**

ஆத்மா முதல் சூட்சும உணர்வு தளத்தில் நுழையும். இது கூண்டைவிட்டுத் தப்பி வெளியேறும் கிளி போன்றது; அதன் சுற்றுப்புறங்களை சற்றும் பார்க்காமல், நேராக காற்றில் பறந்து செல்வது போலாகும்.

ஒருவரின் சுய முயற்சியால் அல்லது போலி குருநாதர்கள் உதவியால் திரை கிழிக்கப்படுமாயின், முன்னேற்றம் என்பது முதல் தளத்தில் அப்படியே நின்றுவிடும். சுய முயற்சியால் மேல் நிலையை நாடிச் செல்லும் ஒருவர், இறுதியில் தவிர்க்க முடியாமல் சிக்கிக்கொண்டு, பயனற்ற நிலையை அடைகிறார். உதவிக்காக ஒரு சத்குரு இருப்பதானால், அவர் அந்தத் திரையை, ஒருவர் முழுமையான தயார் நிலைக்கு வருவதற்கு முன்னால் கிழிக்கவோ, விலக்கவோ மாட்டார்; குருநாதர், நேரடியாக ஒருவரின் இலக்கைநோக்கி எடுத்துச்செல்வார்.

மாயை எனும் கூண்டிலிருந்து, சத்குரு மட்டுமே ஒருவரை விடுவிக்க முடியும்; ஆனால், அதற்கு மூன்று இன்றியமையாத வரைமுறைகள் தேவை - ஏக்கம், பொறுமை மற்றும் பாறை போன்ற உறுதியான நம்பிக்கை. ஏக்கம் இல்லாமல் எதையும் அடையமுடியாது. இது ஒன்றுதான் முதன்மையான தேவை; ஆனால், ஒருவர் தொடர்ந்து அமைதியிழந்த நிலையில் இருக்கவேண்டும். உதாரணமாக, ஒரு மனிதனைத் தேள் கொட்டினால், அதனால் வரும் எரிச்சல் மற்றும் வலியை எப்படிப் போக்குவது என்ற ஒரே சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறான். உண்பது, அருந்துவது மேலும் உலகப்பொருட்கள் மீதுள்ள நாட்டங்கள் அனைத்தையும் முற்றிலும் மறந்து விடுகிறான். வலியைப் போக்குவதே அவனுடைய ஒரே குறிக்கோள். அதுபோல, கடவுளை அடைய இடைவிடாத ஏக்கம் தேவை. இதைத்தவிர, மனதில் வேறு எந்த சிந்தனையும் இருக்கக்கூடாது: "நான் கடவுளோடு ஒன்றாகவேண்டும் - உடனடியாக, இந்த கணமே!" மனதிலும் இதயத்திலும் இந்த எண்ணத்தைத் தவிர வேறொன்றும் இருக்கக்கூடாது. பல வருட துன்பங்கள் கடந்து போகலாம், பொறுமையை ஒருபோதும் கைவிடக்கூடாது. ஆரம்பத்தில் ஏக்கம் தீவிரமாக இருக்கும், ஆனால், படிப்படியாக அது தணிந்து விடுகிறது. இப்படி இருக்கக்கூடாது; பொறுமையை இழக்காமல், விடாப்பிடியாக இருக்கவேண்டும். ஆரம்பத்தில் மிகுந்த உற்சாகமாக இருந்து, விரைவில் கடவுள் நிலையை அடைவார் என்பதை உறுதியாக நம்புகிறார். ஆனால், காலம் கடந்து செல்லச் செல்ல, அவரது உற்சாகமும் குறைந்து கொண்டே போகும்.

ஒருவரை குருநாதர் வேண்டுமென்றே தன்வசம் ஈர்த்து, பின்னர் அவரை வெளியே தூக்கி எறியக்கூடச் செய்யலாம்! நானும் இதைச் செய்வதுண்டு. ஆனால், புத்திசாலியான ஒருவர், குருநாதரிடமிருந்து வரும் அனைத்தையும் அமைதியாகத் தாங்கிக்கொள்கிறார். விவேகமற்றவன் பொறுமையிழந்து முணுமுணுக்க ஆரம்பிக்கிறான். ஆனால், குருநாதர் எப்போதுமே இறைவன் மீது பற்றுள்ளவருடன் இணைந்து செயல்படுவதோடு, படிப்படியாக அவருக்கு ஆன்மீகப் பாதையில் ஒரு

உந்துதலையும் தருகிறார். நாங்கள் எப்போதும் இப்படித்தான் நடந்து கொள்கிறோம்; அது எங்கள் இயல்பு.

**ஆன்மீகப் பாதையில் பயணிப்பது என்பது, முன்னும் பின்னும் இருவருக்குமிடையே நடத்தப்படும் ஓர் இழுபறி போர் போன்றதாகும். ஆனால், ஒரு புத்திசாலி மனிதன் இவ்வழியில் செயல்படமாட்டான். வலையில் சிக்கிய புத்திசாலி பறவை, அதனை விடுவித்துக்கொள்ள சிறகுகளை அடிப்பதில்லை. அது அமைதியாகவும், சுய கட்டுப்பாட்டுடனும் இருந்து, தப்பிக்க வாய்ப்பு வரும் வரை காத்திருக்கும். ஓர் அனுபவமற்ற பறவை தனது சிறகுகளை அடித்து, புழுப்போல நெளிந்து, கட்டுப்பாட்டை இழந்து, தன்னை மேலும் மேலும் காயப்படுத்திக் கொள்ளும்.**

**நாற்பது வருடங்களாக ஹஃபீஸ், அவரது குருநாதரின் நடைமுறைகளை சகித்துக்கொண்டு, அமைதியாக இருந்தார் என்பதை நினைத்துப் பாருங்கள்! உங்கள் உறுதியும், நிலை மாறாத தன்மையும், ஆமணக்கு எண்ணெயின் நிலையான ஓட்டம்போல் இருக்க வேண்டும்.**

பிளீடர், வெவ்வேறு சாது சன்னியாசிகளை அடிக்கடி சந்திக்கும் பழக்கத்தில் இருந்ததால், இதைச் செய்வதிலிருந்து அவரைத் தடுத்து நிறுத்த, பாபா அவருக்கு எச்சரிக்கைக் கலந்த தொனியில் அறிவுறுத்தினார்.

**அரண்மனை நுழைவாயில் காவலாளிக்குப் பின்னால் செல்லாதே; அரசனைக் கெட்டியாகப் பற்றிக்கொள்! அவருடைய ஊழியர்கள் பக்கம் போகாதே! எந்த ஒரு மந்திரி அல்லது காரியதரிசியும் உனக்கு உதவ முடியாது. ஓர் அரசன் அனைத்திற்கும் மேலாக அரசனே; சேவகன் சேவகனே!**

**நீங்கள் ஒரு முறை அரசனை நேரடியாக அணுகிய பின்னர், அவருடைய ஊழியர்களுடன் நட்புறவைப் பேணுவதில் எந்த பயனுமில்லை. அரசனுடனான உங்கள் நட்பு, எந்தவொரு சூழ்நிலையையும் ஏற்படுத்தக்கூடும், ஆனால், நீங்கள் அவரோடு இணைந்திருக்க வேண்டியது அவசியம். உங்கள் உயிரைத் துறக்கப் போவதாக இருந்தாலும் அரசனின் கைகளை ஒருபோதும் நழுவவிடாதீர்கள்!**

**ராஜாதிபதி (குருநாதர்) அளவிறுதியற்ற அறிவின் அதிபதி. அவருடைய சகவாசத்தில் ஒருவர் அனைத்தையும், அனைவரையும் மறந்துவிட வேண்டும். பழைய பழக்கவழக்கங்களையும் நிறுத்திவிட வேண்டும். தியானம், கடவுளின் நாமத்தை உச்சரிப்பது அல்லது வேறு ஏதேனும் வழிபாட்டு முறையைப் பற்றி நினைக்கக் கூடாது; இதுபோன்ற நடைமுறைகளால், அதிகபட்சம் நீங்கள் சமாதி நிலையை அடைவீர்கள்; கடவுளோடு ஒன்றுவது என்பது ஒருபோதும் சாத்தியமாகாது.**

**மாறாக, ஒருவர், ஒரே எண்ணத்தை மனதில் கொண்டு, தன்னை ராஜாதிபதியின் விருப்பத்திற்கு அடிபணியச் செய்ய வேண்டும், "கடவுளே, என்னை எப்போது ஏற்றுக்கொள்வாய்?" இந்த ஏக்கம் 24 மணி நேரமும்**

இருக்க வேண்டும். இந்த உணர்வு போதுமான அளவு தீவிரமாக இருந்தால், கடவுள் நிச்சயமாக அதை நிறைவேற்றுவார்.

மக்களுக்கு உதவுவது நல்லது, ஆனால், ஒரு சத்குருவின் அறிவுறுத்தல்களின்படி, அவரின் வழிகாட்டுதலின் கீழ் செய்யப்படும் சேவையே அனைத்திலும் சிறந்தது.

அரை வேக்காட்டு குருநாதர்கள் மற்றும் போலி சாதுக்களுக்குக் செய்யும் சேவை, உங்களைப் படுகுழியில் தள்ளிவிடும். அந்த நயவஞ்சகர்களால் நீங்கள் எங்கேயாயினும் ஊசலாடிக் கொண்டிருப்பீர்கள். ஒரு போலி குருநாதரைக் கண்டுகொள்வது உங்கள் துரதிர்ஷ்டம்; அவர் உங்களை ஏற்றுக்கொண்டு, அவருடைய சேவைக்காக உங்களைப் பயன்படுத்துவார். உங்களை ஒரு நாள் கைவிடும்போது, அது உங்கள் ஆர்வத்தைத் தணிக்கும். மனப்படிவங்களை இழப்பதற்கு பதிலாக வரவழைப்பீர்கள்; பின்னர் ஏமாற்றம், வெறுப்பு மட்டுமே மிஞ்சும்.

பொய்யும் போலியுமான நயவஞ்சக சாதுக்கள், உங்களுக்கு எதையுமே தரமுடியாது, அதேவேளை முதல், இரண்டாவது ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்டிருக்கும் சாதுக்கள் மற்றும் ஐந்து, ஆறாவது ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்டிருக்கும் வாலி, யோகி போன்றவர்கள், அவர்களின் ஒரே பார்வையில், உங்களை மேல்நிலைக்கு எடுத்துச்செல்ல முடியும்! ஆனால், அது பரிபூரணமான நிலையல்ல, ஏனெனில் மேல்நிலையை அடைந்த இவர்கள், இன்னமும் இறைநிலையை எய்தவில்லை. சில நேரங்களில், சத்குருக்கள் கூட இந்த வலைகளில் சிக்கிக் கொண்டவர்களுக்கு உதவ முடியாது. எனவே, இறைநிலையை அடைந்தவர்களைத் தவிர, ஐந்து அல்லது ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருப்பவர்களை, குருநாதர் என எண்ணி ஏமாந்து விடாதீர்கள்.

ஒரு முறை ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைத்தால், அனைத்தையும் விட்டுவிட வேண்டும் - உங்கள் தாய், தந்தை, இந்த முழு உலகம், ஒவ்வொன்றையும் நீங்கள் துறக்க வேண்டும். உலகில் எதைக் கண்டும் அஞ்ச வேண்டாம். ‘என்னுடைய பெற்றோர்களை யார் கவனித்துக் கொள்வார்? என்னுடைய வேலை என்னவாகும்? உலகம் என்னைப் பற்றி என்ன நினைக்கும்?’ இந்த அனைத்து சிந்தனைகளும் பயனற்றவை. நீங்கள் உயிரைத் துறந்திருந்தால் உங்கள் அருகிலிருந்த மற்றும் அன்பானவர்களை யார் கவனித்திருப்பார்கள்? பாதிக்கப்பட்டவர்கள் தங்களை கவனித்துக் கொள்வார்கள். கடவுள் அனைவரையும் கவனித்துக் கொள்கிறார். அவர்தான் உண்மையான பாதுகாவலர். ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைத்த பின்பு, நீங்கள் இத்தகைய எண்ணங்களைத் தவிர்த்துவிட வேண்டும்.

கடவுளுக்குப் பிரியமானவராக இருக்க முயற்சி செய்யுங்கள். உண்மையான அன்பன் ஒருபோதும் உலகத்தால் பாதிக்கப்படுவதில்லை அல்லது உலகமக்கள் என்ன நினைப்பார்கள் என்று கவலைப்படுவதில்லை;

**அவனது வாழ்க்கையையும் கண்டுகொள்வதில்லை. அவன் எப்படி இருக்கிறானோ அப்படியே இருப்பான் - உலகில் முற்றிலும் அலட்சியமாக, எதையும் இழந்ததாக வருந்தாமல் இருப்பான்.** பாபா இவ்வாறு கூறி முடித்தார்:

**அனைத்து நதிகளும் என்னில் ஓடுகின்றன. நான் சமுத்திரம். வேறெங்கோ பார்ப்பதை நிறுத்திவிட்டு, பெருங்கடலை மட்டும் பாருங்கள். உங்கள் முழு கவனத்தையும் என்னிடம் செலுத்துவதன் மூலம், நீங்களே பெருங்கடலாக மாறுவீர்கள். பெருங்கடலைப் பார்ப்பது என்பது எல்லா நேரங்களிலும் எனது விருப்பங்களை நிறைவேற்றுவது.**

மெஹர் பாபாவின் விளக்கங்களைக் கேட்டு, பிளீடர் மனம் நெகிழ்ந்து போனார். பாபா கூறிய ஒவ்வொன்றையும் அப்படியே உள்வாங்கி ஆழ் இதயத்தில் கிரகித்தார்.

அடுத்த நாள் பாதிரி, காஷ்மீர் பயணத்தின்போது பயன்படுத்திய பேருந்தை, அஹமதுநகருக்கு ஓட்டி வந்து, காக்கா சிஞ்சோர்கர் என்பவருக்கு 2500 ரூபாய்க்கு விற்பனை செய்தார். நீண்ட காலத்திற்குப் பின்னர், அன்று பாபா முன்ஷி ரஹீம், சையத் ஸாஹேப், லத்தீஃப் மூவரையும் சந்தித்தார்.

பாபா ஒரு சிறிய பயணமாக மும்பையில் மலபார் மலை, நல் பஜார் மற்றும் சௌபாட்டி கடற்கரைக்குச் சென்று வந்தார்.

1929, செப்டம்பர் 9ஆம் நாள், மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக பலர் வந்தனர். அன்றைய தினம், ஸவக் கொத்வால் என்பவரும் பாபாவிடம் வந்து, அவரை ஆன்மீகப் பாதையில் பயணிக்க உதவுமாறு வேண்டினார். அவரது பார்வையில் ஸவக் இருப்பதாக பாபா உறுதியளித்தார்; **"பாதை மிகவும் கடினமானது"** என்று குறிப்பிட்டு, **"வீரர்கள் மட்டுமே அதில் பயணிக்க முடியும். ஆழம் அறிந்து கால்களை விடுவது நல்லது. இதை என்னிடம் கேட்பதற்கு முன்னால் நன்கு யோசிக்க வேண்டியது அவசியம்"** என்றார்.

**"அனைத்தையும் விட்டுவிட்டு இந்தப் பாதையில் அனுபவிக்க வேண்டிய, சொல்லொணா துன்பங்கள் மற்றும் தியாகங்களைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்; உங்கள் அருகில், உங்களோடு அன்பாக இருப்பவர்கள் மற்றும் இந்த முழு உலகையும் நினைத்துப் பாருங்கள். இந்தப் பாதையில் உங்கள் வாழ்வை, தோள்களில் சுமந்து செல்லவேண்டும்! அனைத்தையும் கைவிட்ட பின்பு, நீங்கள் செய்த தியாகங்களைக் குறித்த எந்த எண்ணமும் மனதில் இருக்கக்கூடாது."**

ஸவக் உடனே, "உங்கள் அருள் மழையை என் மீது பொழியுங்கள், பாபா, அப்போது உங்களைத் தவிர வேறு எந்த எண்ணமும் என்னிடம் இருக்காது" என வேண்டினார்.

**"அருள் என்றால் என்ன? உங்களை என்னைப்போல் ஆக்குவது. அதுதான் அருள்; ஒருவரின் துறவுக்கு அருள் வழிவகுக்காது; அதாவது,**

**ஒருவர் குருநாதரின் அருளை அடையப்பெற்ற அதே கணத்தில் குருநாதரைப் போல் ஆகிவிடுகிறார்**" என்றார் பாபா.

மெஹர் பாபா தொடர்ந்து கூறினார், "**ஆகையால், ஒளிவு மறைவின்றி நான் உங்களுக்குச் சொல்கிறேன், எங்களுடன்** (குருநாதர்களுடன்) **நட்பாக இருக்க முயற்சி செய்யாதீர்கள்; மேலும் அந்த நட்பை நீங்கள் விரும்பினால், உங்கள் வாழ்க்கையை கைகளில் ஏந்திக்கொண்டு அதைத் தேடுங்கள். இல்லையேல் நன்மைக்கு பதிலாக தீமையே விளையும். மாறாக, உங்கள் வணக்கத்தை, தூரத்திலிருந்து தெரிவித்து விட்டு திரும்பிச் செல்லலாம்.**"

ஸவக் கொத்வால், பாபாவிடம் முற்றிலும் சரணடைய பல வருடங்கள் ஆயிற்று. நவல் தலாட்டி இல்லத்தில் ஸவக்கின் மனைவி நர்கிஸ் பாபாவை சந்தித்த விபரத்தை அவருக்குத் தெரிவிக்காமல், பாபா அப்பாவித்தனமாக அவர் மனைவியைப் பற்றி விசாரித்தார். '**அவர் மனைவி மற்றும் மகளைப் புறக்கணிக்க வேண்டாம்**' என்று பாபா அறிவுறுத்தினார்.

மெஹராஷ்ரமம் ஆரம்பித்த வேளையில், அங்கு பயின்று வந்த இரண்டு சிறுவர்களின் சகோதரி கர்மன்மாசி குடும்பத்தினர், மெஹராபாத்தில் அடிக்கடி பாபாவை சந்தித்து, மிக்க நெருக்கமாயினர்.

மெஹர் பாபா ஒரு நாள் மும்பையில் கர்மன்மாசியின் இல்லத்திற்கு விஜயம் செய்தார். அந்த சந்தர்ப்பத்தில், பாபா, கர்மன்மாசியிடம் பசி எடுப்பதாகக் குறிப்பிடவே கர்மன்மாசி, உணவு வெளியிலிருந்து வரவழைக்கப்படுவதைத் தெரிவித்ததும், "**எனக்கு ஹோட்டல் உணவு வேண்டாம்; வீட்டில் எஞ்சியிருக்கும் பழைய உணவு - சப்பாத்தி, பருப்பு - எதுவாயினும் போதும்**" என்று பாபா பதிலளித்தார். வியப்பூட்டும் வகையில் இந்த ஒரே உணவு மட்டுமே வீட்டில் மிஞ்சியிருந்தது. ஆனால், கர்மன்மாசி உணவை எடுக்க மேசையைத் திறந்த வேளையில் அதில் உணவு எதுவும் இல்லை. கர்மன்மாசியின் தடுமாற்றத்தைக் கண்டு, பாபா, என்னவாயிற்று என்று வினவினார். கர்மன்மாசி விளக்கிக் கூறியதும் பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**நீங்கள் நீராடிக்கொண்டிருந்த போது, ஒரு திருடன் வந்து பருப்பு, சப்பாத்தி அனைத்தையும் சாப்பிட்டுவிட்டான். உங்களுக்கு அந்தத் திருடன் யார் என்று தெரியுமா? அவன் இதோ உங்கள் முன் நிற்கிறான்.**"

கர்மன்மாசியின் கண்களில் நீர் பெருக்கெடுத்தது, ஆச்சரியத்தில், "கடவுளே! உனது வழிகளும் முறைகளும் விசித்திரமானது! இந்த ஏழையின் வீட்டிலிருந்த பழைய, மிஞ்சிப்போன ரொட்டி, பருப்பை நீ உண்டாய். எதற்கும் தகுதியற்ற என்னைப்போல் ஒருத்தியை நீ எவ்வளவு நேசிக்கிறாய்! பாபா, ஏழைகளின் ஒரே ஆதரவு நீங்கள்தான்!" என்றார்.

கர்மன்மாசியை கைகளால் அரவணைத்து, பாபா சைகையால் எடுத்துரைத்தார், "**நீங்கள் ஏழையல்ல; நீங்கள் பெரிய செல்வந்தர்! எந்த செல்வம் அன்பைவிடப் பெரியது? உங்கள் அன்பு ஒன்றுதான் என்னை இங்கு வரவழைத்தது.**"

குருநாதர் மீது கர்மன்மாசி வைத்திருந்த அன்புக்கு ஈடு இணையே இல்லை. அதற்குப் பிறகு, கர்மன்மாசி இரண்டு வருடங்கள் பெண் மண்டலியுடன் வாழ்ந்து வந்தார்.

1927ஆம் ஆண்டு, மெஹர் பாபா எழுதுவதை நிறுத்திவிட்டார். அவர் ஆவணங்களில் கையெழுத்திடுவதை விரும்பாததால், பிரிட்டிஷ் பாஸ்போர்ட் மற்றும் விஸா வாங்க பிரச்சினையாக இருந்தது. மண்டலியும் பாஸ்போர்ட் விண்ணப்பத்தில் அவர்களின் தொழில் விபரங்களில் 'தனியார் ஊழியர்' என்று குறிப்பிட்டனர். பாபா பெர்ஸியன் வழியில் வந்தவர் ஆகையால், பெர்ஸியன் பாஸ்போர்ட்டை எளிதாக வாங்க முடிந்தது.

மெஹர் பாபா மும்பையில் இருந்தபோது தீனா, பாபாவிற்கு வேண்டிய உணவைத் தயார் செய்தார்; ஆனால், வேறு எவரும் உணவைத் தொடக்கூடாது என்பது பாபாவின் தனிப்பட்ட கட்டளை.

தீனா பொதுவாக இந்த விஷயத்தில் விழிப்புடன் இருந்தாலும், ஒரு நாள் பச்சாமாய், தீனாவுக்குத் தெரியாமல், எலுமிச்சை பழத்தை வெட்டி பாபாவின் சாப்பாட்டுத் தட்டில் வைத்தார். தீனா அதை கவனிக்காமல், பாபாவிற்கு உணவை வழங்கிய போது, பாபா கோபத்தில் அவரிடம் தட்டைத் திருப்பி எடுத்துச் செல்லுமாறு கூறி, "**இன்று உன்னுடைய உணவு எனக்குத் தேவையில்லை**" என்று கூறினார். தீனா அதிர்ச்சியடைந்ததும், பாபா எலுமிச்சை பழத்தைச் சுட்டிக்காட்டி, '**அதைத் தட்டில் வைத்தது யார்**' என்று வினவ, தீனா அதை முதன்முறையாக கவனித்து, அவர் வைக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். யார் அதைச் செய்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்கக் கூறி, பாபா அந்த உணவை உண்டார். அதற்குப் பிறகு, தீனா பாபாவிடம், "பாபா, உங்களுக்கு எப்படித் தெரியும் வேறு யாரோ இந்த உணவைத் தொட்டார்கள் என்று? நீங்கள், உணவு தயார் செய்யும் வேளையில் இங்கேதானே இருந்தீர்கள்" என வினவினார்.

பாபா அவரது கற்பலகை மூலமாக, "**இதுபோன்ற குழந்தைத்தனமான கேள்விகளைக் கேட்பது உங்களுக்குத் தகுமா? நிச்சயமாக எனக்குத் தெரியும்; அந்த எலுமிச்சை என்னிடம் கூறியது என்ன நடந்தது என்று! இப்படித்தான் நான் அதைப் பற்றி அறிந்துகொண்டேன்**" என்று பதிலளித்தார். பாபாவின் பதிலைக்கேட்டு தீனா சிரித்தார், ஆனால், அதற்குப் பிறகு, பாபாவின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் தீனா மிகவும் எச்சரிக்கையாக இருந்தார்.

மெஹர் பாபா மும்பையில் இருந்த செய்தி எங்கும் பரவியது. ஏராளமான மக்கள் முதல்முறையாக பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். சாஞ்சியின் அயராத முயற்சியால், (குஜராத்தி பத்திரிகைகளில் பாபாவிற்கு எதிராக எழுதிய போதிலும்) பல ஸொராஸ்டரியர் பாபாவின் பணியைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொண்டனர். பெரும்பாலான மக்களுக்கு, பாபாவை

நேரில் சந்தித்த தருணத்தில், சந்தேகங்கள் பனிபோல் அகன்றன. அவரைப் பற்றிய அவதூறான செய்திகளைப் பரப்பி, களங்கப் படுத்தியவர்களில் பலர், பாபாவின் தீவிர ஆதரவாளர்களாக மாறினர். இவ்வாறு, விரோத மனப்பான்மையில் போலி விளம்பரங்களைப் பரப்பியவர்கள், உண்மையில் பாபாவின் பணியை அவர்களுக்குத் தெரியாமலே செய்தது போலாயிற்று. ஆனால், இத்தகைய அவதூறான விமர்சனங்களால் தாக்கப்பட்டது, பாபாவின் ஆரம்பகால மண்டலிக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது.

காலம் இவ்வாறு பறைசாற்றியது:

"அவதார புருஷரால் மட்டுமே, இத்தகைய மாறுபட்ட நிலைமைகளை சமாளிக்கவும், அதே வேளையில் அன்பின் ஒளிக் கதிர்களைப் பரப்பவும் முடியும். இன்ப துன்பங்களால் நிரம்பியிருக்கும் அவதார புருஷனின் ஆன்மீகப் பணியை, அவர் தனது சிலுவையிலிருந்து அன்பான புன்னகையுடன் உலகிற்கு அர்ப்பணிக்கிறார்."

1929, செப்டம்பர் 16ஆம் நாள், பாபாவை 'பொயின்ஸர் மலை'க்கு (மண்டபேஷ்வர் குகை என்றும் அழைப்பர்) அழைத்துச் சென்றனர்; அங்கே அவர் பாழாகக் கிடந்த ஒரு போர்ச்சுகீஸ் புனித ஆலயம், ஃபிரான்ஸிஸின் மடாலயம் மற்றும் ஒரு பெரிய அனாதை இல்லம் இவற்றைப் பார்வையிட்டார். ஜீஸஸின் சிலை ஒன்று, தேவாலயத்தின் மேற்புறத்தை அலங்கரித்தது, இது சுற்றியிருந்த மலைகளின் பரந்த காட்சியை அவர் அதிகாரம் செய்வதுபோலத் தோன்றியது.

அடுத்த நாள் சாஞ்சி, பாபாவின் பாஸ்போர்ட், விஸா தொடர்பாக அரை மணி நேரம் ஆட்சியாளரை சந்தித்துப் பேசினார். பாஸ்போர்ட் மற்றும் விஸா கிடைக்கும் வாய்ப்பு மிகக்குறைவு என்று தெரிவிக்கப்பட்டது. சாஞ்சி, ஆட்சியாளரை சந்தித்த அதே வேளையில், பாபா, மண்டலியிடம் இதைக் குறிப்பிட்டார்: "**அனைத்தும் இன்று முடிவடைய வேண்டும்**." இரண்டு வாரமாக இழுபறியில் இருந்த விஸா பிரச்சினை, சாஞ்சி ஆட்சியாளரை சந்தித்த பின்னர், ஒருவழியாக நிறைவடைந்தது. பெர்ஸியா பயணத்திற்கான அனைத்தும் தயாராகிவிட்டது.

இதற்கிடையில் ஆகா அலியின் பெற்றோர், பாபாவிடம் வந்து அவனைக் குறித்து முறையிட்டனர். பாபா பொறுமையாக அவர்களிடம் பேசி ஆறுதலும், நம்பிக்கையும் அளித்தார்.



மெஹர் பாபா, மெஹராபாத், 1926 - 1927




**பெர்ஸியா பயணம்**

நாசிக் (NASIK), மும்பை (MUMBAI), பந்தர் அப்பாஸ் (BANDAR ABBAS), மொஹம்மரா (MOHAMMERAH), இஸ்ஃபஹான் (ISFAHAN), கோரம்ஷஹர் (KHORRAMSHAH), எஸ்ட் (YEZD), முபார்கா (MUBARKA), பாம் (BAAM), துஸ்தாப் (DUZDAB), குவெட்டா (QUETTA), லாஹூர் (LAHORE), டெல்லி, நாசிக்.

# பரபரப்பான பயணங்கள்

**(Tumultuous Travel)**

1929, செப்டம்பர் 20ஆம் நாள், மெஹர் பாபா மற்றும் மண்டலியை ‘விக்டோரியா’ கப்பல் துறைமுகத்திற்கு, காக்கா பாரியா காரில் அழைத்துச் சென்றார். மெமோ, குல்மாய் இருவரும் முதலில் மலர் மாலை அணிவிக்க, பல்வேறு இடங்களிலிருந்து வந்த மக்கள் பாபாவிற்குப் பிரியாவிடை அளிக்கக் காத்திருத்தனர். ‘எஸ்.எஸ். வர்ஸோவா’ (S.S, VARSOVA) கப்பலில், பாபாவும் மண்டலியும் காலை 11.00 மணிக்கு பெர்ஸியாவை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினர்.

காலம் இதை இப்படிப் பார்த்தது: "பாபாவின் நெருங்கிய அன்பர்கள், ஆழமான உணர்வுகளோடு, அவர்களின் வாழ்வுக்கு மூலகாரணமாக இருக்கும் ஒருவருக்கு விடையளிப்பது போல, கைகளை அசைத்துக் கொண்டிருந்தனர்!

குருநாதர், கப்பல் தளத்திலிருந்து பாரபட்சம், ஜாதி, மத பேதமின்றி, செல்வந்தன், ஏழை அனைவருக்கும் தனது கைகளை அசைத்து, அன்பை பொழிந்ததைக் கண்டு, தேவதைகள் தங்கள் அன்பின் தனித்துவமான வெளிப்பாடாக, கண்ணீர் சிந்தின."

கப்பலில் பயணம் செய்த இதர மக்கள், இத்தகைய பிரமாண்டமான வழியனுப்புதலைப் பெற்ற ஒருவர், மூன்றாம் வகுப்பு அறையில் திறந்த வெளியில் பயணம் செய்வதைக் கண்டு குழப்பமடைந்தனர். பார்சி இனத்தைச் சார்ந்த ஒரு பணக்கார வியாபாரி, கட்டிட ஒப்பந்தக்காரர், பெயர் புர்ஜர் ஜோஷி, (BURJOR JOSHI) சாஞ்சியின் காதுகளில் முணுமுணுத்தார், "மெஹர் பாபாவைப் போன்ற மேன்மையான சாது ஒருவர், இவ்வாறு மூன்றாவது வகுப்பில் பயணம் செய்யக்கூடாது; நான் அவருக்காக ஒரு சிறப்பு அறைக்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றார். சாஞ்சி அவரிடம், பாபா எப்பொழுதும் மூன்றாவது வகுப்பில்தான் பயணம் செய்வது வழக்கம் என்று விளக்கினார். சாஞ்சியின் பதிலைக்கேட்டு திருப்தியடையாத அவர், பாபாவிடம் நேரடியாகச் சென்று, மரியாதையுடன் வேண்டினார், "ஐயா, புனிதமானவரே, இது உங்களைப் போன்ற உயர்ந்த சாதுக்களுக்கு உகந்த இடமல்ல. நீங்கள் அனுமதியளித்தால் உங்களுக்கும், உங்கள் தோழர்களுக்கும் முதல் வகுப்பு அறைகளை ஏற்பாடு செய்கிறேன்."

பாபா, சைகையால் பதிலளித்தார், "**நான் எங்கிருக்கிறேனோ, அங்கே மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். ஒரு துறவி எப்பொழுதும் ஏழையின் அருகில் இருப்பார்.**"

ஆனால், புர்ஜர் ஜோஷி இதை ஏற்றுக்கொள்ளாமல், கப்பல் ஆணை அதிகாரியை அணுகி, பாபாவிற்கு வசதியான அறைகளை வழங்குமாறும், அதற்கான செலவை அவர் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார். கப்பல் ஆணை அதிகாரி வேண்டிய ஏற்பாடுகள் செய்தும், பாபா அவற்றை

அமைதியாக மறுத்தார். எவ்வாறாயினும் அவருடைய தாழ்மையான வேண்டுகோளுக்கு இணங்கி, இரண்டாவது வகுப்பு அறையை பாபா ஏற்றுக்கொண்டார். மேலும் அவர் எடுத்த முயற்சிகள் நிச்சயமாக அவரது வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் ஆசீர்வாதமாக அமைந்தன.

கப்பலில் பயணம் செய்யும் வேளையில் மெஹர் பாபா, ஆகா அலியை அடிக்கடி நினைவுகூர்ந்து, அவனது புகைப்படத்திற்கு அவ்வப்போது முத்தமளித்தார்.

செப்டம்பர் 21ஆம் நாள் கப்பல் கராச்சி வந்தடைந்தது. பாபாவின் ஆன்மீக சகோதரி பீலாமாய், கராச்சி மேயர் ஜாம்ஷெட் மேத்தா (JAMSHED MEHTA) மற்றும் பலர் பாபாவை அங்கு சந்தித்தனர். அன்றிரவு பாபா, பீலாமாயின் இல்லத்திற்கு விஜயம் செய்தார்; அதிகாலை இரண்டு மணி வரை மக்களுக்கு தரிசனம் வழங்கினார்; இறையன்பைக் குறித்து பாபா, ஜாம்ஷெட் மேத்தாவுக்கு விளக்கமளித்தார்:

**உண்மையான வழிபாடு உள்ளளவில் - உள்ளத்தின் உள்ளே - இருக்கவேண்டும்; வெளியளவில் வார்த்தைகளை முணுமுணுப்பதில் அல்ல! ஆன்மீகப் பாதையில் அடி எடுத்துவைக்க, ஒருவர் மதச்சடங்கு சம்பிரதாயங்களைக் கடந்து செல்லவேண்டும். ஒருவர் அறிவுபூர்வமாக உண்மையைப் புரிந்துகொள்ள முடியாது, ஆனால், தற்போது, மக்கள் அதன் ஓர் அம்சத்தைக்கூட அறிந்துகொள்ளத் தயங்குகிறார்கள்!**

**உலகின் அனைத்து கோளாறுகளுக்கும் மனம் ஒன்றுதான் காரணம். அதை வென்றவன், அனைத்தையும் வென்ற உண்மையான வீரனாகிறான்.**

செப்டம்பர் 22ஆம் நாள் கப்பல் கராச்சியிலிருந்து புறப்பட்டது.

இத்தனை குறுகிய நேரத்தில் ஜாம்ஷெட் மேத்தா, பாபாவுடன் ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்தினார்; அது விரைவில் குறிப்பிடத்தக்க தொடர்பாக அமைந்தது. அவர் மஹாத்மா காந்திக்கு நெருங்கிய நண்பர்; அவருடைய செல்வாக்கு இறுதியில் மஹாத்மா காந்தி, மெஹர் பாபாவை சந்திக்கும் வாய்ப்பை உருவாக்கியது.

எஞ்சிய பயணத்தின் போது, பாபா அறையிலிருந்து மேல் தளத்திற்கு வரவில்லை. மண்டலியும் கடும் வெப்பத்தினால் அவதியுற்றனர். பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"இது என் அதிர்ஷ்டம். இந்த இடம் எனக்காக விதிக்கப்பட்டுள்ளது, நான் இதை விரும்புகிறேன்."**

ஒருமுறை பாபா, புவாஸாஹேபை கிண்டல் செய்து பேசிக்கொண்டிருந்த போது, அவர் வருத்தத்தில், விரும்பத்தகாத ஒன்றைக் கூறிவிட்டார்; பாபா அவருக்கு உபதேசித்தார், **"உங்கள் கோபத்தை விழுங்கக் கற்றுக்கொள்ளுங்கள். எல்லா சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாகவும், பணிவுடனும் இருக்க முயற்சி செய்யுங்கள்; எனது வார்த்தைகளுக்கு ஒருபோதும் எதிர் பேச்சு பேசாதீர்கள்."**

**"என்னிலிருந்து வெளிவரும் அம்புகள் உங்கள் மனநிலைக்கு நல்லது; மதுரசம் அதில் மறைந்துள்ளது. நீங்கள் எனது நீண்ட கால தோழர். தைரியம் படைத்தவராக இருங்கள்; நீங்கள் உடனிருக்கும் தைரியத்தால் தான் நான் பெர்ஸியாவிற்குப்** (புவாஸாஹேபின் பூர்வீகம்) **போகிறேன். என்னை மகிழச் செய்ததற்காக நீங்கள் மகிழ்ச்சியடையுங்கள். நான் நான்கு மாதங்கள் ஏகாந்தவாசம் மேற்கொள்ள வேண்டும்; அதற்குப் பிறகு நாம் உலகெங்கும் பயணம் செய்யவேண்டும்.**

பாபா, அப்போது ஆண் மண்டலி பின்பற்ற வேண்டிய சிறப்பு உத்தரவுகளை வழங்கினார்:

**எவரும் என்னைப் பற்றி இங்குக் கப்பலில் அல்லது பெர்ஸியாவில் இருக்கும்போது எதுவும் பேசக்கூடாது. என்னுடைய அனுமதியின்றி புத்தகங்கள், புகைப்படங்கள் மற்றும் அலங்கார பேழைகளை எவருக்கும் வழங்கக்கூடாது. நான் இங்கிருப்பது எவருக்கும் தெரியக்கூடாது, அது என் ஏகாந்தவாசத்திற்குத் தடையாக இருக்கும். என்னுடைய பணி முடிந்ததும் நானே அவர்களிடம் பேசுவேன், நானே விபரங்களை அறிவிப்பேன். அதுவரை அமைதியாக இருந்து நான் கூறுவதையே செய்யுங்கள்.**

மெஹர் பாபா இந்த அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு முன்பு, புவாஸாஹேப், தஸ்தூர் எழுதிய மெஹராஷ்ரம் பற்றிய ஆங்கில புத்தகத்தை, சக பயணிகளில் ஒருவருக்குக் கொடுத்தார். அடுத்த நாள் சாஞ்சி, இதைக் கண்டறிந்து பாபாவிற்குத் தெரிவித்ததும், பாபா சீற்றமடைந்தார். சாஞ்சி அந்தப் புத்தகத்தைத் திரும்பப் பெற்றாலும், இரண்டு மூன்று பயணிகள் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர்.

அதற்குப் பிறகு பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**"ஏழு வருடங்கள் நான் ஓர் அமைதியான இடத்தில் இருக்க விரும்பினேன், ஆனால், என்னால் சமாளிக்க முடியவில்லை. இது என்னுடைய கடைசி முயற்சி. தோல்வியை சந்தித்தால், ஒவ்வொருவரும், நேரடியாக, இல்லையேல் மறைமுகமாக, துன்பங்களை சந்திக்க நேரிடும்."** அப்போது பாபா கூறினார், **"கிறிஸ்து உலகின் திறவுகோலை அவர் கையில் வைத்திருந்தார், ஆனால், சிலுவையில் அறையப்பட்டார்!"**

மெஹர் பாபாவைக் குறித்த அவர் அடையாளத்தை, கப்பலில் பயணிக்கும் எவருக்குமே தெரிவிக்காத போதும், ஒரு முறை அவரைப் பார்க்க நேர்ந்தால், இது யார் என்று ஆச்சரியத்தில் உற்று நோக்காதவர்களே இல்லை! கப்பலின் இயந்திர அறையில் பணிபுரிந்த முஸல்மான் ஒருவர், ஒரு மூலையில் நின்றுகொண்டு, பாபாவைப் பார்த்தவண்ணம் இருந்தார்; ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை, பாபாவும் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஐந்து நாட்களுக்குப் பிறகு, பாபா தனது கைக்குட்டை ஒன்றை அவருக்கு அனுப்பி வைத்தார். விலைமதிப்பற்ற அந்தப் பரிசைப் பெற்ற மகிழ்ச்சியில் கண்களில் நீர் ததும்ப பாபாவைப் பாராட்டினார்; மேலும்

அதை விட்டுப் பிரியாமல் பொக்கிஷமாகப் பாதுகாத்து வைப்பதாகவும் கூறினார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவ கோவானிஸ் மேற்பார்வையாளர் ஒருவர் சாஞ்சியிடம் வினவினார், "கிறிஸ்துவைப் போல் இருக்கும் அவர் யார்? இக்காலத்தில் வாழும் இறை ஞானியா? உங்கள் குருநாதரா?"

"அவர் எங்களின் தோழன்," சாஞ்சி பதிலளித்தார், "உங்களுக்கும்தான்!"

செப்டம்பர் 26ஆம் நாள், கப்பல் பாரசீக நாட்டின் துறைமுகமாகிய மொஹம்மரா - MOHAMMERAH (KHORRAMSHAHR - கோரம்ஷஹர்) வந்து சேர்ந்ததும், அனைவரும் காலரா தடுப்பு ஊசி போட்டுக்கொள்ள வேண்டிய கட்டாயம். சாஞ்சி எவ்வளவோ எடுத்துக் கூறியும் பாபாவும் அதைப் போட்டாக வேண்டிய சூழ்நிலை.

கப்பலிலிருந்து இறங்கும்போது சுங்கத்துறை அதிகாரிகள் புத்தகங்கள், புகைப்படங்கள் மற்றும் ஆடம்பர பேழைகள், இஸ்லாமுக்கு எதிரானது என்று கூறி, பறிமுதல் செய்தனர். பாபா, **"இவர்கள் என்னுடைய பணி மற்றும் ஏகாந்தவாசத்திற்குத் தடையாக இருப்பார்கள்"** என்றார்.

புவாஸாஹேபைப் பார்த்து பாபா குறிப்பிட்டார், **"உங்கள் சிறிய ஒத்துழையாமை காரணமாக, நமது முழுத் திட்டமும் வீணாகும் நிலையில் உள்ளது. என்ன ஒரு பேரிடர், அதுவும் ஒருவரின் அலட்சியம் காரணமாக! இந்தப் புத்தகங்களை எடுத்து வரவேண்டிய தேவைதான் என்ன? நீங்கள், என்ன ஒரு துரதிர்ஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளீர்கள்? சில நேரங்களில் நல்ல நோக்கங்களுடன் நிகழ்த்தும் உரையாடல்கள் குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்."** இதற்கிடையில், புத்தகங்கள் தவிர அனைத்து பொருட்களும் திருப்பித் தரப்பட்டன. புத்தகங்களுக்கு அனுமதி வேண்டி தெஹரான் (TEHRAN) நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மெஹர் பாபா அவ்வேளையில் இவ்வாறு குறிப்பிட்டார்: **"இந்தக் குழப்பமான சூழ்நிலையிலும், நான் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன்; ஏனெனில் என்னுடைய முந்தைய அவதார காலகட்டத்தில், இந்த நகரம் முழுவதும் சுற்றிவந்தது எனக்கு நினைவிருக்கிறது."**

இரண்டு நாட்களுக்குப் பிறகு மொஹம்மராவில் பாபா மண்டலியுடன் தங்க வசதியான இடம் ஏற்பாடு செய்யப்பட்டது.

ராவ்ஸாஹேப் மூன்று சிறுவர்களுடன் (சோட்டா பாபா, அலி அக்பர், ஆகா அலி) வருவதை பாபா எதிர்நோக்கி இருந்தார். அவர்கள் பயணம் செய்த பேருந்துக்கு வழியில் தடங்கல் ஏற்பட்டதால், மூன்று நாட்கள் தாமதமாக வந்தனர். பாபாவின் புன்னகை அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றது.

மண்டலிக்கு மேலும் விளக்கங்கள் அளிக்கும் வேளையில் மெஹர் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**ஆன்மீகப் பாதையில், காமம் மிகப்பெரிய தடையாக இருக்கிறது. இதைக் குறித்த சிறியதோர் எண்ணமும் மனதில் நுழையக்கூடாது. அதனால் தான் நான் கூறுகிறேன், 'உங்கள் லங்கோட்டியை இறுக்கமாகக் கட்டிக்கொள்ளுங்கள்' என்று! அதன் அர்த்தம் என்னவெனில் காம சிந்தனைகள் ஆகாது, காம செயல்களில் ஈடுபடக் கூடாது, மேலும் பெண்களைத் தொடவோ அல்லது பார்க்கவோ கூடாது. காமம் மிகவும் வலிமையானது, ஒரு பெண்ணைப் பார்ப்பது கூட காம சிந்தனையைத் தூண்டும்; சிந்தனை செயலாக மாறும்.**

**ஒரு குழந்தைக்கும் அதன் தாய்க்கும் இடையிலான அன்பை ஒப்பிட்டுப் பாருங்கள்; குழந்தை, தாயின் கரங்களில் தவழும்போது காம சிந்தனைகளை ஏற்படுத்துவது இல்லை; ஆனால், தாய் தந்தையர் ஒருவரை ஒருவர் அணுகும் வேளையில் அது காம சிந்தனைகளை எழுப்பும்.**

மெஹர் பாபா, ராவ்ஸாஹேபிடம் பெர்ஸியா முழுவதும் பயணம் செய்ய ஒரு பேருந்து ஏற்பாடு செய்யுமாறு கூறினார்.

அக்காலத்தில், மொஹம்மராவிலிருந்து இஸ்ஃபஹான் (ISFAHAN) செல்லும் வழியில் திருடர்கள் மற்றும் கூட்டுக் கொள்ளைக்காரர்களின் பெரும் தொந்தரவு நிலவியது. இந்த வழியில் பயணிப்பது மிகவும் ஆபத்தானது என்று அனைவரும் கூறினர்.

ரேஸா ஷா (REZA SHAH), பெர்ஸியன் அரியணையில் அமர்ந்த பின்பு நெடுஞ்சாலையில், குறிப்பிட்ட இடங்களில் நிறுவப்பட்ட ராணுவ ரோந்து, நெடுஞ்சாலை கொள்ளைகளின் அச்சுறுத்தலைக் குறைத்தது. மேலும், 1924ஆம் ஆண்டு முதன்முறையாக, மெஹர் பாபா பெர்ஸியா பயணம் சென்று வந்த பின்பு, முற்காலத்தில் இருந்த அளவுக்கு மத உணர்வுகளோடு கூடிய விரோத மனப்பான்மை இப்போது இல்லை; முஸ்லிம் மற்றும் ஸொராஸ்டிரிய மக்களிடையே சகோதரத்துவம் வேரூன்றத் தொடங்கியது. பாபாவுடன் பல ஸொராஸ்டிரிய மண்டலி இருந்ததால் இப்போது நிலைமை அவ்வளவு ஆபத்தானதாக இல்லை. ஆனால், பெர்ஸியாவில் பயணம் செய்யும் போது, அவர்களின் மிகப்பெரிய பிரச்சினை சைவ உணவு; பல நாட்கள் உலர்ந்த ரொட்டிகளை மட்டுமே உண்டு, காலம் தள்ள வேண்டியதாயிற்று. பாலைவனத்தில் பயணம் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் ராவ்ஸாஹேப் முறையாகச் செய்தார்.

பெர்ஸியா வந்த நாளிலிருந்து பாபாவின் உடல்நிலையில் பாதிப்பு ஏற்பட்டது. அப்போது பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"என்னுடைய ஆன்மீக உட்பணி தீவிரமடையும் போது, அது எனது பௌதீக உடலை பாதித்து, என்னைத் திணறடிக்கச் செய்யும். ஆனால், நான் அதைப் பொருட்படுத்துவதில்லை."**

மொஹம்மரா காவல்துறை ஆணையாளர் மற்றும் பல அதிகாரிகள் மெஹர் பாபாவை சந்திக்க விரும்பினர். இதை, பாபாவிற்குத் தெரிவித்ததும், அவர் சீற்றத்துடன், **"என்னைப் பற்றிய விஷயங்களை வெளி நபர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டாம் என ஆயிரம் முறை சொல்லியிருக்கிறேன். நான் இதை விரும்பவில்லை. நானாகவே எங்கேயேனும் தரிசனம் வழங்கலாம், ஆனால், இங்கு அல்ல. நீங்கள் எவரும் நான் சொல்வதைக் காதில் வாங்குவதில்லை. இது தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குகிறது."** எதுவாயினும், பாபா அங்கு தரிசனம் வழங்க மறுத்துவிட்டார்.

1929, அக்டோபர் 3ஆம் நாள் பாபா மண்டலியுடன் மூன்று வாடகைக்காரில் இஸ்ஃபஹானை நோக்கி பயணத்தைத் தொடங்கினார். ஒரு வண்டியில் பாபா, ராவ்ஸாஹேப் மற்றும் மூன்று சிறுவர்கள் பயணம் செய்து, அக்டோபர் 15ஆம் நாள் ‘அஸ்ரே தலாய்’ ஹோட்டலில் (ASRE TALAI HOTEL) வந்து தங்கினர்.

பாபா இஸ்ஃபஹான் வந்து சேர்ந்த பின்பு, பிற மண்டலி வந்து சேர காலதாமதமானதால், ராவ்ஸாஹேபை ஒவ்வொரு நாளும் பலமுறை தொலைத்தந்தி அலுவலகத்திற்கு அனுப்பி, படைத்தளபதிகள், ஆளுனர் மற்றும் போலீஸ் அதிகாரிகளுக்கு அவர்கள் வரும் வழியில் தகவல் வழங்குமாறு கூறினார். மண்டலியைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்காததால், தொடர்ந்து தொலைத்தந்தி அனுப்புமாறு பாபா கூறி இருந்தார். ஆனால், ராவ்ஸாஹேப் அதற்குப் பிறகு தொலைத்தந்தி எதுவும் அனுப்பவில்லை.

ராவ்ஸாஹேப் திரும்பி வந்ததும், பாபா அவரிடம், **"தொலைத்தந்திகளை அனுப்பினீர்களா?"** என்று கேட்டதற்கு, அவர் இல்லை என ஒப்புக்கொண்டார். பாபா அவரை மூன்று முறை அறைந்து, கடுமையாகத் திட்டினார். **"முட்டாள், என்னுடைய பணியைக் கெடுத்துவிட்டீர்கள். நான் கூறியதைத் தவறாமல் செய்திருக்க வேண்டும். இது பெர்ஸியாவின் முன்னேற்றத்திற்காக நான் செய்யும் பணி. நான் அனுப்பும் ஒவ்வொரு தொலைத்தந்தியும், அந்த அதிகாரிகள் மூலமாக, மொத்தத்தில் பெர்ஸியாவில் முன்னேற்றத்தை கொண்டுவருவதே எனது நோக்கம். நீங்கள் அனைத்தையும் கெடுத்துவிட்டீர்கள்!"**

மண்டலியுடன் வேறு வழிகளில் சென்ற இரண்டு வண்டிகள், கோளாறுகள் காரணமாக, தாமதமாக வந்து சேர்ந்தன.

அடுத்த நாள், இரவு உணவுக்குப் பிறகு, மெஹர் பாபா சில ஈரானியர்களின் ஒழுக்கக்கேடான நடத்தையைக் குறித்து மண்டலிக்கு விளக்கினார்:

**"நாம் அவர்களுக்காகப் பரிதாபப்பட வேண்டும்; அவர்களைக் குறை கூறக்கூடாது, அறியாமைதான் அதற்குக் காரணம். இப்போது நான் பெர்ஸியாவுக்கு வந்துள்ளேன், இந்தப் பணியை** (இங்குள்ள சூழ்நிலைகளை -

தூய்மைப்படுத்தும் பணியை) **நான் இந்தியா திரும்பிச் செல்வதற்கு முன்னால் செய்து முடிப்பேன்."**

பாபா அப்போது மண்டலியை எதிர்கொண்டு கேட்டார், **"இப்போது, ஒரு விஷயத்தை எனக்கு வெளிப்படையாகச் சொல்லுங்கள்; இதை நான் உங்களிடம் கேட்பதற்கு ஒரு முக்கிய காரணம் உள்ளது. என்னுடன் வந்து இணைவதற்கு முன்னர் அல்லது அதற்குப் பிறகு, நீங்கள் ஏதேனும் தவறான செயல்களில் ஈடுபட்டிருந்தால், அதை நீங்கள் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக இன்று என்னிடம் சொல்ல வேண்டும். அதைத் திறந்த இதயத்துடன், சிறிதளவும் அஞ்சாமல், எதுவாக இருந்தாலும் ஒப்புக்கொள்ள வேண்டும்."**

ஒவ்வொருவரும் பாபாவின் முன்னிலையில் தத்தமது பலவீனங்களை நேர்மையாக வெளிப்படுத்தினர், அது பாபாவை மிகவும் மகிழச் செய்தது. அதற்குப் பிறகு பாபா குறிப்பிட்டார், **"நீங்கள் செய்த எந்தத் தவறுகளுக்காகவும் இப்போது வருந்த வேண்டாம். என்னிடம் நீங்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்டதால், உங்களின் ஒவ்வொரு தவறையும் நான் மன்னித்துவிட்டேன். உங்களில் சிலர் எந்தத் தவறுமே செய்யாத இவ்வேளையில் பிற அனைவரையும் நான் முற்றிலும் மன்னித்துவிட்டேன்."**

**உங்கள் பலவீனங்களை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுமாறு இன்று நான் உங்களிடம் கேட்டது போல, ஜீஸஸ் அவரது சீடர்களை, தினமும் குறிப்பிட்ட நேரத்தில் சந்தித்து, அவர்களின் பலவீனங்களை மன்னித்து, அறிவுரையும் வழங்கினார். ஜீஸஸின் இந்தச் செயலிலிருந்து, கிறிஸ்தவர்கள் இன்றும் ஒப்புதல் வாக்குமூலத்திற்காக, மத போதகர்களை அணுகுகிறார்கள். இது ஒரு நல்ல நடைமுறை. ஆனால், அத்தகைய வாக்குமூலம் மற்றும் மன்னிப்புக்குப் பின்னர், அதுபோன்ற நடவடிக்கைகளில் மறுபடியும் ஈடுபடக்கூடாது. அவற்றை மீண்டும் மீண்டும் செய்வதாக இருந்தால், எந்த நன்மையும் இல்லை. ஏழு நாட்களில் நீங்கள்** 700 **தவறுகளைச் செய்து, ஒப்புதல் வாக்குமூலம் அளித்த பின்பு, மீண்டும் அவற்றைச் செய்வதானால் என்ன பலன்?**

**பாதிரிகள், தஸ்தூர்கள், முல்லாக்கள் மற்றும் போதகர்கள் நீண்ட பிரசங்கங்களை வழங்குகிறார்கள், ஆனால், அவற்றில் நன்மை ஏதுமில்லை. மக்கள் ஒரு காதில் வாங்கி, மறு காது வழியாக விட்டுவிட்டு, அதே தவறுகளை மறுபடியும் செய்கிறார்கள். இதற்குக் காரணம், ஒரு சத்குரு மட்டுமே மனித குற்றங்களின் விளைவுகளை சமாளித்து, அவற்றின் தீவிரத்தை எடுத்துக்காட்டி, குற்றவாளியின் மனதை அடக்கி, சீர்படுத்த முடியும். ஒரு மத போதகரின் வார்த்தைகள் என்ன விளைவை ஏற்படுத்தும்? ஒரு சத்குருவின் அனைத்தும் அறிந்த தன்மைதான் இதற்கு வழிகாட்ட முடியும். எனவே விழிப்புடன் இருங்கள்; தவறுகளைச் செய்துவிட்டு பிறகு வருந்துவானேன்! காமத்தின் தீவிர தன்மை ரிஷி, முனிகளின் தவத்தையும், எளிய வாழ்க்கையையும் முறியடித்துள்ளது. ஆகையால், உங்களை என்ன**

**சொல்வது? உங்கள் பாக்கியம், உங்களை எனது சகவாசத்தில் கொண்டு வந்து, தவறுகளை என்னிடம் ஒப்புக்கொள்வதன் மூலம், நீங்கள் மன்னிக்கப்படுகிறீர்கள். நீங்கள் இந்தத் தவறுகளை மறுபடியும் செய்ய மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் நான் உங்களை முற்றிலுமாக மன்னிக்கிறேன்.**

**என்னுடைய மன்னிப்பை நீங்கள் இன்று அடையப்பெற்றதால், நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள். மன்னிப்பது என் இயல்பான குணம்; ஒருமுறை நான் மன்னித்தால் வருந்துவதற்கு எதுவுமில்லை.**

மெஹர் பாபா, அப்போது மண்டலியில் ஒவ்வொருவரிடமிருந்தும், 'பெண்களை இனிமேல் காம உணர்வோடு தொடமாட்டேன்' என்ற வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டார். திருமணமானவர்களைப் பொறுத்தவரையில், 'தனது மனைவியைத் தவிர வேறு எந்த பெண் மணியையும் தொட மாட்டேன்' என்ற வாக்குறுதியையும் வழங்கச் செய்தார்.

மெஹர் பாபா, மண்டலியை மன்னித்து அருளினாலும், அவர்களின் கடந்தகால பலவீனங்களைக் குறித்த குற்ற உணர்வு மனதில் ஒரு வடுவை ஏற்படுத்தத் தான் செய்தது.

அதற்குப் பிறகு பாபா, அவர் எடுத்துரைத்ததை மேலும் விளக்கிக் கூறினார்:

**காமம் மோசமானது அல்ல. இந்தக் காமத்தினால் தான் நீங்கள் மனிதனாகப் பிறந்துள்ளீர்கள். இந்த ஒரே காமத்தினால் தான் நீங்கள் மனிதர்களிலிருந்து தெய்வமாக மாறுகிறீர்கள்! ஆனால், உங்களில் காமம் இருந்தாலும், அதைச் செயல்படுத்த மட்டும் செய்யாதீர்கள். ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பார்த்தால், காமம், மிக மோசமான பலவீனமாகும். அதை வெற்றிகரமாக எதிர்த்துப் போராடுபவன் உண்மையான வீரன். உங்கள் மனைவி இல்லாமல், மற்றொரு பெண்மணியுடன் இருப்பது மிக மோசமான பாவங்களில் ஒன்றாகும். என்ன நடக்கவேண்டுமோ அது நடந்துவிட்டது; ஆனால், இந்நேரத்திலிருந்து காம இயல்பைப் பொறுத்தவரையில் எச்சரிக்கையாக இருங்கள். என்னுடைய கட்டளைகளைப் பின்பற்றி, காமத்திலிருந்து விலகியிருங்கள். அத்தகைய துர்நாற்றம் மிக்க உடல் பகுதிகளிலிருந்து ஒருவர் என்ன ஒரு நீடித்த இன்பத்தைப் பெறமுடியும்? இது உடலை அசுத்தப்படுத்தி ஆன்மாவை அழிக்கிறது.**

**எனக்கு ஒவ்வொரு விஷயமும் தெரியும்; ஆனால், அனைத்தும் தெரிந்தும், நான் அவற்றைக் கண்காணித்துக்கொண்டே இருப்பேன். ஒருவேளை நீங்கள் நினைக்கலாம், எல்லாவற்றையும் அறிந்திருந்தும், பாபா ஏன் பாவங்களைச் செய்வதிலிருந்து நம்மைக் காப்பாற்றுவதில்லை என்று! நீங்கள் ஒரு தவறான செயலைச் செய்யும் முன்னர், எனக்கு ஏற்கனவே தெரியும் நீங்கள் அந்தத் தவறைச் செய்யப்போகிறீர்கள் என்று! அப்போது அதை நான் ஏன் தடுப்பதில்லை? இது என்னுடைய இரகசியம்.**

எனது பணியின் இரகசியம் என்னவெனில், எனக்கு அனைத்தும் தெரிந்திருந்தும், நான் அதில் தலையிடுவதில்லை. உண்மை என்னவெனில், இந்தக் காமத்தை நீங்கள் கொண்டிருக்க வேண்டும், அதே வேளையில் அதற்கு இரையாகாமல் இருக்க, நீங்கள் உங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். நீங்கள் கடுமையாகப் போராட வேண்டும், ஆயிரம் முறை தோற்கடிக்கப்பட்டாலும், அத்துடன் தொடர்ந்து போராட, நீங்கள் மீண்டும் தயாராக இருக்க வேண்டும்.

நான் விரும்பியிருந்தால், உங்களின் காமத்தை எந்த நேரத்திலும் என்னால் அழித்திருக்க முடியும். ஆனால், அதை அழிப்பதால் என்ன பயன்? இறுதியில் அதை அழிப்பவன் நானே! இதற்கிடையில், உங்களுக்குள் நடக்கும் போராட்டத்தைத் தொடருங்கள். இது நியதி; இது அவசியம். காமத்தைத் தோற்கடிப்பதில் மகிழ்ச்சி வரும், மன நிறைவு வரும். போராட்டம் இல்லாமல், போராடுவதில் மகிழ்ச்சி இல்லை. உண்மையான மகிழ்ச்சி, பல தோல்விகளுக்குப் பிறகு வரும் வெற்றியில் தான் உள்ளது. தடைகள், தியாகங்கள் மற்றும் அயராத முயற்சி இல்லாமல் வெல்லும் போர்களில் எந்த இன்பமும் இல்லை. இது 'வாழ்வா? இல்லை சாவா?' என்ற போராட்டமாக இருக்கவேண்டும்! காமத்தை எதிர்த்துப் போராட வேண்டும். இது வாழ்நாள் போராட்டம். இது இறுதி நாள் வரை உங்களைத் துன்புறுத்தும். நீங்கள் எப்பொழுதும் விழிப்புடன் இருக்க வேண்டும், மேலும் போருக்குத் தயாராக இருக்க வேண்டும்.

என் மீது அன்பும் நம்பிக்கையும் உள்ள ஒருவன், எனக்குக் கீழ்ப்படிய இரு மடங்கு கடினமாக முயற்சிப்பான். நீங்கள் ஏதேனும் பெண்மணியைத் (தகாத முறையில்) தீண்டினால், உடனடியாக என்னிடம் சொல்லுங்கள்; இது ஒரு வழி. அடுத்த வழி என்னவெனில், முந்தைய பிறவியில் நீங்கள் ஒரு பெண்ணாக இருந்து, ஓர் ஆண்மகனோடு தொடர்பு வைத்திருந்தீர்கள் என்றும் இப்போது நீங்கள் ஓர் ஆண்மகன், ஒரு பெண்ணோடு தொடர்புகொள்ள விரும்புகிறீர்கள்; முந்தைய பிறவிகளில் நீங்கள் போதுமான அளவு திருப்தி அடைந்து விட்டீர்கள், அதிக காமத்தால் என்ன அடையப் போகிறீர்கள் என்பதை எண்ணிப்பாருங்கள்.

முதன்மையாக, நீங்கள் காமத்திலிருந்து விடுபட முயற்சிக்க வேண்டும், ஏனெனில், பிற எல்லா தீமைகளும் அதன் காரணமாகத்தான் வருகின்றன. உதாரணமாக, ஒரு கிளியின் தொண்டை வெட்டப்பட்டால், அது இறந்துவிடும். ஆனால், அதன் இறக்கைகளை துண்டித்தால், அது இறக்காது; சிறிது காலத்திற்குப் பின்னர் இறகுகள் முளைத்துவிடும். காமத்தை, கிளியின் தலையுடன் ஒப்பிடலாம். எனவே, காமம் இன்னமும் இருக்கும்போது, கோபம் போன்ற பிற தீயகுணங்களை நாம் வெல்வோமேயானால், தீமைகள் மீண்டும் புத்துயிர் பெற்றுவரும் - அனைத்தும் தலையிலிருந்து எழுகிறது. ஆனால், காமம் ஒரு முறை

கொல்லப்பட்டால், பிற எல்லா தீமைகளும் அழிக்கப்படுகின்றன - அதாவது நீங்கள் அதன் தலையைத் துண்டித்து விட்டீர்கள்.

எதுவாயினும், உண்மையில், பரிணாம வளர்ச்சிக்குக் காமம் இன்றியமையாதது. இது தாவர இனங்களில் காய்கறி வடிவங்களில் வளரத் தொடங்குகிறது. காமம் அதிகமாகும்போது பரிணாம வளர்ச்சி தொடரும். மேலும் சக்தி அதிகமாகும் வேளையில் உணர்வு விரிவடையும்.

பிறவிக்குப் பின் பிறவி எடுத்து, மனப்படிவங்களை அழிப்பது என்பது சுலபமான காரியமல்ல; காமம் அனைத்திலும் கடினமானது. ஆனால், வீரனாக இருந்து அதை எதிர்த்துப் போராடவேண்டும்.

மெஹர் பாபா மீண்டும் விரிவாக எடுத்துரைத்தார்:

இங்கு நடப்பதை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? இந்த நாட்டில் எவ்வளவு தீய, களங்கமிக்க சூழ்நிலைகள் உள்ளன என்று உங்களுக்குத் தெரியுமா? நான் இங்கு வருவதன் காரணம் அதுவே! என்னால் செய்யவேண்டிய அனைத்தையும் நான் செய்கிறேன். இதை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்வீர்கள்? நான் பணிபுரியும் வழிமுறைகளை நீங்கள் எங்ஙனம் புரிந்து கொள்ளமுடியும்? எனவே அமைதியாக இருந்து நான் சொல்வதைச் செய்யுங்கள். ஏன், எங்கே, எதற்காக என்று ஒருபோதும் கேட்க வேண்டாம். எங்கள் மர்மமான வழிகளை நீங்கள் எவ்வாறு ஆராய முடியும்? எல்லாவற்றையும் வெளிப்படுத்த முடியாது. எனது சொந்த, குறிப்பிட்டக் காரணங்களுக்காக, நான் உங்களை ஆயிரம் முறை வெட்கப்படச் செய்தாலும், தாழ்மையுடன் இருங்கள், தாழ்ந்து தலை வணங்குங்கள். உலகின் பார்வையில் நான் உங்களை நிர்வாணமாகச் செய்தால் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் என்பேன்.

குருநாதர் அவருடைய பொக்கிஷத்தை உங்களுக்கு வழங்க எந்நேரமும் தயாராக இருக்கிறார், ஆனால், உங்கள் கொள்கலன் காலியாக இல்லை. அது குப்பைகளால் நிரம்பியுள்ளது! நான் அன்பைத் தர விரும்புகிறேன், ஆனால், உங்கள் மனம் காமத்தால் நிரம்பி வழிகிறது! அதை முற்றிலும் அழித்தாலொழிய, நான் உங்களுக்கு அந்த அன்பின் அனுபவத்தைத் தர முடியாது. எனவே, காமத்தை வெல்லுங்கள் - அதை விரட்டுங்கள்!

மெஹர் பாபா அவருடன் இருந்த ஆண் மண்டலியைப் பற்றி இந்த அறிவிப்புகளை வெளியிட்டார்:

•குஸ்தாஜி ஏழாவது தளத்தில் இருப்பவர்!

•விஷ்ணு ஊக்கமிக்க ஆன்மீகவாதி; எளிதில் உணர்ச்சிவசப் படுபவர்; திடீர் கோபக்காரர்!

•சகன் ஒரு யோகியைப் போன்றவர்; எந்நேரமும் சமாதி நிலையில் இருப்பவர்; ஆனால், அவரது கன்னங்கள் கண்ணிமைக்கும் முன் வீங்கிவிடும்! (கோபம் மற்றும் உணர்ச்சிவசப்படுபவர்!)

•ஜால்பாய் ஓர் இசைஞானி!

**•சிது ஒரு பாடகன்!**
**•சாஞ்சி மெட்டிற்கு தாளமிட்டு, மத்தளம் கொட்டுபவர்!**
**•புவாஸாஹேப், கரீம், மாஸாஜி இவர்கள் கேட்போர் கூட்டம்!**

இஸ்ஃபஹானில் இருந்த வேளையில் பாபா, ஆகா அலி, சோட்டா பாபா, அலி அக்பர் மூவருடனும் அதிக நேரத்தைச் செலவிட்டார். அக்டோபர் 20ஆம் தேதியளவில் பாபா, அவருடைய பணி, பயணம் இரண்டிற்கும் தயாராக இருந்த நிலையில், எதிர்கால திட்டங்கள் குறித்து விவாதித்தார்: **"நான் நான்கு மாதங்கள் ஏகாந்தவாசம் மேற்கொள்ள வேண்டும். அதற்கு இஸ்ஃபஹான் உகந்த இடமல்ல. எனவே நாம் வேறு எங்கேனும் செல்லவேண்டும்."**

நீண்ட நேர விவாதத்திற்குப் பிறகு, பாபா 'எஸ்ட்' நகரத்திற்குச் செல்வதில் விருப்பம் தெரிவித்து மண்டலியிடம், **"நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும்போது என்னுடன் யார் யார் இருக்க விரும்புகிறீர்கள்? மேலும் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல விரும்புகிறவர்கள் இங்கிருந்தே புறப்படலாம். இப்போது சொல்லுங்கள்! என்னுடன் இருக்க யார் யார் விரும்புகிறீர்கள்?"** என்று கேட்க, அனைவரும் உடனிருக்க சம்மதம் தெரிவித்ததும் பாபா மிக்க மகிழ்ச்சியடைந்து இவ்வாறு கூறி முடித்தார், **"மிக்க நன்று; எதிர்காலத்தில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்."**

இஸ்ஃபஹான் நகர மக்கள், பாபாவின் வருகையைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவருடைய தரிசனத்திற்காகத் தொடர்ந்து வேண்டுதல் விடுக்கவே, இறுதியாக, பாபா அவர்களுக்கு தரிசனம் வழங்க இணக்கம் தெரிவித்தார். பலர் வந்தனர் - பணக்காரர்கள், ஏழைகள். பாபாவின் புகைப்படங்கள் மற்றும் அலங்கார பேழைகள் வழங்கப்பட்டன. குருநாதரின் சித்திரங்களுடன் பேழைகள் அணிவது இஸ்லாம் மதத்திற்கு எதிரானது. சிலர் பாபாவின் பாதங்களைத் தொட்டு வணங்கினர். முஸ்லிம்கள் இதுபோன்ற தொழுதலில் ஈடுபடுவது மெஹர் பாபாவின் அன்பால் மட்டும்தான் முடியும். ஒரு வகையான மத வெறியர்கள் கூட பாபாவின், அன்பின் தெய்வீக சக்திக்கு முன்பாக அடிபணிந்து வணங்கினர்!

1929 அக்டோபர் 22ஆம் நாள், பாபாவும் மண்டலியும் எஸ்ட் (YEZD) நகருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

பாலைவனம் வழியாக இரண்டு நாள் பயணத்திற்குப் பின்னர், எஸ்ட் வந்து சேர்ந்து, அன்றிரவு ஒரு சத்திரத்தில் தங்கினர். அடுத்த நாள், 'அர்பாப் ருஸ்தம் குஷ்ரவ்' (ARBAB RUSTOM KHUSHRAV) எனும் வியாபாரி ஒருவரின் அழைப்பை ஏற்று, பாபா மண்டலியுடன் அவர் இல்லத்தில் தங்கினார்.

எஸ்ட் நகரில் பல ஸொராஸ்ட்டிரியர் மற்றும் முஸ்லிம்களின் இதயங்கள், இனம்புரியாத வலியால் அவரிடம் ஈர்க்கப்பட்டு, மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். நான்கு மிகப்பெரிய தரிசன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அர்பாப் ருஸ்தம் மிகுந்த செல்வாக்கு வாய்ந்தவர் என்பதால்,

உள்நாட்டு மக்கள் மற்றும் பெரும் பதவிகளில் இருந்த இராணுவ, அரசாங்க அதிகாரிகளும், ஊழியர்களும் தரிசனத்திற்காக வந்தனர்.

எஸ்தில் நடந்த ஒரு குறிப்பிடத்தக்க, மறக்கமுடியாத நிகழ்ச்சி என்னவெனில், ஷிராஸ் (SHIRAZ) நகரில் வாழ்ந்த பஹாய் (BAHAI) இனத்தவரின் தலைவன் ஒரு முழு நீள கேள்வித்தாளுடன், போட்டி மனப்பான்மையில் மெஹர் பாபாவை எதிர்கொண்டு, அவரை ஒரு போலி குருநாதர் என்று வெளிப்படுத்தும் நோக்கத்தில் எஸ்ட் நகருக்குப் பறந்து வந்தார். ஆனால், பாபாவைப் பார்த்த முதல் பார்வையிலேயே கேட்கவிருந்த கேள்விகள் அனைத்தையும் மறந்து, கண்களில் நீர் வழிய இவ்வாறு பறைசாற்றினார், "நீங்கள் கடவுள்! கடவுளின் மொத்த உருவம்!" மெஹர் பாபாவின் பாதங்களில் தலைவணங்கி, சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து கண்ணீர் சிந்தி அழுதார். பாபாவின் அறையிலிருந்து வெளியே வந்ததும், அவர் மக்களுக்கு ஆச்சரியத்துடன் தெரிவித்தார், "இன்று நான் கடவுளை சந்தித்தேன்."

அக்டோபர் 25, 26ஆம் நாட்களில், பாபா ஏகாந்தவாசத்திற்கு பொருத்தமான இடத்தைப் பார்வையிடச் சென்றார். எதுவுமே அவருடைய விருப்பத்திற்கிணங்க அமையாததால், ஜாஃப்ரபாத்தில் பைதூலின் இல்லத்திற்குச் சென்று, அவரது மனைவி ஸொல்டூன் மற்றும் உறவினர்களை சந்தித்தார். பாபா, ஸொல்டூனிடம் மதிய உணவைத் தயார் செய்யக் கூறினார். பாபா உணவு உண்ண மிகவும் அவசரமாக இருந்ததால், அரிசி சரியாகப் பதமாகாதபோதும் பாபா அதை அனைவருக்கும் வழங்கினார். ஸொல்டூன் சாதம் சரியாகப் பதமாகவில்லை என்று எடுத்துக்கூறி, அதைத் தடுத்து நிறுத்த எவ்வளவோ முயன்றும் பாபா உணவை வேக வேகமாகப் பரிமாறினார். ஆனால், பாபா ஒவ்வொருவரையும் கேட்டபோது அனைவரும் சாதம் நன்றாக இருப்பதாகத் தெரிவித்தனர். ஸொல்டூன் மிகவும் ஆச்சரியமடைந்தார்.

அக்டோபர் 27ஆம் நாள் பாபா மண்டலியுடன் முபார்காவின் புறநகர் பகுதியில் வாழும் புவாஸாஹேபின் தந்தையை சந்தித்தார். ஆகா அலியின் உறவினர்களும் அங்கே வாழ்ந்து வந்தனர். ஆகா அலியை உடன் அழைத்துச் செல்வதில் உறவினர்கள் விருப்பம் தெரிவிக்காததால் பாபாவும் வற்புறுத்தவில்லை.

மண்டலியில் ஒருவர் அங்கு நடந்ததை இவ்வாறு பதிவு செய்திருந்தார்:

பாபா, முபார்காவில் அலியைப் பார்த்தபோது, அவன் மெலிந்து, உடல்நலமின்றி, முகம் வெளறி, ஜுரத்தால் அவதிப்பட்டான். பாபா பின்னர் அதை எண்ணி கண்கலங்கினார். இதைப் பார்த்த மண்டலி, பாபா, அலியின் மீது வைத்த அளவு கடந்த அன்பைப் புரிந்து கொண்டனர்.

இத்தகைய குழப்பமான நிலையில் பாபா, ஆகா அலி, சோட்டா பாபா இருவரையும் பெர்ஸியாவில் அவரவர் இல்லங்களுக்கு அனுப்பி வைத்தார். அவர்களுக்கு விடையளிக்கும் வேளையிலும் பாபா கண்கலங்கினார்.

ஆகா அலியின் உறவினர்கள் பாபாவை எதிர்த்த அந்த வேளையில், அலியின் மாமா, பாபாவைக் கொலை செய்யும் நோக்கத்தில் துப்பாக்கியை மறைத்து வைத்துக்கொண்டு பாபாவை அணுகினார். பாபாவின் முன்னால் நேருக்கு நேர் வந்ததும், மாறாக, அனைத்தையும் மறந்து, பாபாவின் பாதங்களில் விழுந்து தரிசனம் செய்தார். பின்னர் அவர் தனது தவறான நோக்கத்திற்காக மனம் வருந்தி, பாபாவிற்கு ஒரு கூடை நிரம்ப பீச் பழத்தை அன்பின் அடையாளமாக அனுப்பி வைத்தார்.

முபார்காவிலிருந்து மெஹர் பாபா, அவரது தாத்தா முண்டேகர், மற்றும் தந்தை ஷெரியார்ஜி அவர்களின் பூர்வீகமான கோரம்ஷஹர் நகருக்கு விஜயம் செய்தார்; அங்கு பாபா மிகவும் அற்புதமான மனநிலையில் காணப்பட்டார். சாஞ்சிக்கு ஒரு புதிய தொப்பியும், விஷ்ணுவுக்கு புதிய சட்டையும் கொடுத்தார். அதற்குப் பிறகு பாபா மண்டலியுடன் எஸ்ட் நகரத்திற்குத் திரும்பி வந்தார்.

எஸ்ட் நகரில் பாபா தங்கியிருந்த செய்தி எங்கும் பரவவே, திரள்திரளாக மக்கள் கூட்டம் அலைமோதியது. இறுதியில் கூட்டத்தை சமாளிக்க, போலீஸ் துணையை நாட வேண்டியதாயிற்று. எஸ்ட் மக்கள், பெர்ஸியன் அதிபதியான ரேஸா ஷா, பாபாவை சந்திக்க வேண்டுமென ஆர்வம் தெரிவித்தனர்; ஆனால், பாபா அதை மறுத்துவிட்டார்.

அன்று மாலையில், பாபா மண்டலியுடன் ‘பாம்’ (BAAM) நகருக்கு வந்து சேர்ந்து ‘துஸ்தாப்’ (DUZDAB) செல்லும் வழியைப் பற்றி விசாரித்தார். வழியில், பாலைவனத்தில் எந்தத் தடையும் இல்லாமல் பயணம் செய்ய முடிந்தால், இரண்டு நாட்கள் பிடிக்கும் என்று தெரியவந்தது. ஆனால், அவர்கள் அந்த வழியில் செல்ல வேண்டாம் எனக் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்; பல வணிகர்கள், யாத்ரீகர்கள் இந்த வழியில் அழிந்ததாக அல்லது மணலில் சிக்கிப் புதைந்ததாகத் தெரியவந்தது. மேலும் இந்தப் பாதை மிகவும் ஆபத்தானது, இங்கு நெடுஞ்சாலை கொள்ளைக்காரர்களின் தொல்லை அதிகம் என்றும் கேள்விப்பட்டனர். ஒருவர் இவ்வாறு கூறினார்: "இந்த வழியில் பயணிப்பது முட்டாள்தனம். எவரும் இந்த வழியில் செல்வதில்லை; அப்படிச் செல்வதானால், அது இறப்பை வரவழைப்பதற்கு சமம். இந்த வழியில் பயணம் செய்து பாதுகாப்பாக துஸ்தாப் சென்று சேர்ந்தால், அவருக்கு அல்லா இரண்டாவது வாழ்க்கை வழங்கியதாகக் கருதப்படுகிறது."

இதற்கிடையில், ராவ்ஸாஹேப், அவர்கள் தங்கியிருந்த இடத்தின் புறநகரில், அமைதியான ஓய்வு இல்லம் ஒன்றை ஏற்பாடு செய்தார். இங்கு வந்ததும், மெஹராபாத் திரும்பிச் செல்வது பற்றிய ஒரு நீண்ட விவாதம் நடைபெற்றது. ஆகா அலிக்கு பதிலாக வேறொரு நல்ல சிறுவனைக் கண்டுகொள்ளுமாறு பாபா தெரிவித்ததும், ராவ்ஸாஹேப் ஒரு சிறுவனைத் தேடி அழைத்து வந்தார்.

அடுத்த நாள், 1929, அக்டோபர் 31, குஸ்தாஜி புனிதமான தோற்றமிக்க ஒருவரை கவனித்தார்; உள்ளூர் மக்கள் அவரை மிகுந்த பயபக்தியுடன் பார்த்தனர்; அவர்கள் தங்கியிருந்த இல்லத்திற்கு எதிரில் அமைந்த கடையருகில் அமர்ந்திருந்தார். குஸ்தாஜி இதை பாபாவிற்குத் தெரிவிக்க, பாபா வாசலருகில் வந்து பார்த்தார். பாபா அங்கு வந்ததும், அவரை ஏற்கனவே அறிந்தவர் போல, பாபாவிற்கு மரியாதை செலுத்தும் நிமித்தம், துறவி தன் இருக்கையிலிருந்து எழுந்து, அருகில் வந்து பாபாவின் கரங்களில் முத்தமளித்தார். பாபா அவரை அன்புடன் அரவணைத்த பிறகு மறுபடியும் அவரது இருக்கையில் சென்று அமர்ந்தார்.

அங்கு வந்த அனைவருக்கும் அவர் இப்படி எடுத்துரைத்தார்: "பரதேசிகளாகிய நம் அனைவரின் மத்தியிலும் ஒரு பேரரசர் இருக்கிறார்." பாபா, பின்னர் அவரைத் தனது அறைக்கு அழைத்துச் சென்று அவருடன் தனியாக அமர்ந்தார். பாபா, ஒரு மெத்தையை அன்பளிப்பாகக் கொடுத்ததும் அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். '**அந்தப் புனிதமான மனிதர் ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் வாலி**' என்று பாபா குறிப்பிட்டார்.

மெஹர் பாபா அப்போது எஸ்ட் நகரில் நடந்த நிகழ்ச்சி மற்றும் ஊர் மக்களின் அன்பைப் பற்றிப் பெருமையாகக் கூறினார். அந்த நிகழ்ச்சிகளுக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த ருஸ்தம் குஷ்ரவ் என்பவரை பாபா பெரிதும் பாராட்டினார். முழு நகரமும் பாபாவை சந்திக்க பேராவலுடன் காத்திருந்தது; ஏகாந்தவாசத்திலிருந்து வெளியே வந்ததும், மெஹர் பாபா பெர்ஸியாவில் அளித்த ஒரே வெகுஜன தரிசனம் இதுவேயாகும்.

பாம் நகரத்தில், பெர்ஸியன் ராணுவ தளபதி ஒருவர், வாளுடன் முழு ராணுவ சீருடையில், மெஹர் பாபா தங்கியிருந்த வீட்டிற்கு வந்து, மண்டலியிடம் மெஹர் பாபாவைப் பற்றிக் கேட்டபோது, மண்டலி அவரிடம், அந்தப் பெயரில் இங்கு எவருமில்லை என்றனர். இராணுவ தளபதி மன்றாடினார், "ஒரு பிச்சைக்காரன் அவர் வாசலில் நின்று கொண்டிருக்கிறான் என்று தயவுசெய்து உங்கள் குருநாதரிடம் சென்று கூறுங்கள்." பாபாவிற்குத் தெரியபடுத்தியதும், அவர் அந்தத் தளபதியை உள்ளே அனுமதித்தார். அவர், பாபா முன்னிலையில் வந்ததும் இரு கைகளால் வணங்கி, பின்பு, பாரசீக இராணுவ பாணியில் பாபாவிற்கு வணக்கம் தெரிவித்து, தோளில் தொங்கிய வாளை கீழே தரையில் வைத்தார். பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கி கைகளில் முத்தமிட்டார்.

"**நீங்கள் யார்?**" பாபா வினவினார்.

"உங்களின் தாழ்மையான அடிமை" அவர் பதிலளித்தார்.

"**நீங்கள் எந்தப் பதவியில் இருக்கிறீர்கள்?**"

"இது, பெரும் மதிப்புக்குரிய உங்கள் முன்னால் ஒன்றுமில்லை" தளபதி பதிலளித்தார்.

"**பெர்ஸியன் இராணுவத்தில் உங்கள் தரவரிசையைப் பற்றிக் கேட்டேன்.**"

"நான் ராணுவ தளபதி" என்றார்.

பாபா அன்புடன் அவர் தலையிலும், தோளிலும் தட்டிக் கொடுத்து கூறினார், "**ஒருவர் நாட்டிற்குச் செய்யும் சேவையில் உயிரிழப்பது, உண்மையில் பெரிய விஷயம்; ஆனால், கடவுளின் அன்புக்காக உயிரை விடுவது அதைவிடப் பெரியது.**"

அந்தத் தளபதி தலையை அசைத்துக் கூறினார், "புனிதமானவரே! நான் புரிந்துகொள்கிறேன். இறைபக்தி என்னில் மேலும் மேலும் அதிகரிக்க, உங்கள் ஆசீர்வாதத்தை எனக்குத் தந்தருளுங்கள் என மன்றாடி கேட்கிறேன்."

"**நான் உங்களுக்கு உதவுகிறேன்**" பாபா உறுதியளித்தார்.

உடனே அந்த ராணுவ தளபதி பணிவோடு வணங்கி, கண்களை மூடிக்கொண்டு, தலைதாழ்த்தி கூறினார்: "புனிதமானவரே, என்னை நீங்கள் அனுமதித்தால் நான் இவ்வாறு கூறுவேன். அதாவது, எமது நாட்டின் இரட்சிப்பு அதன் இராணுவ பலத்தில் அல்ல, வாழ்வின் நுணுக்கங்களைப் புரிந்த, உங்களைப் போன்ற பெரிய குருநாதர்களின் ஆசீர்வாதத்தால், ஆன்மீகம் மறுபிறவி எடுப்பதன் மூலமே, எங்கள் துரதிர்ஷ்டவசமான நாடு மற்றும் அதன் படிப்பறிவற்ற மக்கள் முன்னேற முடியும்."

பாபா, புன்முறுவல் செய்துகொண்டே சைகையால், "**அதனால்தான் நான் இங்கு இருக்கிறேன்**" என்றார்.

"இது இந்த நாட்டிற்கு ஒரு பெரிய பாக்கியம். உங்கள் ஆசீர்வாதம் இந்த பாரசீக மண்ணைப் புனிதப்படுத்தட்டும்" என்று கூறி, அந்த ராணுவ தளபதி வணங்கி, அடியெடுத்து பின் நோக்கி நடந்தார். இது மண்டலிக்கு இதயத்தைத் தொடும், மறக்கமுடியாத காட்சியாக அமைந்தது.

அதைத் தொடர்ந்து மண்டலி, அவர் எப்படி பாபாவை சந்திக்க வந்தார் என்று கேட்டதற்கு அந்தத் தளபதி, அவர் ஆன்மீகத்தில் மிகுந்த நாட்டம் மிக்கவர், ஏதோ விவரிக்க முடியாத சில ஆன்மீக சக்தியால், இங்கு ஈர்க்கப்பட்டார் என்றும் விளக்கினார்.

பாம் நகர காவல்துறை ஆணையாளர், பின்பு, மெஹர் பாபாவைப் பற்றி விசாரிக்க வந்தார். அந்நாட்டு சட்ட திட்டங்களுக்கு இணங்க, காவல்துறையைச் சார்ந்தவர்கள், வெளிநாட்டு பயணிகளின் விபரங்களைக் கேட்டுப் பதிவு செய்வது பழக்கம். சாஞ்சி அனைத்து விபரங்களையும் அவர் முன் வைத்த பின்னரும், அந்த அதிகாரி, "நான் உங்கள் தலைவர், அர்பாப் மேர்வான் அவர்களை சந்திக்க விரும்புகிறேன்" என்றார். பாபா இப்போது எவரையும் சந்திப்பதாக இல்லை என்று கூறியும், விடாபிடியாக, "அரசாங்க சட்ட ஒழுங்கு முறைகளின் படி நான் அவரை நேரடியாக சந்திக்க வேண்டும்" என்றார். அது முடியாத விஷயம் என்று திரும்பத் திரும்ப எடுத்துரைத்தும் அவர், "ஹஸ்ரத் மெஹர் பாபாவை சந்திப்பது எனக்கு எவ்வளவு முக்கியம் என்பதை நான்

உங்களுக்குச் சொல்ல முடியாது" எனக் கூறி மன்னிப்புக் கோரி, "நான் எனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, மெஹர் பாபாவின் வீட்டு வாயிலில் நுழைந்து, அவரது தரிசனத்தைப் பெறுவதற்காக முயற்சித்தேன். நான் செய்த அனைத்தும் ஒரு போலி நாடகம்" என்று உண்மையை ஒப்புக்கொண்டார்.

பாபாவிற்குத் தெரியப்படுத்தி, அந்தப் போலீஸ் அதிகாரியை உள்ளே அழைத்துச் சென்றனர். அவருடைய செயலுக்குப் பின்னால் இருந்த அன்பின் ஆதங்கம் மற்றும் தீவிர ஏக்கத்தை பாபா பாராட்டினார். அவர் பணிவாக மெஹர் பாபாவின் முன்வந்து அவரது கைகளில் முத்தமிட்டார். பாபா சிறிது நேரம் அவரை அருகில் அமர வைத்து, **"நான் குவெட்டா சென்று விரைவில் திரும்பி வந்து, எனது மௌனத்தைக் கலைத்து, பெர்ஸியாவில் பகிரங்கமாக மக்கள் முன் தோன்றுவேன்"** என்று குறிப்பிட்டார்.

போலீஸ் அதிகாரி, "நாட்டில் பலரும் பேசும் மதிப்புக்குரிய உங்களை சந்தித்ததில் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் விருப்பப்படி எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று கூறி மண்டலி பக்கம் திரும்பி, "எப்போதும் குருநாதரின் அருகில் இருக்கும் நீங்கள் உண்மையிலே அதிர்ஷ்டசாலிகள்" என்று கருத்துத் தெரிவித்தார்.

ராவ்ஸாஹேப், துஸ்தாப் பயணத்திற்காக ஒரு பேருந்து ஏற்பாடு செய்தார். ஓர் அனுபவமிக்க ஓட்டுநர், பெயர் ஹஃபீஸ்ஜி என்பவரை இதற்காகத் தேர்ந்தெடுத்தார். ஏகப்பட்ட மக்கள் பாபாவின் தரிசனத்திற்காக வந்தபோது, எதிர்பாராத விதமாக பாபாவும் அதற்கு இணக்கம் தெரிவித்தார். புறப்படுவதற்கு முன்பு, ராவ்ஸாஹேப் அழைத்து வந்த சிறுவனை பாபா நீராட்டி, புதிய ஆடையையும் அணிய வைத்தார்.

பாபாவும் மண்டலியும் 1929, நவம்பர் 1ஆம் நாள் பாம் நகரிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

பேருந்தில் வேறு எந்தப் பொருட்களும் எடுத்துச் செல்லக்கூடாது என ஓட்டுநருக்குத் தெளிவாக ராவ்ஸாஹேப் தெரிவித்திருந்தார். பேருந்தில் அவருடைய இருக்கைக்குச் சென்றதும், பாபா திடீரென சீற்றமடைந்ததன் காரணத்தை மண்டலியால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏறக்குறைய ஒரு மைல் தூரம் சென்றதும் வண்டியின் இரண்டு சக்கரங்களிலும் காற்று போய் பழுதானது. ஓட்டுநர் ஹஃபீஸ்ஜி பயந்து போனார், காரணம் சக்கரங்கள் அனைத்தும் புதியது, எனவே பழுதடைய எந்த வாய்ப்பும் இல்லை. சக்கரங்களை சரி செய்து, தொடர்ந்து அடுத்த இடம் சென்று, அங்கு அனைவரும் ஓய்வெடுத்தனர். அடுத்த நாள், பயணத்தைத் தொடர்ந்த வேளையில், ஹஃபீஸ்ஜி ரேடியேட்டரிலிருந்து நீராவி வருவதைக் கண்டு, பேருந்தை நிறுத்தி அதை சரி செய்து, பயணத்தைத் தொடர்ந்தார்.

இப்படி ஒன்றன்பின் ஒன்றாக, பேருந்தில் பிரச்சினைகள் தொடர்ந்து வந்ததைக் கண்டு அவரது மனம் படபடத்தது; மூடநம்பிக்கை கொண்டவர் என்பதால் அவர் மிகவும் பயந்து போனார்.

ராவ்ஸாஹேப், ஹஃபீஸை அணுகி ஆறுதல்படுத்த முயற்சித்தபோது, திடீரென அவர் செய்த தவறை உணர்ந்து ராவ்ஸாஹேபிடம் முறையிட்டார்: "இதெல்லாம் ஏன் நடந்தது என்று எனக்கு இப்போதுதான் புரிகிறது. உங்கள் குருநாதருக்கு நான் கொடுத்த வாக்குறுதியை மீறிவிட்டேன். பாமிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, நான் பாதாம் பருப்பு நிரம்பிய இரண்டு பைகளை வாகனத்தில் எவருக்கும் தெரியாமல் மறைத்து வைத்தேன். நான் இப்போது எப்படி மன்னிப்புக் கேட்பேன்? எனது அறியாமை மற்றும் முட்டாள்தனத்திற்காக நான் வெட்கப்படுகிறேன். அவரிடம் பிரார்த்தனை செய்து என்னை மன்னிக்கக் கோருங்கள்."

ராவ்ஸாஹேப் அவர்மீது அனுதாபப்பட்டு, "மெஹர் பாபாவிற்கு வழங்கிய வாக்குறுதியை மீறுபவர்கள் துரதிர்ஷ்டத்தை சந்திக்க நேரும் என்று நான் உங்களை எச்சரித்தேன். ஆனால், நீங்கள், நான் கூறியதைக் கேட்கத் தவறிவிட்டீர்கள். நான் உங்களை பாபாவிடம் அழைத்துச் சென்று மன்னிக்க வேண்டுகிறேன்" என்று கூறினார்.

ஹஃபீஸ்ஜி பாபாவிடம் சென்றதும், பாபா அவரை மன்னித்து அனுப்பினார்.

மெஹர் பாபா கற்பலகையில் இவ்வாறு தெரிவித்தார்:

"**குருநாதரின் வார்த்தையை ஒருபோதும் அவமதிக்கவோ அல்லது அவருக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறவோ கூடாது. கவலைப்படாதீர்கள்; பாம் நகருக்குத் திரும்பிச் சென்று, வேறொரு பேருந்தை எடுத்து வாருங்கள்**." பாம் வரை செல்ல முடியுமா என்ற சந்தேகத்தை ஹஃபீஸ்ஜி வெளிப்படுத்தியதும், பாபா உறுதியளித்தார்: "**கவலைப்பட வேண்டாம். பாதுகாப்பாகச் செல்வதை நான் பார்த்துக் கொள்கிறேன்**." பாபா அந்தப் பெர்ஸியன் சிறுவனையும் ஹஃபீஸ்ஜியுடன் அழைத்துச் சென்று அவனை வீட்டில் விட்டுவர கூறினார்.

ஹஃபீஸ்ஜி பாம் திரும்பிச் சென்று, புதிய வண்டியை அனுப்பி வைத்தார்; ஆனால், களைப்பாக இருப்பதாகக் கூறி, வேறு ஓட்டுநரை அனுப்பி வைத்தார். இப்படி ஒரு பாடத்தைப் புகட்ட, பாபா எவ்வளவு கஷ்டங்களைத் தாங்கிக்கொள்ள வேண்டியதாகிறது! இரண்டு நாட்கள் வெறிச்சோடிய, கொள்ளையர்கள் நிறைந்த பாலைவன பகுதியில், உண்ண உணவின்றி இருக்க வேண்டிய நிலை! எதுவாயினும் ஹஃபீஸ்ஜி ஓர் அதிர்ஷ்டசாலியான ஆத்மா.

புதிய வண்டி வந்ததும் பயணத்தைத் தொடர்ந்தனர். பாலைவனமும் சுற்றி வளைந்து செல்லும் உயர்ந்த மலைகள் நிறைந்த பாதை; வண்டி சென்ற வேகத்தில் பாபா நடந்து மலையைக் கடந்து சென்றார்.

துஸ்தாப் இன்னும் சிறிது தூரம்; இரவு நேரம்; ஓட்டுநர் பாதையைத் தவறவிட்டதாகக் கூற, பாபா அது சரியான பாதைதான் என்று உறுதியளித்து, பயணத்தைத் தொடருமாறு கூறினார். ஒரு சந்தர்ப்பத்தில் ஓட்டுநர் அமைதியிழந்து பிடிவாதமாக இருந்தார். பாபா அவரை சமாதானப்படுத்தி, சற்று

தூரம் சென்றதும், ஏதோ நகரம் அருகாமையில் வருவதுபோல் ஒரே விளக்கு வெளிச்சம். அதைக்கண்டதும் ஓட்டுநர் சமாதானமானார்.

ஓட்டுநரின் கணிப்புப்படி, துஸ்தாப் வந்துசேர இன்னும் சில நாட்கள் ஆகும் என்று எண்ணினார்; ஆனால், இவ்வளவு விரைவில் அங்கு வந்து சேர்ந்ததை எண்ணி அவர் கண்களை நம்ப முடியாமல் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்.

மெஹர் பாபாவும் மண்டலியும், நவம்பர் 5ஆம் நாள் துஸ்தாப் வந்து சேர்ந்தனர். கடினமான பயணத்தால், அனைவரும் களைத்துப் போயினர். இந்தியாவிற்குத் திரும்பி வர கடல்வழி எளிதாகக் பயணம் செய்திருக்கலாம், ஆனால், புரிய முடியாத காரணங்களுக்காக பாபா பாலைவனம், மலையெல்லாம் கடந்து இத்தனை சிரமங்களைத் தாங்கிக் கொண்டது, கேட்பவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

பயணத்தால் பெரிதும் களைத்துப் போன சகன், தாமதமாக எழும்பியதால் பாபா அவரைப் பெரும்பாடு படுத்தினார், "**நான் சொல்வதை நீங்கள் செய்வதில்லை!**" பாபா திட்டினார். பிறர் பக்கம் திரும்பி, சீற்றத்துடன், "**நீங்கள் எவரும் எனது பேச்சைக் கேட்பதில்லை! உங்களுக்கு என் மீது அக்கறையும் இல்லை! ஐந்து மணியிலிருந்து நான் உங்களை எழுப்ப முயற்சிக்கிறேன், நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.**" பாபா, புவாஸாஹேபையும் சீண்டிப் பார்த்தார், "**அதன் விளைவாக, சாப்பாட்டு நேரம் வரும்போது நீங்கள் இருவரும் எரிச்சலூட்டும் மனநிலையில் இருக்கிறீர்கள்.**"

சகனின் மனநிலையை சீர்படுத்தும் எண்ணத்தில் பாபா, "**நீங்கள் எனக்கு சேவை செய்வதற்கு பதிலாக, நான் உங்களுக்குச் செய்கிறேன்**" என்று கூறினார். சகன் உற்சாகமின்றி உணவு உண்ணாமல் இருந்தார். பாபா அவர் கைகளால் தேநீர் வழங்க சகனின் மனம் ஆறுதலடைந்தது.

மாஸாஜி 'தான்ஸக்' எனும் சுவையான பார்சி உணவைத் தயார் செய்தார்; பாபா, அதை அவர் கைகளால் மண்டலிக்கு வழங்கி, இவ்வாறு விளக்கினார்: "**இரண்டு காரணங்களுக்காக இன்று நான் உங்களுக்கு, தான்ஸக் பரிமாறுகிறேன். ஒன்று உங்கள் குடலை சுத்தம் செய்ய, மற்றொன்று பாரசீக மக்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களை மீட்க நான் மேற்கொள்ளும் சில முக்கியமான ஆன்மீகப் பணிக்காக! இப்போது நான் செய்வது போல, சாது அல்லது சத்குருக்களின் வாழ்வில், இதற்கு முன்னதாக, இப்படியொரு நடைமுறைக்குரிய விதத்தில் நடந்ததே இல்லை. இதை இங்கு மட்டுமே நான் செய்கிறேன்; இனி ஒருபோதும் இதை நான் செய்யமாட்டேன்.**

துஸ்தாப் நகரம், மலைகள் நிறைந்த பாலைவனப்பகுதி, பெர்ஸியா, பிரிட்டிஷ் இந்தியா இரண்டிற்கும் எல்லையாக அமைந்தது. அவ்வேளையில் இரண்டு நாட்டு எல்லைப் பகுதிகளிலும் மிகுந்த கட்டுப்பாடு நிலவியது.

கடினமான விதிகளை இரு தரப்பினரும் பின்பற்ற வேண்டிய கட்டாயம். இந்த சூழ்நிலையில் விஸா வாங்க காலதாமதமாகும் என்று பாபா, சாஞ்சி மற்றும் ராவ்ஸாஹேப் இருவரையும் துரிதப்படுத்தினார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ரயிலில் பயணம் செய்யத் திட்டமிட்டனர்.

இருவரும் இவ்வாறு மும்முரமாக இருந்த வேளையில், பாபா, புவாஸாஹேபை அனுப்பி, மறுபடியும் '**ஒரு சிறந்த சிறுவனை**' அவருடைய ஆன்மீகப் பணிக்காகத் தேடிக் கொண்டுவர அனுப்பி வைத்தார். அவர் டஸ்டாபில் மூன்று சிறுவர்களை அடையாளம் கண்டு, பாபாவிடம் அழைத்து வந்த போது, பாபா மூவரையும் உற்றுநோக்கி, 'பொருத்தமற்றவர்கள்' என்று கூறினாலும், உணவும் உடையும் வழங்கி, திருப்பி அனுப்பி வைத்தார்.

இப்படி, பல முறை நடந்ததைத் தொடர்ந்து, பாபா, புவாஸாஹேப் இருவருக்குமிடையே சூடான விவாதம் எழுந்தது.

"**அட காட்டுமிராண்டி, நீங்கள் ஏன் உங்களைப் போன்ற சிறுவர்களை அழைத்து வருகிறீர்கள்? கடவுளின் நிமித்தம், அடுத்த முறை ஒரு சிறந்த சிறுவனை அழைத்து வாருங்கள்**" என்று பாபா, புவாஸாஹேபிடம் ஏளனமாய் கூறினார்.

"அவர்களைத் தேடுவது ஒரு பெரிய தலைவலி. என்னால் இயன்ற வரையில் சிறந்த சிறுவர்களைத் தான் நான் தேடி, கொண்டு வந்தேன்; நீங்கள் அவர்களை அங்கீகரிக்காவிடில், நான் என்ன செய்யமுடியும்" புவாஸாஹேப் பதிலளித்தார்.

"**நீங்கள் ஒரு மிருகம்; நீங்கள் மிருகங்களைத்தான் கொண்டு வருவீர்கள்! இவர்களைப் போன்ற பரதேசிகளை என்னிடம் கொண்டுவர, உங்களுக்கு வெட்கமாக இல்லையா**?"

எரிச்சலடைந்த புவாஸாஹேப் வெடித்தார், "இப்போது எனக்குக் கடவுளும் வேண்டாம், உலகமும் வேண்டாம்! உங்களோடு நான் இந்த வாழ்க்கையை வாழ முடியாது; நான் இங்கிருந்து போகிறேன்."

"**நீங்கள் எங்குச் சென்றாலும் அங்கேயும் நான் இருப்பேன்! நான் இல்லாத ஓர் இடத்தை எனக்குக் காட்டுங்கள் பார்க்கலாம்! நீங்கள் ஒரு முட்டாள், நீங்களே சென்று பாருங்கள், நான் சொல்வது உண்மை என அப்போது அறிந்து கொள்வீர்கள்**!"

புவாஸாஹேப் தொடர்ந்து முறையிட்டார், "பாபா, நான் மிகவும் துன்புறுத்தப்படுகிறேன். உங்களுடைய கிண்டலையும் அவதூறுகளையும் என்னால் இனிமேல் தாங்க முடியாது."

பாபா அப்போது பதிலளித்தார், "**நான் உங்களால் தான் கோபமடைகிறேன்; உங்கள் நடைமுறைகள் என்னில் கோபத்தை விளைவிக்கின்றன. காரணம் இல்லாமல் நான் எப்படிக் கோபப்பட முடியும்? நான் கோபப்படும் இவ்வேளையில், நீங்கள் என்னை சமாதானப் படுத்தவேண்டும்; ஆனால், இல்லை. நீங்கள் சிறிய சிறிய விஷயங்களுக்காக வருத்தப்படுகிறீர்கள், எனவே நான் உங்களை**

**ஆறுதல்படுத்த வேண்டியதாகிறது - அது என்னை மறுபடியும் கோபமடையச் செய்கிறது. உங்களின் கடமை, எனக்கு சேவை செய்வது; ஆனால், மாறாக, நான் உங்களுக்கு சேவை புரிகிறேன்! இப்படி என்னோடு வாழ்வதில் என்ன நோக்கம் இருக்கிறது?"**

பாபா அப்போது விளக்கமளித்தார், **"என்னுடைய பணி உங்களைக் காயப்படுத்தி, படிப்படியாகக் கொல்வது! ஆனால், அந்தக் காயம் உங்களைப் புண்படுத்தும் போது, நான் என்னதான் செய்யட்டும்? உங்களைக் காயப்படுத்துவதை நான் நிறுத்தட்டுமா? நான் உங்களை சமாதானப்படுத்த முயற்சிக்கிறேன்; விளக்கங்களை வழங்குகிறேன்; உங்களுக்கு தைரியத்தையும் தருகிறேன். நான் உங்களைக் காயப்படுத்தி, அதைத் தாங்கிக்கொள்ளும் தைரியம் படைத்தவர்களாக மாற்றுகிறேன். ஆனால், நீங்கள் எனது கருணைக்கு ஆளாக மாட்டேன் என்று மறுக்கிறீர்கள்."**

மெஹர்ராஷ்ரம் நாட்களிலிருந்து பாபா எங்குச் சென்றாலும், அவருடன் ஒரு சிறுவன் இருப்பது வழக்கம்; மேலும் பாபா அந்த சிறுவனை நீராட்டி, அவனுக்கு உணவூட்டி, புதிய உடையும் அணிவித்து வந்தார். சில நாட்களுக்குப் பின்னர், அவர்களைத் தத்தமது இல்லங்களுக்கு அனுப்பி வைத்தார். மெஹர் பாபாவின் வாழ்வில் குறிப்பாக இப்படி ஓர் அம்சம் 28 வருடங்கள் தொடர்ந்த பின்னரும் ஒரு முறைகூட அவருடைய சேவையில் தொடர்ந்து ஈடுபடுமளவுக்கு ஒரு 'சிறந்த சிறுவன்' (IDEAL BOY) கிடைத்தபாடில்லை.

புவாஸாஹேப் அமைதியானதும், பாபா அவருடைய எதிர்கால திட்டங்களைப் பற்றி மண்டலியுடன் விவாதித்தார். **"நான் இப்போது நேரடியாக நாசிக் செல்ல உள்ளேன். அங்கே நான் ஏகாந்தவாசம் மேற்கொள்வேன்; புவாஸாஹேப் என்னுடைய தனிப்பட்ட சேவகனாகப் பணிபுரிவார்."**

மெஹர் பாபாவின் இத்தகைய பயணங்களின்போது, வழக்கமாக, பாபா மற்றும் ஏதேனும் மண்டலியிடையே பதற்றம் நிலவும். பெர்ஸியாவில் இருந்தபோது, சில நேரங்களில் மாஸாஜி, இதர நேரங்களில் சிது, இவர்களைக் குறை கூறி, குற்றம் சாட்டுவது அவ்வப்போது நிகழும் சம்பவம். சில தினங்களுக்கு சகன், பின்பு புவாஸாஹேப்.

பாபா, தொடர்ந்து ஒருவரைக் குறை கூறித் திட்டுவது அவரின் மனதை வேரோடு அசைத்து, உணர்வை ஆழமாகத் தொட்டு அதிர வைக்கும். இம்முறையில் ஒவ்வொரு மண்டலியும் பாபாவுடன் வாழ்ந்து, அவருக்கு சேவை செய்து, அவரை எப்படி மகிழ்விப்பது என்பதைக் கற்றுக்கொண்டனர்.

1929, நவம்பர் 7ஆம் நாள், 'தின்யார் ஈரானி' என்பவர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தபோது, பாபா எவரையும் சந்திக்க அனுமதிக்காததால் மண்டலி அவரைத் திருப்பி அனுப்பி விட்டனர். தின்யார் ஏமாற்றத்தில் சென்றாலும், அவர் பாபாவுக்காகச் செய்ய இருந்தது காலத்தால் அழியாத கதையாக மாறியது.

சாஞ்சி, ராவ்ஸாஹேப், புவாஸாஹேப் மூவரும் விஸாவுக்காக அவர்களால் முடிந்தவரை முயற்சித்தனர். அன்று நவம்பர் 9ஆம் நாள், அடுத்த நாள் ரயிலில் பயணம் செய்வதாகத் திட்டம்; ஆனால், இந்தியாவில் நுழைய பிரிட்டிஷ் விஸா தயாராகவில்லை. பாபாவின் பெயரை வெளியே தெரிவிக்கக்கூடாது என்ற நிபந்தனையால், விஸா எளிதாகக் கிடைத்தபாடில்லை. நான்காவது முறையாக, பிரிட்டிஷ் தூதரகத்திற்கு பாபா அவர்களை அனுப்பி வைத்தார்.

இதற்கிடையில், தின்யார் திரும்பி வந்து வாசலருகில் காத்து நின்று மன்றாடினார், "நான் ஒரு முக்கியமான விஷயமாக வந்துள்ளேன். நான் மெஹர் பாபாவைப் பார்த்தாக வேண்டும்."

பாபாவிற்குத் தெரியப்படுத்தியதும் பாபா அவரை உள்ளே அழைத்தார். **"நீங்கள் ஏன் வந்தீர்கள்"** பாபா விசாரித்தார்.

"நான் உங்களுக்காக ஒரு கடிதம் கொண்டுவந்துள்ளேன், புனிதமானவரே!" என்றார் தின்யார்.

**"எனக்காகவா?"** பாபா வியப்புடன் கேட்டார்.

"உங்களுக்கல்ல, ஆனால், உங்கள் சார்பாக பிரிட்டிஷ் தூதரகத்திற்கு எழுதிய கடிதம்"

**"இதைக் கொண்டுவந்தவர் யார்?"**

"உங்களின் பக்திமிக்க அடிமை!"

**"யாரிடமிருந்து?"**

"**துஸ்தாப்** நகரின் ஆளுனரிடமிருந்து!"

**"எதைப் பற்றி?"**

"உங்களையும், உங்களோடு இருப்பவர்களையும், நாளை காலை நேர ரயில் வழியாக எல்லைப் பகுதியைக் கடந்துசெல்ல அனுமதி வழங்கி வாங்கிய கடிதம்!"

**"இதை நீங்கள் எப்படி வாங்கினீர்கள்?"**

"உங்கள் கருணை மற்றும் உதவியால்தான், குருநாதரே!" என்றார் தின்யார்.

மெஹர் பாபாவின் முகம் பிரகாசத்தில் உணர்ச்சி பொங்க, "**சபாஷ்**" எனக் கூறி தின்யாரை அருகிலழைத்து, தோளில் தட்டி, பணிந்த தலையைத் தொட்டு ஆசீர்வதித்தார்.

தின்யார், மெஹர் பாபாவைக் காணும் பேரார்வத்தில் இருந்தார்; மேலும் அவர் முற்றிலும் மாறுபட்ட விதத்தில் பாபாவை சந்தித்தார். நடந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த மண்டலி வாயடைத்துப் போயினர். சில நிமிடங்கள் அமைதி நிலவியது. அந்தப் பதட்டமான சூழ்நிலையில், எவரும் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

வெட்கத்தில் தலைகுனிந்த சாஞ்சி, ராவ்ஸாஹேப் இருவரையும் பார்த்து பாபா, "**ஒருவரின் அன்பால் என்ன சாதிக்க முடியும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு! இந்த ஆண்மகனை உற்றுப்பாருங்கள்; அவர் இந்த**

**இடத்தில் ஓர் ஏழை வியாபாரி, அரசாங்க வட்டத்தில் அவ்வளவு செல்வாக்கு இல்லாதவர்; இருந்தும் மேலதிகாரியை, அதுவும் ஆளுனரை அணுகி, பிரிட்டிஷ் தூதரகத்திற்கு நம்மை தடையின்றி அனுப்பக் கோரி, கடிதம் வாங்கி வந்துள்ளார்.**

**இது சிறிய வேலையோ அல்லது சேவையோ அல்ல! இதை அவர் நாம் எதுவும் கேட்காமல், அவராகவே, நம்மிடம் எதுவும் சொல்லாமல் செய்துள்ளார். சுயநலம் கருதாமல், தானாகவே, எதையும் அடையும் நம்பிக்கை எதுவும் இல்லாமல், என்னுடைய ஆசீர்வாதத்தை மட்டும் எதிர்பார்த்து செய்யப்படும் சேவை, நிச்சயமாக வெற்றியைத் தரும். அவர் வெற்றியும் அடைந்துள்ளார். நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்; என்னுடைய ஆசீர்வாதங்களுக்குத் தகுதியானவர்; அவருக்கு எனது அன்பின் ஆசீர்வாதங்கள்!**

இறுதியில் பிரிட்டிஷ் தூதரகம் அனைவருக்கும் வேண்டிய விஸாக்களை உடனே வழங்கியது.

துஸ்தாப் நகர பிரிட்டிஷ் தூதரகம், விஸா வழங்குவதில் மிகவும் கவனமாக இருந்தது; ஏனெனில், பிரிட்டிஷ் இந்தியாவில், கம்யூனிஸ்ட் இயக்கம் முதல்முதலாகத் தொடங்கி இந்தியாவின் விடுதலைக்காகப் போராட்டங்களையும் ஆரம்பித்தனர். மெஹர் பாபாவின் மண்டலியில் வேலையில்லா ஈரானியர்கள், பார்சிகள், இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இருந்தனர். இவர்களும் அப்படி ஏதாவது போராட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்ற சந்தேகத்தின் பேரில், தூதரகம் முதலில் விஸாவை வழங்கத் தயங்கியது.

சிறிது காலத்திற்கு முன்பு, மும்பை பிரிட்டிஷ் தூதரகம் அனைத்து பெர்ஸியன் கடலோரப் பகுதியில் அமைந்த தூதரகங்களுக்கும் மெஹர் பாபா மற்றும் அவருடன் பயணம் செய்பவர்களை, இந்தியாவுக்குத் திரும்பிவர அனுமதிக்கக்கூடாது என்ற எச்சரிக்கை அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது. துஸ்தாப் எல்லையைக் கடக்க, அபாயகரமான மற்றும் கடுமையான தரை வழியை பாபா தேர்ந்தெடுத்ததன் காரணம் அப்போதுதான் புலப்பட்டது, ஏனெனில் துஸ்தாப் தூதரகத்திற்கு இந்த அறிவிப்பு அனுப்பப்படவில்லை.

சிறிது காலத்திற்குப் பின்னர், ஒரு சுவாரஸ்யமான சம்பவம் நிகழ்ந்தது. பாபா மண்டலியுடன் இந்தியா திரும்பி வந்த பின்பு, சாஞ்சி, ஒருமுறை, மும்பை பிரிட்டிஷ் தூதரக அதிகாரியை சந்தித்த வேளையில் அவர், "உங்கள் குருநாதர் பெர்ஸியாவிலிருந்து திரும்பி வந்துவிட்டாரா?" என்று கேட்டார்.

"அவர் பலமாதங்களுக்கு முன்னரே வந்துவிட்டார்" என்றார் சாஞ்சி.

"அப்படியானால் அவர் கையெழுத்திடத் தொடங்கிவிட்டாரா?"

சாஞ்சி இல்லை என்று மறுத்ததும், அந்த அதிகாரி, "ஆனால், அவர் பிரிட்டிஷ் இந்தியன் எல்லையை எப்படிக் கடந்து வந்தார்?" என்று வினவினார்.

சாஞ்சி அமைதியாக பதிலளித்தார், "அவர் குருநாதர், அசாத்தியம் என்று ஒன்று அவருக்குக் கிடையாது!"

எதுவுமே புரியாமல் அந்த அதிகாரி, "அப்படியானால் எந்தத் துறைமுகம் வழி அவர் வந்தார்?" என்று கேட்டதற்கு, சாஞ்சி, "அவர் தரைவழி பயணம் செய்து துஸ்தாப் வழியாக எல்லையைக் கடந்து வந்தார்" என்றார்.

அப்போது அந்த அதிகாரி ஆச்சரியத்தில், "ஓஹோ! இப்போதுதான் எனக்குப் புரிகிறது, அவர் ஒரு குருநாதர், இறைநிலையை அடைந்த குருநாதர் என்று!" என பதிலளித்தார்.

பாபா மண்டலியுடன் டஸ்தாபிலிருந்து ரயிலில் புறப்பட்டு, குவெட்டா வழியாக நாசிக் வர திட்டமிட்டார். குவெட்டா ரயில் நிலையத்தில் ரூஸி ஈரானி, அவர் மனைவி இருவரும் பாபாவை சந்தித்தனர். அனைவருக்கும் தேவையான உணவையும் தயார் செய்து எடுத்து வந்தனர். பாபா, அவரது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி ரூஸியிடம், "**இப்போது உங்களுக்கு, குவெட்டாவில் ஆகவேண்டியது என்ன உள்ளது? இந்த இடத்தை விட்டுவிட்டு நிரந்தரமாக வந்துவிடுங்கள்**" என்றார்.

ரூஸி, இந்தக் கருத்தை நகைச்சுவையாக எடுத்துக்கொண்டு பதிலுக்குக் கேலியாக, "பிரியமான குவெட்டாவை விட்டு வருவதாக இருந்தால் இத்தனை அருமையான திராட்சைப்பழம் வேறு எங்குக் கிடைக்கும்? இந்த நிலத்தின் பழங்களை ருசிக்க உலகம் முழுவதிலுமிருந்தும் மக்கள் வருகிறார்கள்" என்றார்.

மெஹர் பாபா, ரூஸி குடும்பத்தினரிடமிருந்து விடைபெற்று பயணத்தைத் தொடர்ந்து, 1929, நவம்பர் 12ஆம் நாள் லாஹூர் வந்து சேர்ந்தார்.

கடந்த இரண்டு நாட்களாக, அஜீரணம் காரணமாக பாபா எதுவும் உண்ணவில்லை. கொண்டுவந்த உணவை மாஸாஜியும் உண்ணவில்லை. பாபா அவரிடம் காரணத்தைக் கேட்டபோது மாஸாஜி, "கடந்த இரண்டு நாட்களாக நீங்கள் எதுவும் உண்ணவில்லை; இன்றும் எதுவும் உண்ணுவதாக இல்லை; நீங்கள் பசியோடு இருக்கும்போது, எனக்கும் பசியில்லை" என்று பதிலளித்தார்.

ராவ்ஸாஹேப் மற்றும் புவாஸாஹேப் பக்கம் திரும்பி பாபா, "**கேட்டீர்களா, மாஸாஜி என்ன கூறினார் என்று?**" எனக் கேட்டார்.

"**இதை நன்கு நினைவில் கொள்ளுங்கள்**; **பின்பற்றப்பட வேண்டிய ஓர் எடுத்துக்காட்டு. நான் உணவு உண்ணாததால், மாஸாஜியும் உண்ணவில்லை. அதே வேளையில் நீங்கள் இருவரும் அதை விலங்குகளைப் போல விழுங்குகிறீர்கள்**!"

மேலும் ஓர் அம்பு ஏவப்பட்டது. பாபாவின் வார்த்தைகளைக் கேட்டு இருவரும் அமைதியாக இருந்தனர்.

1929ஆம் ஆண்டு பாபா மேற்கொண்ட பெர்ஸிய பயணத்தின் மூன்று முக்கிய அம்சங்களைப் பற்றிய சாஞ்சியின் குறிப்பு:

மெஹர் பாபாவின் பயணத்தின் மூன்று தனித்துவமான பண்புகள் - முதலாவதாக எதிர்பாராத, இதயபூர்வமான வரவேற்பு. பாபா எங்குச்

சென்றாலும், எந்த பாரபட்சமும் இல்லாமல், பணக்காரன், ஏழை அனைவரும் ஒன்று சேர்ந்து பாபாவை வரவேற்று, அவர்களின் நாட்டை மீட்க வந்த இரட்சகர் என்பதை உறுதியாக நம்பி அவரை வழிபட்டு வணங்கினர்.

இரண்டாவதாக, மணல் நிறைந்த பாலைவனங்களின் வழியாகப் பேருந்தில் பயணம் செய்வதில் ஏற்படும் சிரமங்கள் காரணமாக, பாபாவும் மண்டலியும், சொல்ல முடியாத அளவுக்கு அனுபவித்த துன்பங்கள். பல நாட்களாக உணவு மட்டுமின்றி, அருந்துவதற்குத் தண்ணீர் கூட பெரும் பிரச்சினையாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக நெடுஞ்சாலை கொள்ளைக்காரர்கள் யாத்ரீகர்களை சூறையாடி அல்லது படுகொலை செய்யும் ஆபத்து.

மூன்றாவது, மெஹர் பாபா ஸொராஸ்ட்ரியன் வழிவந்த பெர்ஸியன் குடிமகனாக இருந்தார். பெர்ஸியாவில் வாழ்ந்த முஹமதியர்கள் தங்கள் மதத்தைத் தவிர வேறு எந்த மதத்திற்கும் மரியாதை அளிக்காமல், சாதாரணமாக வெறிபிடித்தவர்களாக இருந்தனர். மெஹர் பாபா மீதான அவர்களின் மரியாதை, நம்பிக்கை மற்றும் வழிபாடு மிகவும் மதிப்புமிக்கதாக, பாராட்டத்தக்கதாக அமைந்தது, அனைவரையும் வியப்படையச் செய்தது. மேலும், எந்த ஒரு குருநாதர், ஏன் தீர்க்கதரிசி முஹமதின் சித்திரம் அல்லது புகைப்படங்களை வைத்திருப்பது கூட, அவர்களின் மத கொள்கைகளுக்கு எதிரானது என்று நம்புகிறார்கள். பாபாவின் சித்திரங்கள் பதித்த பேழைகளை மார்பில் அணிந்துகொள்வது என்பது முற்றிலும் நம்பமுடியாதது. ஆனால், ஒவ்வொருவரும் அந்தப் பேழைகளை அணிந்து, பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டது வரலாறு காணாத சம்பவமாகக் கருதப்பட்டது.



மெஹர் பாபா, ஷிரின்மாய் & ஆன்மீகத் தாய் குல்மாயுடன்
**நாசிக் 1930**

# மெஹராபாத், எதிர்கால ஜெரூஸலேம்

**(Meherabad, The Future Jerusalem)**

**1929, நவம்பர் 16ஆம் நாள்**, மெஹர் பாபாவும் மண்டலியும் பெர்ஸிய பயணத்தை முடித்து நாசிக் வந்து சேர்ந்தனர்.

ஆதி, சமீபத்தில் காலமான 'சாது கிறிஸ்டியன் லீக்'கைக் குறித்த செய்தியை, பாபாவிற்குத் தெரிவித்தார். பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, இந்திய தேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட சாது லீக், அக்டோபர் 16ஆம் தேதி, பலவீனமான நிலையில் மெஹராபாத்திற்கு வந்தார். உடல்நிலை மிகவும் மோசமாகி, அக்டோபர் 29ஆம் நாள் அவர் தனது உயிரைத் துறந்தார்.

கியாஸ் மன்ஸிலில் தங்கியிருந்த பாபா, பயணத்தைப் பற்றிய விபரங்களையும், பாரசீக மக்களின் அன்பு கலந்த பக்தியின் வெளிப்பாட்டையும் எடுத்துரைத்தார். அனைத்து மண்டலியையும் நாசிக் வரச்சொல்லி உடனிருக்கச் செய்தார்.

நவம்பர் 20ஆம் நாள் மாலையில், பாபா சாதாரணமாக நடந்து உலாவும்போது, அங்கிருந்த மக்கள் அவருடைய தோற்றம், நீண்ட தலைமுடி மற்றும் நீளமான உடையால் பெரிதும் கவரப்பட்டனர். மண்டலி அவர் பின்னே நடந்து செல்வதைப் பார்த்து அவர்கள், இப்படி விந்தையான உடையணிந்த விதவிதமான ஆண்கள் யார் என ஆச்சரியமடைந்தனர். பாபா ஒரு புகழ்பெற்ற நடிகர் மற்றும் மண்டலி அனைவரும் துணை நடிகர்களாக இருக்கக் கூடும் என முடிவு செய்து, அவர்களின் நாடகம் எங்கு நடக்கிறது என்பதைக் கண்டறிவதில் தீவிரம் காட்டினர்.

மெஹர் பாபாவின் பெற்றோர் அவ்வப்போது பாபாவை சந்திக்க நாசிக் நகருக்கு வந்தனர்; பள்ளி சிறுமியாக இருந்த தங்கை மணியும் உடன் வருவதுண்டு.

குழந்தைப் பருவத்திலிருந்தே மணி, பாபாவைப் பெரிதும் நேசித்தார். சமீபத்தில், மணி, பாபா மௌனத்தைக் கலைக்கப் போவதாகக் கேள்விப்பட்டு, பாபாவிற்குக் கடிதம் எழுதினார், "பாபா, நீங்கள் மௌனம் கலைக்கும் வேளையில், நான் உங்களுடன் இருப்பேன் என்று நீங்கள் எனக்கு வாக்குறுதி வழங்கியுள்ளீர்கள். நீங்கள் விரைவில் மௌனத்தைக் கலைக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன். இப்போது எங்களுக்குப் பள்ளி விடுமுறை இல்லை; எனவே அம்மா என்னை நாசிக் நகருக்கு அழைத்து வருவது வரைப் பொறுமையாக இருங்கள்."

இனிமையான தங்கையின் கடிதத்தை, பாபா மிகவும் ரசித்தார்; பின்பு சாஞ்சி வழியாக இந்த பதிலை அனுப்பினார்: **"கவலைப்படாதே; படிப்பில் கவனமாக இரு; மேலும் அம்மா சொல்வதைக் கேள். உனது விடுமுறை**

**நாளில், நீ வருவதுவரை மௌனத்தைக் கலைக்கமாட்டேன். அன்புடன், பாபா."**

மும்பையில் வாழ்ந்து வந்த நவல், தீனா தலாட்டி இருவரும் பாபாவின் அருகில் இருக்கும் நோக்கத்தில் நாசிக் நகருக்கு வந்து குடியேறினர். நவம்பர் 24ஆம் நாள் மெஹர் பாபா, தலாட்டி இல்லத்திற்கு விஜயம் செய்த வேளையில், நவல் அவரது வீட்டிற்கு முன் நடந்த கார் விபத்தைக் குறித்து பாபாவிடம், "ஒருவரின் இயற்கையான மரணத்திற்கு முன்னர் இவ்வாறு நிகழும் விபத்தில், மரணத்தை சந்திக்கும் அவரின் நிலை என்னாகும்?" என்று வினவியபோது, பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

**ஒரு மனிதன் அவனுடைய இயற்கையான மரணத்திற்கு முன்பு, திடீர் கார் விபத்தில் உயிரைத் துறக்க நேர்ந்தால், உடனடியாக மறுபடியும் பிறவியெடுத்து, முந்தைய பிறவியில் எஞ்சியிருக்கும் காலத்தை நிறைவு செய்து உயிரைத் துறப்பார். சிலர் ஒரு வருடம், இரண்டு வருடம் என ஐந்து வருடங்கள் வரை வாழலாம்; எஞ்சியுள்ள வாழ்க்கையை முடித்த பின்னர், உயிரைத் துறந்து, முந்தைய பிறவியின் மனப்படிவங்களைப் பொறுத்து, மீண்டும் பிறவி எடுப்பர். இதுவே, சில குழந்தைகள் பிறந்த ஓரிரு நாட்களில், ஓரிரு மாதங்களில் அல்லது ஓரிரு வருடங்களில் இறப்பதன் காரணம்.**

**சாதாரணமாக, குழந்தைகள் ஏழு வயதுவரை மனப்படிவங்களை உருவாக்குவதில்லை. அவர்களின் வாழ்க்கை ஏழு வயது வரை முந்தைய வாழ்வின் மனப்படிவங்களின் 'உந்துதல்' காரணமாக நிகழும். அந்த உந்துதலின் மென்மையான அல்லது வன்மையான தன்மைக்கு ஏற்ப அவர்கள் மகிழ்ச்சியாக அல்லது பரிதாபகரமாக வாழ்கிறார்கள்.**

டிசம்பர் 10ஆம் நாள் மெஹர் பாபா, சத்குருவின் பணியைக் குறித்து விளக்கினார்: **நல்ல மற்றும் தீய எண்ணங்கள், உணர்வுகள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் அனைத்திற்கும், மனம் அதனை ஈடுபடுத்தும் பணிகளே காரணம். மனம் ஒருவரை விட்டு விலகும் போது அவர் இறைநிலையை எய்துகிறார்.**

**சத்குருக்கள் ஒளியை வழங்குவது போல், எண்ணங்களையும் வழங்குகிறார்கள். சில செயல்களை முன்கூட்டியே எடுத்துரைப்பது மட்டுமின்றி, பல ஆண்டுகளுக்குப் பிறகு நிகழவிருக்கும் ஒன்றையும், ஒரு தனிப்பட்ட மனிதனின் மனதில் அதைத் தோற்றுவிக்கும் முன்னரே அவர்களால் அதைக் கூற இயலும் - காரணம், அவர்கள் ஒளி, எண்ணங்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய உலகளாவிய மனதோடு ஒன்றியிருக்கிறார்கள்.**

**இப்படி, சத்குருக்கள், ஒரு நிகழ்வை வரும் முன் கூறுவது மட்டுமின்றி, முன் விதிக்கப்பட்டுள்ளதாக அமையச் செய்து அல்லது அதை**

**உண்மையில் அவர்களின் விருப்பப்படி நடக்கச் செய்கிறார்கள்; அது இறுதியில் தெய்வீக விருப்பமாக மாறுகிறது.**

கூட்டத்திலிருந்த ஒருவர் உடனே இவ்வாறு வினவினார், "எனவே, பாவம் செய்வோமானால் அதற்கு நாம் பொறுப்பில்லையா?"

பாபா இவ்வாறு பதிலளித்தார், **"உண்மையாகச் சொல்லப்போனால், நீங்கள் அதற்குப் பொறுப்பல்ல. எனினும், பணிவு என்ற தன்மையின் நிமித்தம், உங்களுடைய பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொண்டு, மேலும் அதன் விளைவாக வரும் நல்லது, தீயது இரண்டையும் அனுபவிக்கும் தருணத்தில், அது உங்களை, பரிபூரண நிலையை நோக்கி அழைத்துச் செல்லும்."**

அடுத்த நாள் டிசம்பர் 15, சத்குருக்கள் மற்றும் அவதார புருஷர் இவர்களிடையே உள்ள வேறுபாட்டை கீழ்வருமாறு விளக்கினார்:

**இறைநிலையை அடைந்த ஒவ்வொருவரும் பரிபூரணமானவர்களே. இருப்பினும், இப்பூவுலகில் வந்து, குருநாதர்களாக செயல்படுபவர்கள் - சத்குருக்கள் மற்றும் அவதார புருஷர் - உலகளாவிய மனங்களுடன் வந்து, அவர்களின் தெய்வீக சக்திகளைப் பிறருக்காகப் பிரயோகிக்கிறார்கள். 'வித்னியான் பூமிகா'** (VIDNYAN BHUMIKA) **எனும் இறை சக்தியின் எல்லையில் குருநாதர்கள் ஓய்வெடுக்கிறார்கள். இது இரண்டு எல்லைகளுக்கு இடைப்பட்ட இடம், அங்கே அவர்கள் மேல் மற்றும் கீழ் உலகங்களுக்காக ஆற்றவேண்டிய பணியை நிர்வகிக்கிறார்கள். இதன் முதன்மையான அம்சம் என்னவென்றால், கீழ் நிலையில் இருக்கும் ஆத்மாக்களை ஆயத்தப்படுத்தி, மேல்நிலைக்குக் கொணர்ந்து, இறுதியில் இறைநிலையை அடையச் செய்வதாகும். குருநாதர்கள் கீழே வருவதன் முக்கிய நோக்கமே 'பக்குவமடைந்த ஆத்மாக்களை' உயர் நிலைக்கு எடுத்துச் செல்வது.**

**குருநாதர்கள் உலகிற்கான கடமை மற்றும் உலக மக்களோடு ஒவ்வொரு நாளும் ஆற்றும் பணி - இவற்றை நிர்வகிக்கும் பொறுப்புடன் அவர்கள் கீழே வரும் வேளையில் உலகளாவிய மனத்துடன் வருகிறார்கள். இந்த உலகளாவிய மனம் வழியாக, பக்குவமடைந்த ஆத்மாக்களின் மனப்படிவங்களை, தங்கள் மீது ஏற்று, அதற்காகத் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். ஆத்மா, பரமாத்மாவுடன் ஒன்றியிருப்பதால் பேரானந்தத்தை ஆத்மா வழியாக அனுபவிக்கும் அதேவேளையில், உலகளாவிய மனம் படைத்த சத்குருக்கள் உலக துன்பங்களை அம்மனம் வழியாக அனுபவிக்கிறார்கள்.**

**அவதார புருஷராக வரும் கடவுள், சத்குருக்களைப் போல வட்டத்து சீடர்களைத் தயார் நிலைக்குக் கொண்டு வருவதோடு, முழு உலகுக்கும் ஓர் ஆன்மீக உந்துதலை வழங்குகிறார். இதுவே அவர்களின் கடமைகளில் வெளிப்படும் வேறுபாடு.**

**இதைத் தவிர, அவதார புருஷர்கள் எப்பொழுதும் எல்லா வகையிலும், ஆன்மீக ரீதியாகவும், பொருள் ரீதியாகவும், குறிப்பாக உடல் ரீதியாகவும் முழு நிறைவுடன் இருக்கிறார்கள். அவதார புருஷர் எப்பொழுதும் அழகான, சமச்சீரான முகம் மற்றும் உடலுடன் ஓர் உன்னதமான ஆளுமை படைத்தவராக இருக்கிறார்; அதேவேளையில், சத்குருக்கள் பொதுவாக அசாதாரணமான உடல் அளவு மற்றும் வடிவத்தில், கூடவே சில குறைபாடுகளுடன்** (சில நேரங்களில் மிகவும் வெறுக்கத்தக்கதாக, பார்க்க சகிக்காமல்) **இருக்கக்கூடும்.**

**கிறிஸ்து, முஹமது, ஸொராஸ்டர், புத்தா, ராம், கிருஷ்ணா அனைவரும் அவதார புருஷர்களாக வருகை தந்தவர்கள், எனவே அழகான, அற்புதமான ஆளுமை படைத்தவர்களாக இருந்தனர். நானும் அப்படியே. உபாஸனி மஹாராஜ், நாராயண் மஹாராஜ் மற்றும் பிற சத்குருக்கள் அனைவரும் ஏதேனும் குறைபாடுகளுடன் உள்ளனர். உபாஸனி மஹாராஜ் பெரிய உருவம் படைத்தவர், அதே வேளை நாராயண் மஹாராஜ் சிறிய, குள்ளமான உருவம் கொண்டவர். ஆனால், பௌதீக ரீதியில் இவ்விதமான வித்தியாசங்கள் இருந்தாலும், ஆன்மீக நிலைப்பாட்டில் எந்த வேறுபாடும் இராது; அது எப்பொழுதும் தெய்வீகத் தன்மையுள்ளது.**

1929, டிசம்பர் 18ஆம் நாள், விக்டர் ஸ்டோம்ப்ஸ் (VICTOR STOMPS) மற்றும் ஃபிலிப் பாபில் (PHILLIP BOBL) எனும் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவர்கள், பாபாவின் தரிசனத்திற்காக நாசிக் வந்தனர். புத்த மதத்தில் நாட்டமுள்ள அவர்கள் இந்தியாவில் பயணம் செய்தனர். அடுத்த நாள் பாபா, விக்டர் ஸ்டோம்ப்ஸுக்கு இவ்வாறு உபதேசம் வழங்கினார், "**இத்தாலிய நாட்டுக்குச் செல்லுங்கள்; அங்கு நீங்கள் ஒரு பௌத்தரை சந்திப்பீர்கள்; அவர் எனது பக்தர். அவர் ஆன்மீகத் தளங்களில் மேல்நிலையில் இருப்பவர். அவர் என்னை எப்படி அறிந்து கொள்வது என்பதை உங்களுக்குக் கற்றுத் தருவார்; அவருக்கு என்னோடு பழைய தொடர்புகள் உண்டு.**" மெஹர் பாபா கூறியதற்கிணங்க விக்டர் ஐரோப்பா செல்ல முடிவு செய்தார்.

இரண்டாவது ஜெர்மன், ஃபிலிப், ஒரு குருநாதருடன் வாழும் தனது விருப்பத்தை வெளிப்படையாக எடுத்துரைக்க, பாபா அவருக்கு இவ்வாறு அறிவுறுத்தினார், "**நீங்கள் சில நாட்கள் இங்கே தங்கி அத்தகைய வாழ்க்கை உங்களுக்குப் பொருத்தமானதா என்பதைத் தீர்மானியுங்கள்; பின்னர், ஆன்மீக ரீதியில் நான் உங்களுக்கு அறிவுரை வழங்குவேன். ஆனால், எதைப் பற்றியும் கவலைப்படாமல், மனதை ஒருநிலைப்படுத்தி, திடமாக வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் தீர்மானத்தில் உறுதியாக இருங்கள், அங்குமிங்கும் அலைமோத வேண்டாம்.**"

பாபா கூறியதைக் கேட்டு முதலில் இணக்கம் தெரிவித்தவர், வேண்டிய வசதிகளை பாபா வழங்கியும், ஃபிலிப் இறுதியில் அங்கிருந்து புனித ஸ்தலங்களை தரிசிக்கும் எண்ணத்தில் திரும்பிச் செல்வதாக அறிவித்தார்.

பாபா அவரிடம், **"ஏன்? என்னவாயிற்று? உங்களுக்கு வேண்டிய வசதிகள் இல்லையா?"** என்று கேட்டார்.

"அப்படி ஒன்றும் இல்லை. எனது மனம் படபடக்கிறது" என்றார் ஃபிலிப்.

பாபா அவருக்கு அறிவுரை கூறினார், **"உங்கள் மனம் வேகமாகச் செயல்படுவது வரை, நீங்கள் ஒருபோதும் நிம்மதியாக இருக்கமாட்டீர்கள். நீங்கள் அமைதியாக இருக்க விரும்பினால், உங்கள் மனதை சீராக வைத்துக் கொள்ளுங்கள். இப்போது வேண்டுமானால் நீங்கள் புனித பயணம் செய்து அந்த அனுபவத்தையும் அடையலாம்."**

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: **"உலகில் உள்ள அனைத்து இடையூறுகளுக்கும் மனமே மூலகாரணம்; அதற்கு நீங்கள் அடங்கி நடந்தால், ஒருபோதும் குருநாதரைப் பின்பற்றி, கடவுளை அடைய முடியாது."**

மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தவர்களில் ஒருவர், **"பாபா, உங்களைப் போன்ற குருநாதருக்கு இல்லம் எங்கே உள்ளது?"** என்று வினவினார்.

பாபா உடனே, **"நீங்கள் எனது இல்லத்தைப் பார்த்திருக்கிறீர்களா? யார்தான் அதைப் பார்க்க முடியும்? அந்த பாக்கியசாலி யார்?"** என்று கேட்டு, **"அந்த இடத்தின் காற்று மட்டுமே உங்களைப் பித்தனாக்கிவிடும்! அந்தக் காற்றின் சுகத்தில், சூழலில் நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்து, அவற்றை வீசி எறிந்துவிட்டு, வெறித்தனம் பிடித்தவராக மாறுவீர்கள்! அந்த வீடு வெகுதூரத்தில் உள்ளது... வெகு தூரம்..."** என்று பதிலளித்தார். விவாதத்தின் தலைப்பை மாற்றி பாபா, இந்தக் கேள்வியை முன்வைத்தார்: **"ஆண்களுக்கு மீசை இருப்பது ஏன்?"** ஆண் மண்டலியில் ஒருவரும் திருப்திகரமான பதிலை வழங்காததால், பாபா விளக்கினார்.

**மீசை என்பது ஆண்மைக்கான அடையாளம் - பாதகமான சூழ்நிலைகளில், மாயையின் வலிமைமிக்க சக்திகளுக்கு எதிராக, ஆன்மீக மற்றும் பொருள் ரீதியிலான அனைத்து மன அழுத்தத்தையும் சிரமங்களையும் தாங்கிக் கொள்வதற்கான அடையாளம். இது கோபம், காமம், பேராசை மூன்றிற்கும் எதிராக எழுந்து நிற்பதற்கான ஓர் அறிகுறி. மேலும், ஒரு மென்மையான பெண்மணியைப் போல் உணர்ச்சிமிக்க, பலவீனமான எண்ணம் கொண்டவராக இருக்கக்கூடாது. ஒரு மனிதன் ஆண்மையின் மொத்த உருவமாக இருக்க வேண்டும்; தக்க தருணத்தில், அவரது தலையையும் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். அத்தகைய தகுதிமிக்க ஆண்கள் இந்தப் பாதையில் தேவை. இறுதி இலக்கை அடைய அனைத்து கஷ்டங்களையும் துன்பங்களையும் தாங்கும் உண்மையான வீரர்கள் அவர்கள். பிற அனைத்து ஆண்களும், எவ்வளவு பெரியதாக இருந்தாலும், வெறும் மீசையை முறுக்கும் கோழைகளாக இருக்கிறார்கள்.**

**சுருக்கமாக, உங்களுக்கு மீசை இருப்பதை நியாயப்படுத்தி, அதற்கு உண்மையாக இருங்கள். மாறாக, ஆன்மீகப் பாதை எனும் போர்க்களத்திலிருந்து வெற்றிவாகை சூடாமல், கோழைகளைப் போலக் கோபப்பட்டு, முகம் சுளித்து ஓட முயற்சிக்காதீர்கள். வீரர்கள் செய்வார்கள் அல்லது செத்து மடிவார்கள்.**

கியாஸ் மன்ஸிலில் மேல் மாடி அறையில் மெஹர் பாபா ஏகாந்தவாசம் மேற்கொள்ளத் திட்டமிட்டார். அங்கே கூண்டு போல் ஒரு சிறிய அறை, பாபாவின் விருப்பத்திற்கிணங்க கட்டப்பட்டது.

1930, ஜனவரி 9ஆம் நாள் பாபா ஏகாந்தவாசத்தில் நுழைவதற்கு முன்னால், ஆண், பெண் மண்டலி அனைவரையும் சந்தித்தார். இரவு ஒன்பது மணிக்கு, மண்டலியில் ஒருவரான பிளீடரை மற்றுமொரு அறையில் ஏகாந்தவாசத்தில் இருக்கச் செய்து, எந்த சூழ்நிலையிலும் (பாம்பு அறையில் நுழைந்தால் கூட) அறையைவிட்டு வெளியே வரக்கூடாது; மேலும் பால், நீர் மட்டுமே அருந்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் தமது ஏகாந்தவாசத்தைத் தொடங்கினார்.

ஏகாந்தவாசம் இருந்த வேளையில் பாபா கூண்டின் உள்ளேயும், குஸ்தாஜி, புவாஸாஹேப் இருவரும் வெளியே கண்காணிப்பாளர்களாகவும் அமர்ந்திருந்தனர். பாபா, மண்டலி அனைவரையும் கூண்டின் வெளியே அமைந்த விசாலமான அறையில் அமரச் செய்து, அறிவுரைகளை வழங்கி வந்தார். இப்படி, ஏன் கூண்டிற்குள் உங்களை அடைத்துள்ளீர்கள் என்று பாபாவிடம் மண்டலி கேட்டதற்கு, **"இந்த உடலின் சிறைவாசம் வெளியளவிலானது, உண்மையானதல்ல. இது சிறிதளவும் எனக்கு சிரமத்தை ஏற்படுத்தாது. உடலுக்கு அப்பாற்பட்ட நிலையில், நான் செய்ய வேண்டிய ஒரு சில வேலைகளுக்காக, என்னை இப்படிக் கூண்டில் அடைத்துள்ளேன். ஜீஸஸ் கூட, அவருடைய பரிபூரண நிலையை அடைந்த பின்பு, நாற்பது நாட்கள் ஒரு மலையில் தங்கியிருந்தார்; அவருடைய நெருங்கிய சீடர்களையும் அருகில் அனுமதிக்கவில்லை"** என்று விளக்கமளித்தார்.

இவ்வாறு வழக்கமாக நடந்த சந்திப்பில், ஜனவரி 12ஆம் நாள், பாபா 'ஏழாம் எண்'ணைக் குறித்த முக்கியத்துவத்தை மீண்டும் விளக்கினார்:

**பரிணாம வளர்ச்சியில் ஏழு நிலைகள்** உள்ளன. மேலும் **ஏழு ஆன்மீகத் தளங்களும், ஏழு விதமான ஆசைகளும்** உள்ளன. **இந்த அனைத்து 'ஏழுகளையும்' எப்போதாவது ஒரேயடியாக ஒழித்தாக வேண்டும்.**

**எதுவாயினும், எண் ஏழு என்பது மிகவும் முக்கியம் வாய்ந்தது. ஏழு விதமான மனப்படிவங்கள், ஏழு வித்தியாசமான நிறங்கள், ஏழு விதத்தில் கற்பனை வடிவங்கள், ஏழு வேறு வேறு ஒலிகள் உள்ளன. இந்த அனைத்து வேறுபாடுகளுக்கும் காரணம் என்னவெனில், இப்படைப்பு உருவெடுத்த ஆரம்பகாலத்தில் - கடவுளின் அனைத்து அளவிறுதியற்ற எல்லைக்கும்**

**அப்பாற்பட்ட நிலையில்** (PARAPTAR PARABRAHMA – BEYOND BEYOND STATE OF GOD) **'முதலும், அசலுமான தற்போக்கு எண்ணம்' காரணமாக - ஆகாயம் மற்றும் பிராண சக்திகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலில், பிராண சக்திகள் ஏழு பாகங்களாகப் பிரிந்தன.**

**படைப்பு அல்லது ஓம் எனும் மையத்திலிருந்து வரும் அசலான ஒலியும், ஏழு வேறு வேறு ஒலிகளாகும். ஆன்மீக சூட்சும** (பிராண சக்தி) **தளங்களின் இசை ஒலி, வர்ணிக்க முடியாத அளவுக்கு இனிமையாக இருக்கும். இடைவிடாமல் 24 மணி நேரம் அந்த இசையைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் சலிக்காது** (மெய்மறந்த இன்பத்தை அளிக்கக்கூடியது); **அதன் இனிமையில் ஒருவர் இசையில் மூழ்கிவிடுவார். ஆனால், சூட்சும உலகின் இந்த இனிமையான ஒலியும் அசலான ஒலியின் நிழலே ஆகும்.**

**பௌதீக உலகில், இந்த மெல்லிசையின் நிழல் மீண்டும் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன; இசை ஞானிகள் மட்டுமே இதை** (சுருதி மற்றும் ஸ்வரங்களாக) **வெளிப்படுத்த முடியும். இரண்டு பொருட்களுக்கு இடையேயான தொடர்பு மூலம் ஒலி உருவாகிறது. நீங்கள் பேசும்போது உங்கள் சத்தம் ஏழு திரைகளைத் தாண்டிச் செல்லும்; பாருங்கள் எவ்வளவு வேகமாக அது வெளிவருகிறது** (அவ்வளவு விரைவாக வரும் ஒலியை நீங்கள் கவனிக்கக் கூட முடியாது). **மனப்படிவங்களின் உப பொருளாக உருவாகும் உடலைப் பொறுத்து, உங்கள் குரல் இனிமையானதாக அல்லது கடுமையானதாக இருக்கும்.**

**எல்லாமே எண் ஏழால் ஆனது: முதல் சூட்சும தளத்தின் ஏழு துணைப் பிரிவுகள்** (நிழல் தளங்கள் அல்லது விண்மீன்கள் உலாவும் உலகம்), **பரிணாம வளர்ச்சியின் ஏழு நிலைகள், ஆன்மீக உட்சுழற்சி தளங்களின் ஏழு வானுலகங்கள்.**

**ஆனால், இந்த இடையறாத, ஒன்றன்பின் ஒன்றான விளக்கங்கள் மற்றும் சொற்பொழிவுகளால் நான் சோர்ந்து போயிருக்கிறேன். இப்போது செய்ய வேண்டியதெல்லாம் தகுதி வாய்ந்தவர்களைத்** (இறைநிலைக்கு) **தயார் செய்வதாகும். ஒரு குழந்தைக்கு நீங்கள் பெரியதோர் உருண்டை மிட்டாயைக் கொடுப்பதானால் அது வயிற்றுக் கோளாறை உருவாக்கும். அதற்கு, சுவைக்க மட்டும் ஒரு சிறிய துண்டைத் தரவேண்டும், கொஞ்சம் கொஞ்சமாக, அப்போது அது ஜீரணமாகும்.**

**உங்கள் நிலையும் அதுபோலத்தான். இப்போதைய பிரச்சினைகள் அனைத்தும் முடிந்ததும் நீங்கள் விடுதலையாகி விடுவீர்கள்; நானும் என்னுடைய பொறுப்பிலிருந்து விடுபட்டுவிடுவேன்! இந்த நேரத்தில், நீங்கள் அனைவரும் எனது மார்பில் அமர்ந்திருக்கிறீர்கள்!**

குல்மாய், தவ்லத்மாய், தீனா தலாட்டி மூவரும் பாபாவை ஜனவரி 11ஆம் நாள் சந்தித்தனர்; மெமோ, மணியுடன் வந்திருந்தார். மணி மற்றும்

ருஸ்தத்தின் குழந்தைகள் அன்று மாலை பாபாவை, இசையுடன் கலை நிகழ்ச்சிகள் நடத்தி மகிழ்வித்தனர்.

கியாஸ் மன்ஸிலில் அனைவரும் காலை ஐந்து மணிக்கு எழுந்து, முதலில் பாபாவின் ஆரத்தியில் பங்கெடுத்த பின்பு தொடரும் பஜனை நிகழ்ச்சி, சில நேரங்களில் காலை 9 மணிவரை நடைபெற்றது. மாலையில் புகழ்பெற்ற பாடகர்களும் வருவதுண்டு.

ஜனவரி 14ஆம் நாள் தரிசனத்திற்காக வந்தவர்களிடம் மெஹர் பாபா இவ்வாறு விளக்கினார்: "**அன்பானது, பிரார்த்தனை, பக்தி இரண்டிற்கும் அப்பாற்பட்டது. அன்பு என்பது கடவுளைப் பற்றிய இடையறாத சிந்தனை - அதாவது தன்னையும், தன் உடலையும் மறக்கும் அளவுக்கு உருவாகும் சிந்தனை. அன்பில் வெறித்தனமாக இருப்பது, காமத்தின் பின்னால் அலைவதைவிட விரும்பத்தக்கது. உங்கள் தியாகங்கள் உண்மையிலே உன்னதமானவை, நான் பாராட்டுகிறேன்… நீங்கள் ஒருவரையொருவர் நேர்மையுடன் நேசிக்கிறீர்கள்; அதேவேளை என்னையும் நேசிக்கிறீர்கள்.**"

அன்று மாலை ஆகா அலியின் தந்தையார் நாசிக் வந்து பெர்ஸியாவிலிருந்து ஆகா அலியை வரவழைப்பதாக உறுதியளித்தார்.

குல்மாய், தவ்லத்மாய் இருவரும் தினமும் மாலை நான்கு மணிக்கு பாபாவை சந்திக்க வருவதுண்டு. ஜனவரி 23ஆம் நாளிலிருந்து பாபா, நான்கு நாட்கள் கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொள்ள இருந்ததால், அவர்களிடம் வரவேண்டாம் எனக் கூறினார். பாபா மேலும் அதை விளக்கமாக எடுத்துரைத்தார்:

**இது, எவ்விதத்திலும் எனக்குப் பெரிய தொல்லை அல்ல. மாறுபட்ட சில சூழ்நிலைகளில் என்னையும் எனது சிரமங்களையும் எவரும் நினைத்துப் பார்ப்பதில்லை. ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் போதெல்லாம், நான் எல்லாவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். நான் எதுவும் செய்யலாம் அல்லது செய்யாமல் இருக்கலாம், மேலும் நான் என்ன திட்டமிடுகிறேன் என்று ஒருவருக்கும் தெரியாது. ஒவ்வொருவரும் அவரவரைப் பற்றியே சிந்திக்கிறார்கள்.**

**அனைத்திற்கும், கீழ்ப்படிவது ஒன்றுதான் எல்லா சூழ்நிலையிலும் சிறந்தது. அதைவிடச் சிறந்தது வேறு எதுவுமில்லை. உங்கள் இருவரையும் 'ஆன்மீகப் பாதையில்' நான் வழிநடத்துவேன், அது நிச்சயம், எனவே கவலை வேண்டாம். உங்கள் இருவருக்கும் என்னுடன் பழங்காலத் தொடர்பு உள்ளது; அவ்வாறு நீங்கள் எனது 'பிடியில்' இருக்கிறீர்கள்.**

**என்னை நீங்கள் நேசிக்கிறீர்கள், என்னுடன் எப்பொழுதும் இருக்க விரும்புகிறீர்கள் என்பதை நானறிவேன். உங்களுக்கு உங்கள் குடும்பம், குழந்தைகள், செல்வம் இவற்றைப் பற்றிய கவலை கிடையாது. என்னுடன் இருக்கவேண்டும் என்ற ஒரே ஏக்கம்தான்! அதுவே உண்மையான அன்பு.**

**இது நல்லது, ஆனால், நீங்கள் தியாக மனப்பான்மையுடன், உங்களைப் பற்றி நினைக்காமல், என்னை மகிழ்விக்கும் அளவுக்கு உங்களைத் தயார் படுத்தவேண்டும்.**

ஏறக்குறைய இருபது நாட்களுக்குப் பின்னர், 1930 ஜனவரி 27ஆம் நாள் மெஹர் பாபா இவ்வாறு தெரிவித்தார். "**இந்த ஏகாந்தவாசத்தால் நான் சோர்ந்து போயிருக்கிறேன், சில நாட்களுக்கு எங்கேயேனும் செல்ல விரும்புகிறேன்.**"

ஜனவரி 30ஆம் நாள், மதியம் இரண்டு மணியளவில், திடீரென, பாபா கூண்டிலிருந்து வெளியே வந்தார். உடனடியாக புறா வீட்டிற்குச் சென்று, பெண் மண்டலியை சந்தித்த பின்பு, பாபா, ஆதி சீனியர், சகன், சாஞ்சி மற்றும் சிலருடன் தனியார் பேருந்தில் மெஹராபாத் புறப்பட்டுச் சென்றார்.

அடுத்த நாள் பாபா அனைத்தையும் பார்வையிட்ட பிறகு, மேல்மலைக்குச் சென்று, சகன் எடுத்துவந்த பட்டங்களைப் பறக்கவிட்டு, நான்கு மணி நேரம் விறுவிறுப்புடன் விளையாடிக் கொண்டிருந்தார். சாஞ்சியின் குறிப்புப் புத்தகத்தில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்தது: "பாபா, மதியம் 12 மணியிலிருந்து மாலை நான்கு மணிவரை, மேல்மலையில் பட்டம் பறக்கவிட்டு விளையாடினார். வேடிக்கை பார்ப்பவர்களுக்கு அது பரவசமான காட்சியாக இருந்தாலும், பாபா அதன் மூலம் செய்த ஆன்மீக உட்பணி என்ன என்பது அவருக்கே வெளிச்சம்."

மெஹர் பாபா அன்று மேல்மலையில் இருந்த வேளையில் இவ்வாறு வெளிப்படுத்தினார்: "**எதிர்காலத்தில் மெஹராபாத் ஜெரூஸலேம் மாதிரி உருவெடுக்கும். என்னுடைய ஆன்மீகப் பணிக்கு இதுவே உகந்த இடம். இந்த இடம் எப்பொழுதும் எனது பணியின் மையமாகத் திகழும்.**"

பாபா அன்று மதியம் நாசிக் திரும்பிச் சென்றார். பிப்ரவரி 5ஆம் நாள், கியாஸ் மன்ஸிலில் மேல்மாடியில் அமைந்த கூண்டில் பாபா திடீரென 12 மணியளவில் மறுபடியும் ஏகாந்தவாசத்தைத் தொடங்கி, எவரையும் அழைத்தாலொழிய மேல்மாடிக்கு வரவேண்டாம் என்ற குறிப்பை அனுப்பிவைத்தார்.

ஏகாந்தவாசத்தின் போது மெஹர் பாபா உடல் வலியை போக்க ஒரு சிறு தொட்டியில், வெதுவெதுப்பான நீரில் அமர்ந்தார்; அதற்குப் பிறகு, சோர்வாக இருப்பதாகத் தெரிவித்து, கூண்டில் ஓய்வெடுத்தார்.

பிப்ரவரி 11ஆம் நாள், ஏகாந்தவாசம் தொடங்கிய ஒரு வாரத்திற்குப் பின்பு, பாபா அனைத்து மண்டலியையும் அவர் முன்னிலையில் அழைத்தார். கூண்டின் கதவைத் திறந்து ஒவ்வொருவரையும் உள்ளே அழைத்து அன்புடன் அரவணைத்தார்.

ஏகாந்தவாசத்தில் மெஹர் பாபாவின் ஆன்மீக உட்பணி, சாதாரண மனிதனால் எடைபோட முடியாத அளவுக்கு உயர்ந்து நின்று, இவ்வுலகில் அனைத்தையும், அனைவரையும் ஆட்கொண்டது.

மெஹர் பாபாவின் 36 ஆவது பிறந்தநாள், கியாஸ் மன்ஸிலில் பிப்ரவரி 17ஆம் நாள் (ஸொராஸ்டிரிய நாள்காட்டிபடி) மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடப்பட்டது.

அடுத்த நாள், அவருடைய பணியைப் பற்றி விளக்கும் வேளையில் பாபா இதைக் குறிப்பிட்டார்:

**என்னுடைய சிறப்பான ஆன்மீகப் பணி இந்த மூன்று முக்கியமான சூழ்நிலைகளில் செய்யப்படுகிறது.**

- **சிறுவர்கள் முன்னிலையில் அவர்களோடு செய்யும் பணி. இதற்காக நான் சிறுவர்களை என்னுடன் இருக்கச் செய்து, அவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் செய்கிறேன்.**
- **இசை நிகழ்ச்சியின் போது, மற்றும் பாடல்கள், பஜனைகள் பாடும் போது.**
- **விளையாட்டுகள் விளையாடும் வேளையில் - பட்டம் விடுவது, கிரிக்கெட் மற்றும் பல விளையாட்டுகள்.**

மெஹர் பாபா ஏகாந்தவாசத்தில் இருந்த வேளையில், ஒரு நாள் ஆதி சீனியரை அழைத்து இவ்வாறு குறிப்பிட்டார்:

**"உங்களுக்காக நான் செய்ததை வேறு எவருக்கும் செய்யவில்லை; உங்களோடு நான் செய்ததை வேறு எவரோடும் செய்யவில்லை. உங்களுக்கு என்னோடு ஆழமான தொடர்பு உண்டு. உங்களது 'நான்' எனும் அகந்தையை முற்றிலும் அழித்துவிட்டேன்; ஆனால், உங்கள் மனம் இன்னும் இருப்பதால் அது உங்களைத் தொந்தரவு செய்கிறது."**

பாபா, ஆதி சீனியரை தனது அறையில் பிப்ரவரி 17, 18 இரவுகளில் தூங்குமாறு அறிவுறுத்தினார். அன்று பாபா, அவரிடம், **"சரியாக மதியம் 12 மணிக்குத் திரும்பி வரவேண்டும்"** என்று கூறியதற்கு, ஆதி சரி என்று பதிலளித்தார். பாபா மீண்டும் ஆதியை எச்சரித்தார், **"எனக்கு ஒரு முக்கியனமான பணி உள்ளது; எனவே தவறாமல் 12 மணிக்கு வந்துவிடுங்கள்."**

ஆதி சீனியர் ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸுக்குத் திரும்பி வந்ததும், ருஸ்தம் அங்கு வந்திருந்த ஜெனரல் மோட்டார்ஸ் அதிகாரிகளை, பயணிகள் ஓய்வு இல்லத்திற்கு அழைத்துச் செல்லக் கூறினார். ஆதி போதுமான நேரம் இருந்ததால், அதை ஏற்றுக்கொண்டார். ஆதி அவர்களைக் காரில் அழைத்துக்கொண்டு வேகமாகச் சென்று, ஏறக்குறைய பயணிகள் ஓய்வு இல்லம் அருகில் வந்ததும், ஒரு சிறிய பாலத்தைக் கடக்கும் வேளையில், அங்கு விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுமி, காரின் முன்னால் தற்செயலாக விழநேர்ந்தது. ஆதி விபத்தைத் தடுக்க எவ்வளவோ முயன்றும், காரின் இடது

பக்கம் அந்த சிறுமியைத் தாக்கியது. ஆதி வெளியே வந்து பார்த்தபோது, சிறுமியின் வாயிலிருந்து இரத்தம் கசிந்தது. ஆதி, உடனே அவருடன் வந்த அதிகாரிகளை விடுதிக்கு அனுப்பிவிட்டு, காயமடைந்த சிறுமியைக் காரில் ஏற்றிய அவ்வேளை சரியாக மதியம் மணி 12.00.

ஆதி, அந்த சிறுமியை மருத்துவமனையில் அனுமதித்துவிட்டு, கியாஸ் மன்ஸிலிலுக்கு விரைந்தார். வெளி வராந்தாவில் சற்று சீற்றத்துடன் நின்றுகொண்டிருந்த பாபா, **"என்னவாயிற்று? ஏன் தாமதமாக வந்தீர்கள்?"** என்று வினவினார்.

"பாபா, ஒரு விபத்து நடந்துவிட்டது," ஆதி நடந்ததை, சோகமாகத் தெரிவித்தார்.

பாபா, அதே சீற்றத்துடன் கடுமையாகக் குறிப்பிட்டார்: **"அவர்கள் உங்களைச் சிறையில் அடைப்பார்கள் என்று நம்புகிறேன்! நீங்கள் ஏன் என்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை?"**

ஆதி வருத்தத்துடன், அச்சத்தில் நடுங்கினார். பாபா உடனே ஆதியை சமாதானப்படுத்தி, **"கவலைப்படாதீர்கள். ஆனால், என்னுடைய கட்டளைகளை, வார்த்தைக்கு வார்த்தை கடைப்பிடிக்க மறந்துவிடாதீர்கள்"** என்றார்.

காயமடைந்த சிறுமி மருத்துவமனையில் உயிரைத் துறந்தாள்; தொடர்ந்து ஆதி மீது தொடரப்பட்ட வழக்கு நான்கு மாதங்கள் நீதிமன்றத்தில் நீடித்தது. இருப்பினும், இறுதியில், ஆதி, கவனக்குறைவான கொலைக்கு, குற்றவாளி அல்ல என்றும், காவல் நிலையத்திற்கு உடனடியாகத் தெரியப்படுத்தாததால் அபராதம் விதிக்கப்பட்டது. ஆதி, பாபாவிற்குக் கீழ்ப்படியாததால் பல நாட்கள் மிகுந்த மனச்சோர்வு மற்றும் பதட்டமான மனநிலையில் காணப்பட்டார்.

1930, ஜனவரி இறுதியில், பாபா, அக்பர் அச்சகத்தில் இருந்தபோது 'வாலி'கள், 'பீர்'கள், 'சத்குரு'க்கள் இவர்களது கடமைகளின் வேறுபாட்டை விளக்கினார்:

**"வாலிகள் பௌதீக உலகை நிர்வகிப்பதோடு, அத்துடன் நேரடி தொடர்பிலும், பீர்கள் சூட்சும மற்றும் ஆழ்மன உலகங்களை நிர்வகித்து அவற்றுடன் நேரடி தொடர்பில் இருக்கிறார்கள்; சத்குருக்கள் அனைத்திற்கும் மேலிருந்து, வாலி மற்றும் பீர்கள் வழியாக மூவுலகையும் கண்காணிக்கின்றனர்.**

ஓரிரு நாட்களுக்குப் பிறகு மீண்டும் பாபா தொடர்ந்து விளக்கமளித்தார்: **"ஒவ்வொரு பெரிய நகரத்திற்கும் ஒரு வாலி பொறுப்பாளராக இருந்து, அனைத்து பௌதீக உலக விவகாரங்களையும் கையாளுகிறார்; அவர், பல பெரிய நகரங்களுக்குப் பொறுப்பாளராக இருக்கும் ஒரு பீரின் கண்காணிப்பில் இருக்கிறார். இப்படி ஒரு வாலி**

மாவட்ட ஆட்சியாளர் போலவும், ஒரு பீர் மாநில ஆணையராகவும் ஒரு சத்குரு பேரரசர் போலவும் உலக நிர்வாகங்களை கவனித்து வருகிறார்கள்."

"வாலிகளில் வேறுவேறு வகைகள் உள்ளனர். அவர்களில் 'அவ்தத்' (AVTAD) மிகவும் சக்தி வாய்ந்தவர்; 'அப்தல்' (ABDAL) தன் உடலை ஒரே நொடியில் அவரது தேவைக்குத் தகுந்தாற்போல மாற்றமுடியும்."

பிப்ரவரி 20ஆம் நாள் பாபா மேலும் விரிவாக எடுத்துரைத்தார்:

ஒரு வாலி ஆன்மீகப் பாதையில், அதன் அனுபவங்களை வழங்க முடியும். அவர் அதற்குரிய மனநிலையில் இருந்தால், மூன்றாவது கண்ணைத் திறந்து, தெய்வீகப் பார்வையை வழங்குமளவுக்கு சக்தி வாய்ந்தவர். அவர் தூரத்தில் இருந்தால் கூட, இறை உலகை நாடுவோரின் கண்களை உற்று நோக்குவதன் மூலம் அதைச் செய்ய இயலும். மூன்றாவது கண் திறந்ததும், அனைத்தும் ஒளியாகவே திகழும். ஒருவர் கண்களை இறுக்கமாக மூடி வைத்திருக்கும் வேளையில் தெரியும் சிறிய வட்ட ஒளிகள், மூன்றாவது கண்ணைத் திறக்கும் போது இருக்கும் ஒளியோடு ஒப்பிடுகையில், பதினேழு லட்சத்தில் ஒன்றாக மட்டுமே இருக்கும். ஆகையால், மூன்றாவது கண் பார்வையின் ஒளி எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதைப் பாருங்கள்; அதனுடைய சக்தி ஒருவரைப் பித்தனாக்கும் அல்லது உயிரைத் துறக்க வைக்கும். அது ஒருவருக்கு ஆன்மீகப் பாதையை வெளிச்சமிட்டுக் காட்டும்; எனவே பயணம் செய்ய சுலபமாக இருக்கும்; இருந்தும், இதுவும் உண்மையான ஒளியல்ல.

ஆனால், சத்குருக்கள் இதை ஒருபோதும் செய்வதில்லை. ஒருவரின் மூன்றாவது கண்ணைத் திறக்கச் செய்து, ஒளியைக் காட்டுவதில்லை. அவர்கள் இறை உலகை நாடுவோரை, ஆன்மீகப் பாதை வழியாக நேரடியாக நடத்திச் செல்கிறார்கள்.

'அவ்தத்' என்பவர் வாலியில் ஒருவகை. அவர்கள் மிக மிகக் குறைந்த எண்ணிக்கையில் மிகவும் அரிதாகவே உள்ளனர்; அனல் பறக்கும் கண்களோடு எதையும், மலையைக் கூட ஊடுருவி உடைக்கும் தன்மை படைத்தவர்கள்! ஒரு மிருகத்தை இரண்டாகப் பிளக்க, அவர்களின் ஒரு பார்வையே போதும் என்பதால், பார்வையை எப்பொழுதும் கீழ்நோக்கியே வைத்திருப்பர். உதாரணமாக, அவர்களின் பார்வை, பறக்கும் பறவை மீது வீழ்ந்தால், பறவை மாண்டு கீழே விழுந்துவிடும். 'அவ்தத்' இதைத் திட்டமிட்டு வேண்டுமென்றே செய்வதில்லை, இது தானாகவே நிகழ்வது, மேலும் இவ்வாறு உயிரைத் துறந்த பறவை, குறிப்பிட்ட எந்த பயனையும் அடைவதில்லை.

அப்தல்கள், அவர்களின் உடல்களை மாற்ற முடியும். ஒரு கணம் மும்பையில் இருப்பதாக இருந்தால், அடுத்த கணம் அதே உடலில் அவர்கள் அமெரிக்காவில் இருக்க நேரும். ஆனால், ஒரே வேளையில் ஒரே இடத்தில் தான் தோன்றமுடியும். சத்குருக்களுக்கு உலகளாவிய உடல் இருப்பதால்,

**அவர்கள் ஒரே நேரத்தில் எங்கு வேண்டுமானாலும், பல இடங்களில் பௌதீக அல்லது சூட்சும உடலில் தோன்ற முடியும்.**

**பரிபூரண விடுதலை அடைவது தான் ஒரே குறிக்கோள். அதற்குப் பிறகு சிலர் உடலைத் துறக்கவோ அல்லது அப்படியே வைத்திருக்கவோ செய்கிறார்கள். உடலை வைத்திருப்பவர், ஏறக்குறைய ஒரு மாதத்திற்குப் பிறகு, கடமையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் இப்பூவுலகிற்கு வருகிறார்.**

**இறைநிலையை அடைந்த சில மஜ்ஜூப்கள் மற்றும் ஸலீக்குகள், அவர்கள் உடல்களைத் துறக்காமல் வைத்திருந்தாலும், உலகைப் பற்றிய எவ்வித கவலையும் இல்லாதவர்கள். எதுவாயினும், இறைவுணர்வை அடைந்த நிலையில், அதை அறியாதவர்களாக இறைவனின் மொத்த உருவமாக இருப்பவர்களை எவரேனும் தரிசித்தால், தொட முடிந்தால், சேவை செய்யும் வாய்ப்பைப் பெற நேர்ந்தால், மிக்க பலனை அடைவார்கள்.**

**சத்குருக்கள் சில நேரங்களில் அவர்களின் பணிக்காக மஜ்ஜூப்களை அவர்கள் 'ஓய்வெடுக்கும் இடத்திற்கு' கொண்டு வருவார்கள். அவ்வேளையில், மஜ்ஜூப்கள், சத்குருக்கள் அனுபவிக்கும் இடர்பாடுகளை அனுபவிப்பார்கள். இந்த மஜ்ஜூப்கள் அவ்வப்போது முழுவதுமான உணர்வற்ற நிலையில் சத்குருக்களை அவதூறாக நடத்துவதுண்டு. நான் மதராஸ் செல்லும் வேளையில், அதுபோன்ற ஒரு மஜ்ஜூப்பை நான் 'ஓய்வெடுக்கும் இடத்திற்கு' அழைத்து வருவேன்.**

மெஹர் பாபாவின் பிறந்தநாள் விழாவின் போது, மக்கள் பாபாவை சூழ அமர்ந்து, அவரவர் பிரச்சினைகளை - உலகம், அரசியல் எதுவாயினும் - அவர் முன் வைத்தனர். அப்போது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**இந்த மக்கள் என்னை எவ்வளவு துன்புறுத்துகிறார்கள். அனைவரும் தங்களுக்காகவே அழுது புலம்புகிறார்கள்! ஒருவரும் என்னையோ எனது கஷ்டங்களையோ கண்டுகொள்வதில்லை. ஒவ்வொருவரும் தனது சொந்த துயரங்களை என் முன்னால் வைத்து, அவர்களைப் பற்றியே நினைக்கிறார்கள்.**"

மெஹர் பாபா மண்டலியுடன் பிப்ரவரி 23ஆம் நாள் காலை ஆறு மணிக்கு இரண்டு பேருந்துகளில் புறப்பட்டார்.

அன்று மாலை கோலாப்பூர் சென்றடைந்து, தப்போவன் வனப்பகுதியில் தங்கி, பின்பு பாபா தெற்கு நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தார். "**நாம் மதராஸ் செல்ல வேண்டாமா? இல்லையேல் சம்பத் ஐயங்கார் மற்றும் அவருடைய குடும்பத்தினர் ஏமாற்றமடைந்து விடுவார்கள்**" என்று கூறி மதராஸ் செல்ல முடிவு செய்தார். சம்பத் ஐயங்காருக்குத் தொலைத்தந்தி அனுப்பி, அவர்கள் இல்லத்திற்கு விஜயம் செய்யப்போவதாக அறிவிக்கப்பட்டது.




**தென்னிந்திய பயணம்**

நாசிக் (NASIK), அஹமதுநகர் (AHMEDNAGAR), பூனா (POONA), சத்தாரா (SATARA), கோலாபூர் (KOLHAPUR), பெல்காவ்ம் (BELGAUM), ஹூப்ளி (HUBLI), பெங்களூர் (BENGALORE), மதராஸ் (MADRAS), பெங்களூர், மைசூர் (MYSORE), மங்களூர் (MANGALORE), தாவன்கெரே (DAVANGERE), ஹூப்ளி, பிஜாபூர் (BIJAPUR), ஷோலாபூர் (SHOLAPUR), அஹமதுநகர், மன்மாட் (MANMAD), நாசிக்.




மெஹர் பாபா, பிஜாபூர், மார்ச் 1930



மதராஸ் செல்லும் வழியில் தவிர்க்க முடியாத பிரச்சினைகள் - அதையும் கடந்து - தார்வார், பெல்காவ்ம், ஹூப்ளி போன்ற நகரங்களில் அவரது புனித பாதங்களைப் பதித்து, பாபா, மண்டலியுடன் 1930, மார்ச் 1ஆம் நாள் மதராஸ் வந்து சேர்ந்தார். மிகுந்த அன்பும், மரியாதையுடன் பாபாவை வரவேற்று, சம்பத் ஐயங்கார் இல்லத்திற்கு (மெஹர் பவன், 26, பிராமின் தெரு, சைதாப்பேட்டை) அழைத்து வந்தனர். சம்பத் ஐயங்கார், வயது 43, புகழ்வாய்ந்த நீதிபதியாகப் பணிபுரிந்தவர், இரண்டு வருடங்களுக்கு முன்பு பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்ட அவர், முதன்முறையாக மெஹர் பாபாவை சந்திக்கிறார்.

அடுத்த நாள் காலையில், எதிரில் அமைக்கப்பட்ட மெஹர் ஆஷ்ரமத்தைத் திறந்து வைத்து பாபா, மெஹர் பவனில் அரசமரக் கன்று ஒன்றை நட்டு வைத்தார். இது பிற்கால சந்ததியினருக்கு, மெஹர் பாபாவின் அன்பெனும் குளிர்ந்த நிழலில், நினைவிடமாக அமையும் என்பதைக் குறிக்கும். உண்மையிலே ஐயங்கார் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். மெஹர் பாபாவின் மகிழ்ச்சி அவர்கள் இல்லத்தை மட்டுமின்றி இதயங்களையும் நிரப்பியது.

சம்பத் ஐயங்காரின் தங்கையின் மேற்பார்வையில் நடத்தி வந்த குழந்தைகள் நல மையத்திற்கு பாபா விஜயம் செய்து, ஒரு குழந்தையை நீராட்டி, இனிப்புகளை வழங்கினார். பாபா அப்போது அருகாமையிலிருந்த குடிசைப் பகுதிகளைச் சுற்றி வந்தார். மதிய வேளையில் கெ.எஸ். ஸ்ரீநிவாசன் மற்றும் வடிவேலு முதலியார், பங்கஜம் அம்மாள் ஆகியோரின் இல்லங்களுக்குச் சென்று அருள் நய படுத்தினார்.

அன்று மாலை 'சென்னை கோஸ்சன்' அரங்கில் ஒரு பெரிய விழா நடைபெற்றது. கெ.ஜெ. தஸ்தூர் உணர்ச்சி பொங்க உரையாற்றினார். அவருடைய உற்சாகத்தில் இவ்வாறு தெரிவித்தார்: "மெஹர் பாபாவை நேசிக்கும் நாம் அனைவரும் அவருடைய போதனைகளை, நமது இரத்தத்தை மையாகப் பயன்படுத்தி எழுதத் தயாராக இருக்க வேண்டும்! அவரது தெய்வீகச் செய்தியை மக்கள் மத்தியில் பரப்ப நம் உயிரையும் தியாகம் செய்ய வேண்டும்!"

இதைக் கேட்டதும் அருகிலிருந்த டாக்கே, பாபாவின் காதுகளில் முணுமுணுத்தார், "பாபா, தஸ்தூர் 90 பவுண்ட் எடை கூட இருக்கமாட்டார் - மேலும் அவர் இரத்த சோகையால் அவதிப்படுவதைப் போலத் தெரிகிறது. அவருடைய இரத்தத்தால் எப்படித்தான் எழுதப் போகிறாரோ தெரியவில்லை? அவரிடம் அவ்வளவு இரத்தம் இல்லையே!" பாபா எதுவும் கூறாமல் புன்முறுவல் செய்தார். தஸ்தூரின் பேச்சைக் கேட்டு மக்கள் பெரும் ஆரவாரம் செய்தனர்.

மதராஸிலிருந்து பாபா மண்டலியுடன் பெங்களூரை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தார்.

மெஹர் பாபா, மண்டலியுடன் உரையாடும் வேளையில், திடீரென, பெங்களூர் நகரில், ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் வாலி

ஒருவர், பிறக்கும்போதே வாலியாகப் பிறந்தார் என்று குறிப்பிட்டார். சதாஷிவ் உடனே, பாபாவிடம் மைசூரில் ஒரு மனிதன் தனது கடந்தகால சம்பவங்களை நினைவில் வைத்திருப்பதாக, செய்தித்தாளில் வந்ததை எடுத்துக் கூறி, "அவர் தனது முந்தைய பெற்றோர், வாழ்ந்த வீடு மற்றும் அனைத்து சம்பவங்களையும் அடையாளம் கண்டுகொள்கிறார்" என்றும் கூறினார்.

இதைக்கேட்டு மெஹர் பாபா சுருக்கமாகக் கருத்துத் தெரிவித்தார்:

**இப்படி, தனது கடந்தகால வாழ்வின் நிகழ்வுகளை நினைவில் கொண்டவர்கள் ஒரு சிலர் உள்ளனர். சாதாரணமாக இவர்கள் திடீரென ஏதாவது விபத்தில் உயிரிழக்கும் தருவாயில், அத்தகைய அதிர்ச்சி, பெரும் சக்தியை அவர்கள் மீது மனப்படிவங்களாக விட்டுச்செல்கிறது; அவை தற்போதைய பிறவியில் நினைவலைகளாக வெளிப்படும். ஆனால், இதற்கும், இறைநிலையை அடைவது அல்லது ஆன்மீகப் பாதையில் முன்னேறிச் செல்வது போன்றவற்றிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.**

சென்னையிலிருந்து புறப்பட்ட இந்தக் குழு, மறுநாள் பெங்களூரை வந்தடைந்து, ஸ்ரீரங்கப்பட்டணம் கோட்டை வழியாக மைசூரை நெருங்கியது; இன்னும் ஏறக்குறைய பத்து மைல் தூரம். ஒரு மாதத்திற்கு முன்னர் ஈரானின் முந்தைய மன்னன் ஷா காலமான செய்தியை, பாபாவின் முன்னிலையில் மண்டலி தெரிவித்தனர். ஷாவின் சகோதரன் பின்பு மன்னனாகப் பதவியேற்றதை எடுத்துக் கூறி பாபா, "**இவர்** (பெர்ஸிய மன்னன்) **உயிரோடு இருப்பாரா இல்லை மறைந்து விடுவாரா? நான் எட்டு மணிக்கு முன்பு மைசூர் சென்று சேர்ந்தால், அவர் உயிர் தப்புவார்**" என்று குறிப்பிட்டார்.

புவாஸாஹேப் பேருந்து ஓட்டுநரிடம், "மன்னனின் வாழ்வு உங்கள் கைகளில்தான் உள்ளது; எனவே வண்டியை வேகமாக ஓட்டுங்கள்" என்றார். மைசூர் நகரை 7.45 மணிக்கு வந்தடைந்து, மதுகிரியை நோக்கிப் பயணம் தொடர்ந்தது.

மைசூரைச் சுற்றியுள்ள மலைப்பகுதியில் ஏராளமான சிங்கம், புலி, மற்றும் கரடிகள் வாழ்ந்து வந்தன. 1930 மார்ச் 6ஆம் நாள் காட்டு விலங்குகளைப் பற்றிய பேச்சு எழுந்தபோது, மெஹர் பாபா அனைவருக்கும் இவ்வாறு உபதேசம் வழங்கினார்.

**இதுபோன்ற கொடிய விலங்குகளை நீங்கள் எப்போதேனும் எதிர்கொள்ள நேர்ந்தால், அல்லது நீங்கள் ஓர் ஆபத்தான, எதுவுமே செய்ய இயலாத சூழ்நிலையில் இருந்தால், எனது பெயரை சத்தமாகக் கூக்குரலிடுங்கள். நான் அப்போது உங்களைக் காப்பாற்றுவேன். என்னை நேசிப்பவர்களை நான் எப்போதும் பாதுகாக்கிறேன்.**

**உரத்த குரலில் அழைக்கும் எனது பெயரின் ஒலி, அந்த விலங்குகளின் காதுகளில் விழுந்த மறுகணமே, அவை ஆட்டுக்குட்டியைப் போல சாந்தமாக அடங்கிவிடும்.**

**உயிர், உணர்வற்ற பொருட்களினால்** (கார், ரயில், விமானம்) **ஏற்படும் பெரிய இடையூறுகள் அல்லது விபத்துகள் நிகழும் வேளையில்,**

**உங்கள் ஆழ் இதயத்திலிருந்து என்னை நினைப்பீர்களேயானால் நீங்கள் பாதுகாக்கப்படுவீர்கள்.**

பாபா அப்போது வளர்ச்சியின் வேறு வேறு நிலைகளைப் பற்றிச் சுருக்கமாக விளக்கினார்: **இறைநிலையை அடைவதற்கு முன்னர் ஒருவர் மூன்று நிலைகளைக் கடந்தாக வேண்டும். பரிணாம வளர்ச்சி, மறுபிறவி** மற்றும் **உட்சுழற்சி அதாவது ஆன்மீகப் பாதையில் முன்னேற்றம். கல்லிலிருந்து தோன்றி, படிப்படியாக விலங்குகளாக வாழ்ந்து, இறுதியில் மனித உருவில் வரும் வரை - பரிணாம வளர்ச்சி; இது முதல் நிலை. இவ்வாறு முதல் மனித உருவோடு பரிணாம வளர்ச்சி நிலை நிறைவுக்கு வந்து மறுபிறவி ஆரம்பமாகும்; இது இரண்டாவது நிலை. மூன்றாவது நிலை என்பது ஆன்மீகத் தளங்களின் வழியாகப் பயணிக்கும் உட்சுழற்சி.**

**ஆஃப்ரிக்காவில் அனைத்து விதமான விலங்குகள், பயிர்கள் மற்றும் உலோகங்கள் இருப்பதால், பரிணாம வளர்ச்சி முழுவீச்சில் உள்ளது. ஐரோப்பா மற்றும் அமெரிக்கா நாடுகளில் மனித இனம் பிறப்பெடுத்து மறுபிறவி தீவிரமடைகிறது, அதுவும் வெகுவிரைவாக. ஆசிய நாடுகளில் ஆன்மீக வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் நடைபெறுவதால் சாதுக்கள், குருநாதர்கள் கிழக்கத்திய நாடுகளில், குறிப்பாக, இந்தியாவில் பிறவி எடுக்கிறார்கள்.**

மங்களூரைக் கடந்து செல்லும் வழியில் கர்கல் என்ற கிராமம் வந்ததும், பாபா 1925ஆம் வருடம் மெஹராபாத்தில் மருத்துவராகப் பணிபுரிந்த டாக்டர். கர்கல் என்பவரை நினைவுகூர்ந்தார், "**டாக்டர் கர்கல் ஒரு நல்ல ஆத்மா.**"

மெஹர் பாபா ஒரு சில மண்டலியுடன் காரிலும், இதர மண்டலி பேருந்திலும் பயணத்தைத் தொடர்ந்து, 'அகும்பே' மலையேறும் வேளையில், இதுவரை எதிர்கொள்ளாத அளவுக்கு மிகவும் மோசமான சாலையைக் கடக்க வேண்டியதாயிற்று. சாலை குறுகியதாகவும், செங்குத்தாகவும் கொண்டை ஊசி வளைவுகள் நிறைந்து, ஒரு வாகனம் மட்டும் செல்லும்படியாக இருந்தது.

மண்டலி பயணம் செய்த பேருந்து, திடீரென நின்று பின்னோக்கி நகர்ந்தது. என்ன செய்வதென்று ஒருவருக்கும் புரியவில்லை; மெஹர் பாபாவின் பெயரை உச்சரித்து அனைவரும் கூக்குரலிட்டனர். பேருந்து, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை மீறி நகர்ந்தது. சாலையிலிருந்த சிறிய தடுப்பு சுவரையும் தாண்டி மெதுவாக நகர்ந்து சென்றது; சாலையின் கீழே ஆழமான பள்ளத்தாக்கு. "பாபா, பாபா!" என்று அனைவரும் குரல் கொடுத்தனர்; பேருந்து பள்ளத்தாக்கில் விழுவதும், அனைவரின் மரணமும் நிச்சயம் என்றே நினைத்தனர். திடீரென அந்தப் பேருந்து நின்றது. பெருமூச்சு விட்டுக்கொண்டே அனைவரும் உற்று நோக்கினர்; பேருந்து எப்படித் திடீரென நின்றது என்று எவருக்கும் புரியவில்லை. மெஹர் பாபாவின் இறை பார்வை ஒன்றே இதைக்

காப்பாற்றியது; இல்லையேல் பேருந்து நிச்சயமாக மலையிலிருந்து உருண்டு, கீழே ஆழமான பள்ளத்தாக்கில் விழுந்திருக்கும்.

பேருந்திலிருந்து கவனமாக வெளியே வந்து பார்த்தபோது, ஏறக்குறைய வண்டியின் பின்பாதி மலை முகட்டின் வெளியே தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டனர்; கீழே பள்ளத்தாக்கில் விழாமலிருக்க, எந்தக் காரணமும் தென்படவில்லை! சில மண்டலி கதறி அழ ஆரம்பித்தனர்; பாபா அவர்களைக் காப்பாற்றி விட்டதாக நன்றியுணர்வோடு கண்ணீர் விட்டனர். பாபா அருகில் நின்று கண்காணிக்க, மிகவும் சிரமப்பட்டு, பேருந்தை சாலைக்குக் கொண்டு வந்தனர். அதன் பின்னர் அருகிலிருந்த நீர்வீழ்ச்சிக்கு அனைவரும் சென்று களைப்பாறினர்.

பேருந்தில் பயணம் செய்யும் வேளையில், மெஹர் பாபா கோபத்தில் பிறரையும், சில நேரங்களில் அவரையும், தன்னைத்தானே அறைவதன் காரணத்தைப் பற்றி மண்டலி விவாதித்தனர். தஸ்தூர் உடனே, "பாபாவிற்கு ஒரு காரணமும் தேவையில்லை" என்று கூறி, சில அவமரியாதையான வார்த்தைகளையும் பயன் படுத்தினார்.

தஸ்தூர் கூறியதைத் தாங்க முடியாமல், விஷ்ணு அவரை ஆவேசமாகக் கண்டித்தார், "அட, ஆடம்பர கழுதையே! நீ இத்தனை அகங்காரம் பிடித்தவனாக இருக்கிறாய்! நீ நினைத்ததை நடத்துவது உன் உரிமை என்று நினைக்கிறாய்! நீ கல்லூரிக்குச் சென்று சட்டம் படித்ததால், நீ ஏதோ பெரியவன் என்ற எண்ணம் உனக்கு! நீ செய்ததைப்போல் எங்களில் எவரேனும் செய்திருந்தால், பாபா எங்களை அடித்து, உதைத்து, துண்டு துண்டாக்கி இருப்பார். ஆனால், பாபா உன்னைத் திட்டுவதே இல்லை - அவர் உன்னைக் கேலி செய்வதோ, தண்டிப்பதோ இல்லை - அதனால் நீ நினைக்கிறாய், நீ யாரோ உயர்ந்தவன் என்று!

"ஆனால், நீ அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள மாட்டாய்! ஆரம்பத்திலிருந்தே பாபாவுடன் இருக்கும் நாங்கள், எங்கள் கழுத்துகளை அவருடைய பாதங்களில் வைத்துள்ளோம்; ஆனால், உன்னுடைய கர்வம் அதைச் செய்யவிடாமல் உன்னைத் தடுத்துவிட்டது. உன்னால் செய்ய முடிந்ததே இல்லை! உன்னுடைய கர்வம் அவ்வளவு பெருகிவிட்டது. உண்மையாகக் கூறப்போனால் நீ ஒரு பாபா-பொருளே அல்ல!"

விஷ்ணு அவரது வசைமொழி தாக்குதலைத் தொடர்ந்தார்: "நீ மக்களுக்கு அளிக்கும் ஆவேசமான மேடைப்பேச்சில், பாபாவின் போதனைகளை ஒவ்வொருவரும் அவரவர் இரத்தத்தால் எழுதி, பாபாவின் கொள்கைகளை உலகெங்கும் பரப்பவேண்டும் என்கிறாய்! ஹா.. ஹா.. என்ன ஒரு கபடநாடகம்! இவ்விதமான வெற்றுப்பேச்சால் என்ன பலன்? செயல்கள் சொற்களைவிட சத்தமாகப் பேசுகின்றன என்று உனக்குத் தெரியாதா?"

தஸ்தூர் உடனே இருக்கையிலிருந்து எழும்பி இன்னுமோர் இருக்கையில் சென்று அமர்ந்தார். இது பாபாவின் கட்டளைக்கு எதிரானது என அனைவரும் எடுத்துக் கூறினர். ராவ்ஸாஹேப், தஸ்தூர் அங்குமிங்கும் இடம்

மாறுவதை நிறுத்தும்படி நேரடியாகக் கூறினார். தஸ்தூர் உடனே கடும் சீற்றத்துடன், உடலளவில் புவாஸாஹேப், ராவ்ஸாஹேப், சாஞ்சி மற்றும் சகன் ஆகியோரைத் தாக்கி, ஓடும் வண்டியில் பயங்கரமான முரட்டுத்தனத்துடன் நடந்துகொண்டார் (தஸ்தூர் உண்மையில் ராவ்ஸாஹேப்பின் உதடுகளையும், சாஞ்சி, சகன் இருவரின் கைகளையும் கடித்தார்.)

சாஞ்சி நடந்ததை நியாயப்படுத்தி எடுத்துச் சொல்ல முயன்றார், "நாம் இருப்பிடத்தை மாற்றக்கூடாது என்பது பாபாவின் கட்டளை. இந்த முறையில் நீங்கள் - மெஹர் மெஸேஜின் ஆசிரியர் - செயல்படுவது உங்களுக்குத் தகுமா? நீங்கள் பாபாவின் கட்டளைகளை மீறுவது மட்டுமின்றி முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறீர்கள்."

விஷ்ணுவும் ஆவேசமடைந்து, தனது இருக்கையிலிருந்து எழுந்து, "நான் போகப் போகிறேன்! கடவுளின் சித்தம் நான் இங்கிருந்து போகிறேன்!" என்று கூறி, ஓடும் வண்டியிலிருந்து வெளியே குதிக்க முயன்றபோது, பிற மண்டலி அவரைத் தடுத்து நிறுத்தினர். இந்த நேரத்தில் பாபா, அவரது காரை நிறுத்தி, வெளியே வந்தார். பேருந்தில் ஏறியதும், முதலில் விஷ்ணுவை பலமாக அறைந்தார். விஷ்ணு மனம் நொந்துபோய், தேம்பி தேம்பி அழுது அப்படியே அமர்ந்தார். பாபா, விஷ்ணு அருகிலமர்ந்து அவரது தலையை, தனது மடி மீது வைத்தார்; ஓட்டுநரை, தொடர்ந்து வேகமாகப் போகுமாறு கூறினார்.

பத்து அல்லது பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா பேருந்தை நிறுத்தச் சொல்லி மண்டலியுடன் கீழே இறங்கினார். அனைவரும் பாபாவைச் சுற்றி அமர்ந்தபோது அவர் இவ்வாறு விளக்கினார்:

**ஒரு மிகப்பெரிய பணி இன்று முடிந்தது. இன்று மதியம் நான் ஓய்வெடுக்கும் வேளையில் ஓர் ஆவி என் உடலுக்குள் புகுந்தது. சகன், புவா இருவரையும் நான் தாக்கியதை நியாயப்படுத்த வேண்டிய தேவையில்லை என்றாலும், எந்தவிதமான காரணமுமில்லாமல் நான் அவர்களை வெகுவாகக் கண்டித்தேன்! ஆனால், இது எந்த பயனையும் தராத வேளையில், என்னுடைய பணியில் எனக்கு வேண்டிய முடிவையும் கொண்டு வரவில்லை! எங்களைப் போன்ற குருமார்களின் பணியைப் பற்றி உங்களுக்கு சிறிதளவு கூட அறிவு கிடையாது. இந்த மூவுலகில் நாங்கள் எப்படி எங்கள் பணியை முடிக்கிறோம் என்பதைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? இன்றைய பணி இத்தனை வேகமும், சக்தியும் நிறைந்து தீவிரமடைந்ததால், நான் என்னுடைய இரண்டு நெருங்கிய சீடர்களை, கடுமையாகத் தாக்கிப் பேசினேன். இப்படித்தான் சத்குருக்கள் தங்கள் உள்பணிகளுக்குப் பின்னர் அமைதியை நிலைநாட்டுவர்.**

**எனது உள்பணியின் வேகம் அதிகரித்த வேளையில், நான் ஒருவரின் தவறுக்காக இன்னொருவரைத் தாக்கினேன். கடைசியில் அந்த சக்தியின் தீவிரத்தை நானே தாங்க வேண்டியிருந்தது. நான் ஒவ்வொருவரையும் தாக்குவதாக இருந்தால் அனைவருமே சண்டையிட்டு,**

அமளியைக் கிளப்பி மிகவும் வருந்தி இருப்பீர்கள். எனவே அதுபோன்ற குழப்பத்தைத் தவிர்க்கும் எண்ணத்தில் அதை என் மீது எடுத்துக்கொண்டேன்.

எஞ்சியிருந்த சிறிதளவு வேகமும், சக்தியும் இவ்வாறு பேருந்தில் நடந்த கலவரத்தின் மூலமாக நிறைவுக்கு வந்தது. இவ்வளவு சிறிய அளவிலான எனது பணியின் வேகமே, விஷ்ணுவை ஒரு பாடுபடுத்தி, கோபமடையச் செய்ததைப் பார்க்கும்போது, முழு வேகமும் வெளிப்படுவதானால் என்னவாகும் என்பதை நினைத்துப் பாருங்கள்! எது நடந்தாலும் அதற்கு எனது 'திறவுகோல்' ஒன்றுதான் காரணம்; இல்லையேல், தஸ்தூர் இப்படி நடந்து கொண்டதற்கும், அல்லது விஷ்ணு இவ்வளவு கோபம் அடைந்ததற்கும் வேறு எந்தக் காரணமும் இருக்க முடியாது.

எனது மண்டலியைப் போல வேறு எந்த சத்குருவிற்கும் கிடையாது! நாராயண் மஹாராஜ், உபாஸனி மஹாராஜ் மற்றும் பாபாஜான் அவர்களின் மண்டலியைப் பாருங்கள். என்னுடைய மண்டலி எவ்வளவு நல்லவர்கள்! எந்த ஒரு பலனையும் எதிர்பாராமல் எத்தனை வருடங்களாக என்னுடன் இருக்கிறார்கள்.

எனது கட்டளைகளை நிறைவேற்ற, அவர்கள் தங்களால் முடிந்தவரை முயற்சி செய்து, கடுமையான கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள்.

என்னுடன் பயணம் செய்வது அவ்வளவு எளிதல்ல, எவ்வளவு இடர்பாடுகள், எவ்வளவு மனக்கஷ்டங்கள்! பயணங்களின் போது நான் கொடுக்கும் தொல்லைகளோ ஏராளம், மேலும் பயண வேளையில் தான் எனது மிகப்பெரிய பணி நிறைவேற்றப்படுகிறது. அதுபோன்ற தருணங்களில் என்னுடன் இருக்கும் மண்டலி மிகவும் அதிர்ஷ்டசாலிகள். உண்மையில் காஷ்மீர் பயணமும் அப்படித்தான். அதன் பின்னர் ஒரு மந்தமான நிலை இருந்து வந்தது, இப்போது இந்தப் பயணத்தில் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. இவை அனைத்திற்கும் பின்னால் இருக்கும் ரகசிய நோக்கத்தை உங்களால் புரிந்துகொள்ள முடியாது. எனக்காக நீங்கள் அனைவரும் கஷ்டப்பட்டீர்கள் என்பதை நினைக்கும்போது மகிழ்ச்சியாக உள்ளது.

(எனது கன்னங்களில் நானே அறைந்தபோது) புவாஸாஹேப் மற்றும் சில மண்டலியின் கண்கள் கலங்கி நீர் வழிந்தது, எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளித்தது; அதே நேரத்தில், அவர்களின் விசித்திரமான நடத்தையைப் பார்த்து எனக்குச் சிரிப்பு வருகிறது. விஷ்ணு கூறுகிறான், "நான் போகிறேன்!" புவாஸாஹேப் பதிலளிக்கிறார், "நீ மட்டுமென்ன, நானும் போகிறேன்!" இது எனக்கு மிகுந்த வேடிக்கையாக உள்ளது.

இன்று நீங்கள் அனைவரும் காயப்பட்டீர்கள் - சிலர் உடலளவில், ஏறக்குறைய அனைவரும் மனதளவில்.

மெஹர் பாபாவின் விளக்கங்களைக் கேட்டு, அனைவரும் திருப்தி அடைந்தனர். அதற்குப் பிறகு பிஜாப்பூரை நோக்கிப் பயணம் தொடர்ந்தது.

1930 மார்ச் 9ஆம் நாள், மெஹர் பாபா, மண்டலியுடன் ஷிமோகா, ஹொன்னலி, ஹரிஹர் வழியாக ஹூப்ளி வந்து, அடுத்த நாள் 'மெஹர் மோட்டார் ஒர்க்ஸ்', பிஜாப்பூரை வந்தடைந்தனர். மினூ, பாபாவை அன்புடன் வரவேற்றார். பாபா, பிஜாப்பூர் மக்களுக்கு தரிசனம் வழங்கி, இரவு உணவுக்குப் பின்னர் ஏரியில், மண்டலியுடன் நிலா ஒளியில் பயணம் செய்து மகிழ்ந்தார் - (பாபாவின் பயணம் என்பது ஆன்மீக உட்பணியை செவ்வனே செய்து முடிப்பது!)

அன்றிரவு ஓய்வெடுத்து, அடுத்த நாள் ரயிலில் புறப்பட்டனர். இந்தப் பயணமும் அதன் பங்கிற்கான தொல்லைகளைத் தராமலில்லை; உடனிருந்த பயணிகளின் தொந்தரவுகளால் பாபாவின் மனநிலை சீரில்லாமல் இருந்தது. வழியில் நள்ளிரவில் ரயில்கள் மாறி மறுநாள் காலை மூன்று மணிக்கு நாசிக் வந்து சேர்ந்தனர்.

1930, மார்ச் 17ஆம் நாள் ராமு எனும் சிறுவன் ஏதோ குறும்பு செய்ததற்காக புவாஸாஹேப் அவனது மூக்கைத் திருகினார். ராமு உடனே பாபாவிடம் சென்று முறையிட்டதும், பாபா, சிறுவர்களை உடல்ரீதியாக கண்டிப்பதற்கு எதிரான தனது உத்தரவை மீறியதால், விஷ்ணுவிடம் புவாஸாஹேபின் மூக்கைப் பிடித்துத் திருகுமாறுக் கூறினார். புவாஸாஹேப் அன்றிரவு எவரிடமும் எதுவும் கூறாமல் வருத்தத்தில் வெளியேறி வீதிகளில் அலைந்து திரிந்தார்.

அதிகாலையில் பாபா மண்டலியை எழுப்பி, புவாஸாஹேப் எங்கே என்ற விபரத்தைக் கேட்க, மண்டலி தேடியும் கண்டுகொள்ள முடியாததால், அவரைக் காணவில்லை என்று தெரிவித்தனர். பாபா, ராம்ஜூ, ராவ்ஸாஹேப் இருவரையும் அனுப்பி தேடி வரக் கூறினார்.

கடைசியாக ஒரு தேநீர் கடையில் கண்டுபிடித்து, அழைத்து வந்தபோது பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"நேற்றிரவு எனது நாக்கு, உதடுகளில் கொப்புளங்கள் வந்தன, மேலும் இவர்களால் நான் மிக்க அவஸ்தையடைந்தேன். ஆனால், எவருக்கும் என்னைப் பற்றிய எந்த உணர்வும் இல்லை; மாறாக, மேலும் மேலும் எல்லோரும் எனக்குச் சிக்கலைத் தர முயற்சிக்கிறார்கள்! இங்கு மண்டலிக்கு வேண்டிய அனைத்தும், அதுபோல வெளியிலிருந்து வருபவர்களுக்கும் தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அனைத்திற்கும் மேலாக புவாஸாஹேப் என்னுடன் தகாத முறையில் நடந்து கொள்கிறார்."**

1930 மார்ச் 18 அன்று, நாராயண் மஹாராஜ் அவருடைய பக்தர் ஒருவரின் திருமணத்திற்காக நாசிக் வந்திருந்தார். ருஸ்தம், மஹாராஜ் வந்ததை பாபாவிற்குத் தெரியப்படுத்தியதும், பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**"என் அன்பையும், ஆசிகளையும் நாராயணனுக்கு நான் வழங்குகிறேன்."** ருஸ்தம், பெண்டு, ராவ்ஸாஹேப், நவல் தலாட்டி நால்வரும் பாபாவின் அனுமதியைப் பெறாமல் நாராயண் மஹாராஜை சந்திக்க முடிவு செய்தனர். மஹாராஜைப் பார்த்ததும், நவல் தரிசனத்திற்காக அவரது குடும்பத்தையும் அழைத்து வர விரும்புவதாகத் தெரிவித்த போது, மஹாராஜ், உடனே புறப்பட இருப்பதாகக் கூறி மறுத்தார்.

நால்வரும் 'ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸ்' திரும்பி வந்ததும், நவல் மற்றும் அவரது வணிகப் பங்காளி இருவருக்குமிடையே ஒரு வன்முறை வாக்குவாதம் ஏற்பட்டது. அது ஒரு பயங்கரமான காட்சியாக இருந்தது. உடல் ரீதியாக அவரைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்தாலும் கைகலப்பில், நவலின் காலில் பல காயங்கள் ஏற்பட்டன. நால்வரும் நாராயண் மஹாராஜை சந்திக்கச் சென்றதை பாபா கேள்விப்பட்டதும், ராவ்ஸாஹேபை அழைத்துக் கண்டனம் தெரிவித்தார்: **"என்னுடைய அனுமதியின்றி நீங்கள் ஏன் நாராயண் மஹாராஜை சந்திக்கச் சென்றீர்கள்? நீங்கள் அப்படிச் செல்ல விரும்பினால், நான் இங்கே இருக்கும்போது ஏன் செல்ல வேண்டும்?**

**"ஒரு குருநாதரின் பக்தர்கள், அனுமதியின்றி இன்னொருவரிடம், அதுவும் குறிப்பாக, குருநாதர் ஒரே இடத்தில் இருக்கும் வேளையில், செல்லக்கூடாது என்பது பொதுவான விதி.**

**"இதன் காரணம் என்னவென்று உங்களில் ஒருவருக்கும் தெரியாது. இரண்டு குருநாதர்களுக்கு, அவர்கள் உள்ளளவில் ஒன்றாக இருந்தாலும், ஒருவரால் சேவை செய்ய முடியாது. என்னைத் தவிர உங்களுக்கு வேறு குருநாதர் இல்லையென்று கூறுவதானால், இன்னொருவரிடம் நீங்கள் ஏன் செல்ல வேண்டும், அதுவும் நான் இங்கே இருக்கும்போது? இது சட்டத்திற்கு எதிரானது. இது ஒரு சிறிய தவறு அல்ல; மிகவும் அப்பட்டமான தவறு! அதனால்தான் ருஸ்தம் என்னிடம் இதைத் தெரிவித்த போது, நான் அனுமதி வழங்காமல் என்னுடைய ஆசிகளை மட்டும் தெரிவித்தேன். உங்களில் ஒருவராலும் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை; மேலும், நீங்கள் திரும்பி வந்ததும், உங்களின் ஒத்துழையாமையின் விளைவாகத்தான் ரகளை மற்றும் ரவுடித்தனமான காட்சி, தேவையில்லாமல் உருவாயிற்று. இந்தக் கைகலப்பும், கலவரமும் நடந்திராவிடில், நீங்கள் அனைவரும் உயிரை இழக்க நேர்ந்திருக்கும்! இதிலிருந்து வேண்டிய பாடத்தைக் கற்றுக்கொண்டு எச்சரிக்கையாக இருங்கள்."**

மார்ச் 27ஆம் நாள், காக் ஸாஹேப் திடீரென பாபாவை சந்திக்க வந்தார்; அதுபோல மெமோ, ஆதி ஜூனியருடன் வருகை தந்தார். மார்ச் 30ஆம் நாள் ஷ்ரோப் என்பவர் தனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் வந்த வேளையில், பாபா அவர்களுக்கு 'அன்பின் தன்மை'யை விளக்கினார்:

**என்னை நேசியுங்கள், அப்போது நீங்கள் என்னை அறிவீர்கள்; ஆனால், நான் அத்தகைய உண்மைப்பொருளாக இருப்பதால், என்னை**

அறிவது மிகவும் கடினம். அதற்குத் தரவேண்டிய விலை 'அன்பு'. கடவுளின் நாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்கவோ, தவம் அல்லது தியானத்தில் ஈடுபடவோ தேவையில்லை - அன்பு ஒன்றுதான், அதாவது உங்கள் அகந்தையை அழிக்கும் உண்மையான அன்பு ஒன்றுதான் தேவை. அதன் அர்த்தம் என்னவெனில், உங்கள் அன்பு அத்தனை ஆழமாக இருக்கும் வேளையில், நீங்கள் உங்களையும் உலகையும் மறந்து விடுகிறீர்கள். இந்த அனுபவம் உங்களைப் பற்றற்றவராக மாற்றி, பிரம்மிக்க வைத்து, குழப்பத்தில் ஆழ்த்தும். இதுவே உண்மையான அன்பு.

நீங்கள் உங்கள் இதயங்களில் என்னை உணர்கிறீர்கள், அதனால் நீங்கள் என்னை தினமும் அவ்வப்போது நினைக்கலாம், ஆனால், தொடர்ந்து நினைப்பதில்லை. இவ்விதமான உணர்வு அல்லது பக்தி, நல்லதாக இருந்தாலும், இது அன்பு அல்ல. இதை அன்பு என்று தவறாகப் பொருள் கொள்ளக்கூடாது, ஏனெனில் கடவுளைப் பார்த்து, அறியும் உண்மையான அன்பை ஒருவர் உருவாக்க முடியாது. இது ஒரு குருநாதரின் கருணையால் வழங்கப்படுவது, மேலும் அத்தகைய அருள் மிகவும் அதிர்ஷ்டசாலியான சிலருக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

இதை நினைத்து உங்கள் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தளரவிடாதீர்கள். உங்களிடம் தேவையான அன்பு இல்லாமல் இருந்தாலும், என்னைப் பற்றிய ஆழமான உணர்வு உள்ளது. எப்போதும் என்னையே நினைத்து, என்னைப் பற்றியே பேசுங்கள். இதுவே சிறப்பான ஆரம்பம் - குருநாதரின் அருளை அடையப்பெறத் தயாராக இருக்க வேண்டும் என்ற உறுதியான மனப்பான்மை. இது தொடருமேயானால், எனது அன்பு எனும் அற்புதமான வெகுமதியை அடையும் அதிர்ஷ்டசாலியாக மாறும் அந்த நாள் வரும். இந்த உணர்வை உங்கள் இதயத்தில் நிலைநிறுத்தி, அதை அதிகரித்து, ஆழமாக வேரூன்றச் செய்யும் தருணத்தில், நீங்கள் எனது அன்பை அடையப்பெற ஆயத்தமாகி விடுவீர்கள்.

எப்படி? ஒரு வேலையைத் தொடங்கும் முன்னரும், அது முடிந்த பின்னரும் என்னை நினைப்பதன் மூலமாக. ஒரு வேலையைத் தொடங்குவதற்கு முன்னால் என்னை நினைத்துக் கொள்ளுங்கள். உதாரணமாக நீங்கள் ஏதாவது எழுத ஆரம்பிக்கும் முன்னால் (தேர்வுத்தாள் போன்ற) என்னை உங்கள் மனத்திரையில் கொணர்ந்து கூறுங்கள், "பாபா, இதை எழுதுவது நீங்கள், நான் அல்ல" என்று!

மதுபான கடைக்காரர் முதலில் போதிய பணத்தை வாங்கி, பிறகு மதுகோப்பையைத் தருகிறார். அவர் அந்தக் காசுகளை நல்லதா அல்லது செல்லாக்காசா என்பதை ஊர்ஜிதம் செய்கிறார். அதுபோல சத்குருவும் அவரது அன்பு எனும் பொக்கிஷத்தை வழங்கும் முன்னர், அதன் விலையாக அன்பைக் கேட்டு வாங்கிக் கொள்கிறார். நீங்கள் மதுபான கடைக்காரரை, போலி நாணயம் கொடுத்து ஏமாற்றலாம், ஆனால், சத்குருவை ஏமாற்ற முடியாது. செல்லாக்காசு (பக்தன் எனும் போலி நாடகம்) அவரிடம்

**ஒருபோதும் செல்லாது. இங்கு** (என்னுடன்) **பரிமாற்றம் நடைபெறுவதற்கு முன்னர், ஒருவர் முழு விலையையும் செலுத்த வேண்டும். என்னை அறிவதற்கான விலை - நேசம், அன்பு - தூய்மையும், எளிமையுமான அன்பு.**

**ஆனால், காதல்** (இறை அன்பு) **வலியை** (உள்ளூர தொடர்ந்து எரியும் போது உருவாகும் வேதனை மற்றும் பிரிவின் தாக்கம்) **ஏற்படுத்தும். இது படிப்படியாக அகந்தையின் வலிமையைக் குறைத்து, இறுதியில் அதை அழிக்கும், ஏனெனில் அன்பு ஒருபோதும் தன்னை நினைத்துப் பார்ப்பதோ அல்லது கவனிப்பதோ இல்லை. அது தனது அன்பிற்குரியவரை நேசிப்பதில் தன்னையே சுட்டு எரிக்கிறது. இவ்வாறு உள்ளூர சுட்டெரிக்கும் அன்பு, அகந்தையைப் படிப்படியாகக் குறைத்து, இறுதியில் முற்றிலுமாக அழிக்கப்பட்ட பின்னர், இறைநிலையை அடைய வழிவகுக்கும்.**

சில நாட்களுக்குப் பிறகு, மெஹர் பாபா மஹாபலேஷ்வர் அருகிலமைந்த பஞ்ச்கனி பள்ளத்தாக்கின் வனப்பகுதியில் ஏகாந்தவாசம் மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தார். 1930 ஏப்ரல் 2ஆம் நாள் பாபா, காளே மாமாவை, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய பஞ்ச்கனி அனுப்பி வைத்தார். அங்கு ஏற்பாடுகள் நிறைவுறுவது வரை, பாபா மெஹராபாத்திற்குத் திரும்பிவர முடிவு செய்தார்.

ஏப்ரல் 2ஆம் நாள் மண்டலியில் சிலர் மனச்சோர்வடைந்து பாபாவிடம் குறை கூறி முறையிட்டனர்: "உங்களுடன் இருப்பது துன்பமே தவிர வேறொன்றுமில்லை. வாழ்க்கை இப்போது வானளாவிய கஷ்டங்களால் நிரம்பியுள்ளது. உயிரை விடுவதைத் தவிர எங்கள் மனங்கள் மற்றும் இதயங்களில் வேறு எந்த சிந்தனையுமில்லை. பிறருக்கு நாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதுபோலத் தோன்றும்; இங்கு வரும் அனைவரோடும் உண்டு நேரத்தைக் கழிக்கிறோம்; ஆனால், எங்கள் இதயங்கள் குத்துவாளால் தாக்கப்படுவதை யார் காண்கிறார்கள்?"

பாபா அவர்களை ஆறுதல் படுத்தி இவ்வாறு விளக்கினார்:

**இது என் அருள்! நானாகத் தேர்ந்தெடுத்த சிலர் மீது, நான் காட்டும் கருணை! இவர்கள் எனது தோழர்கள், அன்பர்கள்; துக்கம், துயரம் அனைத்தும் நான் இவர்களுக்கு வழங்கும் வெகுமதி! இது பொன்னைவிட மிகப்பெரிய பரிசு - கணக்கிடமுடியாத மதிப்பு - மேலும் அனைவருக்கும் வழங்கப்படாத ஒன்று! இந்த வெகுமதி, எனது பிரியமான குழந்தைகளுக்கு மட்டுமே. குருநாதர்களாகிய நாங்கள், எங்கள் ஆசீர்வாதங்களால் பொன்னான உலகம், மகிழ்ச்சி, செழிப்பு அனைத்தையும் பிறருக்கு வழங்க முடியும் ஆனால், இந்த அரியதும் சிறந்ததுமான ஏழ்மை, தொல்லைகள் மற்றும் துன்பங்கள் ஒரு சிலருக்கு மட்டுமே விதிக்கப்பட்டுள்ளன.**

**எனவே, கவலை வேண்டாம். நான் யாருடைய இதயங்களைத் துளைத்து காயப்படுத்துகிறேனோ, அவர்கள் என்னையே உறுதியாகப் பற்றிக்கொள்ளும் வேளையில், நான் அவர்களை மிகையாக நேசிக்கிறேன்**

**என்பதை நினைவில் கொள்ளுங்கள். நான் எனது கத்தியால் வெளி நபர்களின் இதயங்களை காயப்படுத்தினால், அவர்கள் என்னை அணுகக்கூட துணிய மாட்டார்கள்! அவர்கள் எனது தொடர்பிலிருந்து, படிப்படியாக, உண்மையில் என்னை வந்தடைவார்கள் என்ற நம்பிக்கையில், நான் அளிக்கும் பாராட்டும் உற்சாகமும், அவர்களை மகிழ்ச்சியாக இருக்கச் செய்கிறது.**

**எனது தோழர்களை எடுத்துக் கொண்டால் - நான் அவர்களைச் சித்திரவதை செய்து கொல்கிறேன், அதுவே நான் அவர்களிடம் காட்டும் மிக உயர்ந்த கருணை! எனது கருணை என்றால் என்ன? அருள் என்பது என்ன? இதுவே உங்களின் துன்பமும், துயரமும்!**

மெஹர் பாபா, அன்று மாலை நான்கு மணியளவில் 15 மண்டலியுடன் இரண்டு சரக்கு வண்டியில் மெஹராபாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். வழியில், ஸங்கம்நேர் கிராமத்தில் வாழ்ந்து வந்த பாபாவின் நெருங்கிய மண்டலியில் ஒருவர், 'ராமச்சந்திர காடேக்கர்', பாபாவின் தரிசன நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அன்றிரவு அக்பர் பிரஸில் ஓய்வெடுத்து, மறுநாள் காலையில் மெஹராபாத் வந்து சேர்ந்தார்.

மெஹராபாத் பள்ளிக்கூட ஆசிரியராகப் பணிபுரிந்தவர்களில் காடேக்கர், மெஹர் பாபாவின் பெயரையும் புகழையும் மக்களிடையே பரப்பும் நோக்கத்தில் அயராது உழைத்தார். ஒவ்வொரு புதிய இடத்திலும், பாபாவின் அன்பின் ஒளிவிளக்கை ஏற்றி வந்தார்; மேலும், இதுவே பல வருடங்களாக காடேக்கரின் தந்தையார் கன்னோபா, அவருடைய கைகளால் செய்த பாதணிகளை பாபா அணிந்து வந்ததன் காரணம். அந்தப் பாதணிகள் ஓர் ஊடகமாக அமைந்து, காடேக்கர் குடும்பத்தை பாபாவின் பாதங்களில் சரணடைய வழி வகுத்தது.

நஸர்வான் ஸட்டா, ஆங்கிலேய அரசுக்கு எதிராக நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கெடுத்து, இந்திய சுதந்திரத்திற்காகப் போராடி வந்தார். 1930, ஏப்ரல் 3ஆம் நாள், இந்தியாவில் அரசியல் நிலைமை குறித்து நஸர்வானிடம் பேசிக் கொண்டிருந்தபோது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**ஆங்கிலேய ராஜ பிரதிநிதியாக இருந்தவர்** (லார்ட் இர்வின்), **நல்ல இதயம் படைத்தவர், இந்தியாவின் நலனைக் கருத்தில் கொள்பவர், ஆனால், இங்கிலாந்தில் ஒருவருமே காந்தியின் இலட்சியங்களை பெருமையாகப் பேசியதில்லை. இவ்வளவு பெரிய அளவில் நடக்கும் ஒத்துழையாமை இயக்கம், ஆங்கிலேய அரசியல்வாதிகளை சற்றும் பாதிக்கவில்லை.**

**இந்திய தேசம் சுதந்திரத்தை மீட்டெடுக்கும், ஆனால், இப்போதைய கிளர்ச்சியின் எதிர்வினை, நாட்டிற்கு பெரிய அளவில் தீங்கு விளைவிக்கும். இக்கால இளைஞர்களின் விவேகமற்ற வேகமும், துடுக்குத்தனமும்**

**பேரிடரை ஏற்படுத்தும்; இத்தகைய ஆணவமும், கட்டுக்கடங்காத அவசர புத்தியும், ஆன்மீகப் பாதையில் பெரிய தடையாக இருக்கும்.**

அவ்வேளையில் பேச்சின் தலைப்பு மதங்களை நோக்கித் திரும்பியது; பாபா இவ்வாறு கருத்துரை வழங்கினார்:

**அனைத்து மதங்களிலும், பூசாரி, பாதிரியார் வர்க்கத்தை எதிர்க்கும் மனப்போக்கு வரவேற்கத்தக்கது, ஏனெனில் இவர்கள் ஆன்மீகப் பாதையில் மிகப்பெரிய தடையாக இருக்கிறார்கள். இந்தப் பூசாரி, பாதிரியார் வர்க்கங்கள், மதத்தின் பெயரில், பாரம்பரிய வழியாக வந்த கடுமையான மற்றும் ஆழமாக வேரூன்றிய நம்பிக்கைகள், பழங்கால பழக்கவழக்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள் மற்றும் அவற்றைப் பற்றிய தவறான எண்ணங்களை வரவேற்று, ஊட்டமளித்து, வளரச் செய்வது மிகப்பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிறது. எனவே இந்தப் பாதிரியார், பூசாரி இனத்தின் ஆட்சியை வீழ்ச்சியடையச் செய்தால், உறுதியாக நிலைநாட்டப்பட்ட சடங்கு சம்பிரதாயங்கள் மற்றும் தவறான எண்ணங்கள் அனைத்தும் வேரோடு அழிக்கப்படும். சாமான்ய மக்கள், கடவுள் மற்றும் மதம் சம்பந்தபட்ட விஷயங்களில், அலட்சியமாக இருக்கும் அபாயம் ஏற்பட்டாலும், இந்தத் தீய எண்ணங்களும், பாரபட்சங்களும் அழிந்த பின்னர், இறைவன் மீதான பற்றும், பக்தியும் மறுபடியும் புத்துணர்வு பெற்று, தழைத்தோங்கும்.**

மெஹர் பாபா மெஹராபாத்திற்குத் திரும்பி வந்ததை அறிந்ததும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள், அரன்காவ்ம், அஹமதுநகர் மட்டுமின்றி இதர இடங்களிலிருந்தும் மக்கள் திரள்திரளாக தரிசனத்திற்கு வந்தனர். மதிய வேளை வரை தரிசனம் தொடர்ந்தது.

அதற்குப் பிறகு, பாபா சுட்டெரிக்கும் வெயிலில், மண்டலியை மேல்மலைக்கு அழைத்துச் சென்ற வேளையில், இவ்வாறு குறிப்பிட்டார்: **"வெப்பம் தீவிரமாக உள்ளது, இருப்பினும் எனது பணிக்காக நான் மேல்மலைக்குச் சென்றாக வேண்டும்."** சிது உடனே ஒரு பெரிய வலையை, தண்ணீரில் நனைத்து எடுத்து வந்ததும், நான்கு மண்டலி அதைக் குடைபோலப் பிடித்திருந்தனர்.

மெஹர் பாபா அப்போது சிதுவிடம், அஹமதுநகர் சென்று அக்பர் அச்சகத்திலிருந்து தபால் மற்றும் தொலைத்தந்திகளை எடுத்துவரக் கூறினார். அந்த நாட்களில் மெஹர் பாபாவின் தபால்கள் அனைத்தும், அக்பர் அச்சகத்திற்கு வந்தன; தினமும் எவரேனும் ஒருவர் அவற்றை எடுத்து வருவது வழக்கம். பாபா இதை சிதுவிடம் மதிய வேளையில் கூறினார், ஆனால், சிது, வெப்பம் சிறிது தணிந்த பின்பு செல்லலாமென முடிவு செய்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா, சிதுவைப் பார்த்ததும், இன்னமும் இங்கே என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார். சிது, "பாபா, வெப்பம் பயங்கரமாக உள்ளது; சற்று தாமதமாகச் செல்கிறேன்" என்று பதிலளித்தார்.

"என்னிடம் இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமாக இல்லையா?" என பாபா வினவினார், **"நான் உங்களைப் போகச் சொன்ன அந்த நேரத்தில் நீங்கள் போயிருக்க வேண்டும்; ஆனால், இன்னும் போகவில்லை."**

சிது உடனே புறப்படுவதாகக் கூறினார். **"எனக்குக் கீழ்ப்படியாமல் இப்போது இதைச் செய்வதில் என்ன பயன்?"** என்று பாபா வினவியதும், 'அத்தகைய வெப்பமான காலநிலையிலும் அவரை, சைக்கிள் மூலமாக அஹமதுநகருக்கு அனுப்புவதில் பாபாவிற்கு சற்றும் இரக்கமில்லை' என்று நினைத்துக்கொண்டே சிது அமைதியாகப் புறப்பட்டுச் சென்றார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு மெஹர் பாபா, கலிங்கட் எனும் சிறுவனை அனுப்பி, சிதுவைத் திருப்பி அழைத்துவரக் கூறினார். பாபா, சிதுவிடம் இவ்வாறு எடுத்துரைத்தார்: "என்னை மன்னிக்கவும்; நான் உண்மையிலேயே இரக்கமற்றவன். நான் என்ன செய்தேன் என்று எனக்கே தெரியாது. சில நேரங்களில் இப்படி நடப்பதுண்டு. நான் இன்னொரு முறை இவ்வாறு எப்போதேனும் நடந்து கொள்வதானால் என்னை நினைவுபடுத்த விரும்புகிறேன்." சிது அவருடைய தவறுக்காக பாபாவிடம் மன்னிப்புக் கோரினார்.

மெஹர் பாபா, அதன் பின்னர், அனைத்து மண்டலியையும் அழைத்து, அவரது நிதி நிலைமை குறித்து, தீவிர விவாதம் ஒன்றை நடத்தினார். **"நம்மிடம் போதிய நிதி இல்லை; மேலும் நம்முடைய செலவுகளை சமாளிக்கக் கடினமாக இருக்கும். நாம் என்ன செய்ய வேண்டும்?"**

ராவ்ஸாஹேப் தானாகவே முன்வந்து, மும்பைக்குச் சென்று நிதி திரட்டி வரலாம் என்றார்.

**"அருமை! இது மிகவும் நல்ல யோசனை,"** பாபா சைகையால் பதிலளித்தார். **"ஆனால், உங்களால் நாளைத் திரும்பிவர முடியுமா? 24 மணி நேரத்திற்குள் திரும்பி வந்தாக வேண்டும்."** ராவ்ஸாஹேப், நிச்சயமாக நேரத்தில் திரும்பி வருவதாக உறுதியளித்து, உடனடியாக மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார்; ஆனால், அவரால் அடுத்த நாள் திரும்பி வர இயலாமலாயிற்று. பாபா பொறுமையின்றி, அடிக்கடி அவரைப் பற்றி விசாரித்து, எதிர்நோக்கி இருந்தார்.

மூன்றாவது நாள், ராவ்ஸாஹேப் திரும்பி வந்த அவ்வேளையில் பாபா மகிழ்ச்சியாக இல்லை; சீற்றத்துடன் பாபா வினவினார், **"நீங்கள் ஏன் நேற்று வரத் தவறி விட்டீர்கள்? ஏன் எனக்குக் கீழ்ப்படியவில்லை?"** ராவ்ஸாஹேப் எதுவும் கூறமுடியாமல், ஒரு பெரிய மூட்டை நிறைய பணத்தை, பாபா மகிழ்ச்சியடைவார் என்ற நம்பிக்கையில் அவர்முன் வைத்தார்.

ஆனால், மாறாக, மெஹர் பாபா, சகனை அழைத்து, **"அந்தப் பணத்தை நெருப்பிலிட்டு எரித்துவிடு"** என்றார். சகனும் அந்த மூட்டையை எடுத்து - ஏறக்குறைய 5000 ரூபாய் - பாபா கூறியபடியே செய்தார். ராவ்ஸாஹேப், இதர மண்டலியைப் போல், அச்சத்தில் திகைத்துப் போனார்.

மெஹர் பாபா இவ்வாறு விளக்கினார்: **"பணத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைவேன் என்று நீங்கள் நினைத்தீர்கள். இந்தப் பணத்தில் என்ன மதிப்பிருக்கிறது? முழு உலகத்தின் புதையலையும் நீங்கள் என்முன் வைத்தாலும், அது எனக்கு ஒன்றும் இல்லை, வெறும் மனித மலம் போலத்தான்! நீங்கள் எனது கட்டளையை மீறிவிட்டீர்கள்! நீங்கள் நான் கூறிய நேரத்தில் வெறுங்கைகளுடன் வந்திருந்தால் கூட சந்தோஷம் அடைந்திருப்பேன். என்னுடைய வார்த்தைகளை மீறி, எனக்கு எவ்வளவு வேதனையைத் தந்தீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? எனக்கு ஆதாயம் தேவையில்லை; அன்பு ஒன்றுதான் தேவை!"**

ராவ்ஸாஹேப் பாபாவிடம் மன்னிப்புக் கோரினார். பாபா அவரை ஆறுதல்படுத்தி புரியவைத்தார், **"என்னுடைய உத்தரவுகளை எப்பொழுதும் வார்த்தைக்கு வார்த்தை பின்பற்ற வேண்டும். கீழ்ப்படிதல் என்ற ஒரே பரிசை நீங்கள் எனக்கு வழங்குவதானால், வேறு எந்தப் பரிசும், எவ்வளவுதான் மதிப்புமிக்கதாக இருந்தாலும் அதற்கு இணையாகாது."**

1930ஆம் வருடம் 'ஃபெராம்ரோஸ் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா', (29 வயது), மும்பையிலிருந்து பாபாவின் தரிசனத்திற்காக, தனது நண்பருடன் வந்திருந்தார். இது அவருடைய முதல் சந்திப்பு. அவர்களை உள்ளே அழைத்த போது, பாபா உணவறையில் அமர்ந்து 'இல்லஸ்டிரேட்டட் வீக்லி' (ILLUSTRATED WEEKLY) பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்ததை அவர்கள் கவனித்தனர். ஃபெராம் மனதில் நினைத்துக் கொண்டார், "பிரபஞ்சத்தில் அனைத்தையும் அறிந்த ஒரு சத்குரு பத்திரிகைகள் படிப்பதில் ஆர்வம் காட்டுகிறார்!"

பாபா ஏகாந்தவாசத்தில் இருந்தாலும், எதிர்பாராமல் இருவரையும் அன்புடன் அழைத்துப் பேசினார். பாபா, ஃபெராமிடம் அவரது குடும்பம், உடல்நலம், வேலை, சம்பளம் போன்ற விபரங்களைப் பற்றி விசாரித்தார்.

ஃபெராம், பாபாவிடம், அவருக்குத் தொடர்ந்து தொந்தரவு தரும் ஆஸ்துமாவைக் குறித்து எடுத்துக்கூறினார். பாபா உடனே, **"நான் பத்திரிகை மற்றும் செய்தித்தாள்களை மட்டுமே படிப்பது பழக்கம். இதுபோன்ற விஷயங்களைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? ஆகையால் நான் என்ன சொல்ல முடியும்? மக்கள் ஏன் என்னிடம் வருகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை!"** என்று கூறினார்.

பாபாவின் வார்த்தைகள், ஃபெராம் மனதில் ஆழமான நம்பிக்கையை வேரூன்றச் செய்தது. ஒரு வருடத்திற்குப் பிறகு மெஹர் பாபாவின் விருப்பத்திற்கிணங்கி ஃபெராம் நாசிக் வந்து குடியேறி, ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் பணிபுரிந்தார். அவ்வேளையிலிருந்து ஃபெராம் அவருடைய வாழ்வை, மெஹர் பாபாவின் சேவையில் முற்றிலுமாக அர்ப்பணித்தார்.

1930 ஏப்ரல் 9ஆம் நாள், பாபா 18 நபர்களுடன் (சகன், குஸ்தாஜி, சாஞ்சி, புவாஸாஹேப் மற்றும் பல சிறுவர்களுடன்) பேருந்தில் பஞ்ச்கனி புறப்பட்டுச்

சென்றார். இந்து உயர்நிலை பள்ளியின் முதல்வர் பண்டித் என்பவரின் விருந்தினர்களாக அங்குச் சென்று, மண்டலி பள்ளிக்கு அருகில் சிறப்பாகக் கட்டப்பட்ட புல் குடிசைகளிலும், பாபா பள்ளிக்கு உள்ளேயும் தங்கியிருந்தனர்.

அடுத்தநாள் பாபா, மண்டலியுடன் பஞ்ச்கனி 'புலி பள்ளத்தாக்கு' (TIGER VALLEY) சென்று, ஏகாந்தவாசத்திற்கு உகந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து, அதில் குகை ஒன்றை, ஒரே மாதத்தில் கட்டி எழுப்புமாறு, பொறியியல் வல்லுனர் காளேமாமா அவர்களுக்கு விளக்கிக் கூறினார்; அவரும் தனது வேலையை உடனே ஆரம்பித்தார். மேலும் சிறுவர்கள் மற்றும் மண்டலிக்கு வேண்டிய சிறு குடில்களும் அருகாமையில் அமைக்கத் திட்டமிடப்பட்டது.

பாபா அப்போது இவ்வாறு தெரிவித்தார்:

**மே 15ஆம் நாள், நான் ஏகாந்தவாசத்தைத் தொடங்குவேன். உங்களில் நால்வர் என்னுடன் தனித்தனியாக இருப்பீர்கள். மேலும் நால்வர் குகையைச் சுற்றி, இரவும் பகலும் கண்காணிக்க வேண்டும். என்னையும் சேர்த்து மொத்தம் ஒன்பது பேர், பால் மட்டும் அருந்தி உபவாசம் மேற்கொள்ள வேண்டும். ஏதேனும் விசேஷ தொடர்புக்காக, சகனைத் தவிர வேறு எவரும் என்னை அணுகக்கூடாது.**

**ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் வேளையில் நான் எழுத்துப்பலகையைப் பயன்படுத்த மாட்டேன். மேலும் எவரையும் சந்திக்கவும், காவல்புரியும் நான்கு மண்டலியைப் பார்க்கவும் மாட்டேன். அனைத்து தரிசனங்களும், கடித பரிமாற்றங்களும் நிறுத்தப்படும். என்னுடைய இந்தத் திட்டத்தை, ஆறு மாதங்கள் தொடர முடிவு செய்துள்ளேன்; அதற்குப் பிறகு, நான் ஏகாந்தவாசத்திலிருந்து வெளிவருவேன்.**

**நீங்கள் அனைவரும் பாதுகாப்பாகவும், கவனமாகவும் இருக்க வேண்டும். நான் மேற்கொள்ள இருக்கும் இந்த ஏகாந்தவாசத்தைப் பற்றிய எனது சிந்தனை மட்டுமே கடந்த சில நாட்களில், அதுவாகவே, தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் இந்திய சுதந்திர போர்வீரர்கள் மத்தியில், போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் மற்றும் மத கிளர்ச்சிகளாக உருவெடுத்துள்ளது. எனது ஏகாந்தவாசத்தைப் பற்றிய திட்டங்கள், சிந்தனைகள் மட்டுமே இத்தகைய கிளர்ச்சிகளைத் தூண்டுவதானால், உண்மையான ஏகாந்தவாசத்தை மேற்கொள்ளும் வேளையில் என்னவாகும் என்பதைப் பற்றிய கருத்து உங்களில் ஒருவருக்கும் இருக்காது.**

**இரத்தம் சிந்துவதை நீங்கள் கண்கூடாகக் காண்பீர்கள். இந்து, முஸ்லிம்கள் இடையே கடுமையான பதற்றம் நிலவும். உயர்ந்த மற்றும் தாழ்த்தப்பட்ட இந்து மக்களிடையே கடுமையான விரோத மனப்பான்மை உருவாகும். காந்தியைப் பின்பற்றுபவர்கள் ஒரு புறமும், அவரை எதிர்ப்பவர்கள் - அரசாங்கம், முஸல்மான்கள் மற்றும் இந்துக்களில் ஒரு பிரிவான ஏறக்குறைய பாதியளவு 'தீண்டத்தகாதவர்கள்' உள்ளிட்ட அனைவரும் - மறுபுறமும் இருப்பார்கள். அவருடைய போராட்டத்தின்**

**இயக்கம், வெவ்வேறு அரசியல் கட்சிகள், சமூகங்கள் மற்றும் அரசாங்க பிரிவுகளிடையே தோல்வியை சந்தித்து, இரத்தக்களரியை ஏற்படுத்தும்.**

இவ்வேளையில், குகையை உருவாக்குவதில் மும்முரமாக இருந்த காளேமாமாவிடம், பஞ்ச்கனி பகுதியிலிருந்து ஒரு ‘சிறந்த சிறுவனை’ அழைத்து வருமாறு பாபா வலியுறுத்தினார்.

1930 ஏப்ரல் 11ஆம் நாள், மெஹர் பாபா, ‘ஸாவந்த்வாடி’ மன்னரை சந்தித்துப் பேச காளேமாமாவை அனுப்பி வைத்தார். ‘டைகர் வேலி’ அந்த மன்னரின் அதிகார வரம்பில் இருந்ததால், அவருடைய அனுமதி தேவைப்பட்டது. பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**மன்னர், நான் இந்த இடத்தைப் பயன்படுத்த அனுமதி அளிப்பாரா என்று யாருக்குத் தெரியும்? அவர் அனுமதி அளித்தால் நல்லது, இல்லையேல் நாம் வேறு எங்கேனும் செல்ல வேண்டியதுதான். அவர் ஒரு நல்ல மன்னர், பக்திமிக்கவர். சுவாமி ஸித்தருத்தை, அடிக்கடி தரிசனம் செய்து வருகிறார், ஆன்மீகப் பாதையில் மிக்க நாட்டம் உள்ளவர்.**"

கோரிக்கையை முன்வைத்ததும் ஸாவந்த்வாடி மன்னர், குகையை அமைப்பதற்கான அனுமதியை வழங்கி, புலிப்பள்ளத்தாக்கை (டைகர் வேலி) மெஹர் பாபாவுக்காக அர்ப்பணம் செய்யும் விருப்பத்தையும் தெரிவித்தார்.

இதற்கிடையில் சகன் ‘வய்’ (WAI) மலை சந்திப்பில், அழகான தோற்றமிக்க ஒரு சிறுவனை கண்டுபிடித்து பாபாவிடம் அழைத்து வந்தார். பாபாவும் முதலில் சரி என ஏற்றுக் கொண்டவர், சிறுவனின் காலில் ஒரு காயம் இருப்பதைக் கண்டு சகனிடம், "**மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்று, பாதிரியிடம் இவனுக்கு சிகிச்சை அளிக்கச் சொல்லுங்கள். காயம் சரியானதும் பாதிரியிடம் அவனை பஞ்ச்கனிக்கு அழைத்து வருமாறு கூறுங்கள்**" என்றும், வழியில் சதாஷிவை சந்தித்து, கடிதம் ஒன்றை வழங்குமாறும் அறிவுறுத்தினார்.

பாபா கூறியதைக் கேட்ட சகன் குழப்பத்தில் ஆழ்ந்தார்; ஏனெனில், ‘அங்கேயே குணப்படுத்த முடிகிற இந்த சிறிய காயத்திற்காக, பாபா அந்த சிறுவனை தூரத்தில் அமைந்த மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லக் கூறி, ஏன் இதை ஒரு பெரிய விஷயம் ஆக்குகிறார்’ என்று நினைத்து சகன் ஆச்சரியமடைந்தார்.

சகன், யூஸுஃப் எனும் அந்த சிறுவனை அழைத்துக்கொண்டு பஞ்ச்கனியிலிருந்து புறப்பட்டார். பூனாவில் சதாஷிவ் வீட்டை நெருங்கும் வேளையில், அருகிலிருந்த கிணற்றில் நீரிறைத்துக் கொண்டிருந்த ஒரு முஸ்லிம் பெண்மணி "யூஸுஃப், யூஸுஃப்" என்று அழைத்துக்கொண்டே, ஓடி வந்து அந்த சிறுவனைக் கட்டியணைத்து அழுதார், "யூஸுஃப், எனது மகனே, நீ எங்கே சென்றாய்? இது நீயென நான் நம்ப முடியவில்லை! இரவு பகலாக

உன்னைக் காண ஏங்கிக் கொண்டிருக்கிறேன்! எனது மகனே, உன்னைப் பெற்ற தாயை மறந்துவிட்டாயா?"

உடனடியாக, கிணற்றருகே ஒரு கூட்டம் கூடியது, மேலும் அங்கு என்ன நடக்கிறது என்பதை, சகனால் புரிந்துகொள்ள முடியவில்லை. சகன் அச்சத்தில், வேகமாக சதாஷிவ் வீட்டிற்குச் சென்று, நிலைமையை அவரிடம் எடுத்துக் கூறினார். சதாஷிவ் அந்தப் பெண்மணியை அணுகி உண்மையை வினவினார். ஐந்து வருடங்களுக்கு முன்னர், அந்த சிறுவன் கண் மறைவாகி, தாய் தந்தையர் எங்குத் தேடியும் அவனைக் கண்டுகொள்ள முடியாமல், முயற்சியைக் கைவிட்டு, பெரும் துயரத்தில் ஆழ்ந்தனர். வருத்தத்தில், அவர்கள் அனைவரும் என்றாவது ஒரு நாள் அவனைப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கையையும் இழந்துவிட்டதாக அந்தப் பெண்மணி கூறினார்.

சகன், சதாஷிவிடம், "நான் இப்போது என்ன செய்யட்டும்? என்று கேட்க, சதாஷிவ் அங்குள்ள நிலைமையை விளக்கி பாபாவிற்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பினார். பாபாவிடமிருந்து உடனடியாக வந்த பதிலில் அந்த சிறுவனை, பெற்றோரிடம் விட்டுவிட்டு, உடனடியாக பஞ்ச்கனிக்குத் திரும்பி வருமாறு குறிப்பிட்டிருந்தார். இந்தப் பயணத்தில் பாபா, ஏன் சகனை அனுப்பி வைத்தார் என்பது இப்போதுதான் புலப்பட்டது. சதாஷிவிற்குத் தெரிவிக்க பாபா, சகன் மூலமாக அனுப்பிவைத்த செய்தி ஒன்றும் முக்கியமல்ல என்றாலும், மெஹர் பாபா, மனமுடைந்த பெற்றோருடன் குழந்தையை மீண்டும் இணைத்து வைக்க விரும்பினார் என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

சில மாதங்களுக்கு முன்பு, மெஹர் பாபா, அவர் மிகவும் விரும்பிய கோலாப்பூர் உயர்நிலைப் பள்ளிக்கு, சிறிது நேரம், திட்டமிடப்படாத ஒரு விஜயத்தை மேற்கொண்டார்.

ஆன்மீக இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்ட அந்தப் பள்ளிக்கூடம், தங்களை முழுமையாக அர்ப்பணம் செய்த, தன்னலமற்ற இரண்டு நபர்களால் நடத்தப்பட்டது.

பள்ளிக்கூட முதல்வர் தோப்கணே என்பவரின் அழைப்பை ஏற்று, பாபா மூன்று நாட்கள் பயணமாக 1930, ஏப்ரல் 12ஆம் நாள் பஞ்ச்கனியிலிருந்து கோலாப்பூர் புறப்பட்டார். அன்றிரவு வந்து சேர்ந்து, நகருக்கு வெளியே அமைந்த தப்போவன் என்ற இடத்தில் பாபா மண்டலியுடன் தங்கியிருந்தார்.

அடுத்த நாள் காலை 5 மணிக்கு மெஹர் பாபா, மாணவர்களின் பிரார்த்தனை, விளையாட்டு மற்றும் சிற்றுண்டியில் பங்கெடுத்தார். சாஞ்சி அவரது குறிப்பு புத்தகத்தில், "பல நாட்களாக மறந்து போன மெஹராஷ்ரம் சூழ்நிலைகள் மீண்டும் புத்துயிர் பெற்றது போலத் தோன்றியது" என எழுதியிருந்தார்.

காலை பத்து மணியளவில் மெஹர் பாபா, தியானம் மற்றும் படைப்பின் நோக்கத்தைப் பற்றி வழங்கிய சொற்பொழிவை, விஷ்ணு

மராட்டியில் மொழிபெயர்த்து எடுத்துரைத்தார். சிறுவர்கள் தினமும் பதினைந்து நிமிடங்கள் தியானம் செய்யுமாறு பாபா வலியுறுத்தி, எப்படிச் செய்வது என்பதையும் விளக்கினார்:

**அதிகாலையில், உங்கள் வழக்கப்படியான காலை கடன்களை முடித்த பின்னர், அமைதியான ஓரிடத்தில் தனியாக அமர்ந்து, சிந்தனை செய்யுங்கள்:**

- **கடவுள் ஒருவரே.**
- **கடவுள் எங்கும் இருக்கிறார்.**
- **கடவுள் எதிலும் இருக்கிறார்.**
- **கடவுள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர்.**

**ஐந்து நிமிடங்கள், இந்த சிந்தனைகள் உங்கள் மனதில் அனைத்திற்கும் மேலாக இருக்க வேண்டும். வேறு நினைவுகள் வரும், ஆனால், உங்கள் மனதை, இந்த நான்கு சிந்தனைகளிலும் ஒருநிலைப்படுத்த வேண்டும். தூங்கி விழக்கூடாது; அப்படித் தூக்கம் வருவது போல் உணர்ந்தால், முகத்தைக் கழுவிவிட்டு மீண்டும் தொடங்கவும்.**

**அதற்குப் பிறகு, பத்து நிமிடங்களுக்கு, ஒவ்வொரு மூச்சிலும் 'ஓம்' என்று அமைதியாக உச்சரித்து, மூச்சை உள்வாங்கி வெளிவிடும் வேளையில், வாயைத் திறக்காமல் வைத்துக்கொள்ள வேண்டும்.**

**உண்மையான தியானம் மற்றும் அதன் நன்மைகளைப் பற்றி பெரும்பாலோருக்கு எந்த அறிவும் கிடையாது. இது மனதில் மறைந்திருக்கும் அனைத்து அற்புதமான சக்திகளையும் வெளிப்படுத்துகிறது. மனதின் சக்திகள் உண்மையில் அற்புதமானவை, ஆனால், அது எவருக்கும் தெரியாது.**

ஏப்ரல் 13ஆம் நாள் நடந்த கூட்டத்தில், பள்ளிக்கூட முதல்வர் தோப்கணே மற்றும் துணை **முதல்வர்** தீக்ஷித் ஆகியோரின் வேண்டுதலுக்கு இணங்கி, பள்ளி வளாகத்தில், பாபா ஒரு மாமரச்செடியை நட்டு வைத்தார். துணை முதல்வர் தீக்ஷித் மாணவர்களுக்கு இவ்வாறு எடுத்துரைத்தார்:

"மரம் வளர்ந்து, தன்னலமற்ற முறையில், அதன் கனியை பிறருக்கு அளிப்பது போல, நீங்களும் தார்மீக மற்றும் ஆன்மீக மகத்துவத்தில் வளர வேண்டும், பின்பு பிறரின் தேவையறிந்து, தன்னலமற்ற சேவை செய்ய வேண்டும். இதைத்தான் மெஹர் பாபா நமக்குக் கற்றுத் தருகிறார்."

பள்ளிக்கூட முதல்வர் அப்போது, ஒரு சிறிய உரையை வழங்கினார். அதன் சாராம்சம் கீழே வருமாறு:

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில், எங்களது நேர்மையான முயற்சிகளால் ஆசிரியர்களாகிய நாங்கள் செய்யத் தவறியது என்னவெனில், சிறுவர்களின் இதயங்களில் அன்பையும் ஒழுக்கத்தையும் வளரச் செய்வது; மெஹர் பாபா, அவர் நம்முடன் இருந்த ஒரே நாளில், அந்த அன்பை அனைத்து சிறுவர்களிடமும் உருவாக்கியிருக்கிறார். இதை நாம் ஒருபோதும் செய்திருக்க

முடியாது. இது, ஒரு சத்குரு என்ன செய்ய முடியும் என்பதன் திடமான ஆதாரம்!

ஒரு சத்குருவைத் ‘தேடிச் செல்லவேண்டிய தேவை’ எதுவுமில்லை என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். இறைநிலையை அடைந்த சத்குருக்களாகிய அவர்கள், இறை தாகத்தால் தவிக்கும் ஆத்மாக்களை அறிந்து, பார்த்து, அவர்களுக்குத் தேவையான உதவிக்கரங்களை நீட்டுவார்கள். உயர்ந்த அபிலாஷைகளுடன் இங்கு ஆழ்ந்த ஏக்கத்தில் போராடும் ஆத்மாக்கள் இருப்பதை, அவர் அறிந்து, அவருடைய அருளையும், ஆசீர்வாதங்களையும் வழங்க இங்கு வந்துள்ளார்.

நான் ஸ்ரீ மெஹர் பாபாவிடம், அவருடைய கருணை மிகுந்த கடைக்கண் பார்வை, தொடர்ந்து இந்தப் பள்ளிக்கூடத்தில் நிலைபெற்றிருக்கப் பிரார்த்தனை செய்கிறேன்.

மெஹர் பாபா, அப்போது, கீழ்வரும் உரையை விஷ்ணு மூலமாக வழங்கினார்:

**இறைநிலையை நோக்கிப் பயணம் செல்லும் அனைத்து ஆன்மீகப் பாதைகளிலும் கர்ம-யோகாவை** (சேவையை) **உங்களுக்கு நான் திடமாகப் பரிந்துரைக்கிறேன்.**

**முழு மனதுடன் பிறருக்கு நேர்மையான, தன்னலமற்ற சேவை புரியும் ஒருவருடைய இயல்பின் கீழ்த்தரமான பண்புகள், படிப்படியாக அழிந்து, இறுதி இலக்கை நோக்கி அவரை சீராக, ஆனால், நிச்சயமாக முன்னேறிச் செல்ல வழிவகுக்கும். இறுதி இலக்கை அடைய, ஒரு குருநாதரின் கருணை இன்றியமையாதது என்றாலும், நேர்மையாக செய்வதானால், அவரின் அருளைப்பெற தகுதியுடைவராக மாற்றும் என்பது நிச்சயம்.**

**இங்கு நிலவும் தூய்மையான, ஆரோக்கியம் தரும், பக்திமிக்க சூழ்நிலைகள், சகோதரத்துவ உணர்வுகள், ஆசிரியர் - மாணவர்கள் இவர்களுக்கிடையே நிலவும் இணக்கம், வாழ்க்கையின் உயர்ந்த கொள்கைகளை அடையும் தீவிர ஏக்கம் - இப்போதும், எப்போதும் இவை அனைத்தையும் பார்த்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்; மேலும், இவை இறைவனைக் காணும் ஏக்கத்தின் உச்சத்தை அடைய வழிவகுக்கும். இங்கு இருக்கும் பக்தி நிறைந்த ஆத்மாக்களிடையே, நான் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதன் காரணம், உங்களின் உள் ஏக்கங்களை நான் நன்கு அறிவேன், அதை நான் மிகவும் விரும்புகிறேன், பாராட்டுகிறேன்.**

ஏப்ரல் 14ஆம் நாள் பாபா, மண்டலியுடன் மாலையில் தப்போவனில் மாணவர்களுடன் ஹாக்கி விளையாடினார். அவ்வேளையில் கோலாப்பூர் மாநிலத்தின் முந்தைய திவான், அந்த வழியே காரில் சென்றவர், பாபா ஹாக்கி விளையாடுவதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்; பின்பு மெஹர் பாபாவின் தரிசனத்தைப் பெறும் வேளையில், பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**குழந்தைகளோடு நான் ஒரு குழந்தை; முதியவர்களோடு நானும் ஒரு முதியவன்; ஆண்களோடு ஆண், பெண்களோடு பெண்; பணக்காரர்களோடு நான் பணக்காரன், அதேவேளை பாமர மக்களோடு நானும் ஒரு பாமரன்; இதையெல்லாம் தாண்டி, குழந்தைகளுக்கு ஆசைகள் இல்லாததால், நான் அவர்களை மிகவும் நேசிக்கிறேன். அவர்களோடு விளையாடுவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்; மேலும் அவ்வாறு விளையாடுவது, குழந்தைகளை இறையன்பின் மதுபானத்தை விரும்பிய அளவில் பருக வழிவகுக்கும்.**

ஏப்ரல் 15ஆம் நாள், பாபா மண்டலியுடன் அங்கிருந்து புறப்பட்டு பஞ்ச்கனி சென்று சேர்ந்தார்.

பஞ்ச்கனியில், பாபா தினமும் குகை உருவாகும் இடத்தைப் பார்வையிடச் சென்றார். ஒருமுறை பாபா, அவருடைய முந்தைய பிறவியில் சிவாஜியாக வந்ததை நினைவு கூர்ந்து இவ்வாறு குறிப்பிட்டார்: **"டைகர் வேலி என்னுடைய பழைய வாழ்க்கையை நினைவூட்டுகிறது. இந்த மலையைச் சுற்றி இராணுவ முகாம்கள் இருந்ததால், எப்பொழுதும் ஏதாவது சம்பவங்கள் நடந்த வண்ணம் ஆரவாரமாக இருக்கும்."**

பாபா மண்டலியுடன் தங்கியிருந்த குடில்களுக்கு அருகிலமைந்த ஒரு மசூதியில், அதிகாலை முதல் மாலை வரை 'அல்லா…. அல்லா… ' என்று சத்தமாக, கரகரப்பான குரலில் அழைப்பது வழக்கமாக இருந்தது. ஏப்ரல் 17ஆம் நாள், மண்டலி இதைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த வேளையில், பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**"கடவுள் என்ன செவிடரா? அவருடைய பெயரை இவ்வளவு சத்தமாகக் கத்த வேண்டியது அவசியமா? ஒரு கணம் இதயத்துடிப்பு நின்றுவிட்டது போன்ற ஓர் உணர்வு! ஆனால், கடவுள் இதுபோன்ற அழைப்பிற்கு செவிமடுப்பதில்லை. இதயத்தின் குரலுக்கு மட்டுமே அவர் செவி சாய்க்கிறார் என்ற உண்மை உலகிற்குத் தெரியாது."**

இதற்கிடையில் பாபாவின் 'சிறந்த சிறுவனைத் தேடும் பணி' தொடர்ந்தது. **"கடந்த ஆறு மாதங்களாக எவ்வளவோ முயன்றும், எனக்கு 'ஏற்றதாக' ஒரு சிறுவனைக் கூட உங்களால் கண்டுகொள்ள முடியவில்லை."**

**ஒரு சாதாரண சரக்கு வண்டி ஓட்டுபவன் கூட, அவனுக்கு உதவியாக ஆற்றல்மிக்க சிறுவனை எளிதாகக் கண்டுகொள்ள முடிகிறது; ஆனாலும் ஒரு குருநாதர் தனது சிறப்பான நோக்கத்திற்காக, ஒரு 'தனித்துவமான' சிறுவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை! இருந்தும் எனது சூழ்நிலைகளை நாம் மனதில் கொள்ள வேண்டும்; எனக்கும் மாய சக்திகளுக்கும் இடையே நிகழும் போராட்டம், இந்த சூழ்நிலைகளை உருவாக்கக் காரணமாக இருந்தது. எதுவாயினும் எனது முக்கியமான பணியை நான் செய்ய வேண்டும், மேலும், அந்தப் பணி மாயையின்**

**உதவியுடன் செய்யப்படுகிறது. இந்த மாய சக்திகள் எனது பணிக்கு எதிராக நின்றாலும், இதே மாயைதான் எனது பணியின் ஊடகம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.**

மே 8ஆம் நாளிலிருந்து, மெஹர் பாபாவின் திட்டப்படி ஏகாந்தவாசம் தொடங்க இன்னும் ஒரு வாரமே எஞ்சியிருந்த நிலையில், அனைத்து மண்டலியும் அந்தப் பணியில் கைகொடுத்து உதவினர். ஒரு நாள் மாலை நேரம், கடைசியாகக் கான்கிரீட் சிமெண்ட் கலவையை ஊற்றும் வேளையில், திடீரெனக் கார்மேகங்கள் சூழ்ந்துகொண்டு, கடும் மழை பொழிய இருப்பதுபோலத் தோற்றமளித்தது - இதைத்தான் பாபா மாயையின் எதிர்ப்பு சக்தி என்று கூறியது (அவ்வாறு மழை பெய்திருந்தால் அந்த நாளில் செய்து முடித்த அனைத்து சிமென்ட் வேலைகளையும் அது பாழாக்கியிருக்கும்.) மெஹர் பாபா குடிலுக்கு வெளியே வந்து, வானத்தை உற்று நோக்கினார். அதற்குப் பிறகு, மாஸாஜி, காக்கா ஷஹானே இருவருக்குமிடையே ஒரு பலத்த வாக்குவாதம் நடைபெற்றது. ஏதோ அந்த வாக்குவாதம், வானத்திலிருந்த கார்மேகங்களைத் துரத்தி விரட்டினாற்போலத் தோன்றியது; ஏனெனில், அன்றிரவு 11 மணிவரை மழை பெய்யாததால், அனைத்து கான்கிரீட் வேலையும் செவ்வனே நிறைவுற்றது.

மே 9ஆம் நாள், செய்தித்தாள் தலைப்புகளைப் பார்வையிடும் வேளையில், பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**மஹாத்மா காந்தி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்; ஷோலாப்பூர் கடுமையான கலவரத்தின் பிடியில் சிக்கியுள்ளது. ரங்கூனில் ஒரு சூறாவளிக் காற்று 1000 மக்களை பலி வாங்கி, 30000 மக்களின் வீடுகளை அழித்துவிட்டது.**"

பாபா, அப்போது இவ்வாறு வெளிப்படுத்தினார்: "**என்னுடைய முந்தைய ஓர் அவதார காலகட்டத்தில், நான் பத்து வருடங்கள் தொடர்ந்து ரங்கூனில் உணவு எதுவும் உண்ணாமல் ஏகாந்தவாசம் மேற்கொண்டேன். இப்போது, இங்கு நான் ஏகாந்தவாசம் தொடங்கவிருக்கும் தருவாயில், நான்கு திசைகளிலும் கலவரங்கள், வேலை நிறுத்தங்கள் மற்றும் குழப்பங்களாக உள்ளன. இது ஒன்றும் பெரிய அளவில் இல்லை; குழப்பம் மேலும் அதிகரிக்கும். ஆனால், இடையூறுகள் பரந்த அளவில் அதிகரித்தால், நான் எனது ஏகாந்தவாசத்தின் இடத்தை மாற்ற வேண்டியிருக்கும்.**"

டைகர் வேலியில் மெஹர் பாபாவின் ஏகாந்தவாசம் தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்தன.

1930, மே 15, வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு மெஹர் பாபா, டைகர் வேலி குகைக்குள் ஏகாந்தவாசத்தைத் தொடங்கினார். அதேவேளையில், பாபாவின் அறிவுறுத்தல்கள் படி, மெஹராபாத் மற்றும் நாசிக்கில் வாழ்ந்த சில குறிப்பிட்ட மண்டலியும் ஏகாந்தவாசம் மேற்கொண்டனர்.




காஷ்மீர் பயணம்

மெஹராபாத் (MEHERABAD), நாசிக் (NASIK), மும்பை (MUMBAI), பரோடா (BARODA), போபால் (BOPAL), ஜான்சி (JHANSI), ஆக்ரா (AGRA), டெல்லி (DELHI), லாஹூர் (LAHORE), ராவல்பிண்டி (RAWALPINDI), ஸ்ரீநகர் (SRINAGAR), உதம்பூர் (UDAMPUR), ஜம்மு (JAMMU), அமிர்தசரஸ் (AMRITSAR), ஸஹாரன்பூர் (SAHARANPUR), லக்னோ (LUCKNOW), ஜான்சி, போபால், இடர்ஸி (ITARSI), மன்மாட் (MANMAD), மெஹராபாத்.

ஏப்ரல் மாதத்தில் வெளியான மெஹர் மெஸேஜ் இதழில் தஸ்தூர் சில பாபா பக்தர்கள், இந்திய காங்கிரஸ் கட்சி நடத்தும் தேசிய போராட்டத்தில் பங்கெடுப்பதாகவும், அவரும் அதில் கலந்துகொள்ளப் போவதாகவும் தெரிவித்திருந்தார்.

பாபா அரசியலில் ஈடுபட விருப்பமில்லாமல் இவ்வாறு குறிப்பிட்டார்: **"நான் தஸ்தூரை அரசியலிலிருந்து விலகியிருக்க, பலமுறை எச்சரித்துவிட்டேன். ஆனால், எனக்கு வாக்குறுதி அளித்த பின்னரும், எனது விருப்பத்திற்கு எதிராக செய்கிறார். அவர் விருப்பப்படிச் செய்யட்டும்; எனக்கு அதைப் பற்றிய கவலையில்லை; அதற்காக அவர் வருந்துவார்."**

1930, மே 20ஆம் நாள், பாபா அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து, மண்டலியை அழைத்து இவ்வாறு கூறினார்: **"இன்றிலிருந்து நான் தீவிரமான ஏகாந்தவாசத்தைத் தொடங்கி, குகையிலிருந்து வெளிவர மாட்டேன். எனவே, பொழுது விடியும் முன்னர் உங்களுடைய அனைத்து பொருட்களையும் எடுத்துக்கொண்டு குடிலுக்குச் செல்லவேண்டும்."**

பாபா, அப்போது, அனைவரையும் முன்நின்று வழிநடத்திச் சென்றார். குகையிலிருந்து சற்று தொலைவில் அமைந்த குடில்களில் மண்டலிக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஒருவரும் குகைக்கு அருகில் செல்லக்கூடாது என்பது பாபாவின் கட்டளை.

மெஹர் பாபாவின் ஏகாந்தவாசம், தீவிரமாகத் தொடங்கிய நேரத்திலிருந்து, மக்கள் திடீரென மடை திறந்த வெள்ளம்போல, பாபாவின் தரிசனத்தை நாடி வந்தனர்; ஆனால், அவர்களை, குகையருகில் அணுகவிடாமல், மண்டலி தடுத்து நிறுத்தினர். இவ்வேளையில் 'மெஹர் பாபா, ஒரு குகைக்குள் தன்னை அடைத்து, வாசலை மூடி, தனது ஆன்மீக சக்திகளை வெளிப்படுத்திய பின்னரே குகையிலிருந்து வெளியே வருவார்' என்ற வதந்தி ஊரெல்லாம் பரவியது. இந்தப் பொய்ப்பிரச்சாரம் மக்களைத் திரள் திரளாக அங்கு வரச் செய்தது. குகையை நெருங்க விடாமல் மண்டலி தடுத்து நிறுத்திய வேளையில், அவர்கள், குகையை மட்டுமேனும் தூரத்திலிருந்து பார்க்க விருப்பம் தெரிவித்தனர். ஒரு கூட்டம் மலையின் மறுபக்கத்திலிருந்து ஏறி, குகையைப் பார்வையிட்டனர். இப்படி மக்கள் தினமும் கூட்டங்கூட்டமாக வந்தது மண்டலிக்குப் பெரும் சிரமமாக இருந்தது. பஞ்ச்கனி ஒரு சிறப்பான கோடைவாசஸ்தலம் ஆகையால், அதிக அளவில் பார்வையாளர்களும், புதுமண தம்பதிகளும் அங்கே நிரம்பி வழிந்தனர். இதன் விளைவாக, 'மெஹர் பாபா உயிரோடு சமாதி நிலையில் இருக்கும்' அந்தக் குகையைப் பார்க்க, பலர் ஆவலாய் இருந்தனர்.

மேலும், ஒவ்வோர் இரவும் பலத்த மழை பெய்ததால் நிலைமை மிகவும் மோசமாயிற்று.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, மெஹர் பாபா, மே 25ஆம் நாள், மெஹராபாத்திற்குத் திரும்பிச் செல்லும் விஷயத்தைப் பரிந்துரைத்தார்.

ஆறு நாட்களாக மேற்கொண்ட கடுமையான ஏகாந்தவாசத்திற்குப் பிறகு, மே 26ஆம் நாள் இரவு 12.30 மணிக்கு பாபா குகையிலிருந்து வெளியே வந்து, இரவோடு இரவாக மெஹராபாத்தை நோக்கி நடைபயணத்தைத் தொடங்கினார்.

பாபா, மண்டலியுடன் மெஹராபாத் வந்ததும், ஏகாந்தவாசத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. மெஹராஷ்ரம் அமைந்த இடம் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டது.

ஜூன் 1ஆம் நாளிலிருந்து, பாபா குறிப்பிட்ட சில மண்டலியுடன், மறுபடியும் ஏகாந்தவாசத்தைத் தொடரப் போவதாக அறிவித்தார்.

மறுநாள், அந்திப்பொழுதில் பாபா, சிறுவர்களுடன் விறுவிறுப்பாக விளையாடிக் கொண்டிருந்த வேளையில், நஸர்வான் அங்கு வந்தார். பாபா, விளையாடுவதை நிறுத்திவிட்டு அவருடன் அரை மணிநேரம், அப்போது இந்தியாவில் நிலவும் சட்ட மறுப்பு இயக்கம், குழப்பங்கள், போராட்டங்கள் பற்றி விளக்கிக் கூறினார். அனைவரும் பாபாவை சூழ்ந்துகொண்டு உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தனர், **"நீங்கள் அரசியல் நடவடிக்கைகளில் பெரிய அளவில் ஈடுபட்டிருந்தாலும், என்னைப் பார்க்க வந்தது மட்டுமின்றி, உங்களுக்கு என் மீதான அன்பை நினைத்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்"** என்று பாபா நஸர்வானிடம் குறிப்பிட்டார். இந்திய சுதந்திர போராட்ட இயக்கங்களைக் குறித்து, பாபா கீழ்வரும் தீர்க்கதரிசன விமர்சனங்களை எடுத்துக்கூறினார்:

**இவற்றின் திறவுகோல் என்னிடம் உள்ளது, இதைக் குறித்து எவருக்கும் எந்த அறிவும் கிடையாது; மேலும் எதிர் காலத்தில் நிகழவிருக்கும் அனைத்திற்கும் இதுவே காரணம். எனது பார்வையில் இந்தியர், ஆங்கிலேயர், இந்து, முஸ்லிம் அனைவரும் சமம்; நான் அனைவருக்கும் உரியவன்.**

**ஒவ்வொருவரிலும் நான் மட்டுமே இருக்கிறேன். ஒரு வகையில் ஆங்கிலேயர்கள் மிகவும் நல்லவர்கள்; அவர்களும் இந்திய நாட்டுக்குப் பெரும் சேவை புரிகிறார்கள். நீங்கள் இதைப் புரிந்துகொள்ள மாட்டீர்கள்.**

**இப்போதைய இராஜப்பிரதிநிதி லார்ட் இர்வின், மஹாத்மா காந்தியைப் போல் ஒரு நல்ல மனிதர். இருவரும், எதிர் திசையில் இருப்பது போலத் தோன்றினாலும், இந்திய தேசத்திற்காக அயராது சேவை புரிகிறார்கள். இருவரும், என்னுடன் பழங்காலத்திலிருந்தே ஆன்மீகத் தொடர்பில் இருப்பவர்கள், ஏனெனில் இருவரும், ஒருவர் ஆங்கிலேயராகவும் இன்னொருவர் இந்தியராக இப்போது இருந்தாலும், அவர்கள் சிவாஜியின் காலத்தில் வாழ்ந்தவர்கள். ஆனால், இது இப்போது முக்கியமல்ல.**

**பழங்காலத்திலிருந்தே, இந்தியா, ஆன்மீகத்தின் பிறப்பிடமாக இருந்து வருகிறது. எனவே, இந்தியாவில் பிறவி எடுப்பது என்பது, ஒருவர் ஆன்மீக இலக்கிற்கு அருகில் இருக்கும் அளவுக்கு, ஆன்மீக கௌரவத்திற்குரிய விஷயமாகும். அமெரிக்கா, ஐரோப்பா, ஆஃப்ரிக்கா**

போன்ற கண்டங்களில் பிறவி எடுக்கும் மேன்மையான மனிதர்கள், இப்பிறவியில் சேகரிக்கும் உன்னதமான மனப்படிவங்களின் விளைவாக, அடுத்த பிறவியில் இந்தியாவில் பிறப்பார்கள். அதுபோல, தற்பெருமை, தவறான பெருமை மற்றும் அகங்காரம் பிடித்த மக்கள் இந்தியாவில் இப்பிறவியில் சேகரிக்கும் மட்டமான மனப்படிவங்களின் விளைவாக ஐரோப்பா, அமெரிக்கா போன்ற ஆன்மீகத்தில் பின்தங்கிய கண்டங்களில் பிறவி எடுப்பார்கள்.

உலகம் முழுவதிலும், குறிப்பாக இந்தியாவில், பெரும் கிளர்ச்சிகள் உருவாக உள்ளன. இந்தியாவில், ஒரு புறம் இந்தியர் மற்றும் ஆங்கிலேயர்களுக்கும், மறுபுறம் இந்து, முஸ்லிம்கள் இவர்களிடையே நிலவும் பெரும் பதற்றத்தின் விளைவாக, பயங்கரமான இரத்தக்களரி மற்றும் படுகொலைகள் நிகழும். இந்துக்கள் முஸ்லிம்களையும், முஸ்லிம்கள் இந்துக்களையும், ஆங்கிலேயர்கள் இருதரப்பிரையும் கொன்று குவிப்பார்கள்! இந்தியாவில் இரத்தக் காட்டாறு பெருக்கெடுத்தோடும், எங்கும் பிணங்களாக நிரம்பியிருக்கும்! இந்தியாவில் உள்நாட்டுப் போர் வெடிக்கும்; மேலும் அனைத்து கட்சிகளும் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ளும். எங்கும் கலகமும், கலக்கங்களும் தலைவிரித்தாடும். எங்கிருந்தோ திடீரெனத் தோன்றும் பிறரின் தலையீட்டால், சுதந்திரத்திற்காக ஒலிக்கும் இந்த அழுகை மற்றும் கூச்சலில் இருந்து ஒரு புதிய சூழ்நிலை உருவாகும்.

இந்த வன்முறைகளுக்கு மத்தியில், ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, ஜெர்மனி போன்ற மேற்கத்திய நாடுகளுக்கிடையே பெரும் போர் உருவாகி எங்கும் பரவும். இத்தகைய உலக குழப்பங்களுக்கு மத்தியில் அரசியல் தலைவர்கள் என்ன செய்வது என்றே புரியாமல் தவிப்பார்கள். இந்தக் குழப்பமான சூழ்நிலையிலிருந்து விடுபட வழி தெரியாமல் தவிக்கும் மனிதகுலத்தை, அவதார புருஷர் அமைதி மற்றும் செழிப்பான பாதையில், நித்திய, நிரந்தர ஆனந்தத்தை நோக்கி வழிநடத்திச் செல்வார்.

ஆனால், அதற்கு இன்னும் நேரம் எடுக்கும்; அதற்கு முன்னதாக உலகம் முழுவதும் பெரும் கிளர்ச்சிகள் உருவாக வேண்டும். உலகம் ஆன்மீகத்தை நோக்கி, அதன் முகத்தைத் திருப்புவதற்கு முன்னால், இத்தகைய இடையூறுகள், சீர்குலைவு, மற்றும் அமைதியின்மை அனைத்தும் மிகவும் அவசியம். இதற்காகத்தான் நான் ஒரு சில நாட்களில் ஏகாந்தவாசம் தொடங்க உள்ளேன்.

அதனால்தான் நான் திரும்பத் திரும்பக் கூறுகிறேன், குறிப்பாக என்னுடனும், இதர குருநாதர்களுடன் இருக்கும் அனைவருக்கும் நல்ல காலங்கள் வரும் என்று!

என்னைப் பொறுத்தவரையில், இந்த அனைத்து அரசியல் நடவடிக்கைகள், இந்திய தேசம் முழுவதும் தொடங்கியுள்ள பரவலான

**கிளர்ச்சி, இந்த தேசத்தைத் தலைகீழாக மாற்றுவது, இவையெல்லாம் கிட்டிப்புள் விளையாடுவது போன்றது. இந்த விளையாட்டில் இருக்கும் பரபரப்பு மற்றும் உற்சாகத்தில்தான் எனக்கு ஆர்வம் அதிகம் ஏனெனில், அந்நேரத்தில்தான் எனது ஆன்மீகப் பணி உச்சக்கட்டத்தை எட்டுவது மட்டுமின்றி, அது உள்பணிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இத்தகைய சலசலப்புமிக்க, தாறுமாறான வேளைகளில்தான் ஆங்கிலேயர்கள் அவர்களின் நாட்டைவிட்டு இந்தியாவுக்கும், இந்தியர்கள் இங்கிலாந்துக்கும் இடம்பெயர்வார்கள். இவை அனைத்தும் நான் புரியும் பணியின் விளைவு. ஒவ்வொரு நாட்டிலும் என்னுடைய முகவர்கள் இருந்து, எனது விருப்பத்திற்கு இணங்க பணிபுரிந்து, உள்ளளவில் இறுதி இலக்கை நோக்கிப் பணிபுரிகிறார்கள்.**

**நான் காற்றாடி பட்டம் பறக்கவிடுவது, கோலி ஆடுவது போன்ற விளையாட்டுகள் அனைத்தும் எனது பணியின் வழிமுறைகள்; என்னுடைய ஒவ்வொரு செயலும் இணைப்பு செய்திகளை, இங்கிருந்து அங்கும், எங்கும் எடுத்துச் செல்வதைக் குறிக்கும். நான் அடியெடுத்து வைத்து நடப்பது அல்லது வேடிக்கையாகப் பேசி பொழுது போக்குவது - இவற்றின் வழியாக நான் பணிபுரிவது உண்மையில் எவரும் புரிந்துகொள்ள முடியாத விஷயம்.**

அடுத்த நாள், மேலும் பல விளையாட்டுகள் விளையாடும் வேளையில் மெஹராபாத், பண்டிகை நாள் போலக் குதூகலமாகக் காட்சியளித்தது. அன்று பாபா, அனைவருக்கும் மதிய, இரவு உணவைத் தனது கைகளால் வழங்கினார். ஆதி சீனியர், குல்மாய், மெஹரா, மணி, கோர்ஷெத் அனைவரையும் பாபா தனியாக அழைத்துப் பேசினார். "**உங்கள் கடமைகளைச் செவ்வனே செய்து, எனது கட்டளைகளைத் தவறாமல் கடைப்பிடியுங்கள்.**" மேலும் பாபா அறிவுறுத்தினார், "**கவலைப் படாதீர்கள், எந்நேரமும் என்னையே நினைவில் கொள்ளுங்கள்.**" பின்னர் அனைவரும் திரும்பி நாசிக் சென்றனர்.

1930, ஜூன் 1ஆம் நாள், நூற்றுக்கும் அதிகமான மக்கள், பாபா ஏகாந்தவாசம் இருக்கப் போவதைக் கேள்விப்பட்டு, தரிசனத்திற்காக வந்தனர். அன்றும் பாபா அனைவருக்கும் அவரது கைகளால் சிறப்பான உணவு வழங்கினார்.

இரவு 10.30 மணிக்கு பாபா, நீர்த்தொட்டியின் மேல் அமைக்கப்பட்ட அறைகளில் மூன்றாவது அறையில் சென்று ஓய்வெடுத்தார். அலி அக்பர், துக்காராம், கலிங்கட் மூவரும் அங்கேயே தனித்தனி அறைகளில் தங்கினர்.

ஜூன் 13ஆம் நாள், 13 நாட்கள் உபவாசத்திற்குப் பிறகு, பாபா, ராவ்ஸாஹேப், பைதூல் இருவருடன் தனியாக உரையாடிக் கொண்டிருந்த வேளையில், காஷ்மீருக்கு மறுபடியும் செல்ல வேண்டிய கட்டாயத்தை எடுத்துக் கூறினார். ஆகா அலியை குவெட்டாவிலிருந்து திரும்ப அழைத்து வர முடியாததால், இப்போது ஸ்ரீநகருக்குச் செல்ல வேண்டியதன் அவசியத்தை

வெளியே எவருக்கும் தெரியப்படுத்தாமல், இரகசியமாக வைத்துக்கொள்ளுமாறு இருவரிடமும் கேட்டுக்கொண்டார்.

1930, ஜூன் 15ஆம் நாள் மாலை 6 மணியளவில் பாபா, சாஞ்சி, ராவ்ஸாஹேப், அலி அக்பர் மற்றும் விஷ்ணுவுடன், இரண்டாவது முறையாக காஷ்மீருக்கு ரயிலில் புறப்பட்டுச் சென்றார். நாசிக், மும்பை வழியாக டெல்லிக்குச் சென்று மஹாராஜா ஹோட்டலில் தங்கினர்.

ஜூன் 19ஆம் நாள் அனைவரும் ஸ்ரீநகர் வழியாக முர்ரீ (ராவல்பிண்டி மாகாணத்தில் அமைந்த மலைப்பிரதேசம்) சென்று, இரண்டு நாட்கள் அங்கே தங்கியிருந்து மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தனர். துளசி எனும் சிறுவனை லாஹூரில் கண்டுபிடித்து ஸ்ரீநகருக்கு உடன் அழைத்துச் சென்றனர்.

ஸ்ரீநகர் செல்லும் வழியில் டோமல் கிராமத்தில், பஞ்சாபி ஒருவர் பாபாவை அணுகி, அவர் பகவத்கீதையை நம்புகிறாரா என்று கேட்டார். பாபா அவருக்கு ஒரு சுருக்கமான பதிலை அளித்தார், "**அதை நம்புவது மட்டுமின்றி, ஒவ்வொரு கணமும் நான் அதை அனுபவப்பூர்வமாக உணர்கிறேன்! கடவுளைக் காணவேண்டும், கண்டு, உண்மையில் அனுபவிக்க வேண்டும். அறிவுபூர்வமாகப் புரிந்துகொள்வது மட்டும் போதாது. நீங்கள் இந்து சாஸ்திரங்களை வாழ்நாள் முழுவதும் படிக்கலாம், ஆனால், கடவுளைப் பார்க்கவோ, அவரை உணரவோ அல்லது அவரை அறிந்து கொள்ளவோ உங்களுக்கு ஆர்வமும், ஏக்கமும் இல்லை என்றால், அது உங்களை, கடவுளை நோக்கி ஓர் அங்குலம் கூட எடுத்துச் செல்லாது.**"

ஜூன் 23 ஸ்ரீநகர் வந்த அடுத்த நாள், பாபா, விஷ்ணு, ராவ்ஸாஹேப் இருவரையும் ஹர்வான் கிராமத்திற்கு அனுப்பி 'பண்டித்' எனும் சிறுவனை அழைத்து வரக் கூறினார். சிறுவன் பண்டித்தை அழைத்து வந்ததும், பாபா, அவனை சிறிது நேரம் சந்தித்து, தியானம் செய்வதைக் குறித்த அறிவுறுத்தல்களை வழங்கி, பின்னர் அவனை உடனே ஹர்வானுக்குத் திருப்பி அனுப்பி வைத்தார். அந்த சிறுவனோடு இருந்த பாபாவின் பணி இவ்வளவு வேகமாக முடிந்ததை எண்ணி மண்டலி ஆச்சரியமடைந்தனர்.

காலமும் இதைக் கண்டு குழப்பமடைந்தது: "இந்தத் தொடர்பின் முக்கியத்துவம் ஒரு மர்மமாகவே உள்ளது," என்று குறிப்பிட்டது, "பண்டித் எனும் சிறுவனைக் காண, மெஹர் பாபா ஆயிரமாயிரம் மைல்கள் கடந்து வந்துள்ளார், ஆனால், அவனை சந்தித்ததோ ஒரு சில நிமிடங்கள் மட்டுமே! வெளிப்படையாக, இது அவரது உள்பணிக்குப் போதுமானதாக இருந்தது."

மெஹராஷ்ரம் நாட்களிலிருந்து சிறுவர்களுடன் பாபாவின் பணி, தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தது. அவதார புருஷரின் உள்பணியின் விளைவுகளை, காலம் எவ்விதத்திலும் ஆழங்காண முடியாது எனும் போது, ஆகா அலி, அலி அக்பர், சோட்டா பாபா, பண்டித், துளசி அல்லது இதர சிறுவர்களுடன் பாபா குறிப்பாக என்ன பணியில் ஈடுபட்டார் என்பதை,

நிச்சயமாக, ஒருவராலும் அறிந்துகொள்ள முடியாது. ஆனால், பாபா இதைக் குறித்து கூறியதற்கிணங்க, அவருடைய ஒவ்வொரு உள்பணிக்கும் ஊடகங்கள் தேவைப்படுகின்றன, மேலும் அவ்வூடகங்கள் வழியாக அவரது பணி எளிதாக முடிந்துவிடும். இந்த விஷயத்தில், பாபா எங்குச் சென்றாலும் அவர் தொடர்பு கொண்ட சிறுவர்கள், அந்த நேரத்தில் அவர் ஈடுபட்டிருந்த உள்பணிக்கான ஊடகமாகத் திகழ்ந்தார்கள். இந்த ஒரே காரணத்திற்காகத்தான், பண்டித் எனும் சிறுவனைத் தொடர்பு கொள்வதற்காக, பாபா, இவ்வளவு தூரம் பயணம் செய்து ஸ்ரீநகர் சென்றார்.

'**அவதார புருஷரின் ஒவ்வொரு செயலும் அவரது உள்பணியுடன் தொடர்புடையது**' என்று ஒரு மாதத்திற்கு முன்னால், மெஹராபாத்தில் பாபா கிட்டி-புள் விளையாடும் போது குறிப்பிட்டார்.

ஜூன் 28ஆம் நாள் காலையில், பாபா மண்டலி மற்றும் சிறுவர்களுடன் ஸ்ரீநகரிலிருந்து, ஜம்மு நகருக்குக் காரில் புறப்பட்டுச் சென்றார்.

பாபா, ஓரிரு நாட்களில், அவரது பணி நிறைவடைந்ததும், உடனிருந்த சிறுவர்களை அவரவர் இடங்களுக்குத் திருப்பி அனுப்பத் திட்டமிட்டார்.

லாஹூரிலிருந்து ரயிலில் அம்ரித்ஸர் பயணம் செய்யும் வேளையில், முஸ்லிம் பெரியவர் ஒருவர் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். அவர் பாபாவை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அதேவேளையில், பாபா அவரை நோக்கிக் கற்பலகையில், "**எனது நண்பரே, எங்கும் ஆனந்தம் ஒன்றைத் தவிர வேறு எதுவுமில்லை**" என்று எடுத்துரைத்தார்.

"அது மதிப்பிற்குரிய உங்களுக்காக இருக்கலாம், எங்களுக்காக அல்ல" என்று அந்தப் பெரியவர் பதிலளித்தார்.

பாபா உடனே, "**நீங்கள் அதைப் பார்க்க முடியாததால், அவ்வாறு முறையிடுகிறீர்கள், ஆனால், நான் உங்களுக்குக் கூறுகிறேன், எங்கும் பேரானந்தத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. நான் அதைப் பார்க்கிறேன்; உணர்வுபூர்வமாக அனுபவிக்கிறேன்**" என்று கூறினார்.

அப்போது அந்தப் பெரியவர், "உலகில் துன்பம், துயரம், மற்றும் முரண்பாடுகளைத் தவிர, வேறு எதையும் நான் அனுபவித்ததில்லை. நான் ஒருபோதும் மகிழ்ச்சியை அறிந்ததில்லை, என் வாழ்க்கையில் மிகவும் வெறுப்பாக இருக்கிறேன்" என்றார்.

"**இதற்குக் காரணம் அறியாமை**" பாபா விளக்கமளித்தார், "**உண்மையான பேரின்பத்தின் அனுபவம் உங்களுக்கு இல்லை. நீங்கள் உண்மைப்பொருளை இழந்து, நிழலுக்குப் பின்னால் அலைகிறீர்கள். சாப்பிடுவது, பணம் சம்பாதிப்பது, இதர தவறான, தற்காலிகமான சுகபோகங்கள் அனைத்தையும் உண்மையானது எனத் தவறாகப் புரிந்து கொள்கிறீர்கள். அது மட்டுமல்லாமல், நித்திய, நிரந்தரமான பேரின்பத்திலிருந்து, அவை உங்களை மேலும் விலகிச் செல்ல வழிவகுக்கும்.**"

"ஆனால், அந்தப் பேரின்பத்தை நான் எங்குக் காணமுடியும்?" அவர் வினவினார். "மேலும், ஒருவர் அதை எவ்வாறு கண்டுகொள்வார்?"

**"சரியாகக் கேட்டீர்கள், அதுதான் முக்கியமான விஷயம்!"** என்று வியப்பான முறையில் பாபா தெரிவித்தார். **"இப்போதுதான் நீங்கள் உண்மையான ஒன்றைக் கேட்கிறீர்கள், உண்மையை அறிய விரும்புகிறீர்கள். இந்தப் பேரின்பத்தைக் கண்டுகொள்வது மட்டுமே உங்கள் விருப்பமாக இருக்கட்டும்; அதாவது உண்மைப்பொருளை, இறைவனைக் கண்டுகொள்வது! இடைவிடாமல், தொடர்ந்து இந்த ஏக்கத்தைக் கொண்டிருப்பீர்களேயானால், அதை நீங்கள் அடையப்பெறுவீர்கள் என்பது நிச்சயம். அதை அடைவதற்கான பாதையை நீங்கள் காண்பீர்கள், எவரேனும் அதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் உங்களுக்குக் காண்பிப்பார்கள்."**

"நீங்கள் அதை எனக்குக் காண்பிப்பீர்களா?" அந்தப் பெரியவர் வேண்டினார். "எனக்கு நீங்கள் உதவுவீர்களா?"

**"நிச்சயமாக, மிக்க மகிழ்ச்சியுடன் செய்வேன். அதைத்தான் நான் செய்ய விரும்புகிறேன். அதுவே எனது பணி, அதுவே எனது குறிக்கோள். நான் சொல்வது போல நீங்கள் செய்தால் மட்டுமே, பேரின்பம் என்றால் என்ன என்பதை நான் உங்களுக்குக் காண்பிப்பேன்; மேலும், உங்களுக்கு மிகவும் கடினமான ஒன்றைச் செய்ய நான் சொல்ல மாட்டேன். நீங்கள் அதை இதயபூர்வமாக எடுத்துக் கொண்டால், அது மிகவும் எளிதானது. மீதமுள்ள அனைத்தையும் நான் பார்த்துக் கொள்வேன்."**

**"ஒவ்வொரு நாளும், அதிகாலையில் இதற்காக ஐந்தே நிமிடங்கள் போதுமானது. தனியாக ஓர் இடத்தை நாடுங்கள்; தியானத்தில் அமர்ந்து, இந்த சிந்தனையை மனதில் ஓடவிட முயற்சி செய்யுங்கள், 'கடவுள் ஒன்றே; அவர் அனைத்து இடங்களிலும் இருக்கிறார், அவரைத் தவிர வேறு எதுவும் இல்லை.' இதை, தினமும் ஐந்து நிமிடங்களுக்கு மட்டும் செய்யுங்கள். அனுபவப்பூர்வமாக நீங்கள் எதையாவது அடைவதை நான் பார்த்துக்கொள்வேன். நீங்கள் ஒரு பேரொளியைக் காண்பீர்கள்; அது வேண்டிய மன திருப்தியை அளிக்கும் வேளையில், ஆன்மீகப் பாதையில் பயணத்தைத் தொடர்வீர்கள்."**

அந்தப் பெரியவர் அவரது துயரத்திலிருந்து விடுபட்டவர் போல வெளியளவில் தோற்றமளித்தார்; மேலும், மெஹர் பாபாவை சந்தித்து அவருடைய ஆலோசனையைக் கேட்டு, மனமார ஏற்று, மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். பாபாவின் எளிமையான விளக்கம், வாழ்க்கை வாழ்வதில் அர்த்தம் உள்ளது என்ற உறுதியான நம்பிக்கையைத் தந்தது. அவருடைய வாழ்க்கையில் ஒரு புத்துணர்வு பெற்ற உற்சாகம், வார்த்தைகளில் நேரடியாக வெளிப்படுத்தப்படவில்லை என்றாலும், உள்ளளவில் புலப்பட்டது.

அந்தப் பெரியவர் பலவிதமான ஆன்மீகத் துறவறத்தை மேற்கொண்டு, ஒரு குருநாதரைத் தேடி அலைந்தார்; ஆனால், பல ஆண்டுகளுக்குப் பின்னர்

அவர் உற்சாகத்தை இழந்து, மனச்சோர்வடைந்தார் என்பதை மண்டலி, பின்பு தெரிந்து கொண்டனர். மெஹர் பாபாவை ரயிலில் சந்தித்த அவ்வேளையில் அவர் தற்கொலை செய்துகொள்ளும் நோக்கத்தில் இருந்தார். பாபா அந்தப் பெரியவரின் வாழ்வைக் காப்பாற்றியது மட்டுமின்றி, தொடர்ந்து கடவுளைத் தேடும் வேட்கையைக் கிளறிவிட்டு ஊக்கப்படுத்தினார். அந்தப் பெரியவர் வேறு எவருமல்ல, இந்தியாவின் புகழ்பெற்ற கவிஞர் முஹமது இக்பால் அவர்களே என்பதை மண்டலி தெரிந்துகொண்டனர்.

ஜூலை 2ஆம் நாள், பாபா மண்டலியுடன் மெஹராபாத் வந்து சேர்ந்ததும், விஷ்ணு, ராவ்ஸாஹேப் இருவரையும் மறுபடியும் ஏகாந்தவாசத்தைத் தொடரக் கூறி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மெஹராபாத்தில் அனைத்தும் சிறப்பாக நடந்த விபரத்தை பெண்டு, பாபாவிற்குத் தெரிவித்தார்.

ஜூலை 7ஆம் நாள், பாபா, ஒரு சமுத்திரத்தை மேற்கோள் காட்டி, மண்டலிக்கு 'தேவதைகள்' அல்லது 'தேவதூதர்'களைப் பற்றிய சொற்பொழிவை வழங்கினார்:

**எல்லையில்லா சமுத்திரத்தில், தானாகவே தோன்றும் சலன சித்தத்தின் காரணமாக, உருவாகும் அலைகளின் துளிகளில் ஒரு சில துளிகள், இதர துளிகளைப் போல, பரிணாம வளர்ச்சியின் ஏழு கட்டங்கள் வழியாக பயணிக்காமல், உடனடியாக தேவதைகள் அல்லது தேவதூதர்களாக உருவெடுக்கும். இவ்வாறு உருவெடுத்த தேவதைகள், தேவதூதர்கள் காலங்காலமாக, யுகம் யுகமாக ஒரே நிலையில் இருந்து கொண்டிருக்கும். அவை சக்திமிக்க சூட்சும உருவில், சூட்சும தளங்களின் இரண்டாவது வானுலகில் பிரவேசிக்கும். அவை மிக உயர்ந்த இன்ப நிலையில் இருந்தாலும், தன்னுணர்வு இல்லாமல் மனித உருவத்தை நாடி, துடி துடித்துத் தவிக்கும். ஆனால், (முழுமையான) உணர்வற்ற நிலையில் அவை அடையும் இந்தப் பேரின்பத்தால் எந்த பயனும் இல்லை.**

**ஒரு தேவதை அல்லது தேவதூதன் தனது உண்மையான இறைநிலையை அடைய, மனித பிறவி எடுப்பது என்பது மிக மிக அரிது, ஆனால், அப்படி நிகழ்வதாயின், லட்சக்கணக்கான வருடங்களில் ஒரு முறை நிகழும். ஏன்? இதுவரை, இவ்வளவு நீண்ட காலமாக, சூட்சும உலகில் பிரவேசித்தும், சாதாரண மனித உணர்வை அடைய முடியாத ஒரே காரணத்திற்காக. மேலும், ஒரு தேவதை அல்லது தேவதூதன், மனிதபிறவி எடுக்கும் தருவாயில் மனிதனாக மறுபிறவிகள் எடுக்க வேண்டிய தேவை இராது; முதல் மனித பிறவியிலேயே இறைநிலையை அடையும்! இந்தத் தேவதை அல்லது தேவதூதர்கள் ஒட்டுமொத்தமாக பூமியில் பிறவி எடுக்கமாட்டார்கள், ஒரே நேரத்தில் ஒருவர் மட்டுமே அவ்வாறு மனித பிறவி எடுத்து இறைநிலையை அடைவார்.**

**எனவே, ஆன்மீகக் கண்ணோட்டத்தில், லட்சக்கணக்கான ஆண்டுகள் வானுலகில் பிரவேசித்து, பேரின்ப நிலையை அனுபவித்தாலும், மனிதன் தேவதூதர்களை விட உயர்ந்தவன், ஏனெனில், தேவதூதர்கள் இறைநிலையை அடைய மனித பிறவி எடுத்தாக வேண்டும்.**

1930, ஜூலை 2ஆம் நாள், பாபா, சாஞ்சியை, ஏகாந்தவாசத்திற்குப் பொருத்தமான இடத்தைத் தேடும் பணியில், சென்னைக்கு அனுப்பி வைத்தார். நான்கு நாட்களில் திரும்பி வந்தவரை உடனே அவசர வேலையாக, பூனாவுக்கு அனுப்பிவைத்து, மறுநாள் திரும்பி வரும்படியாகக் கட்டளையிட்டார். நீண்ட தூரம் பயணம் செய்து, களைத்துப் போன சாஞ்சி, பூனாவில் அவரது பணியைத் திருப்திகரமாக முடிக்க முடியவில்லை என்று தெரிவித்ததும் பாபா சீற்றமடைந்து கண்டித்தார். "நான் என்ன செய்திருக்க முடியும்? சில விஷயங்களை நான் செய்ய முடியவில்லை; என்னிடம் குறைபாடுகள், பலவீனம் மற்றும் தவறுகள் உள்ளன. நான் உங்களைத் திருப்திபடுத்த முடியவில்லை. என்னால் நீங்கள் சிரமப்படுகிறீர்கள், எனவே நான் உங்களை விட்டுச் செல்வதே நல்லது" என்று சாஞ்சி மன்றாடினார்.

ஜூலை 8ஆம் நாள், சாஞ்சியை சமாதானப்படுத்த பாபா ஏறக்குறைய இரண்டு மணி நேரம் விளக்கமளித்தார்:

**இந்த எண்ணங்களை மறந்துவிடுங்கள்! என்னுடன் இருந்து, நான் சொல்வதை முழு கவனத்துடன் கேட்டு செயல்பட வேண்டும். ஒரு குருநாதருக்கு, சுய அர்ப்பணம் செய்வதன் மூலம், ஒருவரின் மிக மோசமான பாவங்கள் அப்புறப்படுத்தப்படுகின்றன. 24 மணி நேரமும் மோசமான எண்ணங்கள் உங்கள் மனதில் அலைபாயலாம், ஆனால், என்னுடன் இருந்து நான் சொல்வதை மட்டுமே செய்யுங்கள். ஒரு சத்குருவின் உலையின் நெருப்பானது, எல்லாவற்றையும் எரித்து சாம்பலாக்குகிறது. ஆகையால், உங்கள் மனதில் மிக மோசமான சிந்தனைகள் வந்தாலும், என்னை விட்டுச் செல்வதால் எந்த பயனும் இல்லை. நீங்கள் என்னுடன் ஓர் ஆழமான தொடர்பை வைத்துள்ளீர்கள். ஆகையால், அந்த மிகவும் மோசமான எண்ணம் வரட்டும்; வந்தால்கூட என்னுடன் இருந்து நான் சொல்வதையே கேளுங்கள். அனைத்து எண்ணங்களும் எனது அன்பின் நெருப்பில் எரிந்து சாம்பலாகிவிடும்.**

ஜூலை 10ஆம் நாள், மெஹர் பாபாவின் ஐந்தாவது ஆண்டு மௌன நிறைவுநாள் அனுசரிக்கப்பட்டது. பாபா, மண்டலி மற்றும் அக்கம் பக்கமுள்ள பக்தர்களை மேல்மலையில் சந்திக்க அனுமதித்தார். மண்டலி பாபாவின் பாதங்களைக் கழுவி வணங்கினர்; பெண்டு ஆரத்தியை நிகழ்த்தினார். பாபா அனைவருக்கும் பிரசாதம் வழங்கி, நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

பெர்ஸியாவுக்குச் சென்ற பைதூலிடமிருந்து, அவர் ஆகா அலியுடன் இந்தியா புறப்பட்டு விட்டதாக ஒரு நல்ல செய்தியுடன் தொலைத்தந்தி வந்தது.

இது பாபா, '**பண்டித் எனும் சிறுவனை ஐந்து நிமிடம் காஷ்மீரில் சந்தித்ததின் விளைவு**' என்று குறிப்பிட்டார்.

அதற்குப் பிறகு, பாபா, நாசிக் சென்று ஒரு மாதம் அங்கு தங்கியிருந்தார். ஆண், பெண் மண்டலி மற்றும் நெருங்கியவர்களை, தேவைக்கு மட்டும் அவ்வப்போது சந்தித்தார்.

ஜூலை 24ஆம் நாள், அயர்லாந்த் நாட்டைச் சார்ந்த 'கேரிக் கவுண்டஸ் இலன் ரோஸ்மாண்ட் பட்லர்' (COUNTESS OF CARRICK, IRELAND, ELLEN ROSAMOND BUTTLER), வயது 60, பாபாவை சந்திக்க வந்தபோது, பாபா விதிவிலக்களித்து அவரை சந்தித்தார். தனது வாழ்நாள் முழுவதும் இறை சிந்தனையில் இருந்த கவுண்டஸ், டைம்ஸ் ஆப் இந்தியா செய்தித்தாளில் வெளிவந்த, மெஹர் பாபாவைப் பற்றிய கட்டுரையைப் படிக்க நேர்ந்தது. சில மாதங்களாக, இந்தியாவில் பயணம் மேற்கொண்ட கவுண்டஸ், மெஹர் பாபாவை சந்திக்கும் ஆவலுடன் நாசிக் வந்தார். 'இறைநிலை' மற்றும் 'ஆன்மீகப் பாதை'யைக் குறித்து, பாபா அளித்த விளக்கம், அவரை வெகுவாகக் கவர்ந்தது.

அன்றிரவு அவர் கியாஸ் மன்ஸிலில் தங்கிவிட்டு, அடுத்த நாள் புறப்பட்டுச் சென்றார். பாபாவுடன் ரோஸ்மாண்ட்டின் சந்திப்பு குறுகியதாக இருந்தாலும், அவர் இங்கிலாந்து சென்ற பின்பு மெஹராவின் சகோதரி ஃபிரீனிக்கு இவ்வாறு கடிதம் எழுதியிருந்தார்:

நான் எதையும் வார்த்தைகளால் விவரிக்க இயலாது, அது முற்றிலும் முடியாதது; புனிதமான ஸ்ரீ பாபாவுடன் இருந்த, அந்தக் குறுகிய நேரத்தின் அர்த்தத்தை, நான் தெளிவாகப் புரிந்து கொள்ளாதபோது, எதிர்காலத்தில் அதன் தாக்கம் என்ன என்பதையும் நானறியேன். ஆனால், என்னுடைய அனுபவம், மிக்க மகத்தானது என்பதை நான் அறிவேன்; என்னால் ஜீரணிக்க முடியாத அளவுக்கு, உன்னதமான ஓர் அனுபவம்; அதை வார்த்தைகளால் விளக்குவது சாத்தியமற்றது. மேலும், என்னுடைய இதயபூர்வமான நன்றியுணர்வையும், எனது பணிவான வணக்கத்தையும், அந்தப் புனிதமான பாபாவிற்கு நீங்கள் எனது சார்பில் தெரிவிப்பீர்களாயின், அவர் உண்மையில் அதைப் புரிந்துகொள்வார் என்பதையும் நானறிவேன்.

ஆகஸ்ட் 3ஆம் நாள், மெஹர் பாபா நல்ல மனநிலையில் காணப்பட்டார்; மண்டலி மற்றும் சிறுவர்களோடு கிரிக்கெட், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் மும்முரமாக இருந்தார். விளையாடும் வேளைகளில் அவர் ஈடுபடும் ஆன்மீக உள்பணிகளைப் பொறுத்து, அவருடைய உடல்நிலையில் மாற்றங்கள் ஏற்படும். இம்முறை பாபாவின் உடலில் பல கொப்புளங்கள் வந்து அதீத வேதனையைத் தந்தது. ஆகஸ்ட் 5 அன்று, மும்பையிலிருந்து குறிப்பாக டாக்டர் நீலு ஒரு ஊசி மருந்தை வழங்குவதற்காக அழைக்கப்பட்டார்; இது, டாக்டர் நீலு, அவரது மருத்துவ பட்டப்படிப்பை முடிப்பதற்கு முன்னால், சேவை செய்வதற்காக பாபா வழங்கிய ஒரு வாய்ப்பு என்றே கூறலாம். ஊசி மருந்து

போடும் வேளையில், மர்மமான முறையில் தோன்றிய தனது வியாதியின் முக்கியத்துவத்தைப் பற்றி பாபா விளக்கினார்.

**இந்தக் கொப்புளங்கள் பல வகையானவை - ஒன்று எரிச்சலூட்டுவது, மற்றொன்று அரிப்பைத் தருவது; மேலும் ஒன்று சீழால் நிரம்பி இருக்கும்; ஒன்று சிறிதாகவும், மற்றொன்று பெரிதாகவும் இருக்கும். இவை அனைத்தும் வித்தியாசமாகவும், விசித்திரமாகவும் இருப்பதன் காரணம் என்ன? ஒவ்வொரு கொப்புளமும் ஒரு குறிப்பிட்ட நாடு அல்லது கண்டத்தைக் குறிக்கும் என்பதுதான் இதன் விளக்கம். உதாரணமாக, எனது ஆசன வாயிலில் இருக்கும் கொப்புளம் இந்திய தேசத்தையும், பின்புறம் பிட்டத்தில் இருப்பது பெர்ஸியாவையும் குறிக்கும். இப்படி, பல கொப்புளங்கள் அந்தந்த தேசம் அல்லது கண்டத்தின் மனப்படிவங்களைப் பொறுத்து, வேறு வேறு இடங்களில் தென்படும்.**

**சுருக்கமாகச் சொன்னால் எனது சரீரத்தில், உடல் குறைபாடுகள் அல்லது வியாதி என்று எதுவும் இல்லை.**

**நீங்கள், உடல் உபாதைகளின் வடிவில், எனது உடலில் தென்படுவதைப் பார்ப்பது அனைத்தும், உலகின் மனப்படிவங்களை என்னில் ஏற்றுக்கொள்வதே ஆகும். இவ்வாறு உலகின் ஒவ்வொரு நாட்டின் நன்மை மற்றும் முன்னேற்றத்திற்காக, நான் எனது உள்பணியில் ஈடுபடுகிறேன்.**

**இதுபோலத்தான் சத்குருக்களும்; உபாஸனி மஹாராஜ் மூலநோயால் அவதிப்பட்டார், அதே வேளையில் சாய்பாபாவை, கடும் ஜுரம் அடிக்கடி தாக்கியது. என்னைப் பொறுத்தவரையில் வயிற்றுக்கோளாறு, கொப்புளங்கள் இவை அனைத்தும் எனக்கு நண்பர்கள்.**

1930, ஆகஸ்ட் 7ஆம் நாள், டாக்டர் கனி, மெஹர் பாபாவை சந்திக்க வந்த வேளையில், பாபா 'எதிர்கால நிகழ்வுகள்' பற்றி எடுத்துரைத்தார்:

**"அடுத்த நான்கு மாதங்களில் எதிர்பாராத முறையில், எங்கும் பெரும் கிளர்ச்சி உருவாகும். இந்து, முஸ்லிம்களிடையே பயங்கரமான சச்சரவுகள் ஏற்படும். நாடு முழுவதும் அமைதி குலைந்து, வன்முறையைக் கிளறிவிட்டு ரத்தக்களரியாக உருவெடுக்கும்."**

இதற்கிடையில் இந்திய எல்லைப்பகுதியில் பைதூல், ஆகா அலி இருவரையும் பாஸ்போர்ட் இல்லாததால் தடுத்து நிறுத்தியதாக செய்தி வந்ததும், பாபா, ஆகஸ்ட் 1ஆம் நாள், குவெட்டாவில் வாழும் ரூஸி ஈரானிக்குத் தகவல் தெரிவித்து உதவுமாறு கேட்டிருந்தார்: **"உங்களுடைய அனைத்து செல்வாக்கையும் பயன்படுத்தி இருவரையும் இங்கு அனுப்பி வைப்பது மிகவும் அவசியம். இதை எனக்குச் செய்யும் மிகப்பெரிய சேவையாக நினைத்து, அவர்கள் இங்கு வந்து சேருவதற்கான அனைத்தையும் செய்யுங்கள்."**

அடுத்த நாள் ரூஸியிடமிருந்து இருவரும் இந்திய எல்லைக்குள் வந்துவிட்டதாக செய்தி வந்தது. ஆகஸ்ட் 3ஆம் நாள் பாபா தொலைத்தந்தி அனுப்பினார்: **"எனக்காக இவ்வளவு பெரிய சேவையைச் செய்ததில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்; எவ்வளவு பெரிய காரியத்தைச் செய்துள்ளீர்கள் என்பதைக் குறித்து, உங்களுக்கு எதுவும் தெரியாது; அதற்காக எனது சிறப்பு ஆசீர்வாதங்கள்."**

ஆகஸ்ட் 16ஆம் நாள், ஆகா அலி நாசிக் வந்து சேர்ந்தான். பத்து மாதங்களுக்குப் பின்னர் அலியைப் பார்த்த மகிழ்ச்சியில் மெஹர் பாபா அவனை அன்போடு அரவணைத்தார். அலி மிகவும் மனம் நெகிழ்ந்து போனான்.

ஆகா அலியை ஊக்குவித்து, அவனுக்கு ஒரு மனமாற்றத்தை அளிக்கும் நோக்கத்தில் பாபா, ராவ்ஸாஹேப் மற்றும் ஆகா அலியுடன் கொல்கத்தா புறப்பட்டார். அங்கிருந்த மூன்று நாட்களில் மிருக காட்சி சாலை, கலைக்கூடங்கள் போன்ற அனைத்தையும் பார்வையிட வேண்டிய ஏற்பாடுகளை ராவ்ஸாஹேப் செய்தார்.

'சிறப்பான சிறுவனைத்' தேடும் மெஹர் பாபாவின் தொடர் முயற்சி, ராவ்ஸாஹேபைப் பொறுத்தவரையில் பெரும் தொந்தரவாக இருந்தது. மண்டலியும் மனம் நொந்து போயினர், ஏனெனில் சிரமப்பட்டுத் தேடி அழைத்து வந்த அனைத்து சிறுவர்களையும் பாபா திருப்பி அனுப்பிவிட்டார். அதைக் குறித்து பாபா அளித்த விளக்கம்:

**என்னுடைய இந்தப் பணிக்குப் பின்னால் ஒரு பெரிய மர்மம் உள்ளது. இந்த சிறுவர்கள் வழியாக நான் பிரேமாஷ்ரமத்திலிருந்து சென்ற சில சிறுவர்களோடு ஓர் இணைப்பை உருவாக்கி, அவர்களுக்கான உள்பணியில் ஈடுபடுகிறேன். என்னுடைய தலையாய கடமை - வட்டத்து சீடர்களுக்கு இறைநிலையை வழங்குவதாக இருந்தாலும், இவர்களில் சில சிறுவர்களை, தயார் நிலைக்குக் கொண்டு வரும் மிகையான கடமையை நான் என் மீது ஏற்றுள்ளேன். அதற்காக ஒரு சிலரை எனது கண்காணிப்பில் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.**

**ஆனால், அவர்களை, பெற்றோரின் இணக்கத்துடன் நேரடியாகக் கொண்டுவர முடியாத பட்சத்தில், இவ்வாறான மறைமுக முறைகளைக் கையாள வேண்டியதாகிறது. இதற்காகத்தான் நான் இத்தனை சிரமத்தையும் பொருட்படுத்தாமல், இவ்வளவு தூர கடினமான பயணத்தை மேற்கொண்டு, ஆயிரக்கிணக்கில் பணம் செலவு செய்கிறேன். இவ்வாறு, இதர பொருத்தமான சிறுவர்களை அழைத்து வந்து, புத்தாடை உடுத்தி, உணவளித்து, பணமும் கொடுத்து, என் உள்பணி முடிந்ததும் திருப்பி அனுப்பி வைக்கிறேன்.**

**இதை ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாது. இதனால்தான், என்னுடைய மண்டலி அனைவரும் - பழைய, நெருக்கமான மண்டலி கூட - நான் செய்யும் இந்தப் பணி விசித்திரமாகவும், அர்த்தமற்றதாகவும் இருப்பதாக நினைத்து எள்ளி நகையாடினர். ஆனால், எனது நோக்கம்**

**இப்போது என்னவெனில் என்னிடமிருந்து விலகி இருக்கும் குறிப்பிட்ட சில சிறுவர்களுடன், தொடர்புகளை உருவாக்குவதே ஆகும். இந்த உள்பணியின் முக்கியத்துவத்தை ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாது, ஏனெனில் அது உலகளாவிய அம்சத்தை அதனுள் அடக்கியுள்ளது.**

**இந்த விஷயத்தை நான் உங்களுடன் விவாதிக்கும் இவ்வேளையில், பிரபஞ்சத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் எப்படி அறிய முடியும்?**

**உங்களிடம் சிறிதளவேனும் உண்மையைப் புரிந்து கொள்ளும் தன்மை இருந்தால், இந்த சிறிய விஷயமும் இமயமலையை எழுப்பும் அளவுக்குப் பெரியது என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்!**

பாபாவின் நீண்ட விளக்கம் ராவ் ஸாஹேபின் மனதை அமைதிப்படுத்தியது.

கொல்கத்தாவிலிருந்து புறப்படும் வேளையில், மெஹர் பாபா இரண்டு மண்டலியை, நாக்பூரில் வாழும் ஜெஸவாலா குடும்பத்தினரிடம், பாபாவின் வருகையைப் பற்றி அறிவிக்க அனுப்பி வைத்தார். பாபா அங்கு வரும் செய்தியறிந்து, கெய்மாய் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். மெஹர் பாபாவை சந்தித்த நாளிலிருந்து கெய்மாய், பாபா அவர்கள் இல்லத்திற்கு வந்து, தங்கி அதை அருள் நயப் படுத்துவார் என்ற ஆழ்ந்த ஏக்கத்தில் இருந்தார்.

1930, ஆகஸ்ட் 24ஆம் நாள் பாபா, ராவ்ஸாஹேப் மற்றும் ஆகா அலியுடன் நாக்பூர் சென்றபோது, அவரை அன்போடு உரிய மரியாதையுடன் வரவேற்றனர். அப்போது, கெய்மாயின் பெரிய மகன் 'எரச்' (ERUCH), வயது 14, இரண்டு சகோதரிகள் 'மனு', வயது 11, 'மெஹரு', வயது 9, மூவரும் பள்ளியில் பயின்று வந்தனர்.

பாபா தங்கும் அறைக்கு வந்ததும் கெய்மாயிடம், **"நீங்கள் என் உணவைத் தயார் செய்து, எனது துணிமணிகளைத் துவைக்க வேண்டும். பிற அனைவரின் உணவை வீட்டு சமையல்காரர் தயார் செய்யட்டும்"** என்று கட்டளையிட்டார்.

இதற்கிடையே, பாபா, விஷ்ணுவை நாக்பூருக்கு அழைத்து, தென்னிந்தியா பயணம் குறித்து, குறிப்பாக கோலாப்பூர் மேல்நிலைப் பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்யத் திட்டமிட்டார்.

நாக்பூரில் இருந்தபோது, ஜெஸவாலா குடும்பத்தின் நண்பராக இருந்த ஓர் உயர்ந்த அரசு அதிகாரி, பெயர் 'ஜால் கேரவாலா', வயது 28, மெஹர் பாபா மீது மிகுந்த நம்பிக்கையை வளர்த்து, அவரது நெருங்கிய தொடர்பில் வந்து, எதிர்காலத்தில் பாபாவின் அவையில் முக்கிய அங்கம் வகிக்க இருந்தார்.

மெஹர் பாபா, அப்போது, அவரது அடையாளத்தை எவரிடமும் வெளிப்படுத்த வேண்டாம் என எச்சரித்திருந்தார். அவர் யார் என்று எவரேனும் விசாரிக்க நேர்ந்தால், **"நான் உங்கள் மூத்த சகோதரர் மேர்வான் என்று அவர்களிடம் சொல்லுங்கள்"** என்று பாபா, கெய்மாய்க்குத் தெரிவித்தார்.

கெய்மாயின் மகன் எரச் பள்ளிக்கூடம் செல்லும்போதும், திரும்பி வந்த பின்னரும் பாபாவை வந்து சந்திக்க வேண்டும், மேலும், உணவை அவருடன் உண்ண வேண்டும் எனவும் கூறியிருந்தார். ஆனால், சிறுவனாகிய எரச்சுக்கு அது தொந்தரவாக இருந்ததால், பாபாவின் கண்களில் பிடிகொடுக்காமல் மறைந்து சமாளித்தான். இதைக் கேள்விப்பட்ட கெய்மாய், சிறுவனிடம், "இது நல்லதல்ல. நாம் எவ்வளவு பாக்கியவான்கள் என்பதை நீ இன்னும் உணரவில்லை. பாபா உனக்காக நீண்ட நேரம் காத்திருந்தார். அவர் ஸொராஸ்டர்!" என்று உரத்த குரலில் கூறி. "அவர் நம்மிடம் மறுபடியும் திரும்பி வந்துள்ள தீர்க்கதரிசி! அது உனக்குத் தெரியாதா?" என்று கண்டித்தார்.

இயற்கையாகவே, இளம் பருவத்திலிருந்தே எரச் மத நம்பிக்கை உடையவனாக இருந்தாலும், தனது தாயார் சொன்னதை, சந்தேக கண்களால் பார்த்தான்; மேலும் தாயாரின் வார்த்தைகள் அவனுடைய ஆர்வத்தை அந்த அளவுக்குத் தூண்டியதாகத் தெரியவில்லை. நாக்பூரில் உள்ள ஒரு ரோமன் கத்தோலிக்க பள்ளியில் பயின்று வந்த எரச், இயேசுவின் மீது அதீத ஆர்வம் வைத்திருந்தான். அனைத்து அவதார புருஷர்களும் ஒருவரே என்பதை இதுகாறும் எரச் உணரவில்லை. அவன் தனக்குள்ளே நினைத்துக் கொண்டான்: "நான் இயேசுவின் காலத்தில் பிறந்திருந்தால், எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். அவரின் அருகாமையில் இருப்பதை நான் பெரிதும் விரும்புகிறேன். அந்த நாள் எப்போதாவது எனக்காக வருமா?" கிறிஸ்து அவனது ஏக்கத்தை அறிந்து, ஒவ்வொரு நாளும் அவனுடன் விளையாடக் காத்திருந்தது அவனுக்குத் தெரியாது.

சில நேரங்களில் இரவில் அவரவர் படுக்கைகளில் அமர்ந்துகொண்டு, பாபாவும் ஆகா அலியும் ஒருவருக்கொருவர் தலையணைகளை வீசி வேடிக்கையாக விளையாடினர். இதைக் கண்ட கெய்மாய் அதிர்ச்சியடைந்து, "பாபாவிற்குக் கொஞ்சம் மரியாதை கொடு; அவருடன் இப்படி நடந்து கொள்ளாதே!" என்று அலியிடம் கூறினார்.

பாபா உடனே தலையிட்டு, கெய்மாய்க்கு விளக்கிக் கூறினார், "**அவன் எனக்கு வழங்கும் மதிப்பும் மரியாதையும் என்பது என்னுடன் பிரியமாக இருந்து, என்னை மகிழ்விப்பது! அவ்வாறு செய்யுமாறு நான் அவனிடம் சொன்ன பின்னரும், அவன் அப்படிச் செய்யவில்லை என்றால், அது என்னை அவமதிப்பதாகும்.**" அலியுடனான பாபாவின் இத்தகைய பரிச்சயம், நெருக்கம் எரச்சின் இதயத்தில் அதீத தாக்கத்தை ஏற்படுத்தியது; அது எல்லா நேரங்களிலும், பாபாவுடன் வெளிப்படையாகவும், திறந்த மனதுடனும் இருக்க வேண்டும் என்ற பாடத்தைக் கற்றுத் தந்தது.

ஒரு நாள், பாபா, எரச்சின் துணிமணிகள் இருக்கும் பெட்டகத்தைத் திறந்து, ஒரு ஜோடி சட்டை, காலுறைகளை எடுத்து, அதை உற்றுப் பார்த்த வண்ணம், "**ஆகா அலிக்கும் இது போன்ற சட்டையும், காலுறையும் தேவை**" என்று கூறியதும், கெய்மாய் உடனடியாகத் தையல்காரரை - மிகவும் வயதானவர், சிறிதளவு பார்வைத் திறன் குறைந்தவர் - அழைத்தார். அலிக்குத்

தைக்க வேண்டிய துணிமணிகளைப் பற்றி, பாபாவே அந்த முதியவரிடம் விளக்கினார்; மேலும் கெய்மாய், எரச்சிற்காக வாங்கி வைத்திருந்த பட்டுத் துணியை அவரிடம் கொடுத்தார்.

மெஹர் பாபா பேசாமல் இருப்பதை உணர்ந்த தையல்காரர் இவ்வாறு வினவினார், "அவர் யார்? ஏன் பேசவில்லை?"

அதற்கு கெய்மாய் பதிலளித்தார், "அவர் எனது மூத்த சகோதரர்; தொண்டையில் பிரச்சினை காரணமாக அவரால் பேச முடியாது. எல்லா வைத்தியங்களும் முயற்சித்தும், பலனில்லை."

மெஹர் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்ட அந்த முதியவர், இதைக் கேட்டு, பாபாவை சோகமாகப் பார்த்து, "மேர்வான் அவர்களே, இந்த ஆங்கில மருந்துகளை விட்டுவிட்டு, என்னுடன் கத்தியவாருக்கு வாருங்கள், அங்கு நல்ல ஆயுர்வேத மருத்துவர்கள் உள்ளனர். அவர்களின் சிகிச்சை நிச்சயமாக உங்களைக் குணப்படுத்தும்" என்றார்.

பாபா அந்தப் பெரியவர் கூறியதைக் கேட்டு, தலையசைத்து எழுத்துப்பலகையில், **"எனது தொண்டையைப் பரிசோதிக்க நான் ஐரோப்பாவுக்குச் செல்கிறேன், ஒரு வேளை எனக்கு வேண்டிய உதவி அங்கே கிடைக்கும்"** என்று பதிலளித்தார்.

"ஆனால், ஏன் ஐரோப்பா செல்ல வேண்டும்?" பெரியவர் கேட்டார். "நான் சொல்வதைக் கேளுங்கள், கத்தியவாரில் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுங்கள், எல்லாம் சரியாகிவிடும்." பாபா அதைக்கேட்டுப் புன்முறுவல் செய்தார்.

மெஹர் பாபா குறிப்பாக, அந்த முதியவருடன் இருப்பதைப் பெரிதும் விரும்பினார். அவர் ஊசியில் நூலை செருக முயற்சிக்கும் போதெல்லாம், "மேர்வான் அவர்களே, இந்தக் கிழவனுக்குக் கொஞ்சம் உதவுங்கள்." என்று கேட்பது உண்டு. பாபா நூலை செருகித் தரும் வேளையில் அளவிலா மகிழ்ச்சியில் வாய்விட்டுச் சிரித்துகொண்டே, "ஹே, ராம்!" என்றார். ஒரு முறை தையல்காரர், "மேர்வான் அவர்களே, நீங்கள் எவ்வளவு அழகாகவும், இளமையாகவும் இருக்கிறீர்கள்! ஆனால், கடவுளின் விளையாட்டைப் பாருங்கள்; அவர் உங்களுக்குப் பேச்சைத் தர தவறிவிட்டார்! என்னை நம்புங்கள், என்னுடன் கத்தியவாருக்கு வாருங்கள். ஒரு முறை நீங்கள் பேசத் தொடங்கினால், பேசுவதை நீங்கள் நிச்சயமாக விரும்புவீர்கள்" என்று கூறினார். மகிழ்ச்சியடைந்த பாபா, தையல்காரரின் உரையாடலைக் கேட்டு ரசித்தார்; மேலும் அவர் வேண்டுமென்றே ஊசியிலிருந்து நூலை வெளியே இழுத்து, பாபாவை அழைத்து, அவர் அருகில் இயன்றவரை இருக்க முயற்சித்தார்.

மெஹர் பாபாவின் நாக்பூர் பயணத்தின் போது, கெய்மாயின் அண்ணன் மகன் 'தாதி கேரவாலா' (DADI KERAWALA) நிமோனியாவால் பாதிக்கப்பட்டார்.

மருத்துவரின் ஆலோசனைப்படி, ஒவ்வொரு மூன்று மணி நேரத்திற்கும் ஒரு குறிப்பிட்ட மருந்து அவருக்கு வழங்கப்பட வேண்டும்.

கெய்மாய்க்காக, பாபா இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஒரு நாள் இரவு, கெய்மாய், தாதியின் பக்கத்தில் அமர்ந்திருந்தபோது, கழிவறையைப் பயன்படுத்த விரும்பினார். வாசலின் வெளியே நின்று, "நான் இப்போது என்ன செய்ய முடியும்? தாதியின் அருகில் இருக்க எவரும் விழித்திருக்கவில்லையே" என்று நினைத்துக் கொண்டிருந்தார்.

இந்தக் கவலை கலந்த எண்ணங்களோடு நின்று கொண்டிருந்தபோது, பாபா, திடீரென அங்கு வந்து அவரிடம், **"நீங்கள் போகலாம்; நான் தாதியின் அருகில் இருப்பேன்"** என்றார். பின்பு பாபா கட்டிலில் அமர்ந்து தாதியின் தலையை அவரது மடியில் வைத்திருந்தார். இந்த சம்பவம், பாபா, கெய்மாயின் ஒவ்வொரு எண்ணத்தையும் அறிவார் என்பதை ஊர்ஜிதப் படுத்தியது, மேலும் அவர் பாபாவின் தயவான மனோபாவத்தை எண்ணி நெகிழ்ந்து போனார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, ஜெஸவாலா குடும்பத்தினர் பாபாவை தரிசனம் செய்ய மெஹராபாத் சென்றிருந்த போது, எரச்சைப் பார்த்து, பாபா, கெய்மாயிடம், **"அவன் என்ன படிக்கிறான்?"** என்று வினவ, கெய்மாய் பதிலளித்ததும், **"அவன் ஏன் மேலும் படிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?"** என்று கேட்டு, **"அவனை எனக்குத் தந்துவிடுங்கள்"** என்றார் பாபா.

சிறிதளவும் தயங்காமல் கெய்மாய், "பாபா, அவன் உங்களுக்குச் சொந்தம்" என்று பதிலளித்தார்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த பப்பா ஜெஸவாலா (PAPA JESSAWALA), "நாங்கள் உங்களுக்கு எப்படி எரச்சைக் கொடுக்க முடியும்? அவன் எங்கள் ஒரே மகன்!" என்றார்.

பாபா பதிலுக்குப் புன்னகைத்து, பின்பு கெய்மாயிடம், **"எரச் எனது மகன்; நான் உங்களுக்கு இன்னொரு மகனைத் தருவேன்"** என்று கூறினார்.

நாக்பூரில் பாபா இருந்த இந்த நேரத்தில், கெய்மாய் கர்ப்பமாக இருந்தார்; இரண்டு மாதங்களுக்குப் பிறகு, மெஹர்வான் (MEHERWAN) என்ற இரண்டாவது மகனை ஈன்றெடுத்தார்.

1930, ஆகஸ்ட் 29ஆம் நாள், மெஹர் பாபா நாக்பூரிலிருந்து ஆகா அலி மற்றும் நான்கு மண்டலியுடன் தெற்கு நோக்கிப் புறப்பட்டு, கோலாப்பூர் நகருக்குச் சென்று, ஒருவாரம் 'தப்போவன்' மலைப்பகுதியில் தங்கியிருந்தார்.

செப்டம்பர் முதல் வாரத்தில், கோலாப்பூர் பள்ளிக்கூட ஆண்டுவிழாவில் பங்கெடுத்து, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தரிசனம் வழங்கினார். இருப்பினும், அவர் தனது தனிப்பட்ட நேரத்தை, அவருடன் வெகுவாக ஈர்க்கப்பட்ட பள்ளி மாணவர்களுடன் கழித்தார். பாபா அவர்களுடன் விளையாடி, அவர்களுக்கு உணவு பரிமாறி, அவர்களின் கதைகளைக் கேட்டு, ஆன்மீக மற்றும் நகைச்சுவையான சம்பவங்களை எடுத்துரைத்து, அனைவரையும் மகிழ்வித்தார். பாபா அவர்களுக்கு அன்பு, தன்னலமற்ற சேவை

மற்றும் உலகில் தத்தமது கடமைகளை நிறைவேற்றுவது குறித்து, சொற்பொழிவு வழங்குவதன் மூலம், இறை அன்பின் விதைகளை அவர்களின் இதயங்களில் விதைத்தார். பள்ளி அதிகாரிகளும் இதற்கு விதிவிலக்கல்ல; குறிப்பாக தீக்ஷித் என்பவர் பாபாவின் முன்னிலையில் கண் கலங்கினார்.

செப்டம்பர் 7ஆம் நாள், பாபா பிஜாப்பூர் நகருக்குப் புறப்பட்டு, வேறு வேறு இடங்களில் பாபாவின் கட்டளைப்படி உபவாசம் மேற்கொண்டிருந்த மண்டலியை, பிஜாப்பூருக்கு வரவழைத்தார்.

ஒவ்வொரு மாலையும், மக்கள் தரிசனத்திற்காக, திரள் திரளாக வந்து, அவரது ஆரத்தியை நிகழ்த்தினர். பாபா பல சொற்பொழிவுகளை வழங்கினார். பிஜாப்பூரில் பலர், குருநாதரின் இறை பானத்தை ருசித்து, அவருடைய தெய்வீக அன்பை உணர்ந்தார்கள். 'மினூ போஹோவாலா', பாபாவிற்கும் மண்டலிக்கும் வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து தந்தார்; பாபாவின் சகவாசம் அங்கிருந்த அனைவருக்கும் மகிழ்ச்சியை அளித்தது.

1930, செப்டம்பர் இறுதியில் மெஹர் பாபா, குறிப்பாக அவருடைய சகோதரர் ஆதி ஜூனியரை சந்திக்க பூனா சென்றார். அப்போது ஆதி, டெக்கன் கல்லூரியில் பயின்று வந்தார். பாபா, சாஞ்சி மூலமாக ஆதியிடம், **"கல்லூரி படிப்பு எப்படி நடந்து கொண்டிருக்கிறது?"** என வினவினார்.

"நன்றாக இருக்கிறது" என்றார் ஆதி.

பாபா, ஆதியிடம் கேள்வி எழுப்பிய விதம், பாபா ஏதோ உள் நோக்கத்தில் கேட்பதுபோலத் தோன்றியது; ஆனால், என்ன என்று புலப்படவில்லை. **"நீ இங்கே மகிழ்ச்சியாக இருக்கிறாயா?"** என்று பாபா மீண்டும் வலியுறுத்திக் கேட்டபோது, ஆதி ஜூனியர் 'ஆமாம்' என்று பதிலளித்தார். அதற்குப் பிறகு, பாபா அங்கிருந்து நாசிக் புறப்பட்டுச் சென்றார்.

அக்டோபர் 1ஆம் நாள் பாபா, ஆதி ஜூனியருக்குத் தொலைத்தந்தி அனுப்பி, உடனடியாக அவரை நாசிக் வருமாறு அழைத்தார். ஆதியை, பாபா தனியாக அவரது அறையில் அழைத்து, **"நீ உண்மையில் ஒரு டாக்டராக விரும்புகிறாயா?"** என்று கேட்டார்.

"ஆமாம், டாக்டராகி, உங்கள் ஆஷ்ரமத்தில் பணிபுரிவேன்" என்றார் ஆதி. அப்போது பாபா, **"நீ என்னவாக விரும்புகிறாய்? என் ஆஷ்ரமத்தில் மருத்துவராகவா? அல்லது விவேகானந்தராகவா?"** என்ற கேள்வியை எழுப்பி ஆதியை அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

ஆதியின் மனம் பலவிதமான அபிலாஷைகளால் நிரம்பியிருந்தது. சிறு வயது சிந்தனைகளை நினைவு கூர்ந்தார்: 'அந்த நேரத்தில், நான் சிறுவனாக இருந்தேன், பல ஏமாற்றங்களை சந்தித்தேன். கடவுளே, ஒரு மருத்துவராக வேண்டும் என்று நினைத்தேன்! ஆனால், ஒரு விவேகானந்தராக இருப்பது எவ்வளவு நல்லது!' ஆதி, பாபா வழங்கிய வாய்ப்பை ஏற்றுக் கொண்டதும், பாபா, ஆதி ஜூனியரை உடனடியாக நாசிக் ஆஷ்ரமத்தில் வந்திணைய உத்தரவிட்டார்.

ஆதி ஜூனியர் பூனாவுக்குத் திரும்பி வந்து, தனது தாயாரிடம் படிப்பைக் கைவிடுவதாகவும், கல்லூரியை விட்டு வெளியேறி, பாபாவுடன் நாசிக்கில் வாழப் போவதாகவும் தெரிவித்தார். இந்த யோசனையை, தாயார் கடுமையாக எதிர்ப்பார் என்பதை அறிந்த பாபா, தாயாரை எதிர்கொள்ளத் தேவையான தைரியத்தை ஆதிக்கு அளித்திருந்தார். தாய்க்கும் மகனுக்கும் இடையில் பயங்கரமான வாக்குவாதங்கள் எழுந்தது, ஆனால், ஆதி பிடிவாதமாக இருந்து விரைவில் நாசிக் நகருக்குச் சென்றார்.

ஒவ்வொரு நாளும், ஆதி ஜூனியர், அவருடைய கனவு நனவாகும், அதிசயம் நிகழும் என்று எதிர்பார்த்தார். மாதங்கள், வருடங்கள் கடந்தன, 'விவேகானந்தா' ஆகும் கனவு ஒரு தூண்டிலில் சிக்கிய இரையாக இருந்ததை ஆதி பின்னர் உணர்ந்தார்.

பிஜாப்பூர் நகரில் சில இந்து, முஸ்லிம் பக்தர்கள் மெஹர் பாபா அங்கு இல்லாத வேளையிலும், பாபா தங்கியிருந்த இடத்திற்கு வழக்கம் போலச் சென்று பஜனை பாடுவதைத் தொடர்ந்தனர். ஒரு சில நாட்கள் நாசிக்கில் இருந்துவிட்டு, அக்டோபர் 5ஆம் நாள் பாபா, சாஞ்சியுடன் மறுபடியும் பிஜாப்பூர் சென்றார். இரண்டு வாரங்களுக்குப் பின்னர் ஏகாந்தவாசத்திற்கு உகந்த இடம் எதுவும் அமையாததால், பாபா, நாசிக் திரும்பிவந்து, பின்பு மும்பைக்குப் பயணம் மேற்கொண்டார்.

இம்முறை பாபா மும்பையில் 12 நாட்கள், காக்கா பாரியாவின் சகோதரி பானுபாய் வீட்டில் தங்கியிருந்தார். பல மாதங்களுக்குப் பிறகு, மும்பை பக்தர்களுக்கு மெஹர் பாபாவின் சகவாசம், ஓர் இனிய வாய்ப்பாக அமைந்தது.

மெஹர் பாபா தரிசனம் மட்டுமின்றி, தனிப்பட்ட முறையில் அனைவரையும் சந்தித்து, ஆசி வழங்குவதைக் கேள்விப்பட்ட பலர், திரள் திரளாக வந்து வீட்டின் வெளியே காத்திருந்தனர்.

உண்மையில், பானுபாய் வீட்டில் வந்த, பெருமளவிலான கூட்டத்தைக் கண்டு, வீட்டு உரிமையாளர், தனது கட்டிடத்தின் தளங்கள் எடை தாங்காமல் இடிந்து விழக்கூடும் என்று ஆட்சேபனை தெரிவித்தார். அதைக்கேட்ட, துருதுருப்பான பானுபாய், அவர்கள் வாடகை தருவதால் விரும்பிய அளவுக்கு விருந்தினர்களை ஏற்றுக்கொள்வதில் என்னத் தவறு என்று கேட்டார்.

பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபா மண்டலியுடன் நவம்பர் 1ஆம் நாள் மெஹராபாத் திரும்பி வந்தார்.

ஒரு முறை மெஹர் பாபா, மெஹராபாத்தில் குகை ஒன்றை அமைக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார்: "**நான் அங்கே ஏகாந்தவாசத்தில் அமர்ந்து கொள்வேன்; எனது மண்டலி, குகையைத் தயார் செய்வது மிகவும் விரும்பத்தக்கது.**" அனைத்து மண்டலியும் அதற்குத் தயாராக இருந்தனர்;

ஆனால், பாபா, ஜால்பாயின் மேற்பார்வையில், பெண்டு, சகன், ஸெயிலர், விஷ்ணு நால்வருக்கும் இந்தப் பொறுப்பை அளித்தார்.

மெஹராபாத்தின் தென்கிழக்குத் திசையில், பாபா, குகைக்கான இடத்தைத் தேர்ந்தெடுக்க, ஐந்து மண்டலியும் அந்த வேலையை மிக்க ஆர்வத்துடன் செய்தனர்.

மேலும், பாபாவின் உணவைத் தயார் செய்யும் பொறுப்பும் சகனுக்கு வழங்கப்பட்டது.

குகை தோண்டும் பணியில் ஈடுபட்டபோது, சகனின் கைகள் காயங்களால் நிரம்பியிருந்தன, மேலும், பாபாவின் உணவை சமைப்பதற்கு முன்னர், அவர் பத்து முறை கைகளை சுத்தம் செய்ய வேண்டும் என்று ஒரு நிலையான உத்தரவும் இருந்தது. அப்போது சகன், பாபாவிடம், "எனது கைகள் காயங்களால் நிறைந்துள்ளன. உங்கள் உணவை சமைப்பதற்கு முன்பு, நான் அவற்றை எப்படிக் கழுவ முடியும்?" என்று வினவினார்.

**"அவற்றைக் கழுவ வேண்டிய தேவையில்லை"** என்று பாபா பதிலளித்தார். **"அதன் மீது கட்டு போட்ட பின்னர் உனது பணியைத் தொடங்கலாம்."**

"ஆனால், பாபா, எனது கைகளைப் பாருங்கள்; மிகவும் மோசமாக உள்ளன." சகன் முறையிட்டார்.

**"அதை மறந்துவிடு. எனது கட்டளை, அனைத்தையும் சுத்தம் செய்துவிடும்."** எனவே ஒவ்வொரு நாளும் சகன் தயார் செய்த உணவு, அதிக சுவையாக இருந்தது என்று பாபா அடிக்கடி குறிப்பிட்டார்.

1930, நவம்பர் 7ஆம் நாள், பாபா, குகை மிக விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்பதை, உறுதியாக அனைவருக்கும் அறிவுறுத்தினார்.

அதன் பின்பு பாபா, ஒரு சில தினங்களுக்காக, லோனவாலா, நாசிக் சென்று, அங்கு வாழும் பக்தர்களை சந்தித்து, தரிசனம் வழங்கினார்.

லோனவாலாவில் தரிசனம் மிகவும் மகிழ்ச்சிகரமாக நடைபெற்ற அவ்வேளையில், மெஹராபாத்தில் காட்சி மிகவும் வித்தியாசமானதாக அமைந்தது. கழுதைகள் போல் உழைக்கும் மண்டலி, அதிகமான வேலைப்பளுவால், உணவு உண்ணவும் நேரமில்லாமல் சிரமப்பட்டனர். அவ்வப்போது ஓய்வுக்காக அமரும் வேளையில், புகையிலையை மென்று, தற்காலிக இன்பங்களை அனுபவித்தனர். இவ்வேளையில் பூனாவிலிருந்து வந்த சிலர், மண்டலியிடம் புகையிலை ஏறக்குறைய தீர்ந்துவிட்டதைக் கண்டு, அங்கிருந்து அனுப்பி வைத்தனர். இதனிடையே அவ்வப்போது லட்டு பொட்டலங்களும் வந்த வண்ணம் இருந்தன. இனிப்புகளை இதர மெஹராபாத் மண்டலியுடன் பகிர்ந்து உண்டனர். இதைக் கண்ட பொறுப்பாளர் புவாஸாஹேப், இத்தகைய 'தடை செய்யப்பட்ட பொருட்கள்' பாபாவின் அனுமதி இல்லாமல் உபயோகிக்கப்படக் கூடாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

மெஹர் பாபா நாசிக்கிலிருந்து திரும்பி வந்ததும், நடந்ததைக் கேள்விப்பட்டு, **"என் அனுமதியின்றி நீங்கள் ஏன் இனிப்புப் பண்டங்களை உண்டீர்கள்? புவாஸாஹேப்பைத் தவிர வேறு எவரும் உண்மையானவர்கள் அல்ல!"** என்று கடுமையாகக் கண்டித்தார்.

ஆனால், ஜால்பாய், அவர்களை பாபாவிடமிருந்து காப்பாற்றினார். அவரும் லட்டுக்களை உண்டதாகக் கூறி, மேற்பார்வையாளர் என்ற முறையில், அவரே குற்றவாளி என்பதையும் ஒப்புக்கொண்டார். மீண்டும் இவ்வாறு செய்யக் கூடாது என்ற எச்சரிக்கையுடன் பாபா அனைவரையும் மன்னித்தார்.

குகையின் பணிகள் நிறைவடைந்ததை அறிந்து, பாபா மிக்க மகிழ்ச்சி அடைந்தார். இந்தக் குகையின் ஆழம் எட்டு அடி; தரையில் பாரசீக கம்பளம் விரிக்கப்பட்டது. பாபா இதற்கு 'பஞ்சவடி குகை' என்று பெயரிட்டு, 1930 நவம்பர் 15ஆம் நாள், ஏகாந்தவாசத்தைத் தொடங்குவதற்கு முன்னர், ஏழைகளுக்கு தரிசனம் அளித்து, உணவு வழங்கி குகையின் வெளியில் ஒரு மணி நேரம் அமர்ந்து, கடவுளின் ஏழு நாமத்தை உச்சரித்தனர் - 'ஹரி, பரமாத்மா, அல்லா, ஆகுராமஸ்தா, ராம், எஸ்தான், ஹூ.'

ஒவ்வொரு நாள் மாலையிலும், ஏகாந்தவாசம் முடிவது வரை இந்தப் பிரார்த்தனை மற்றும் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தி, அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்க பாபா அனுமதித்தார்.

பாபா, பஞ்ச்வடி குகையில் (PANCHVATI CAVE) இருந்த அதே வேளையில், பிளீடரும் வேறொரு தனி அறையில் ஏகாந்தவாசம் மேற்கொண்டார், மேலும் அவரை மௌனம் கடைப்பிடிக்குமாறும் பாபா கட்டளை இட்டிருந்தார். ஒரு நாள், பிளீடரின் அறையில், கூரையிலிருந்து ஒரு பெரிய நாகப்பாம்பு கீழே வருவதைக் கண்டு, கதறவும் முடியாமல் நடுங்கினார். அங்கு வைத்திருந்த பாலையும் பாம்பு அருந்தியது. வழக்கம்போல சிது, பால் எடுத்துவந்த வேளையில், நாகப்பாம்பைக் கண்டு நடுங்கி இதர மண்டலியின் உதவியுடன் அதைப் பிடித்தார். சகன் பாம்பைப் பிடிப்பதில் கெட்டிக்காரனாக இருந்தும், அதன் அளவைக் கண்டு மயக்கமடைந்தார். பிளீடர், பாபாவின் கட்டளையை மீறாமல், அமைதியாக அவரது ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்தார்.

மெஹர் பாபா, ஏகாந்தவாசம் தொடங்கிய இந்த நேரத்தில், 32 வயதான 'பால் பிரன்டன்' (PAUL BRUNTON) என்ற புகழ்பெற்ற பிரிட்டிஷ் எழுத்தாளர், இங்கிலாந்திலிருந்து பாபாவின் தரிசனத்திற்காகவும் அவரை நேரடி பேட்டிக் காணவும் வருவதாக செய்தி வந்தது. பிரண்டனின் பெற்றோர் யூதர்களாக இருந்தாலும், சிறு வயதிலேயே தியானம், ஆன்மீகம் மற்றும் தியோஸொஃபி ஆகியவற்றில் நாட்டம் மிக்கவராக இருந்தார். 'அக்கல்ட் ரிவியூ' (OCCULT REVIEW) என்ற பத்திரிகையில் எழுதிய கட்டுரைகள் வழியாக, மெரடித் ஸ்டாரின் தொடர்பில் வந்தார். இந்திய வெளியுறவு துறை செயலாளரின் நூலகத்திற்கு வழக்கமான பார்வையாளராக இரண்டு ஆண்டுகள் நியமிக்கப்பட்டார்.



**தரையில் அமர்ந்திருப்போர்:** விஷ்ணு, எரச், ஆகா அலி, கரிம்
**அமர்ந்திருப்போர்:** பப்பா ஜெஸவாலா, மெஹர் பாபா, கெய்மாய்,
ராவ்ஸாஹேப்




**கொல்கத்தா, நாக்பூர் பயணம்**

மெஹராபாத் (MEHERABAD), நாசிக் (NASIK), ஜபல்பூர் (JABALPUR), அலஹாபாத் (ALAHABAD), கொல்கத்தா (KOLKATA), பிலாஸ்பூர் (BILASPUR), ராய்பூர் (RAIPUR), நாக்பூர் (NAGPUR), ஹைதராபாத் (HYDERABAD), கோலாபூர் (KOLHAPUR), பிஜாபூர் (BIJAPUR), மெஹராபாத்.



பஞ்சவடி குகைக்கு வெளியே

விஷ்ணு, சகன், பாபா, ஜால்பாய், பெண்டு, ஸெயிலர், பெஹராம்



பால் பிரன்டன்

கெ.ஜெ. தஸ்தூர், மெஹர் பாபாவைப் பற்றி எழுதிய 'உற்சாகமான' கடிதங்களைப் படித்த பிரன்டன், அவருடைய தொடர்பில் வந்து, இந்த விஷயத்தை அவராகவே விசாரிக்க ஆசைப்பட்டார். பிரன்டன் மூன்று பெரிய நிறுவனங்களின் விளம்பர ஆலோசகராகப் பணிபுரிந்தார், ஆனால், அவர் தனது தொழிலைக் கைவிட்டு, இந்தியா, எகிப்து மற்றும் ஆசியா முழுவதும் பயணம் செய்து, யோகிகள், சாதுக்கள், புனித மனிதர்களின் கருத்துக்கள் மற்றும் நடைமுறைகளை ஆராய்ந்து அறிந்துகொள்ளும் நோக்கத்தில், அவர்களுடன் பல காலம் ஆஷ்ரமங்களில் தங்கியிருந்தார்.

பாபாவை சந்திப்பதற்கு முன்பே, ஆகஸ்ட் 1930 இதழில் "மெஹர் பாபா மேற்கத்திய நாடுகளுக்கு வருகிறார்" என்ற தலைப்பில் பிரன்டன் ஒரு பாராட்டுக் கட்டுரையை எழுதியிருந்தார். பாபா ஏகாந்தவாசத்தில் இருந்ததால், பிரண்டனைப் பார்க்க விரும்பவில்லை, மேலும் மண்டலியிடம், "**மாயை என்னுடைய பணியைத் தடுத்து நிறுத்த எவ்வளவு முயற்சிக்கிறது பாருங்கள்! நான் எவரையும் பார்க்க விரும்பாத இந்நேரத்தில், எனது வேலை தடைபட்டுள்ளது**." என்றார். பாபா, ஆதி சீனியரை மும்பைக்கு அனுப்பி, பிரண்டனை வரவேற்று, அவருடைய சொந்த செலவில் ஹோட்டலில் தங்க வைத்து, ஜால்பாயுடன் மெஹராபாத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டார். மேலும், மெஹராபாத்தில் பால் தவிர உணவு வகைகள் எதுவும் இல்லாததால், ஏராளமான பழவகைகளையும் பிரன்டன் வரும் வேளையில் வாங்கி வர அறிவுறுத்தினார்.

பாபா கூறியபடி, பிரன்டன் 1930, நவம்பர் 22ஆம் நாள், மெஹராபாத் வந்து, மேல்மலை நீர்த்தொட்டியில் அமைந்த நடு அறையில் தங்கி இருந்தார். மண்டலியில் ஒருவர் சிது, ஆங்கில மொழியில் ஒரு வார்த்தைக் கூட தெரியாத போதும், பால் பிரண்டனுக்கு உதவியாளராக நியமிக்கப்பட்டார்.

அடுத்த நாள், பாபா, பிரண்டனை ஜால்பாயுடன் பஞ்சவடி குகைக்குள் அழைத்தார். மெஹர் பாபா ஓர் உண்மையான குருநாதர் என்பதைத் தீர்மானமாகக் கண்டுபிடிப்பதே இந்த நேர்காணலின் நோக்கம். பாபா எழுத்துப்பலகை வழியாகக் கூறியதை விஷ்ணு எடுத்துக் கூறினார். பிரன்டன் குறிப்புகளை எடுக்கத் தொடங்கியதும், பாபா, அவர் கூறுவதை முழு கவனத்துடன் கேட்கவும், குறிப்புகளைப் பின்னர் எழுதிக் கொள்ளுமாறும் கூறினார். மெஹர் பாபா அவருடைய ஐந்து சத்குருக்கள், அவர்களின் வட்ட அமைப்பு மற்றும் அவதார புருஷராக உலகில் வரும் செயல்முறைகளை விளக்கினார்:

**உபாஸனி மஹாராஜ், ஹஸ்ரத் பாபாஜான் இருவரும் இந்த யுகத்தின் மிகப்பெரிய ஆன்மீக ஞானிகள். பாபாஜானுடனான எனது கடந்தகால தொடர்புதான், எந்தவொரு முயற்சியும், ஏக்கமும் இல்லாமல், ஒரே நொடியில் இறை அனுபவத்தை எனக்கு அளித்தது; பிறருடனான என்னுடைய இந்தத் தொடர்பு எதிர்காலத்தில் எல்லையற்ற புதையலை, வட்டத்தின் பன்னிரண்டு பேருக்குப் பகிர்ந்தளிக்க வழி வகுக்கும்.**

ஒரு சத்குரு, அவரது பௌதீக உடல் இருக்கும் வரை மட்டுமே, உலகிற்கு பல நன்மைகளைச் செய்ய முடியும். அவருடைய இறப்பிற்குப் பின்னர், அவர் அளவிலா பேரானந்தத்தை அனுபவிக்கிறார்; அதே வேளையில் அவரிடம் சக்தி இருந்தாலும், அதைப் பயன்படுத்துவதற்கான அதிகாரம் இல்லை. எனவே, ஒரு சத்குருவின் சமாதி எங்கிருந்தாலும், அங்கே சக்தி இருக்கும், ஆனால், ஒருவரின் நம்பிக்கை ஒன்றுதான், ஊடகமாக மாறி அந்த சக்தியைப் பயன்படுத்தும். இக்காரணத்தினால்தான் மக்கள் பொதுவாக சத்குருக்களின் சமாதிகளிலிருந்து நன்மைகளை அடையப் பெறுகிறார்கள். எதுவாயினும், குருநாதர் அவருடைய பௌதீக உடலை துறப்பது வரைதான், உள்ளளவில் உதவமுடியும்.

குருநாதரின் மறைவுக்குப் பின்னர், அவர் உலக விவகாரங்களில் ஆர்வம் காட்டுவதில்லை - அவதார புருஷர் கூட அப்படித்தான். எனவே 'மறைந்த' குருநாதர், ஒருவரின் பிரார்த்தனைக்கு பதிலளிக்கிறார், அல்லது அவரை கவனிக்கிறார், கண்காணிக்கிறார் என்பது தவறு. இருந்தும், ஒரு நேர்மையான பக்தர், கிறிஸ்துவைப் போன்ற ஒருவரிடம், அவருடைய ஆழ் இதயத்திலிருந்து பிரார்த்தனை செய்து, உதவி நாடுவதாயின், உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் தீர்க்கதரிசி அல்லது அவதார புருஷர் அந்தக் கூக்குரலைக் கேட்டு, உணர்ந்து, கிறிஸ்துவின் தோற்றத்தில் தன்னை வெளிப்படுத்தி, பிரார்த்தனைக்கு பதிலளிக்கிறார்.

பால் பிரன்டன் மெஹர் பாபாவிடம் அவரது பணி, நோக்கம் குறித்து கேள்வி எழுப்பியபோது, பாபா இவ்வாறு கூறினார்:

நான் முழு உலகின் வரலாற்றையும் மாற்றுவேன். ஜீஸஸ் ஒரு பொருள் சார்ந்த யுகத்திற்கு ஆன்மீகத்தை வழங்க வந்ததுபோல், இன்றைய மனிதகுலத்திற்கு, ஆன்மீக உந்துதலை அளிக்க நான் வந்துள்ளேன். இதுபோன்ற தெய்வீகச் செயல்களுக்கு எப்போதும் ஒரு நிலையான நேரம் உள்ளது; அதற்கான நேரம் வந்ததும், எனது உண்மை தன்மையை முழு உலகிற்கும் வெளிப்படுத்துவேன்.

மகத்தான இறை ஞானிகள், அவதார புருஷர்கள் - ஸொராஸ்டர், ராம், கிருஷ்ணா, புத்தா, ஜீஸஸ் மற்றும் முஹமது - அவர்களின் அடிப்படை கோட்பாடுகளில் எந்த வேறுபாடும் இல்லை. இந்தத் தீர்க்கதரிசிகள் அனைவரும் கடவுளிடமிருந்து வந்தவர்கள். இந்த இறை ஞானிகளின் தலையீடு மிகவும் தேவைப்படும் தருணத்தில், ஆன்மீகம் அதன் அடிமட்டத்து நிலையை அடையும் காலத்தில், உலகப்பொருட்கள் தழைத்தோங்கி, உச்ச கட்டத்தை எட்டும் வேளையில், அவதார புருஷர் தோன்றுகிறார். அத்தகைய நேரத்தை மனிதகுலம் வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இன்றைய உலகம் சிற்றின்ப ஆசைகள், இனவெறி, சுயநலம், பண வழிபாடு போன்றவற்றில் மூழ்கியுள்ளது. மக்கள் கடவுளைக் கைவிட்டனர்! உண்மையான மதம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது! மனிதன் வாழ்வைத்

தேடுகிறான், ஆனால், பூசாரிகளும், பாதிரிகளும் அவனுக்குக் கல்லையும் மண்ணையும் மட்டுமே அள்ளி வழங்குகிறார்கள்! ஆகவே, உண்மையான வழிபாட்டை நிலை நாட்டவும், மக்களை அவர்களின் உலகப்பொருள் சார்ந்த முட்டாள்தனத்திலிருந்து விடுவிக்கவும், கடவுள் மீண்டும் தனது உண்மையான இறை ஞானியை, மனிதர்களிடையே அனுப்ப வேண்டும். இந்த வரிசையில் முந்தைய தீர்க்கதரிசிகளைப் பின்பற்றி, இப்போது நான் வந்துள்ளேன். இது எனது பணி.

மக்கள் நல்வாழ்க்கையை வாழவும், கடவுளை நாடவும் தீர்க்கதரிசிகள் சில விதிகளையும் நடைமுறைகளையும் வகுக்கின்றனர். இந்த விதிகள், பின்னர், ஒழுங்கமைக்கப்பட்ட மதத்தின் கொள்கைகளாக உருவெடுக்கின்றன; ஆனால், அந்த இறை போதகர்களின் வாழ்நாளில் நிலவிய இலட்சியவாத மனப்போக்கு மற்றும் இயக்கு சக்தி, அவரது மறைவிற்குப் பிறகு படிப்படியாக மறைந்துவிடும். அதனால்தான், மத அமைப்பு நிறுவனங்கள், ஆன்மீக உண்மையை மக்களுக்குக் கொண்டு வர முடியாது. இவ்வாறு, மத அமைப்புகள் கடந்த காலத்தை மீண்டும் உயிர்ப்பிக்க முயற்சிக்கும் தொல்பொருள் துறைகளைப் போலச் செயல்படுகின்றன. எனவே, நான் எந்த ஒரு புதிய மதத்தையும், வழிபாட்டு மரபு மற்றும் அமைப்பையும் நிறுவ முயற்சிக்க மாட்டேன். நான் எல்லா மக்களின் மத சிந்தனைகளுக்கும் புத்துயிர் அளித்து, உயிரூட்டம் பெறச் செய்து, அவர்களிடையே வாழ்க்கையைப் பற்றிய மேம்பட்ட கருத்தையும், அறிவையும் உருவாக்குவேன்.

உண்மையில், எல்லா மதங்களின் அடிப்படை உண்மையும் ஒன்றே என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஏனெனில் அனைத்தும் ஒரே ஆதிமூலப் பொருளாகிய கடவுளிடமிருந்தே வெளிவருகின்றன. ஆனால், அவதார புருஷர் தமது பொது வெளிப்பாட்டிற்கு முன்பு, தக்க நேரம், சூழ்நிலைகள் மற்றும் மக்களிடையே நிலவும் மனநிலையைக் கருத்தில் கொள்கிறார். இவ்வாறு, அவர் அத்தகைய நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல மிகவும் பொருத்தமான கோட்பாடுகளைப் போதிக்கிறார்.

பாபா அப்போது பிரண்டனுக்கு ஒரு வித்தியாசமான விஷயத்தை எடுத்துக் கூறினார்:

இந்த நவீன சகாப்தத்தில், அனைத்து நாடுகளும், எவ்வாறு ஒருவருக்கொருவர் உடனடி தகவல் தொடர்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர் என்பதை நீங்கள் கவனித்தீர்களா? ரயில் வண்டிகள், நீராவி கப்பல்கள், தொலைபேசிகள், தொலைத்தந்தி, வானொலி மற்றும் செய்தித்தாள்கள் உலகம் முழுவதையும், நெருக்கமாக, பின்னிப்பிணைக்கப்பட்ட அலையாக எப்படி மாற்றியது என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? ஒரு நாட்டில் நடக்கும் ஒரு முக்கியமான நிகழ்வு, 10,000 மைல் தொலைவில் வாழும் மற்றொரு நாட்டு மக்களுக்கு, ஒரே நாளில் தெரியப்படுத்தப்படுகிறது. சமீபத்தில் நடந்த இந்த முன்னேற்றங்கள்

**அனைத்திற்கும் ஒரு சிறப்பு காரணம் உள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் வாழும் வெவ்வேறு இன மக்களுக்கும் சேவை செய்யும் உலகளாவிய ஆன்மீக நம்பிக்கையை, மனிதகுலத்திற்கு வழங்குவதற்கான நேரம் விரைவில் வர உள்ளது. வேறு ஒரு விதத்தில் கூறுவதானால், உலகளாவிய செய்தியை மனிதகுலத்திற்கு நான் வழங்கும் வழி தயாராகி வருகிறது.**

"ஆனால், உங்கள் பணி குறித்து உலகிற்கு எப்போது கூறுவீர்கள்?" என்று பிரன்டன் கேட்டார்.

**உலகமெங்கும் கலகமும், குழப்பமும் தோன்றும்போது - உலகம் பெரும் கிளர்ச்சிகள், பூகம்பங்கள், வெள்ளப் பெருக்குகள், எரிமலை வெடிப்புகள் ஆகியவற்றில் சிக்கித் தவிக்கும் போது - கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகள் இரண்டும், போரினால் பேரிடரை சந்திக்கும் போது மட்டுமே, நான் மௌனத்தைக் கலைத்து எனது செய்தியை வழங்குவேன், ஏனெனில், அப்போதுதான் நான் மிகவும் தேவைப்படுவேன்!**

"இந்தப் போர் எந்த நாள் தொடங்கும் என்று உங்களுக்குத் தெரியுமா?" பிரன்டன் வினவினார்.

**"ஆமாம், அது வெகு தொலைவில் இல்லை. ஆனால், தேதியை வெளிப்படுத்த நான் விரும்பவில்லை"** என்று பாபா குறிப்பிட்டார்.

"இது ஒரு பயங்கரமான தீர்க்கதரிசன பிரகடனம்!" என்று பிரன்டன் ஆச்சரியமடைந்தார்.

மெஹர் பாபா ஒரு கணம் சோகமாகத் தோற்றமளித்து, இவ்வாறு விளக்கினார்:

**ஆமாம், அப்படித்தான். இந்தப் போர் இயல்பாகவே பயங்கரமாக இருக்கும், ஏனெனில், விஞ்ஞான வளர்ச்சி, அதீத புத்தி கூர்மை இவையெல்லாம் இந்தப் போரை மேலும் தீவிரமடையச் செய்யும்.**

**இருப்பினும், இது ஒரு குறுகிய காலம் மட்டுமே நீடிக்கும் - சில மாதங்கள் - அது மிக மோசமான நிலையை அடைந்ததும், நான் பகிரங்கமாக என்னை வெளிப்படுத்தி, எனது பணியை முழு உலகிற்கும் அறிவிப்பேன்.**

**போருக்குப் பிறகு, தனித்துவமான அமைதியின் நீண்ட சகாப்தம் உருவாகும் - அதுவே உலக அமைதியின் காலம். ஆயுதங்களைக் கைவிடுதல் என்பது வெறும் பேச்சாக இல்லாமல், உண்மையாக நடப்பதைக் காணலாம். இன, வகுப்புவாத மோதல்கள் நின்றுவிடும். மத அமைப்புகளுக்கு இடையிலான குறுங்குழுவாத வெறுப்பு முடிவுக்கு வரும். நான் உலகம் முழுவதும் பரவலாகப் பயணம் செய்வேன், எல்லா நாடுகளும் என்னைப் பார்க்க ஆவலாக இருக்கும்.**

**எனது ஆன்மீகப் பிரகடனம் உலகின் ஒவ்வொரு பாகத்தையும், ஒவ்வொரு நகரத்தையும், ஒவ்வொரு கிராமத்தையும் சென்றடையும். உலகளாவிய சகோதரத்துவத்தை அதன் எழுச்சியில் கொண்டுவரும். மனிதர்களிடையே அமைதி நிலவும், ஏழைகள் மற்றும் தாழ்த்தப்பட்டோர்**

**மீது இரக்கம் வரும். அனைத்திற்கும் மேலாக அன்பே கடவுள் என்பதை உணர வைப்பேன்.**

"இந்தியாவின் எதிர்காலம் என்ன?" என்று பிரன்டன் கேட்டார்.

**இந்தியாவில், தீங்கு விளைவிக்கும் சாதி சமய அமைப்புகள் வேரோடு பிடுங்கி அழிக்கப்படும் வரை, நான் ஓய்வெடுக்க மாட்டேன். இது நிகழும்போது இந்தியா, தன்னை உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க நாடுகளில் ஒன்றாகக் கண்டுகொள்ளும். பல குறைபாடுகள் இருந்தபோதிலும், இந்தியா இன்னும் உலகின் மிகப்பெரிய ஆன்மீக நாடாகத் திகழ்கிறது. எதிர்காலத்தில், இந்தியா அனைத்து நாடுகளின் தார்மீக தலைவராக விளங்கும். மதங்கள் உருவாகக் காரணமாய் இருந்த மகத்தான தீர்க்கதரிசிகள் அனைவரும் கிழக்கில் பிறந்தவர்கள், மேலும் மக்கள் தொடர்ந்து கிழக்கு நோக்கியே ஆன்மீக ஒளியைத் தேட வேண்டும்.**

பிரன்டன் இதை ஒரு கணம் யோசனை செய்து, பின்னர், "ஐரோப்பா மிகவும் கடினமானதும், அனைத்தையும் சந்தேகத்தில் நோட்டமிடும் தன்மையும் படைத்த நாடு. அறிமுகமில்லாத மக்களை உங்கள் நம்பிக்கையின் முத்திரையாக மாற்றுவது எப்படி? சராசரி மேலைநாட்டவர் இது சாத்தியமற்றது என்று கூறி, உங்கள் செயல்களை எள்ளி நகையாடவும் செய்வர்!" என்று கூறினார்.

மெஹர் பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**ஆஹா! காலம் எவ்வளவு மாறும் என்பதை நீங்கள் இன்னும் உணரவில்லை. ஒரு முறை நான் அவதார புருஷன் என்று பகிரங்கமாக அறிவித்தால், எனது சக்தியின் தாக்கத்தை எவராலும் தாங்கிக்கொள்ள முடியாது! செயலற்ற ஆர்வத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் அல்ல, ஆனால், சந்தேகம் படைத்தவர்ளை நம்ப வைப்பதற்காகவே, எனது பணியின் ஆதாரமாக நான் அற்புதங்களை வெளிப்படையாகச் செய்வேன்.**

உரையாடல் முடிந்ததும், 'தங்குவதற்கு வேறு நல்ல வசதிகள் இருந்தும், மெஹர் பாபா தன்னை ஏன் ஒரு கல் குகைக்குள் அடைத்து வைத்துள்ளார் என்பது புரியவில்லை' என்று பிரன்டன் ஒப்புக்கொண்டார்; ஆனால், பாபா அவருக்கு வெளிப்படுத்திய விஷயங்களால் வெகுவாக ஈர்க்கப்பட்டார்.

நவம்பர் 24ஆம் தேதி நடந்த கடைசி சந்திப்பில், பிரன்டன் பாபாவிடம், "நீங்கள் ஒரு இறை தூதர், அவதார புருஷர் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

மெஹர் பாபா அவரது எழுத்துப்பலகை வழியாக இவ்வாறு பதிலளித்தார்:

**எனக்குத் தெரியும்! எனக்கு அது நன்றாகத் தெரியும். நீங்கள் ஒரு மனிதர் என்பதை நீங்கள் அறிவீர்கள், நான் அவதார புருஷன் என்பதை நான் அறிவேன். இதுவே எனது பரிபூரண வாழ்க்கை! எனது பேரின்பம் ஒருபோதும் தடைபடாத ஒன்று! நீங்கள், உங்களை வேறொருவர் என்று**

**தவறாக ஒருபோதும் கருதுவது இல்லை; அதுபோல, நான் யார் என்பதைத் தவறாகக் கருத முடியாது. நான் நிறைவேற்ற வேண்டிய ஒரு தெய்வீகப் பணி உள்ளது, நான் அதைச் செய்வேன்! எனது வெளிப்பாடு எதிர்காலத்தில் நிகழும், ஆனால், சரியான காலத்தை என்னால் கூற முடியாது.**

"தங்களை இறை தூதர்கள், அவதார புருஷர்கள் என்று கூறிக்கொள்ளும் மற்றும் பலர் உள்ளனர்" என்று பிரன்டன் குறிப்பிட்டார்.

பாபா புன்முறுவல் செய்து கொண்டே இவ்வாறு எடுத்துரைத்தார்:

**ஆமாம், கிருஷ்ணமூர்த்தி, திருமதி அன்னி பெஸன்டின் பாதுகாவலர். தியோஸொஃபிஸ்டுகள் தங்களை தாமே ஏமாற்றுகிறார்கள். அவர்களை ஆட்டிப் படைக்கும் தலைவன் திபெத்தில் அமைந்த இமயமலையில் எங்கேயோ இருக்கிறாராம். தூசி மற்றும் கற்களைத் தவிர, வேறு எதையும் நீங்கள் அங்கே காண மாட்டீர்கள். மேலும், ஓர் உண்மையான ஆன்மீக குருநாதர் வேறு ஒருவரின் உடலை, தனக்காகப் பயன்படுத்த வேண்டிய தேவையில்லை. இத்தகைய சிந்தனை முற்றிலும் கேலிக்குரியது!**

மெஹர் பாபா பின்னர் அமெரிக்காவைப் பற்றிக் கருத்துத் தெரிவித்தார்:

**அமெரிக்க தேசத்திற்கு மிகப்பெரிய எதிர்காலம் உள்ளது, மேலும் அது ஓர் ஆன்மீக சிந்தனை படைத்த நாடாக மாறும். நான், எந்த ஓர் இடத்தையும் பார்வையிட்டு, அங்குத் தங்கியிருக்கும் போதெல்லாம், அது எவ்வளவு குறுகிய நேரமாக இருந்தாலும், அதன் ஆன்மீக அந்தஸ்து மிகையாக உயரும் - நான் அமெரிக்காவுக்குச் செல்ல விரும்புகிறேன்.**

**"மேற்கத்திய நாடுகளுக்கு என்னுடைய பிரதிநிதியாகச் செல்லுங்கள்! தேவதூதராக வரவிருக்கும் எனது பெயரைப் பரப்புங்கள். எனக்காகப் பணி புரியுங்கள், அது நீங்கள் மனிதகுலத்தின் நன்மைக்காக உழைப்பதற்கு சமமாகும்"** என்று கூறி, பிரண்டனுடனான சந்திப்பை பாபா நிறைவு செய்தார்.

பிரன்டன் திடுக்கிட்டு பாபாவை நோக்கி, "என்னால் அதைச் செய்ய முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை; உலகம் என்னைப் பைத்தியம் என்று பட்டம் கட்டும்."

பாபா, அவர் தவறாகப் புரிந்து கொண்டதாக எடுத்துக்கூறி, **"மேற்கத்திய நாடுகளில் என்னுடைய பணியைச் செய்ய நான் உங்களுக்கு உதவுவேன்"** என்று உறுதியளித்தார்.

மெஹர் பாபா, பிரண்டனிடம் பூனாவில் ஹஸ்ரத் பாபாஜானை சந்திக்கவும், பஞ்ச்கனியில் அமைந்த டைகர் வேலி குகை, பின்பு கோலாப்பூர் உயர்நிலைப் பள்ளி மற்றும் மெட்ராஸ் மையத்தைப் பார்வையிடவும் அறிவுறுத்தினார். ஒரு கட்டத்தில் உரையாடலின் போது, பாபா, பிரண்டனுக்கு இவ்வாறு விளக்கினார்:

**பாதங்கள், பிறரின் மனப்படிவங்களை ஏற்றுக் கொள்ளவும், அதே வேளையில் நெற்றி, மனப்படிவங்களை வெளியாக்கும் அளவுக்கும் சக்தி**

**வாய்ந்தவை. இதனால்தான், பக்தர்கள் சத்குருவின் கால்களில்** (குறிப்பாக மிகவும் வலிமையான கால் விரல்களில்) **தங்கள் நெற்றிகளை வைத்து வணங்கும் வேளையில், அவர்களின் ஒரு சில மனப்படிவங்களை குருநாதர், உணர்வுபூர்வமாக தன்னுள் ஏற்றுக்கொள்கிறார். அதுபோல, பிறர் உங்கள் பாதங்களைத் தொட நீங்கள் அனுமதித்தால் அதே செயல்முறை உங்களிடையேயும் நிகழும்; எனவே அதை ஒருபோதும் அனுமதிக்காதீர்கள்; ஆனால், அப்படி நிகழ்ந்தால், உடனடியாக உங்கள் நெற்றியை அந்த நபரின் பாதங்களில் வைக்கவும்; அது உங்களின் மனப்படிவங்களில் சிலவற்றை ஈடுகட்ட உதவியாக இருக்கும்.**

பால் பிரன்டன் பூனாவில் ஹஸ்ரத் பாபாஜானை சந்திக்கச் சென்றார். பாபாஜானை எதிர்கொள்ள பிரன்டன் முன் சென்ற போது, அவர் கையைப் பிடித்து, கண்களை உற்றுப் பார்த்து, பின்பு மெதுவாக, பலவீனமான குரலில், **"அவன் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டான், விரைவில் அவன் புரிந்துகொள்வான்"** என்றார்.

நவம்பர் 27ஆம் நாள் மெஹர் பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **"என்னுடைய ஏகாந்தவாசத்தில் தடைகள் ஏற்பட்டுள்ளன; நான் அதைத் தடையில்லாமல் தொடர வேண்டும். இனிமேல், நான் இருக்கும் இடத்தை ரகசியமாக வைத்திருக்கப் போகிறேன்."**

மெஹர் பாபா, சாஞ்சி மற்றும் இரண்டு மண்டலியுடன் புறப்பட்டு டில்லிக்குப் பயணம் செய்து, மூன்று வாரங்கள் அங்கே தங்கியிருந்தார். அங்கு நடந்தது என்னவெனில், சாஞ்சி மூலமாக வேறு வேறு அரசியல் தலைவர்களுக்குப் பல்வேறு செய்திகளை அனுப்புவதில், பாபா தீவிரமாக ஈடுபட்டார், இதன் மூலம் அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தினார். பாபா, அரசியல்வாதிகளை நேரில் சந்திக்காமல், சாஞ்சியைத் தனது தூதராகப் பயன்படுத்தினார்.

டிசம்பர் 23ஆம் நாள் பாபா, மெஹராபாத் திரும்பி வந்தார்.

மெஹர் பாபா, ஸொராஸ்ட்ரிய இனத்தின் மூல வம்சாதார வழிகளைக் குறித்து மண்டலிக்கு எடுத்துரைத்தார்:

**ஸொராஸ்ட்ரிய வம்சம் மிகவும் பழமையானது - கிட்டத்தட்ட 6,000 ஆண்டுகள். பிரபல மன்னர்களான ஜால், ருஸ்தம் மற்றும் ஜாம்ஷெட் ஆகியோரின் ஆட்சிகள் ஸொராஸ்டருக்கு முன்னர் இருந்தன - கிட்டத்தட்ட 100,000 ஆண்டுகளுக்கு முன்பு! இத்தகைய பழங்கால வரலாற்றை யார் நம்பிக்கையுடன் பதிவுசெய்து பாதுகாக்க முடியும்?**

**பார்ஸிகள் இன்று பின்பற்றும் மதத்தில் எதுவும் இல்லை. ஸொராஸ்டர் வழங்கிய போதனைகள் அனைத்தும் நெருப்பில் அழிக்கப்பட்டன; எனவே, அவர்களிடம் இருப்பது, ஒரு பின்தங்கிய**

**சிந்தனை; மேலும் ஸொராஸ்டர் உண்மையில் போதித்தது, முற்றிலும் மாறுபட்டது. இது ஒரு பரிதாபகரமான நிலை, ஆனால், உண்மை.**

1931, ஜனவரி 9ஆம் நாள், மெஹர் பாபா நாசிக் சென்ற போது, பெண் மண்டலியுடன் அதிக நேரம் செலவிட்டார். ஒரு நாள் அவர் பெண்மணிகள் அனைவரையும் ஒன்றிணைத்துக் குறிப்பிட்டார், "**உங்கள் அனைவரிடமும் எனக்கு மிகுந்த அன்பு உள்ளது, மேலும், அது எனக்கு பெரும் பிரச்சினையாக இருக்கிறது.**"

அதிர்ச்சியடைந்த மெஹரா, நாஜா மற்றும் கோர்ஷெத் ஆகியோர், "பாபா, எங்களால் நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று வருத்தம் கலந்த குரலில் கூறினர்.

ஒரு கணம், ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பவர் போலத் தோற்றமளித்த பாபா, "**அப்படியானால், என் அன்பு உங்களுக்கு வேண்டாம் என்று அர்த்தமா?**" என வினவினார்.

அனைத்து பெண் மண்டலியும், உடனே, "அப்படி இல்லை, பாபா! உங்களின் ஆழ்ந்த அன்பிற்காக நாங்கள் பிரார்த்தனை செய்கிறோம், ஆனால், எங்களால் நீங்கள் துன்பப்படுவதை நாங்கள் விரும்பவில்லை" என்று கூக்குரலிட்டனர்.

பாபா இவ்வாறு விளக்கமளித்தார்: "**நான் யாரை நேசிக்கிறேனோ அவர்களுக்காகக் கவலைப்படுகிறேன்; அன்பை செலுத்துபவன் அன்பிற்குரியவனுக்காகத் துன்பப்படுகிறான், ஆனால், அன்பிற்குரியவன் தன் மீது அன்பை செலுத்துபவனுக்காக மிகவும் கஷ்டப்படுகிறான். என் அதிர்ஷ்டம், எனது தலைவிதி அப்படித்தான் - தொல்லைகள், அசௌகரியம், துன்பம் மற்றும் அதிருப்தி நிறைந்தவை - ஏனெனில் நான் அனைவருக்கும் பிரியமானவன்!**"

அப்போது பாபா, பெண் மண்டலியிடம், கீழ்வரும் ஈரடி ஹிந்தி பாடலைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார்:

**காட்டில் குயில்கள் பாடுகின்றன! பிரியமானவர்**
**நம்மை, நம் குழந்தை பருவத்திலேயே விட்டுச்சென்றார்!**

பெண் மண்டலி அதைப் பாட முயற்சித்தது, பாபாவைப் பெரிதும் மகிழ்வித்தது.

அந்நாட்களில், பெண் மண்டலி அவர்களுக்கெனத் தனியாக ஒதுக்கப்பட்ட வளாகத்தில் தங்கி வந்தனர். நீளமான கை வைத்த ரவிக்கையும், சாதாரண பருத்தி புடவையும் அணிந்து வந்தனர். அவர்கள் அடக்கமாக உடை அணியவும், தலைமுடியை எல்லா நேரங்களிலும் முந்தானையால் மூடிக்கொள்ளவும் கட்டளையிடப்பட்டது.

நாசிக் நகரில் 70 வயதான மேல்நிலை 'மஸ்த்' ஒருவர், கோதாவரி நதிக்கரையில் அமைந்த கோவிலில் வசித்து வந்தார். உள்ளூர் மக்கள் அவரை

'பாபா' என்று அழைத்தனர். ஒருமுறை இவரைப் பற்றி பாபா குறிப்பிடுகையில், இவ்வாறு வெளிப்படுத்தினார்: **"அவர் கந்தல் ஆடையுடன் ஒரு பிச்சைக்காரனைப் போலத் தோற்றமளித்தாலும், அவர் ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் வாழும் வாலி, நாசிக் நகரின் ஆன்மீகப் பொறுப்பாளர்."** பாபாவின் அறிவுறுத்தல்படி காக்கா பாரியா, அவ்வப்போது அந்த வாலியைப் பார்க்கச் சென்றார்.

இதற்கிடையில், 1931, பிப்ரவரி 9ஆம் நாளன்று, பாபாவின் அழைப்பின் பேரில் ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா நாசிக்கில் நிரந்தரமாகத் தங்க வந்தார். பாபாவின் மும்பை பயணத்தின்போது, பலமுறை ஃபெராம் பாபாவை சந்தித்தது உண்டு; மேலும் ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் ஒரு தட்டச்சுக்காரராகப் பணிபுரிய நாசிக் வருமாறு பாபா அழைத்தார்.

ஃபெராம் தொடர்பாக ஒரு நகைச்சுவையான கதை உள்ளது. அவர் ஸாக்கோரியில் உபாஸனி மஹாராஜுடன், முன்பு தொடர்பு வைத்திருந்தார். ஒரு நாள் ஃபெராம், மஹாராஜ், 'இது அவரது கடைசி பிறவி' என்று உறுதியளித்ததாக மெஹர் பாபாவிடம் கூறினார்.

மஹாராஜின் வாக்குறுதியை அப்படியே நிறைவேற்றுவதாக பாபா அவருக்கு உறுதியளித்தார்; ஆனால், அதற்குப் பிறகு, ஃபெராம் ஏன் இன்னொரு பிறவியெடுத்துத் திரும்பி வருவதை விரும்பவில்லை என்று பாபா கேட்டதற்கு, ஃபெராம் இவ்வாறு பதிலளித்தார்: "பாபா, நான் சிறுவனாக இருந்த நாளிலிருந்தே பள்ளிக்கூடம் செல்வதை வெறுத்தேன். எப்போதாவது திரும்பி வந்து மீண்டும் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் எனக்கு பயமாக இருக்கிறது. எனவே நான் பள்ளியை வெறுக்கிறேன்!" பாபா சிரித்துக்கொண்டே ஃபெராமின் பதிலை மண்டலிக்கு எடுத்துரைத்தார்.

1931, பிப்ரவரி 1ஆம் நாள், பால் பிரன்டன் அவரது இந்திய பயணத்தை நிறைவுசெய்து, பல்வேறு நகரங்களில் வாழும் மெஹர் பாபா பக்தர்களையும் சந்தித்த பின்பு, நாசிக் வந்து சேர்ந்தார். பாபா, அவரிடம் ஏன் இவ்வளவு மனச்சோர்வுடன் இருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, பிரன்டன் "என் மனம் பெரும் குழப்பத்தில் உள்ளது; இந்தியாவில் நான் சந்தித்த ஒரு டஜன் அல்லது அதற்கும் மேலான புனிதர்கள் அனைவரும் அவர்களைத் தீர்க்கதரிசிகள், சத்குருக்கள் அல்லது அவதார புருஷர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்!" என்று பதிலளித்தார்.

பாபா புன்முறுவல் செய்து கொண்டே தெரிவித்தார், **"ஆமாம், நானும் அவர்களில் பலரைப் பற்றிக் கேள்விப்பட்டேன்."**

"நீங்கள் அதை எப்படி விளக்குகிறீர்கள்?" என்று பிரன்டன் கேட்டார்.

பாபா, அதற்கு இவ்வாறு பதிலளித்தார்:

**"அவர்கள் நேர்மையானவர்களாக இருந்தால், வெறுமனே ஏமாற்றப்படுகிறார்கள். அவர்கள் நேர்மையற்றவர்களானால், பிறரை**

**ஏமாற்றுகிறார்கள், அதற்காக அவர்கள் பெரும் துன்பங்களை சந்திக்க வேண்டியிருக்கும். அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். இந்த மனிதர்கள் அனைவரும், அறியாமலே, எனது பணியைச் செய்ய உதவுகிறார்கள் "நான் யார் என்று எனக்குத் தெரியும். எனது பணியை நிறைவேற்ற வேண்டிய நேரம் வரும்போது, நான் யார் என்பதை முழு உலகமும் அறிந்து கொள்ளும்."**

நாசிக் ஆஷ்ரமத்தில், பிரன்டன் ஆண் மண்டலியுடன் தங்குவதற்காக அனுமதிக்கப்பட்டார். கொல்கத்தாவிலிருந்து பிரன்டன், பாபாவிற்கு இவ்வாறு எழுதியிருந்தார், "பிற்காலத்தில் உங்களின் வழியாக ஆன்மீக அறிவொளியைப் பெறுவதற்கு நான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்; நான் மேற்கத்திய நாடுகளுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமாயின், அவர்களின் உலகப்பொருள் சார்ந்த, மனங்களுக்கு உகந்த செய்திகளை நான் எடுத்துச் செல்லவேண்டும்." அவர் ஒரு வாரம் நாசிக்கில் தங்கியிருந்த வேளையில், பாபா பெரும்பாலும் அவரிடமிருந்து விலகி இருந்தார். பிரண்டனின் கேள்விகளை வரவேற்று, சுருக்கமாக பதிலளித்தார். சாஞ்சி மற்றும் ராம்ஜூவின் குறிப்புப் புத்தகங்களையும் படித்து பல விஷயங்களைத் தெரிந்துகொண்டார். ஆனால், ஒட்டுமொத்தத்தில் அவர் மெஹர் பாபாவின் இறை தன்மையை சந்தேகக் கண்களால் பார்த்தார்.

எதுவாயினும், காலம் நமக்கு இவ்வாறு நினைவூட்டுகிறது, "அவதார புருஷர் மர்மமான முறைகளில் செயல்படுகிறார்; அவரை எதிர்ப்பவர்களும் அவருக்கான வேலையைச் செய்கிறார்கள்."

பிரண்டனின் மனதில் எதிர்ப்புத்தன்மை தோன்றும் விதத்தில் மெஹர் பாபா ஒரு ரகசிய நோக்கம் கொண்டிருந்தார்; இதனால் பாபாவிற்கு எதிராக, எழுத்துக்கள் மூலம் தாக்குதல்களை ஏற்படுத்தினார். இந்தியாவில் கர்னல் ஈரானியை எதிராகத் தூண்டிவிட்டது போல, மேற்கத்திய நாடுகளிலும் குறிப்பாக ஐரோப்பா, அமெரிக்க நாடுகளிலும் பெயர்போன, செல்வாக்குமிக்க ஒருவர் தேவைப்படுகிறார் என்பதுதான் உண்மை.

இந்தப் பணிக்காக பாபா, பிரண்டனைத் தேர்ந்தெடுத்தார், ஏனெனில் பிரண்டனின் விரோத வார்த்தைகள் மற்றும் விமர்சனங்கள் மூலம் பாபா அவருடைய சில பணிகளை இப்படிச் செய்ய வேண்டியதாயிற்று.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, பால் பிரன்டன் 'எ ஸெர்ச் இன் ஸீக்ரெட் இந்தியா' (A SEARCH IN SECRET INDIA) என்ற பெயரில் ஒரு பிரபலமான புத்தகத்தை வெளியிட இருந்தார்; இதில் மெஹர் பாபாவை விமர்சனம் செய்தாலும், இதனால் பல ஐரோப்பியர்கள் மற்றும் அமெரிக்கர்களை அவர் அரவணைப்பில் கொண்டுவர வழிவகுத்தது.

ஒரு பதற்றமான மனநிலையில், பிரன்டன் 1931 பிப்ரவரி 8ஆம் நாள் நாசிக் நகரிலிருந்து புறப்பட்டு, லண்டனுக்குத் திரும்புவதற்கு முன்பு, தென்னிந்தியாவில் வாழும் சாது ரமண மஹரிஷியின் ஆசிரமத்திற்குப்

பயணம் செய்தார். அவர் சந்தித்த அனைத்து குருநாதர்களிலும், பிரன்டன் ரமண மஹரிஷியால் வெகுவாகக் கவரப்பட்டார்.

'மெஹர் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?' என்று பிரன்டன் ரமண மஹரிஷியிடம் கேட்டபோது, அவர் 'ஆமாம்' என பதிலளித்தார். 'மெஹர் பாபா அவரை அவதார புருஷர் என்று கூறுவதோடு, நீங்கள் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?' என்று பிரன்டன் கேட்டதற்கு, ரமண மஹரிஷி, "நான் என்ன சொல்ல வேண்டும்?" என வினவினார்.

இது சத்தியத்தை நாடுபவர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய கேள்வி. ஏணியின் கீழ் மட்டத்தில் இருக்கும் மக்கள், இதுபோன்ற எல்லா கேள்விகளிலும் தங்கள் சக்தியை வீணாக்குகிறார்கள்.

"உலகம் புத்துயிர் பெற்று சிறப்படையுமா?" பிரன்டன் வினவினார்.

அதற்கு ரமண மஹரிஷி, "உலகை நிர்வகிப்பவர் ஒருவர் இருக்கிறார், உலகை கவனிப்பது அவருடைய பொறுப்பு. உலகிற்கு உயிரைக் கொடுத்த அவருக்கு, அதை எவ்வாறு வழிநடத்துவது என்பதும் தெரியும்" என்று பதிலளித்தார்.

மஹரிஷி மேலும் பிரண்டனிடம், "இறைநிலையை அடைந்தவர்களின் ஆன்மீகத் தாக்கத்தின் அதிர்வலைகள் பலரை அவர்களை நோக்கி - அவர்கள் ஒரு குகையில் அமைதியாக அமர்ந்திருந்தாலும் - ஈர்க்கும் சக்திவாய்ந்தது" என்றார்.

1931 பிப்ரவரி 11 அன்று, பாபா சில மண்டலியுடன் பூனா சென்று, சதாஷிவ் பாட்டீலின் புதல்வியின் திருமணத்தில் பங்கெடுத்து, ஏழை, பணக்காரர்கள் என்ற பாகுபாடின்றி, அனைவருக்கும் தரிசனம் வழங்கினார்.

அதற்குப் பிறகு தாய் தந்தையர், தங்கை மணி அனைவரையும் சந்திக்க அவரது குடும்ப வீட்டிற்குச் சென்றார். வீட்டில் நுழையும் போது, போபோ, மெஹர் பாபாவின் புகைப்படத்தின் அருகில் அதைத் தொழுத வண்ணம் நின்று கொண்டிருந்தார். பாபா, தந்தையை மிகவும் அன்போடும், அருளோடும் தழுவி அரவணைத்தார். 'போபோ சந்தேகத்திற்கு இடமின்றி, ஓர் உண்மையான துறவி' என்று காலம் குறிப்பிட்டது, 'அவரது இதயத்தின் தீவிர ஏக்கத்திற்கு விடையளிக்கும் விதமாக, எல்லையில்லா இறைவன், தனது மகனாக மனித உருவில் வந்தது - சத்தியத்தைத் தேடி அலைந்து திரிந்த ஷெரியார்ஜிக்கு, ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.'

பாபா, மணியைப் பாசமாக முத்தமிட்டு, அவளுடன் சில விஷயங்களைப் பற்றி விவாதித்தார். அவளுக்கு அப்போது பன்னிரண்டு வயது என்றாலும், விரைவில் மணி, பெண் மண்டலியில் ஒருவராக இணையும் தருணம் காத்திருந்தது. இந்த சந்தர்ப்பத்தில்தான் பாபா முதன்முதலாக, மணி தனது பெண் மண்டலியில் ஒருவராக இணையப் போவதைச் சுட்டிக்காட்டி, "**மணி எனக்குச் சொந்தமானவள்**" என்று தாயாரிடம் தெரிவித்தார்.

ஆனால் மெமோ, மணி வீட்டில் உடனிருக்க விரும்பினார்; மேலும் பாபா கூறியது, தாயார் ஷிரீனைக் கவலைக்குள்ளாக்கியது, மணியும் ஆஷ்ரமத்தில் இணைந்தால், அவர்களின் குழந்தைகளில் ஒருவரும் தாய் தந்தையருடன் பூனாவில் இருக்க மாட்டார்கள்; ஏற்கனவே ஆதி ஜூனியர், பெஹராம், ஜால்பாய் மூவரும் பாபாவுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

1931, பிப்ரவரி 17ஆம் நாள் மெஹர் பாபாவின் 37ஆவது பிறந்தநாள் நாசிக்கில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மெஹர் பாபா அவரது புதிய உடையில், ராஜகம்பீர தோற்றமளித்தார். ஆனால், குல்மாய், மெமோ இருவருக்கும் இடையே உருவான கடுமையான வாக்குவாதம், வார்த்தைகளாய் வெடித்து, நிலைமை அமைதி குலைந்து காணப்பட்டது. குல்மாய் முதலில் பாபாவிற்கு மாலை அணிவித்தார், ஆனால், இந்த மரியாதை முதலில் மெமோவுக்குத் தந்திருக்க வேண்டும் என மெமோ வாதாடினார். பாபாவே தலையிட்டு, விரைவில் 'அவரது தாய்மார்கள்' இருவரையும் சமாதானப்படுத்தினார்.

இத்தகைய மோதல்கள் மெஹர் பாபாவின் உள்பணிகளின் அற்புதமான வெளிப்பாடுகள், அவை எப்பொழுதும் அவருடன் நெருங்கியவர்களிடையே நிகழ்வது வழக்கம்.

குருநாதர், உண்மையில், சில நபர்களைப் பிறரிடம் விரோதமாக இருக்க ஊக்குவிப்பார்; கசப்பான உணர்வுகளை உருவாக்குவது, பெரும்பாலும் உரத்த மற்றும் நீண்ட வாதங்களுக்கு வழிவகுக்கும். பொதுவாக வெவ்வேறு நபர்களுக்கிடையே, குறிப்பாக மண்டலியிடையே, ஒரு சர்ச்சைக்குரிய சூழ்நிலையை உருவாக்குவது, ஆனால், இவை அனைத்தும் வேறு வேறு நோக்கத்திற்காக நிகழ்ந்தன. இதுபோன்ற கசகசப்புகள், சகிப்புத்தன்மையைக் கற்றுக் கொடுப்பதோடு, அவர்களின் அகந்தையை சிதறடிப்பதிலும், சத்தியத்தின் பாதையில் அவர்களை அழைத்துச் சென்று, அன்பிற்குரியவரின் பாதங்களில் அடிபணிய வைப்பதிலும் மண்டலிக்கு உதவியாக இருந்தன. குருநாதருடன் வாழ்வது ஒருபோதும் எளிதல்ல, அதேவேளையில், நெருங்கிய மண்டலி ஒவ்வொருவரும் 'இறப்பிலும் வாழ்வது எப்படி' என்பதை அனுபவபூர்வமாகக் கண்டு கொண்டனர். ஒரு குருநாதரின் நேரடி கண்காணிப்பில் இருப்பது 'நான்' எனும் தவறான சுய ரூபத்தை வாழும்போதே சாகவைக்கும் நிலையாகும். மெஹர் பாபாவின் வட்டத்தில் வாழும் இந்த அற்புதமான ஆத்மாக்களின் வாழ்க்கையை, எந்த ஒரு பேனாவின் வலிமையாலும் எழுத்திலோ அல்லது செயலிலோ நியாயப்படுத்த முடியாது, அனுபவத்தினால் மட்டுமே உணரமுடியும்.

ஒரு நாள், மெஹர் பாபாவை நன்கு அறிந்த ஒருவர், அவரிடம் வந்து, வறுமையில் தள்ளப்பட்டு சிரமப்படும் கதையை எடுத்துரைத்தார். பாபா அவரிடம் வெளிப்படையாக விளக்கினார், "**என்னிடம் பணம் எதுவும் இல்லை.**

**எனது மண்டலி பசியால் அவதிப்படுகிறார்கள்; நானும் அவர்களின் உணவுக்கு எவரேனும் ஏற்பாடு செய்வார்களா என்று தேடிக் கொண்டிருக்கிறேன். எனது ரத்தின கற்களாகிய மண்டலி, வறுமையிலும் எனக்காக உயிரை தியாகம் செய்வதை ஒரு சாதாரண விஷயமாகக் கருதுகிறார்கள்."**

வந்த மனிதர் அமைதியாக இருந்து, பின்னர் அங்கிருந்து புறப்பட்டார். உடனே, புவாஸாஹேபை அழைத்து பாபா, **"அந்த மனிதரைப் பின்தொடர்ந்து அவருக்கு 100 ரூபாய் கொடுத்து வாருங்கள்"** என்று கூறினார்.

புவாஸாஹேப் ஆச்சரியத்துடன் பார்த்து, "இரவும் பகலும் நாங்கள் எங்கள் மூளைகளைத் துளைத்து பணத்திற்காக முயற்சிக்கிறோம்! ஆனால், நீங்கள் அவருக்கு 100 ரூபாய் கொடுக்க விரும்புகிறீர்களா?" என வினவினார்.

**"அப்படியானால் அவருக்கு 200 ரூபாய் கொடுங்கள்"** என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

பாபா கூறியதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தாலும், புவாஸாஹேப் புத்திசாலித்தனமாக அமைதியுடன் இருந்தார். அவர் மனதில் எண்ணங்கள் அலை பாய்ந்தன: "பாபாவை நான் நன்கு அறிவேன், நான் இன்னும் ஏதாவது சொன்னால், 200 ரூபாய் என்பது 500 ரூபாயாக மாறிவிடும்." எனவே அவர் விவேகத்துடன் வெளியேறி அந்த மனிதருக்கு 200 ரூபாயைக் கொடுத்தார்.

மெஹர் பாபா, அவருடைய எதிர்கால திட்டத்தை எவருக்கும் வெளிப்படுத்தவில்லை. 1931, ஏப்ரல் 22ஆம் நாள், 'ஃப்ரான்டயர் மெயில்' ரயிலில், ஆகா அலி, புவாஸாஹேப், சாஞ்சி, குஸ்தாஜி, ராவ்ஸாஹேப் ஆகியோருடன் லாஹூருக்குப் புறப்பட்டார்.

லாஹூரிலிருந்து ஆகா அலி, சாஞ்சி இருவருடன் பாபா, கராச்சி நகருக்கு வந்து பீலாமாய் வீட்டில் தங்கியிருந்தார். அலியை மகிழ்விப்பதற்காக, பாபா அடிக்கடி இவ்வாறு குறிப்பிட்டார், **"நம்பிக்கையற்ற சூழ்நிலையுடன் கூடிய இந்தக் கடினமான காலங்களில், அலி மட்டுமே எனக்கு ஆறுதலையும் மனநிம்மதியையும் தருகிறான்."**

1931 ஏப்ரல் 30 அன்று, கராச்சி மேயர், ஜாம்ஷெட் மேத்தா பாபாவை சந்திக்க வந்தார். பாபா அவரது நேர்மையான முயற்சிகளையும், தன்னலமற்ற சேவை மற்றும் ஏழைகளைப் பரிவோடு நடத்தும் முறையையும் பாராட்டினார்:

**உங்களின் நேர்மையான வேலை, தன்னலமற்ற சேவை, குறிப்பாக, தாழ்த்தப்பட்ட ஏழைகளுக்குச் செய்யும் சேவையில், நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் சொந்த நலன்களைத் தியாகம் செய்து, பற்றற்ற முறையில் பணி புரிகிறீர்கள். உங்களின் தனித்துவமான, பாராட்டத்தக்க செயல்கள் அனைத்தையும் நான் அறிவேன். இத்தனை பெரிய பதவியில் நேர்மையாக இருப்பவர்கள் மிக அரிது.**

**பிறருக்கு சேவை செய்யும் இந்த நேர்மையான, மனிதாபிமான முயற்சிகள் அனைத்தையும் தாண்டி, இறை நிலையை அடைவது என்பது வெகு தொலைவில் உள்ளது. அகந்தையை அவ்வளவு எளிதாக அழிக்க முடியாது. அகந்தை மறைந்து போவது மிகவும் கடினம், ஆனால், கடவுளை அடைவதற்கு முன்பே அது மறைந்து போக வேண்டியது அவசியம்.**

**மனிதகுலத்தின் நன்மைக்காகப் பாடுபடும், உன்னதமான தொண்டர்கள் மற்றும் நேர்மையான தொழிலாளர்கள் கூட, 'நான் இதைச் செய்தேன்' அல்லது 'நான் அதைச் செய்தேன்' என்று எண்ணுவது உண்டு. இது போன்ற எண்ணம் மிகவும் அழிவுகரமானது, ஆபத்தானது, ஏனெனில் இது, செய்த சேவையின் மேன்மை மற்றும் மதிப்பை சின்னாபின்னமாக்கி விடுகிறது.**

பாபாவின் விளக்கமான அறிவுரைகள், ஜாம்ஷெட் மேத்தாவின் இதயத்தில் ஆழமாகப் பதிந்தன. அன்று மாலையில் பாபா, கராச்சி மற்றும் மனோரா புறநகர் பகுதி சேரிகளுக்கு விஜயம் செய்தார்.

மெஹர் பாபா கராச்சியில் இருந்தபோது, நரிமன் தாதாசாஞ்சி மறுபடியும் அவரை சந்திக்க வந்தார். நரிமன் கராச்சி கல்லூரியில் பயின்று வந்தார், ஒரு முறை பாபாவை மும்பையில் சந்தித்தார். ஆரம்பத்திலிருந்தே, நரிமன், பாபா மீதான அன்பில் மௌனமாக இருந்தார், அவருடைய ஆழ்ந்த உணர்வுகளை ஒருபோதும் வார்த்தைகளால் வெளிப்படுத்தியது கிடையாது. இருவரும் என்ன ரகசிய உரையாடல்களைப் பரிமாறிக்கொண்டனர் என்பது பாபாவிற்கு மட்டுமே தெரியும்!

மே 1 அன்று அனைவரும் குவெட்டா வந்து, பாபா, ரூஸி ஈரானி வீட்டில் தங்கியிருக்க, மண்டலி பக்கத்து பங்களாவில் இருந்தனர்.

ரூஸியின் இரண்டு பெண் குழந்தைகள் கோஹெர், 15, கேட்டி, 11 வயது சிறுமிகள்; மெஹர் பாபாவைப் பெரிதும் நேசித்தனர். பாபா அவர்கள் வீட்டிற்கு வந்தபோது, கேட்டியின் சகோதரர் பாபாவைப் பார்க்க அவளைத் தூண்டினார். கேட்டி வெட்கத்தில் அமைதியாக பாபாவின் அறையின் ஒரு மூலையில் அமர்ந்திருந்தாள். அவளைப் பார்த்து பாபா, **"என் அறையில் அமர்ந்திருக்கும் இந்த சிறிய மலர் யார்?"** என்று கேட்க, அவளது தாயார் கோர்ஷெத், கேட்டி என பதிலளித்தார். பாபா அருகில் அழைத்தபோது வெட்கத்தில் தலைகுனிந்த கேட்டி, சிறிது நேரத்தில் சகஜமாகப் பேசி, பழக ஆரம்பித்தாள்.

ஒருமுறை, கோர்ஷெத் ஒரு தட்டு நிறைய செரி பழங்களை, பாபாவின் அறைக்கு எடுத்துச் சென்ற வேளையில், பாபா அதில் ஒன்றை எடுத்து, கேட்டியிடம் நீட்டினார். கேட்டி, அந்தப் பழம் பாபாவிற்கு மட்டுமே என நினைத்து, "இல்லை பாபா, மிக்க நன்றி, இது உங்களுக்காக" என்றதும், பாபா, கோபத்தில் சாஞ்சியிடம் சைகையால் தெரிவித்தார்: **"நான் வழங்கியதை வாங்க மறுத்துவிட்டாள்! என் அன்பளிப்பின் முக்கியத்துவம் அவளுக்குத்**

**தெரியாதா? நான் ஏதாவது கொடுக்கும்போது, அதை வேண்டாம் என்று சொல்லக்கூடாது என்பது அவளுக்குத் தெரியாதா?"**

கேட்டி அழத் தொடங்கியதும், பாபா, சாஞ்சியிடம் விளக்கிக் கூறுமாறு இவ்வாறு எடுத்துரைத்தார், "**நான் ஒன்றைக் கொடுக்கும்போது, ஒருவருக்குப் பிடிக்கவில்லை என்றாலும், அவர் அதை வேண்டாம் என்று சொல்லக்கூடாது.**" பாபா பின்பு கேட்டியை அன்பாகத் தழுவி, "**நான் கொடுப்பதை வாங்க மறுக்கக்கூடாது என்பதை எப்போதும் நினைவில் கொள்வாயா?**" என்றார்.

கேட்டி உடனே, "சரி, பாபா" என்று பதிலளித்தாள். பாபா ஒரு பெரிய பழத்தைக் கையிலெடுத்து அவள் வாய்க்கு எதிரே கொண்டு வந்தார். கேட்டி தனது வாயை அகலமாகத் திறக்க, பாபா, அதை வேகமாகத் தனது வாயிலிட்டு உண்டார். கேட்டி, பாபாவின் தந்திரத்தைப் பார்த்து சிரித்தாள்; அத்துடன் அவளுடைய அச்சமும் மாயமாக மறைந்தது.

ஒருமுறை கேட்டி, தனது பள்ளிக்கூட பாடத்தில் மும்முரமாக இருந்தபோது, பாபா அறைக்குள் நுழைந்து, அவள் என்ன செய்கிறாள் என்று கேட்டார். கேட்டி ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்று கூறியதும், பாபா அந்த முழுக் கட்டுரையையும் எடுத்துக் கூறி, பின்னர் அது எப்படி இருந்தது என்று கேட்டார். "அற்புதம்," கேட்டி பதிலளித்து, "ஆனால், இவ்வளவு அழகான கட்டுரையை நான் எழுதவில்லை என்பதை ஆசிரியர் கண்டுகொள்வார்" என்றாள்.

பாபா சைகையால், "**அப்போது நீ என்ன சொல்வாய்?**" என்று கேட்டார்.

"அதை நானே எழுதினேன் என்று அவரிடம் கூறுவேன்" என்று கேட்டி சிறுவர்களுக்கான துருதுருப்புடன் பதிலளித்தாள். பாபா அவள் காதைப் பிடித்துத் திருகி, "**ஒருபோதும் பொய் சொல்லாதே! ஒருவருடன் கலந்து, பேசிய பின்னர் எழுதியதாகச் சொல்லவேண்டும்**" என்று எடுத்துக் கூறினார்.

பாபா, வேறொரு தருணத்தில், கேட்டி மீது தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். மாடிப்படிகளில் இறங்கி வந்த பின்பு, பாபா, கேட்டியைப் பார்த்து, தனது சுண்டு விரலை அவளிடம் காண்பித்தார் (இந்திய குழந்தைகளிடையே இது ஒருவருக்கொருவர் விரோதிகளாக இருப்பதற்கான அறிகுறி, மேலும் இனிமேல் பேச்சு வார்த்தைக்கு இடம் இல்லை என்பதைக் குறிக்கிறது!) வருத்தத்தோடு கேட்டி, பாபாவைத் திரும்பி வருமாறு அழைத்தாள்.

பாபா, உடனே திரும்பி வந்து, இருவரும் கைகளைக் குலுக்கி, "**சரி, நாம் நண்பர்களாக இருப்போம்**" என்று கூறி, ஒன்றை மட்டும் தெளிவாக எடுத்துரைத்தார்: "**இதை நினைவில் கொள். நீ விரும்பினாலும் விரும்பாவிடிலும், எப்பொழுதும் எனது விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும்!**"

கோஹெரும் இதேபோல, பாபாவின் கவனத்தை வெகுவாக ஈர்த்தார். குவெட்டா கடுமையான குளிருக்குப் பெயர்போன நகரம். ஒருமுறை பாபா

அவளிடம், "**நீங்கள் இப்போது கடுமையான குளிரால் நடுங்குகிறீர்கள், ஆனால், கடவுளின் அன்பின் அரவணைப்பை அளிக்க, நான் பூமியில் வந்துள்ளேன். அந்த அன்பை முழுமையாக அடையப்பெற்றதும், நீங்கள் ஒருபோதும் குளிரை உணர மாட்டீர்கள்!**" என்றார்.

மெஹர் பாபா, அவ்வேளையில் அனைவரையும் வெளியே அழைத்துச் சென்றார். காரில் புறப்பட்டு, மலை நிறைந்த இடங்களைச் சுற்றி வந்தனர். குளிர், தாங்கமுடியாத அளவுக்குக் கடுமையாக இருந்ததால், திரும்பி வந்து பாபா, அனைவரையும் திரைப்படம் பார்க்க அழைத்துச் சென்றார். ஆனால், அரை மணி நேரத்தில் திரும்பி வந்ததும், கோஹெர் வருத்தத்தில், திரைப்படம் நன்றாக இருந்தது, முழுமையாகப் பார்க்காமல் ஏன் திரும்பி வந்தீர்கள் எனக் குறை கூறி முறையிட்டாள்.

வீட்டிற்கு வந்ததும், பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**அனைத்து உலகமும் மாயையின் நாடகத்திற்குப் பின்னால் அலைகிறது, மேலும், உலகம் ஒரு திரைப்படத்தைத் தவிர வேறொன்றுமில்லை! இந்தப் படத்தின் காட்சிகளிலிருந்து கண்களைத் திருப்பும் வேளையில், ஆழமான இதயத்தில் நிகழும் காட்சிகளைக் காணமுடியும். இதயத்தின் உள் நாடகம் மிகவும் அசாதாரணமானது, அற்புதமானது. அதற்கு முன்னால் உலகின் நாடகம், ஒருவர் அவர் உடலிலிருந்து வெளியேற்றும் கழிவைப் போன்றது!**"

இம்முறையும் பாபா ரூஸியிடம் அவரது குடும்பத்துடன் குவெட்டாவை விட்டு நிரந்தரமாக வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தினார். பாபாவின் தீவிரமான குரலைக் கேட்டு ஆச்சரியமடைந்த ரூஸி, "நாங்கள் குவெட்டாவை விட்டு வெளியேறி எங்குச் செல்வோம்? இங்கே எனது வணிகம் செழிப்பாக நடைபெறுகிறது" என்று முறையிட்டார்.

"**உங்கள் வணிகம், வீடு, உடைமைகள் அனைத்தையும் விற்றுவிட்டு உடனடியாகப் புறப்படுங்கள். நான் உங்களை எச்சரிக்கிறேன். இனி இங்கு இருப்பது உங்களுக்கு நல்லதல்ல. நேரம் நெருங்கிவிட்டது**" என்று பாபா அறிவுறுத்தினார்.

ரூஸி, மெஹர் பாபாவின் ஆலோசனைகளைப் பின்பற்றவில்லை; ஒரு வருடத்திற்குப் பின்னர் அவருக்கு மிகப்பெரிய நிதி இழப்பு ஏற்பட்டது. 1932ஆம் ஆண்டில் குவெட்டாவை நில நடுக்கம் உலுக்கி எடுத்தது. பாபாவின் குறிப்புகள் இப்போதுதான் ரூஸியின் கண்களைத் திறந்தன; அவர் தனது உணவகத்தையும் பேக்கரியையும் விற்க முயன்றபோது, அதை வாங்க எவரும் தயாராக இல்லை.

அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக, ரூஸி அவரது உடைமைகளை மிகக் குறைந்த விலையில் விற்க வேண்டியதாயிற்று. அனைத்தையும் ஒன்றுக்குப் பாதியாக விற்றுவிட்டு, ரூஸி, குடும்பத்துடன் அவரது மனைவியின் சகோதரி வாழ்ந்து வந்த அஹமதுநகருக்குக் குடிபெயர்ந்தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர், 1935ஆம் ஆண்டில், மற்றுமொரு

மிகவும் மோசமான பூகம்பம் குவெட்டாவின் பெரும்பகுதியை, தரைமட்டம் ஆக்கியது. இதன் விளைவாக 50,000 மக்கள் உயிரிழந்தனர். இது வரலாற்றில் மிக மோசமான இயற்கை பேரழிவுகளில் ஒன்றாகும்.

1931, மே 16ஆம் நாள், குவெட்டாவில் இருந்த வேளையில் பாபா, மண்டலியிடம் இவ்வாறு எடுத்துரைத்தார்:

**நான் இதற்கு முன்னர் கூறியது போல, தற்போதைய நெருக்கடி மற்றும் சிரமங்கள் அனைத்தும், எனது ஆன்மீக உள்பணியின் விளைவே தவிர வேறொன்றுமில்லை. என்னுடைய மண்டலியில் ஒவ்வொருவரும் கதறி அழுவது மட்டுமின்றி, நானும் கண்ணீர் சிந்த வேண்டியது வரும். இதற்கு எவரையும் குறை கூற வேண்டியதில்லை; இது எவருடைய தவறும் இல்லை. இது இக்கால அனைத்து குருநாதர்களின் உட்பணியின் விளைவாகும். இந்த நிலைமை மிகவும் அவசியமானது, இதைவிட மோசமான ஒன்றும் வர உள்ளது. இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலைகள் வரும் என்று எவரும் எதிர்பார்த்ததும் இல்லை, கனவு கண்டதும் இல்லை. கடுமையான நோய் நம்மைத் தாக்கலாம், அல்லது உணவு, நீர் எதுவும் இல்லாமல், நான் சில மண்டலியுடன் பேரிடரை சந்திக்க நேரிடலாம். இன்னும் அதிக அளவில் அவமானங்களை எதிர்கொள்ள வேண்டியது வரும், ஆனால், இவை அனைத்திற்கும் நானே காரணம், நானே பொறுப்பு; அது கைவிலங்குகளை மாட்டி என்னை சிறைக்குக் கூட கொண்டு செல்லலாம்! என்ன நடக்கும் என்று எவருக்குத் தெரியும்!**

அப்போது சாஞ்சி, "இது உங்கள் உட்பணியின் விளைவாக இருந்தால், நீங்கள் ஏன் அதிருப்தி அடைகிறீர்கள்?" என்று கேட்டார்.

மெஹர் பாபா இவ்வாறு விளக்கினார்:

**எல்லாமே என்னுடையதாக இருப்பதால், எனது நெருங்கிய மண்டலியின் நிலைமை, எனக்குப் பெரும் வேதனையைத் தருகிறது. இது தனது குழந்தையின் அறுவை சிகிச்சையின் தருணத்தில் அவதிப்படும் ஒரு தந்தையின் நிலையைப் போன்றது. அறுவை சிகிச்சைக்கு சம்மதம் தெரிவிப்பது தந்தை தான், அது குழந்தையின் நன்மைக்காகவே என்று தெரிந்தும், குழந்தையின் துன்பம் தந்தைக்கு வேதனையைத் தருகிறது. எனது வலியும் இது போன்றதுதான்.**

1931, ஜூன் 1ஆம் நாள் ஆகா அலி மற்றும் மண்டலியுடன் பாபா ரயில் வழியாக, அவரது மூன்றாவது பெர்ஸியன் பயணத்தைத் தொடங்கினார். இம்முறையும், தேர்ந்தெடுக்கப்பட்ட பாதை, சிக்கல் மற்றும் சிரமங்களால் நிரம்பியிருந்தது.

ஐந்து நாட்களுக்குப் பிறகு, துஸ்தாப் நகரைச் சென்றடைந்து, பின்பு காரில் பயணம் செய்து ஜூன் 6ஆம் நாள் மஷாட் நகரம் வந்து ஹோட்டலில் தங்கினர். பாபா, மாலை வேளையில் அருகிலிருந்த பூந்தோட்டத்திற்கும், அவ்வப்போது சினிமா பார்க்கவும் செல்வதை வழக்கமாகக் கொண்டார். ஒரு

நாள், அவர் அந்த இடத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது, இரண்டு பெண்மணிகள் பாபாவைப் பின்தொடர்ந்தனர். தங்கும் விடுதிக்கு வந்ததும், பாபா அவர்களை உள்ளே அழைத்து என்ன வேண்டும் என வினவினார். அவர்கள் விலைமாதர்கள் என்று தெரிவித்ததும், பாபா, 'ஒருவர் கடவுளுக்குத் தன்னை அர்ப்பணம் செய்து, பரிசுத்தமான ஆன்மீக வாழ்க்கையை வாழ்வது' குறித்து அவர்களுக்கு விளக்கினார்.

மெஹர் பாபாவின் முகத்தைப் பார்த்ததும், இரண்டு பெண்களும் கதறி கண்ணீர்விட்டு அழுதனர், "புனிதமானவரே, நாங்கள் எங்கள் பாவங்களை எப்படி சரிசெய்யப் போகிறோம்? எங்கள் வாழ்க்கை முற்றிலும் ஒழுக்கமற்றது, எங்களுக்கு விடிவு காலம் எப்போது வரும்?" என்று முறையிட்டனர்.

பாபா அவர்களை ஆறுதல்படுத்தி, "**ஒரு புனிதமான குருநாதர் கடல் போன்றவர். இத்தனை விசாலமான கடலில், நீங்கள் குப்பை அல்லது சந்தனம் எதை எறிந்தாலும், இரண்டையும் அது உள்வாங்கும் அதேவேளையில், கடல் நீரை முன்பு போலவே மாசு படாமல் சுத்தமாக வைத்துக் கொள்ளும். அதேபோல், ஒரு புனிதமான குருநாதர், நல்லது, தீயது இரண்டையும் தன்னுள் எடுத்துக்கொண்டு, கடலோடு ஒன்றிணையச் செய்கிறார். இவ்வண்ணம், மோசமான பாவிகள் கூட, தூய்மை ஆக்கப்படுகிறார்கள். எனவே இனிமேல், உங்கள் தற்போதைய வாழ்க்கை முறையைத் தவிர்த்து, நீங்கள் மன்னிக்கப்பட்டு, தூய்மை ஆக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளுங்கள்**" என்று கூறினார்.

இரண்டு பெண்களும், மெஹர் பாபாவின் மௌன வார்த்தைகளால் மிகவும் மனம் நெகிழ்ந்து போயினர். பாபா அவர்களை அருகில் அமர வைத்ததும், அவர்களின் இதயங்கள் கதறி அழுதன, "புனிதமானவரே! நாங்கள் எங்கள் புதுவாழ்வை உங்கள் காலடியில் அர்ப்பணிக்கிறோம்!" இருவரும் மனம்வருந்தி சிந்திய கண்ணீர் அவர்களுடைய பாவங்களை அகற்றியது.

மஷாட்டில் இருந்த வேளையில் ஆகா அலியை பாபா எப்பொழுதும் அவர் அருகில் அமர வைத்தார். பாபா மண்டலியிடம், "**அலி தூய்மையாக இருந்தால், நான் அவனை ஒரு ஸலிக்காக (மஜ்ஜூப்) மாற்றுவேன்!**" என்று கூறினார்.

மஷாட்டில் ஒரு மிகப் பெரிய மசூதி இருந்தது; இது பயணத்தின்போது, பாபாவின் பணிகளின் மையமாக அமைந்தது. இந்த மசூதி ஷியா முஸ்லிம்களுக்கு ஒரு முக்கிய இடமாகும், ஏனெனில், இங்கு மறைந்த எட்டாவதும், கடைசியுமான இமாம் ரெஸாவின் உடல் வைக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்கள், பாபா நள்ளிரவில் இந்த மசூதிக்குச் சென்று, இரண்டு மணி நேரம் ஏகாந்தவாசம் மேற்கொண்ட அதே நேரத்தில் சாஞ்சியும் மண்டலியும் வெளியே கண்காணிப்பாளர்களாக இருந்தனர்.

மஷாட்டில் மத மரபுவழியான இனவெறித்தனம் நிலவுவதால், இந்த ஏற்பாடு செய்வதில் பல சிரமங்களை சந்திக்க வேண்டியதாயிற்று. இது, அந்த

மசூதியின் தலைமை பாதிரியாரின் தலையீட்டால் சாத்தியமானது; ஒரு பெரிய புனித மனிதர் பெர்ஸியாவிற்குள் நுழைந்ததாக, தலைமை பாதிரியார் ஒரு தெளிவான கனவைக் காண நேர்ந்தது, மேலும் அந்த மரியாதைக்குரியவர் மெஹர் பாபா என்பதையும் உணர்ந்தார்.

1931, ஜூன் 10ஆம் நாள் பாபா, மிகவும் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டார்; கண்களிலிருந்து ஓரிரு கண்ணீர் துளிகளும் வழிந்தன, **"இந்தக் கண்ணீரும் கம்பலையும் போதும்! என் இதயம் இத்தனை சோகமாக இருந்தால் என்னவாகும்?"** என்று குறிப்பிட்டு, அங்கிருந்து புறப்படுவதில் மும்முரமாக இருந்தார்.

இதற்கிடையில், மஷாட்டின் காவல்துறை தலைமை அதிகாரி, பாபாவின் தரிசனத்தை விரும்பி, மெஹர் பாபாவைத் தனது வீட்டிற்கு வர அழைப்பு விடுத்தார். ஜூன் 18ஆம் நாள் பாபா அங்கு விஜயம் செய்த வேளையில், பாபாவை மிகுந்த பக்தி மற்றும் மரியாதையுடனும் வரவேற்றார். பேச்சின் நடுவே, மெஹர் பாபா, கையொப்பம் இட விரும்பாததால், சட்டப்படி விஸா வழங்குவதில் சிரமங்கள் இருப்பதை, காவல்துறை அதிகாரி எடுத்துக் கூறினார்.

மஷாட்டில் இருந்தபோது, பாபாவைக் குறித்த விபரங்கள் காவல்துறை அதிகாரியைத் தவிர வேறு எவருக்கும் வெளியிடப்படவில்லை; ஆனால், பாபாவைப் பார்க்க நேர்ந்தவர்கள் அவரால் காந்தம்போல் ஈர்க்கப்பட்டனர்.

ஜூன் 14ஆம் நாள் பாபா மண்டலியுடன் மஷாட்டிலிருந்து துஸ்தாப் புறப்பட்டுச் சென்றார்.

1931ஆம் ஆண்டு, மெஹர் பாபாவின் பெர்ஸியா வருகை அவரது முந்தைய இரண்டு பயணத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அமைந்தது. இந்தப் பயணத்தின் போது, பாபா எவரையும் நேரடி பேட்டிக்காக அழைக்கவோ அல்லது சிறப்பு தரிசன நிகழ்ச்சியை வழங்கவோ இல்லை. அவர், குறிப்பாக, தனது ஆன்மீக உள்பணியைச் செய்தாலும், இம்முறை மேற்கொண்ட ஏகாந்தவாசத்தின் நோக்கத்தை, பாபா வெளிப்படுத்தவில்லை. இரவில், பாபா, ஓரிரு மணி நேரம் தனியாக அமர்ந்து, இந்தப் பணியைச் செய்து வந்தார். பகல் நேரத்தில், அவர் குறிப்பாக, மஷாட் நகரின் வீதிகளில் சுற்றி வந்ததன் நோக்கத்தைப் பற்றியும், எதுவும் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை.

1931, ஜூலை 5ஆம் நாள், விஸாக்கள் வழங்கப்பட்டதும், பாபா, கராச்சி வந்து பீலாமாய் வீட்டில் தங்கினார். அடுத்த நாள், ஒரு சில மண்டலியுடன் தொடங்கிய உபவாசத்தை, ஜூலை 10, மெஹர் பாபாவின் ஆறு வருட மௌனம் நிறைவுற்ற நாளன்று நிறைவு செய்த பின்பு, பீலாமாய், பாபாவிற்கு ஆரத்தியை நிகழ்த்தினார்.

கராச்சி நகரின் மேயர் ஜாம்ஷெட் மேத்தா, மீண்டும் பாபாவை சந்திக்க வந்தார். உடனடி தீர்வு எதுவும் இல்லாமல் சிரமங்கள் தன்னைச் சூழ்ந்திருப்பதாக எடுத்துரைத்ததும், பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**இது ஒன்றும் மோசமான செய்தி அல்ல; மிகவும் நல்ல செய்தி! நீங்கள் பல கஷ்டங்களை அனுபவித்த அதிர்ஷ்டசாலி. உண்மை என்னவெனில், கஷ்டங்கள் என்று எதுவும் இல்லை, ஏனெனில் உலகில் அனைத்தும் ஒரு பெரிய பூஜ்ஜியம்! இதை நான் ஒவ்வொரு கணமும் பார்க்கிறேன், அனுபவிக்கிறேன்.**

**ஒரு முறை, பக்தன், அவதார புருஷர் அல்லது சத்குருவின் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதும், தனது உயிரைப் பறிகொடுத்தது போல் உணர்கிறான்! இது பயங்கரமானது; கடவுளின் இந்தப் பாதை, மிகவும் கடினமான மற்றும் தவிர்க்க முடியாத ஒன்று. இருப்பினும், கவலைப்பட வேண்டாம், நம்பிக்கையை இழக்காதீர்கள். நல்ல நேரங்கள் எதிர்நோக்கி வர உள்ளன; இந்த சிரமங்களுக்குப் பின்னர், அமைதியும் ஆறுதலும் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. பயங்கரமான துன்பம் என்பது வரவிருக்கும் மகிழ்ச்சி மற்றும் மன அமைதியின் அடையாளம்.**

**பெரிய அளவிலான உஷ்ணம் மழை வருவதன் அறிகுறி. மிகையான துன்பமும், ஆழ்ந்த துக்கமும் சந்தோஷத்தின் விடிவு காலம் என்பதைக் குறிக்கிறது. உங்கள் திறமைக்கு அப்பாற்பட்ட அனைத்தும் உங்கள் திறனை மாற்றியமைக்கும், ஏனெனில், எல்லாமே உங்கள் எல்லைக்குள் இருக்கும் வரை, அவற்றிற்கு அப்பாற்பட்டது என்னவென்று உங்களுக்குத் தெரியாது.**

**மக்கள் என்னை நேசிப்பதாகக் கூறி, தங்கள் சிரமங்களைத் தீர்க்க என்னிடம் பிரார்த்தனை செய்கிறார்கள், ஆனால், அன்பு, பிரார்த்தனை இரண்டிற்கும் இடையே ஒரு பெரிய வித்தியாசம் உள்ளது.**

**பெர்ஸிய மொழியில், பிரார்த்தனை என்பது தானம் கேட்பது, தனக்கு வேண்டிய எதையும் அடைய விரும்புவது - சொல்லப்போனால் கடவுளின் ஆசீர்வாதங்கள் கூட. ஆனால், ஒருவர் உண்மையிலேயே நேசிக்கும் போது, அவர் தன்னைத்தானே முழுமையாக அர்ப்பணம் செய்கிறார். இது உண்மையான காதல். அதில், விருப்பம், ஆசை இவற்றிற்கு இடமில்லை. பிரியமானவர்களுடன் ஐக்கியமாக வேண்டும் என்ற ஏக்கம் மட்டுமே இருக்கும்.**

**அன்பு சுயநலமற்றது; பிரார்த்தனை, எவ்வளவுதான் உயர்ந்ததாக இருந்தாலும், அது முழுக்க முழுக்க சுயநலம். இப்படி, இரண்டிற்கும் இடையே ஒரு பெரிய வேறுபாடு இருக்கிறது!**

ஜூலை 27ஆம் நாள், பாபா கொட்டும் மழையில், சாதாரண பேருந்தில் பயணம் செய்து, நாசிக் அருகில் அமைந்த பிம்பல்காவ்ம் அரசாங்க விடுதியில் வந்து தங்கினார். பெண் மண்டலியில் பலரை, பாபா அங்கு அழைத்து

விசாரித்தார். அவர்கள் பாபாவின் நிலையைக் கண்ட அதிர்ச்சியில் கண் கலங்கினர். பயணக் களைப்பு, தாடி, மீசை, தலைமுடி, கிழிந்த, அழுக்குச் சட்டை - அலங்கோலமான தோற்றம் - தாங்க முடியாத நிலை.

**"மிகவும் கடினமான காலங்கள் நம் முன்னால் உள்ளன; நீங்கள் என்னுடன் இருப்பதானால், மேலும் பல சிக்கல்களை சந்திக்க நேரிடும். உங்கள் வாழ்க்கையில் கஷ்டங்களைத் தவிர வேறொன்றும் இல்லை. இன்றைய சூழ்நிலையில், அனைவருக்கும் உணவு, உடை வழங்குவது என்பது, எனக்குக் கடினமான விஷயம். எதிர் காலத்தில், என்னவாகுமோ, யாருக்குத் தெரியும், இது கூட சாத்தியமற்றதாக இருக்கலாம்! எனவே உங்கள் இல்லங்களுக்குத் திரும்பிச் செல்லுமாறு நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன், அங்கு நீங்கள் ஓரளவு ஆறுதலுடன் இருக்கலாம்"** என்று பாபா அவர்களிடம் கூறினார்.

பெண் மண்டலி அனைவரும் பாபாவுடன் தங்க முழுமனதாக விருப்பம் தெரிவித்தனர். மெஹரா, நாஜா, கோர்ஷெத், ஸூனாமாசி அல்லது தவ்லத்மாய் எப்போதாவது தங்கள் பிரியமான இறைவனை விட்டு விலகி இருக்க முடியுமா? அத்தகைய பிரிவை மெஹராவின் இதயம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது; பாபாவைத் தவிர, வேறு எவருக்கும் அவர் இதயத்தில் இடமில்லை. இதர கோபிகளுக்கும் இதே நிலைதான் இருந்தது. அவர்களின் முடிவு பாபாவை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது; சங்கடமான சூழ்நிலை மகிழ்ச்சிகரமான காட்சியாக மாறியது. பாபா அனைவருக்கும் அவரது கைகளால் உணவு வழங்கினார்; அங்கிருந்த பல குழந்தைகளோடு கொஞ்சி விளையாடினார். பெண் மண்டலி பாடிய பாடல்களைக் கேட்டு ரசித்த பின்னர் அவர்களுக்கு விடையளித்தார்.

அன்று மாலை, பாபா, ஒரு நாள் பயணமாக, 15 மைல் தொலைவில் அமைந்த **சந்தோர்** (CHANDOR) கிராமத்திற்குச் சென்று வந்தார். மறுபடியும் பெண் மண்டலியை அழைத்துக் கூறினார், **"நான் சில முக்கியமான பணிக்காகப் புறப்பட உள்ளேன்; நான் இல்லாத வேளையில் எனக்காக ஒரு நாடகம் தயார் செய்யுங்கள்"** என்று கூறி, நாடகத்தின் அடிப்படை கருத்தை எடுத்துரைத்து, மேலும் அவர்களுக்கான சில பாத்திரங்களையும் தேர்ந்தெடுத்தார். **"இது உங்கள் தியானமாக இருக்கும், எனவே முழு மனதோடு அதில் கலந்து கொள்ளுங்கள், நான் திரும்பி வரும் வேளையில் அந்த நாடகத்தை அரங்கேற்றத் தயாராக இருங்கள்"** என்று பாபா மேலும் கூறினார். அதற்குப் பிறகு, பெண்மணிகள் நாசிக் புறப்பட்டுச் சென்றனர்.

ஜூலை 29ஆம் நாள் பாபா, ஆண் மண்டலி அனைவரையும் சந்தித்தார். அவர்கள் பாபாவைப் பார்த்தபோது, அவருடைய தோற்றத்தால் அவர்களும் பேரதிர்ச்சி அடைந்தனர். பாபா, அப்போது அவரது பழைய கம்லி கோட்டை அணிந்திருந்தார். அவரது தலைமுடி ஒரே சிக்கலாக இருந்தது, அவரது கன்னங்களில் காயங்கள் போன்ற கருப்பு திட்டுகள் காணப்பட்டன, மேலும்

இருண்ட வட்டங்கள் அவரது கண்களுக்குக் கீழே தென்பட்டன. உடல் மெலிந்து மிகவும் சோகமாகத் தோற்றமளித்தார்.

இந்த நிலையில் பாபாவைப் பார்த்த ருஸ்தம், ஆதி இருவரும் கட்டுப்படுத்த முடியாமல் அழுது கண்ணீர் வடித்தனர். பாபா அவர்களை ஆறுதல்படுத்தி, "**இதுதான் இப்போது எனது நிலை - ஒவ்வொரு கணமும் நான் இறந்து கொண்டிருக்கிறேன்! இனிமேல் என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது. எதிர்காலத்தில் நான் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம், ஆனால், என் உடல் மிகவும் பலவீனமாகிவிட்டது. இப்போது நீங்கள் என்னுடன் இருக்க விரும்பினால், அவ்வாறே செய்யுங்கள்; இல்லையேல், நீங்கள் என்னை விட்டுச் செல்லலாம். என்னால் இப்போது எவரையும் பராமரிக்க முடியாது; நம்மிடம் இருந்த பணமும் தீர்ந்துவிட்டது. நானே இத்தகைய மோசமான நெருக்கடியில் இருக்கும்போது, பிறரை எப்படி கவனிப்பது?**

பாபாவின் பரிதாபகரமான தோற்றத்தைக் கண்டு, மிகவும் அதிர்ச்சியடைந்த மண்டலி, கண்ணீருக்கு மத்தியில், அவருடனே இருக்கும் உறுதியான தீர்மானத்தை, பாபாவிற்குத் தெரிவித்தனர்.

மண்டலியிடமிருந்து விடைபெறுவதற்கு முன்பு, பாபா, "**நான் செய்யவேண்டிய ஒரு பெரிய பணி எனக்காகக் காத்திருக்கிறது, ஆனால், இந்த உடல் அத்தகைய சுமையைத் தாங்குமா என்று நான் சந்தேகப்படுகிறேன். முடியாமல் அது கைவிடப்பட்டால், ஒருவேளை, நீங்கள் கடைசியாக என்னைப் பார்ப்பதாகக்கூட இருக்கலாம்**" என்று சோகமாக எடுத்துரைத்தார்.

மண்டலி அனைவரும் புறப்பட்டு நாசிக் சென்றனர். ஆண், பெண் மண்டலியில் பலருக்கு, மெஹர் பாபா பெர்ஸியாவுக்குப் பயணம் செய்ததும், இங்கிலாந்து மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு, கப்பல் வழியாக, முதல் பயணம் மேற்கொள்ள இருப்பதும் தெரியாது. பாபாவின் சோக நிலையைக் கண்டு, மண்டலி அனைவரும் தங்கள் சொந்த கஷ்டங்களை முற்றிலும் மறந்துவிட்டனர். இதனால்தான் பாபா, இவ்வளவு மோசமான நிலையில் அவர் இருப்பதாகக் காட்டிக் கொண்டார்.

இப்படி ஒரு தந்திரத்தைக் கையாண்டு, மண்டலியின் மனநிலையில் ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்திய பிறகு பாபா, 1931, ஜூலை 30ஆம் நாள், ஸெக்கண்ட்ராபாத் வழியாக குன்னூர் சென்றார். அங்கு நீதிபதியாகப் பணிபுரிந்த சம்பத் ஐயங்கார் வீட்டில் பாபா தங்கியிருந்த வேளையில், அவர் எவரையும் சந்திக்க விரும்பாமல், ஒரு தனி அறையில் ஏகாந்தவாசம் மேற்கொண்டார். ஆகஸ்ட் 4ஆம் நாள், பாபா சுத்தமாக தாடி சவரம் செய்து கொண்டார். அங்கிருந்து ரயில் வழியாக, மிகவும் கடினமான பயணம் செய்து, மூன்றாவது நாள் கராச்சி வந்து சேர்ந்தார்.

நரிமன், பாபா மற்றும் மண்டலியை வரவேற்று, ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பங்களாவுக்கு அழைத்துச் சென்றார். நரிமன், சாஞ்சியுடன் இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிய அனுமதிக்கப்பட்டார்.

மெஹர் பாபாவின் முதல் மேற்கத்திய பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் கராச்சியில் உடனடியாகச் செய்யப்பட்டன. பாபா, இந்தியாவில் இல்லாத வேளையில், மண்டலி அனைவரும் எவ்விதமான சிரமங்களையும் தாங்கிக் கொள்ளும் அளவுக்கு அவர்களின் மனநிலையைத் தயார் படுத்தினார்.

ஏற்கனவே, கடந்த மாதம் 16ஆம் நாள் பாபா, டெவன்ஷயர் (DEVONSHIRE), இங்கிலாந்தில் வாழும் மெரடித் ஸ்டாருக்கு இவ்வாறு தொலைத்தந்தி அனுப்பியிருந்தார். **"எனது வருகைக்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுங்கள். அன்பு என்னை மேற்கு நோக்கி அழைக்கிறது."**

1931, ஆகஸ்ட் 25 அன்று மும்பையிலிருந்து புறப்பட்டு, 'திவேரே' கப்பல் வழியாக, இங்கிலாந்துக்குப் பயணம் செல்வதற்கான முன்பதிவு பயண ஏற்பாடுகளைச் செய்ய, சாஞ்சி ஒரு கப்பல் பயண அலுவலகத்துடன் தொடர்பு கொண்டிருந்தார். ஆனால், பாபா, மண்டலியுடன் கராச்சி வந்த வேளையில், இரண்டாம் வகுப்பு பயணச்சீட்டு கிடைக்காததால் சாஞ்சி சற்று எரிச்சலும், கோபமும் அடைந்தபோது, பாபா அவரிடம், ஐரோப்பாவை நோக்கிச் செல்லவிருக்கும் அடுத்த கப்பலில் பயணச்சீட்டுகளைப் பதிவு செய்யுமாறு கூறினார்.

உடனே, 'எஸ்.எஸ்.ராஜ்புத்னா' கப்பலில் சாஞ்சி அறைகளைப் பதிவுசெய்ய முடிந்தது. இவ்வளவு குறுகிய நேரத்தில், இத்தகைய ஏற்பாடுகளைச் செய்வதில் சாஞ்சி மிகவும் சிரமப்பட்டார்; கடைசி நிமிடத்தில் இவ்விதமான சிக்கல் ஏன் ஏற்பட்டது என்று அவர் ஆச்சரியப்பட்டார்.

இங்கிலாந்து பயணம் மேற்கொள்ள இருக்கும் மெஹர் பாபா, சாஞ்சி, ஆகா அலி அனைவரின் விஸாக்களைத் தயார் செய்யுமாறு பாபா, கராச்சி மேயர் ஜாம்ஷெட் மேத்தாவிடம் கூறியிருந்தார். ருஸ்தமும் உடன் செல்வதாகத் திட்டமிடப்பட்டது; ஆனால், இந்த விஷயம் ருஸ்தத்திற்கு இன்னும் தெரியப்படுத்தப்படவில்லை.

1931, ஆகஸ்ட் 22ஆம் நாள், மஹாத்மா காந்தியும், இவ்வேளையில் இங்கிலாந்து பயணம் மேற்கொள்வதாகவும், ஆனால், அது ஊர்ஜிதம் ஆகவில்லை என்றும் ஜாம்ஷெட் மேத்தா பாபாவிற்குத் தெரியப்படுத்தினார். அதைக் கேட்ட பாபா, இவ்வாறு பதிலளித்தார்: **"நான் இங்கிலாந்து செல்வதானால், காந்தியையும் உடன் அழைத்துச் செல்வேன். நீங்கள் பாஸ்போர்ட் சம்பந்தப்பட்ட பணியைத் துரிதப்படுத்துங்கள்."** அடுத்த நாளும், பாபா, காந்தியைப் பற்றிய இந்த விஷயத்தை எடுத்துக் கூறினார்.

செப்டம்பர் மாதம், இந்தியாவின் சுதந்திரம் குறித்து லண்டனில் 'வட்ட மேசை மாநாடு' நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது; மஹாத்மா காந்தி அதில் கலந்துகொள்வது குறித்து இதுகாறும் நிச்சயமாகவில்லை. ஆனால், கடைசி நேரத்தில், மஹாத்மா காந்தி ஒப்புக்கொண்டார்; எஸ்.எஸ். ராஜ்புத்னாவில் அவர் இங்கிலாந்துக்குப் பயணம் செய்ய இருப்பதை அறிவித்தபோது, பாபாவின் முந்தைய கருத்துக்களின் முக்கியத்துவத்தை சாஞ்சியும் மேத்தாவும் புரிந்து கொண்டனர், மேலும் அவர்கள் ஏன் முந்தைய கப்பலில் பயணம் செய்ய முடியவில்லை என்பதும் சாஞ்சிக்கு இப்போது புலப்பட்டது.

அவரது பயணத்தைப் பற்றி மஹாத்மா காந்தி செய்தித்தாள் நிருபர்களிடம் கூறுகையில், **"எனது ஒரே வழிகாட்டியாக நான் கடவுளுடன் லண்டனுக்குச் செல்ல வேண்டும்"** என்றார்.

விஸா சம்பந்தப்பட்ட பணி தொடர்ந்தது. ஆங்கிலேய அதிகாரிகள் ஜூலை 25ஆம் தேதி பயணம் செய்ய பாபாவின் பாஸ்போர்ட்டை விஸாவுடன் ஒப்புதல் அளித்திருந்தனர், ஆனால், பாபா, ஒரு 'உத்தரவாத பத்திரத்தில்' கையெழுத்திட வேண்டும் என்று மேத்தாவுக்கு அறிவிக்கப்பட்டது (ஒருவேளை ஆகா அலி சிறுவன் என்ற காரணம் தொடர்பாக இருக்கலாம்).

கராச்சியின் மேயராக இருந்த மேத்தாவும் அவரது செல்வாக்கைப் பயன்படுத்தி, ஆங்கிலேய அதிகாரிகளை, மெஹர் பாபாவின் கையொப்பமின்றி அனைத்து ஆவணங்களையும் வழங்குமாறு, இணங்க வைக்க முடியவில்லை. கடைசியில், பாபா கையெழுத்திட சம்மதம் தெரிவித்தார், ஆனால், அவ்வாறு செய்வதற்கு முன்பு, பாபா, எச்சரிக்கை கலந்த தொனியில் இவ்வாறு குறிப்பிட்டார், **"ஆங்கிலேய அரசாங்கம் தனது சொந்த மரண உத்தரவு பத்திரத்தில் கையெழுத்திட என்னைக் கட்டாயப்படுத்துகிறது! இது இந்தியாவில் ஆங்கிலேய பேரரசின் இறுதிகாலமாக இருக்கும்."**

1931, ஆகஸ்ட் 25ஆம் நாள், மாலை 4.30 மணிக்கு, மெஹர் பாபா, கராச்சி கமிஷனர் அலுவலகத்தில் ஒரு பத்திரத்தில் அவரது பெயரை எழுதி கையெழுத்திட்டார். பிரிட்டிஷ் அரசாங்கம் அதற்குத் தெரியாமலே அதன் கல்லறையைத் தோண்டியது; இந்தியாவில் அவர்களின் ஆட்சி படிப்படியாக ஆட்டம்காணத் தொடங்கியது.

பாபா, அனைவரிடமிருந்தும் விடைபெற்று, 1931, ஆகஸ்ட் 26ஆம் நாள் மும்பைக்குப் புறப்பட்டார். இம்முறை பாபா, சாஞ்சியின் குடும்ப இல்லத்தில் தங்கியிருந்தார்; பொதுவாக பாபா எவரையும் சந்திக்கவில்லை. பாபாவின் இங்கிலாந்து பயணம் குறித்து கெ.ஜெ. தஸ்தூர் கேள்விப்பட்டதும், அவரையும் உடன் அழைத்துச் செல்லாததால் மன அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

விஷ்ணு, ருஸ்தம் இருவரும் இவ்வேளையில் மும்பையில் இருந்தனர்; பாபாவை சந்திக்க நாசிக்கிலிருந்து வருமாறு அவர்களுக்கு ஏற்கனவே தகவல் தரப்பட்டது. பாபா, மும்பை வந்து சேர்ந்ததும், சாஞ்சி

தொலைபேசி மூலம் ருஸ்தத்திடம் இங்கிலாந்து செல்லும் விபரத்தைத் தெரியப்படுத்தி, பாபாவை உடனடியாக சந்திக்குமாறு கூறினார்.

பாபாவின் மேற்கத்திய பயணம் குறித்து, விஷ்ணுவிடம் பாபா விளக்கமாக எடுத்துரைத்தார். பாபா மண்டலியுடன் இங்கிலாந்து புறப்பட்டுச் சென்ற பின்பு, நாசிக்கில் வாழும் அனைத்து ஆண், பெண் மண்டலிக்கும் இவ்விஷயத்தைத் தெரியப்படுத்துமாறு அறிவுறுத்தினார். இன்னும் மூன்று நாட்களில், பாபா தனது முதல் மேற்கத்திய பயணத்திற்காக இந்திய மண்ணிலிருந்து புறப்படத் தயாராக இருந்தார். அவர் திரும்பி வருவதற்கு ஐந்து மாதங்கள் வரை ஆகலாம் என்றும் தெரியவந்தது.

மெஹர் பாபா சில மண்டலியுடன் ரகசியமாக வெளிநாடு செல்லத் திட்டமிட்டிருந்ததை, காலம் இப்படிப் பார்த்தது.

எவ்வளவு பரபரப்பான நேரம் இது! பாபாவின் ஆன்மீக பணியின் புதியதொரு கட்டம் ஆரம்பமாக உள்ளது! பாபா மேற்கத்திய நாட்டில் வாழும் அவரது அன்பர்களைத் தொடர்பு கொள்ளவிருந்தார்; மேலும் காலம் அமைதியின்றி எதிர்பார்ப்புடன், மெஹர் பாபா மேற்கத்திய மண்ணை புனிதப்படுத்தும்போது, என்ன நடக்கும் என்ற ஆவலுடன் காத்திருந்தது.

காலம், நாம் வாழும் கலியுக காலம், மெஹர் பாபாவின் செயல்பாடுகளின் நோக்கத்தை, மேலும் இன்றுவரை அவர் பிறந்த மண்ணில் நடந்த நிகழ்வுகளைப் பிரதிபலித்துக் காட்டியது.

நினைவுகள் ஏறக்குறைய 30 வருடங்கள் பின்நோக்கி நகர்ந்தன…

பூனாவில் ஒரு குறுகிய வீதியிலிருந்து ஒளிர்விடும் சிறிய மெரோக், எவ்வளவு அழகான குழந்தை…..

குழந்தை ஒரு அழகுமிக்க இளைஞனாக வளர்வதை காலம் கனிவோடு பார்த்தது……

சிறுவனின் அனைத்து செயல்களும் அற்புதமாக சிறந்து விளங்குவதையும் கவனித்தது….

இது அவனை ஒரு சிறந்த கல்லூரி மாணவனாகப் பார்த்தது….

பின்பு பாபாஜான் மேர்வானுக்கு முத்தம் அளித்தது….

மேர்வானின் நெற்றியில் உபாஸனி மஹாராஜ் வீசிய கல்லின் தாக்கத்தை நமது காலம் உணர்ந்தது….

உலக உணர்வை அடைய, ஏழு வருடங்கள் மேர்வான் அனுபவித்த கஷ்டங்களுக்கும் காலம் ஒரு சாட்சியாக இருந்தது…

விரைவில் அனைத்து மீன்களும் அவரது வலையை நோக்கி நீந்திச்சென்ற காட்சியைத்தான் என்னென்பது…

அர்ஜுன், நெர்வஸ், முன்ஷி, சையத், ராம்ஜூ, டாக்டர் கனி, விஷ்ணு இன்னும் பலர்…

பூனா குடிலுக்கு வெளியே ஒரு விண்மீன் வானத்தின் கீழ் அமர்ந்து, கவாலி இசையைக் கேட்டு ரசித்தது…

பத்து மாதங்கள் மன்ஸில்-எ-மீமில் நடந்த சம்பவங்கள் அனைத்தும் நினைவு வெள்ளத்தில் மூழ்கியது...

ஆரம்பகால அரன்காவ்ம் நாட்களின் கடினமான வாழ்க்கையை ஆழங்காண முயன்றது...

மெஹராபாத் ஒரு சலசலப்பான சமுதாயமாக - பள்ளிகள், மருத்துவமனை, தர்மசாலை - உருவெடுத்தது...

எண்ணிலடங்கா விளக்கங்கள் மற்றும் சொற்பொழிவுகள்...

பிரேமாஷ்ரம சிறுவர்களுக்காக அர்ப்பணித்த நீண்ட நெடிய நேரங்கள்....

சிறுவர்கள் ஏற்படுத்திய எண்ணற்ற கஷ்டமும், பாபாவின் இறை அன்பின் இதயத்தை அவர்களுள் ஊடுருவச் செய்ததும்....

காதல் போதை அவர்களின் கண்ணீரில் இறைகானத்தைப் இசைத்துக்கொண்டிருந்ததும்...

இன்னும் பலநூறு சம்பவங்களை, காலம் நினைவுகூர்ந்தது...

காலம், பின்பு பெர்ஸியாவை நோக்கி தனது பார்வையைத் திருப்பி, பாபாவின் கஷ்டங்கள் நிறைந்த மூன்று பயணங்களை நினைவுகூர்ந்தது...

1924ஆம் ஆண்டு, இந்திய பயணத்தின் போது, 'சாதுக்கள் என்னை சாகடிக்கிறார்கள்' என்று பாபா திரும்பத் திரும்பக் கூறியதை நினைத்துப் பார்த்தது...

ஸாக்கோரி மற்றும் பல இடங்களுக்கு ஆயிரக்கணக்கான மைல்கள் நடைபயணம் மேற்கொண்டது...

ஆனால், காலம் பாபாவின் உண்மை நிலையை மற்றும் உள்பணி பற்றிய குறிப்புகளைப் பிரகடனப்படுத்தியது....

அவதார புருஷர் ஸ்ரீ பாபா, இப்போது மண்டலி மற்றும் மாணவர்களோடு கோலி, கிரிக்கெட், கோக்கோ விளையாடியது...

மேலும் சமீபத்தில் பால் பிரண்டனுக்கு அளித்த விளக்கங்கள், நிஜத்தில் காலம் வியப்பில் ஆழ்ந்து, தன்னையே வினவியது...

ஸ்ரீ மெஹர் பாபா தனது மேற்கத்திய அன்பர்களுக்கு அவரை கிறிஸ்து என்று பறைசாற்றி அறிவிக்கப் போகிறாரா?...

அவர்கள் அவரை நம்புவார்களா?...

அவர்கள், அவரை எப்படி எடுத்துக் கொள்வார்கள்?.... எப்படி நடந்துகொள்வார்கள்?...

பூகோளத்தின் மேற்கு பகுதியில், பிரபஞ்சத்தின் இறைவன் என்ன லீலைகளைச் செய்யப் போகிறார்?...

பிரியமான பாபா எங்கிருந்தாலும் - அவர் என்ன செய்தாலும் - எப்போதும் அவருடன் நிலைத்திருக்கும் இறையன்பின் மதுபானம், அவரது அரவணைப்பில் வந்த அனைவரின் இதயங்களிலும் அதன் அழியாத கறையை விட்டுச்சென்றது!... அன்பிற்குரியவர் இதுவரை எத்தனை கோப்பைகளை நிரப்பியுள்ளார்?...

அவரது சுருள் சுருளான தங்க மயிரிழையின் பார்வையில் எத்தனை இதயங்கள் ஏற்கனவே நொறுங்கிப் போயின?...

‘மேற்கத்திய மக்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்,’ காலம் நினைத்துப் பார்த்தது. அன்பிற்குரியவரைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது; ஆனால், அவரின் இறையன்பின் மதுபானத்தை இப்போது ருசிக்கப் போகிறார்கள்!...

அவர்களை அரவணைக்கும் எண்ணத்தில் அன்பிற்குரியவர் அந்த திசையை நோக்கி விரைந்து செல்கிறார்; அவர்களின் இதயங்களில் இறையன்பின் மதுபானத்தை நிரப்பவும், பக்தி, கீழ்ப்படிதல் இரண்டையும் இதயங்களில் பொறிக்கவும், குருநாதர் அவர்களை நோக்கி பயணம் புரிகிறார்...

அன்பின் உருவான ஸ்ரீ மெஹர் பாபா, அவர்களைத் தன்னுடையவராக்க வருகிறார்....

காலத்தால் அழியா இறை கீதத்தை இதயத்தில் ரீங்காரம் செய்ய வருகிறார்!...



பயண ஆவண
புகைப்படம்,
குவெட்டா, மே 1931




**பாரசீக பயணம்**
பூனா (POONA),
மும்பை (MUMBAI),
டெல்லி (DELHI),
லாஹூர் (LAHORE),
கராச்சி (KARACHI),
குவெட்டா (QUETTA),
துஸ்தாப் (DUZDAB),
மஷாட் (MASHAD),
குவெட்டா, கராச்சி,
நாசிக் (NASIK)



# இறை உணர்வு

# உள்ளங்கை நெல்லிக்கனி





அவதார் மெஹர் பாபா